தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1981 ஏப்ரல் 21
சித்திரை 9, துன்மதி திருவள்ளுவர் 2012.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' இரவார் இரப்பார்க்கொன்று ஈவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்.''

கையால் தொழில் செய்து உணவு தேடி உண்ணும் இயல்புடைய தொழிலாளர், பிறரிடம் சென்று இரக்கமாட்டார் ; தம்மிடம் இரந்தவர்க்கு ஒளிக்காமல் ஒரு பொருள் ஈவார்.

1. இரங்கல் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர் திரு. ஓ. கோரன் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. ஓ. கோரன் அவர்கள், 16—4—1981ஆம் தேதியன்று மறைந்ததனை இப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு ஓ. கோரன் அவர்கள் 1952ஆம் ஆண்டிலிருந்து 1956ஆம் ஆண்டுவரை, அதாவது 1956ஆம் ஆண்டு மாநிலங்கள் திருத்தியமைப்புச் சட்டம் 1—11—1956ஆம் தேதியிலிருந்து அமலுக்கு வரும் வரை, ஆலத்தூர் (தனி) தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல முறையில் பனியாற்றியுள்ளார். மேலும் இவர் 1969ஆம் ஆண்டில் கேரள மாநிலத்தில் திரு. அச்சுத மேனன் அமைச்சரவையில் வேளாண்மை மற்றும் நீர்ப்பாசன அமைச்சராகப் பணியாற்றி உள்ளார்,

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும் இரங்கலையும் இப் பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நிற்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றனர்).

2. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

கீழக்கரை பால் விநியோகச் சங்கம்.

*வினா எண். 812—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழக்கரை பால்விநியோகச் சங்கத்தில் ரூ. 12 ஆயிரம் கையாடல் நடைபெற்றுள்ளதாக அண்மையில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதென்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் யாது?

(இ) கையாடல் பணம் வசூலிக்கப்பட்டதா?

(ஈ) கையாடல் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதா?

(உ) என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) ஆம்.

(ஆ) சங்கத்தில் 1977–78ஆம் ஆண்டு இறுதித் தணிக்கை முடிக்கப்பட்டது. தணிக்கையாளருடையத் தனி அறிக்கையின் பேரில் சங்கத்தின் மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அந்த விசாரணையில் சங்கத் தலைவர் மற்றும் சங்கக் கணக்காளர் ஆகியோர் ரூ. 12,900 தற்காலிகக் கையாடல் செய்துள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

1981 எப்ரல் 21]

(இ), (ஈ) மற்றும் (உ): ஆம். சங்கத் தலைவர் திரு. எம். எம். கே. முகமது இப்ரகீம், கணக்காளர் திரு. அந்தோணி ஜோசப் ஆகியோர் மீது சங்கப்பணத்தைத் தற்காலிகக் கையாடல் செய்த குற்றத்திற்காக மேல் நடவடிக்கை தொடரும் பணி காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வழக்கு இன்னும் காவல் துறையின் புலனாய்வில் உள்ளது.

திரு. என். பழனிவேல்: பேரவைத் தலைவர் அவர்களே, 1977–78ஆம் ஆண்டில் கையாடல் நடந்து இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ரூ. 12,900 தற்காலிகக் கையாடல் செய்துள்ளனர் என்று சொல்லியிருக்கிறார்கள். தற்காலிகக் கையாடல் என்றால் எப்படி? அவர்கள் எடுத்த பணத்தை அவர்கள் மறுபடியும் கட்டிவிட்டால், அது தற்காலிகக் கையாடல் என்று கருதப்படுமா? அந்தக் கையாடல் செய்தவர்கள் மீது கிரிமினல் வழக்கு தொடரப்பட்டுள்ளதா? அவர்கள் பதவிகள் பறிக்கப்பட்டுவிட்டனவா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்காலிகக் கையாடல் என்பதற்கு முதலிலே பணம் எடுத்து விட்டு, ஒரு சில நாட்களில் அதைக் கட்டிவிடுவது என்கிற பொருளில் சொல்லப்பட்டு இருக்கிறது. அந்த மாதிரி 4 முறை செய்து இருக்கிறார்கள். சங்கக் கணக்காளர் அதற்கு உடந்தையாக இருந்து இருக்கிறார்கள். இந்த வகையில் ரூ. 12,900 கையாடல் செய்யப்பட்டு இருக்கிறது. கணக்காளர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர் தற்காலிகமாக பணியில் இருந்து நீக்கப்பட்டு இருக்கிறார். விசாரணை நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. அதைப்போலவே தலைவர் பொறுப்பில் இருந்தவரையும் அந்தப் பொறுப்பில் இருந்து நீக்கி இருக்கிறார்கள். இரண்டு பேர் மீதும் புலன் விசாரணை நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. அது முடிந்த பிறகு அந்தப் புலனாய்வு மீது கிடைக்கும் ஆதாரத்தின்படி வழக்கு தொடரப்படும்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, இப்படிப்பட்ட பால் விநியோக கூட்டுறவுச் சங்கங்களில் வழக்குகள் பதிவு செய்வதும், குற்றவாளிகள் விடுதலை செய்யப்படுவதுமாக இருக்கிறது. அப்படி இருந்தாலும் ஏற்கெனவே 'ப்ரைமாஃபெசி' இருந்தால் கையாடல் செய்தவர்களிடமிருந்து அந்தப் பணத்தை வசூல் செய்து சங்கத்திடம் ஒப்படைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவரவர்களே, அரசு பரிசீலனை செய்யும்.

திரு. வெ. அரங்கராசன் : தலைவரவர்களே, அதைப் போல கூட்டுறவுச் சங்கங்களிலே கையாடல் செய்யும் தலைவர்கள் மீண்டும் பொறுப்பில் இருக்கக்கூடாது என்று அரசு நிபந்தனை விதிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, புதிய கூட்டுறவுச் சட்டத்திற்கான ஆய்வு நடைபெற்று வருகிறது. சட்டம் வரும்போது இதுபற்றி ஆலோசிக்கப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இந்தமாதிரியாக கூட்டுறவுச் சங்கங்களில் கையாடல்கள் நடைபெறுவதும், அதைக் கண்டுபிடித்து வழக்குத் தொடருவதில் தாமதம் ஏற்படுவதற்கும் காரணம் இரண்டு ஆண்டுகள் கழிந்துதான் தணிக்கை நடைபெறுகிறது. ஆகவே, இப்படிப்பட்ட தவறுகள் நடைபெறாமல் இருக்க அந்த, அந்த ஆண்டிலேயே தணிக்கை செய்வதற்கு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகள் கருத்தில் கொள்ளப்படும்.

சேயூரில் பட்டு வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 813:—திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அவினாசி யூனியன் சேயூரில் பட்டு வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம் ஒன்று அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : இல்லை.

கும்பக்கரையை சுற்றுலாத் தலமாக்கும் திட்டம்.

*வினா எண். 814:—திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியகுளம் தாலுக்காவிலுள்ள கும்பக்கரையை சுற்றுலாத் தலமாக்கவும், பயணிகள் தங்குவதற்குக் குறைந்த வாடகையில் ஓய்வில்லங்கள் கட்டவும் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தற்சமயம் இல்லை.

திரு. கா. கோபாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, வறட்சி ஏற்பட்டாலும், எவ்வளவு தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டாலும் அந்த நீர்வீழ்ச்சியில் தண்ணீர் வற்றாமல் எப்போதும் ஒரேமாதிரியாக இருக்கிறது. அதைச் சுற்றுலாப் பயணிகள் கண்டு களிக்கின்ற வகையில் அதை ஒரு சுற்றுலா இடமாக்க அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, கும்பக்கரை என்ற மலைப்பகுதி மதுரை மாவட்டத்தின் உட்பகுதியிலே இருக்கிறது. அங்கே அருவி இருக்கிறது என்பதைத் தவிர வேறு எந்த சிறப்பும் இல்லை. ஆகவே, பொதுவாக பயணிகள் அடிக்கடி போவது சாத்தியமாக இல்லை. ஆகையால் இது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

திரு. ராஜ்குமார் விஜயரகுநாத தொண்டமான் : தலைவரவர்களே, இப்போது வெள்ளக்கரையிலிருந்து கும்பக்கரை, கொடைக்கானலையும் சேர்த்து ஒரு ரோடு போட 47 இலட்சம் ரூபாய் அரசாங்கம் 'சாங்ஷன்' செய்திருக்கிறது. இந்த ரோடு போடப்பட்ட பிறகு சுற்றுலாப் பயணிகள் அடிக்கடி இந்தப்பாதையிலே வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதைக் கருத்திற் கொண்டு அங்கே சுற்றுலா மாளிகை கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, இப்படிப்பட்ட மலைச்சாலை அமைத்த பிறகு போக்குவரத்து வசதி ஏற்படுவதைத் கணக்கிலே எடுத்துக் கொண்டு அதன் பிறகுதான் பரிசீலிக்க முடியும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, மதுரை மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் இருக்கிற இந்த கும்பக்கரை அருவியானது அந்தப்பகுதியில் இருக்கிற ஏழை எளிய மக்களுக்குக் குற்றாலம் அருவியைச் சென்று பார்க்க முடியாத மக்களுக்குக் குற்றாலம் அருவியைக் கண்டு களிப்பதைப் போன்ற ஒரு வரப் பிரசாதமாக அமைந்திருக்கிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் இதுவரை அந்த அருவியை வந்து பார்க்காவிட்டாலும் இனிமேலாவது அதைப் பார்வையிட்டு, இப்போது திட்டம் இல்லாவிட்டாலும் இனிமேலாவது அந்த ஏழை எளிய மக்கள் குற்றாலத்தை போல கண்டு களிக்கும் வகையில் மேம்பாடு செய்து, ஒரு சுற்றுலா இடமாக ஆக்க திட்டமிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1981 ஏப்ரல் 21

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் மிகுந்த அக்கரையோடு சொல்லிக்கொண்டிருக்கின்ற காரணத்தால் எந்த அளவுக்குச் சாத்தியமோ அந்த அளவுக்கு அரசு பரிசீலித்து அதிலே எந்தவிதமான அபிவிருத்தி செய்ய இயலும் என்பதை ஆராய்ந்து அதற்கு முயற்சி செய்யும்.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : தலைவரவர்களே, மதுரை மாவட்டத்தின் மேற்குப் பகுதியிலே இந்த கும்பக்கரை அருவியும், சுருளியாறு நீர்வீழ்ச்சியும் மிகப் பிரசித்திப் பெற்ற நீர்வீழ்ச்சிகளாக இருக்கின்றன. ஆகவே இந்த இரண்டு நீர் வீழ்ச்சிகளையும் இணைத்து ஒரு சுற்றுலாப் பேருந்து விட அரசு முயலுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, பேருந்து விடுவதற்கு சாலை வசதிகள் வேண்டும். அதற்குப் பல இலட்சம் ரூபாய் செலவிட வேண்டும். பேருந்து விடுவதினால் மட்டும் அது சுற்றுலா வளர்ச்சியாக அல்லது சுற்றுலா ஸ்தலமாக மாறிவிடாது.

பேராவூரணித் தொகுதி 'மனோரா'வை சுற்றுலா மையமாக்கல்.

*வினா எண். 815—திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் பேராவூரணித் தொகுதியில் மன்னர் சரபோஜியால் கட்டப்பட்ட 'மனோரா'வைச் சுற்றுலாத் துறையில் எடுத்துக் கொண்டு "சுற்றுலா மையம்" ஆக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தஞ்சை மாவட்டத்தில் "மனோராவையும்" "கல்லணையையும்" மாவட்ட உலாத் தலங்களாக மாற்றுவதற்கு ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. தற்போது இத்திட்டத்தின் முதல் கட்டத்தில் கல்லணையை மாவட்ட உலாத்தலமாக மாற்ற முடிவெடுக்கப்பட்டு ஆரம்பப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் இரண்டாவது கட்டத்தில் மனோராவை ஒரு மாவட்ட உலாத் தலமாக மாற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

[முற்பகல் 9—10]

திரு. எம். ஆர். கோவேந்தன் : தலைவரவர்களே, நாளுக்கு நாள் மிக மோசமாக பழுதடைந்து கொண்டிருக்கும் மனோராவை

1981 எப்ரல் 21]

சீர்படுத்தி அதனுடைய பழமை கெடாமல் தொல்பொருள் ஆய்வுத்துறையின் மூலம் பாதுகாத்திட அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, மனோரா என்ற அந்த சரித்திரப் புகழ் மிக்க சின்னம் இப்போது தொல்பொருள் ஆய்வுத் துறையின் பொறுப்பிலே இருக்கின்றது. அதைச் சீர்படுத்திப் பாதுகாப்பதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சுற்றுலாத் துறை தொல்பொருள் ஆய்வுத் துறைக்கு அறிவுறுத்தும்.

டாக்டர் கே. சமரசம் : தலைவர் அவர்களே, மனோராவை தொல்பொருள் ஆய்வுத் துறை பழுது பார்க்கட்டும்; அதைப் பாதுகாக்கட்டும். ஆனால் அதே நேரத்தில் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு போக்குவரத்து வசதி, தங்கும் வசதி, உணவு விடுதி, ஓய்வு எடுப்பதற்கு பூங்கா, நீச்சல் குளம் ஆகிய வசதிகளை சுற்றுலாத் துறையின் மூலம் உடனடியாகச் செய்து தர இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, மனோரா என்கிற அந்த இடத்திற்கு ஏற்பட்டிருக்கின்ற சிறப்பே 1814 ஆம் ஆண்டு நடைபெற்ற யுத்தத்தின் வெற்றியைக் குறிக்கின்ற வகையில் சரபோஜி மன்னரால் எழுப்பப்பட்ட கட்டிடமும் மனோரா என்ற அந்த நினைவுச் சின்னமும்தான். இதுதான் அதற்கு அடிப்படைக் காரணமுமாகும். அதைவிட மிகச் சிறப்பு என்னவென்றால் அது மிகச் சிறந்த கடற்கரைப் பகுதியாக விளங்கிக்கொண்டிருக்கின்றது. அங்கே கடலில் அலைகள் அதிகமாக அடிப்பது கிடையாது. மேலும் அங்கே சுறா மீன்கள் போன்றவை கிடையாது. குறிப்பாக திருச்சி, தஞ்சை போன்ற மாவட்டங்களுக்கு அருகிலே இருக்கின்ற மிகச் சிறந்த மணற்பரப்பான கடற்கரைப் பகுதியாக அது விளங்கிக் கொண்டிருக்கின்றது. ஆகவே அதனை ஒரு சிறந்த சுற்றுலாத் தலமாக மாற்ற முடியும் என்று சுற்றுலா அதிகாரிகள் அரசுக்கு சில திட்டங்களைப் பற்றி அறிவித்திருக்கிறார்கள். முதலிலே அந்த மனோரா என்று அழைக்கப்படுகின்ற நினைவுச் சின்னம் பாதுகாக்கப்பட்டால் அதைத் தொடர்ந்து சுற்றுலாத் துறை அந்த முயற்சியை மேற்கொள்ள இயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ரெவின்யூ கணக்காய்களுக்கான மின்பாசி பாத்யதை.

*வினா எண் 816— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூராட்சி சரகத்தில் உள்ள ரெவின்யூ கண்மாய்களில் மீன்பாசி பாத்யதை சம்பந்தப்பட்ட ஊராட்சிகள், பேரூராட்சிகளுக்கு கிடைக்க வகை செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், மேற்படி செயற்குறிப்பு எப்பொழுது நடைமுறைக்கு வரும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, கிராமப் பகுதிகளிலே ரெவின்யூ கண்மாய்களில் மீன்பாசி ஏலத்தை இப்போது ஊராட்சி ஒன்றியங்கள் நடத்திக்கொண்டிருக்கின்றன. ஆனால் பேரூராட்சிகளால் மக்களுடைய தேவைகளை எல்லாம் பூர்த்தி செய்ய முடியாத நிலைமை இருப்பதால் மீண்டும் இதுபற்றிப் பரிசீலனை செய்து பேரூராட்சிகளுக்கே அந்தந்தப் பகுதி ரெவின்யூ கண்மாய்களின் மீன்பாசி ஏலத்தைக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, தற்போதுள்ள சட்டத்தின் அடிப்படையில் ரெவின்யூ கண்மாய்களின் மீன்பாசி பாத்யதை பேரூராட்சிகளுக்குக் கொடுக்கின்ற விதிமுறைகள் இல்லை. ஆகவே இவைகள் பரிசீலிக்கப்படும்.

திரு. சா. கிருஷ்ணமூர்த்தி : தலைவரவர்களே, முன்பெல்லாம் ரெவின்யூ கண்மாய்கள் எல்லாம் அந்தந்த கிராமத்தைச் சேர்ந்தவர்களுக்கு மீன்பாசி பட்டா என்று கொடுக்கப்பட்டு வந்தது. அந்த முறையில் பாரம்பரியமாக அந்தந்த கிராமத்தைச் சேர்ந்தவர்கள் கண்மாய்களில் மீன்பாசி உரிமையைக் கொண்டாடி வருகிறார்கள். ஆகவே அந்தக் கண்மாய்களைப் பராமரிக்கும் பொறுப்பை அந்தந்த கிராமவாசிகளே பரம்பரையாகச் செய்து வருகிறார்கள். ஆகவே ஊராட்சி ஒன்றியங்களுக்கு மீன் பிடிக்கும் உரிமையை வழங்க அரசு முன்வருமா ? அப்படிச் செய்தால் ஒரு கிராமத்திலே இருப்பவர்கள் அடுத்த கிராமத்திலே இருப்பவர்களுடன் போட்டி போட்டுக்கொண்டு மீன்பிடிக்கின்ற வகையில் தகராறுகள் ஏற்படாமல் தடுக்க முடியும். ஆகவே அந்த உரிமயை ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கொடுக்க அரசு முன்வருமா ?

1981 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கொடுக்கின்ற திட்டம் ஏற்கனவே இருக்கின்றது. பேரூராட்சிகளுக்கு கொடுப்பது பற்றிய கேள்வி தான் இது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, ரெவின்யூ கண்மாய்களில் மீன் வளர்த்து அதைப் பாதுகாக்கின்ற பொறுப்பு இப்போது அந்தந்த கிராம விவசாய மக்களிடத்திலே இருக்கின்றது. ஆனால் அங்கு ஏலம் விடுகின்ற நேரத்தில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்னுரிமை கொடுத்து அவர்களுக்குத்தான் கொடுக்க வேண்டும் என்ற நிலைமை இருக்கின்றது. ஆகவே அந்த நிலைமையை மாற்றி அந்தந்த ஊர் கிராம மக்களுக்கே, குறிப்பாக, விவசாய மக்களுக்கே கொடுப்பதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, அவைகள் எல்லாம் பரிசீலிக்கப்படவேண்டும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மீன்பாசி குத்தகைக்கு இவ்வளவு காசு அரசாங்கத்திற்கு கட்டவேண்டும் என்று ஏதாவது விதி இருக்கிறதா ? அது மாத்திரம் அல்லாமல், இதை தனி நபர்கள் ஏக்கருக்கு 37 பைசா வீதம் கொடுத்துவிட்டு மொத்தத்தில் 6,000, 7,000 என்று ஏலத்தில் விட்டு அவர்கள் அதை முழுவதுமாக அனுபவித்துக் கொண்டு வருகிறார்களே, அது அரசுக்குத் தெரியுமா ? அப்படிப்பட்ட சூழ்நிலையை மாற்ற அரசே இந்த மீன்பாசிகளை ஏற்று நடத்தும் வகையில் வழி வகை காண முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, பல்வேறு இடங்களில் பொதுப்பணித்துறையால் எடுக்கப்பட்ட குளங்கள் இருக்கின்றன. அதேபோல ஊராட்சி ஒன்றியங்களிலும், பேரூராட்சிகளிலும் குளங்கள் இருக்கின்றன. வாய்க்கால்களும், கண்மாய்களும் கூட இருக்கின்றன. இவைகளிலிருந்து கொடுக்கப்படுகிற குத்தகைகள் எல்லாம் 1958 ஆம் ஆண்டு ஊராட்சி மன்ற விதிகளின் அடிப்படையில்தான் கொடுக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போன்ற ஒழுங்கீனங்கள் நடைபெறுகின்றன என்ற நிலைமை இருந்தால், அவைகள் எல்லாம் கண்காணிக்கப்பட்டு, பரிசீலிக்கப்படும்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிகளில் சிறிய ஏரிகளிலே உள்ள மச்சமகசூலை தனி நபர்களுக்குப் பட்டா செய்து கொடுத்து, பல ஆண்டுகளாக அவைகள் அவர்கள் வசம் இருக்கின்றன. அவர்கள்

அதை ஏலத்தில் விட்டு ஆயிரக்கணக்கான ரூபாய்கள் லாபம் பெறுகிறார்கள். அந்த நிலையை மாற்றி, நகராட்சியிலேயே அதைப் பயன்படுத்தும் வகையில் மாற்றுவதற்கு, அரசு ஆவன செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, பல்வேறு இடங்களில் சங்கங்கள் என்கிற பெயரால் குத்தகை எடுத்து அதன் மூலமாக வருமானத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவைகள் எல்லாம் அரசினுடைய பரிசீலனையில் இருந்து வருகின்றன.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, சில தனி நபர்கள் மீனவர்கள் சொசைட்டி என்று பெயர்களில் ரிஜிஸ்தர் பண்ணிக் கொண்டு, இந்த மீன்பாசி குத்தகையை ஏலத்தில் எடுத்து ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் சம்பாதித்துக்கொண்டு, அரசை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் மீண்டும் அவர்களுக்குக் குத்தகையைக் கொடுக்காமல் இருக்கவும் அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, போலி சங்கங்கள் வைத்துக் கொண்டு, இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்கள் என்ற புகார்கள் ஏற்கெனவே அரசினுடைய கவனத்தில் இருக்கிறது. நடவடிக்கை எடுக்கப்படும்.

திண்டுக்கல் நகரில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம்.

* வினா எண். 817—திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் நகரில் புதிய பஸ் ஸ்டாண்டு அமைக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) தற்போது உள்ள பஸ் ஸ்டாண்டை காய்கறி மார்க்கெட்டாக மாற்றும் திட்டம் அரசிடம் உண்டா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இந்த வேலையில் முதல் கட்டம் முடியும் நிலையில் உள்ளது.

(ஆ) இல்லை.

1981 ஏப்ரல் 21]

நரிப்பள்ளி ஆற்றின் குறுக்கே பாலம் சட்டும் திட்டம்.

*வினா எண். 818—திரு. சி. சபாபதி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர்—திருவண்ணாமலை செல்லும் வழியில் நரிப் பள்ளி ஆற்றுக்கு இடையில் பாலம் அமைக்கும் திட்டம் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டத் திட்டம் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. சி. சபாபதி: தலைவர் அவர்களே, அரூர் வழியாக திருவண்ணாமலை செல்லும் பாதையில் நரிப்பள்ளி ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்கலாம் என்று ஏதாவது உத்தேசம் அரசுக்கு உள்ளதா என்று கேட்க விரும்புகிறேன்? (பதில் இல்லை).

தாம்பிரபரணி ஆற்றின் குறுக்கே பாலம்.

*வினா எண். 819—திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம்—தாம்பிரபரணி ஆற்றில் ஆழ்வார் திருநகரையும் ஆழ்வார்தோப்பையும் போக்குவரத்துக்கு இணைக்கும் வகையில் ஒரு பாலம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்தத் திட்டம் எப்பொழுது நடைபெறும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். என். இராமசாமி: தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் உள்ள அந்த ஆழ்வார்தோப்பையும் ஆழ்வார்திருநகரையும் இணைக்கக்கூடிய வகையில் ஒரு பாலம்

கட்ட வேண்டியது மிக அவசியமாக இருக்கிறது. காரணம் அங்குள்ள மக்கள் பொது வேலைகளுக்கு வெளியில் செல்ல வேண்டும் என்றால், அந்த ஆற்றைக் கடக்க வேண்டும். ஆற்றின் அகலம் ஒரு கிலோ மீட்டர் இருக்கிறது. அப்படி ஆற்றைக் கடக்க வேண்டிய அவசியம் நேரிடும்போது, சுற்றிக்கொண்டு 7 மைல் கடந்துசெல்ல வேண்டியதிருக்கிறது. ஆகையினால் உடனடியாக, ஒரு மீட்டர் அகலம் உள்ள அந்த ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் அமைக்கப்படுமேயானால் அது அந்தப் பகுதி மக்களுக்கு வசதியாக இருக்கும். இதைக் கருத்தில் கொண்டு அங்கே பாலம் அமைக்கும் திட்டத்தை அரசு மறுபரிசீலனை செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, தாமிரபரணி ஆற்றின் நீர்வழி அகலம் 360 மீட்டராகும். மேற்படி இடத்தில் தாமிரபரணி ஆற்றில் ஓர் முழ்கு பாலம் கட்டவும் அணுகு சாலைகள் அமைக்கவும் தோராயமாக ரூ. 56 இலட்சம் தேவைப்படும். இவ்விடத்தில் ஓர் உயர்மட்ட பாலம் கட்ட ரூ. 120 இலட்சம் தேவைப்படும். எந்தவிதமான அனுமதிக்கப்பட்ட திட்டத்திலும் இது இடம்பெறவில்லை. ஆகவே, நிதிநிலை சரியானவுடன், இது கவனிக்கப்படும்.

[முற்பகல் 9—20]

திரு. எஸ். என். இராமசாமி : ஒட்டப்பிடாரம்-சாத்தான் குளம் இணைப்புப் பாதையை இந்தப் பாலத்தில் ஏற்படுத்த அனைத்து அதிகாரிகளும் வந்து ஆய்வு வேலைகள் செய்ததாகக் கேள்விப்படுகிறேன். இது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஆய்வு செய்தபின்னால் தான் இந்தத் தோராயமான மதிப்பீடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

சின்னசேலத்திலுள்ள அரசு மருந்தகம்.

* வினா எண். 820—திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சின்னசேலத்தில் உள்ள அரசு மருந்தகத்தை அரசு மருத்துவமனையாக மாற்றுவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்றப்படும் ?

1981 எப்ரல் 21]

(இ) மேற்படி மருந்தகத்தில் கூடுதலான பெண் டாக்டர் நியமனம் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) : இவ் வினாக்களுக்கு இடமில்லை.

காஞ்சீபுரம் அரசு மருத்துவமனையில் சித்த மருத்துவப் பிரிவு ஏற்படுத்தும் திட்டம்.

*வினா எண். 821— திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) காஞ்சீபுரத்தில் உள்ள மருத்துவ மனையில் சித்த மருத்துவப் பகுதி தனியாக திறக்கப்பட்டு நோயாளிகள் தங்கி சிகிச்சை பெற வசதி செய்ய அரசிடம் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு இதன் மீது என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) காஞ்சீபுரம் மாவட்ட தலைமையிட மருத்துவ மனையில் சித்த மருத்துவப் பகுதி ஏற்கனவே திறக்கப்பட்டு, நோயாளிகள் தங்கி சிகிச்சை பெற படுக்கைகள் ஒதுக்கப்பட்டு வசதிகள் செய்யப்பட்டு உள்ளன.

(ஆ) இக் கேள்வி எழாது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : காஞ்சீபுரம் மருத்துவமனையில் சித்த மருத்துவப் பகுதியில் நோயாளிகள் தங்கி சிகிச்சை பெற வசதிகள் இல்லை என்பதை நான் நேரடியாக அந்த மருத்துவமனைக்குச் சென்றபோது அறிந்தேன். ஆகவே அங்கே நோயாளிகள் தங்கி சிகிச்சை பெற வசதிகள் செய்து தரப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : ஒவ்வொரு தலைமை மாவட்ட மருத்துவமனையிலும் 15 படுக்கைகள் சித்த வைத்தியத்திற்காக ஏற்படுத்த வேண்டுமென்று நாங்கள்

ஏற்கனவே உத்தரவிட்டிருக்கிறோம். அந்த அடிப்படையில் பல்வேறு மாவட்ட மருத்துவமனைகளில் 15 படுக்கைகள் இருக்கின்றன. இந்தக் காஞ்சீபுரம் மருத்துவமனையில் எவ்வளவு படுக்கைகள் இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோமோ அதை விட குறைவாக இருக்கிறது. இப்போது அங்கும் 15 படுக்கைகள் இருக்க வேண்டும் என்று உத்தரவு போட்டிருக்கிறோம்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : இந்தச் சித்த மருத்துவப் பகுதிக்கு ஒரே ஒரு மருத்துவர்தான் இருக்கிறார். இதற்குக் கூடுதல் மருத்துவர்களையும் அவர்களுக்கு வேண்டிய உதவியாளர்களையும் நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : புறநோயாளிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து இந்தப் படுக்கைகள் சரியான வகையில் பயன்படுத்திக்கொள்ளப்படுமா என்று பார்த்து பிறகு இன்னொரு மருத்துவரை நியமிக்கலாமா என்பதைப்பற்றி யோசிக்கலாம்.

திரு. இல. பலராமன் : அலோபதி வைத்திய முறையைக் காட்டிலும் சித்த வைத்தியத்திற்கு மக்கள் மத்தியில் இப்போது ஒரு கவர்ச்சி ஏற்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா ? ஆகவே மாவட்ட அளவில் என்று மட்டுமல்லாமல் தாலுகா மட்டத்திலும் இந்தச் சித்த மருத்துவ முறையை விஸ்தரிக்க அரசு முன்வருமா ? அலோபதி வைத்திய முறையில் தீராத சில நோய்கள் இந்தச் சித்த வைத்தியத்தில் தீருகின்றன என்று மக்கள் சொல்கிறார்கள். என்னென்ன வியாதிகளை இந்தச் சித்த வைத்தியம் போக்குகிறது என்பது அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : என்னென்ன நோய்கள் என்ற அந்தப் பட்டியலைக் கொடுக்க முடியாது, பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதிக்க மாட்டார்கள். நேரமும் இல்லை. இருந்தாலும் அது இங்கே சொல்லக்கூடிய கருத்தும் இல்லை. ஏற்கனவே இந்த மானியக் கோரிக்கை மீதான விவாதத்தை உறுப்பினர் அவர்கள் கூர்ந்து கவனித்திருப்பார்கள் என்று கருதுகிறேன். சென்ற ஆண்டைவிட 40 சதவீதம் இந்த ஆண்டு அதற்காக ஜாஸ்தி $2\frac{1}{4}$ கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்த்திருப்பார்கள். அதன் மூலமாகத்தான் எந்தளவிற்கு நாம் சித்த வைத்தியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறோம்

என்பதை நிச்சயமாக உறுப்பினர் அவர்கள் புரிந்து கொண்டிருப்பார்கள். அவர்களது பாராட்டுதல்களை நான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

கரடிக்குப்பம் கிராமத்திலுள்ள ஆரம்பச் சுகாதார நிலையம்.

*வினா எண். 822 திரு.—சி. கோபல் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா—

(அ) வடாற்காடு மாவட்டம், வாலாசா வட்டம், கரடிக்குப்பம் கிராமத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் தனி மருத்துவர் இல்லாதது உண்மையா ?

(ஆ) இந்த சுகாதார நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) இல்லை. வட ஆற்காடு மாவட்டம், வாலாசா வட்டம், கரடிக்குப்பம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் கிடையாது. அங்கு ஓர் அரசினர் மருந்தகம் தான் உள்ளது.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. சி. கோபால் : என் தொகுதியில் உள்ள கரடிக்குப்பம் கிராமத்தில் உள்ள மருந்தகத்தில் ஏறக்குறைய நாள்தோறும் 200-க்கு மேற்பட்ட நோயாளிகள் வந்து சிகிச்சை பெறுகிறார்கள். அந்நிலையில் அங்கே முழுநேரம் இருந்து கவனித்துக்கொள்ள ஒரு மருத்துவர் அங்கே இல்லை என்ற காரணத்தால் மக்கள் வசதி கருதி உடனடியாக அங்கே ஒரு மருத்துவரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய அந்தக் கருத்து எந்தளவிற்கு உண்மை என்றால் அந்த மருந்தகத்திற்கு ஏற்கனவே டாக்டர் நியமித்திருந்தோம். டாக்டர் ஜே. ரவிச்சந்திரன் என்பவரை 1—7—1980-ல் நியமித்தோம். பிறகு அவர்கள் அங்கே சரியான வகையில் பணியாற்றவில்லை என்பதால் டாக்டர் பி. எஸ். மனோகரனை நியமித்தோம். அவர்களுக்கு

பி. ஜி. பதவி கிடைத்தது. இப்போது ஆறு மாதங்களாக எம்.ஜெயபால் அஸிஸ்டென்ட் சர்ஜனாக பணியாற்றிக் கொண்டு வருகிறார். 22—8—80-இல் இருந்து பணியாற்றிக்கொண்டு வருகிற, அந்த மருந்தகத்திற்கு எப்படி நல்லவகையில்வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளலாம் என்பது குறித்து அரசாங்கம் நிச்சயமாகக் கவனிக்கும்

திரு. சி. கோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் ஜெயபால் தற்போது அந்த மருத்துவ மனையில் காலை 9 மணி முதல் 12 வரையிலும், அதற்குமேலே பிற்பகல் 3 மணி முதல் 5 மணி வரையிலும்தான் அங்கே பணியாற்றுகின்றார். ஆகவே, உடனடியாக அங்கே தனி மருத்துவர் ஒருவரை மக்கள் நலம் கருதி நியமிப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகின்றேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத் தான் நான் முதலிலேயே சொன்னேன். நிச்சயமாக நியமிப்போம்.

எல்லா அரசுத் தலைமை மருத்துவ மனைகளிலும் பல் மருத்துவப் பிரிவு ஏற்படுத்தும் திட்டம்.

* வினா எண். 823—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

எல்லா அரசுத் தலைமை மருத்துவ மனைகளிலும் பல் மருத்துவத்துக்கென்று தனிப் பிரிவு உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பல் மருத்துவத்திற்காகத் தனிப் பிரிவுகள் இப்பொழுது தமிழ்நாட்டில் உள்ள எல்லா மாவட்ட மருத்துவ மனைகளிலும் செயல்பட்டு வருகின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பல் மருத்துவம் மாவட்ட தலைமை மருத்துவ மனைகளில் செயல்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதைப் போல எல்லா தாலுகா தலைமை மருத்துவ மனைகளிலும் செயல்படுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வீர்களா? ஏற்கெனவே, சில தாலுகாக்களிலே இருப்பதாக அறிகிறேன். அப்படியில்லாமல், எல்லா தாலுகா மருத்துவ மனைகளிலும் செயல்படுவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்?

1981 ஏப்ரல் 21]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சித்தன் அவர்களுடைய கேள்விக்கு நன்றி. 71 வட்டத்திலே, தாலுகாக்களிலே இந்த மருத்துவ மனை இயங்கிக் கொண்டு வருகிறது. இப்போது இன்னும் 3 தாலுகா மருத்துவ மனைகளிலே அதாவது, அரசு மருத்துவமனை, தாராபுரம், பெரியார் மாவட்டம், அரசு மருத்துவமனை, பல்லடம், கோவை மாவட்டம், அரசு மருத்துவ மனை நிலக்கோட்டை, மதுரை மாவட்டம் ஆகிய இந்த 3 இடங்களில் விஸ்தரிப்பதாக இருக்கிறோம்.

திரு. சு. பாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பல் வியாதி சிறார்களுக்கு அதிகமாக இருப்பதாக மருத்துவமனைகளிலே இருந்து தெரிய வருகிறது. இப்படிப்பட்ட சிறார்களுக்கு ஆரம்பத்திலேயே பல் சொத்தை ஏற்படுவதற்கு காரணமாக இருப்பது அவர்களுக்கு தேவையான சத்துணவு இல்லை என்பதுதான். ஆகவே, அவ்வப்போது மாதம் ஒரு முறை இந்த பள்ளி மாணவர்களை பரிசோதனை செய்து, அவர்களுக்கு சிகிச்சை அளிக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இன்டென்சிவ் காம்பெயின் பார் ஸ்கிரீனிங் டென்டல் டிசீஸ்" என்ற அடிப்படையிலே மருத்துவ பரிசோதனை செய்யப்படுகின்றது. இதற்கு முன்னெச்சரிக்கையாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். அதற்காக இத்திட்டம் பல்வேறு பள்ளிக்கூடங்களிலே நடந்துகொண்டு வருகிறது. அதே நேரத்தில், நாம் எப்படியெல்லாம் வைத்துக் கொண்டால் இந்த வியாதி வராது என்பதற்காக, மிட்டாய் சாப்பிடக்கூடாது, சுவிங்கம் சாப்பிடக்கூடாது என்று சொல்லிக் கொண்டு வருகிறோம். குழந்தைகளுக்காக, அதை இங்கு சொன்னால், எல்லோருக்கும் தெரிய வேண்டும் என்பதற்காக நான் அதை இங்கேயும் சொல்கிறேன்.

திரு. வ. சத்தியமூர்த்தி: பேரவைத் தலைவர் அவர்களே, தாலுகா அளவிலே உள்ள மருத்துவ மனையில் பல் மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு, அவர்கள் அங்கு பணியில் இல்லாத நிலையில் நீண்ட நாட்களாக மருத்துவ மனைகள் இருக்கின்றன. அதே தருணத்தில் பல் மருத்துவ பட்டதாரிகள் பலர் வேலையில்லாத நிலைமை இருக்கிறது. ஆகவே, தாலுகா அளவிலே பல் மருத்துவர்களை நியமித்து, அவர்கள் அங்கே நல்ல முறையில் செயல்பட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். அந்த அடிப்படையிலே 71 வட்ட மருத்துவ மனைகளில் பல் டாக்டர்கள் இருக்கிறார்கள். இன்னும், 3, 4 இடங்களில் பல் மருத்துவ மனைகள் ஏற்படுத்த இருக்கிறோம். இன்னும் ஏறத்தாழ 40 இடங்கள் காலியாக இருக்கின்றன. தாலுகா மருத்துவ மனைகளிலே இந்த காலி இடங்கள் நிரப்பப்படுமானால் ரொம்பவும் நன்றாக இருக்கும். ஆனால், நிதி நிலைமை அதற்கு இடம் கொடுக்கவில்லை. ஒரு பல் பிரிவு ஆரம்பிக்க வேண்டுமென்றால், ஏறத்தாழ 40,000 ரூபாய் செலவாகின்றது ஒரு டென்டல் சேர் விலை ரூபாய் 15,000. ஆகவே, அதையெல்லாம் மனதிலே எடுத்துக் கொண்டு, படிப்படியாக இதிலே நாம் முன்னேற வேண்டும்.

திரு. ராஜ்குமார் விஜய ரகுநாத தொண்டமான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சில மருத்துவ மனைகளில் ஏற்கெனவே பல் டாக்டர்கள் இருந்தார்கள். இப்போது அங்கே இல்லாமல் இருக்கின்ற நிலைமையைப் பார்க்கின்றோம். இப்போது அரசாங்க டிஸ்டிரிக்ட ஹெட்-குவார்ட்டர்சிலே இருக்கக்கூடிய மருத்துவ மனைகளிலே உள்ள பல் டாக்டர்களை ஒரு மாதத்திற்கு ஒரு தரமாவது, இந்த தாலுகாவிலுள்ள மருத்துவ மனைகளுக்கு டூர் செய்து, அங்குள்ள நோயாளிகளைக் கவனிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன். ?

[முற்பகல் 9-30]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட மருத்துவ அதிகாரிகள் சுற்றுப் பயணம் செய்கின்ற நேரத்தில் எந்தெந்த தாலுகா மருத்துவ மனைகளில் டாக்டர்கள் இல்லாமல் காலியாக இருக்கிறதோ, அல்லது டாக்டர்கள் லீவு போட்டிருக்கிறார்களோ அந்த இடங்களுக்கு வாரத்திற்கு ஒருமுறை இப்போது மாவட்ட மருத்துவ மனைகளிலிருந்து பல் டாக்டர்களை அனுப்பிக் கொண்டிருக்கின்றோம்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு பெரியார் மாவட்டம் தாராபுரம் கோவை மாவட்டம், பல்லடம் போன்ற மூன்று இடங்களில் பல் மருத்துவர்களை புதிதாக நியமனம் செய்துள்ளதாக சொன்னார்

கள். பெருந்துறை தாலுகா தலைநகராகக் இருப்பதால் அந்த மருத்துவ மனையில் வருகின்ற ஆண்டிலாவது பல் டாக்டர் நியமனம் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, நான் பிளேன்ட்டு பேஸ் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். இந்த ஆண்டு மூன்று என்று இருந்தாலும் கூட இன்னும் ஆராய்ந்து அதிகப்படுத்தலாம். அதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதை அஸ்யூசன்ராக கொடுக்க முடியாது.

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட மருத்துவ அதிகாரிகள் சென்று பார்க்கின்ற நேரத்தில் அங்குள்ள குறைகளை தீர்க்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகையால் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுற்றுப் பயணம் செய்கின்ற போது மருத்துவ மனைகளைச்சென்று கவனித்தால் இந்தக் குறைகளை தீர்க்க முடியும். இதற்கு ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நான் வேகமாகத் தான் போய்க் கொண்டிருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்களோடு இரண்டு மணி நேரம் மருத்துவ மனையில் சுற்றிப் பார்த்து, அங்கு குறைகளை கேட்டறிந்து அவற்றைத் தீர்ப்பதற்கு ''டைரக்டர் ஆப் மெடிகல் சர்வீஸஸ்'' அவர்களிடம் கொடுத்திருக்கிறோம். உடனடியாக அவர் நடவடிக்கை எடுத்துக் கொள்வார் என்று கருதுகிறேன்.

சென்னை நகரில் நெரிசல் நேரங்களில் அதிகப் பேருந்துகளை இயக்கும் திட்டம்.

*வினா எண். 824—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் காலையிலும் மாலையிலும் கூட்ட நேரத்தில் (peak hours) பேருந்துகளில் இட நெருக்கடி காரணமாக பொதுமக்கள் மிகுந்த துன்பத்திற்கு உள்ளாவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இதைத் தவிர்க்க அந் நேரங்களில் விசேஷப் பேருந்துகளை விட அரசுமுன் வருமா ?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, (அ) காலையிலும் மாலையிலும் நெரிசல் நேரங்களில் இட நெருக்கடி அதிகம் உள்ளது என்பதை அரசு அறியும்.

(ஆ) சென்னை நகரில் ஏற்கனவே நெரிசல் நேரங்களில் 12 தடங்களில் 22 அதிகப்படியான பேருந்துகளை இயக்கிவருகிறோம். அத்துடன் 90 வழித்தடங்களில் காலையிலும், மாலையிலும் சேர்த்து, 765 பயணத் தடங்கள், வெட்டுப் பயணத் தடங்களாக கூட்டி இயக்கி வருகிறோம். 1981–85 ஆம் ஆண்டுகளில் 1223 புதிய பேருந்துகளை இயக்குவதாக திட்டம் உள்ளது. பேருந்களை எவ்வளவு அதிகப்படுத்தினாலும், சென்னை நகரில் பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப பேருந்துகளை இயக்க முடியுமா என்ற ஒரு ஐயம் ஏற்பட்டுள்ளது. அலுவலகங்கள், கல்வி நிலையங்கள், தொழிற்கூடங்கள் ஆகியவைகளின் பணி துவங்கும், முடியும் நேரங்களை வெகுவாக மாற்றி அமைக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இருந்தாலும் கூட மத்திய அரசு துரித மின் இரயில் திட்டத்தை அமுலாக்கினால் இந்தப் பிரச்சினைக்கு முழுக்கதிர்வு ஏற்படும் என்று கருதுகிறோம்.

திரு என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்றையதினம் சென்னை நகரில் காலையிலும், மாலையிலும், எங்காவது செல்ல வேண்டுமென்றுச் சொன்னால் பஸ்ஸிலே ஏறிச் செல்லக்கூடிய சூழ்நிலை இல்லை. அந்த அளவிற்கு நெரிசல் அதிகமாக உள்ளது. இதனால் பல நேரங்களில் கலவரங்கள் பஸ் கண்டக்டர்களுக்கும் மற்றவர்களுக்கும் ஏற்பட்டுவிடுகிறது. இது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். ஆகவே மக்கள் தொகையைக் கணக்கிட்டு விகிதாச்சாரத்திற்கேற்ப ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு பஸ்கள் விட்டால் சரியாக இருக்கும் என்பதை ஆராய்ந்து அதற்கேற்ப பஸ் விடுவதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மக்களுடைய ஜனத் தொகைக்கு ஏற்பதான் நாம் பேருந்துகளை இயக்குகிறோம் என்று சொன்னாலும், இன்றையதினம் சென்னையிலே இருக்கின்ற நிலைமை இதற்கு மேல் பேருந்துகளை இயக்கினால் இங்குள்ள சாலை வசதிகள் போதாது என்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அறிவார்கள் என்று கருதுகிறேன். இருந்தாலும் கூட தற்போது 1777 பேருந்துகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. வருகிற ஐந்தாண்டு காலத்திற்குள் ஏறத்தாழ 1223 புதிய பேருந்துகளை இயக்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது.

TRUTH ALONE TRIUMPHS

1981 ஏப்ரல் 21]

திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த 'பீக்' அவர்சில்' செல்கிற பயணிகள் அதிகமாக இருக்கிற காரணத்தால் படிகளில் ஏறி செல்கிறார்கள். ஆதனால் அனேகம் பேர் தவறி விழுந்து மாண்டிருக்கிறார்கள். 'பிக் பாக் கெட்ஸ்' போன்றவர்கள் பஸ்களில் நுழைந்து பயணிகள் பெரிய இழப்பிற்கு ஆளாகிறார்கள். பீக் அவர்சில் ஏற்படுகிற ஆபத்துக் களையும், இழப்புக்களையும் தவிர்ப்பதற்கு அதிகமான பஸ்களை விடுவதற்கு ஆவன செய்யப்படுமா? அதேபோல் பெண்களுக்கு தனி பேருந்துகள் விடுவதற்கும் அதன் மூலம் நெரிசலைத் தவிர்ப்பதற்கு ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவரவர்களே, பெண்களுக்காக 124 பேருந்துகளை இப்போது தனியாக இயக்கிக் கொண்டு இருக்கிறோம். இன்னமும் கூட வருகிற ஒரு ஆண்டிலே அதை இரட்டிப்பாக்க வேண்டுமென்ற அவசியம் இருக்கிற காரணத்தால் அதைச் செய்ய வேண்டுமென்று நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். பீக் அவர்சைப்பொறுத்த வரையில் அதிகமான பேருந்துகளை விட வேண்டுமென்ற அடிப்படையிலே நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

திரு. கோவைத்தம்பி : தலைவர் அவர்களே, சென்னையில் இருக்கின்ற பீக் அவர்ஸ் நெரிசலைப்போல் கோவையிலும் மிகவும் நெரிசல் இருக்கிறது. ஆகவே, அந்த நெரிசல் நேரங்களில் விடப்படுகின்ற தனி பஸ்களை அதிகப்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவரவர்களே கோவையில் மட்டுமல்ல, கிராமங்களிலே கூட இப்படிப்பட்ட, நிலைமைகள் இருக்குமானால் அதைச் செய்ய வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. அதை நிச்சயமாக அரசு செய்யும்.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ். : சட்டமன்ற விடுதியிலிருந்து சென்னை எக்மோருக்கும் அதைப் போன்ற இடங்களுக்கும் பஸ் விடுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது சென்னையிலே பீக் அவர்ஸ்சில் நெரிசல் இருப்பது பற்றி.

திரு. த. வீராசாமி : பெண்களுக்குத் தனியாக பேருந்து விடுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எங்களைப் போன்ற

வர்கள் பார்க்கின்ற நேரத்திலே பெண்களுக்கு விடுகின்ற பேருந்துகளில் ஆண்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? பெண்கள் மட்டுமே அந்த பஸ்ஸில் பயணம் செய்கின்ற வழிமுறைகளை ஏற்படுத்த அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, பெண்களுக்கு என்று தனியாக 124 பேருந்துகளை நாங்கள் இயக்கிக் கொண்டிருக்கிறோம். அதிலே ஆண்கள் ஏறுவதற்கு வாய்ப்பில்லை. அந்த பஸ்சிலே உள்ள ஓட்டுநரும் நடத்துநரும் தான் ஆண்களாக இருப்பார்கள். அவர்களைத் தவிர வேறு ஆண்கள் யாரும் அவைகளிலே ஏறுவதற்கு வாய்ப்பில்லை. அப்படி ஏறுவார்களானால் அது தடுத்து நிறுத்தப்படும்.

திரு. ஏ. கி. சண்முகம் : தலைவர் அவர்களே, சென்னையிலே மக்கள்தொகை வளர்ந்து கொண்டு இருக்கிறது. எவ்வளவு பேருந்துகளை விட்டாலும் இந்த இட நெருக்கடி தவிர்க்கமுடியாதது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பேருந்துகளில் நெருக்கடியைத் தவிர்ப்பதற்கு ஒரே ஒரு வழி இப்போது ரயில் திட்டம் தான் என்று தெரிவித்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதிலே மத்திய அரசு ஏன் மெத்தனம் காட்டுகிறது. அந்தத் திட்டத்திற்கு எத்தனை கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சு. முத்துசாமி ; பேரவைத் தலைவரவர்களே மின்சார இரயில் திட்டத்தின் மொத்த மதிப்பீடு எவ்வளவு என்ற கணக்கு என்னிடம் இப்போது இல்லை. மத்திய அரசாங்கம் செய்யவேண்டுமென்று வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். மீண்டும் வற்புறுத்தி மத்திய அரசாங்கம் அதைச் செய்தால் நிச்சயம் சென்னையிலே நெரிசலைத் தீர்ப்பதற்கு அது முடிந்த ஒரு முடிவாக இருக்கக்கூடிய நிலைமைகளை மாற்றியமைக்க முடியும்.

திரு கெ. சொக்கலிங்கம்: தலைவர் அவர்களே, சென்னையிலுள்ள நெரிசலைக் குறைப்பதற்காக இதற்கு முன்னால் சைதாப் பேட்டையிலிருந்து பாரிஸ் வரையிலும் டவுன் துரித வண்டி விடப்பட்டது. இப்போது அது நிறுத்தப்பட்டிருக்கிறது. எதற்காக அது நிறுத்தப்பட்டது? அது மீண்டும் விடப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தனிக் கேள்வி போட வேண்டும். கேள்வி மொத்தமாக நெரிசலைப் பற்றியது தான்.

1981 ஏப்ரல் 21]

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : தலைவர் அவர்களே, மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழகத்திலே தான் பேருந்துக் கட்டணம் குறைவாக இருக்கிறது என்ற காரணத்தால் அதிகமான பேருந்துகளை விட்டு நெரிசலைக் குறைப்பதற்கு அரசிடம் எதாவது சிறப்புத் திட்டம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நெரிசல் நேரத்திலே பயணிகள் சிரமப்படுகிறார்கள் என்ற கேள்வி கேட்கப்பட்டிருக்கின்ற அதே நேரத்திலே அதைத் தடுப்பதற்கு அரசாங்கம் எடுக்க வேண்டிய நடவடிக்கை மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி அந்த ரயில் திட்டத்தை கொண்டுவர வேண்டும். அல்லது அதிலே தாமதம் இருக்குமானால் புதிதாக பேருந்துகளை விடுவதன் மூலமாகத்தான் அப்படிப்பட்ட நிலைமைகளை மாற்றியமைக்க முடியும். சிரமப்படுகிற மக்களின் கஷ்டத்தைக் குறைத்து அவர்களுக்கு அந்த வசதிகளைச் செய்து தருவதற்காக நடவடிக்கை எடுக்கிற முயற்சியிலே கட்டணத்தை உயர்த்தி அதைச் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க இருக்கிறது.

[முற்பகல் 9-40]

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, சென்னையில் நெருக்கடியைக் குறைப்பதற்காக சர்க்கார் எவ்வளவு முயற்சிகள் எடுத்தாலும் முடியவில்லை என்ற அச்சத்திலே அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய பஸ் போக்குவரத்தில் ஸ்ட்ரைக் நடந்த காலங்களில் தனியார்களுடைய பஸ்களை விடுவதற்கு ஏற்பாடு செய்ததைப் போல், பல நன்மைகளைச் செய்துள்ள இந்த சர்க்கார் பீக் அவர்சில் அந்த நெருக்கடியைச் சமாளிப்பதற்கு ஒருசில தனிப்பட்டவர்களிடத்திலும் பஸ்களை ஓட்டுவதற்கான அனுமதியைக் கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவரவர்களே தனியாருக்கு கொடுப்பதன் மூலம் இந்த நெரிசல் குறைந்து விடும் என்று நிச்சயமாக உறுப்பினரவர்கள் கருதிவிட வேண்டாம் அங்கே அதிகமாக பேருந்துகளை அரசு விடுவதன் மூலம் பிரச்சனைகள் இல்லாமல் பொதுமக்களுக்கு சேவை செய்ய முடியும் என்பதை மறந்துவிடக் கூடாது. அதே நேரத்திலே அதிகமான பேருந்துகளை விட முடியாத நிலைமை இல்லை. ஆனால், விட்டாலும் சாலைகள் போதிய அளவிற்கு இல்லை என்பதை நாம் சிந்தித்துப் பார்த்தாக வேண்டும். படிப்படியாக நாம் அதை உயர்த்திக் கொண்டிருக்கிறோம். முழுக்க முழுக்க, நெரிசல் நேரங்களிலே

இருக்கின்ற அந்தக் கூட்டத்தை நாம் சமாளிக்கக்கூடிய அளவிற்குச் சூழ்நிலைகள் இல்லாமற் போய்விடவில்லை. இன்னும் கொஞ்சம் அதிகமாகப் பேருந்துகள் தேவை என்பதுதான் இங்கே சொல்ல வேண்டிய கருத்தாக இருக்கிறது.

திரு. கே. நாராயணசாமி : பேரவைத் தலைவரவர்களே, இந்த நெரிசலைக் குறைப்பதற்கு, சர்க்கார் தைரியமாக சர்க்கார் அலுவலகங்களின் நேரத்தை மாற்றினால் முடியும். அவ்வாறு மாற்றுவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சு. முத்துச்சாமி : பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே அந்த நேரங்களை ஓரளவுக்கு மாற்றியமைத்து வைத்து இருக்கிறோம். இன்னும் கூட இந்த அடிப்படையிலே இதைப்பற்றி ஆராய்ந்து கூட அதை மாற்றியமைப்பதற்கு அரசு நடவடிக்கையை எடுத்துக்கொண்டிருக்கிறது.

சென்னைக்கும் பெங்களூருக்கும் இடையில் குளிர்சாதன வசதியுடைய பேருந்து விடும் திட்டம்.

*வினா எண். 825: திரு. ந. குலசேகரபாண்டியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னைக்கும் பெங்களூருக்கும் இடையே ஆம்பூர் வழியாக குளிர் சாதன வசதியுடைய பேருந்துகள் விடும் செயற்குறிப்பு ஏதும் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : இல்லை.

திரு ந. குலசேகரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னைக்கும் பெங்களூருக்கும் இடையே உள்ள ஆம்பூர் முக்கியமான இடமாக இருக்கிறது. தொழில் துறையிலே மிகவும் பிரசித்தி பெற்ற இடமாக விளங்குகிறது. வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் தொழில் ரீதியாக அங்கே வருவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே அவர்கள் வந்து செல்வதற்கு வசதியாக உடனடியாகப் புதிய பஸ் விட முடியவில்லையென்றாலும்கூட, சித்தூர் வழியாகச் செல்லும் பஸ்ஸை ஆம்பூர் வழியாக விடுவதற்கு முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்,

1981 எப்ரல் 21]

மாண்புமிகு திரு சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத்தலைவரவர்களே, சித்தூர் வழியாகப் போய்க்கொண்டிருப்பதை மாற்றி இங்கே விட்டால் அந்தப் பகுதியிலே இருப்பவர்கள் மீண்டும் ஒருமுறை இங்கே கேள்வியைக் கேட்கக் கூடும். இருந்தாலும்கூட இந்தப் பகுதியிலே, கிருஷ்ணகிரியிலிருந்து ஹோசூர் வரை 60 கிலோ மீட்டர் தூரத்திற்குப் பாதை சரியில்லாத காரணத்தால் இப்பொழுது அந்தக் குளிர் சாதன வண்டியை அங்கே விடுவது அவ்வளவு சாத்தியமில்லாமல் இருக்கிறது. எனவே, அந்தப் பாதை முடிவடைந்தபின்பு அதைப்பற்றி நாம் சிந்தித்து நடவடிக்கை எடுப்போம்.

திரு. ந. குலசேகர பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது சென்னைக்கும் பெங்களூருக்கும் இடையே ஆம்பூர் வழியாகச் செல்லும் பாதை அழகான பாதை. ஆனால் மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்ட பாதை குறுக்கு வழியாக போடப்படும் பாதை. ஆகவே இப்பொழுது இருக்கின்ற பாதையிலேயே புதிய வழித் தடத்தைத் தொடங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கிருஷ்ணகிரியிலிருந்து ஹோசூர் வரையிருக்கின்ற பாதை மிகவும் வளைவு உள்ள பாதைகளாகவும் அதிலே வேலைகள் நடந்து கொண்டிருப்பதாகவும், அந்தப் பகுதியிலே போகின்ற பேருந்துகள்கூட அடிக்கடி பழுதுபட்டு விடுகின்ற காரணத்தாலும், அந்தப் பகுதியிலே குளிர் சாதன வண்டியை விட்டால் மேலும் சூழ்நிலைகள் மோசமாகும் என்று என்னிடம் தகவலைச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வது சரியாக இருக்குமேயானால் அதைப் பார்த்து, ஆராய்ச்சி செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, ஏழ்மை நிறைந்த நம்முடைய நாட்டில் ஏர்கண்டிஷன் பஸ்கள் அவசியம்தானா? அதிலும் குறிப்பாக ஒரு ஏர்கண்டிஷன் பஸ் மற்ற பஸ்களைவிட மூன்று மடங்கு, நான்கு மடங்கு அதிக விலையாக இருக்கின்ற நேரத்தில், மக்களுக்கு அதிக வசதிகளைச் செய்துகொடுப்பதற்கு நிறைய பஸ்களை விடுவதற்கே நிதிவசதி சரியாக இல்லாத நேரத்தில் இதுபோன்று அதிகச் செலவில் ஏர்கண்டிஷன் பஸ்களை விடுகின்ற திட்டத்தை ரத்து செய்வதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏதோ அரசாங்கத்தினிடத்தில் நிறைய வசதியிருக்கிறது: அதன் காரணமாகத்தான் ஏர்கண்டிஷன்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

பஸ்கள் விடப்படுகின்றன என்பது அல்ல. இங்கேகூட நெரிசல் நேரத்தைப் பற்றிச் சொன்னார்கள். அதன் காரணமாக மாகத்தான் விரைவுப் பேருந்துகள் என்று சென்னையிலே நாம் விட்டிருக்கிறோம். காரணம், கொஞ்சம் வசதி படைத்தவர்கள் அதைப் பார்த்து, அதில் போகட்டுமே என்பதற்காகத்தான். அதைப் போல வசதியுள்ளவர்கள் இந்த ஏர்கண்டிஷன் பஸ் களிலே போகின்ற காரணத்தால் அரசாங்கத்திற்கும் அதிகமான வருமானம் வருகிறது. எவ்வளவு அதன் விலை கூடுதலாக இருக் கிறதோ அதற்கேற்ப நாம் கட்டணத்தை வசூல் செய்து கொண் டிருக்கிறோம். அதன் காரணமாக எந்தக் காரணத்தைக் கொண்டும் அரசாங்கத்திற்கு எந்தவிதமான நஷ்டமோ அல்லது ஏர்கண்டிஷன் பஸ்களை விடுகின்ற காரணத்தினால் மற்றப் பேருந்துகள் குறைந்துவிடும் என்றோ எண்ண வேண்டாம். நிச்சயமாக இதன் காரணமாக இது குறையாது.

திரு. க. இரா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து பெங்களூருக்குச் செல்லுகின்ற விரைவுப் பேருந்துகளில் இட நெருக்கடி அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. பெங்களூரிலிருந்து சென்னைக்குத் தனி யார் பேருந்துகள் அதிகமாக வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, கிருஷ்ணகிரியிலிருந்து ஹோசூர் வரைக்கும் பாதையைப் பழுது பார்த்துக் கொண்டிருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள் அது, ஏற்கனவே இருந்த இடத்தை மாற்றிப் பாதைகள் அமைத் துக்கொண்டிருக்கின்ற காரணத்தினால், ஏற்கனவே போய்க் கொண்டிருக்கின்ற பாதையிலேயே அந்த பஸ்களை இன்னும் கொஞ்சம் கூடுதலாக பெங்களூருக்கு விடுவதற்கு அமைச்ச ரவர்கள் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக மாநிலத்திற்கும் தமிழகத்திற்கும் உள்ள ஒப்பந்தத்தினுடைய அடிப்படையில் 5 பேருந்துகளை இயக்கிக் கொள்ளலாம் என்று சொல்லி, சென்னைக்கும் பெங்களூருக்கும் இயக்கிக் கொண்டிருக்கிறோம். மீண்டும் புதிதாக விடவேண்டு மென்று சொன்னால் அந்த ஒப்பந்தத்திலே கர்நாடக மாநிலத்தை சேர்ந்தவர்கள் ஒப்புதல் அளிக்க வேண்டும். அப்படிப்பட்ட ஒப்புதல் அளிக்கப்படுகிற சூழ்நிலை இப்பொழுது இல்லை. இருந்தாலும்கூட அதைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அவர் கள் கேட்டால் நிச்சயமாக எத்தனை பேருந்துகளுக்கு அவர்கள் ஒப்புதல் அளிக்கிறார்களோ, அத்தனை பேருந்துகளை விட நாம் தயாராக இருக்கிறோம்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும்போது வசதி உள்ளவர்களிடம் அதிக மான கட்டணம் வசூல் செய்துகொண்டு ஏர்கண்டிஷன் பஸ்

விடுவதாகச் சொன்னார்கள். இப்பொழுது திருவனந்தபுரத்தி லிருந்து சென்னைக்கு வரக்கூடிய ஏர்-கண்டிஷன்ட் பஸ்ஸிலே எப்போதுமே டிக்கட்டுகள் முழுமையாக நிரம்புவது இல்லை. கடுமையான கூட்டம் இருந்த நேற்று கூட அதிலே ஒரு டிக்கட் காலியாகத்தான் இருந்தது. அதிலே வரக்கூடிய வருமானம் சொகுசு வண்டியிலே வரக்கூடிய வருமானத்தைவிடக் குறைவாக இருக்கிறது. ஆகவே தான் இவ்வளவு அதிகமான செலவு செய்து இப்படி ஏர்-கண்டிஷன்ட் பஸ்கள் விடுவதைவிட சாதாரண பஸ்களையும், சொகுசு பஸ்களையும் விடுவதைப் பற்றி அரசு தீவிரமாகப் பரிசீலித்து இந்த ஏர்கண்டிஷன்ட் வண்டியை ரத்து செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொல்லியபடி ஏர்கண்டிஷன்ட் பஸ்கள் வருகிற காரணத்தால், சொகுசு பஸ்கள் குறைந்து விடும் என்ற எண்ணம் வேண்டாம். ஆனால், எங்கே ஏ. சி. பஸ்களாலே நஷ்டம் ஏற்படுகிறதோ, அதை ரத்து செய்து லாபம் வரக்கூடிய அளவுக்கு, எந்தப் பேருந்திலே முழுக்க, எல்லோரும் ஏறுகிற அளவுக்கு வாய்ப்பு இருக்கிறதோ அந்த வழித்தடங்களிலே ஏற்படுத்தப்படும்.

திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை, நம்முடைய அமைச்சர் கர்நாடக அவர்கள் மாநிலத்திற்கும் தமிழக அரசிற்கும் 5 பஸ்கள் விடலாம் என்ற ஒப்பந்தம் இருப்பதாகச் சொன்னார்கள். அதிலே, மைசூருக்குச் சென்று கொண்டிருந்த பஸ் ரத்து செய்யப்பட்டு, பெங்களூர் வரைதான் செலுத்தப்படுகிறது. எனவே, மைசூருக்கு அந்த பஸ்ஸை முன்புபோல் இயக்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்குமேயானால் அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

சிவகாசியில் பாண்டியன் போக்குவரத்துக் கழக துணைப் பணிமனை அமைக்கும் திட்டம்.

*வினா எண். 826—திரு வி. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசியில் பாண்டியன் போக்குவரத்துக் கழக துணைப் பணிமனை அமைக்கும் உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அப் பணிமனை எந்தப் பகுதியில் அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) சிவகாசி பேருந்து நிலையத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் துணைப் பணிமனை ஒன்று அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது.

திரு வி. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பணிமனை எப்பொழுது அமைக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது அந்த இடத்தை ஆர்ஜிதம் செய்து நம்முடைய போக்குவரத்துக் கழகத்திடம் ஒப்படைக்கவேண்டுமென்று நாம் சொல்லி இருக்கிறோம். இப்பொழுது ரெவின்யூ டிபார்ட்மெண்டிலே அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலம் பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்ட பின்பு தீவிரமான நடவடிக்கை எடுத்து, உடனடியாக அந்தப் பணிமனைக் கட்டப்படும்.

கூட்டுறவு சங்கங்களின் மூலம் "டீசல்" வழங்குதல்.

*வினா எண். 827—திரு. க. பரமலை: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்புவனம், திருப்பாச்சேத்தி, மானாமதுரைப் பகுதிகளில் டீசல் தட்டுப்பாடு காரணமாக விவசாயிகள் பாதிப்புக்கு உள்ளாகி இருப்பதால், கூட்டுறவு சேவை சங்கங்கள், கூட்டுறவு பண்டகசாலை ஆகியவற்றின் மூலமாக தேவையான டீசல் சப்ளை செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : இல்லை.

திரு. க. பரமலை : பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை, திருப்புவனம், திருப்பாச்சேத்தி பகுதிகளில் கரும்பு விவசாயம் மிக அதிகமாக இருக்கிற நிலையில், அங்கு வெல்லம் தயாரிக்கின்ற ஆலைகளும் மற்றும் தண்ணீர் இறைக்கின்ற பம்பு செட்டுகளும் இந்த மாதிரி டீசல் தட்டுப்பாடு காரணமாக, இயங்காமல் இருந்தன. ஆகவே, அது குறித்து ஒரு குறுகிய கால

வினாவாகத்தான் இதை நான் நிதியமைச்சரிடம் கொடுத்தேன். இது போக்குவரத்துத்துறை அமைச்சருக்கு மாற்றப்பட்டிருக்கிறது. ஆகவே, நான் கேட்டுக்கொள்வது, திருப்புவனத்தில் ஒன்று, மானாமதுரையில் ஒன்று என்று இரண்டு டீசல் பங்குகள் இருக்கின்றன. அவர்களுக்கு ஒதுக்கப்படுகிற கோட்டாவை எடுத்து விநியோகிக்கின்ற பொருளாதார நிலையில் அவர்கள் இல்லை. ஆகவே, அப்படிப்பட்டச் சூழ்நிலையில் விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கம் ஏற்கெனவே பயன்படுத்தப்பட்டு இருக்கிறது. அதை அடிப்படையாக வைத்து, அப்படி தட்டுப்பாடு இருக்கிற நேரங்களில், கூட்டுறவுச் சேவைச் சங்கங்களின் மூலமாக அதை விநியோகிப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, டீசல் விநியோகத்தில், யார், யாருக்கு கோட்டா ஒதுக்க வேண்டுமென்ற அந்த நிலை, மத்திய அரசாங்கத்தினுடைய நேரடிப் பார்வையில் இருக்கிறது. நம்முடைய அரசைப் பொறுத்தவரை இவர்களுக்குத்தான் கோட்டா கொடுக்கவேண்டுமென்று, நாம் சொல்ல முடியாது. எனவே, அந்த பங்குகளிலேயிருந்து, யார், யாருக்கு, என்ன, என்ன முறையிலே முன்னுரிமை கொடுக்கலாம் என்பதை மட்டும் தமிழக அரசைப் பொறுத்தவரை சொல்ல முடியும். எனவே, மத்திய அரசாங்கத்தைக் கேட்டுத்தான் நாம் அதைச் செய்ய வேண்டியிருக்கிறது. மத்திய அரசாங்கத்திற்கு அந்தக் கருத்தை நாம் எழுத முடியும்.

[முற்பகல் 9–50.]

திரு. க. பரமலை: தலைவர் அவர்களே, இந்த டீசல் அல்லது கெரோசின் போன்றவைகளை ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை நம்முடைய சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்கு மாற்றுவதற்கு தமிழக அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருப்பதாக ஒரு அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி நமக்கு ஒதுக்கப்படுகின்ற அந்த சதவிகிதத்தை நம்முடைய கூட்டுறவுத் துறை மூலம் விநியோகிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கோட்டா நமக்கு ஒதுக்கப்பட்டிருக்குமேயானால், அதன் மீது நடவடிக்கை எடுக்க முடியும். ஆனால், அந்த கோட்டாவை ஒதுக்க வேண்டிய பொறுப்பு மத்திய அரசாங்கத்திடம் இருக்கிற காரணத்தால், அவர்களிடம் கேட்டு அவர்கள் ஒதுக்கிய பிறகுதான் நடவடிக்கை எடுக்க முடியும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலட்சக்கணக்கான டீசல் பம்ப் செட்டுகள் இருக்கின்ற காரணத்தால் திருப்பத்தூர், திருப்பாத்துறை போக மற்ற அனைத்து இடங்களிலும் இது பரந்து கிடக்கின்ற காரணத்தால், மத்திய அரசிடம் பேசி, இதை சுமுகமாக கூட்டுறவுப் பண்டக சாலைகளில் விற்பனை செய்ய அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஏற்கெனவே, எந்தெந்த பங்க் சொந்தக்காரர்களுக்குக் கோட்டா ஒதுக்கப்பட்டிருக்கின்றதோ அவர்கள் மூலமாக இவர்களுக்கு ஒதுக்க வேண்டும் என்று மாநில அரசு சொல்லி இருக்கிறது. இருந்தாலும் கூட்டுறவுச் சங்கங்களில் வைத்துத்தான் விநியோகம் செய்ய வேண்டும் என்கின்ற சூழ்நிலை வருமானால், அதன் மீது மத்திய அரசைக் கேட்டு நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம்.

கைத்தறித் துண்டுகள் ஏற்றுமதி.

*வினா எண். 828—திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு கைத்தறி-கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறித் துண்டுகள் ஆஸ்திரேலியாவுக்கு ஏற்றுமதி ஆகிக் கொண்டிருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : (அ) ஆம்.

(ஆ) ஏப்ரல் 1980 முதல் சனவரி 1981 முடிய ரூபாய் 3 கோடி பெறுமானமுள்ள கைத்தறித் துண்டுகள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

திரு. ஏ. சி. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் கைத்தறித் துணிகளை அந்தந்த நாட்டு உடைகளை இங்கேயே அவர்கள் விரும்புவதைப் போல தைத்து ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்வியை ஒட்டி கேட்கவேண்டும்.

1981 ஏப்ரல் 21]

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விற்பனை நிலையம் என்கின்றபோது, ஆஸ்திரேலியா என்று சொல்லுகிறபோது, நான் கூட சிங்கப்பூர் சென்றிருக்கிறேன். அங்குள்ள விற்பனை நிலையம் மாக்சிங் ரோடில், சென்ட்ரல் பில்டிங் என்ற இடத்தில் உள்ளது. ஆனால், அங்கே செராங் ரோடு மற்றும் ஆரப் ஸ்டீரிட் என்ற இடங்கள்தான் டிப்பார்ட் மெண்டல் ஸ்டோர்கள் அதிகமாக உள்ள இடமாகும், வியாபாரம் அதிகமாக நடக்கும் இடமாகும். எனவே, இந்த வியாபார இடத்தை, விற்பனை நிலையத்தை இந்த இடத்தில் இருந்து செராங்ரோடு, ஆரப் ஸ்டீரிட்டுக்கு மாற்றி கைத்தறிவிற்பனையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிங்கப்பூரிலே இப்போது திறந்து வைக்கப்பட்டிருக்கின்ற இடம் மாக்சிங் ரோட்டில், சென்ட்ரல் பில்டிங்கில் இருக்கின்றது. ஆனால், விற்பனை அதிகமாக உள்ள செராங்ரோடு, ஆரப் ஸ்டீரிட்டில் ரீடெயில் ஷாப்புக்கு இடம் பார்ப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதுவரையில், ஆரப் ஸ்டீரீட்டில் உள்ள அகமது அண்டு கம்பெனி என்ற நிறுவனம் இந்த கோ-ஆப்டெக்ஸ் ஷோ ரூம் வைத்து விற்பனை செய்வதற்கும் அதன் மூலம் சிங்கப்பூர் மக்களை கவரும் வகையிலும் ஏற்பாடுகள் செய்திருக்கிறோம்.

திரு. எம். சின்னசாமி: தலைவர் அவர்களே, இந்த ஏற்றுமதி செய்யப்படுகின்ற துண்டுகள், கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து உற்பத்தியாகின்ற துண்டுகளா, அல்லது தனியார்களிடம் இருந்து வாங்கி கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் ஏற்பாடு செய்யப்படுகின்றதா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக தயார் செய்யப்படுகின்ற துண்டுகள், மதுரை, நாகர்கோவில் போன்ற இடங்களில் இருந்து 80 முதல் 85 சதவிகிதம் வரை தமிழ்நாட்டில் இருந்து வாங்கி ஏற்றுமதி செய்யப்படுகின்றது. அதிலே, 1976–77-ல் 55 இலட்சம், 1977–78-ல் 94 இலட்சம், 1978–79-ல் 361.59 இலட்சம், 1979–80-ல் 396.93 இலட்சம் ரூபாய் அளவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, ஆஸ்திரேலியாவுக்கு துண்டுகளை ஏற்றுமதி செய்வதாக சொல்லப்பட்டிருக்கிறது. துண்டுகளுக்கு மட்டும் தான் அங்கிருந்து கோரிக்கை வரப்பெற்றதா? அல்லது படுக்கை, விரிப்பு, ஜமக்காளம் போன்ற துணி வகைகளுக்கும் கோரிக்கை வந்துள்ளதா? ஐரோப்பாக் கண்டத்தில் இருக்கிற நாடுகளுக்கும், கிழக்கு ஆப்பிரிக்கா பகுதியில் உள்ள சோசலிஸ்ட் நாடுகளிலும் இத்தகைய கோவாப்டெக்ஸ் விற்பனை நிலையங்களை ஏற்படுத்தி, அங்கேயும் துணி ஏற்றுமதி செய்வதற்கு இதுவரை ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆஸ்திரேலியா நாட்டிற்கு துண்டுகள் மட்டுமே ஏற்றுமதி செய்யப்படுகின்றது. ஆனால், கோவாப்டெக்ஸ் இன்டர்நேஷனல் என்கிற அமைப்பின் மூலம் பல்வேறு அந்நிய நாடுகளுக்கு படிப்படியாக ஏற்றுமதி செய்யும் திட்டத்திற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆஸ்திரேலியா, அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி போன்ற நாடுகளுக்கு தற்போது ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. 1978—79-இல் 76 இலட்சம் ரூபாய் ஏற்றுமதியும், 1979—80-இல் 2 கோடி ரூபாய் அளவிற்கு ஏற்றுமதியும், 1980 டிசம்பர் மாதம் முடிய 2 கோடியே 27 இலட்சம் ரூபாய் அளவிற்கு ஏற்றுமதியும் செய்யப்பட்டு இருக்கிறது. ஆகவே, மேல் திசை நாடுகளுக்கும் கைத்தறித் துணிகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. குறிப்பாக, பெட்ஸ்பிரெட்ஸ், ஷர்ட்ஸ், கர்ட்டன் கிளாத், பர்னிஷீங் கிளாத் போன்ற துணிகள் மேல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்த ஆண்டு ஏறக்குறைய 4 கோடி ரூபாய் அளவிற்கு ஏற்றுமதி செய்யும் வாய்ப்பு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, ஆஸ்திரேலியாவிற்கு அனுப்பப்படுகின்ற துண்டுகள் நல்ல தரமான துண்டுகள்தானா என்று அரசு ஆய்வு செய்து அனுப்புகிறதா? அதோடு, ஸ்ரீவில்லிபுத்தூர் துண்டுகள் பிரசித்திப் பெற்ற துண்டுகளாக இருப்பதால், அதை ஏற்றுமதி செய்ய அரசு ஆவன செய்யுமா? கைத்தறித் துண்டுகளை நம்முடைய நாட்டில் தோளில் போட்டுக்கொள்வதற்கு உபயோகிப்பது போல், ஆஸ்திரேலியாவில் பயன்படுத்துகிறார்களா அல்லது வேறு எதற்காகப் பயன்படுத்துகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆஸ்திரேலியா நாட்டிற்கு அனுப்பப்படுகிற துண்டுகள் தரமான துண்டுகளாகத்தான் அனுப்

பட்டு வருகின்றன. மேலும், சரியான முறையில் அவைகள் தர மான துண்டுகள்தானா என்று சோதித்துப் பார்ப்பதற்கான லேப்—விஞ்ஞான கூடம் கோவாப்டெக்ஸ் மூலம் நிறுவ இருக் கிறோம். ஆஸ்திரேலியாவிற்கு அனுப்பப்படும் துண்டுகள் அங்கே எப்படி பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்பது நமக்குத் தெரி யாது. நமது நோக்கம் துண்டுகள் அதிக அளவில் ஏற்றுமதி செய்து வியாபாரத்தைப் பெருக்க வேண்டும் என்பதாகும் என் பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ராஜ்குமார் விஜயரகுநாத தொண்டைமான்: தலைவர் அவர்களே, இங்கேயிருந்து துண்டுகள் ஆஸ்திரேலியாவிற்கு ஏற்று மதி செய்யக்கூடிய நேரத்தில் அதற்கு ஈடாக பணமாகப் பெறு கிறோமா அல்லது வேறு சாமான்களாகப் பெறுகிறோமா என் பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணமாகத்தான் பெற்று வரு கிறோம். யாதொரு சாமானும் பெறவில்லை என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஆஸ்திரேலியா, அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி போன்ற நாடுகளுக்கு துணிகள் ஏற்றுமதி செய்யப்படுவது பற்றிச் சொன்னார்கள். இன்னும் பல்வேறு மேலை நாடுகளுக்கு கைத்தறித் துணிகளை ஏற்றுமதி செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கைகளை மேற் கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர்கள் நெய்துவரும் துண்டுகளுக்கு மட்டும் மேல் நாடுகளில் நல்ல வரவேற்பு இருப்ப தாக கருதத் தேவையில்லை. பல ரகத் துணிகளும் அங்கே ஏற்று மதி செய்யப்பட்டு, விற்பனை செய்யப்படுகின்றன. ஆஸ்திரேலி யாவிற்கு மட்டும் துண்டுகள் அனுப்பப்படுகின்றன. ஜெர்மன், பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு பெட் ஸ்பிரெட்ஸ், ஷர்ட்ஸ், காட்டன் கிளாத், ப்ர்னிஷிங் கிளாத் போன்றவற்றை ஏற்றுமதி செய்து வருகிறோம். மற்ற நாடுகளிலும் அத்தகைய வாய்ப்பினை ஏற்படுத்துவதற்காக கோவாப்டெக்ஸ் இண்டர் நேஷனல் முயற்சிகளை செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடல் ஊனமுற்றோருக்கான சிறப்புத் திட்டங்கள்.

*வினா எண் 829—திரு. ஜே. சி. டி. பிரபாகரன், திரு. ந. குலசேகர பாண்டியன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) உடல் ஊனமுற்றவர் ஆண்டையொட்டி தமிழக அரசின் சார்பாக சிறப்புத் திட்டங்கள் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இதற்காக செலவிடப்பட இருக்கும் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்:—பேரவையின் அனுமதியுடன் வினா விடை நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(முற்பகல் 10–00)

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவரவர்களே, (அ) ஆம்.

(ஆ) ரூபாய் 59.51 இலட்சம்.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : தலைவரவர்களே, இந்த உடல் ஊனமுற்றவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட சதவீதம் வேலை வாய்ப்புகளில் ஒதுக்கித் தர வேண்டுமென்ற கோரிக்கை உள்ளது. இந்த ஆண்டில் மாநில அரசின் சார்பாக உடல் ஊனமுற்றவர்களுக்கு தனியார் துறையிலும், அரசுத் துறையிலும் 3 சதவீத இட ஒதுக்கீடு செய்து அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே• உடல் ஊனமுற்றவர்களுக்காக 3 சதவீதம் வேலை வாய்ப்புகளில் ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்பதைப் பரிசீலித்து, விரைவில் அமுல்படுத்துவோம்.

திரு. ந. குலசேகர பாண்டியன் : தலைவரவர்களே, உடல் ஊனமுற்றோர் ஆண்டையொட்டி தமிழக அரசு சார்பாக அவர்களுக்கு சிறப்புத் திட்டங்கள் உள்ளன என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். அவை என்னென்ன திட்டங்கள் என்று அறிவிப்பார்களா ? மற்றும் செயற்கை உறுப்புகளைப் பொருத்தும் நிலையங்கள் இந்த ஆண்டில், வாணியம்பாடி, ஆம்பூர் போன்ற இடங்களில் அமைக்கப்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே, உலக உடல் ஊனமுற்றவர்கள் ஆண்டை ஒட்டி ஊனமுற்றவர்களுக்கு 18 திட்டங்களைப் போட்டு, அந்தத் திட்டங்களின் வாயிலாக உடல் ஊனமுற்றவர்களுக்கு நல்ல வாய்ப்புகளையும் அவர்களுடைய வாழ்க்கையில் முன்னேற்றத்தையும் ஏற்படுத்திக்

1981 ஏப்ரல் 21]

கொண்டிருக்கிறோம். அந்த வகையில் பார்வையற்றவர்களுக்கு புதிதாக இரண்டு அரசுப் பள்ளிகள், காது கேளாதவர்களுக்கு இரண்டு அரசுப் பள்ளிகள், கால் ஊனமுற்றவர்களுக்கு அரசுப் பள்ளி ஒன்று தொடங்குதல், உடம்பின் கீழ்ப்பகுதி பக்கவாத நோய் கண்டுள்ள 100 நபர்களுக்கு சக்கர நாற்காலி இலவசமாக வழங்குதல், வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்து வேலையில் அமர்த்தப்படாத கண் பார்வையற்றவர்களுக்கு படி வழங்குதல்; பார்வையற்றவர்கள் மற்றும் காது கேளாதவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பள்ளிகளில் பயிற்சியாளர்களின் எண்ணிக்கையை உயர்த்துதல்; போன்றவை மேற்கொள்ளப்பட்டுள்ளன. உலக உடல் ஊனமுற்றோர்கள் ஆண்டினை ஒட்டி அவர்களுக்கென ஒரு விளையாட்டுப் போட்டி நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. இந்த ஆண்டு இறுதியில் மீண்டும் ஒரு விளையாட்டுப் போட்டி நடத்தப்படும். உடல் ஊனமுற்றோர் பற்றிய கணக்கு எடுப்பு ஒன்று நடத்தப்படுகிறது. தற்போதுள்ள தொழிற் பயிற்சி நிலையத்தில் காது கேளாதவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக தனிப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்படுகிறது. கிண்டியில் உள்ள வயதுவந்த பார்வையிழந்தோருக்காக நடத்தப்படும் லேசு ரக பொறியியல் திட்டத்தை தொழில் நுட்ப பயிற்சி நிறுவனமாக தரம் உயர்த்துதல்; வட்டார புது வாழ்வு நிலையம் அமைத்தல்; ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களிலும் 10 முதல்20உடல் ஊனமுற்றவர்களுக்கு சுயவேலைவாய்ப்பு ஏற்படுத்தித்தருதல் ஆகியவைகளுடன் உடல் ஊனமுற்றவர்களிடம் பொது மக்களின் நாட்டத்தைத் திருப்பவும் அவர்களின் நலனில் ஈடுபாடு கொள்ளச் செய்யவும் வேண்டி பிரச்சாரமும் செய்திப் படமும் தயாரிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். புதிய செவியியல் பிரிவுகள் அமைக்கப்படும். செயற்கை உறுப்புகள் தயாரித்து வழங்குவதற்கென இரண்டு புதிய நிலையங்கள் துவங்கப்படும். உடல் ஊனமுற்றோர்கள் ஆண்டினை ஒட்டி சிறப்புப் பணிகளை மேற்கொள்வதற்கென இரண்டு நல அதிகாரிகளும் துணைப் பணியாளர்களும் நியமிக்கப்படுவர். நான்கு மண்டல மறுவாழ்வு நிலையங்கள் ஏற்படுத்தப்படும். பார்வையற்ற 120 நபர்களுக்கு துணி நெய்வதில் 6 மாதங்களுக்கு பயிற்சி கொடுக்கும் திட்டம் ஒன்று துவங்க இருக்கிறது.

திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, சாதாரணமாக கேள்வி நேரத்தில் துணைக் கேள்வி கேட்டால் இது மதுராந்தகத்தைப் பற்றியது, அதனால் மதுராந்தகத்தைச் சேர்ந்தவர்கள் தான் கேட்க வேண்டும் என்று சொல்வீர்கள். அந்த மாதிரி இந்த உடல் ஊனமுற்றவர்களைப் பற்றி உடல் ஊனமுற்றவர்கள்தான் கேட்க வேண்டும் என்று சொல்வீர்களா?

(பதில் இல்லை.)

[1981 எப்ரல் 21

திரு. பொ. உத்திராபதி : தலைவரவர்களே, மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் வரிசையாக பல திட்டங்களை அறிவித்தார்கள். உடல் ஊனமுற்றவர்கள் ஆண்டை ஒட்டி உடல் ஊனமுற்றவர்களுக்கு உதவித் தொகை வழங்குவதில் இப்போது 22 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத்தான் உதவித் தொகை வழங்கப்படுகிறது என்று வட்டாட்சித் தலைவர் சொன்னார். நானே ஒரு சிபாரிசு செய்ததற்கு அப்படி பதில் கடிதம் வந்திருக்கிறது. அப்படி இல்லாமல் உடல் ஊனமுற்றவர்கள் 5 வயது உடையவர்களாக இருந்தாலும், எத்தனை வயது உடையவர்களாக இருந்தாலும் வயது வரம்பைப் பார்க்காமல் அத்தனை பேர்களுக்கும் உதவித் தொகை வழங்க இந்த ஆண்டில் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே, அதுபற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தின் தலைவர் அவர்களே, பஸ்ஸிலே 10 வயதுக்கு உட்பட்ட பாலகர்கள்தான் இலவசமாகப் பயணம் செய்வதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. ஆனால், மேற்கு வங்கத்திலே எந்த வயது உள்ளவர்களும் பஸ்ஸிலே இலவசமாகச் செல்லலாம் என்று அனுமதி வழங்கப்பட்டு அது நடைமுறையில் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். ஆகவே, இந்த அரசும் அதேமாதிரி ஊனமுற்றவர்கள் எந்த வயதினராக இருந்தாலும் அவர்கள் இலவசமாகப் பஸ்ஸிலே செல்வதற்கு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, அதுபற்றியும் பரிசீலிக்கப்படும்.

திரு ஜே. எஸ். இராசு : தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றவர்கள் வேலை தேடித்தரும் நிலையத்தின் மூலமாக நேர்முகத் தேர்வுக்குச் செல்கிற நேரத்தில் அவர்களை வேலைக்கு எடுக்கின்ற அதிகாரிகள் 'உனக்கு சைக்கிள் ஓட்டத் தெரியுமா ? ஓட முடியுமா ?' என்றெல்லாம் கேள்விகள் கேட்டு அவர்களைத் திருப்பி அனுப்புகின்ற காட்சியை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். மேலும் மேலும் அவர்களை இது துன்புறுத்துவதாக அமைந்திருக்கின்றது. எனவே, இந்த ஆண்டை ஒட்டியாவது அதைப்போன்ற மனதை வருத்தக்கூடிய கேள்வியைக் கேட்காமல் இருக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, அப்படி ஒன்றும் அரசுக்குத் தகவல் கிடைக்கவில்லை. அப்படித் தகவல் வந்தால் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

1981 ஏப்ரல் 21]

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : தலைவர் அவர்களே, ஊனமுற்ற பெண்களைத் திருமணம் செய்ய முன் வருகின்ற ஆண்களுக்கும் அதேபோன்று உடல் ஊனமுற்ற ஆண்களைத் திருமணம் செய்ய முன்வருகின்ற பெண்களுக்கும் சிறப்பன பரிசுத் திட்டம் இந்த ஆண்டிலே அரசின் சார்பாக அறிவிக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, அதை இந்த ஆண்டு அரசு பரிசீலிக்கும்.

திரு. ந. குலசேகர பாண்டியன் : தலைவர் அவர்களே. அரசின் சார்பாக இந்த ஆண்டு புதியதாகச் செயற்கை உறுப்புக்கள் பொருத்தும் நிலையத்தை ஏற்படுத்துவது பற்றி அமைச்சரவர்கள் சொன்னார்கள். முதல் கேள்வியிலேயே இதுபற்றி நான் கேள்வி கேட்டிருந்தேன். அந்த நிலையங்களில் ஒன்றை வாணியம்பாடியில் துவங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, அவை எங்கெங்கே துவங்குவது என்பது பற்றிய சரியான விவரங்கள் என்னிடத்திலே இல்லை. ஆனால் செயற்கை உறுப்புக்கள் தயாரித்து வழங்குவதற்கு இரண்டு புதிய நிலையங்கள் திறக்கப்பட இருக்கின்றன என்ற தகவல்தான் இருக்கின்றது.

திரு. எம். அண்ணாதாசன் : தலைவர் அவர்களே என்னுடைய திருவரும்பூர் தொகுதியில் மிகப் பெரிய கனரகத் தொழிற்சாலை இருக்கின்றது. உடல் ஊனமுற்றவர்கள் ஆண்டு என்று அழைக்கப்படுகின்ற இந்த ஆண்டிலே அந்தத் தொழிற்சாலையில் அதிகமான அளவிலே உடல் ஊனமுற்றவர்களை வேலைக்குச் சேர்ப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தத் தொழிற்சாலை மத்திய அரசைச் சேர்ந்தது.

காலநடை இன்சூரன்ஸ் திட்டத்தினை விரிவுபடுத்துதல்.

*வினா எண். 830—திரு. செ. செம்மலை : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வங்கிகள் மூலம் கடன் வாங்கி கால்நடைகள் வாங்குவோருக்குள்ள கால்நடை இன்சூரன்ஸ் திட்டத்தை மற்றவர்களுக்கும் அவர்கள் விருப்பத்தின் பேரில் விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத் திட்டம் எப்போது அமுல்படுத்தப் படும்?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): சொந்தப் பொறுப்பிலே கால்நடைகள் வைத்திருப்பவர்கள் அவர்களின் கால்நடைகளை இன்சூர் செய்துகொள்ள விரும்பினால் இன்சூரன்ஸ் நிலையங்களின் மூலமாக தங்கள் கால்நடைகளை இன்சூர் செய்துக்கொள்ள ஏற்கெனவே வசதி உள்ளது.

திரு. செ. செம்மலை: தலைவர் அவர்களே, வெறும் கால்நடைகள் என்று இல்லாமல் கால்நடைச் செல்வங்கள் என்ற அளவிலே அவற்றை நம்பித்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே கால்நடை இன்சூரன்ஸ் திட்டத்தை உருவாக்குகின்ற வகையில் அவர்கள் செலுத்த வேண்டிய பிரிமியம் தொகைக்கு மானியங்கள் வழங்க ஏதாவது வழிவகைகளை அரசு செய்துள்ளதா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, சமுதாயத்தில் இருக்கின்ற நலிந்த பகுதியினர், சிறு உழவர்கள், குறுநில உழவர்கள், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் ஆகியவர்களின் ஊதியத்தை உயர்த்தும் பொருட்டு சில சிறப்புத் திட்டங்கள் அரசால் அமைக்கப்பட்டுள்ளன. அந்தத் திட்டங்கள் மூலமாக வழங்கப்படும் கால்நடைகளை இன்சூரன்ஸ் செய்ய வழிவகைகள் அந்தத் திட்டங்களில் உள்ளன. தனிப்பட்டவர்கள் தங்களது கால்நடைகளை இன்சூர் செய்திருந்தால் இன்சூரன்ஸ் செய்யப்பட்ட தொகைக்கு கீழ்கண்டவாறு ஆண்டுத் தவணைகளைச் செலுத்த வேண்டும்;

ஐம்பதுக்குக் குறைவான கால்நடைகளை இன்சூர் செய்தால் 3·25 சதவீதம்.

ஐம்பது முதல் 250 வரையான கால்நடைகளை இன்சூர் செய்தல் 3·20 சதவீதம்.

[முற்பகல் 10-10]

இருநூற்று ஐம்பத்தொன்று முதல் ஆயிரம் வரையிலான கால்நடைகளை இன்ஷூயூர் செய்தால் 3·15 சதவீதம்; 1001-லிருந்து 5,000 வரையிலான கால்நடைகளை இன்சூர் செய்தால் 3·10 சதவீதம்; 5001 லிருந்து 10,000 வரையிலான கால்நடைகளை இன்சூர் செய்தால் 3·5 சதவீதம்; 10,000-க்கு மேற்பட்டால் 3 சதவீதம். எருதுகளுக்கு 3·50

சதவீதம், வங்கிகள் மூலம் கடன் வாங்கி கால்நடைகள் வாங்கினால், ½ சதவீதத்திலிருந்து 2 சதவீதம் வரையில் கால்நடைகளுக்கு ஏற்ப, பிரிமியத் தொகையில் தள்ளுபடி செய்யப்படும்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறையின் கீழ் இயங்கிவரும் கால்நடை பண்ணைகளில் உள்ள கால்நடைகளுக்கு, இந்த இன்சூரன்ஸ் திட்டம் விரிவாக்கப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் பதில் கூறும்போதே அதைக் கூறிவிட்டேன்.

காங்கேயம் மாடுகளின் இனவிருத்தித் திட்டம்.

*வினா எண். 831—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

''காங்கேயம் மாடுகளின் உற்பத்தி மற்றும் இனவிருத்தியைப் பெருக்குவதற்கான ஏற்பாடுகள் ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: அரசு ஆணை எண் 2457, வேளாண்மை, நாள் 30—12—1980-ல், பெரியார் மாவட்டத்தில் பழைய கோட்டையில் காங்கேயம் கால்நடை வளர்ப்புப்பண்ணை ஒன்று நிறுவ அரசு ஒப்புதலளித்துள்ளது.

திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஆரோக்கியமாக இருக்கும் மனிதர்களைப் பார்த்து காங்கேயம் காளைபோன்று கொழு கொழுவென்றிருக்கிறாய் என்று சொல்வார்கள். அப்படி பிரசித்திப்பெற்ற அந்த இன காங்கேய மாடுகளை அதிகமான அளவில் இனவிருத்தி செய்யும் வகையில், தமிழ்நாடு பூராவும் அந்த இனங்களை வளர்க்கும் ஒரு திட்டத்தை ஏற்படுத்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்த முடியாது. பெரியார் மாவட்டத்தில் பழைய கோட்டையில் காங்கேயம் கால்நடை வளர்ப்புப் பண்ணை ஒன்றை நிறுவ இப்பொழுதுதான் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

பெரியார் மாவட்டத்தில் பழைய கோட்டை கால்நடை பண்ணையில், தமிழ்நாடு நில சீர்திருத்தச் சட்டத்தின் கீழ்

உபரி நிலங்களென்று அறிவிக்கப்பட்ட நிலப்பரப்பில், காங்கேயம் கால்நடை வளர்ப்புப் பண்ணை அமைக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. பெரியார் மாவட்டம், பழைய கோட்டை கால்நடைப்பண்ணை நிலங்களில், தமிழ்நாடு நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் உபரி நிலங்களென்று அறிவிக்கப்பட்ட நிலங்களில் 705.63 ஏக்கர் பரப்பளவுள்ள ஒரு நிலப்பகுதியை காங்கேயம் கால்நடை வளர்ப்புப் பண்ணைத் திட்டம் அமைப்பதற்கு தகுதியான இடமென தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இப்பண்ணையை அமைக்க, மேற்படி தமிழ்நாடு நிலச் சீர்திருத்தச் சட்டம் (உபரி நிலங்கள் விநியோகம் செய்யும் விதிகள்) விதி 13-ன்கீழ் உபரி நிலங்களை ஒதுக்கீடு செய்வதற்கும், அதற்கான செயற்குறிப்பை அரசு வருவாய்த்துறைக்கு அனுப்புமாறும் வருவாய்த் துறை ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். வருவாய்த் துறை ஆணையரிடமிருந்து இச்செயற்குறிப்பு எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்படி நிலங்கள் கால்நடை பராமரிப்புத் துறையினால் எடுத்துக் கொள்ளப்பட்டவுடன் இப்பண்ணையை நிறுவுவதற்கான செலவுகளும் ஏனையத் தேவையானவைகளையும் வழங்குவது பற்றி ஆராயப்படும். எனவே, தமிழ்நாடு முழுவதும் காங்கேயம் இன மாடுகளை விருத்தி செய்தால் நன்றாக இருக்கும் என்று உறுப்பினர் அவர்கள் கூறினார்கள், அப்படி தமிழகம் முழுவதும் செய்ய முடியாது என்று கூறிக் கொள்கிறேன்.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பெரியார் மாவட்டத்தில், காங்கேயம் பகுதியில், காங்கேயம் இன மாடுகளை வளர்க்கும் பண்ணை அமைப்பது பற்றி சொன்னார்கள். நில உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ் மிச்சமாகும் நிலங்கள் இந்த திட்டத்திற்கு எடுக்கப்பட்டு வருவதாகவும் சொன்னார்கள். மிக நல்ல முயற்சி. இதிலே காங்கேயம் பகுதியிலேயே மேய்ச்சல் நிலங்கள் என்ற பெயரால் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை தனிப்பட்டவர்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலங்களைக் கைப்பற்றி, அவைகளிலும் இந்த காங்கேய இன மாடுகளை உற்பத்தி செய்யும் பண்ணையை நிறுவ அரசு ஆவன செய்ய (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கேட்பதற்கும் காங்கேய மாட்டிற்கும் சம்பந்தம் இல்லை. உட்காருங்கள்.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைத் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. கு. பா. பழனியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீது மாண்புமிகு உறுப்பினர் திரு. என். வி. என். சோமு அவர்களும், நானும் 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ஆம் நாள் அன்று உரிமை மீறல் பிரச்னை கொடுத்திருந்தோம்............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு அனுமதிக்க மறுத்து விட்டேன் என்று சொல்லி உங்களுக்கு எழுதியிருக்கிறேன். அதைப்பற்றி ஏதாவது பேசுவதாக இருந்தால் என்னுடைய அறையிலே வந்து பேசலாம்.

திரு. கு. பா. பழனியப்பன் : 247 ஆவது விதியின்கீழ் இசைவு மறுத்துள்ளார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தங்கள் மேலான கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவருவது என் கடமை என்று கருதுகிறேன். இன்று மட்டுமல்ல. கடந்த சில நாட்களாக தங்கள் அலுவலகத்தில் இருந்து தாங்கள் அனுப்புகிற கடிதங்களுக்கு விளக்கமோ அல்லது வேறுவகையான விவரங்களோ மன்றத்தில் வந்து கேட்க உறுப்பினர்கள் முற்படுகிறார்கள். இந்த மரபு நம் அவையில் எப்போதுமே இருந்ததில்லை. தங்கள் அறைக்கு வந்து கேட்பதுதான் பொருத்தமாயிருக்கும். தாங்கள்தான் அதுபற்றி தீர்ப்பளிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தினசரி அதைத்தான் நான் சொல்கிறேன். யாரும் அறைக்கு வரமாட்டேன் என்கிறார்கள். இந்த உரிமை மீறல் பிரச்சனைக்கு அனுமதி மறுத்திருக்கிறேன். என் அறைக்கு வாருங்கள். இதைப்பற்றி எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் விவாதிக்கலாம்.

திரு. கு. பா. பழனியப்பன் : 247 ஆவது விதியின்கீழ் ஒரு உரிமை மீறல் பிரச்னையை எழுப்பலாம் என்றுதான் இருக்கிறது. அதில் மறுப்பதற்கு விதி இல்லை. குறிப்பிட்ட நிபந்தனைக்குட்பட்டு இருக்கவேண்டும் என்று 249 ஆவது விதியில் இருக்கிறதே தவிர 247 ஆவது விதியின்கீழ் மறுப்பது சரியல்ல என்பது என் அபிப்பிராயம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'பேரவைத் தலைவரின் இசைவுடன்' என்றிருக்கிறது. இசைவு மறுப்பது என்பதும் அதில் தொக்கி நிற்கிறது. ஆகவே மறுக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். வி. என். சோமு: 247 ஆவது விதியை மட்டும் தாங்கள் மேற்கோள் காட்டி மறுத்திருக்கிறீர்கள். எந்தக் காரணத்திற்காக மறுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்படவில்லை. நாங்கள் உரிமைப் பிரச்னைகளை தங்கள் அனுமதியுடன் இந்தச் சட்டமன்றத்தில் எழுப்புவதற்குள்ள விதியே இந்த விதி என்பதைத் தவிர மறுக்கக்கூடியது இதிலே வரவில்லை. அந்த 'இல்லீகாலிட்டியைத்தான்' சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுமதி மறுப்பதற்கான காரணங்களை எப்போதுமே சொல்வது கிடையாது. 247 ஆவது விதி தெளிவாக இருக்கிறது. பேரவைத் தலைவரின் இசைவுடன் என்றிருக்கிறது. இசைவு இல்லை என்றால் அது போய்விட்டது என்று பொருள். சட்டமன்றப் பேரவை விதிகள் ஒழுங்காகத்தான் எழுதப்பட்டிருக்கின்றன.

*திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, விதிகளில் எழுதப்பட்டிருக்கிற அந்தச் சொற்றொடரில் பேரவைத் தலைவரின் இசைவுடன் என்றால் சட்டமன்றத்தில் ஒரு உரிமைப் பிரச்னையை எழுப்புகிறபோது தங்கள் இசைவுடன் எழுப்புவது என்பதுதான் அதில் மிக முக்கியமாக கருதப்படுகிற கருத்தாகும். சிலநேரங்களில் தலைவர் அவர்கள் இசைவு தராதபோது கூட சட்டமன்றத்தில் பல உறுப்பினர்கள் ஒரே பிரச்னையை வலியுறுத்த வேண்டிய நிலை ஏற்படுமானால் விவாதிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு விடும். ஒன்று தாங்கள் அந்த விதியில் தலைவர் விரும்பாவிட்டால் எந்த ஒரு உரிமைப் பிரச்னையையும் சட்டமன்றத்தில் எழுப்பக் கூடாது என்றாவது ஒரு விதியை சேர்த்துக்கொள்ளவேண்டும். தலைவரின் இசைவுடன் என்று விதியில் இருப்பதால் முதற்கட்டத்தில் இசைவு கிடைப்பதாகத்தான் பொருள், விவாதித்த பின்னால் இதில் உரிமைப் பிரச்னை இல்லை என்று சொல்லக்கூடிய உரிமை தங்களுக்கு இருக்கிறது என்று சொன்னாலும் 'with the Consent of the Speaker' என்று சொல்வதனால் தங்கள் அனுமதி பெற்று எழுந்திருந்து அந்த உரிமைப் பிரச்னையை எழுப்பவேண்டும் என்பதுதானே தவிர எழுப்புவதற்கு அனுமதி இல்லை என்று சொல்வதனால், எழுத்துமூலம் சொல்கிறபோது அதன் அடிப்படையில் அதுபற்றி உண்மை நிலையை விளக்கமுடியாத ஒரு நிலைமை ஏற்பட்டு விடுகிறது. ஆகவே, ஏதோ ஒரு வகையில் உறுப்பினர்களுடைய

உரிமை கைவிடப்பட்டதுபோல் தோன்றுகிறது. ஆகவே அவசியமெனில் அதை மாற்றியமைக்க எதிர்காலத்தில் தலைவர் அவர்கள் முயற்சி எடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

[முற்பகல் 10-20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை சுட்சித் தலைவர்கள் எல்லோரும் சேர்ந்து முடிவுசெய்ய வேண்டும். அந்த முடிவுபடி நடத்தப்படும்; நான் மறுக்கப் போவதில்லை. இருக்கின்ற பிரச்னைகளில் சில பிரச்னைகளுக்கு அனுமதி மறுக்க வேண்டியிருக்கிறது. அப்படி அனுமதி மறுக்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அப்படி மறுக்கின்ற உரிமை என்னிடம் இருக்கிறது. இந்தக் குறிப்பிட்ட பிரச்னையைப் பொறுத்த வரையில், பல நேரங்களிலே இந்த சபையில் 5, 5 நிமிடம் ஒவ்வொரு நாளும் பேசப்பட்டு வருகிறது. இதற்கு ஏதாவது ஒரு நாள் முற்றுப் புள்ளி வைக்கவேண்டும். அது இன்றைக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே,

* * *

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, இது பாயிண்ட் ஆப் ஆர்டரா, பாயிண்ட் ஆப் இன்பர்மேஷனா, கிளாரிபிகேஷனா? என்னவென்று தெரியவில்லை. இப்படி அவருக்கு உரிமை வழங்குவதாக இருந்தால், எங்களுக்கும் வழங்க வேண்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தாமரைக்கனி அவர்கள் கூறியது அனைத்தையும் அவைக் குறிப்பிலே இருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

ஒத்திவைப்புத் தீர்மானம்.

பாண்டியன் சாலைப் போக்கு வரதக்கழக பேருந்து ஒன்று விபத்துக்குள்ளானது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், என். பழனிவேல், சோ. அழகர்சாமி, மு. அம்பிகாபதி, எம். ஆறுமுகம், ஏ. டி. கருப்பையா, மு. அப்பாத்துரை, பெ.சு. திருவேங்கடம், ஏ. சந்திரசேகர், என்.எஸ்.வி. சித்தன் ஆகியோர், மதுரை அருகே உள்ளது வரிமான் கிராமத்தின் பக்கம் சக்திக்கு மீறிய 105 பயணிகளை ஏற்றிவந்த பி.ஆர்.சி. பஸ் கவிழ்ந்ததால் நால்வர் இறந்தும், 9 பேர் கவலைக்கிடமாக இருப்பதாலும், மீதமுள்ள 92 பேர்களுக்கு பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாலும், அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப்பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதிக் கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன். திரு. பழனிவேல்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 3—4—81ம் தேதி மதுரைக்கு அருகே உள்ள துவரிமான் கிராமத்திலிருந்து மதுரைக்கு ஆட்களை ஏற்றிக்கொண்டு வந்த நகர பேருந்தில் 150க்கு மேற்பட்டவர்கள் இருந்திருக்கிறார்கள். அந்த பஸ் மதுரை நகருக்கு அருகே வரும்போது, விபத்து ஏற்பட்டு அதிலே 105 பேர்கள் பலத்த காயமடைந்திருக்கிறார்கள்; 6 பேர்கள் மரணம் அடைந்திருக்கிறார்கள். இந்தமரணம் ஏற்பட்டதால், அங்கே இருக்கக்கூடிய பொதுமக்கள் மத்தியில் பதட்ட நிலை உருவாகியிருக்கிறது. அதற்குக் காரணம் அந்த பஸ்ஸுக்கு இன்றைக்கு சரியான டெக்னிகல் ஸ்டாப் இல்லாத காரணத்தாலும், அந்த பஸ் இன்றைக்கு பழுதடைந்திருக்கின்ற காரணத்தனாலும், இந்த விபத்து ஏற்பட்டிருக்கிறது. அத்தோடு, ரீ—டிரீடிங் டயர், பழுதடைந்த டயர் உபயோகப்படுத்தியதன் மூலமாகவும், பாதையில் ஏற்பட்ட விபத்தை டிரைவரால் கன்ட்ரோல் பண்ண முடியாத நிலைமையிலும் இந்த விபத்து ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இம்மாதிரியான விபத்து ஏற்பட்டு, மதிக்க முடியாத அளவுக்கு மனித உயிர்கள் அதன்மூலம் இன்றைக்கு இறந்திருக்கிறார்கள். அப்படி இறந்து போகின்ற அந்த மனித உயிர்களுக்கு போதுமான நஷ்டஈட்டை அரசாங்கத்தால் கொடுக்க முடியவில்லை. ஏனென்று சொன்னால், இன்றைக்கு ஏற்படக்கூடிய விபத்துகளிலே ஒரே மாதிரியான மனித உயிர்கள்தான்பல விபத்துக்களிலே போகின்றன. விமான விபத்திலே இன்றைக்கு ஒருவர் இறந்தால், லட்சக்கணக்கான ரூபாய் நஷ்டஈடாகக் கொடுக்கிறார்கள். அதேபோல், ஒருவர் ரயில்விபத்தில் இறந்தால் பல ஆயிரக்கணக்கான ரூபாய் அளிப்பதா

கச் சொல்கிறார்கள். ஆனால், பஸ் விபத்தில் இறந்தால் அப்போது அந்த மனித உயிருக்கு ஆயிரம் ரூபாய்தான் தரப்படுகின்றது. அதை வாங்குவதற்கு அவர்கள் படக்கூடிய கஷ்டம் சொல்லிமுடியாது. ஆகவே, இப்படி மனித உயிர்கல் இறக்கும்போது, அரசாங்கம் இப்படி பல்வேறுவிதமான முறைகளில் நஷ்டஈடு கொடுப்பது நியாயமா, இது சரியா என்பதைப் பற்றி யோசித்துப் பார்ப்பதற்காகவும், அவர்களுக்கு போதுமான அளவுக்கு நஷ்டஈடு கொடுப்பதற்காகவும், நிரந்தரமான வழியிலே அதிகமாக உதவித் தொகைக் கொடுப்பதற்கும், அப்படிக் கொடுக்கக்கூடிய உதவித் தொகையை காலதாமதம் இல்லாமல் கொடுப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இம்மாதிரி பழுதடைந்த பஸ்களில் 150 பேர், 200 பேர் என்று ஏற்றிச் செல்வதால் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். மனித உயிர் போகிறது என்பதை எல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டு அரசாங்கம் இம்மாதிரியான நிலைமைகளை எதிர்காலத்திலாவது போக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருப்பதால் இன்றைய பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று வற்புறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை அருகில் பி.ஆர்.சி. பஸ் விபத்துக்குள்ளானதன் விளைவாக ஆறு பேர் இறந்திருக்கிறார்கள். நூறுக்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந்திருக்கிறார்கள். உயிர் இழந்த ஆறு பேர்களின் குடும்பத்திற்கும் உடனடியாக பத்தாயிரம் ரூபாய் நஷ்டயீடு கொடுப்பதற்கு அரசாங்கம் துரித நடவடிக்கை எடுக்கவேண்டும். காயம் அடைந்தவர்கள் அங்கஹீனம் அடைந்திருந்தால் அவர்களுக்கு ஐந்தாயிரம் ரூபாய் அளிக்க வேண்டும். இப்படி பஸ் விபத்துகள் ஏற்படுவதற்கு டிரைவர்கள் காரணமல்ல. ஒர்க்ஷாப்பிலே தேவையான அளவு நார்மஸ் அடிப்படையில் தொழிலாளர்கள் கிடையாது. வாங்கக்கூடிய ஸ்பேர்பார்ட்ஸ் ஒரிஜினல் பார்ட்ஸ் கிடையாது. அதை மெயின்டெய்ன் பண்ணுவதற்கு போதுமான ஸ்டாப்பும் கிடையாது. ரீட்ரெட் டயர்களை முன் வீலில் போட வேண்டியது. எங்காவது போய் அது வெடித்து பஸ் விழவேண்டியது. இதுதான் இன்றைக்கு இத்தகைய விபத்துகள் ஏற்பட காரணம்.

பஸ் ஸ்டாண்டிலே பஸ்ஸை கிளீன் பண்ணுவதற்கு ஒரு பஸ்ஸுக்கு 10 காசு, 5 காசு என்று கொடுத்து, கிளீனரே இல்லாமல் நம்ம ட்ரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் நடந்து கொண்டிருக்கிறது. கிளீனர் என்ற ஆளே கிடையாது. கிளீன் பண்ணவே ஆள் இல்லையென்றால் வண்டி என்ன கதியாகும்? இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற விபத்து அதை பிராப்பராக மெயின்டெயின் பண்ணுவதற்கு வழியில்லாததால் ஏற்பட்டிருக்கிறது. மக்கள் பேருந்துகளில் ஏறி சென்றால் உயிரோடு

போய் சேர்வோமா என்று எண்ணுகிற பயங்கரமான நிலைமை தமிழகத்தில் உருவாகி இருக்கிறது. எங்கள் ஊரிலேயிருந்து சபரிமலைக்கு போன பஸ் கவிழ்ந்து, ஐயப்பா என்று போனவர்கள் எல்லாம் 'ஐயய்யோ அப்பா', என்று உருண்டு.................................... (குறுக்கீடு)

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்தர்கள் மனதைப் புண்படுத்தும் சார்; அது. இந்த சபையினுடைய கண்ணியம் பாதுகாக்கப்பட வேண்டும். பக்தர்கள் நிறையப் பேர்கள் இருக்கிறோம். எங்களுக் கெல்லாம் நீங்கள்தான் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும்.

திரு. ரா. உமாநாத் : பேரவைத் தலைவரவர்களே, அவர் பேசுவது எங்களையும் புண்படுத்தும். ஐயப்பா என்றால் எனக்கு புண்படுது; ஐயய்யோ அப்பா என்றால் அவருக்கு புண்படும்.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, பஸ் விபத்து அதிகம் ஏற்படுகிறது என்பதற்காகச் சொல்கிறேன். தலைவர் கொஞ்சம் கவனிக்க வேண்டும். சித்தன் அவர்கள் பக்தராக இருக்கலாம். ஐயப்பா என்று சொல்லி சபரிமலைக்கு சென்றவர்கள் ஐயய்யோ அப்பா என்று கதறியிருக்கிறார்கள். என்னுடைய ஊரிலே இருக்கிற ஒருவர் அதிலே இருக்கிறார், அதுதான் எனக்கு அனுதாபம், வேறு ஒன்றுமில்லை. எனவேதான் இத்தகைய பிரச்சினையைப் பற்றி நாம் நிரம்ப விவாதிக்கவேண்டும். ஓர்க் ஷாப்பிலே தொழிலாளர்களை அதிகப்படுத்துவது, முறையான ஸ்பேர் பார்ட்ஸ் போன்றவைகளை வாங்குவது, இறந்து போனவர்களின் குடும்பத்திற்கு 10 ஆயிரம் நஷ்டயீடு கொடுப்பது காயம் அடைந்தவர்களுக்கு காயத்திற்கேற்ப நஷ்டஈடு கொடுப்பது பற்றி விவாதிப்பதற்காக இந்த அவையின் பிற அலுவல்களை,(including labour demand) ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பெ. க. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் கூறியது போல மதுரைக்கு அருகில் 1981ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 3ஆம் நாள் அன்று பி. ஆர். சி. பஸ் விபத்துக்குள்ளானதால் ஐந்து பேர் உயிர் இழந்தும், பல பேர்கள் படுகாயமடைந்தும் இருக்கிறார்கள். சமீபத்தில் இந்த பஸ் விபத்துக்குள்ளானது மட்டுமல்ல. தமிழகத்தில் பல்வேறு மார்க்கங்களில் போதுமான

பஸ் வசதியில்லாமல் தனியார் பஸ்களானாலும் சரி, அரசாங்க பஸ்களானாலும் சரி, 'ஓவர் லோட்' ஏற்றுகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

[முற்பகல் 10-30]

காரணம் இப்படிப்பட்ட விபத்துக்கள் ஏற்படுகிறபோது, திருவண்ணாமலையிலிருந்து சென்னை வரையில் 100 மைல்களுக்கு மேலே பயணம் செய்கின்ற மார்க்கங்களில் நின்றுகொண்டே பயணம் செய்கின்ற கொடுமையான நிலைமைகள் இருந்துகொண்டிருக்கின்றன. அந்த பஸ்களிலே அதிகமான பேர்கள் பயணம் செய்கிறார்கள். எனவே விபத்துக்குள்ளாகிற நேரத்திலே அவர்கள் எழுந்து தப்பித் துக்கொள்ளக்கூடிய நிலைமைகூட இல்லை. கோடை காலங் களிலே கடுமையான வெயில் இருப்பதால் எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் செல்கின்ற பாதை களிலேகூட பி. ஆர். சி. யானாலும் சரி அல்லது மற்றைய அரசுப் போக்குவரத்துக் கழகங்களானாலும் சரி பஸ்களில் டயர்கள் வெடித்து நாங்கள் செல்கின்ற பஸ்களிலே கூட அப்படி ஏற்பட்டு பஸ்கள் நின்றுவிடுகின்ற காரணத்தினால் காயம் பட்டவர்களும் காயம் படாதவர்களும்கூட தாமதம் ஏற்பட்டு சிரமப்படுகிறார்கள் என்ற நிலைமை இருக்கிறது. இவைகளையெல்லாம் போக்க வேண்டுமென்றால் அரசாங்கம் புதிய வழித்தடங்களை ஏற்படுத்துவதற்கு வழிவகை செய்ய வேண்டும். இது ஒன்று. இரண்டாவது, கோடை காலத்திலே அடிக்கடி டயர்கள் வெடித்துவிடுகின்ற காரணத்தினால் புதிய டயர்களைப் போடுவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். மூன்றாவது ஓவர்லோட் போடுவதை தடை செய்யவேண்டும், அரசுப் போக்குவரத்துக் கழக பேருந்து களாக இருந்தாலும், தனியார் பேருந்துகளாக இருந்தாலும்; என்னுடைய தொகுதியிலேகூட அண்மையிலே ஒரு பஸ் அந்த நிலைமைக்கு உள்ளாகி பஸ்ஸே எரிந்துவிடக்கூடிய நிலைமைகூட ஏற்பட்டது. ஓவர் லோடே போடக்கூடாது— என்பதை கண்டிப்பாக அமல் நடத்தவேண்டும். அதோடு விபத்துக்களிலே காயம்பட்டவர்களுக்கு மரணமடைந்தவர் களுக்கு அரசாங்கம் குறிப்பாக எவ்வளவு தொகை அளிக்க வேண்டுமென்று உத்தரவு போடுவதில்லை, அது மட்டுமல்ல, அந்தத் தொகைகளை உடனடியாக அளிப்பதில்லை. இங்கே அமைச்சர் அவர்கள் 5 ஆயிரம் ரூபாய் அளிக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் 1,000 ரூபாய்தான் அளித்தார்கள். அமைச்சர் அவர்கள் இப்படிப்பட்ட விபத்துக்கள் ஏற்படுகின்ற நேரங்களிலே உடனடியாக குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக மாவட்டஆட்சித்தலைவர்அந்தத் தொகைகளை உரியவர்களுக்குக்

கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். இன்னொன்று அரசுத் துறையிலே ஓடுகின்ற பஸ்களிலே பிரேக்குகள் சரியாக இல்லை, ஓர்க்ஷாப்புகளிலே சரியான ஆட்களை நியமித்து முறையாக பழுதுபார்ப்பது இல்லை. எதிர்காலத்திலே இப்படிப்பட்ட முறையிலே போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகள் விபத்துகுள்ளாகாத வண்ணம் அதைத் தடுப்பதற்காக ஆக்கப்பூர்வமாக ஆலோசனைகளை தங்கள் மூலமாக அமைச்சருக்குச் சொல்வதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக வேதனையான, துக்ககரமான, ஒரு சம்பவத்தைப்பற்றி இப்போது நாம் பேசிக்கொண்டிருக்கிறோம் இது வேடிக்கையோ அல்லது கேலியோ பேசுவதற்கு தருணமல்ல மதுரை வடகிழக்குப் பகுதியிலே உள்ள பாண்டி கோயிலுக்குச் சாமி கும்பிடுவதற்காகச் சென்றவர்கள் வந்த பேருந்திற்கு இப்படிப்பட்ட துக்ககரமான சம்பவம் ஏற்பட்டிருக்கிறது. எங்களுடைய மதுரை மாவட்டத்திலே என்னுடைய தொகுதியின் பக்கத்திலே உள்ள விக்கிரமங்கலம் என்ற கிராமத்தில் இருந்து மதுரையை நோக்கி பி. ஆர். சி. பஸ் இந்த மாதம் 3-ம் தேதி வந்து கொண்டிருந்தது. சுமார் 7 மணிக்கு மேல் புறப்பட்ட அந்த பஸ் மதுரை நகருக்கு அடுத்துள்ள துவரிமான் என்ற இடத்திற்கு அருகாமையிலே வந்தபோது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. இரட்டைவாய்க்கால் பாலம் என்ற இடத்திலே அந்த பஸ் திடிரென்று ரோடு ஓரமாகச் சென்று கம்பத்திலே மோதி சுமார் 12 அடி பள்ளத்திலே விழுந்து இருக்கிறது. அதானால் இந்த விபத்து ஏற்பட்டிருக்கிறது. நமக்கு எல்லாம் மிகுந்த வருத்தம் தரக்கூடியது அந்தப் பேருந்திலே ஏறத்தாழ 110 பேர்களுக்கு அதிகமானவர்கள் பயணம் செய்திருக்கிறார்கள். ஏறத்தாழ 98 பேர்கள் பலத்த காயம் அடைந்திருக்கிறார்கள். காயம் அடைந்தவர்களிலே 4 பேர்கள் இறந்திருக்கிறார்கள் என்று முன்னாலே செய்தி வந்தது. இப்போது அந்த எண்ணிக்கை அதிகமாக ஆகியிருக்கலாம். பெரியண்ணத் தேவர், 60 வயதுக்கு மேற்பட்டவர், பாப்பாத்தி, ராஜாத்தி என்ற இரண்டு பெண்கள், மூர்த்தி என்ற 1½ வயதுள்ள சிசுகூட அந்த விபத்திலே இறந்திருக்கிறது என்பதைப் பார்க்கிறபோது வேதனையாக இருக்கிறது. தனியார்கள் பேருந்துகளில் தான் சாதாரணமாக அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு மேல் அதிகமான எண்ணிக்கையில் பயணம் செய்வார்கள் என்ற நிலைமை மாறி இப்போது அரசுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளிலேயும் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு மேலே அதிகமாக ஏற்றுகின்ற நிலைமை வாடிக்கையாக

வழக்கமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பல்வேறு இடங்களிலே அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு மேற்பட்டு அதிகமாக ஏற்றிச் செல்கிற காரணத்தால் தான் இப்படிப்பட்ட விபத்துக்கள் ஏற்படுகின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சாதாரணமாக மதுரையிலிருந்து சென்னைக்கு வருகின்ற சாலை வழியிலே பார்த்தால் 2,3 இடங்களிலாவது பேருந்துகள் விபத்துக்குள்ளாகியிருக்கின்ற கோரக் காட்சியை நாம் பார்க்க நேரிடுகிறது.

பேருந்துகளுக்கு வழங்கப்படும் அனுமதி—ஃபிட்னெஸ் சர்ட்டிபிகேட் என்று சொல்வார்கள், அது முறையாக வழங்கப்பட்டிருக்கிறதா, பிரேக்கு சரிபார்க்கப்படுகிறதா, இந்த விபத்தைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்டு மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? காயம் அடைந்தவர்கள் அல்லது உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டயீடு எந்த அளவிற்கு வழங்கப்பட்டிருக்கிறது? அப்படி நஷ்டயீடு வழங்குகின்ற நேரத்தில் பாதிக்கப்பட்டவர்கள் கோர்ட்டுகளுக்குப்போய் அதிகப் பணத்தைச் செலவழித்த பிறகுதான் நஷ்டயீட்டைப் பெறுகின்ற நிலைமையிருக்கிறது. அந்த நிலைமையை மாற்றி அமைத்து, நம்முடைய அரசோ அல்லது போக்குவரத்துக் கழகங்களோ இம்மாதிரி விபத்துக்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அல்லது அவர்களது குடும்பங்களுக்கு இழப்பீட்டுத் தொகையை வழங்குவதற்கான வழிவகைகளைக் காண வேண்டும் Accidents Tribunal. என்று இருக்கிறது. ஏதாவது விபத்து ஏற்படும் காலத்தில் டெக்னிக்கல் ரீசன்ஸ் என்ற காரணத்தைக் காட்டி இழப்பீட்டுத் தொகையைக் குறைக்கிறார்கள் அல்லது தள்ளுபடி செய்கிறார்கள் அவர்கள் அந்தத் தொகையைப் பெறுவதற்கு உச்சநீதி மன்றம் வரையில் சென்று பெறுகின்ற துர்ப்பாக்கியமான நிலைமையிருக்கிறது. ஆகவே, உடனடியாக அவர்களுக்கு நஷ்டயீடு கொடுப்பது சம்பந்தமாகவும், இன்னும் இது தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் சம்பந்தமாகவும் விவாதிக்க வேண்டியிருப்பதால், இந்த விபத்தின் காரணமாக மதுரை மாவட்டத்திலுள்ள மக்கள் மத்தியில் பதட்ட நிலை இருப்பதால் இதுபற்றி விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இதனை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 3 ஆம் நாள் அன்று காலை 6—35 மணிக்கு விக்ரமங்கலத்தில் இருந்து மதுரைக்குச் சென்ற பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகப் பேருந்து

[திரு. சு. முத்துசாமி] [1981 ஏப்ரல் 21

எண். டி. எம். என். 5360, காலை சுமார் 7 மணியளவில் துவரி மான் என்ற கிராமத்தில் உள்ள இரட்டை வாய்க்கால் பாலம் என்ற இடத்தில் ஒரு சிறு பாலத்தில் மோதி, 15 அடி ஆழமுள்ள பள்ளத்தில் விழுந்தது. விபத்து நடந்த இடத்தில் சாலையின் இரு பக்கங்களிலுமுள்ள மண் பகுதியையும் சேர்த்து, சாலையின் அகலம் 24 அடியாகும். இவ்விபத்தில் 89 பயணிகள் காயமடைந்தனர்.

பேருந்து புறப்பட்ட விக்ரமங்கலத்திலிருந்து விபத்து நடந்த இடத்திற்கு இடையே உள்ள தூரம் 19 கிலோ மீட்டர். இந்தத் தூரத்திற்கிடையிலே 160 பயணச் சீட்டுக்கள் விற்கப்பட்டிருந்தாலும், இடையில் அநேக பயணிகள் நகரப் பேருந்தாக இருந்த காரணத்தால் ஏறியும், இறங்கியும் இருக்கிறார்கள். காயம் அடைந்த பயணிகள் அனைவரும் விபத்து நடந்த 45 நிமிடங்களில் மற்றொரு பேருந்தின் மூலமாக மதுரையிலே உள்ள இராஜாஜி மருத்துவமனைக்குக் கொண்டுவந்து சேர்க்கப்பட்டனர். அவர்களில் இருவர் மருத்துவமனைக்கு வரும் வழியிலேயே இறந்துவிட்டார்கள். அதற்குப் பிறகு மருத்துவமனையில் 4 பேர் உயிரிழந்தனர். 72பயணிகள் சிகிச்சைக்குப்பிறகு வீட்டுக்கு அனுப்பப்பட்டனர். இவர்கள் தங்கள் இருப்பிடத்திற்குச் செல்லப் பேருந்து வசதி செய்து தரப்பட்டது. இன்னும் 9 பேர் மருத்துவமனையில் உள்நோயாளிகளாக சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

இவ்விபத்தில் இறந்தவர்கள், பெரிய அப்பாவுத் தேவர், வயது 70 (விக்ரமங்கலம்), மூர்த்தி, வயது $1\frac{1}{2}$ (விக்ரமங்கலம்), பாப்பாத்தி அம்மாள், வயது 50 (கச்சராயிருப்பு), ராஜாத்தி, வயது 30 (விக்ரமங்கலம்), ஓச்சம்மாள், வயது சரியாக இல்லை, கச்சராயிருப்பு,

மரணம் அடைந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கு அப்பொழுதே தேவையான செலவுக்கு ரூபாய் 250 அந்த இடத்திலே வழங்கப்பட்டிருக்கிறது.

காவல்துறை மூலம் ஒரு வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடத்தப்பட்டுவருகிறது.

விபத்து நடந்த பேருந்தின் வயதைப் பொறுத்தவரையில், 1977 ஆம் ஆண்டிலே அது வாங்கப்பட்டது; லேலண்ட் சீட்டா வகையைச் சேர்ந்தது. இந்தப் பேருந்து 1978 ஆம் ஆண்டு, சனவரித் திங்கள் 14 ஆம் நாள் அன்று பதிவு செய்யப்பட்டது.

1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 20 ஆம் நாள் அன்று தகுதிச் சான்றிதழ் பெற்றிருக்கிறது. 1981 ஆம் ஆண்டு மே திங்கள் 27 ஆம் நாள் வரையில் அது செல்லும்.

விபத்திற்கு முந்திய வாரம் வரை பேருந்தில் எந்தவிதமான கடுமையான இயந்திரக் கோளாறும் இல்லை. வேகமாகவும், கவனக் குறைவாகவும் ஓட்டியிருக்கலாம். அதுவே விபத்திற்குக் காரணமாக இருக்கலாம் என்று கருதப் படுகிறது. இப்பேருந்தில் ஓட்டுநர் 1977 ஆம் ஆண்டு மே திங்கள் 5 ஆம் நாள் முதல் பணியில் சேர்க்கப்பட்டார். இந்த ஓட்டுனர் ஓட்டிச் சென்றப் பேருந்து 1980 ஜூன் மாதம் ஒரு விபத்துக்குள்ளாகி இருந்தாலும் அது ஓட்டுநரின் தவறு அல்ல என்ற காரணத்தால் அவர் மீண்டும் பணியிலே வைத்துக்கொள்ளப்பட்டார். இவரது செயல்திறன், ஓட்டும் திறன், நடத்தை ஆகியவை தொடர்ந்து திருப்திகரமாக இருந்து வந்துள்ளன. 1977-78 ஆம் ஆண்டிற்கான விபத்தில்லாமல் ஓட்டியதற்கான ரொக்கப் பரிசையும்கூட பெற்றிருக்கிறார்.

பேருந்துக்கு ஏற்பட்ட சேதம் மற்றும் அதைப் பழுது பார்ப்பதற்கான செலவு ஆகியவற்றின் மதிப்பு ரூபாய் ஏறத்தாழ 40,000 என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

இங்கே சில குற்ற சாட்டுக்களைச் சொல்லியிருக்கிறார்கள். தேவையான அளவிற்கு டெக்னிக்கல் ஓர்க்கர்ஸ் இல்லை என்று சொல்லி இருக்கிறார்கள். ஆனால், போக்குவரத்துக் கழகத்தைப் பொருத்தவரையில் எந்தஅளவிற்குத் தேவையோ அந்த அளவிற்கு வைத்திருக்கிறோம்.

முன்பக்கம் டயர் சரியில்லை, பிரேக் சரியில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையில் நாம், முன்னால் இருக்கின்ற டயர்களைப் புதிய டயர்களாகத் தான் போட்டுக்கொண்டிருக்கிறோமே தவிர பழைய டயர்களைப் போடுவதில்லை.

[முற்பகல் 10-40]

அதோடு, இந்த விபத்து டையர் வீபத்தாலோ அல்லது, பிரேக் இல்லாததாலோ ஆகிவிடவில்லை. பாலம் குறுகியதாக இருந்ததால் அந்த விபத்து நடந்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்று—இங்கே உதிரிப் பொருள்களை வாங்குவதிலே தவறு நடக்கிறது, சரியான உபரி பாகங்களை வாங்குவதில்லையென்று சொன்னார்கள். அதைப் பொறுத்த வரை இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கிற அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களும் சேர்ந்து ஒரு சங்கமாக அமைக்கப்பட்டு, அவர்கள் அங்கீகரித்துள்ள இடத்திலேதான் நாம் வாங்கிக்கொண்டிருக்கிறோம். நம்முடைய போக்குவரத்துக் கழகங்கள் தனித்தனியாக, நினைத்த இடத்திலே வாங்குகிற சூழ்நிலை இல்லை. எனவே, நல்ல பொருள்களைத்தான் நாம் வாங்கிக் கொண்டிருக்கிறோம்.

இன்னொன்று—அதிகப் பயணிகளை ஏற்றி செல்வதால் இந்த விபத்து ஏற்படுகிறது என்று சொன்னார்கள். அது ஓரளவு சரியானது என்று நாம் ஏற்றுக்கொண்டாலும் இருக்கிற சூழ்நிலை காலையிலும், மாலையிலும் தான் அப்படி அதிகப் பயணிகள் ஏறுகிறார்கள். எனவே, மதிய நேரத்திலே நீங்கள் பார்ப்பீர்களானால், அந்தப் பேருந்திலே அதிகமான பயணிகள் பயணம் செய்வதில்லை என்பதையும், சில நேரங்களில் அந்தப் பேருந்துகள் காலியாகப் போவதையும் பார்க்க முடியும். எனவே, நெரிசல் நேரங்களில் அதிகமான பேருந்துகளை விடுவதற்குத்தான் இந்த அரசு தீவிரமான நடவடிக்கை எடுத்துக் கடந்த ஒரு வருட காலத்திற்குள் 1,500 பேருந்துகளுக்கு மேலே நாம் இயக்கி இருக்கிறோம். வருகின்ற ஒரு வருடத்தில் 2,000 பேருந்துகளாவது இயக்க வேண்டுமென்று நாம் திட்டங்களைத் தீட்டி இருக்கிறோம். எனவே அப்படிப்பட்ட சூழ்நிலையில் நாம் அதிகப் பயணிகள் ஏறுவதைத் தடுக்க முடியும் என்று நான் கருதுகிறேன்.

இறந்தவர்களைப் பொறுத்த வரை அரசாங்கம் சட்டப்படி என்ன, என்ன வசதிகளை செய்ய முடியுமோ என்ன, என்ன நஷ்ட ஈடு கொடுக்க முடியுமோ அதைச் செய்வதற்குத் தயாராக இருக்கிறது. எனவே, அவர்களை அழைத்துப் பேசி அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் இருக்கிற பிரச்சினைகளை, இன்னும் தீவிரமாக, இங்கே சொல்லிய கருத்துக்களை எடுத்துக் கொண்டு நடவடிக்கை எடுக்க இருக்கிறோம் என்ற காரணத்தால் அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து, அதுபற்றி விவாதிக்கத் தேவையில்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவைஇல்லை யென்பதால் இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

4. கவன ஈர்ப்பு.

அ. பழனி வட்டத்தில் வெங்காய மூட்டைகள் தேங்கிக்கிடப்பது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் என். பழனிவேல்’ எம். ஆறுமுகம், மு. அப்பாதுரை ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர்இதை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, ‘‘ மதுரை மாவட்டம் பழனி வட்டத்தில் பயிரான பத்து இலட்சம் மூட்டைகள் வெங்காயம் தேங்கிக் கிடப்பதால், அப்பகுதி விவசாயிகள் இடையே நிலவும் பதட்ட நிலை குறித்து ’’ அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் விற்பனைச் சட்டத்தின்கீழ், மதுரை மாவட்டத்தில் வெங்காயம் அறிவிக்கப்பட்ட விளைபொருளல்ல. பழனி வட்டத்தில் 3,896 ஏக்கர் பரப்பளவில் வெங்காயம் பயிரிடப்பட்டுள்ளது. தற்போது, வெங்காயம் பயிராக உள்ளனவே தவிர, நன்றாக விளைந்து அறுவடைக்குத் தயாரான நிலையில் இல்லை.

2. பழனி வட்டத்தில், 10 இலட்சம் மூட்டை வெங்காயம் விற்பனையாகாமல் தேங்கியுள்ளன என்ற குற்றச்சாட்டு சரியானதல்ல. இக்குற்றச்சாட்டு மிகைப்படுத்திச் சொல்லப்படுவதாகும். அப்படியே இருப்பினும், 10,000 மூட்டை அளவில்தான் தேங்கி இருக்கக்கூடும். 1979—80-ல் தேசிய கூட்டுறவு விற்பனை இணையம் ஸ்ரீலங்கா, சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து முதலான வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் பொருட்டு வெங்காயத்தை வாங்கியது. இவ்விணையம், 1980—81-ல் வெங்காயத்தை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக வாங்குவதை நிறுத்தியுள்ளது. பழனி வட்டத்தில் வெங்காயம் பயிரிடும் விவசாயிகளிடம் வெங்காயம் தேங்கி இருப்பதற்கு இதுவே முக்கிய காரணமாகும். வெங்காயத்தை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதினால் உள்ளூரில் விலை ஏறிவிடும்

என்பதால் மேற்கண்ட இணையம் ஏற்றுமதி செய்வதில்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே பொது மக்களின் எதிர்ப்பின் பொருட்டு இணையம் வெங்காயத்தை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதை நிறுத்தியிருப்பதாகத் தெரிகிறது.

3. சிறிய வெங்காயத்தை ஆறு மாதம் வரையிலும் சேமிப்புக் கிடங்குகளில் கெட்டுப் போகாமல் வைக்கலாம். ஆனால் பெரிய வெங்காயத்தை ஒரு மாதம் மட்டுமே சேமிப்புக் கிடங்குகளில் வைத்திருக்க இயலும். மாநில அரசுக்கு, வேளாண் விளை பொருள் விற்பனைச் சட்டத்தின் கீழ், பழனி வட்டத்தில் விளை பொருள்கள் கொள்முதல் செய்தல், விற்பனை செய்தல் அல்லது நடமாட்டம் மீது எந்த விதக் கட்டுப்பாடும் இல்லாததால், இதில் தலையிட இயலாது. எனினும் வெங்காயம் தேங்கியுள்ள நிலைமையைப் போக்க அவைகளை ஏற்றுமதி செய்வதற்காக வாங்கும்படி, தேசிய கூட்டுறவு விற்பனை வாரியத்தை மாநில அரசு கேட்டுக் கொள்ள முயற்சி எடுக்கலாம்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கே பழனி தாலூகாவில் வெங்காயம் உற்பத்தி செய்த விவசாயிகள் விற்க முடியாமல் அட்டியில் போட்டு வைத்திருக்கிறார்கள் என்ற விவரத்தை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக இந்தத் தீர்மானத்தைக் கொடுத்திருந்தேன். அதிலே, இப்பொழுது, அமைச்சர் அவர்கள் விவர அறிக்கை ஒன்று கொடுத்திருக்கிறார்கள். அந்த விவர அறிக்கையிலே, மதுரை மாவட்டத்திலே வெங்காயம் அறிவிக்கப்பட்ட பொருள் அல்ல என்று சொல்லப்பட்டிருக்கிறது. வெங்காயம் அறிவிக்கப்பட்ட பொருள் அல்ல என்று சொல்வது நியாயம்தானா என்பதை நான் இந்த நேரத்திலே அறிய விரும்புகிறேன். ஏனென்றால், கடந்த 1979–80 ஆம் ஆண்டில் விவசாயக் கூட்டுறவு விற்பனை இணையம் மூலம் ஸ்ரீலங்கா, சிங்கப்பூர், மலேயா, தாய்லாந்து போன்ற வெளிநாடுகளுக்கு அந்தப் பொருள் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. அதனால் அந்நிய செலாவணியைச் சம்பாதித்துக் கொடுத்திருக்கிறது.

அதோடு, மனிதருடைய அன்றாடத் தேவைப் பொருளான இந்த வெங்காயம் அத்தியாவசியமான பொருள் அல்ல என்று சொல்வது அவ்வளவு முறையானது அல்ல. அதோடு, இங்கே சொல்லியிருக்கிறார்கள். தேங்கிக் கிடப்பது 10 இலட்சம் மூட்டைகள் அல்ல, சுமார் 10,000 மூட்டைகள் இருக்கலாம் என்று சொல்கிறார்கள். எங்களுடைய கட்சியினுடைய கிளைச் செயலாளர் நேற்றுகூட எனக்குக் கடிதம் அனுப்பி இருக்கிறார்கள். 5 இலட்சம் மூட்டைகள் இன்றைக்கு அட்டியில் போடப்பட்டு, ஆங்காங்கு தோட்டங்களில் எந்தவிதமான பாதுகாப்புமில்லாமல் கிடக்கின்றன, வாங்குவோர் இல்லையென்று. சென்ற ஆண்டு

இதே மாதத்தில் ஒரு மணங்கு ரூ. 15-க்கு விற்றது. ஆனால், இந்த ஆண்டு ரூ. 3, ரூ. 4-க்குக் கூட வாங்க நாதியில்லை. ஒரு மூட்டை உற்பத்தி செய்வதற்கு கிட்டத்தட்ட ரூ. 20 செலவாகிறது. ஆனால், ஒரு மூட்டை ரூ. 15-க்குத்தான் விற்கின்றது. அதனால், விவசாயிகள் பெரிதும் துன்பப்படு கிறார்கள், வாங்கிய கடனைக் கொடுக்க முடியவில்லை. புதிய விவசாயம் செய்ய முடியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுருக்கமாகக் கேள்வி கேளுங்கள்.

திரு. என். பழனிவேல் : இன்றைக்கு அந்த விவசாயிகள் அதை விற்க முடியாமல் பெரிய சிரமத்திற்கு ஆளாகியிருப்பதால், அரசாங்கம் உடனடியாக சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூல மாகவோ அல்லது கூட்டுறவுத் துறை மூலமாகவோ, ஒரு நியாய மான விலையைக் கொடுத்து, அந்த வெங்காயம் முழுவதையும் கொள்முதல் செய்து ஸ்டாக் வைத்துக் கொண்டு, அவர்களைப் பாதுகாக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் வெங்காயம் அறிவிக்கப்பட்ட விளை பொருள் அல்ல என்பதைத் தவறாகப் புரிந்து கொண்டு உறுப் பினர் அவர்கள் விவாதத்தை வளர்த்து இருக்கிறார் என்று கருது கிறேன். அறிவிக்கப்பட்ட விளைபொருள் அல்ல என்றால் அத்தி யாவசியமான பொருள் அல்ல என்பது பொருளல்ல. நம்முடைய ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் மூலமாக விற்பனைக்கு அறி விக்கப்பட்ட பொருள்களிலே வெங்காயம் சேர்க்கப்படவில்லை. அப்படி சேர்க்கப்படாததற்குக் காரணம் அதை சேமித்து வைப்ப தற்கு வேண்டிய வசதி இல்லை என்பதுதான். மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் கூறியதைப்போல தேசிய கூட்டுறவு இணையம் தான் கடந்த ஆண்டு ஏற்றுமதி செய்தது. இப்போது ஏற்றுமதி செய்யாததற்குக் காரணம் ஏற்றுமதி செய்தால் உள் நாட்டிலே வெங்காயத்தின் விலை அதிகமாக ஏறிவிடும் என்பதைத்தான் காட்டி இருக்கிறார்கள். இருந்தாலும் விவசாயப் பெருமக்களுக்கு ஏற்பட்டிருக்கிற இந்தச் சிக்கலை மனதிலே கொண்டு கூட்டுறவு விற்பனை இணையத்துக்கு இந்த அரசு கடிதம் எழுதும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற விவர அறிக்கையில் பழனியில் மட்டுமல்ல தமிழகத்திலே இருக்கக்கூடிய பல பகுதிகளிலே வெங் காயம் உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகள் பெரும் அவதிக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த அறிக்கையிலே, ஸ்ரீலங்கா,

சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து போன்ற வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இப்போது பொதுமக்களின் எதிர்ப்பின் பொருட்டு, நிறுத்தப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டிருக்கிறது. பொதுமக்களின் எதிர்ப்பு இருந்தாலும் கூட, இலட்சக்கணக்கான அளவில் வெங்காயம் தேங்கிக் கிடக்கின்ற காரணத்தினால், அதன் வாயிலாக அபாயகரமான சூழ்நிலை ஏற்பட்டிருப்பதால், விவசாயிகள் மிகுந்த பாதிப்புக்கு ஆளாகிக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலும், அரசாங்கமே நியாயமான விலைக்கு அவைகளை கொள்முதல் செய்து நம்முடைய நாட்டினுடைய தேவைக்குப் போக மீதியை, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அந்நிய செலாவணியை ஈட்டுகின்ற முறையில் அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அதை இப்போது செய்ய இயலாது. நாம் தேசிய கூட்டுறவு விற்பனை இணையத்தை வலியுறுத்தலாம்.

ஆ. கரூர் சாயப்பட்டறைகளிலிருந்து கழிவு நீர் அமராவதி ஆற்றில் கலப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் எம். சின்னசாமி, இரா. தாமரைக்கனி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள்நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. எம். சின்னசாமி : தலைவர் அவர்களே, "கரூரில் உள்ள சாயப்பட்டறையில் இருந்து கழிவு நீர் அமராவதி ஆற்றில் கலப்பதால், குடிநீர் கெட்டுப்போவது" பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹாண்டே : தலைவர் அவர்களே பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

திருச்சி மாவட்டம், கரூர் நகரில் உள்ள 126 சாயத் தொழிற்சாலைகளில் 25 சாயத் தொழிற்சாலைகள் மட்டும் அமராவதி ஆற்றின் கரையில் அமைந்துள்ளன. இத் தொழிற்சாலைகளி

1981 ஏப்ரல் 21] *[டாக்டர் எச். வி. ஹண்டே]*

விருந்து வெளியேறும் அசுத்த நீரை சுத்தப்படுத்தாமல் அமராவதி ஆற்றில் இருந்து பிரிந்து செல்லும் பஞ்சமாதேவி கால்வாயில் இத்தொழிற்சாலைகள் விடுகின்றன. இதனால் ஆற்றின் நீர் அசுத்தம் அடைகிறது. எனவே கரூர் நகராட்சி சுகாதார அலுவலர் கழிவு நீரை சுத்தம் செய்யாமல் ஆற்றில் விடும் தொழிற்சாலைகளின் மீது தமிழ்நாடு சுகாதார சட்டம் 1939-ன்படி எச்சரிக்கை முன் அறிவிப்பு Notice கொடுத்துள்ளார். மேலும், இவ்வாறு கழிவு நீரை ஆற்றில் விடும் சாயத் தொழிற்சாலைகளின் உரிமத்தை நீக்கத் தேவையான நடவடிக்கையினை பொது சுகாதார இயக்குநர் எடுத்து வருகிறார். கரூர் நகராட்சி மன்றம் தமிழக குடிநீர் வடிகால் வாரியத்திற்கு பாதாள சாக்கடை கட்டும் திட்டம் பற்றி ஒரு கருத்துரு அனுப்பியுள்ளது. அத்திட்டம் செயல்படும்பொழுது குடிநீர் அசுத்தமாகும் பிரச்சனை நீங்கி விடும்.

திரு. எம். சின்னசாமி: பேரவைத்தலைவர் அவர்களே, அந்த சாயப்பட்டறையில் இருந்து வெளியாகக்கூடிய கழிவு நீர் குடிநீரிலே கலந்து, அதனாலே பல வியாதிகள் வருகின்றன. இது மிகவும் அத்தியாவசியமான பிரச்சினையாக இருப்பதால் அதன் மீது பொது சுகாதார இயக்குநர் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார் என்று இந்த அறிக்கையிலேகூறப்பட்டுள்ளது. அந்த நடவடிக்கை எப்போது முடியும் என்பதை அறிய விரும்புகிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமராவதி ஆற்றில் இருந்து நாம் இந்தக் கரூர் நகரத்திற்கு தண்ணீர் எடுத்துக்கொண்டு போகிறோம். அதிலே சின்னாண்டார்கோவில் என்ற இடத்தில் இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் ஒரு ஹெட் ஒர்க்ஸ் இருக்கின்றது. அந்த ஹெட் ஒர்க்ஸிலிருந்து வரக்கூடிய தண்ணீர்நன்றாக இருக்கின்றது. அடுத்தபடியாக ஒரு கிலோ மீட்டரில் இன்னொரு ஹெட் ஒர்க்ஸ் இருக்கின்றது. அந்த இடத்தில் கழிவு நீர் ஆற்றிலே போகாமல் பக்கத்திலே ஒரு லைனிலே போகின்றது. அதை இப்போது பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். எந்த அளவுக்குத் தண்ணீர் சரியான முறையில் இல்லை என்பதை வாட்டர் அனலிஸ்ட்டை வைத்து சோதனை செய்து கொண்டிருக்கிறோம். இது மிகவும் அவசரமான நிலை என்று கருதி அரசாங்கம் துரித நடவடிக்கை எடுத்து வருகிறது.

[1981 ஏப்ரல் 21

[முற்பகல் 10-50]

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் நகரத்திற்கும் பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைக்கும் செயற்குறிப்பு இருப்பதாக இந்தக் அறிக்கையில் சொல்லப்பட்டு இருக்கிறது. அந்தத் திட்டம் முடிக்கப்பெற்றால் இந்த நிலைமை மாற்றப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் முடிய 3-4 ஆண்டுகள் ஆகலாம். அதுவரையில் இந்தகழிவு நீரைக் குடிநீரில் கலக்காமல் இருக்க மாற்று ஏற்பாடு செய்யப்படுமா ? அப்படி விதியை மீறி செய்கிற சாயப்பட்டரைகளின் லைசென்சை முழுமையாக ரத்து செய்யாவிட்டாலும், அந்தப் பாதாள சாக்கடை திட்டம் முடிவு அடையும் வரையிலாவது சஸ்பென்ட் செய்து வைக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினருக்கு இருக்கும் சந்தேகம் நியாயமான சந்தேகம் தான். பாதாள சாக்கடைத் திட்டம் வருகிற வரையில் காத்து இருக்கமுடியாது. அது முடிவு அடைய 4—5 ஆண்டுகள் ஆகலாம். ஆகவே, உடனடியாக இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்காக சில விதி முறைகளை வைத்து இருக்கிறோம்.

"The dyeing industries have to treat their waste and use the effluent of land after satisfying the conditions laid down in IS 3307-1977 tolerance limits for disposal of Industrial affluence of land for irrigation"

அந்த அடிப்படையில், ஸ்பெஷல் ஆபீசர் டு கவர்ன்மென்ட், டிபார்ட்மென்ட் ஆப் என்விரான்மென்ட் அன்ட் ஹைஜீன் அவர்களிடமிருந்து வரப்பெற்றுள்ள அறிக்கையை ஆய்வு செய்து வருகிறோம். உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். 25 சிறிய கம்பெனிகள் தான் இதிலே வருகின்றன. அவைகளில் இருந்து வரும் கழிவுநீர்தான் இதிலே வந்து சேரும் அபாயம் இருக்கிறது. அந்தக் கழிவு நீரைத் திருப்பி விட அவர்களையே நடவடிக்கை எடுத்துக்கொள்ளச் சொல்லியிருக்கிறோம். அவர்கள் நடவடிக்கை எடுக்காவிட்டால் அரசாங்கம் அவர்கள்மீது வேறு என்ன நடவடிக்தை எடுக்கலாம் என்பதைச் சிந்திக்கும்.

5. வரவு-செலவுத் திட்டம் 1981-82—வாக்கெடுப்பு

(அ) கோரிக்கை எண் 29— தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

" மானியக் கோரிக்கை எண் 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்கிற தலைப்பின் கீழ் ரூ. 7,87,51,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, " தமிழ் நாட்டில் பீடித் தொழில் செய்யும் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச ஊதியத்தை அதிகப்படுத்தக் கோரி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

" மானியக் கோரிக்கை எண். 29—தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 7,87,51,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. கே. எம். தங்கமணி : தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.—

" மானியக் கோரிக்கை எண் 29—தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 7,87,51,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.".

திரு. டி. மணி : தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் 150-க்கும் அதிகமாக உள்ள தொழிற்சாலையில் பணிபுரியும் முந்திரி ஆலை தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச கூலிச் சட்டம் அமல்படுத்தாதது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

" மானியக் கோரிக்கை எண் 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 7,87,51,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. ஏ. டி. கருப்பையா : தலைவர் அவர்களே, " நடந்து முடிந்த தமிழக பொதுத் தேர்தல் வால்பாறையில் நடந்த நாளன்று

தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படாமலிருப்பதுபற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 7,87,51,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

(ஆ) கோரிக்கை எண் 33—வீட்டு வசதி.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

''மானியக் கோரிக்கை எண். 33—வீட்டுவசதி என்ற தலைப்பின்கீழ் ரூ. 11,09,68,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்.''.

திரு. சு. பாலன்: பேரவைத் தலைவர் அவர்களே, நடுத்தர மக்களுக்கும், ஏழைகளுக்கும் அதிகமான வீடுகள் கட்டித்தர நடவடிக்கை எடுக்காதது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 33—வீட்டு வசதி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,09,68,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. கே. கல்லன்: தலைவர் அவர்களே, அரசுப் பணியாளர்களுக்கு வீட்டு வசதி வாரியம் மூலம் வீட்டு வசதி அமைத்துத் தருவதைப் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 33—வீட்டுவசதி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,09,68,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. கே. ஆர். சுந்தரம்: தலைவர் அவர்களே, கிராமப்புற வீடு கட்டும் திட்டத்திற்கு வழங்கும் கடன் ரூ. 6,000 வழங்கக் கோரி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 33—வீட்டு வசதி என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,09,68,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு பொ. உத்திராபதி : தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்தின் மூலம் திருத்துரைப்பூண்டி நகரத்தில் வீடு கட்டிக் கொடுப்பதுபற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 33—வீட்டுவசதி என்ற தலைப் பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,09,68,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்.''

(இ) கோரிக்கை எண் 34—நகர்ப்பகுதி வளர்ச்சி

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர் களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 34—நகர்ப்பகுதி வளர்ச்சி என்கிற தலைப்பின் கீழ் ரூ. 12,47,31,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்.''

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழி கிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 34—நகர்ப்பகுதி வளர்ச்சி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 12,47,31,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்.''

திரு. கே. ஆர். சுந்தரம் : தலைவர் அவர்களே, நிதிநிலையில் நலிவுற்று உள்ள குடியாத்தம் நகராட்சிக்கு ரோடு வசதி, பள்ளிக் கட்டிட வசதி, பேருந்து நிலைய விஸ்தரிப்பு, குடிதண்ணீர் வசதி ஆகியவைகளுக்கு அரசு மானியம் அளிக்கக்கோரி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 34—நகர்ப்பகுதி வளர்ச்சி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 12,47,31,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்.''

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, கோபிக்கு சமீபம் இருந்து ரூ 6 1/2 கோடி செலவில் கொண்டுவர இருக்கும் குடிநீர்த் திட்டத்தை தீவிரப்படுத்தி, திங்களூர், விஜயமங் கலம், வெள்ளாவளி, குன்னத்தூர், பல்லகவுண்டன் பாலையம், செங்கப்பள்ளி, ஊத்துக்குளி, ஊத்துக்குளி ஆர். எஸ். ஆகிய நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 34—நகர்ப்பகுதி வளர்ச்சி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 12,47,31,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் அவை முன் விவாதத்திற்கு வைக்கப்பெற்று இருக்கின்றன.

*மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு தலைவரவர்களே, தமிழ்நாட்டில் தொழிலாளர்கள் நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு பக்கம் 108-ல் 'தருமபுரியில் பெண்களுக்கென புதிய தொழிற் பயிற்சி நிலையம்' என்பதற்குப் பதிலாக 'கடலூரில் பெண்களுக்கென புதிய தொழிற் பயிற்சி நிலையம்' என்று திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல தமிழ்நாட்டில் நகர்ப்புற வளர்ச்சி பற்றிய குறிப்பில், பக்கம் 2-ல் 'எஞ்சிய 50 சதவீதம் உள்ளாட்சி' என்று இருப்பதற்குப் பதிலாக 'எஞ்சிய 20 சதவீதம் உள்ளாட்சி' என்று திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் அவை முன் வைக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்புகளை* நான் உரையாற்றியதாகக் கருதி, அவைக்குறிப்பில் ஏற்றிக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். இந்தக் குறிப்புகள்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொன்னபிறகு நான் இறுதியாக என்னுடைய பதிலைச் சொல்கிறேன்.

*திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்றைய மானியக் கோரிக்கைகளான தொழிலாளர் நலன், வீட்டுவசதி, நகர்ப்பகுதி வளர்ச்சி ஆகியவைபற்றி என்னுடைய கருத்துக்களை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எடுத்து வைக்க விரும்புகிறேன்.

என்னுடைய பெரம்பூர் தொகுதி ஏழை எளிய மக்கள், தொழிலாளர்கள் பெரும்பாலாக வாழ்கின்ற தொகுதி என்பது மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு நன்றாகத் தெரியும். இங்கே நாங்கள் பல்வேறு குறைபாடுகளை எடுத்துக் கூறும்போது அமைச்சரவர்கள் அடுத்த ஆண்டில் உங்களுடைய குறைகள் தீர்க்கப்படும் என்று ஆண்டுதோறும் இந்த மன்றத்திலே சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் அந்தக் குறைபாடுகள் நீக்கப்பட்டனவா, சரி செய்யப்பட்டனவா என்றால் நிச்சயமாக இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

* 394, 508, 527ஆம் பக்கங்களில் இணைப்புகள் I,II,III ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

என்னுடைய தொகுதியிலே சர்மா நகர் என்ற ஒரு பகுதி இருக்கிறது. அந்தப் பகுதியிலே பலதரப்பட்ட தொழிலாளர்கள் ஏறத்தாழ 25 ஆண்டுகளுக்கு முன்னாலிருந்தே இருக்கிறார்கள். அங்கே மாநில சர்க்கார் மற்றும் மத்திய சர்க்காருடைய கூட்டு முயற்சியில் 458 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. ஆனால், அந்த வீடுகள் இன்றையதினம் மிகவும் மோசமாக இருந்துகொண்டிருக்கின்றன. அங்கே இருக்கிற எல்லா அரசியல் கட்சிகளைச் சேர்ந்த தொழிலாளர்களும் நம்முடைய அமைச்சரிடம் மனு கொடுத்திருக்கிறார்கள். அந்த வீடுகள் எல்லாம் மிகவும் மோசமாக இருந்தும் யாரும் பழுது பார்க்கவில்லை. வீடுகள் எந்த நேரத்தில் இடிந்து விழுமோ என்ற அச்சத்தில் இருந்துகொண்டிருக்கிறார்கள். நீண்ட நெடுங்காலமாக அவர்கள் குடியிருக்கிற அந்த வீடுகளை அவர்களுக்குச் சொந்தமாக்கித் தரவேண்டும் என்ற ஒரு கோரிக்கையை நீண்டகாலமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய மாநில அரசு அதற்கு மத்திய சர்க்காரைக் கேட்கவேண்டுமென்று தட்டிக் கழித்துக் கொண்டிருக்கிறது. ஆனால், இன்றையதினம் மத்திய சர்க்காரிலே இருந்து அவர்கள் ஒரு கடிதத்தைப் பெற்றிருக்கிறார்கள். நாங்கள் அந்த இடத்தைக் கொடுப்பதற்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை; மாநில அரசு விரும்பினால் நிச்சயமாகக் கொடுக்கலாம் என்று அதிலே சொல்லியிருக்கிறார்கள். ஆகையால் அந்த வீடுகளை எல்லாம் அவர்களுக்குச் சொந்தமாக்கிக் கொடுத்துவிடவேண்டும்; இல்லை என்றால் அந்த வீடுகளை எல்லாம் இடித்துவிட்டு நல்ல வீடுகளாகக் கட்டித்தாருங்கள் என்று மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு இதை ஒரு கோரிக்கையாக வைத்துக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, நம்முடைய சென்னை மாநகரிலே காவலர் இல்லங்கள் இருக்கின்றன. அவை ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட வீடுகள். அந்த வீடுகள் இன்றையதினம் வரையில் அப்படியே இருக்கின்றன. சட்டம், அமைதியைக் காக்கின்ற அந்தக் காவலர்கள் வீட்டிலே சென்று நிம்மதியாக இருக்க வசதி இல்லாத வீடுகளாக அவை இருக்கின்றன. மிகவும் மோசமாக இருக்கின்றன. நம்முடைய அமைச்சரவர்கள் எங்கெங்கோ சென்று பார்வையிடுவதாகப் பத்திரிகைகளில் பார்க்கிறோம். அவர்கள் அந்தக் காவலர் இல்லங்களைப் பார்வையிட்டு, அந்த இல்லங்களை நல்லமுறையில் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்-தலைமை.)

சென்னை மாநகரில் நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையிலே நம்முடைய உலக வங்கி மூலம் கடன் பெற்று

பல வசதிகள் செய்யப்பட்டிருப்பதாக இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு குடும்பத்திற்கு 1,300 ரூபாய் என்ற அளவில் அடிப்படை வசதிகளைச் செய்து தந்து, அதன் மூலம் அவர்களிடத்திலே பணம் பெறுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட அடிப்படை வசதி என்னவென்றால் குடிநீர் வசதி, சாக்கடை வசதி, சாலை வசதி இவைகளைச் செய்து, அவர்களிடம் குடும்பத்திற்கு 1,300 ரூபாய் பெற வேண்டுமென்ற நியதி இருக்கிறது.

[முற்பகல் 11-00]

ஆனால் அதன் பேரால் இன்றையதினம் என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற பெரியார் நகர், காமராஜர் நகர், கக்கன்ஜீ நகர், சத்தியவாணிமுத்து நகர், கருணாநிதி நகர், சிவகாமி அம்மையார் காலனி போன்ற இடங்களில் இப்படிப்பட்ட வசதிகளைச் செய்து கொண்டு வருகிறார்கள். ஆனால் அங்கு செய்யப்படுகின்ற வேலைகளைப் பார்க்கின்றபோது அங்கே இருக்கின்ற குடும்பங்கள் ஒவ்வொன்றும் 1,300 ரூபாயைக் கொடுக்க இயலவில்லை. இருந்தாலும் அங்கே செய்யப்படுகின்ற வேலைகள் மிக மோசமாக இருந்து கொண்டிருக்கின்றன. பாதை வசதிகளை எப்படிச் செய்கிறார்கள் என்றால் கல்லைப்போட்டால் அதன் மீது கிராவலைப் போடுவதில்லை, கிராவலைப் போட்டால் அதனை சரியாக ஒழுங்குபடுத்துவதில்லை. இந்த நிலையிலே அங்கே ஒப்பந்தக்காரர்கள் அந்தப் பணிகளைச் செய்துவிட்டு போய்விடுகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் இன்றையதினம் என்னுடைய தொகுதியிலே இருந்துகொண்டு இருக்கின்றன. இவைகளை எல்லாம் சரிபார்க்கவேண்டும் என்றால் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அந்த இடத்திற்கு அனுப்பி அவற்றைப் பார்வையிடச் செய்யவேண்டும். பணிகள் சரியாக நடைபெறுகின்றனவா என்பதைக் கண்காணிக்கவேண்டும் என்று நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அந்தப் பகுதியிலே வாழ்கின்ற மக்களுக்கு பட்டா என்ற பெயரிலே மிக மோசமான மோசடிகள் செய்கின்ற காரியங்களை அவர்களுடைய கட்சிக்காரர்கள் செய்கிறார்கள். அந்தப் பகுதியிலே மாண்புமிகு அமைச்சர்கள் கூட்டங்களுக்குச் செல்கின்ற நேரங்களில் அங்குள்ள அதிகாரிகளைக் கூப்பிட்டு அடுத்த நாள் உடனடியாகப் பட்டா தரப்படும் என்று தெரிவித்துவிட்டு வந்துவிடுகிறார்கள். அதைப் பயன்படுத்திக் கொண்டு அங்கே இருக்கின்ற கட்சிக்காரர்கள் உடனடியாக ஒவ்வொரு குடும்பத்தினரிடமிருந்தும் 100, 200 என்று பணத்தை உடனடியாகக் கொடுக்கவேண்டும் என்று கேட்டு பயமுறுத்தி பணத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். இவை பற்றி

யெல்லாம் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களிடத்திலே பல மனுக்களை அங்குள்ள மக்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இன்றையதினம் அங்கு என்ன நடக்கின்றது என்றால் ஏறக்குறைய ஒவ்வொரு குடும்பத்தாரும் தாங்கள் வசிக்கின்ற இடத்தை மேம்படுத்திக்கொண்டு வருகிறார்கள், அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்னாலே அந்த இடத்தை ஆக்கிரமித்த நேரத்திலே அவை எல்லாம் பள்ளமும், குழியுமாகத்தான் இருந்தன. அவர்கள் குடியேறிய பிறகு அந்தப் பகுதியினை மேம்படுத்துதற்கு இதுவரை கிட்டத்தட்ட ஒவ்வொரு குடும்பத்தினரும் 15,000 ரூபாய் 20,000 ரூபாய் என்ற அளவுக்கு மேல் செலவழித்திருக்கிறார்கள். ஆனால் இன்றையதினம் சர்க்கார் அவர்களுக்கு பட்டா கொடுக்கின்ற முறையிலே அந்த மக்கள் வாழ்கின்ற இடங்களுக்கு பட்டா வேண்டும் என்றால் ஒவ்வொருவரும் 15,000 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று நிர்ணயித்து அவர்களிடத்திலே வசூலிப்பதாகச் சொல்கிறார்கள். இது சம்பந்தமாக அங்கே இருக்கின்ற எல்லா அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும் இவ்வாறு 15,000 ரூபாய் என்று நிர்ணயித்திருப்பது சரியல்ல என்று ஏகமனதாகக் தீர்மானித்து நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களுக்கும் அனுப்பி இருக்கிறார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன். இன்றையதினம் அந்த இடங்களுக்கு 15,000 ரூபாய் என்று நிர்ணயித்திருப்பது மிக அதிகமான விலையாக இருக்கின்றது. ஆகவே அங்குள்ள மக்கள் விரும்புகின்ற வகையிலே அந்த விலையைக் குறைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் ஆக்கிரமித்த நேரத்தில் இருந்த விலையையே நிர்ணயிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வியாசர்பாடியிலே ஏ. காலனிபுரம், பி. காலனிபுரம், சி. காலனி புரம் ஆகிய குடிசைப் பகுதிகள் நீண்டநாட்களாக இருந்து வருகின்றன.

அங்கெல்லாம் சாக்கடை வசதிகள் சரியாக இல்லை. அவர்களுக்கு குடிநீரும் சரியாகக் கிடைக்கவில்லை. அந்தப் பகுதிகள் எல்லாம் குடிசைப் பகுதிகளாகத்தான் இருந்துகொண்டிருக்கின்றன. அவற்றை எல்லாம் எப்போது மாற்றி அமைக்கப் போகிறீர்கள் என்பதுதான் இன்றையதினம் எங்கள் கேள்வி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக அங்கே சத்தியமூர்த்தி அவர்களுடைய பெயராலே ஒரு பெரிய குடியிருப்பு கட்டப்பட்டிருக்கின்றது. அங்கே ஏறக்குறைய ஆயிரம் குடும்பங்கள் வசித்துக்கொண்டிருக்கின்றன என்று நினைக்கிறேன்.

அந்தப் பகுதி மக்கள் எல்லாம் எந்தவித வசதியும் நல்ல முறையில் கிடைக்காமல் மிகுந்த கஷ்டப்படுகிறார்கள். சாக்கடை வசதி, குடிதண்ணீர் வசதி போன்றவைகள் எல்லாம் மிக மோசமான நிலையில் இருந்து கொண்டிருக்கின்றன. அந்த நிலை போக்கப்பட்டு, அவர்களுக்கு நல்ல முறையில் வசதிகள் செய்து தரப்படவேண்டும், அதை உடனடியாக கவனிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல என்னுடைய தொகுதியிலே புதிய வயமான், பழைய வயமான் என்ற குடிசைப் பகுதிகள் இருந்து கொண்டிருக்கின்றன. அந்தப் பகுதிகள் மிக மோசமான நிலையில், யாராலும் கவனிக்கப்படாமல் இருந்து கொண்டிருக்கின்றன. அதைப்போலவே அம்பேத்கார் நகர், சாஸ்திரி நகர், எம். எஸ். முத்து நகர் போன்ற பகுதிகளும் நீண்ட நெடுங்காலமாக, கிட்டத்தட்ட 1967 ஆம் ஆண்டு முதல் மிக மோசமான நிலையில் இருந்து கொண்டிருக்கின்றன. அந்தப் பகுதிகள் முதன்முதல் கட்டப்பட்டபோது மேற்கூரையாக ஓடுகள் மட்டும்தான் போடப் பட்டன. சுற்றுச் சுவர்கள் சரிவர கட்டப்படவில்லை. அந்தப் பகுதி மக்கள், துணிகளையும், கோணிகளையும் உபயோகித்து தங்களுக்கு, மறைவிடம் செய்து கொள்கிறார்கள். அவைகள் எல்லாம் நல்லமுறையில் கட்டி முடிக்கப்பெறவேண்டும் என்று நான் சென்ற கூட்டத் தொடரிலேயே இந்த அவையில் எடுத்துச் சொன்னேன். ஆனால் ஏனோ மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கண்கூட எடுத்துப்பாராமல் இருக்கிறார்கள். பார்வை கூட இந்தப் பக்கம் இல்லாமல், அந்தப் பக்கம் திரும்பிக் கொண்டிருக் கிறார்கள். என்னவோ தெரியவில்லை. எவ்வளவு கேட்டும் அந்தப் பகுதி மக்கள் பிரச்னை தீர்ந்தபாடில்லை.

நான் ஒன்றைச் சொல்லவிரும்புகிறேன். இப்படி நீங்கள் குடிசைப் பகுதிகளைப் புறக்கணிக்க புறக்கணிக்க, எந்த தேர்தல் வந்தாலும், அந்தப் பகுதிகளிலே நீங்கள் வெற்றி பெற முடியாது என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் நகராட்சிகளின் தேர்தல் நடக்க இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஆகவே, அந்தத் தேர்தல்களில் உங்களுடைய வேட்பாளர்கள் வெற்றிபெற வேண்டுமானால், நான் குறிப்பிட்ட குடிசைப் பகுதிகள் மட்டு மல்லாது, இருக்கிற எல்லா குடிசைப் பகுதிகளுக்கும், அங்குள்ள மக்கள் பயன்பெறும் வகையில் குடிதண்ணீர் வசதி, சாக்கடை வசதிகளைச் செய்துகொடுத்தால், நிச்சயமாக, அது உங்கள் வேட்பாளரை வெற்றி பெறச் செய்ய ஒரு வாய்ப்பாக இருக்கும் என்பதை எடுத்துக் கூறி, எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்காக துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், வணக்கம்,

1981 ஏப்ரல் 21]

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும், வீட்டுவசதி, நகர்ப்பகுதி வளர்ச்சி ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது, இந்த மாமன்றத்தில் என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்கலாம் என்று நினைக்கிறேன்.

எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, பல்வேறு தொகுதிகளில் வெற்றி வாய்ப்பைத் தருவதற்கு-பெறுவதற்கு, ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்கிற குறுகிய நோக்கங்கள் இல்லாமல், பரந்த நோக்கத்தோடு, இந்த மானியக் கோரிக்கைகளை, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்ததற்காக என்னுடைய மனம் உவந்த பாராட்டுதலை முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழிற்சாலைகளில் மிகப்பெரிய அளவில் மாற்றங்களை புரட்சிகரமாக செய்தால்தான் தொழிற்கூடங்கள் பெருகும் என்றும், தொழிலாளர்களின் வாழ்வு நலம்பெறும் என்றும் ஒரு புதிய யோசனையும், எண்ணமும், இன்று இந்தியாவில் ஏற்பட்டு வருகிறது. அப்படிப்பட்ட ஒரு நிலைமை மிகவும் வேகமாக தமிழகத்தில் முன்னேறும் வண்ணம், ஏற்படும் வண்ணம், உரிய வழி வகைகளை, இன்று தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் அவையில் எடுத்து வைத்துள்ள அறிக்கையில்—கொள்கைக் குறிப்பில்—விவரமாகக் காணப்படுகிறது. அதை வரவேற்று பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதையும் இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று இந்தியாவில் தமிழகம் ஒரு விசித்திரமான நிலைமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அந்த நிலைதான் இந்த ஆட்சியையும், ஆளும் கட்சியையும் காப்பாற்றி வருகிறது என்பதையும் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்று ஒன்றுபடுத்தப்பட்ட அல்லது ஆர்கனைஸ்டு என்று சொல்வார்களே அப்படி உருவாக்கப்பட்ட சங்கங்கள் இருக்கிற தொழிற்சாலைகளில் உள்ள தொழிலாளர்கள் மாத்திரம் இந்த ஆட்சியைத் தேர்ந்தெடுக்கவில்லை என்பதையும், இந்த ஆட்சியை உருவாக்கியவர்களில் சிதறி கிடக்கின்ற தொழிற்சாலைகளில் உள்ள தொழிற்சங்கங்களில் சேர்ந்திருப்பவர்களும், சேர்ந்திருக்காதவர்களும், மற்ற பொது மக்களும், கோடிக் கணக்கில் இம்மாநிலத்தில் இருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் ஞாபகப்படுத்திக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

ஆகவே, இந்த ஆட்சியை அமைப்பதற்கு அடிப்படையான காரணமாக இருந்தது தொழிலாளர்களின் ஒற்றுமை அல்லது பல்வேறு வகைகளை சேர்ந்த, உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த மக்கள்தான் இந்த ஆட்சியை உருவாக்கியிருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. நேற்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். ''இன்று புதிய தொழில் கூடங்களை உருவாக்கக் கூடிய ஒரு நிலைமை உருவாகியிருக்கிறது'' என்று சொன்னார்கள். அந்தக் கருத்தைச் சிந்தித்துப் பார்க்கும்போது, தமிழகத்தில் தொழில் துறையில் வளம் பெறவும் தொழிலாளர்களின் நலம் மேம்படவும், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் புரட்சிகரமான திட்டங்களைக் கொண்டு வரப் போகிறார்கள் என்பது தெரிகிறது. ஒற்றுமை என்ற தத்துவத்திலும் அது அமைந்திருக்கிறது.

[முற்பகல் 11-10]

இந்தியாவிலிருக்கிற 22 மாநிலங்களில் கைத்தறி நெசவாளர்கள் பற்றி எந்த மாநில அரசும் கவலைப்படாத நேரத்தில் பல இலட்சக்கணக்கான குடும்பங்கள், கைத்தறி நெசவை நம்பி வாழ்கிற அந்தத் தொழிலாளர்களுக்கு, அந்த கைத்தறி நெசவாளர்களுக்காக, நெசவாளர்கள் நலன் கருதி அரசாங்கம் சட்டம் போட முன்வரப்போகிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்திருப்பது, சூசகமாகச் சொன்னது, இந்த கைத்தறி நெசவாளர்களுடைய வாழ்க்கையில் விளக்கேற்றி வைக்க தமிழகத்தில் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் முயற்சி செய்து அந்த கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கையில் தீபம் ஏற்ற எடுத்துக்கொண்டுள்ள முயற்சி பாராட்டுக்குரியது என்பதை, எந்த மாநில அரசும் இந்தியாவிலே எடுத்துக்கொள்ளாத முயற்சியை இந்த அரசு, தமிழகத்தின் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்டிருப்பது பாராட்டுதற்குரியது என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த கைத்தறி நெசவுத் தொழிலாளர்களின் நலன் கருதி, கொண்டு வர இருக்கிற திட்டங்கள் குறித்து இந்த மாமன்றத்தில் எப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்கள் என்பதை எங்களைப் போன்றவர்கள் ஆவலோடு எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

வேலைநிறுத்தம் என்பது அல்லது வேலைக்கு உள்ளே செல்லவேண்டும் என்பது இப்போது விவாதத்திற்குரிய பிரச்னையாக எழுந்திருக்கிறது. அதுகுறித்து ஒரு சட்டம்

கொண்டு வரப்போவதாக மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். வேலை நிறுத்தம் செய்வதற்கு வேலைவாய்ப்பு பெற்றிருக்கிற தொழிற்கூடத்தில் உள்ள தொழிலாளர்களுக்கு உரிமை இருக்கிறது. அதேபோல் வேலைநிறுத்தம் செய்யும்போது உள்ளே சென்று வேலை செய்கிற உரிமையும் தொழிலாளர்களுக்கு வேண்டும் என்ற கோரிக்கை பரவலாக எழுந்து கொண்டிருக்கிறது. பலஹீனமான தொழிற்சங்கங்களை வைத்துக்கொண்டிருக்கிறவர்கள் பலமான தொழிற் சங்கங்களை வைத்துக்கொண்டிருக்கிறவர்களை வேலைக்கு போக விடாமல் தடுப்பது என்றால், 20 சதவீதம் உள்ளவர்கள் 80 சதவீதம் அளவில் உள்ளவர்களை வேலைக்கு போகாமல் தடுப்பது என்றால், வேலைநிறுத்தம் என்ற பெயரால் தொழிற் கூடங்களை மூடுகிற ஒரு அபாயம் ஏற்படுமானால் அதை அரசாங்கம் அனுமதிக்கமுடியாது. 80 சதவீதம் பேர்கள் வேலைவாய்ப்பு இழந்து தொழில் செய்யக்கூடிய உரிமை அல்லது அந்தத் தொழிற்சாலை பணியாற்றக்கூடிய நிலையை உருவாக்கிக்கொள்ள அவர்களுக்கு பாதுகாப்பு இல்லை என்று சொன்னால் அந்தப் பாதுகாப்பை ஏற்படுத்தித் தருவதற்காக அரசாங்கம் ஒரு சட்டத்தைக் கொண்டு வருவோம் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள், கொண்டு வருவதற்குரிய நிலையில் இருக்கிறார்கள். வேலை நிறுத்தம் செய்வதற்கு தொழிலாளர்களுக்கு உரிமை இருக்கிறது. அதே போல் வேலைநிறுத்தம் செய்யும்போது மற்ற மெஜாரிட்டி தொழிலாளர்கள் வேலை செய்யவேண்டும் என்று விரும்பினால் அந்த உரிமையை அவர்களுக்கு இந்த அரசு அளிக்க முன் வந்திருப்பது பாராட்டுக்குரியது.

அன்-ஆர்கனைஸ்ட் வொர்க்கர்ஸ் என்று சொல்லுகிற கட்டடத் தொழிலாளர்கள், மண்வெட்டி எடுத்துச் செல்லுகிற மக்கள், களைக்கொத்து எடுத்துச் செல்கிற தாய்மார்கள் கைவண்டி இழுப்பவர்கள், சைக்கிள் ரிக்ஷாக்கள் ஓட்டுகிற தொழிலாளர்கள் இவர்கள் வாழ்க்கையில் ஒரு புனரமைப்பு வேண்டும். இவர்களுக்கெல்லாம் ஒரு பாதுகாப்பு வேண்டும். இன்று கோடிக்கணக்கான தமிழக மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாடுகிறார்கள் என்றால் அதில் பெரும்பகுதி இவர்களாகத்தான் இருக்கிறார்கள் என்பதை இந்த மன்றத்திற்கு அறிவுறுத்த நான் கடமைப்பட்டிருக்கிறேன். இதைச் சொல்வதற்குக் காரணம், இன்றைக்கு கைவண்டி இழுப்பவர்கள், சைக்கிள் ரிக்ஷா இழுப்பவர்கள், களைக்கொத்து எடுத்துச் செல்கிற தாய்மார்கள், மண்வெட்டி எடுத்துச் செல்கிற தந்தையர்கள், கையில் ஆயுதங்களோடு செல்கிற கட்டடத் தொழிலாளர்கள் இவர்கள் வாழ்க்கை பாதுகாப்பற்ற நிலையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள

விரும்புகிறேன். இந்த மக்களுடைய கடுமையான உழைப்பால் யாருடைய மிரட்டல்களுக்கும் அஞ்சாத காரணத்தால், யாருக்கும் பயப்படாத தன்மை அவர்களுக்கு இருக்கிற காரணத்தால் இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பை நாங்கள் ஏற்றிருக்கிறோம். இந்த அன்–ஆர்கனைஸ்டு வோர்க்கர்ஸ்-க்கு புனர்வாழ்வு அளிக்க புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் உள்ள அரசு புதிய திட்டங்களை உருவாக்கி பல சட்டங்களைக் கொண்டுவருவோம், கொண்டுவர முயற்சி செய்வோம் என்று மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் பொதுக் கூட்டங்களில் பேசியிருக்கிறார்கள். அவர்கள் கருத்துகளை மக்கள் மன்றத்தில் தெரிவித்திருக்கிறார்கள். இந்த அன்—ஆர்கனைஸ்டு வொர்க்கர்ஸின் வாழ்க்கைத் தரம் உயர, அவர்களுக்கு தக்க பாதுகாப்பு அளிக்க, எதிர்காலத்தில் அவர்கள் மகிழ்ச்சிகரமாக இருப்பதற்காக, இந்த பாமர மக்கள், ஏழை மக்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாடிக்கொண்டிக்கிற இந்த பாட்டாளி வர்க்கத்திற்கு பாதுகாப்பு அளிக்கக்கூடிய ஒரு சட்டத்தை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வருவார்கள் என்று நான் மனமார நம்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்–தலைமை)

இன்று தொழிற்கூடங்களிலே தொழிலாளர்களுக்கு என்று பணம் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. மேலை நாடுகளில், தொழிற்கூடங்களிலிருந்து வரக்கூடிய வருமானத்திலிருந்து ஒரு பெரும் பகுதியை ஆய்வுக்கூடத்திற்கு, ஆராய்ச்சி செய்வதற்கு என்று ஒதுக்குகிறார்கள். தமிழ்நாட்டில், மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு இதற்கென்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து, தொழிற்கூடங்கள் யாராக இருந்தாலும், அந்த நிர்வாகத்தில் கிடைக்கின்ற இலாபத்தில் முதலாளிகள், தொழிலாளர்கள் அனைவருக்கும் எப்படி ஒரு தொகையை ஒதுக்குகிறார்களோ, தொழிலாளர்களுக்கு போனஸ் அடிப்படையிலே எப்படி பணம் ஒதுக்கப்படுகிறதோ, அந்த வகையில் தொழிற்கூடத்திலே உள்ள முதலாளியும், அந்தத் தொழிற்சாலையிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்களும் சேர்ந்து ஒரு பெரும் தொகையை ஆராய்ச்சி செய்வதற்காக ஒதுக்க வேண்டுமென்ற உத்தரவைப் போட வேண்டும். இதை இந்த தமிழக அரசும், தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும் கொண்டுவர வேண்டுமென்ற என் விருப்பத்தை நான் இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

வீட்டு வசதி வாரியம், நகர்ப்புற வளர்ச்சி என்ற அடிப்படையில் பல்வேறு நகரங்களில் விலை உயர்ந்த நிலங்களை கையகப் படுத்தி, குறிப்பாக நஞ்சை நிலங்களை கையகப்படுத்தி, அதிலே ஹவுசிங் யூனிட் என்று வீட்டு வசதி வாரியத்தை, இதற்கு முந்திய அரசு உருவாக்கிய திட்டத்தை, இந்த அரசு செயல்படுத்துகின்ற

ஒரு சூழ்நிலையை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புவதெல்லாம், என்னுடைய தொகுதியி பேரூர் தொகுதியில் வாழை, கரும்பு பயிராகக் கூடிய, குளத்து, கிணற்றுப் பாசனம் பெறக் கூடிய பகுதிகளை எல்லாம் முந்திய சர்க்கார் கையகப்படுத்தி, அதை வீட்டு வசதி வாரியப் பிரிவாக ஏற்படுத்தியிருக்கிறது. அந்த நிலையைப் பூர்த்தி செய்வதற்கு, நமது அரசு எடுத்துக் கொண்டிருக்கின்ற முயற்சியை கைவிட வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். கோவைக்கு கிழக்குப் புறத்தில், பீளமேட்டுப் பகுதியில் அதிகமான புஞ்சை நிலங்கள் இருப்பதால், அந்தப் பகுதியிலே இந்த வீட்டு வசதி வாரியத்தை ஏற்படுத்த வேண்டும், உருவாக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில், வீட்டு வசதி வாரியத்திற்கான நிலங்களை யாருக்கும் தெரியாமல், சில பேர் கையகப்படுத்தப் போகிறோம் என்ற எண்ணத்தை உருவாக்கி, இந்த நிலங்களை கையகப்படுத்தி, அதனால் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கின்றது என்பதை நான் இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். அது மாத்திரமல்ல......

திரு. அ. ரகுமான்கான் : பாயின்ட் ஆப் ஆர்டர், மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஏதோ ஒரு ஓசை [illegible] றத்திலே கேட்கிறது. இங்கே டிமாண்டு மீது விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் ஓடுகிறார்கள். என்னவென்று புரியவில்லை......

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் : (திரு. வி. வி. சுவாமிநாதன்) : மேலவையிலே மணியோசை கேட்கிறது ; அங்கே மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் சென்றிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நம்முடைய அவைக்கும், அந்த மணி ஓசைக்கும் சம்பந்தம் இல்லை. வேறு அவையிலே என்ன நடக்கிறது என்பது நமக்குத் தெரியாது.

திரு. அ. ரகுமான்கான் : மணி ஓசை கேட்கிறது ; அது எங்கிருந்து வருகின்றது என்பது தெரியவில்லை. மணி ஓசை கேட்டவுடன், அமைச்சர் அவர்கள் ஏன் ஓடிப் போகிறார்கள் ? இங்கே டிமாண்டு மீது விவாதம் நடக்கும்போது, அமைச்சர் அவர்கள் அப்படிச் செல்லலாமா ?.....

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்) : நோ பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இங்கே தொழிலாளர் நல அமைச்சர் இல்லையென்றாலும், அமைச்சர் அவை இருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான் : மணி ஓசை சபையின் நடவடிக்கையை பாதிக்கிறது. ஏதாவது பயர் ஆக்சிடென்ட்டா என்பதெற்கெல்லாம் விளக்கம் தேவை.

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்) : மேலவையிலே இருந்து மணி ஓசை கேட்கிறது. அதற்கும் நமக்கும் சம்பந்தமில்லை. தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் அங்கே சென்றிருக்கிறார்கள். அவர் இல்லையென்றாலும், மற்ற அமைச்சர்கள் இங்கே இருக்கிறார்கள். அவர்கள் குறிப்பு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். தயவு செய்து உட்காருங்கள். திரு. கோவைத்தம்பி.

திரு. கோவைத்தம்பி : தலைவர் அவர்களே, இரண்டு நிமிடங்கள் சென்றுவிட்டது. பத்திரிகைகளிலே வரக்கூடிய அளவிற்கு எனக்குப் பேசத்தெரியாது. நான் ஒரு சில கருத்துக்களை மட்டும் சொல்கிறேன். தங்களுக்கு புனர்வாழ்வு வேண்டுமென்று சொல்லுகின்ற தொழிலாளர்கள், தங்களுக்குப் புனர் வாழ்வு வேண்டுமென்று சொல்லுகின்ற கைவண்டித் தொழிலாளர்கள், தங்களுக்கு புனர் வாழ்வு வேண்டுமென்று சொல்லுகின்ற ஏழை விவசாயத் தொழிலாளர்கள், ஏழை எளிய பாட்டாளி மக்கள், அவர்கள் வாழ்வு வளம் பெறுவதற்காக, அவர்களைப் பாதுகாப்பதற்காக, அவர்கள் அவ்வாறு தங்கள் வாழ்வை அமைத்துக் கொள்வதற்காக மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் எதிர்காலத்திலே நல்லதொரு சட்டத்தை உருவாக்கி, இந்த அன்-ஆர்கனைஸ்ட் வொர்க்கர்ஸ், இப்படிப்பட்ட தொழிலாளர்கள், நலனைக் கருதி, அவர்களைப் பாதுகாக்க ஒரு சட்டத்தை ஏற்படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவை நகரத்திலே, நமக்கு முந்திய அரசு கையகப்படுத்தி இருக்கின்ற இடங்களை, அவைகள் நஞ்சை நிலங்களாக இருந்தால், அவைகளையெல்லாம் விட்டுவிட்டு, புதிதாக புஞ்சை நிலங்களை கையகப்படுத்தி, அதன் மூலம் வீட்டு வசதி வாரியத்திற்கான நிலங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கோவை மாவட்டத்தைச் சேர்ந்த பொது மக்கள் சார்பாக நான் இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 11–20]

கோடிக்கணக்கான மதிப்புள்ள வீடுகளை கோவை கிழக்கு பகுதியில் இராமநாதபுரம் என்ற இடத்தில் கட்டியிருக்கிறார்கள். அதுவும் முந்தைய அரசு கையகப்படுத்திய இடம். ஹவுசிங் போர்டு யூனிட் பகுதியாக பிரகடனப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அங்கு வீடுகள் கோடிக்கணக்கான ரூபாயில் ஏற்படுத்தியாகிவிட்டது. அதையும் விட்டுவிட வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்கை யினை வரவேற்று விடைபெறுகிறேன்.

*திரு. வே. இராஜசேகரன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை மானி யக் கோரிக்கை மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிக்கையிலே சென்னை, பெருநகர் வளர்ச்சியினுடைய சில விவரங்கள், அதற்காக உலக வங்கியிடம் 21 கோடியே 60 இலட்சம் ரூபாய் கடனாகவும், அதற் கான இந்த மதிப்பீடு ரூபாய் 46·82 கோடியாக இருக்குமென்றும் ; அந்தத் திட்டத்தினுடைய அடிப்படையில் சென்னை நகரத்தில் இருக்கக்கூடிய மறைமலை நகர் வளர்ச்சி, மணலி வளர்ச்சி, இன்னும் ஜார்ஜ் டவுன் பகுதியில் இருக்கக்கூடிய இரும்புக் கடை களை கொரட்டூருக்கு மாற்ற நிலத்தை ஆர்ஜிதம் செய்யக் கூடியத் திட்டம், இதைப்போன்ற இன்னும் கொடுங்கையூர், அரும்பாக்கம், வில்லிவாக்கம் பகுதிகளிலே சீரமைப்பு திட்டங்கள், உலக வங்கியினுடைய கடனைப் பெற்றுச் சீரமைக்கப்படும் என்று கூறியிருக்கின்றார்கள். அதிலே, சிறப்புத் திட்டமாக கொத்த வால்சாவடி கோயம்பேட்டிற்கு மாற்றுகிற திட்டத்தை தெரிவித் திருக்கிறார்கள். கொத்தவால் சாவடி என்பது சென்னை நகரத் தினுடைய மையப்பகுதியாகும். சென்னை நகர மக்களுடைய, அதைச் சுற்றியுள்ள சுற்றுப்புற மக்களுடைய அன்றாட தேவை யான காய் கறிகள், பழம் போன்ற பொருள்களை காலையிலும், மாலையிலும் வாங்கக்கூடிய அந்த கொத்தவால்சாவடி போக்கு வரத்து நெரிசல் காரணமாகவும், சுகாதார கேடு அதிகமாக ஏற்படுகிறது என்ற காரணத்தினாலும், அதை கோயம்பேட்டிற்கு மாற்றுகிற திட்டத்தை சில ஆண்டுகளுக்கு முன்னால் வெளியிட்டு அதற்கு பணமும் ஒதுக்கப்பட்டு, கோயம்பேடு பகுதியில் நில ஆர்ஜிதம் செய்கின்ற ஒரு நிலை உருவாகியது. 1980 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையிலே 1981—82-ல் ஆர்ஜிதம் செய்யப்படும் என்றும், அதன் பின்னால் அங்கே சாலை வசதிகளும், விளக்கு வசதிகளும், சாக்கடை, மழை நீர் வெளியே செல்வதற்கான அமைப்புத் திட்டங்களும் செயல்படுத்தப்படும் என்றும் கூறியிருக் கிறார்கள்.

கொத்தவால்சாவடி பகுதியில் சுகாதார கேடு, போக்குவரத்து நெரிசல் இருக்கிறது என்பது உண்மை. மாதத்திற்கு ஒரு முறை வாங்குகிற பொருளாக இருந்தால், வாரத்திற்கு ஒரு முறை வாங்குகிற பொருளாக இருந்தால், 15 கிலோ மீட்டர், 20 கிலோ மீட்டர் தொலைவு என்று பாராமல் போய் வாங்கி வரலாம். ஆனால், பழ வகைகள், காய்கறிகள், மற்றும் அன்றாடம் வீட்டிற்குத் தேவையான பொருள்கள் அங்கே விற்கப்படுகின்றன. நகரின் மையப் பகுதியாக அந்தப் பகுதி இருக்கிறது. அதே நேரத்தில் பல கட்டிடங்களை அங்கு ஆர்ஜிதம் செய்து, பலமாடிக் கட்டிடங்கள் "டிபார்ட்மென்டல் ஸ்டோர்" என்று உருவாக்கி, ஒரு மார்க்கெட்டிங் ப்ளேசாக மாற்றுவதற்கு இந்த அரசு ஒரு திட்டத்தை கொண்டு வந்திருக்குமேயானால் அது பாராட்டக் கூடிய ஒன்றாக இருக்கும். வெளி நாடுகளுக்குச் சென்றுவரக் கூடிய அமைச்சர்கள் அங்கே இருக்கிற நல்ல பல திட்டங்களைப் பார்த்து, அவைகளை சென்னை நகரிலே அமல்படுத்த வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அன்றாடம் தேவைப்படும் காய்கறிகளையும், பழங்களையும் 10 கிலோ மீட்டர், 15 கிலோ மீட்டர் சென்று வாங்கி வரக்கூடிய சூழ்நிலையை உருவாக்கும் இந்தத் திட்டத்தை அமுல்படுத்த முன்வந்திருப்பது உண்மையிலேயே வருத்தப்படக்கூடிய ஒன்றாகும்.

1980 ஆம் ஆண்டு அறிக்கையிலே, இந்த ஆண்டு 1981—82-லே 240 ஏக்கர் பரப்பளவு உள்ள நிலத்தில் 3,000 கடைகள் அமைத்து அதிலே விற்பனை அங்காடிகளை அமைக்கவும் ஒப்புதல் வழங்கும் என்றும், இந்த மொத்த விற்பனை அங்காடிகளை அமைப்பதற்கு உரிய நிலங்களை கையகப்படுத்த 1981—82-லே முடியும் என்றும், இந்த பரப்பில் சாலைகள் கழிவு நீர் குழாய்கள், வடிகால் குழாய்கள் முதலியவை அமைப்பதற்கு 400 இலட்சம் ரூபாய் செலவில் 1981—82-லே மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் அவர்கள் குறிப்பு கூறுகிறது. 1980 ஆம் ஆண்டு அவர்களுடைய அறிக்கையிலே 214 ஆவது பக்கத்திலே கொத்தவால்சாவடி சந்தையை கோயம்பேடுக்கு மாற்றுவது என்ற தலைப்பிலே, கோயம்பேடு பகுதியில் உள்ள சுமார் 120 ஹெக்டேர் பகுதியில் 3 ஆயிரம் கடைகள் அமைக்கும் முகமாக ஒரு புதிய மொத்த விற்பனை அங்காடி ஏற்படுத்தும் திட்டம் 1979—80ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது என்றும் சுமார் 3 ஆண்டுகளுக்குள் இத்திட்டம் நிறைவுறும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் இத்திட்டத்தின் நில ஆர்ஜித வேலை 1980—81 ஆம் ஆண்டின் முதல் பகுதியிலே முடிவுறும் என்றும் அந்தப் பகுதியிலே அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய 1980—81 இல் தொடங்கப்படும் என்றும் 1981 ஆம் ஆண்டு அவர்களுடைய மானியக் கோரிக்கை அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள். 1979 ஆம் ஆண்டிலே ஆரம்பிக்கப்பட்ட கூட்டம் 3 ஆண்டுகளுக்கு மேலாகியும் 1980—81 இல் நிலம்

கையகப்படுத்தப்படுவதாகவும், 1981–82இல் சீர்படுத்தப்படுவதாகவும் அதிலே கூறியிருப்பது உங்களுடைய மெத்தனப் போக்கையும் அந்தத் திட்டத்திலே உங்களுக்கிருக்கிற அசிரத்தையையும் சிரத்தையில்லாத தன்மையையும் தான் சுட்டிக்காட்டுகிற அளவுக்குத்தான் அது இருக்கிறதே தவிர கொத்தவால்சாவடியிலே இருக்கின்ற சிரமத்தை மாற்றுவதற்கு கோயம்பேடுக்கு மாற்றுகிற அக்கறை உங்கள் மத்தியிலே இல்லை என்பது என்னுடைய குற்றச்சாட்டு ஆகும். நில ஆர்ஜிதம் செய்கிறபோது ஆட்சித் தலைவருடைய இடமாக இருந்தாலும், பி.டபுள்யூ.டி. இடமாக இருந்தாலும் அரசு இலாக்காக்களிலே ஒன்றுக்கு ஒன்று சொந்தமான இடமாக இருந்தாலும் ஆர்ஜிதம் செய்கிறபோது சிகப்பு நாடா முறையிலே காலதாமதம் என்பது தவிர்க்க முடியாத ஒன்று. தனிப்பட்டவர்களுடைய இடங்களை ஆர்ஜிதம் செய்கிறபோது அதிலே ஏற்படுகிற லிட்டிகேஷன்கள், நீதிமன்றங்களுக்குச் செல்கிறபோது ஏற்படுகிற தடங்கல்கள் அதிலே நீங்கள் வெற்றியடைந்து அதற்குப் பின்னால், நிலங்களைக் கையகப்படுத்திச் சாலைகள், மின் விளக்குகள், மின்சாரக் கம்பங்கள், கழிவுநீர்க் குழாய்கள் அமைக்கும் பணிகளிலே நீங்கள் ஈடுபடுகிறபோது, 1981–82இல் நிறைவேறாது என்பது உங்களுக்கும் தெரிந்துதான் இந்த மானியக் கோரிக்கையிலே நீங்கள் அதைக் குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

சென்னை நகரத்திலே இருக்கின்ற அரசு ஊழியர்களுக்குக் கட்டிக் கொடுக்கக் கூடிய வீடுகளுக்கு மாத வாடகை நிர்ணயிக்க வேண்டுமென்று அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். சென்னை நகரத்திலே உள்ள அலுவலகங்களிலே வேலை பார்க்கிறவர்கள், வேலை பார்ப்பதற்காக வெளியூர்களிலிருந்து இங்கே வந்து தங்கி குடியிருக்கிறவர்களுக்கு இப்போது அவர்களுடைய சம்பளத்திலே 10 சதவீதமும், ஹவுஸ் ரெண்ட் அலவன்ஸும் வீட்டு வாடகை என்று பிடிக்கப்படுகிறது. அவர்கள் வாங்குகிற சம்பளத்திலே அவர்கள் அதிகமான அளவு வாடகைக்காகக் கொடுக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. அரசு ஊழியர்கள் நீண்ட நாட்களாக அவர்களுக்கு வீட்டு வாடகையாக பிக்ஸட் ரெண்ட் என்ற அடிப்படையிலே நிர்ணயித்து வாங்க வேண்டும் என்று கோரியதன் விளைவாக அதற்காக ஒன் மேன் கமிட்டி என்று கூட அமைக்கப்பட்டது. அந்தக் கமிட்டி அறிக்கை தந்திருக்கிறது. ஆனால் அந்தக் கமிட்டியின் அறிக்கை வெளியிடப்படவில்லை. அந்தக் கமிட்டியாலே பிக்ஸட் ரெண்ட் என்று சொல்லப்படவில்லை என்றாலும் என்.ஜி.ஓ.க்களுக்கு மாத அடிப்படையிலே வாடகையை நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து குடிசை மாற்று வாரியப் பிரச்சினைகளைப்பற்றி இங்கே நான் விளக்க விரும்புகிறேன். பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் காலத்திலே ஏழை மக்கள் சுகாதாரக் கேடு, அல்லது

விளக்கு வசதியின்மை, குடிநீர் வசதியின்மை இவைகள் இல்லாத முறையிலே வாழவேண்டுமென்ற அடிப்படையிலே குறைந்த வாடகையில் அந்த ஏழை மக்களுக்காக ரெண்டட் ஹவுஸிங் ஸ்கீம் என்ற முறையிலே கொண்டு வந்தார்கள். அந்த முறையிலே அந்த வீடுகளுக்கு 5 ரூபாய் வாடகை என்று நிர்ணயித்து முதன் முதலாக ராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில், பழைய பேசின்பிரிட்ஜ் தொகுதியிலே உள்ள வ.உ.சி. நகரிலே வீடு கட்டும் திட்டத்தை அமைத்துத் தந்தார்கள். மெயின்டனன்ஸ் பீஸ் என்ற முறையிலே தான் 5 ரூபாயை நிர்ணயித்தார்கள். 1970 ஆம் ஆண்டு குடிசை மாற்று வாரியம் என்று ஆரம்பிக்கப்பட்டு 1971 ஆம் ஆண்டு அதற்குச் சட்டதிட்டங்கள் வகுக்கப்பட்டன. சென்னை நகருக்கு வேலை தேடி வருவோர் எண்ணிக்கை அதிகமாவதன் காரணமாக குடிசைகள் நாள்தோறும் வளர்கின்றன. சென்னை நகரிலே கூலி வேலை செய்கிறவர்கள், சைக்கிள் ரிக்ஷா ஓட்டுவோர், ஏனைய தொழிற்சாலைகளிலே வேலை செய்யும் தொழிலாளர்கள் மற்றும் சாதாரணத் தொழிலாளர்கள் இவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்ததன் விளைவாக சென்னை நகரின் ஜனத் தொகையில் இன்றைக்கு மூன்றில் ஒரு பங்கினர் குடிசை வாழ் மக்களாக இருக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு 12 இலட்சம் பேர்கள் 1,428 குடிசைப் பகுதிகளிலே வாழ்கின்றனர். இங்கே கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்கள் நகரில் குடிசை பகுதிகள் இல்லாமல் செய்வதற்காகக் கொடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் அவர்களுக்காகச் செய்யக்கூடிய பல நல்ல காரியங்களுக்குப் போதுமானதாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11—50)

சில பிரச்சினைகளில் அரசு தீவிரக் கவனம் செலுத்த வேண்டு மென்று நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதற்கான காலக் கெடுவை நிச்சயமாக அவர்கள் குறிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். பெரியம்மை ஒழிப்பு என்று குறிப்பிட்ட ஆண்டை நிர்ணயித்து இத்தனை ஆண்டுகளுக்குள்ளாக இந்தத் தமிழகத்தில், இந்தியாவில் பெரியம்மை ஒழிக்கப்படும் என்று திட்டமிட்டார்கள். அதைப்போல மலேரியா ஒழிப்புக்கு என்று குறிப்பிட்ட ஆண்டை நிர்ணயித்து இத்தனை ஆண்டுகளுக்குள் மலேரியா ஒழிக்கப்படும் என்று நிர்ணயித்தார்கள்.

குடிசை மாற்று வாரியம் ஏற்படுகின்ற நேரத்தில் ஏழாண்டு கள் என்று அன்று நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் இன்றுகூட இப்பொழுது இருக்கும் அரசும் அதற்கான ஆண்டை நிர்ணயிக்காமல் மெத்தனமாக இருக்கின்ற காரணத்தால் குடிசைப் பகுதிகள் சுகாதாரக் கேடுகள் நிறைந்ததாகவும், தீ விபத்துக்கள் அடிக்கடி

ஏற்படக்கூடியதாகவும் இருந்து, அதற்காகத் தமிழக அரசு பல இலட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவிட வேண்டிய ஒரு துர்ப்பாக்கியமான நிலைமையிலே இருக்கிறது.

அடிப்படை வசதிகளான குடி தண்ணீர், சாக்கடை போக வாய்க்கால், விளக்கு, சாலைகள், கழிவிட அறைகள் போன்றவைகள் செய்து கொடுக்கப்படாமல் குடிசைப் பகுதிகள் இருக்கின்றன. இதனால் சுகாதாரக் கேடுகளும், விபத்துக்கள் ஏற்படக்கூடிய நிலைமையும் அங்கே இருக்கின்றன.

குப்பையிலே குடியேறக்கூடிய சூழ்நிலை என்னுடைய தொகுதியிலே இருக்கிறது. அவர்கள் வாழும் பகுதி மட்டும் குப்பை அல்ல. குப்பை மேட்டிலேயே, அதாவது கொருக்குப்பேட்டை பகுதியில் கே.என்.எஸ். டிப்போ என்று ஒரு குப்பைமேடு நகராட்சிக்குச் சொந்தமாக இருக்கிறது. சென்னை நகரத்தினுடைய குப்பைகள் அத்தனையும் அங்குதான் கொட்டப்படுகின்றன. அந்தக் குப்பை மேட்டுப் பகுதியிலே நகரசுத்தித் தொழிலாளர்கள், சென்னை நகராட்சித் தொழிலாளர்களான ஆதி ஆந்திர ஹரிஜனங்கள்; இங்கேயிருக்கும் தலைமைச் செயலகத்திலே வேலை பார்க்கக்கூடிய ஆதி ஆந்திர ஹரிஜனங்கள், சென்னை நகரத்திலே பெரிய வங்கிகளிலே வேலை பார்க்கின்ற ஹரிசனமக்கள் ஆகியோர் சுமார் பத்தாயிரம் பேர்களுக்கு மேல் அரிநாராயணபுரம், சிகிரிந்தபாளையம், அனந்தநாயகி நகர், மோட்சபுரம், காமராஜ் நகர், கோவிந்தசாமி நகர் போன்ற பலயிடங்களிலே குடியிருக்கிறார்கள். அவர்களுக்கு வாரம் ஒருமுறை லாரிகளின் மூலம் தண்ணீர் கொண்டு வந்து டாங்குகளில் கொட்டப்படுகிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை).

ஆனால் அவர்களுக்கு அது முழுமையாகக் கிடைக்கவில்லை. ஒரு விளக்குகூட இல்லாத பகுதிகள் இன்னும் இந்தச் சென்னை நகரத்திலே இருக்கின்றன.

குழாய்கள் பதிக்கப்பட்டு இன்னும் பலயிடங்களில் தண்ணீர் விநியோகம் கிடையாது; பல ஆண்டுக்காலமாக இந்த நிலைமையிருக்கிறது. இதை நான் வேடிக்கைக்காகவோ அல்லது குற்றச்சாட்டு சொல்ல வேண்டுமென்பதற்காகவோ சொல்லவில்லை. என்னுடைய தொகுதியிலே ஜீவா நகர் என்று இருக்கிறது, அது 3 ஆவது வட்டம். அங்கு உலக வங்கியின் சார்பாகசப்வெல் கட்டப்பட்டு, பல சின்னச் சின்ன டேங்குகள் கட்டப்பட்டு, பைப்புகள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் நான்காண்டுகளாக அது செயல்படவில்லை. அதைப்போல 20 ஆவது டிவிஷன், சீனிவாசபுரத்திலே உலக வங்கியின் சார்பாகசப்வெல்கள் கட்டப்பட்டு, பலயிடங்களிலே சின்னச் சின்ன டேங்குகள் கட்டப்பட்டு,

குழாய்கள் பொருத்தப்பட்டு நான்காண்டுகள் ஆகின்றன. ஆனால் அவைகளெல்லாம் செயல்படுத்தப்படவில்லை. மங்கம்மா தோட்டம் பகுதியிலே சப்வெல் கட்டப்பட்டு, குழாய்கள் பதிக்கப்பட்டிருக்கின்றன ; அவைகளும் நான்காண்டுகளாகச் செயல்படுத்தப்படவில்லை.

உலக வங்கியின் சார்பாகக் கட்டப்பட்ட இத்தகைய திட்டங்கள் முறையாக எம்.எம்.டபிள்யூ.எஸ்.எஸ்.பி. விடத்திலே ஒப்படைக்கப்படாத காரணத்தினாலேயும், சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்திலே கட்டப்பட்ட இந்தத் திட்டங்கள் மாநகராட்சியிலேயோ அல்லது குடிநீர் வடிகால் வாரியத்திலேயோ ஒப்படைக்கப்படாத காரணத்தினாலேயும் அவர்கள் எங்களிடம் நல்ல நிலையில் ஒப்படைக்கவில்லை என்ற காரணத்தைக் காட்டுகிறார்கள். இப்படி இரண்டு இலாக்காக்களுக்கும் இடையே ஏற்படக்கூடிய சண்டையின் காரணமாக அது செயல்பட முடியாமல் நான்காண்டுகளாக இருந்து கொண்டு வருகிறது.

வைத்தியநாத முதலித் தெருவில் இருக்கக்கூடிய இரயில்வே கேட் ; அங்கே பல ஆண்டுகளாக மேம்பாலம் கட்டுவதற்கான திட்டத்தை அரசு இன்னும் செயல்படுத்தவில்லை. மேம்பாலம் கட்டும் திட்டம் என்ற காரணத்தின் அடிப்படையில் அவர்கள் அங்கே ரோடு போட மறுக்கிறார்கள். இந்த அடிப்படையில் இருக்கின்ற நிகழ்ச்சிகளைப் போக்குவதற்காகக் குடிசைகளின் பக்கம் உங்கள் கண்களைத் திருப்ப வேண்டும். சமீப காலமாக உங்கள் கண்கள் கும்பாபிஷேகம், குடமுழுக்கு விழாக்கள், பூர்ண கும்பங்கள் என்று பல இலட்சக்கணக்கான ரூபாய்களை நீங்கள் கோயில்களுக்கு செலவழிக்கின்றீர்கள். அதைப்பற்றி நான் ஒன்றும் கூற விரும்பவில்லை. ஆனால் அதே நேரத்தில் அண்ணாவின் ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கிறேன் என்ற லட்சியத்திற்கு அந்தப் பல லட்சங்களில் இருந்து சில லட்சங்களைச் செலவிடுவீர்களா? கோபுரத்தின் மேல் உள்ள பார்வையைச் சற்றுக் குடிசைப் பகுதிப் பக்கம் திருப்புவீர்களா?

ஆரோக்கியசாமி என்பவர் நீண்ட நாட்கள் வாழவும் வேண்டும் ; அத்துடன் அவன் நிரந்தர நோயாளியாகவும் இருக்க வேண்டும் ; டாக்டர் ஏழுமலையான் டிஸ்பென்சரி நடத்தவும் வேண்டும் ; அவனுக்கும் நிரந்தர வருமானம் வரவேண்டுமென்ற அடிப்படையில், சென்னை நகரத்திலே குடிசைகளும் இருக்க வேண்டும் ; அதற்கு ஒரு குடிசை மாற்று வாரியமும் இருக்க வேண்டும் ; அதற்குத் தலைவரும், உறுப்பினர்களும் இருக்க வேண்டுமென்றால், குடிசைப் பகுதிகளை எப்படி ஒழிக்க முடியும்? ஆகவே இந்த மந்தப் போக்கிலே அரசு செயல்படுகிறது என்று குற்றம் சாட்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவை இன்று மாலை 4 மணிக்குக் கூட இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஆர். சக்கரபாணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து
அதனை அவன்கண் விடல்.

என்பது பொய்யாமொழியார் வாக்கு. அந்த வாக்கிற்கேற்ப தொழிலாளர் நலனிலே அக்கறை கொண்டு, தன்னை அர்ப்பணித்து, தனித்தே உறுதியான வகையில் போராட்டங்கள் கண்டு, தொழிலாளர் வாழ்க்கை நலனைக் கருத்தில் கொண்டு உழைத்திட்ட ஒரு உத்தமர், இந்தத் தொழிலாளர் நல இலாகாவிற்கு அமைச்சராகக் கொண்டு வரப்பட்டுள்ளார். புரட்சித் தலைவரால் கொண்டு வரப்பட்ட அந்த அமைச்சர் அவர்கள் தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும், வீட்டு வசதி ஆகிய தலைப்புகளின்கீழ் கொண்டுவந்த மானியக் கோரிக்கைகள் மீது பேச எனக்கு வாய்ப்பு கொடுத்தமைக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய குறிப்பேட்டில் பார்க்கும்போது, நிறுவன அமைப்பின்கீழ் வரும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாப்பதோடு, நிறுவன அமைப்பின் கீழ் வராத நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் நலனைப் பாதுகாக்கச் சட்டப்படியான குறைந்த அளவு ஊதியங்களை வழங்க நலனைப் பாதுகாத்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், நம்முடைய அரசு குறிப்பில் தொழிலாளர் நலன் குறித்து கீழ்க்காணும் முறையில் ஆய்வு செய்யப்பட்டுள்ளதை நான் பாராட்டுகிறேன். (1) தொழில் உறவுகள் குறித்த சட்டம். (2) பணி மற்றும் வேலை நிபந்தனைகள் பற்றிய சட்டம். (3) ஊதியங்கள் குறித்த சட்டம். (4) சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் சட்டம். இதுபோன்று குறிப்பான சட்டங்களைக் கொண்டு வந்து தொழிலாளர் நலனைப் பாதுகாப்பதை, தொழிற்சாலைகளின் நிலையை ஆய்வு செய்வதை நான் உண்மையிலேயே பாராட்டுகிறேன்.

அதே நேரத்தில், மற்றொன்றையும் நான் சொல்ல வேண்டுமென்று கருதுகிறேன். தொழிலாளர் நலனைப் பாதுகாக்க வேண்டுமென்ற வகையில் பல்வேறு சட்டங்களைக் கொண்டு

வந்திருந்தாலும், இன்றைக்குக் குறிப்பாக, நானறிந்த வரையில் திருவொற்றியூர் பகுதியில், அனைத்துத் தொழிலகங்களைப் பார்க்கும்போது, காஷுவல் லேபர் என்ற ஒரு முறை இருப்பது அரசுக்குத் தெரியும், அமைச்சருக்கும் தெரியும். ஆனால், காஷுவல் லேபர் என்று வைத்து, அவர்கள் வேலை வாங்குகின்ற போது, நம்முடைய அரசு கொண்டுவந்த, 240 நாட்கள் அவர்கள் தொடர்ந்து பணி செய்ததற்குப் பின்னாலே, அவர்களைப் பணியில் நிரந்தரம் செய்ய வேண்டுமென்று சட்டம் இருந்தாலுங்கூட, இன்றைக்குப் பல்வேறு நிறுவனங்கள் அதைச் சரியாக நிறைவேற்றுவதில்லை. குறிப்பாக, தொழிலாளர்கள் 240 நாட்கள் வேலை செய்வதற்கு முன்னால் வேலையிலிருந்து நீக்கப்படுகிறார்கள். அவர்கள் பெயர்கள் குறிப்பேடுகளிலில்லாத சூழ்நிலை உருவாக்கப்பட்டு, நிரந்தரமாக்கப்படுவதில்லை.

அரசு நடவடிக்கை மேற்கொண்டிருப்பது தெரிய வருகிறது. இன்றைக்குப் பல்வேறு நிறுவன அமைப்பின்கீழ் வராத நிறுவனங்களில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்குச் சம்பள விகிதத்தை நிர்ணயித்துள்ள இந்த அரசைப் பாராட்டுகிறேன். ஆனாலுங்கூட இன்றைக்கு நிறுவன அமைப்பின்கீழ் வராத தொழிலகங்களில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் நலனிலே குறைபாடு இருப்பதை எடுத்துச் சொல்வது என்னுடைய கடமை என்று சொல்ல விரும்புகிறேன். நிறுவன அமைப்பின்கீழ் வருகின்ற தொழிலகங்களை நாம் எடுத்துக்கொள்வோமானால், அங்கே மதிய உணவகங்கள் இருக்கின்றன. அவற்றின் மூலம் தொழிலாளர்களுக்கு மதிய உணவு விற்கப்படுகிறது. ஒருசில கம்பெனிகளில் 40 பைசாவுக்கு விற்கப்படுகிறது. ஒருசில கம்பெனிகளில் ரூ. 1-க்கு விற்கப்படுகிறது. ஒருசில கம்பெனிகளில் ரூ. 1-க்கு மேற்பட்டு விற்கப்படுகிறது. அங்கு ஒரே விலையிலே உணவு மற்றும் ஸ்நேக்ஸ் என்று சொல்லப்படுகிற சிற்றுண்டிகள் வழங்கப்பட வேண்டுமென்ற பணிவான வேண்டுகோளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், நிறுவன அமைப்பின்கீழ் வராத தொழில்கங்களில் பணியாற்றுகிற தொழிலாளர்களுக்கு, அந்தத் தொழில்கங்களில் நிச்சயமாக சிற்றுண்டி சாலைகள் கிடையாது. அங்கே இருக்கிற தொழிலாளர்களுக்காக இன்றைக்கு அரசு கூலி நிர்ணயம் செய்திருக்கிறது, பாராட்டுகிறோம். அதே நேரத்தில், அந்தக் கூலி நிர்ணயம் ஓரளவுக்குக் குறைவாகத்தான் இருக்கிறது. இந்தத் தொழிலாளர்கள் மதிய உணவிற்கும், டீ அருந்த வேண்டுமானாலும் மற்ற உணவுப்பொருள்கள் உட்கொள்ள வேண்டுமானாலும் வெளியே செல்ல வேண்டிய சூழ்நிலைக்கு ஆளாகிறார்கள். திருவொற்றியூர் பகுதியில், இன்றைக்கு பல்வேறு பகுதிகளில்,

பல்வேறு தொழிலகங்களிலே, ஒப்பந்தக்காரர்கள் மொத்த வேலைகள் என்ற பெயரால் 'காஷுவல் 'லேபர்களை' வைத்து வேலை வாங்குவதை நம்மால் பார்க்க முடியும்.

[முற்பகல் 11-40]

இன்றைக்குத் தொழிலாளர்கள் வெளிநாடுகளுக்கு, அரேபிய நாடுகளுக்கு, அதிக ஊதியம் தேவை என்று செல்லுகிறார்கள். இங்கே இடம் இன்றி இந்த நாட்டு மைந்தன் அரபு நாடுகளுக்குச் சென்று கொண்டிருக்கிறான். அங்கே அவனுடைய ரத்தத்தைச் சுரண்டுகிறார்கள். இங்கே நம்மாலே ஆளாக்கப்பட்ட, நம்மாலே உருவாக்கப்பட்ட, பணமுதலைகள் நம்முடைய தொழிலாளர்களின் ரத்தத்தை உறிஞ்சுகிறார்கள். கான்ட்ராக்ட்முறை என்று வைத்து, நிர்வாகத்திலே இருந்து அதிகப் பணம் வாங்கிக்கொண்டு, தொழிலாளர்களுக்குக் குறைந்த பணத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இவைகளை எல்லாம் நமது அரசு ஊன்றிக் கவனித்து, அதற்காகத் தனியாக ஒரு குழுவை அமைத்து, எத்தனை பேர்கள் ஒப்பந்தப்படி நியமிக்கப்பட்டார்கள், எத்தனை பேர்கள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த ஒப்பந்தப்படி நியமிக்கப்பட்டவர்கள் அங்கே இருக்கிறார்களா? அதற்காக absentee coverage என்ற அந்த முறை இருக்கிறதா? என்பதை அமைச்சர் அவர்களும் அரசும் நிச்சயமாகப் பரிசீலித்துச் சரிபார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்குத் தொழிலாளர் நலன் குறித்து சட்ட அடிப்படையில் குழுக்களை அமைத்திருக்கிறார்கள். அதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தக் குழுக்களில் ஒன்று குறைந்த அளவு ஊதிய மாநில ஆலோசனைக் குழு, இரண்டாவது குறைந்த அளவு ஊதிய ஆலோசனைக் குழு, மூன்றாவது மலைத் தோட்டத் தொழிலாளர் வீட்டுவசதி ஆலோசனைக் குழு போன்ற பல குழுக்கள் அமைக்கப்பட்டிருப்பதாக இந்த அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவைகள் இன்றைய தினம் சிறப்புற செயலாற்றிக்கொண்டிருக்கின்றன என்பதைப் பார்க்க முடிகிறது. இதை நான் மனம் திறந்து பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் மற்றொன்றையும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்ற இ. எஸ். ஐ. மருத்துவமனைகளில் சற்று அக்கறை எடுத்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் என்னவென்றால், இந்த நாட்டின் முதுகெலும்பாக உள்ள தொழிலாளர்கள் இந்த மருத்துவமனைகளுக்குச் செல்கின்ற நேரத்தில் அந்த மருத்துவமனைகளிலே மருந்துகளே இருப்பதில்லை

அதை எல்லாம் சரிசெய்து, தொழிலாளர்நலனிலே அக்கறை கொண்ட இந்த அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவர் தலைமையிலே இருக்கும் இந்த அரசு இதைச் சரிசெய்து தர வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில் இன்னொன்றையும் கூற ஆசைப்படுகிறேன். தொழிலாளிகளுக்குச் சுகாதாரப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிலே கொடுத்திருக்கிறார்கள். அதை நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தொழிலுக்குச் செல்லுகின்ற தொழிலாளிகளுக்குச் சுகாதாரம் இருந்தால் அவர்கள் நல்ல முறையில் தொழில் நடத்த முடியும் என்ற அடிப்படையில் அவர்களின் நலன்களைப் பாதுகாப்பதில் அமைச்சர் அவர்கள் பல்வேறு காலகட்டங்களிலே எடுத்த நடவடிக்கைகளைப் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் மற்றொன்றைச் சொல்லி அமரலாம் என்று கருதுகிறேன்.

நேற்றைக்குப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் என்னுடைய தொகுதியான பொன்னேரியில் அபராஜிதம் அம்மாள் பெற்றக் கடனைத் திரும்பப் பெற அரசால் அனுப்பப்பட்ட அதிகாரிகள் கடுமையாக நடந்து கொண்டார்கள் என்று சொன்னார்கள். இந்த விவரத்தை நான் பரிசீலனை செய்ததில் அவர் சொன்னதைப் போன்ற ஒரு சூழ்நிலை நடைபெறவே இல்லை என்பதைக் கூறிக்கொண்டு அவர்கள் சொன்னது அனைத்தும் உண்மைக்கு மாறானவை என்பதைத் தெரிவித்து இப்படி உண்மைக்குப் புறம்பான தகவலை இனி கூறவேண்டாம் என்று கூறி அமர்கிறேன்.

*திரு. கு. ரமணி: மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நடைபெறுகிற இந்தத் தொழிலாளர் நல மானியக் கோரிக்கைக்கு ஆரம்பத்தில் மிகக் குறுகிய நேரம்தான் ஒதுக்கப்பட்டு இருந்தது. பின்னர் நமது தலைவர் அவர்களும், துணைத் தலைவர் அவர்களும் கலந்து பேசி, அதிகப்படியான நேரம் ஒதுக்கியிருப்பதற்காக நான் பாராட்டுத் தெரிவித்துக்கொள்கிறேன். இது வரவேற்கத்தக்கது. இந்த முறை தொடரவேண்டும். லேபர் மானியம் என்றால் குறைந்தது இரண்டு நாட்கள் அதன் பேரில் விவாதம் இருக்க வேண்டும் என்பதை நான் முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசின் நடவடிக்கை பற்றி நமது அமைச்சர் அவர்கள் ஏராளமான விவரங்களைத் திரட்டி நமக்கு முன்னால் வைத்து இருக்கிறார்கள். அவைகள் எல்லாம் நாம் படித்துத் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயங்கள்தான். ஆனால் அவற்றைப்பற்றி முழுவதும் அறிந்து தெரிந்து கொள்ள நேரம் போதாது. ஆகவே, சுருக்கமாக அதன் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஒருசில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன்.

ஒரு நடைமுறை சாத்தியமான கொள்கை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதாவது ஒரு 'ப்ராக்மேடிக் பாலிசி' என்று குறிப்பிடுகிறார்கள். நாங்கள் என்ன எதிர்பார்க்கிறோம் என்றால் தொழிலாளர்களுக்குச் சாதகமான கொள்கையாக இருக்கவேண்டும். ப்ராக்மேடிக் என்று சொல்வதற்கு பதிலாக 'ப்ரோ-லேபர்' என்று குறிப்பிடுவது இன்னும் சாலச்சிறந்ததாக இருக்கும், நன்றாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அந்த முறையில் அது வரவேண்டும்.

ஒரு விதத்தில் அரசாங்கம் தொழிலாளர் மக்களுக்கு அதிகப்படியான சௌகர்யங்களை செய்து, சுரண்டும் வர்க்கத்தை எதிர்த்து நிற்கும்படியான ஒரு பெரிய ஜனநாயக முற்போக்குச் சக்திகளைப் பலப்படுத்துவது என்ற அடிப்படையில் அந்தக் கொள்கையை ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசாங்கம் இந்த அரசாங்கம் என்று சொல்வதுதான் தொழிலாளர் ஆதரவுக் கொள்கை. அப்படி இது வரவேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம்.

நடைமுறையில் தொழில் தகராறுகளில் காலதாமதம் ஏற்படும் போக்கு நடைபெறுகிறது. இது ஏற்கனவே இந்த மன்றத்தில் நடைபெற்ற கொள்கை பற்றிய விவாதத்தில் எடுத்துச் சொல்லப்பட்டு இருக்கிறது. சில மாறுதல்கள் கொண்டு வந்து இருக்கிறார்கள். சில மாற்றங்கள் தேவைப்படுகின்றன என்று நாங்களும் எடுத்துச்சொல்லியிருக்கிறோம். இது மேலும் அதிகப்படியான அளவிற்கு நல்லமுறையில் செயல்படுத்தவேண்டும். எந்தத் தொழில் தகராறு ஏற்பட்டாலும் 3 மாதம், 5 மாதம், 6 மாதம் என்று நீடிக்க விட்டு, தொழிலாளர்கள் அல்லோலகல்லோலப்பட்டு, சீரழிந்து போன பின்பும், அந்தப் பிரச்னை தீர்க்கப்படாமல் இருக்கின்ற நிலைமை இருக்கிறது; இது போக்கப்படவேண்டும். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களும், அந்த இலாகாவும் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

ஒரு உதாரணத்தை இங்கே சொல்ல விரும்புகிறேன், வடலூர் போராட்டம் 6 மாதம் நடந்தது. முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு ஒரு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறியும் அந்த மேனேஜ்மெண்ட் அதை நிறைவேற்றாததன் காரணமாக அந்தப் போராட்டம் காலம் கடந்து நீடித்துக்கொண்டே வந்தது. இப்படிப்பட்ட நேரங்களில் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும், அந்த இலாகாவும் தலையிட்டு, அரசு என்ன நினைக்கிறதோ அதை நிறைவேற்றுவதற்கு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நேரடியாக இந்தத் துறையின்கீழ் கண்ட்ரோலில் வராது என்றாலும் நான் இங்கே குறிப்பிடவிரும்புகிறேன். காடம் பாறை மின் திட்டத்தில் நடந்த விவகாரம். கான்ட்ராக்டர் களும், அங்கே இருக்கும் 1—2 மின் வாரிய அதிகாரிகளும் அந்தத் தொழிலாளர்களுக்கு விரோதமாக எடுத்த நடவடிக்கை தான் அவர்கள் அங்கே ஒரு சங்கம் அமைத்து விடக்கூடாது என்ற அடிப்படையில் எடுத்த நடவடிக்கைதான் அந்த ஸ்கீமே நடத்த முடியாமல் நான் வேலை நின்று தொழிலாளர்கள் நாசப் படுத்துகிறார்கள் என்றுகாட்டசதிசெய்தது, போனதற்குக்காரணம் ஆனால், அப்படி அந்தஸ்கீம் அங்கே நடத்தாமல் செய்வதற்கு தொழிலாளர்கள் முயற்சித்துக்கொண்டு இருக்கிறார்கள் என்கிற வகையில் தவறான விவரங்களை அரசுக்கு அவர்கள் அவ்வப் போது அனுப்பி அந்தத் தொழிலாளர்களை அங்கே உரிமைப் போராட்டம் நடத்தவிடாமல் செய்து இருக்கிறார்கள். அவர்கள் குடும்பத்தோடு கைதுசெய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார் கள். மன்னிப்பு எழுதிக்கொடுக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். அப்படி மன்னிப்புக்கோரியும், அந்த மன்னிப்புக் கோரிய தொழி லாளர்களைக் கண்டித்து சிறையில் தள்ளி, 3 மாதம் தண்டனை கொடுக்கப்பட்டது. தமிழ்நாட்டில் சரித்திரத்திலேயே இல்லாதது இது. இப்படிப்பட்ட நிலைமை வராமல் தொழிலாளர் நல இலாகாவும் அந்த அமைச்சரும் கவனித்துக்கொள்ளவேண்டும். இப்படிப்பட்ட கறுப்புப் புள்ளிகள் அரசாங்கத்திற்கு ஏற்பட்டு விட்டால் அதை அழிப்பது சுலபம் அல்ல. 51 தொழிலாளர் கள் இப்பொழுதும் சிறையில் வைக்கப்பட்டு இருக்கிறார்கள். 7—8 மாதங்கள் ஆனபின்பும் அவர்கள் விடுதலைசெய்யப் படவில்லை. இப்படிப்பட்ட நிலைமை நீடிக்கக்கூடாது. இப் படிப்பட்ட நிலைமையைப் போக்க அவர்கள் முன்வரவேண்டும். இப்படிப்பட்ட ஆக்கபூர்வமான முறையில் தொழில் தகராறு களைத் தீர்க்க முன்வருகிறபோது அதற்குத் தொழிற்சங்கங் களின் ஒத்துழைப்பு தரத்தயார், நாங்கள் நியாயத்தை ஏற்றுக் கொள்ளத்தயார். அதற்கான வகையில் சகல நடவடிக்கை களையும் அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

வேலைநிறுத்தம் முடிவு ஆகி, சமரச நிலை வந்தவுடன் கைது செய்யப்பட்ட தொழிலாளர்கள் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும். அவர்கள் சட்டத்தின் அடிப்படையில் மிகப்பெரிய குற்றம் செய்து இருந்தால் அது சம்பந்தமாக அவர்கள் கோர்ட்டில் ஜாமீன் பெறுவது என்பது பார்த்துக் கொள்ளட்டும். 50,100,200 பேர் கைது செய்யப்பட்டிருந்தால் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் முடிந்தவுடன் ஒரு சமரச நிலை என்கிற வகையில் இரண்டு பக்கத்திலும் தங்களுடைய நிலையில் இருந்து முன்னுக்கு வருகிறார்கள் என்றால் அந்தச் சமயத்தில் கைதானவர்களை விடுதலை செய்யவேண்டும்

அப்போதுதான் சமரச நிலை நீடித்து நிலைக்கமுடியும். அவர்கள் மீது போடப்பட்ட கேஸ்கள் வாபஸ் வாங்கப்படவேண்டும். ஆனால் இந்த நிலைமை பல இடங்களில் நடக்காமல் இருக்கிறது; டி. ஐ. சைக்கிள் போராட்டம் நடந்து எத்தனை நாள் ஆயிற்று? இன்னும் அங்கேயிருந்து வெளியேற்றப்பட்ட பல தொழிலாளர்களுக்கு வேலை இல்லை. சிலருக்குத்தான் கிடைத்திருக்கிறது. வேலை கிடைக்காதவர்கள் தொழில் கோர்ட்டுக்குக் கூட போகமுடியாத நிலைமை இருக்கிறது. அந்தப் பிரச்னை முடிய எவ்வளவு காலம் ஆயிற்று என்பது அமைச்சருக்குத் தெரியும். ஆகவே சமரச நிலை ஏற்பட்டால் சுமுக நிலை வரவேண்டும். எரிச்சலோ மனவேதனையோ இல்லாமல் இருக்க வழிவகை செய்யவேண்டும். டிஸ்மிஸ் செய்யப்பட்ட தொழிலாளி நேரடியாகக் கோர்ட்டுக்குச் செல்ல உரிமை வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் பல விஷயங்களில் நமக்கு ரெப்ரன்ஸ் கொடுப்பது இல்லை. எனக்கு நன்றாக ஞாபகத்தில் இருக்கிறது. அமைச்சருக்கும் தெரியும். ஈரோடு ஸ்ரீகிருஷ்ணா ஸ்பின்னரீஸ் மில் அங்கே 298 தொழிலாளர்கள் 117 பெண் தொழிலாளர்கள் உட்பட அவர்களுடைய கேசுக்கு ரெபரன்ஸ் கொடுக்காமல் விட்டுவிட்டார்கள்.

[முற்பகல் 11·50]

என்ன காரணம் என்று இன்றையதினம் வரையில் அரசாங்கமும் சொன்னது கிடையாது; அமைச்சரும் சொன்னது கிடையாது. முதலமைச்சர்கூட இந்த மன்றத்திலே பேசும்போது அங்கே அநியாயம் நடப்பதைக் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுப்பேன் என்றார். ஆனால் நிலைமை எப்படி இருக்கிறது? ரெபரன்ஸே கிடைக்கவில்லை. இன்றைக்கு அந்த முதலாளி ஒரு கம்பெனி, வனஸ்பதி கம்பெனி கட்டப்போகிறார். கட்டட்டும், வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் அதேநேரத்தில் தொழிலாளர்கள் வேலை இழந்து தெருவிலே நிற்கிறார்கள். அதைப்பற்றி கோர்ட்டுக்குப் போய் வழக்குப் போடக்கூடாதா? அரசாங்கம் அதற்கு நடவடிக்கை எடுக்கக்கூடாதா? தொழிலாளி இன்றைக்குக் கோர்ட்டுக்குப் போய் கேஸ் போட வழியில்லை. டிஸ்மிஸ் ஆன தொழிலாளர்கள் கோர்ட்டுக்குப் போகும் நிலைமை சட்டத்தில் இருக்க வேண்டும். மத்திய சர்க்கார் அதுபற்றி ஒரு சட்டம் கொண்டுவர இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதுவரை நாம் காத்திருக்க வேண்டுமா? ஏன் மாநில சர்க்காரே உடனடியாக நடவடிக்கை எடுக்கக் கூடாது?

அதுமட்டுமல்ல, என்ன வாக்குறுதி கொடுத்தாலும் அதை உடனடியாக நிறைவேற்ற வேண்டும்; அதிலே காலம் கடத்தக் கூடாது. நீதி வழங்குவதிலே காலம் கடந்தால் அது நீதி இல்லை

என்று சொல்கிறோம். அதேமாதிரிதான் கொடுத்த வாக்குறுதியும் உடனடியாக நிறைவேற்றப்படாமல் காலம் கடந்து நிறைவேற்றப்படுமானால் அது பழைய கந்தல்துணி ஆகிவிடும்; அதை யாரும் ரிப்பேர் செய்ய முடியாது.

அதைப்போல இன்றைக்கு ஸ்தாபனமில்லாத தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு என்பது மிக மிக முக்கியமாகும். இன்றைக்குச் சட்டத்திற்கு உட்பட்டு தொடங்கப்பட்ட ஏராளமான தொழில்கள் இருக்கின்றன. ஆனால் அந்தத் தொழில்களிலே ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. தொழில் செய்கின்ற தொழிலாளர்களுக்கு, அவர்கள் யாராக இருந்தாலும் பாதுகாப்பு இருக்க வேண்டும். அவர்களுக்கு மினிமம் வேஜஸ் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். வரவேற்கிறேன். ஆனால் அந்த நடவடிக்கை போதிய அளவுக்கு நல்லமுறையிலே எடுக்கப்படவில்லை. குறைந்தபட்சம் அவர்கள் ஒரு தொழில் செய்தால், அந்தத் தொழிலிலே தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்ற ரிக்கார்டு இருக்க வேண்டும். அவர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் நிரந்தரமாக்கப்பட வேண்டும். அதற்கு ஒரு சட்டத்தை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை நல்லமுறையில் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு முக்கிய விஷயம். பத்திரிகையாளர்களுக்கு 'பலேக்கர் அவார்டு' அளிப்பதுபற்றிச் சொன்னார்கள். அப்போது நமது அமைச்சர் அதன் பேரில் நடவடிக்கை எடுப்போம் என்று உறுதி சொன்னார். என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? தெரியாது. ஆனால் இன்றைக்கு சென்னை மாநகரில் நமது மூக்குக்குக் கீழே என்ன நடக்கிறது? இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி, தினமலர். ஃபினான்ஷியல் எக்ஸ்பிரஸ் போன்ற முக்கியமான பத்திரிகை நிறுவனங்களில் ஜூன் திங்கள் 20 ஆம் நாள் முதல் மூடி வேலை நிறுத்தப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். இதற்கு என்ன காரணம்? இந்தியன் எக்ஸ்பிரஸ் சாதாரண பத்திரிகையா? அவர்களுக்குக் கொடுக்க சக்தி இல்லையா? வசதி இல்லையா? அப்படிப்பட்ட நிர்வாகமே செய்ய முடியவில்லை என்றால் மற்றவர்கள் எப்படிச் செய்ய முடியும்? செலவு அதிகமாக இருக்கிறது. அதைக் குறைக்க வேண்டும், 22 பேர்களை டிஸ்மிஸ் செய்தால்தான், செலவைக் குறைத்தால்தான் பத்திரிகைத் தொழிலைச் செயல்படுத்த முடியும் என்று சொல்கிறார்கள். அப்படித் தொழிலாளர்களை டிஸ்மிஸ் செய்தால் கண்டிப்பாகக் கடுமையான விளைவுகள் ஏற்படும். அரசாங்கம் இது சம்பந்தமாக வலியுறுத்தி, கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அமைச்சரவர்கள் தன்னுடைய பதிலிலே இதுபற்றிச் சொல்வார்கள். நல்ல யோசனைகளைத் தருவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

அடுத்தபடியாக, இந்தமாதிரியான தொழிலாளர்கள் போராட்டத்தை உடைப்பதற்காக ஒரு சுலபமான வழியை முதலாளிகள் இன்றைக்குக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அது என்னவென்றால் சிவில் சொத்து உரிமைச் சட்டத்தின் கீழ் கோர்ட்டிலே கேஸ் போட்டு எங்களுடைய தொழிற்சாலையில் போராட்டம், அதனால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் வெளியிலே போக முடியவில்லை; வெளியே இருந்து பொருட்களை உள்ளே கொண்டு வரமுடியவில்லை. அதற்குப் பாதுகாப்பு இல்லை என்று சொல்லி, ஃபர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டிலிருந்து ஒவ்வொரு மேல் கோர்ட்டுக்கும் போய், நிலைமைக்கு ஏற்ப தடை உத்தரவு வாங்கிவிடுகிறார்கள். இது போராட்டத்தை உடைப்பதற்கான ஒரு வழி. இந்த நிலைமையைச் சமாளிக்க சட்டத் திருத்தம் கொண்டுவர அமைச்சரவர்கள் முன் முயற்சி எடுக்க வேண்டும். அப்படியானால் சகல தொழிலாளர்களும் இதை நல்லமுறையிலே வரவேற்பார்கள். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேமாதிரியாக, பாதுகாப்பு வேலைகளில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு இன்றைக்கு காண்ட்ராக்ட் முறை இருக்கிறது. பாதுகாப்புக்கு நிற்கக்கூடிய 'வாச்மென்' காண்ட்ராக்ட் முறையில் அமர்த்தப்படுகிறார். நோட்டி வேலை செய்வதும் காண்ட்ராக்ட் முறையில் இந்த காண்ட்ராக்ட் பற்றி பின்னால் தெளிவாகச் சொல்கிறேன். இன்றைக்கு இராணுவத்திலும் போலீஸ் துறையிலும் வேலை செய்து ரிட்டயர் ஆகியிருக்கிற உத்தியோகஸ்தர்களைக் கொண்டு 'வாச் அண்ட் வார்டு' வேலைகளை காண்ட்ராக்ட் முறையில் செய்யச் சொல்கிறார்கள். மூட்டை தூக்குகிறவர்கள் மாதிரி 'வாச் அண்ட் வார்டு' வேலை செய்கிறவர்களும் காண்ட்ராக்ட் முறையில் வேலை செய்தால் அவர்களுடைய நிலைமை எப்படி இருக்கும்? இதைச் சிந்திக்க வேண்டாமா? இந்த முறையை நிச்சயமாக அனுமதிக்கக் கூடாது. இதற்குத் தகுந்த பாதுகாப்பு தேடியாக வேண்டும்.

அடுத்தபடியாக, அப்ரன்டீஸ் ஆக்டின் கீழ் நடக்கக்கூடிய விஷயம். இதிலே இரண்டுவிதமான நிலைமைகள் இருக்கின்றன. ஆக்ட் அப்ரன்டிஸ் என்பது ஒன்று. கம்பெனி அப்ரன்டீஸ் என்பது மற்றொன்று. கம்பெனி அப்ரன்டீஸ் என்பதைப் பொறுத்தவரையில் தொடர்ந்து அவர்களை வேலையிலே வைக்க முடிகிறது. ஆனால் ஆக்ட் அப்ரன்டீஸைப் பொறுத்தவரையில் பயிற்சி முடிந்தவுடன் அவர்கள் வெளியே செல்ல வேண்டிய நிலைமைதான் இருக்கின்றது. இந்த அப்ரன்டிஸ்களுக்கு 130 ரூபாய் கொடுக்கப்படுகின்றது. அவர்கள் ஐ.டி.ஐ. போன்ற என்ன படித்திருந்தாலும் இவ்வளவு தான் கொடுக்கப்படுகிறது. இந்தத்தொகை கொடுக்கவேண்டும் என்று நிர்ணயித்தது பல வருஷங்களுக்கு முன்பு. ஆனால்

இன்றைக்கு இருக்கின்ற விலைவாசி ஏற்றத்தில் இந்தப் பணத்தை கொண்டு அவர்களால் என்ன செய்ய முடியும்? ஆகவே இதையெல்லாம் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே இந்திய சர்க்கார் அப்ரன்டீஸ் ஆக்ட் என்பதிலே குறைந்தபட்ச வசதிகளைச் செய்கின்ற வகையிலே திருத்தங்களைக் கொண்டு வந்து அப்ரன்டீஸ் ஊழியர்களுக்கு அதிகப்படியான வருமானம் கிடைப்பதற்காக நடவடிக்கைகளை எடுக்கும்பொருட்டு நம்முடைய அரசு மத்திய அரசிடம் வலியுறுத்த வேண்டும். அப்ரன்டீஸ்களுக்கு வேலை கிடைப்பதற்கும் ஏற்பாடு செய்யவேண்டும் என்பது பற்றியும் மத்திய அரசிடம் நாம் வலியுறுத்தவேண்டும்.

அடுத்து, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 5 இலட்சம் கைத்தறிகள் இருக்கின்றன. அதிலே 13 லட்சத்து 33 ஆயிரம் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். 25 அல்லது 30 இலட்சம் மக்கள் இந்தத் தொழிலை நம்பித்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்குப் பாதுகாப்பான சட்டம் வேண்டும் என்று முயற்சி செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தலைமையில் ஒரு கமிட்டி ஏற்படுத்தி அந்தப் பொறுக்குக் கமிட்டி எல்லாப் பணிகளையும் முடித்து விட்டதற்குப் பிறகும் அந்தச் சட்டத்தை இன்னும் நாம் நிறைவேற்றவில்லை. அதை நிறைவேற்றுவோம் என்று அசெம்பிளியிலேயே அமைச்சர் சொல்லிவிட்டார்கள். ஆகவே அதனை இந்தக் கூட்டத்தொடரிலே அந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும். இதை நான் வற்புறுத்துகிறேன். அரசாங்கத்தை எப்படியாவது விமர்சனம் செய்யவேண்டும் என்பதற்காக நான் இதைச் சொல்லவில்லை. கைத்தறி நெசவாளர்களின் துன்பம் கொஞ்ச நஞ்சமல்ல, இந்தத் தொழிலைப் பொறுத்த மட்டிலே பாதிக்கும் மேற்பட்டவர்கள் தனியார் துறையிலே இருப்பவர்கள். அவர்களுக்கு எந்தப் பாதுகாப்பும் கிடையாது. ஆகவே இந்த நடப்புக் கூட்டத் தொடரிலேயே கைத்தறித் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பான அந்தச் சட்டத்தைக் கொண்டு வரவேண்டும். மாஸ்டர் வீவர்களும், பெரிய முதலாளிகளும் தலையிட்டு இந்தச் சட்டம் கொண்டுவருவதைத் தடுப்பதற்குரிய முறையிலே செயல்பட்டாலும் அரசு அதையெல்லாம் எதிர்த்து நின்று இந்தச் சட்டத்தை நிறைவேற்றவேண்டும். இதைப் பொறுத்தவரையில் தொழிலாளர்கள் மற்றும் தொழிற் சங்கங்களின் ஆதரவு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு உண்டு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து பவர் லூம்களுக்கு லைசன்ஸ் ஒருபகுதிக்குக் கொடுக்கப் பட்டிருக்கின்றது. 28,000 பவர் லூம்களுக்கு அனுமதி கொடுக்கப் பட்டிருக்கின்றது. ஆனால் 55,000

பவர் லூம்கள் எந்தவிதமான சட்டத்திற்குள்ளும் வராமல் அவை கன்னா பின்னா மன்னார் கோயில் என்ற நிலையிலே இருக்கின்றன. அந்தப் பவர்லூம் சம்பந்தப்பட்ட வகையிலே ஒரு கமிட்டி ஏற்படுத்தி அது மினிமம் வேஜஸ் பற்றி முடிவு செய்தது. ஆனால் மிகக் கெட்டிக்காரர்களான முதலாளிகள் சட்டத்திலே இருக்கின்ற லெக்குணாவைக் கண்டு பிடித்துக்கொண்டு அதன் மூலம் அந்தக் கமிட்டியினுடைய முடிவினைச் செயல்படுத்தவிடாமல் செய்து விட்டார்கள். ஆகவே உடனடியாக அரசாங்கம் நடவடிக்கை எடுத்து அந்தக் குறைந்தபட்ச சம்பளத்தை நிர்ணயிக்க, அதாவது மனித வாழ்க்கைக்குரிய சாதாரண சம்பளத்தையாவது கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். மற்ற உடலுழைப்புத் தொழிலாளிக்கு எப்படிக் காரியங்களைச் செய்கிறோமோ அது போன்று இந்த பவர்லூம் தொழிலாளர்களுக்கும் பாதுகாப்பான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கவேண்டும். அவர்களுக்கு குறைந்த பட்ச சம்பளத்தை நிர்ணயிக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் தொழி லாளர்கள் எந்தவிதமான சட்ட உரிமையும் இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு பி.எப். கிடையாது. ஈ.எஸ்.ஐ., கிராசுட்டி போன்ற வசதிகள் கிடையாது. அவர்களால் எந்தவிதமான சட்டமும் பேச முடியாது. தோட்டத்திலே வேலை செய்கின்ற, மாடு மேய்த்துக் கொண்டிருக்கின்ற, மண் வெட்டிக் கொண்டிருக்கின்ற அரிசனத் தொழிலாளர்களைப் பணியிலே அமர்த்திக்கொண்டு வேலை தெரிந்த ஒருசில தொழிலாளர்களையும் வைத்துக்கொண்டு தறிகளை ஓட்டி விடுகிறார்கள். ஆகையால் அவர்களுக்கு மாடுமேய்க்கின்ற கூலியைத்தான் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். இது மிகப்பயங்கரமான நிலைமை. இதை உடனடியாக மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பீடித் தொழிலாளர்களின் நிலைமை அமைச்சர் அவர்களுக்கு மிகவும் தெரிந்த ஒன்றுதான். இது ரொம்ப நாட்களாக நடந்து கொண்டிருக்கின்ற ஒரு தொழிலாகும். ஆயிரம் பீடிக்கு 6 ரூபாய் கூலியாக நிர்ணயிக்கப்பட்டும் அதைக்கூட கொடுப்பது இல்லை பல இடங்களில். மேலும் இந்தத் தொழிலுக்கு தேவையான மூலப்பொருட்கள் கிடைப்பதில்லை. ஒரு நாளுக்கு 2 ரூபாய், 3 ரூபாய், 4 ரூபாய் என்ற அளவிலேதான் அந்தத் தொழி லாளர்களுக்குக் கூலி கிடைக்கின்றது. அவர்களுடைய வேலை நிலைமை அந்தமாதிரி போய்க்கொண்டிருக்கின்றது. அவர் களுக்கு குறைந்த பட்ச கூலி கொடுக்க வேண்டும் என்று, ஃபால் பேக் வேஜஸ் கொடுக்க வேண்டும்

என்று மாநாடு கூட்டி முடிவு எடுக்கப்பட்டது. ஆனால் அதன்படி கொடுக்கப்படவில்லை. அந்தத் தொழிலாளர்களு டைய நிலைமை ரொம்பவும் மோசமாக இருக்கின்றது. இதிலே வீட்டிலே இருக்கின்ற பெண்கள் உட்பட பல இலட்சகணக்கான தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். நீண்டகாலமாக இருக்கின்ற இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு பிராவிடன்ட் ஃபண்ட் போன்றவை முறையாக அமல்நடத்தப்படாமல் அதற்கும் தடை ஏற்பட்டுள்ளது. அதையும் அமல்நடத்த வேண்டும் என்றும் அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

[நண்பகல் 12.00]

அதேபோல அவர்களுக்கு க்ஷேம நலத்திட்டம் செயல் படுத்தப்பட வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டு நடவடிக் கை எடுக்கப்படுகிறது. அதற்கென்று ஒரு கமிட்டி ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. ஆனால், சி.ஐ.டி.யூ. ஸ்தாபனத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் அந்தக் கமிட்டியில் இடம் பெறவில்லை. சக்தி வாய்ந்த அளவில் பீடித் தொழிலாளர்களைத் திரட்டிவைத்துக் கொண்டிருக்கிற ஒரு ஸ்தாபனம் சி. ஐ. டி. யூ. அதற்கு பிரதிநிதித்துவம் அந்தக் கமிட்டியில் இல்லை, பிரதிநிதிகளின் பெயரைக்கேட்டு கமிஷனர் கடிதம் எழுதியிருந்தார். பெயர் குறிப்பிட்டு பதில் எழுதி அனுப்பினோம். ஆனால் இன்று வரையில் அந்தக் கமிட்டியில் சி.ஐ.டி.யூ. வின் பிரதிநிதிகள் வைக்கப்படவில்லை. அரசாங்கம் இதை உடனடியாக கவனி த்து, தொழில் சங்கத்தின் உண்மையான பிரதிநிதிகள் கமிட்டியில் இடம் பெற வழிவகை செய்ய வேண்டும். அதிலே கட்சி வித்தியாசமோ, மற்ற வித்தியாசமோ பார்க்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே மாதிரி தோல் பதனிடும் தொழிலை எடுத்துக் கொண்டால், பாதி பதனிட்ட தோல்களை ஏற்றுமதி செய்யக் கூடாது என்று மத்தியசர்க்கார் அண்மையில் ஒரு திட்டத்தினை அமுல்படுத்தியிருக்கிறார்கள். முழு அளவில் தோல் பதனிட வேண்டுமென்றால், அதற்கான இயந்திர சாதனங் களை சிறு சிறு தொழிற்சாலைகளால் வாங்க முடியாது. அதனால் வடஆற்காடு மாவட்டத்தில் பாதி தோல் பதனிடும் தொழிற் சாலைகளில் வேலை செய்து வந்துள்ள 5 ஆயிரத் திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் வேலை இழப்பார்கள். அவர்கள் நிலை என்னவாகும் என்று ஒரு கேள்வியைச் சட்டமன்றத்தில் வைத்தபோது, அதற்குப் பதில் சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அத்தனை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

பேர்களுக்கும் வேலை போகவில்லை என்று சொன்னார்கள். நான் நினைக்கிறேன். அமைச்சருக்குத் தேவையான சரியான பதில்களைச் சேகரித்து தரவில்லை என்று. நான் அதனால் அரை மணிநேர விவாதத்திற்கும் அனுமதி கேட்டேன். அனுமதி மறுக்கப்பட்டது.

அன்றே அனுமதி கொடுக்கப்பட்டிருந்தால், இந்தப் பிரச்னையைப் பற்றி ஓரளவு விவாதிக்கப்பட்டு, ஒரு முடிவு ஏற்பட்டிருக்கும். ஆகவே தோல் பதனிடும் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில் திடீர் என்று ஒரு முடிவுக்கு வந்து நிறுத்திவிடாமல், ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலையைப் போக்குகின்ற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தாமல், பச்சைத் தோல் அல்லது பாதி பதனிட்ட தோலை ஏற்றுமதி செய்வதைக் குறைப்பதற்கு படிப்படியாக ஏற்பாடு செய்து, அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை போகாமல், பாதிக்காத முறையில், அல்லது வேறு ஏதாவது மாற்று ஏற்பாடு செய்கின்ற வகையில், அதைச் செய்வதற்கு, இந்த மாநில அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைபோல அரசாங்கத்தின் நிர்வாகத்தில் பல தொழில்கள் இருக்கின்றன. அவைப் பற்றி நேரிடையாக அமைச்சர் பதில் சொல்ல மாட்டார் என்று தெரியும். வேறு இலாகா அமைச்சர் அதற்குப் பொறுப்பு. சிப்காட் நிறுவனத்தின் பெயரால் பல சிறு தொழில்கள் நடந்து வருகின்றன. ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்டிரீஸ் என்ற பெயரால் பல தொழில்கள் நடைபெற்று வருகின்றன. அந்தத் தொழில் நிறுவனங்களில் வேலை செய்யும் தற்காலிகத் தொழிலாளர்களுக்கு, 2,3 ரூபாய் தினக் கூலியாகக் கொடுக்கப்படுகிறது. அரசாங்கத்தின் நிறுவனங்களிலேயே இந்தக் கதி என்றால், தனியார்கள் துறையில் எவ்வளவு சுரண்டல்கள் இருக்கும்? அதைத் தடுக்க, அவர்களைத் தட்டிக்கேட்க அரசாங்கத்திற்கும் எப்படி தைரியம் ஏற்படும்? ஆகவே, அரசு துறை நிறுவனங்களில் இந்த நிலைகள் இருக்குமானால் அதைக் கவனித்து நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல கட்டிடத் தொழிலாளர்களை எடுத்துக் கொண்டால், அவர்களுக்குக் குறைந்த பட்சக் கூலியாக நிர்ணயிக்கப்பட்டிருக்கும் கூலி மிகக் குறைவாக இருக்கிறது, அது மாற்றப்பட்டாக வேண்டும். ஏனென்றால் கான்டிராக்ட் முறைகள் தான் பெரும்பாலும் இருக்கின்றன. அரசாங்கத்தை ஒரு பெரிய முதலாளியாக நினைத்து எடுத்துக் கொண்டால், அதன்கீழ் மிகப் பெரிய அளவில் காண்டிராக்ட்கள் வழங்கப்

படுவதைப் பார்க்க முடியும். எலக்ட்டிரிசிட்டி டிபார்மெண்டில் 18,000 பேர்கள் காண்டிராக்ட் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். அதுபோல கட்டுமானப் பணி, பொதுப் பணித் துறை போன்றவைகளில் எல்லாம் நிறைய வேலைகள் கான்ட்ராக்டில் விடப்படுகின்றன. ஏன் அவ்வளவு தூரம் செல்வானேன். நமது சட்டமன்றத்திலேயே தினக்கூலி வாங்க கூடிய தொழிலாளர்கள் நிறையப் பேர்கள் இருக்கிறார்கள்.

சட்டமன்றம் கூடும் நாட்களில் அவர்களுக்கு இங்கே வேலை உண்டு. சட்டமன்றம் இல்லாத நாட்களில் அவர்களுக்கு வேலை கிடையாது. இதைப்பற்றி பலமுறை நாங்கள் தொழிலாளர் நலத்துறை அமைச்சரிடத்தில் இல்லாவிட்டாலும், நிதியமைச்சரிடத்தில் சொல்லி இருக்கிறோம். அவர்களின் நிலையைக் கொஞ்சம் கவனிக்க வேண்டும். கட்டிடத் தொழிலாளர்களின் கூலியைத் திருத்தி அமைத்துக்கொடுக்க வேண்டும். இன்றையதினம் ஏறிக்கொண்டே வரும் மார்க்கெட் நிலவரங்களுக்கு, அவர்களுடைய கூலி பொதுமானதாக இல்லை. ஆகவே அதை உயர்த்திக் கொடுக்க முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, அவர்களுக்கு பிராவிடன்ட் பண்ட், ஈ. எஸ். ஐ. போன்றவைகளையும் கொடுக்க முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சங்கம் வைத்துக் கொள்ளும் உரிமை இருக்கிறது. ஆகவே, அந்தச் சங்கங்களின் கோரிக்கைகளை அரசு ஆழ்ந்து கவனிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அதே மாதிரி தோட்டத் தொழிலாளர்களை எடுத்துக் கொண்டால் இன்றைக்கு பல தோட்டங்களிலேயும் 100 ஏக்கர் இருந்தால் அதைப் பிரித்து குடும்பத்திலேயே உள்ள அண்ணன், அக்காள், தம்பி, தங்கை பெயர்களில் எழுதி வைத்துவிடுகிறார்கள். இங்கே பேக்டரிகளில் சுவர் வைத்து எல்லையை வகுத்திருப்பது போல், அந்தத் தோட்டங்களிலேயும் அப்படி சிறு சிறு பகுதிகளாகப் பிரித்து எல்லை கட்டிவிடுகிறார்கள். அதனால் மற்றத் தொழிலாளர்கள் பெறுகின்ற மினிமம் வேஜ்கூட இந்த தோட்டத் தொழிலாளர்கள் பெற முடியாமல் இருக்கின்ற நிலைமை இருக்கிறது.

இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் வன்மையாகக் கண்டிக்கத்தக்கவை. தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்து சட்டத்திலுள்ள பலகீனங்களைப் பயன்படுத்தி வருகிறார்கள் முதலாளிகள். பல சட்டங்கள் இரண்டு பக்கங்களும் கூர்மை உள்ள கத்தியாகும். அதை நல்ல வகையில் பயன்படுத்தினால், முதலாளிகளின் சுரண்டலை எதிர்த்துத் தாக்கலாம், தொழிலாளர்களின் கழுத்தை அறுக்கவும் அதைப் பயன்படுத்தலாம்.

இரண்டு பக்கமும் கூர்மை உள்ள சட்டத்தை முதலாளிகள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். வேலை நிறுத்தம் ஏற்பட்டபோது கோவைக்கு அமைச்சர் அவர்கள் வந்திருந்து எல்லோரும் கூடிப்பேசி தோட்டத் தொழிலாளிக்கு ஒன்பது ரூபாய் ஒன்பது காசு கொடுக்கவேண்டும் என்று முடிவுக்கு வரப்பட்டது. ஆனால், இப்பொழுது ஒன்பது ரூபாய் ஒன்பது காசு கொடுக்காமல் சிறு தோட்டங்களில் ஏழு ரூபாய், ஏழரை ரூபாய் என்று கொடுக்கிறார்கள். இப்படிப் பல தோட்டத் தொழிலாளர்கள் வாங்கி வருகிறார்கள். சின்கோனா தோட்டத் தொழிலாளர்களை எடுத்துக் கொண்டால் இந்த தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்குக் கிடைக்கக்கூடிய கூலி கூட இவர்களுக்குக்கிடைப்பதில்லை. அந்த குறைந்தபட்சக் கூலியாவது இந்த சின்கோனா தோட்டத் தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டாமா? தொழிலாளர் நல இலாகாவின் கண்பார்வை இந்தத் தொழிலாளர்கள் மேல் செலுத்தப்பட வேண்டும்.

முந்திரித் தொழிலை எடுத்துக்கொண்டால், இந்த முந்திரித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச சம்பளமும் இல்லை. வேறு பாதுகாப்பும் இல்லை. எப்போதும் பூட்டிக் கிடக்கிறது. தொழிற்சாலையும் இல்லை. வேலையும் இல்லை. காசும் இல்லை என்ற நிலைதான் இந்தத் தொழிலாளர்களைப் பொறுத்து இருக்கிறது. ஆகவே அவர்களுக்குப் போதிய பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

கயிறு உற்பத்தி செய்யும் தொழிலில் ஏராளமான தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். தொழில் நன்றாக வளருகிறது. கோடிக்கணக்கான பணம் செலவு செய்யப்படுகிறது. அந்தத் தொழிலாளர்களுக்குத் தக்க பாதுகாப்பு கிடைப்பதற்கு வேண்டிய வழிவகை செய்யவேண்டும்.

உப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்குண்டான ஊதியத்தை உயர்த்த வேண்டும். அவர்களுக்குப் பாதுகாப்பு தேவை. உப்புத் தண்ணீரில் இறங்குவதால் அவர்கள் கை, கால், கண்ணுக்கு வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க வேண்டும்.

ஹோட்டல் தொழிலாளிகளை எடுத்துக்கொண்டால் கொஞ்ச காலமாக ஹோட்டல் தொழிலாளர்களின் சப்தம் அதிகமாக காதில் விழுவதில்லை. காரணம் தெரியவில்லை. பல இடங்களிலுள்ள ஹோட்டல்கள் அம்பிகா விலாஸ், ராமகிருஷ்ண விலாஸ் என்று விலாஸ்கள் மாறிக்கொண்டே இருக்கின்றன. ஹோட்டல் அதுவேதான், போர்டுகளை மாற்றிவிடுவார்கள் பல இடங்களில், எனவே ஹோட்டல் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கத்தக்க வகையில் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்,

தமிழ்நாடு மாக்னஸைட்டை எடுத்துக்கொண்டால், இதை அரசாங்கம் கவனிக்க வேண்டியது மிக மிக அவசியம். தொழில் துறை அதிகாரிகளும், தொழிலாளர் நலத் துறை அதிகாரிகளும் சேர்ந்து, நாங்கள் எல்லோரும் உட்கார்ந்து பேசிய விஷயமிது. 2,500-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யவில்லை. நல்ல உற்பத்தி ஏற்பட்டு, சர்க்கார் கம்பெனியான பிறகு லாபம் கிடைக்கிறது. தனியார் கம்பெனியை எடுப்பதை வரவேற்கிறோம். அப்படி எடுத்துக்கொள்ளும்போது கம்பெனி வேண்டும், இயந்திரங்கள் வேண்டும், சுரங்கம் வேண்டும், ஆனால் தொழிலாளர்கள் சர்வீஸ் வேண்டாம், இது ஒரு வியாதி. இந்த வியாதி சர்க்காரைப் பிடிக்கக்கூடாது. அந்தத் தொழிலாளர்களின் சர்வீஸ் தொடர்ச்சியான சர்வீஸாக இருக்கவேண்டும். இதை அரசாங்கம் ஒப்புக்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் தனியார் துறை முதலாளிகள் என்ன செய்வார்கள் என்றால் பெயரை மாற்றிவிட்டு பழைய சர்வீஸ் இல்லை என்று சொல்வார்கள்.

நகரசுத்தித் தொழிலாளர்களை எடுத்துக்கொண்டால், இரண்டு அமைச்சர்களையும் வைத்துப் பேசினோம். பேசி சில முடிவுகளைக் கண்டோம். பஞ்சாயத்துக்களில் இருக்கிற கிராமங்களில் வேலை செய்யக் கூடிய துப்புரவுத் தொழிலாளர்களுக்கு, தோட்டிகளுக்கு, தெரு கூட்டும் தொழிலாளர்களுக்கு மினிமம் வேஜ் கிடைப்பதில்லை. ரூ. 60 கொடுத்து வேலை வாங்குகிறார்கள். கன்னியாகுமரியில் உள்ள குழித்துறை நகராட்சியில் —அங்கே ஆட்களின் பெயர்களை எழுதிக் கொடுத்திருக்கிறார்கள்—ஆண், பெண் தொழிலாளர்களுக்கு ரூ. 60 கொடுத்து வருடக்கணக்கில் வேலை வாங்குவதாகச் சொன்னார்கள். 'It is nothing but inhumane' அரசாங்கத்தின் கீழ் உள்ள பஞ்சாயத்துக்களில், நகராட்சிகளில் இப்படி நடப்பதைப் பார்த்து முதலாளிகள் சிரிக்கிறார்கள். உங்கள் சர்க்காரின் எப்படி நடக்கிறது என்று பார்த்தீர்களா, எங்களிடம் வந்து தொழிலாளர்களுக்கு கூடுதல் காசு கொடுங்கள் என்று கேட்கிறீர்களே என்று சொல்லி தொழிலாளர் சங்கத்தில் இருப்பவர்களை மதிக்காமல் இருக்க இது இடம் கொடுக்கிறது. எனவே நகர சுத்தித் தொழிலாளர்கசளுக்கு நியாயமான சம்பள உயர்வு கொடுக்கவேண்டும்.

இந்தியா மீட்டர்ஸை சர்க்கார் துயர் துடைப்புத் திட்டத்தின் கீழ் எடுத்து நடத்தியது. 1981 செப்டம்பரில் காலம் முடியப் போகிறது. அதை மறுபடியும் அவர்களுக்கு விட்டுக்கொடுப்பார்களா என்ற சந்தேகம் வந்திருக்கிறது. கோவையில் டெக்ஸ்ட்டூல்ஸ் கம்பெனியை எடுத்து நடத்தி அந்தக் கம்பெனியை வளர்த்து

அது லாபம் சம்பாதித்துக் கொடுத்த பிறகு அதை பின்னர் அந்த கம்பெனி முதலாளிக்கே விட்டுவிட்டது அரசாங்கம். இது ரொம்ப அநியாயம். கம்பெனியை நடத்த முடியாமல் மோசமான நிலையில் தோற்றுப்போய் நலிந்துபோனால் சர்க்கார் அதை எடுக்கவேண்டியது சில நிபந்தனைகளின்கீழ்.

[பிற்பகல் 12–10]

தொழிலாளர்களிடமிருந்து வேலை வாங்கி, நன்றாக வளர்ந்ததற்குப் பிறகு, சர்க்கார் அதை பின்னர் முதலாளிகளுக்குக் கொடுப்பது என்ற கொள்கையைக் கைவிடவேண்டும்; அதைச் செயலாக்கக் கூடாது. ஆகவே, இந்தியா மீட்டர்சுக்கு அதைத் திருப்பிக் கொடுக்கக்கூடாது.

அடுத்து, இந்த மானியக் கோரிக்கைக்கு வரும்போது, ஐ.டி. ஐ-யிலே பயிற்சி கொடுத்து, தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்துவதற்காக 31 ஐ. டி. ஐ.-க்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. 1961 ஆம் ஆண்டிலே 10 இருந்தது; 1965 ஆம் ஆண்டு 21. இப்போது மொத்தம் 31 இருக்கிறது. இந்த அரசு வந்ததற்குப் பிறகு 2 ஸ்தாபனங்களை உண்டாக்கி இருக்கிறது. இதற்கு முன்னால் இருந்த காலத்திலும், எந்த அரசும் 1965-க்குப் பிறகு யாரும் ஐ.டி.ஐ.க்களை உண்டாக்கவில்லை. அப்படிப்பட்ட ஐ.டி.ஐ. ஸ்தாபனங்களிலே பயிற்சியைக் கொடுக்கக்கூடிய ஆசிரியர்கள் மிகப்படுமோசமான நிலைமையிலே இருக்கிறார்கள் என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும் பல மாவட்டங்களில் 2, 3 ஐ. டி. ஐ. க்கள் இருக்கின்றன. ஆனால், இந்த தமிழ் மாநிலத்திலே, சென்னைக்கு அடுத்தாற்போல், மாபெரும் தொழிலாளர் கேந்திரமாக இருக்கும் கோவையிலே ஒரு ஐ.டி.ஐ. தான் இருக்கிறது. அங்கே மேலும் 2 ஐ.டி.ஐ-க்கள் ஏற்படுத்தலாம். அப்படி அங்கே ஏற்படுத்தினால், பலவிதமான பயிற்சிகளைக் கொடுக்க முடியும். வளர்ந்து வரும் என்ஜினியரிங் தொழிலுக்கு, ஏராளமான இளைஞர்களுக்கு அதன் மூலம் பயிற்சியைக் கொடுக்கலாம். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். பல மாவட்டங்களிலே 2, 3 ஐ.டி.ஐ-க்கள் இருக்கின்றன. அதனால் கோவை மாவட்டத்திலே மேலும் 2 ஐ.டி. ஐ-க்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஐ.டி.ஐ-க்களில் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு உதவித் தொகை ரூ. 25, 45 கொடுக்கப்படுகிறது. அது அவர்களுடைய வெற்றிலை பாக்கு, பீடி செலவிற்குக்கூட போதாது; இது எந்தக் காலத்திலோ பாட்டன், முப்பாட்டன் காலத்திலே நிர்ணயிக்கப்பட்ட தொகை. ஆகவே, தயவுசெய்து இந்தத் தொகையை மாற்றியமைக்க வேண்டும். காரணம், இன்றைக்கு

அரிசி கிலோ ரூ. $4\frac{1}{4}$, 5-க்கு விற்கிறது. எனவே, இதை உடனடியாக மாற்றியமைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். சென்னை மாநகரத்திலே அரசாங்கமே பெண்களுக்கான ஒரு ஐ.டி-ஐ.யை நடத்துகிறது. அதிலே தனியார் ஒருவரை தலைவராக வைத்துக்கொண்டு, மற்றக் காரியங்களுக்கு எல்லாம் அரசாங்கம் செலவழிப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. அந்த நிலை சரியில்லை. அரசாங்கமே அதற்கு மானியம் கொடுக்கும்போது, அரசாங்கம் சார்பிலேயே அதற்கு ஒரு நல்ல தலைவரை நியமிக்கவேண்டும். ஆனால், இன்று அந்த நிலைமை இல்லை. அதேபோல், அங்கே வேலை செய்யக்கூடிய ஊழியர்களுக்கு எந்தவிதமான சம்பள உயர்வும் இல்லை. கடந்த 10 ஆண்டுகளாக எந்தவிதமான சம்பள உயர்வும் இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, விவசாயத் தொழிலாளர்கள் விஷயம். 1948-ம் வருட குறைந்த பட்ச சம்பள சட்டத்தின்கீழ் அவர்களுக்கு சம்பளம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதை முழுவதும் அமுல்படுத்தவில்லை. அதை அமுலாக்குவதற்கு எந்த இயந்திரம் இருக்கிறது? 1907 பிர்க்கா ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் தான் இருக்கின்றார்கள். அவர்கள்தான் அதற்குப் பொறுப்பாளி என்றால், அது எப்படி நடக்கும்? நமது தொழிலாளர் நல இலாகா ஏற்கெனவே வேலை பளுவால் திணறுகிறது. அதற்கு ஏராளமான பிரச்னைகள் வந்துவிடுகின்றன. அங்கிருக்கிற தாசில்தார், ரெவின்யூ இன்ஸ்பெக்டர் ஆகியோர்களால் இதைச் சமாளிப்பது என்பது சாத்தியமல்ல. குறைந்த பட்ச சம்பளச் சட்டத்திலே நிர்ணயிக்கப்பட்டிருக்கின்ற சம்பளத்தைக் கொடுப்பதற்கு, இந்தத் தொழிலே பல இலட்சம் விவசாயத் தொழிலாளர்கள் இருப்பதால், அதை கணக்கில் எடுத்துக்கொண்டு, இதைத் தொழிலாளர் நல இலாகாவின் நேரடிப் பொறுப்பிலே கொண்டு வரவேண்டும். அப்போதுதான் நியாயம் பிறக்கும். இல்லையென்றால் கிடைக்காது. அந்த அப்பீல்மேல் வாதாடுவதற்கு, கலெக்டர், ஆர்.டி.ஓ., தாசில்தார் ஆகியோர் அப்பல்லேட் அதாரிடிகளாக இருக்கிறார்கள். அவர்களால், எதையும் செய்ய முடியவில்லை. ஆகவே, தொழிலாளர் நல இலாகாவின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரவேண்டும். இதனால், 1000, 2000 பேர்கள், ஊழியர்கள், உத்தியோகஸ்தர்கள் அந்த இலாகாவிலே அமர்த்த வேண்டியிருக்கும். சில உதவிக் கமிஷனர்களும் நியமிக்க வேண்டியிருக்கும். அமைச்சர் அவர்களுக்கு உதவி அமைச்சர் தேவையானாலும், வைத்துக்கொள்ளட்டும். அதிலே ஆட்சேபணை இல்லை. இந்த விஷயம் இப்படி நடக்கவேண்டும்.

அடுத்து, பி.எப். ஆக்டிலே, 1980-ஆம் வருஷத்திலே பில்டிங் ஓர்கர்ஸ், மற்றும் இதைப் போன்ற சாதாரணத் தொழிலாளர்கள்

கூலி நிர்ணயம் அமுல்படுத்த முடியாமல் இருந்து கொண்டிருக்கிறது. அதை அமுலாக்க வேண்டுமென்று மத்திய சர்க்கார் சொன்னால், அமுல்படுத்த முடியாத நிலை இங்கே இருக்கிறது. சட்டத்தை மீறுகிறார்கள். அதைக் கண்காணிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். பாரம் சுமக்கின்ற தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச கூலி இருக்கிறது. நிர்ணயம் செய்திருக்கிறார்கள். அதை அமுலாக்குவதில், கண்காணிப்பு போதாது. கண்காணிப்பதற்கு தொழிற் சங்கங்கள் இருக்கின்றன. இருந்தாலும் அதை அமுல்படுத்த முடியவில்லை. அதை அமுல் செய்தால் தான் அந்தத் தொழிலாளர்களுக்குப் பலன் கிடைக்கும்.

அதே மாதிரி, ஆஸ்பத்திரிகள், ஈ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரிகளின் நிலைமை படுமோசமானது. அதைப்பற்றி இந்த மன்றத்திலே பல்வேறு விஷயங்கள் விவாதத்திற்கு வந்திருக்கின்றன. இன்றைக்கு ஈ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரி போன்ற பெரிய ஆஸ்பத்திரிகள் 4 இருக்கின்றன. 1583 படுக்கைகள் இருக்கின்றன. இதிலே இன்ஷூர்ட் பர்சன்ஸ் $4\frac{1}{2}$ லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் குடும்பங்களைச் சேர்த்தால், மேலும் அதிகமாக எண்ணிக்கை வரும். இவ்வளவு பேர்களுக்கும் கிடைக்கக்கூடிய இந்த மருத்துவ வசதிகள் போதிய அளவில் கிடைக்காமல், படுமோசமான நிலைமையில், அதிருப்தியான நிலைமையில்தான் இருக்கிறது. ஆஸ்பத்திரி முன்னாலே உண்ணாவிரதம் நடத்தி ஊர்வலம் நடத்தினால் அது நன்றாக இருக்குமா? அது நடக்கிறது. தொழிலாளர்களுக்கு ஆத்திரம் வந்தால் வேறு வழியில்லை. நோய் உள்ளவனே போய் உண்ணாவிரதம் இருக்கவேண்டிய நிலை இருக்கிறது. இந்த நிலைமைகள் மாற வேண்டும். 4 ஆஸ்பத்திரிகள் அல்ல, இது போல இன்னும் 4 ஆஸ்பத்திரிகள் தமிழ் நாட்டிலே உடனடியாக கட்டித் தரவேண்டும். அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய அறிக்கைக்கு ரிப்போர்ட்டிற்கு, அவர்கள் சொல்லியிருக்கிற விஷயங்களுக்கு ஒரு கன்ஸ்ட்ரக்ட்டிவ் கிரிட்டிசிசம் எங்கள் பக்கத்திலே நாங்கள் வைத்திருக்கிறோம்.

அதை முறையாகக் கவனித்துப் பார்த்து நல்ல முறையிலே காரியங்கள் செய்ய வேண்டும். பழி வாங்குதல் நிறுத்தப்பட வேண்டும். கோர்ட்டுகளுக்கு அவர்களுடைய கேஸ்களை அனுப்புங்கள் என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு எம். அண்ணாதாசன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தொழிலாளர் நலம், வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மானியக் கோரிக்கைகள் மீதும் கலந்து கொள்கிற வாய்ப்பினை நல்கிய மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களுக்கும், தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் தொழிலாளர் நலன் குறித்த மானியக் கோரிக்கை மீதும், வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மானியக் கோரிக்கைகள் மீதும் எனக்கு முன்னாலே மரியாதைக்குரிய உறுப்பினர்கள் அவர்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்தார்கள். குறிப்பாக தொழிலாளர்களுடைய நீண்ட காலப் பிரச்சினைகளை வடிவம் தந்து வாதிட்டுக் கொண்டிருக்கிற கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் இன்றைய அரசு எதை எதை எப்படிச் செய்யவேண்டும் என்று கருத்துக்களைக் கூறினார்கள்.

ஆனால் இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் கடந்த காலத்தில் தொழிலாளர் வர்க்கம் எந்த சூழ்நிலையில் தள்ளப்பட்டார்கள் என்பதை உணர்ந்திருப்பார்கள். உணர்ந்ததன் அடிப்படை காரணத்தினால்தான் பேசியிருப்பார்கள். மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் இந்த தமிழ் நாட்டில் தொழிலாளர்கள் முதல், அரசு அலுவலகங்களிலே பணியாற்றுகிற அத்தனை அலுவலர்கள் வரைகோரிக்கைகளை முன் வைத்து வந்த வரலாற்றை நிச்சயமாக இந்த மாமன்றத்திலே இருக்கிற உறுப்பினர்கள் மறந்திருக்க முடியாது என்று கருதுகிறேன். மூன்று ஆண்டுக் கால ஆட்சியினுடைய நிலைமையையும், தொழிலாளர்களுக்கு சேரக்கூடிய நன்மையை உடனடியாக அரசு ஒத்துக்கொள்கிற நோக்கத்தின் அடிப்படையில்தான் இங்கே பேசிய உறுப்பினர்கள் அத்தனை பேரும், இன்னும் தனியார் நிறுவனங்களும், மிகப்பெரிய தொழிற்கூடங்களை நடத்துகிற முதலாளிகளும் தொழிலாளர் சட்டங்களை முழுமையாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றார்கள். அப்படி ஏற்றுக் கொள்ள மறுக்கிற நிறுவனங்களின் சொந்தக்காரர்களை அரசு ஏற்றுக் கொள்ள வைக்கவேண்டுமென்ற ஒரு நல்ல கருத்தினை இங்கே முன்வைத்திருக்கிறார்கள். இதை உள்ளபடியே நான் வரவேற்கிறேன். ஆனால் 30 ஆண்டுக் காலம், 3 ஆண்டுக் காலம் என்ற நிலையை தயவுசெய்து மறந்துவிடக்கூடாது. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு முன் மூன்று ஆண்டுக் காலத்தில் எத்தனை பெரிய போராட்டங்களை, தொழிலாளர்களுடைய கோரிக்கைகளை, உரிமைகளை, அவர்களுடைய அத்தியாவசியமான தேவைகளை முன் வைத்தார்கள் என்ற வரலாற்றை இங்கே இருக்கிற அத்தனை உறுப்பினர்களும் படித்திருக்கிறோம், பார்த்திருக்கிறோம். ஆனால் அவ்வளவு பெரிய போராட்டங்களை எல்லாம், அணுகி அவர்களுக்குத் தகுந்த ஆதரவு தந்து, அவர்களை அன்புள்ளத்தோடு, தாய் உள்ளத்தோடு கோரிக்கைகளைத் தீர்த்து வைக்கிற வகையில், எந்த அளவிற்கு சட்டத்திலே இடமிருக்கிறதோ அந்த அளவிற்கு முடிவு தந்த பெரிய பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைத்தான் சாரும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

1981 ஏப்ரல் 21] [திரு. எம். அண்ணாதாசன்]

[பிற்பகல் 12·20]

காரணம் இந்த 3 ஆண்டுக்காலத்தில் தொழிலாளர்களுடைய பிரச்சினையிலே எந்த அளவிற்கு இன்றைய அரசு அணுகி இருக்கிறது என்பதை இந்த அரசின் சார்பிலே நாங்கள் சொல்கிற நேரத்திலே வேண்டாத ஒரு வெறுப்பின் காரணத்தினால் மறுக்கிறார்களே ஒழிய உள்ளபடியே தொழிலாளர் நண்பர்கள் அலுவலகங்களிலே பணியாற்றுகின்ற அலுவலர்கள் அத்தனை பேர்களும் அதை மறுக்கமாட்டார்கள், மறக்கமாட்டார்கள் என்பதை நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் தொழிலாளர் நலத்துறைக்கு பொறுப் பேற்றிருக்கின்ற அமைச்சர் அவர்கள் நீண்டகாலமாக எத்தனையோ தொழிற்கூடங்களிலே பணியாளராக இருந்து தொழிற் சங்கங்களிலே பதவி பொறுப்புகளை வகித்து தொழி லாளர்களுடைய நியாயப்பூர்வமான கோரிக்கைகளை வாதித்துப் பெற்ற வரலாற்றுக்குச் சொந்தக்காரர் தான் இன்றைய தினம் புரட்சித் தலைவர் ஆட்சியிலே தொழிலாளர் நலத்துறை அமைச்சராகப் பொறுப்பு ஏற்றிருக்கிறார். ஆகவே அப்படிப் பொறுப்பேற்றிருக்கின்ற தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் இங்கே சொல்லப்பட்ட கருத்துக்களுக்கு ஒப்ப இது காறும் செயல்பட்டு தொழிலாளர்களுக்கு நல்ல பலன்களை ஈட்டித் தருவதற்காக நான் என் உளமார நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய திருவரும்பூர் தொகுதி தமிழ்நாட்டிலேயே மிகப் பெரிய முக்கியத்துவம் வாய்ந்த தொகுதி என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது. காரணம் அங்கே தான் பாய்லர் தொழிற்சாலை இருக்கிறது. மத்திய சர்க்காரின் நிறுவனமாக போர்ட் ஆப் டைரக்டர்ஸ் கீழே அது இயங்கிக்கொண்டு இருக்கிறது. அந்தத் தொழிற்சாலையில் கிட்டத்தட்ட 10,14 ஆயிரம் தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். செம்பட்டி என்ற பகுதியிலே தோல் பதனிடும் தொழிற்கூடங்கள் 22 இருக்கின்றன. கடந்த காலத்திலே அந்தத் தொழிற்கூடங்களின் சொந்தக்காரர்கள் அந்தத் தொழிலாளர்களை வைத்து நீண்ட வளர்ச்சியைப் பெற்றார்கள். அப்படி வளர்ச்சியைப் பெற்ற அவர்கள் உயர்ந்திருக்கிறார்களே ஒழிய அந்தத் தொழிலாளர்களை உயர்த்துவதற்கு அங்கே எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுக்காமல் இருக்கிறார்கள், அதற்காக அந்தத் தொழில் கூடங்களின் முதலாளிகள் எந்தவிதமான நடவடிக்கையும் உருவாக்காமல் அவர்கள் இன்றைக்கு நடுத் தெருவிலே நிற்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கிக்கொண்டிருக் கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY LIBRARY VAIMAYE VELLUM ALONE TRIUMPHS

அதோடு என்னுடைய பகுதியிலே சிறு தொழில் கூடங்கள் நிறைய இருக்கின்றன. அங்கே உள்ள பாய்லர் தொழிற் சாலைக்கு உப கூடங்களாக இருக்கின்ற தொழிற் கூடங்கள் 200 இருக்கின்றன. அந்த சிறிய தொழில் கூடம் ஒவ்வொன்றி லும் 100, 150, 90, 75 என்ற முறையிலே தொழிலாளர்கள் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். கடந்த 10, 12 ஆண்டுக் காலமாக அவர்கள் அங்கே பணியாற்றிக்கொண்டு வந்தாலும் அந்தத் தனியார்கள் அவர்களுக்கு கிடைக்கவேண்டிய ஊதி யத்தைக் கொடுக்காமலும் மேலும் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பல திட்டங்களை அவர்கள் பெற முடியாமலும் ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் அந்த ஏழை நடுத்தரத் தொழிலாளர்கள், வெயிலில் காய்ந்து ரத்தம் சிந்தக் கூடியஅந்தத் தொழிலாளர்கள் பயன்பெறக்கூடிய வகையிலேயும் நிரந்தரமாகப் பணியாற்றக்கூடிய முறையிலேயும் அவர்களுக்கு சர்க்காரின் திட்டங்களின்படி கிடைக்கவேண்டிய பல திட்டங் களின் பலன்களைக் கிடைக்கச் செய்வதற்கும் அந்த தொழில் நிறுவனங்களுடைய சொந்தக்காரர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு இன்னொன்றையும் பணிவோடு கேட்டுக்கொள் கிறேன். பெல் தொழிற்சாலையும் மற்றும் சிறு தொழிற் கூடங்களும் அங்கே அதிகமாக இருக்கின்ற காரணத் தினால் இட நெருக்கடி ஏராளமாக ஏற்பட்டிருக்கிறது. இடநெருக்கடியின் காரணமாகத் தொழிலாளர்கள் குடியிருக்க வீடில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஹவுசிங் போர்டு மூலமாக இப்பொழுது செம்பட்டி என்ற பகுதிக்கும் கீழ்புறம் துப்பாக்கித் தொழிற்சாலை அருகாமையிலே 600 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்து, அங்கே ஹவுசிங் யூனிட் உருவாக்குவதற்கு நமது தமிழக அரசு மூலமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதை சீக்கிரமாகத் துரிதப் படுத்தி, அந்த ஹவுசிங் யூனிட்டைச் சிறப்பாக அமைத்துத் தந்தால் அந்தப் பகுதியிலே இருக்கின்ற தொழிலாளர்கள், அலுவலர்கள் அத்தனை பேரும் நல்ல நிம்மதியான வாழ்க்கையை ஏற்படுத்திக்கொள்ள முடியும் என்பதை இந்த நேரத்தில் பணிவன் போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய திருவரும்பூர் தொகுதியில் நான் சற்றுமுன் குறிப்பிட்டேனே, அதாவது காவிரி பொறியியல் தொழிற்சாலை ஒன்று அங்கேயிருக்கிறது. அந்தக் காவிரி பொறியியல் தொழிற் சாலை சம்பந்தமாக 1980ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள்

1981 ஏப்ரல் 21] [திரு. எம். அண்ணாதாசன்]

3 ஆம் நாளன்று தொழில்துறை சட்டத்தின் 12 (3) பிரிவின்கீழ் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. அந்த உடன்பாட்டில் 245 தொழிலாளர்கள் ஆட்குறைப்பு செய்யப்பட சூழ்நிலை உருவாக்கப்பட்டது. அதை நமது அரசின் சார்பிலே நடுவர் தீர்ப்புக்கு விடுவோமா என்று கேட்டு அங்கே பணியாற்றுகின்ற அந்தத் தொழிலாளர்கள் அத்தனைபேர்களின் முழு மனதான எண்ணத்தோடு நடுவர் தீர்ப்புக்கு விடப்பட்டிருக்கிறது. நடுவர் தீர்ப்புக்கு விடப்பட்டு ஏழெட்டு மாதங்கள் கடந்து விட்டன. ஆனால் வெளியிலே நிறுத்தப்பட்டிருக்கின்ற அந்தத் தொழிலாளிகள் வீதியிலே ஒருவேளை சோற்றுக்குக்கூடக் கஷ்டப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையை உணர்ந்து நமது அரசு நடுவர் தீர்ப்பு உருவாக்கியிருக்கின்ற இந்த நேரத்தில் அதைத் துரிதப்படுத்தி, வெளியிலே நிற்கின்ற அந்தத் தொழிலாளர்களுக்கு நல்லதொரு தீர்ப்பு கிடைக்கும் வகையில் அதைத் துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்பு நல்கிய துணைத் தலைவரவர்களுக்கு நன்றி கூறி அமர்கின்றேன். நன்றி. வணக்கம்.

*திரு மு. அரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த கோரிக்கை எண்கள் 29, 33, மற்றும் 34 ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது என்னை பேச அழைத்தமைக்காகத் தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கூலி உயர்வு, அகவிலை உயர்வு காரணமாக நீலகிரி மாவட்டத்திலுள்ள மலைத் தோட்டத் தொழிலாளர்கள் அத்தனை பேரும் ஆறுமாத காலமாக போராடி வந்தார்கள்; பலமுறை கோஷங்களைப் போட்டார்கள்; தீர்மானம் போட்டார்கள். எதுவும் பலனளிக்காத காரணத்தால் கடந்த 15-12-80 ஆம் நாளன்று தங்களுடைய வேலை நிறுத்தத்தை 75,000 தோட்டத் தொழிலாளர்கள் அங்கே பிரம்மாண்டமான முறையில் நடத்திக் காண்பித்தார்கள். அந்தப் போராட்டத்திலே ஆரம்ப காலத்திலேயே அமைச்சரவர்களும், நிர்வாகமும் தலையிட்டிருந்தால் அதைத் தவிர்த்திருக்கலாம். பலமுறை போராடியும் அவர்களது கோரிக்கை நிறைவேறாத காரணத்தால் கடைசி ஆயுதமாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். பிறகு அமைச்சரவர்கள் சேவையிலே வந்து முதலாளிமார்களையும், தொழிற்சங்கத்தினரையும் அழைத்து சமரச ஏற்பாடு செய்து கூலி உயர்வுக்கு வழிவகை செய்தார்கள். கூலி உயர்வை மட்டும்தான் அன்றைக்கு பெற்றுக் கொடுக்க முடிந்ததே தவிர, தோட்டத் தொழிலாளர்களின் மற்ற பிரச்சினைகளான ஆட்குறைப்புப் பிரச்சினை, போனஸ் பிரச்சினை, பற்றி ஒவ்வொரு தோட்டத்திலும் தனித்தனியாகப் பேசி முடிவெடுக்கலாம் என்று அறிவிக்கப்பட்டது. தொழிலாளர்கள் மீண்டும் வேலைக்குச் சென்றார்கள். தொழில் அமைதி நிலவும் என்ற நிலைதான் இருந்தது. ஆனால் அதற்கு மாறாகப் பல வழி

களிலே தொழிலாளர்கள் பழிவாங்கப்படும் நிலைமை அங்கே ஏற்பட்டுக் கொண்டுவருகிறது. அவர்களது வேலைக்குப் பாதுகாப்பு இல்லை என்ற சூழ்நிலை தொடர்ந்து அங்கே நடந்து வருகிறது. சிறு சிறு குற்றங்களைச் சாட்டித் தோட்டத் தொழிலாளர்களை சஸ்பெண்ட் செய்து வருகிறார்கள்.

இதற்கு உதாரணமாக ஒன்றிரண்டைச் சொல்ல வேண்டுமென்றாலும் சொல்லலாம். கோத்தகிரி பகுதியிலே கூட்டடா எஸ்டேட் என்று உள்ளது. அந்த எஸ்டேட் லாக்-அவுட் செய்யப்பட்டு மூடியே உள்ளது. அது சம்பந்தமான கவன ஈர்ப்புத் தீர்மானத்தை நானும் உதகை சட்டமன்ற உறுப்பினர் திரு கல்லன் அவர்களும் கொடுத்திருந்தோம். ஆனால் இந்த மானியக் கோரிக்கையில் பேசிக்கொள்ளலாம் என்று அறிவித்துவிட்டதால் அப்பொழுது எங்களால் பேசமுடியவில்லை. கூட்டடா எஸ்டேட் தொழிலாளர்கள் எப்படிப் பழிவாங்கப்படுகிறார்கள் என்பதை இந்த மன்றத்திலே சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

கூட்டடா எஸ்டேட் என்பது 700 ஏக்கரா விஸ்தீரணமுள்ள தேயிலை, காப்பி, ஏலம் பயிரிடப்படும் மலைத் தோட்டம். இது நீலகிரி மாவட்டம் கோத்தகிரி வட்டத்தில் உள்ளது. 500 நிரந்தரத் தொழிலாளர்களும், 300 தற்காலிகத் தொழிலாளர்களும் இங்கு பணி புரிகிறார்கள்.

[பிற்பகல் 12–30]

கடந்த 20 ஆண்டுகளாக இங்கு தொழிலாளர்கள் கொத்தடிமைகளாக நடத்தப்பட்டு வருகிறார்கள். பொது வேலை நிறுத்தத்திலே கலந்து கொண்டார்கள் என்பதற்காக கூட்டடா எஸ்டேட் தொழிலாளர்கள் சுமார் 150 பேருக்குக் குற்றப் பத்திரிகை கொடுக்கப்பட்டிருக்கிறது. உண்மைக்குப் புறம்பான சில சம்பவங்களை மிகைப்படுத்தி, காவல் துறையினரிடம் புகார் செய்து, இதுவரை 121 தொழிலாளர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டு குன்னூர் நீதிமன்றத்திலே கடந்த 2 மாதகாலமாக நடைபெற்று வருகிறது. டிசம்பர் மாதம் 22 ஆம் தேதி முதல் மேற்படி கூட்டடா எஸ்டேட்டில் இதுவரைக்கும் காவல் துறையினர் காவல் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

தொழிற்சங்கங்கள் முறையீட்டின் பேரில் கோவை உதவி தொழிலாளர் ஆணையாளர் அவர்கள் தலையிட்டு, 18–2–81-ல் ஒரு உடன்பாடு ஏற்பட்டது. இதன்படி தொழிலாளர்கள் ஒழுங்காக வேலை செய்யவும், நிர்வாகத்தினர் எவர்மீதும் உதவி தொழிலாளர் ஆணையரின் அனுமதியின்றி நடவடிக்கை எடுப்பதில்லை யென்றும் உறுதி அளித்தனர். அமைதி நிலவியது, வேலை

களும் ஒழுங்காக நடைபெற்று வந்தன. தொழிலாளர்கள் சார்பில் குன்னூர் நீதிமன்றத்தில் உள்ள வழக்குகளை வாபஸ் வாங்க வேண்டுமென்று தொழிலாளர்கள் கோரினார்கள். அரசு அதிகாரிகள் 20—3—1981 ஆம் தேதி மேற்கொண்ட சமரச முயற்சிகள் மானேஜரின் பிடிவாத போக்கினால் நிறைவேறவில்லை. மானேஜர் குழப்பம் விளைவித்து, நிலைமையை சீர்குலைக்க எண்ணிப் பல ஆண்டுகளாகக் கொடுத்து வந்த பங்கீட்டு உணவுப் பொருட்களைக் கொடுக்க மறுத்தார். அப்படி மறுத்ததால் தொழிலாளர்கள் கொதிப்படைந்து ஏதாவது வன்முறையில் ஈடுபடுவார்கள் என்று முதலாளி வர்க்கம் நினைத்தது. அந்தத் தொழிலாளர்கள் அமைதியை நிலைநிறுத்தி, இதுவரையில் அமைதியாக இருந்து வந்திருக்கிறார்கள்.

அதே கூட்டடா எஸ்டேட்டைச் சேர்ந்த டிப்டேல் பகுதியை கதவடைப்பு செய்துவிட்டார்கள். அதுமட்டுமல்ல 25—3—1981 ஆம் தேதியன்று மேற்படி கூட்டடா எஸ்டேட்டிலும் கதவடைப்பு செய்யப்பட்டது. அந்தக் கதவடைப்பு செய்வதற்கு முன் எந்த விதமான முன் அறிவிப்பும் கொடுக்கவில்லை. இது முழுக்க முழுக்க சட்ட விரோதமான செயலாகும். கதவடைப்பு செய்வதற்கு முன் மார்ச் மாதம் வேலை செய்த நாட்களுக்கு தொழிலாளர்களுக்குச்சேரவேண்டிய சம்பளம் இன்றுவரை கொடுக்கப்படவில்லை. தொழிலாளர்களுக்குப் பங்கீட்டு முறையில் விநியோகிக்கப்பட வேண்டிய உணவுப் பொருள்களும் அந்த கூட்டடா எஸ்டேட்டில் இதுவரை வழங்கப்படவில்லை.

கோவை தொழிலாளர் நல துணை ஆணையாளர் அவர்கள் ஏப்ரல் மாதம் 6, 7, 8 தேதிகளில் இது குறித்து விசாரணை நடத்தினார்கள். அவர்கள் கதவடைப்பை நீக்குவதற்கும், உணவு, மற்றும் சம்பளம் வழங்குவதற்கும் கூறிய ஆலோசனைகளை நிர்வாகம் பிடிவாதமாக ஏற்க மறுத்துவிட்டது. அதை முன்னிட்டு வர இருக்கின்ற 2—5—1981 அன்று நீலகிரி மாவட்டத்திலிருக்கின்ற அனைத்துத் தோட்டத் தொழிலாளர் சங்கங்களும் ஒன்று சேர்ந்து ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்ய ஏற்பாடு நடந்து வருவதாக அறிகிறோம். அந்தக் கூட்டடா எஸ்டேட் விவகாரம் தீரவில்லையென்றால், நீலகிரியில் அமைதி கண்டிப்பாக அழியும். அதனால், அமைச்சர் அவர்கள் எப்படியும் இதிலே ஈடுபட்டு, அந்தக் கூட்டடா எஸ்டேட் தொழிலாளர்களுக்கு நீதி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் போனஸ் பிரச்சினை. பல இடங்களிலே கடந்த ஆண்டு கொடுக்கப்பட வேண்டிய போனஸ் இதுவரையிலும் தரப்படவில்லை என்பது வருத்தத்தைத் தரக்கூடிய ஒரு விஷயமாக இருக்கிறது. சீபோர்த், தேவர் சோலை, டர்மியா, மாங்கோரஞ்,

அத்தி குன்று, எஸ். எச். எஸ்டேட், டரேஸ் எஸ்டேட் போன்ற இடங்களில் கடந்த வருடம் கொடுக்க வேண்டிய போனஸைக் கொடுக்கவில்லை. அதற்கு முன்னால் கொடுக்க வேண்டிய போனசும் கொடுக்கப்படவில்லை. ஆங்காங்கு ஊர்வலங்களும், பொதுக் கூட்டங்களும் நடந்த வண்ணமாக இருக்கின்றன. ஏதோ நீலகிரி அமைதியாக இருக்கிறது என்று நாம் எண்ணியிருந்ததற்கு மாறாக, அங்கு ஒவ்வொரு தோட்டமும் புயல்காடாக மாறி வருவதை உணர்ந்து சீக்கிரம் அந்த போனஸ் பிரச்சினையையும், அங்குள்ள சில சில்லறை பிரச்சினைகளையும் தீர்த்து வைக்க வேண்டுமென்று நான் இந்த மன்றத்தின் வாயிலாக, உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன். அரசு தேயிலைத் தோட்டங்களில் இதுவரை போனஸ் தரப்படவில்லை. நாம் தனியாரிடம் வாதாடிப் பெறுகிறோம். அவர்கள் கொடுக்க வேண்டுமென்ற சூழ்நிலையை நாம் சொல்கிறோம். ஆனால் அரசுத் தோட்டங்களிலே வாழ்கின்ற தோட்டத் தொழிலாளர் அதுவும் தாயகம் திரும்பிய பல பேர் பணியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இதுவரையில் போனஸ் தரப்படவில்லை. ஆகவே அரசு மற்ற தனிப்பட்ட முதலாளிகளுக்கு ஒரு முன் உதாரணமாக இருக்கக்கூடிய வகையில் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்பவர்களுக்கு போனஸ் வழங்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

அங்கே மினிமம் வேஜஸ் கொடுக்கவே இல்லை. மினிமம் வேஜஸ் என்ற பெயராலே சில பல இடங்களிலே இடத்திற்கு இடம் மாறுபட்டுக் கொடுக்கப்படுகிறது. ஒரே நிலையான ஒரே மாதிரியான மினிமம் வேஜஸ் அமுலாக்கப்பட வேண்டும். அதற்கு அரசு அதிகாரிகள் உற்ற துணையாக இருந்து அதைக் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1972 ஆம் ஆண்டு, திராவிட முன்னேற்றக் கழகம் அரசாண்டபொழுது, தோட்டத் தொழிலாளர்கள் குடியிருப்புக்கள் அனைத்திற்குமே மின்சார வசதி செய்து தர வேண்டுமென்று கோரிக்கை விடப்பட்டு, ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு அதன்படி பல இடங்களிலே மின்சார வசதி செய்து தரப்பட்டது. இன்னும் பல இடங்களிலே, தோட்டத் தொழிலாளர் குடியிருப்புகளுக்கு மின்சார வசதி செய்து கொடுக்கப்படவில்லை. தோட்டத் தொழிலாளர்கள் காட்டுப் பகுதியிலே, பூச்சி, விஷப் பூச்சிகள் உள்ள பகுதிகளிலே வாழ்கிறார்கள். ஆகையால் அங்கு கண்டிப்பாக தோட்டத் தொழிலாளர்களுடைய குடியிருப்புகளுக்கு மின்சார வசதி செய்து கொடுத்து, எல்லோருக்கும் வாழ்வளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் மருத்துவம். மிக முக்கியமானது அது. மருத்துவம் இல்லை என்றால், யாரும் இருக்க முடியாது என்ற நிலை

யிலே நகரத்திற்கும் தோட்டப் பகுதிகளுக்கும் மிகத் தொலைவுள்ளது. மருந்தகத்திலே மருந்து இருந்தால் டாக்டர் இருக்க மாட்டார். டாக்டர் இருந்தால் மருந்து இருக்காது என்ற நிலை இருக்கிறது.

அதனால் எல்லா தோட்டங்களிலும் கண்டிப்பாக டாக்டர்களும் இருக்கவேண்டும், மருந்துகளும் இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது பல எஸ்டேட்களிலே ஆள் பதிவு போடுவதில்லை. யாராவது தொழிலாளி வேலையில் இருந்து போய்விட்டால் அந்த இடத்திற்குப் பதிலாக வேறு ஆட்களை நியமனம் செய்வதில்லை. அதனால் இருக்கின்ற தொழிலாளர்களுக்கு வேலை பளு அதிகமாக இருக்கிறது. எனவே, ஒரு ஏக்கருக்கு இத்தனை ஆட்கள் என்று போட்டு, அதைப் பதிவு செய்யும் முறையை கட்டாயமாக ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்துத் தோட்டத் தொழிலாளர்கள் வசிப்பதற்குத் தகுந்த வீடுகள் இல்லை. ஒரு சிறிய அறையில், 2, 3 குடும்பங்கள் வசிக்கின்ற நிலை இருக்கிறது. எனவே அவர்களுக்கு தனிப்பட்ட குடும்பங்கள் குடியிருக்கும் வகையில் வீட்டு வசதியை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்துத் தொழிலாளர் நல காப்புறுதித் திட்டத்தை நீலகிரி மாவட்டத்திற்கும் விஸ்தரிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தேயிலைத் தோட்டத்திலே பணிபுரிகின்ற தொழிலாளர்களில் பெரும்பாலோர் தற்காலிகமாக இருக்கின்றார்கள். அவர்கள் நிரந்தரமாக்கப்படவே இல்லை. ஆகவே டெம்பரரியாக இருக்கின்ற தொழிலாளர்களை நிரந்தரமாக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வீட்டுவசதி வாரியம், குடிசை மாற்று வசதி வாரியம் போன்றவைகள் நீலகிரி மாவட்டத்திலே இல்லை மற்ற எல்லா மாவட்டங்களிலும் இருக்கின்றன. நீலகிரி மாவட்டம் மட்டும் என்ன பாவம் செய்ததோ என்று தெரியவில்லை. நாங்கள் மற்ற மாவட்டங்களில் செல்லும்போது அங்கே உள்ள உயர்ந்த கட்டடங்களை பார்த்து பெருமூச்சு விடுகின்ற நிலைமைதான் இருக்கின்றது. எனவே இந்த வீட்டுவசதி வாரியத் திட்டத்தை நீலகிரி மாவட்டத்தில் ஏற்படுத்தி வீட்டுப் பிரச்சினையை எளிதாக்கவேண்டும்.

அடுத்து எங்கள் மாவட்டத்தில் தாயகம் திரும்பிய நிறைய பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை இல்லை. அதனால் அவர்கள் பல போராட்டங்களில் ஈடுபடுகின்ற சூழ்நிலை

இருக்கின்றது. எனவே அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பை போதுமான அளவுக்கு ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டு, என் உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம்.

*திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தொழிலாளர் நலன், வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சி ஆகிய இந்த மூன்று கோரிக்கைகள் சம்பந்தமாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். கிராமப்புற வீட்டு வசதிச் சங்கம் தமிழ்நாட்டிலே துவக்கப்பட்டு 1980-81 ஆம் ஆண்டுக்கு 40 ஆயிரம் வீடுகள் கட்டுவது என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இந்த ஆண்டு கட்டப்பட்டு இருப்பது 19,952 வீடுகள் தான். இந்த இலக்கு எப்போது பூராவுமாக முடிக்கப்படும் என்பது கேள்விக்குறியாக இருக்கின்றது. ஆகவே இந்த நிர்ணயித்த இலக்கைப் பூர்த்தி செய்கின்ற முறையிலே சுறுசுறுப்பான முறையிலே திட்டங்களை நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து கிராமப் புறங்களிலே வீடுகள் கட்டுவதற்காக குறைந்தபட்சம் 3,000 ரூபாய் கடன் கொடுக்கப்பட்டு வருகிறது. அரிசனங்களுக்கு மானியமாக 750 ரூபாய் கொடுக்கப்பட்டு அது 1,000 ஆக உயர்த்தப்பட்டது. ஆனால் இந்த 3,000 ரூபாய் எப்படி அந்த கிராமப் புறங்களிலே வீடு கட்ட போதுமானதாக இருக்கும் என்ற பிரச்சினை இருக்கின்றது. ஆகவே அரசு குறைந்த பட்சம் 5 ஆயிரம் ரூபாய் இந்தக் கிராமப் புறங்களிலே வீடுகட்டுவதற்குக் கடன் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து அரிசனங்களுக்கு மானியம் வழங்கப்படுகிறது. நமது கிராமப் புறங்களிலே இருக்கக்கூடிய ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு அரசு மானியம் கொடுக்கவில்லை என்றாலும் அவர்களுக்கு வட்டி இல்லாத முறையில் கடன் கொடுக்க வேண்டும். தமிழகத்தில் விவசாயத் தொழிலாளர்கள் 44 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வட்டியில்லாது கடன் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12—40]

சென்ற ஆண்டுஇந்த மானியக் கோரிக்கை சம்பந்தமாக நடைபெற்ற விவாதத்தின்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கிராமப்புற வீட்டுவசதி திட்டத்தின்கீழ் வீடுகள் கட்ட விரைவில் கடன் வழங்க வட்டத்திற்கு ஒரு கிராம வீட்டு வசதிகூட்டுறவுச் சங்கம் தேவை என்பது அரசின் கருத்தாகும். இச்சங்கங்கள்

உறுப்பினர்களின் இருப்பிடத்திற்கு அண்மையில் இருக்க வேண்டும் என்று கூறினர். ஆனால் அது பற்றி இந்த அறிக்கையில் எதுவும் குறிப்பிடாதது வருந்தத்தக்கதாகும். அதைநிறைவேற்றும் வகையில் ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு சங்கம் என்பதை அரசு ஏற்படுத்தவேண்டும், அதை நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கனவே சென்ற ஆண்டு (1979) நிதிநிலை அறிக்கையின்போது சில விஷயங்களைக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். கடன் வாங்குபவர்களுக்கு சுலபமாக சிமெண்ட் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும் என்று குறிப்பிட்டார்கள். கிராமப்புறங்களில் உள்ள சங்கங்களில் கடன் வாங்கி வீடு கட்டுபவர்களுக்கு சிமெண்ட் கிடைப்பது இல்லை. அவர்கள் சிமெண்ட் கோரி மனு பஞ்சாயத்து யூனியனிடத்தில் செய்ததால் அது சரியான நேரத்தில் கிடைக்கவில்லை. அவர்கள் சிமெண்ட் கிடைக்காமல் இருப்பதால் அவர்களுக்கு ஆயிரக்கணக்கில் கடன் கொடுத்தும் அவர்கள் வீட்டைப் பூர்த்தி செய்யமுடியாமல் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்குத் தேவையான குறைந்தபட்ச சிமெண்ட் அரசாங்கம் அந்தச் சங்கங்கள் மூலம் குறிப்பிட்ட அளவு சிமெண்ட் வழங்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் அப்படிச் செய்தால் தற்போது எட்டாத கனியாக இருப்பது எட்டும் கனியாக ஆகும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவருக்கே உரித்தான பாணியில் ஒன்றை சென்ற முறை குறிப்பிட்டார்கள். அவர்கள் பேசுகிறபோது—

''I request the Hon'ble Members to sharpen their ears because it is the most important announcement. என்று கூறியிருக்கிறார்கள். இப்போது கூர்மையாக கவனிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். It is the most important announcement for the benefit of my Press Colleagues I shall read slowly. மிக முக்கியமான ஒரு அறிவிப்பைப் புரட்சித் தலைவரின் ஆட்சியில் நான் சொல்ல விரும்புகிறேன்.'' தமிழகத்தின் ஊர்புறங்களில் தமிழக அரசின் குடியிருப்புச் சட்டம் நில ஆர்ஜித சட்டம் கிராம கைவினைஞர்கள் குடியிருப்புச் சட்டம் என்ற பல்வேறு சட்டங்கள் இருந்தும் இன்னும் சில இடங்களில் குடிசை வாசிகளுக்கு தாங்கள் குடிசை போட்டுள்ள மனைகளைச் சொந்தமாக்கிடவில்லை. அதேபோல் தமிழகத்தின் நகர்ப்புறங்களில் குடிசைப் பகுதிகளில் வாழ்கின்ற ஏழை எளிய மக்களுக்கும் தாங்கள் போட்டுள்ள குடிடை இடம் சொந்தம் இல்லை. இதை அரசு பரிசீலித்து தமிழகம் முழுவதும் உள்ள குடிசைவாசிகள்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வசிக்கின்ற வீட்டு மனையை அவர்களுக்கு சொந்தமாக்குவது என்று முடிவு எடுத்துள்ளது. இதற்கு ஏற்கனவே அமலில் உள்ள சட்டங்களை திருத்தியும், தேவைப்பட்டால் புதிய சட்டம்கொண்டு வரவும் அரசு தீர்மானித்துள்ளது என்று அறிவித்தார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இது 3 ஆண்டுகளுக்கு முன்பு, அதாவது 1977 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டது. 3 ஆண்டு காலம் ஆகியும் இன்னும் அத்தகைய சட்டம் வரவில்லை, இன்றைய தினம் லட்சக்கணக்கான மக்கள் கிராமப்புறங்களில் வசிக்கின்ற நிலங்களை பட்டா பெறமுடியாமல் இருக்கிறார்கள். ஆகவே, இதற்கான சட்டம் உடனடியாக கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசு ஊழியர்களுக்கு வீடு கட்ட கடன் வழங்கப்படுகிறது. கோடி ரூபாய் சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டும் 5 கோடி அளவிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் நூற்றுக்கணக்கான அரசு ஊழியர்கள் இந்த வீட்டு வசதி கோரி மனு செய்வதால் அவர்களுக்கு உரிய காலத்தில் இந்தக் கடன் தொகை கிடைக்காததால், அவர்கள் வீடும் கட்டமுடியாமல், பல இடங்களில் இருந்து பணத்தையும் இழந்து நிற்கும் நிலையில் உள்ளனர். ஆகவே, அவர்கள் அனைவருக்கும் விரைவில் கடன் வசதி கிடைக்கும் வகையில் தேவையான நிதி ஒதுக்கீடு செய்ய கேட்டுக்கொள்கிறேன்.

பீட்டர் ரோடு காலனியில் வீட்டு வாடகை கொடுத்துகொண்டு பல அரசு ஊழியர்கள் இருக்கின்றனர். அவர்கள் அந்த வீடு கட்டிய தொகையை விட அதிகமான அளவிற்கு இன்றைக்கு வாடகையாகக் கட்டியிருப்பார்கள். ஆகவே, அந்த வீடுகளில் குடியிருப்பவர்களுக்கு அந்த வீட்டைச் சொந்தமாக்கவும் அதற்காக கூடுதல் பணம் தேவையென்றாலும் பிறகு வசூல் செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று சொல்லி இந்த மானியம் பொறுத்த வரையில் என் கருத்தை முடித்துக் கொள்கிறேன்.

தொழிலாளர் நல மானியத்தைப் பொறுத்தவரையில், நான் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். 1980–81ஆம் ஆண்டின் பட்ஜெட்டின்போதும் மான்யக் கோரிக்கை விவாதத்தின்போதும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல்வேறு கருத்துக்களைக் கூறினார்கள். வாக்குறுதிகள் தந்தார்கள். அவைகள் எல்லாம் என்னுடைய காதில் இன்றைக்கும் வெண்கலக் குரலாக ஒலித்துக்கொண்டு இருக்கிறது. அவற்றை நான் மீண்டும் நினைவுபடுத்தக் கடமைப் பட்டு இருக்கிறேன். தொழிலாளர்களின் நலன் காக்க பல்வேறு

சட்டங்கள் கொண்டு வரப்படும் என்று சொன்னார்கள். ஆனால் அப்படிப்பட்ட எந்தச் சட்டங்களும் நிறைவேற்றப்படவில்லை. மாறாக ஒரு விஷயத்தில் அரசாங்கம் விரைவாகச் செயல்பட்டு அதை நிறைவேற்றியிருக்கிறது. அதாவது அத்தியாவசியத் தொழில்களில் வேலை நிறுத்தத் தடைச் சட்டம். அதை அவசரமாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே, தொழிலாளர்களுடைய நலன்களையும் உரிமைகளையும் பாதுகாக்கும் சட்டங்களைக் கொண்டுவருவதிலே தாமதம் ஏற்படுகிறது; அதற்கு சாக்குப் போக்கு சொல்லப்படுகிறது. ஆனால் வேலை நிறுத்தத் தடைச் சட்டத்திற்கு அவசரம் காட்டப்படுகிறது. இந்தமாதிரியான சட்டங்களைக் கொண்டு வருவதை கைவிட்டுவிட்டு, மீண்டும் இப்படிப்பட்ட சட்டங்களை நிறைவேற்றக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற காலத்திலே அமைச்சர் அவர்கள் பல விஷயங்களைப் பேசியிருக்கிறார்கள். பல வாக்குறுதிகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. தொழிற்சங்கங்கள் அங்கீகாரம் சம்பந்தமாக, மற்றும் பல்வேறு அங்கீகாரச் சம்பந்தமாக, கடந்த காலத்தில் தொழிலாளர் விரோத போக்குகள் மாற்றப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு தொழிலாளர் நல விரோத கொள்கை கண்டனத் தீர்மானத்தின்போது முழுமையாக பல்வேறு விஷயங்களைக் குறிப்பிட்டிருக்கிறோம். ஆகவே மீண்டும் அதுபற்றி முழுமையாக பேச விரும்பவில்லை. அவை இன்றைக்கும் நிறைவேற்றப்படவில்லை என்பதை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

தொழிற் சங்கங்கள் அங்கீகாரம், வேலை நிறுத்த உரிமை மறுப்பு, பால்வள நிறுவனம்போன்ற அரசுத் துறை நிறுவனங்கள் வேலை நிறுத்தம், ஸ்கிரீனிங் கமிட்டி, நகராட்சித் தொழிலாளர்கள் ஒப்பந்தம், அரசு ஆணைகள் அமுல்படுத்தாதது குறித்து, தொழிலாளர்கள்மீது போடப்பட்ட வழக்குகள் வாபஸ் பெறுவது போன்ற விஷயங்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. அவை சம்பந்தமாக மாற்றம் தேவை என்று குறிப்பிட்டோம். ஆனால் மாற்றம் காண முடியவில்லை. மாற்றம் ஏற்படுத்தி, தொழிலாளர்களுக்கு நியாயம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கும் பல்வேறு நிறுவனங்களில் தொடர்ந்து வேலை நிறுத்தம் நடந்து வருகிறது. கோவை சக்தி மில்லில் 33 பெண்கள் டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கிறார்கள். 10–4–1981-லிருந்து வேலை நிறுத்தம் நடைபெறுகிறது. அதைப்போல திருப்பூர் பனியன் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம், பவானி ஜமக்காளம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் இப்படி ஏராளமான வேலை நிறுத்தங்கள் இன்னும் தீர்க்கப்படவில்லை.

அதைப்போல பால்வள நிறுவன வேலை நிறுத்தம் இன்னும் தீர்க்கப்படவில்லை. சட்டபூர்வமாக வேலை நிறுத்த நோட்டீஸ் கொடுத்து நடைபெறும் வேலை நிறுத்தம் அது. இன்று வரையில் அது முடிவு செய்யப்படவில்லை. எப்போது முடிக்கப் படும் என்று அமைச்சர் சொல்வார் என்று எதிர்பார்க்கிறேன்.

அதைப்போல வால்பாறை-வாகமலை எஸ்டேட் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்; பெரம்பலூர் சர்க்கரை ஆலை வேலை நிறுத்தம். அவர்கள் ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்தார்கள். ஆனால் எந்த அளவுக்கு கொடுமைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள் தெரியுமா? அவர்களை சஸ்பென்ட் செய்திருக்கிறார்கள். கடுமையான நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அதேமாதிரி இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை ஊழியர்களுக்கு பலேக்கர் அவார்டு அமுல்படுத்தப்படும் என்று இந்த சட்டமன்றத்தில் அமைச்சர் சொன்னார். தேவைப்பட்டால் ஒரு அவசரச் சட்டம் கொண்டுவருவோம் என்று சொன்னார். ஆனால் இன்னும் கொண்டுவரவில்லை. மத்தியப்பிரதேசம் அரசு அவசரச் சட்டம் கொண்டுவந்து, 1980 ஆம் ஆண்டு வேலை செய்த அனைத்து ஊழியர்களுக்கும் அந்த சலுகை கிடைக்கும் வகையில் அந்த அவசரச் சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறது. ஆனால் இங்கே இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை நிறுவனம் 22 தொழிலாளர்களை வீட்டுக்கு அனுப்பியுள்ளது. க்ளோசர் நோட்டீஸ் கொடுத்து, ஜூன் மாதம் சென்னையிலிருந்து வெளிவரும் இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி, தினமணிமலர் வெளிவராது என்று அறிவித்திருக்கிறது.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை]

அரசு ஏற்கனவே கொடுத்திருக்கிற வாக்குறுதி அடிப்படையில் அந்த பலேக்கர் தீர்ப்பை அமுல்படுத்த வேண்டுமென்றும், க்ளோசரை எதிர்த்து உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி இன்றையதினம் பெரிய மில்கள், குறிப்பாக பஞ்சாலைகளில் 'வேஸ்ட் காட்டன் மில்' என்று தனியாக அமைத்துக்கொள்கிறார்கள். ஆனால் அந்த வேஸ்ட் காட்டன் மில்களிலும் பெரிய பஞ்சாலைகளில் உற்பத்திச் செய்கிற ''ஹை 'கவுன்ட்ஸ்' நூலைத்தான் உற்பத்திச் செய்கிறார்கள். அப்படி இருந்தாலும் வேஸ்ட் காட்டன் மில் என்ற பெயரால் சட்டத்தைப் புறக்கணித்து, தொழிலாளர்களுக்கு சரியாக சம்பளம் கொடுக்காமல் இருக்கிறார்கள். ஒரு தொழிலாளிக்கு 2 ரூபாய், $2\frac{1}{2}$ ரூபாய், 3 ரூபாய் என்றுதான் கொடுக்கிறார்கள். இதை மாற்றியமைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு வேஸ்ட் காட்டன் மில் என்ற பெயரில் அங்கே ஹை கவுன்ட்ஸ் நூல் உற்பத்திச் செய்கிறார்கள். அதுபற்றி விசாரணை நடத்தி, சட்டப்படி அந்தத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு தரவும், தவறான நடவடிக்கைகளைத் தடுக்கவும் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அதைப்போல பி. அண்ட் சி. மில் பிரச்சினை இன்னும் தீராமல் இருந்து கொண்டிருக்கிறது. முதலிலேயே தமிழக அரசு அதை தன்னுடைய பொறுப்பில் எடுத்து தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்க வேண்டுமென்பது எங்கள் கருத்து. அந்த வகையில் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்.

[பிற்பகல் 12-50.]

வாலாஜாபாத்திலே இருக்கின்ற சீதை மில் மூடப்பட்டுகிடக்கின்றது. சக்தி பைப்ஸ் மூடப்பட்டுக் கிடக்கின்றது. அது இன்னும் திறக்கப்படவில்லை. மதுரை லட்சுமி காட்டன் மில் 15 ஆண்டுகாலமாக இயங்கிக் கொண்டு வருகின்றது. அங்கே இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை நிர்வாகம் மாற்றப்பட்டு புதிய நிர்வாகிகள் வருவார்கள். அந்த வகையிலே இந்த ஆண்டும் 30—4—81 முதல் மூடுவதாக அறிவித்துள்ளார்கள். தொழிலாளர்களுக்கு சட்டப்படிக்கான உரிமைகள் சலுகைகள் பறிக்கவே இம்மாதிரி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அதேபோன்று க்ரோம் லெதர் பேக்டரி மூடியுள்ளது சம்பந்தமாக ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன்.

அடுத்து உயர்ந்து வருகின்ற விலைவாசியைக் கட்டுப்படுத்துகின்ற முறையிலே நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். விலைவாசி உயர்வு காரணமாகத்தான் இன்று தொழிலாளர்களின் போராட்டங்கள் வெடிக்கக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. விலைவாசிப் புள்ளி விவரங்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். அகில இந்திய அளவிலே விலைவாசிப் புள்ளி தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் 1978—79 ஆம் ஆண்டு இந்த புள்ளி 331 ஆக இருந்தது. ஆனால் இன்றைய தினம் அது 411 ஆக உயர்ந்து இருக்கின்றது. சென்னை புள்ளியைப் பொறுத்த வரையில் 1978—79 ஆம் ஆண்டு 318 ஆக இருந்தது. இந்த ஆண்டு அது 398 ஆக உயர்ந்து விட்டது. விவசாயத் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட வகையில் 1978—79 ஆம் ஆண்டு 317 ஆக இருந்தது இந்த ஆண்டு 407 ஆக உயர்ந்து விட்டது.

பருப்பின் விலையைப் பொறுத்தவரையில் முன்பு 245.7 ஆக இருந்தது. இன்றையதினம் 383.2 ஆக உயர்ந்து விட்டது. அதாவது 137.5 புள்ளி உயர்ந்திருக்கின்றது.

எண்ணெ வித்துக்களை எடுத்துக்கொண்டால் 234.1 என்றிலிருந்தது 349.6 ஆக உயர்ந்து விட்டது. இந்த நிலைமைகளுக்கு விலைவாசி உயர்விற்கு ஈடு கொடுக்க முடியாமல்தான் தொழிலாளர்கள் போராட்டங்கள் வெடிக்கக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. ஆகவே தொழிலாளர்களுக்கும் மற்ற மக்களுக்கும் அத்யாவசியப் பொருட்களாகிய அரிசி, பருப்பு, எண்ணெ போன்றவை கண்டிப்பாக நியாய விலைக் கடைகளிலே கிடைக்கின்ற வகையிலே உறுதியான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விசேஷமான கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். 1968 ஆம் ஆண்டிலிருந்து தமிழகத்திலே உள்ள சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் தலைமை தாங்கி போராடி இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களில் உள்ள சர்க்கரைத் தொழிலாளர்களை விட 20 ரூபாய் அதிகமாகப் பெற்றுக்கொண்டு இருந்தார்கள். அந்த நிலைமை 1968-லிருந்து 1980 வரை நீடித்தது. ஆனால் இந்த 1981 ஆம் ஆண்டில் உள்ள வேடிக்கை என்னவென்றால் அனைத்து மாநிலங்களில் உள்ள சர்க்கரைத் தொழிலாளர்களின் சம்பளத்தை விட தமிழகத்திலே உள்ள சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் 27 ரூபாய் குறைந்த சம்பளத்தை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் தொழிலாளர் தலைவராக இருந்த நேரத்தில் நம்முடைய மாநிலத்தில் சர்க்கரைத் தொழிலாளர்களுக்கு மற்றவர்களை விட கூடுதலான ஊதியம் கிடைத்தது. ஆனால் அவர்கள் அமைச்சராக வந்ததற்குப் பிறகு இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருப்பதை அவர்கள் அனுமதிக்கலாமா ? என்று நான் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே தமிழகத்திலுள்ள சர்க்கரைத் தொழிலாளர்கள் அனைத்து மாநிலங்களிலுள்ள சர்க்கரைத் தொழிலாளர்களை விட குறைந்த ஊதியம் வாங்கக்கூடாது என்ற வகையில், இந்த நிலைமையினைப் போக்குகின்ற வகையில், நம்முடைய முதன்மையான இடத்தைப் பாதுகாக்கின்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தொழிலாளர் நல இலாக்கா பற்றிச் சொல்ல விரும்புகிறேன். தொழில் தாவாக்கள் சம்பந்தப்பட்ட வகையிலே எடுக்கக்கூடிய நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் காலதாமதம் ஏற்படுகின்றது. பேச்சுவார்த்தைக்கு முதலாளிகள் வருவதில்லை என்று கூறுகிறார்கள். அவர்களைக் கட்டுப்படுத்துவதற்கு போதிய அதிகாரம் இல்லை என்றும் கூறப்படுகின்றது. ஆனால் அதற்கான சட்டங்கள் கொண்டுவரப்படும் என்று கூறப்பட்டது ஆனால் அதுபோன்ற சட்டங்கள் கொண்டுவரப்பட

வில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். லேபர் டிப்பார்ட்மென்டைப் பொறுத்த வரையில் அதிகாரிகள் இருக்கிறார்கள். பல்வேறு பிரச்சினைகளிலே தொழில் தகராறு களில் அவர்கள் அறிவுரைகள் சொல்கிறார்கள். ஆனால், அவற்றை அரசுத் துறை நிறுவனங்களில் உள்ள நிர்வாகத்தினர் ஏற்றுக் கொள்ளாத நிலைமைகள் இருக்கின்றன. கூட்டுறவுத் துறை யிலே இருப்பவர்களும் வேலை நிறுத்தம் செய்கிறார்கள். கைத் தறித் துறையிலே இருப்பவர்களும் வேலை நிறுத்தம் செய்கி றார்கள். சுற்றுலாத் துறையிலே இருப்பவர்களும் வேலை நிறுத்தம் செய்கின்ற நிலைமை இருக்கின்றது. டேன்சி போன்ற அரசாங்கத்தின் தொழில் துறையிலே இருக்கின்ற தொழிலாளர் களும் வேலை நிறுத்தம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படு கின்றது. இப்படிப்பட்ட நிலைமைகளில் தொழிலாளர் நல அதிகாரிகள் தலையிட்டு பிரச்சினையை சுமுகமாகத் தீர்க்கின்ற வகையிலே அறிவுரைகள் கூறினால் சம்பந்தப்பட்ட இலாகா அதி காரிகள் அதை ஏற்றுக்கொள்வதில்லை. அமைதியைப் பாது காக்க வேண்டும் என்ற முறையிலே அறிவுரைகள் கூறப்படுகின்ற போது சம்பந்தப்பட்ட இலாக்காவின் அதிகாரிகளும் மற்றவர் களும் அதை ஏற்றுக்கொள்வதில்லை என்ற நிலைமை இருக்கி றது. ஒருவேளை அமைச்சரவர்களே அதை ஏற்றுக் கொள்ள வேண்டாம் என்று கூறியிருப்பார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. ஆகவே, தொழிலாளர் நலத்துறை அதிகாரிகள் அறிவுரைகளை மற்ற இலாகா அதிகாரிகள் நிறைவேற்றுவதற் கான நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டும். ஏனென்றால் தொழிலமைதியைப் பாதுகாக்க வேண் டிய பொறுப்பு அனைவருக்கும் இருக்கின்றது. அனைத்து அரசு இலாக்காக்களுக்கும் அந்தப் பொறுப்பு இருக்கின்றது என்ற முறை யிலே அதற்கான உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அரசாங்க இலாக்கவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் ஆலோ சனைகளை ஏற்க மறுத்தால் தனிப்பட்ட முதலாளிகளிடம் அவற்றை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்பதற்கு அரசுக்கு என்ன தார்மீக உரிமை இருக்கின்றது என்று நான் கேட்க விரும்புகிறேன்.

ஆகவே, அந்த அடிப்படையிலே, அதற்கான முறையான நடவடிக்கையை எடுத்தாக வேண்டும். ஏற்கெனவே குறிப் பிட்டுள்ளவாறு பல்வேறு போராட்டங்கள் இன்றைக்கு நடந்து கொண்டு இருக்கின்றன. அவைகளுக்குத் தீர்வு காண வேண்டிய பொறுப்பு தொழிலாளர் நல இலாகாவிற்கு இருக்கிறது. அது பால்வள நிறுவனம் வேலை நிறுத்தமாக இருந்தாலும் சரி, அல்லது வேறு எந்தத் துறையிலே இருக்கக்கூடிய வேலை நிறுத்தமாக இருந்தாலும் சரி, அவைகளை தீர்த்து வைக்க வேண்டிய பொறுப்பு தொழிலாளர் நல இலாகாவிற்கும் இருக் கிறது, அமைச்சருக்கும் இருக்கிறது. ஆகவே, அந்த

முறையிலே பிரச்னைகளை அனைத்தும்—வேலை நிறுத்தங்கள் அனைத்தும் தடுப்பதற்கான முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கன்சிலியேஷன் சம்பந்தமாக நான் ஏற்கெனவே கூறிவிட்டேன். ஸ்கீரினிங் கமிட்டி சம்பந்தமாக இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையைப் பார்த்தால்—நம்முடைய அமைச்சர் அவர்கள் கூட அதைப்பற்றி பேசியிருக்கிறார்கள் அந்தக் கமிட்டி தேவையில்லாத ஒன்று என்று. ஆகவே, அது சம்பந்தமாக அதை மாற்றுவதற்கான முறையிலே நாம் நடவடிக்கை எடுக்கலாம். அரசு அதைப்பற்றி ஆராய்ந்து முடிவு செய்து அறிவிக்கும் என்ற முறையிலே சொன்னார்கள். ஆனால், இன்றைக்கும் ஸ்கீரினிங் கமிட்டி அப்படியேதான் இருக்கிறது. விளக்கமாக அதைப்பற்றிய முழு விவரமும் இங்கே சொல்வதற்கு நேரமில்லை.

ஆனால், பிராசிக்கியூட்டரே ஜட்ஜானால் எப்படி நியாயம் கிடைக்கும்? ஒரு குற்றத்தை சுமத்தக் கூடியவர்களே, நீதிபதியின் இருக்கையில் அமர்ந்தால் எப்படி நீதி கிடைக்கும்? அந்த முறையிலே தான் இன்றைக்கு ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக் கூடியவர்கள், இந்த ஸ்கீரினிங் கமிட்டியிலே உட்காருவதின் காரணமாக வழக்குகள் எதுவுமே தொழில் கோர்ட்டுக்குச் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு அமைச்சர் அவர்களே இதுபற்றி ஏற்கெனவே கூறியிருப்பதால், உடனடியாக அந்த ஸ்கீரினிங் கமிட்டிகள் ஒழிக்கப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ரெபரென்ஸ் சம்பந்தமாக எடுத்துக் கொண்டால், கோர்ட்டுகளுக்கு அனுப்புவது சம்பந்தமாக இன்றைக்கும் பாரபட்சமான முறையிலே தான் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. டி.ஐ. சைக்கிள்ஸ் நோ ரெபரன்ஸ்; டி.வி.எஸ். தொழிற்சாலை நோ ரெபரன்ஸ். இந்நிறுவனங்களிலிருக்கும் பெரு முதலாளிகளெல்லாம் இன்றைய தினம் தொழிற்சங்கங்களை உடைக்க வேண்டும், சீர்குலைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் செயல்படக் கூடியவர்கள். அப்படிச் செயல்படக் கூடியவர்களுக்கு, இவைகள் எல்லாம ஆதரவாக உதவி செய்யக்கூடிய நிலைமை இருக்கிற காரணத்தாலே, இத்தகைய தொழிற்சாலைகள் சம்பந்தப்பட்டவரையில், அரசாங்கம் கடைப்பிடிக்கக் கூடிய கொள்கைகளிலே, வழிகளிலே மாறுதல் வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களின் பிரச்சினையை எடுத்துக் கொண்டால்— அதற்கு 2-ஏ பெட்டிஷன் இருக்கிறது. நேரிடையாக அவர்கள் கோர்ட்டுக்குச் சென்று அவர்கள் குற்றம் அற்றவர்கள் என்று நிருபித்து, திரும்பவும் வேலை பெறுவதற்கான வாய்ப்பையும், சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்த சட்டத் திருத்தங்களை கொண்டு வருவோம் என்று அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்களுடைய வார்த்தையையே நான் கூறுவது என்றால், ''டிஸ்மிஸல், டெர்மினேஷன், ரிமூவல் பிரம் சர்வீஸ்'' லேபர் ஆபிசர் போட்டு லேபர் கமிஷனரிடம் சொல்லி, மறுபடியும் ரெபரன்ஸ் கொடுப்பது என்ற புரோசீஜர் cumbersome ஆக இருக்கிறது என்ற காரணத்தால், நேரிடையாக 32-இ பெட்டிஷன் கொடுப்பதுபோல, தொழிலாளர்கள் பணம் வேண்டும் என்று சொன்னால், லேபர் கோர்ட்டுக்குப் போவது போல, நேரிடையாக தொழில் கோர்ட்டுக்கு அனுப்புவதற்கு வழிவகுக்கின்ற வகையில் சட்டத்தைத் திருத்துவதற்கு உத்தேசம் இருக்கிறது. செய்வோம் என்ற வகையில் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆகவே, உடனடியாக அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நான் குறிப்பிட விரும்புவது அரசு ஊழியர்களின் பிரச்னை குறித்து. அரசு ஊழியர்களின் பிரச்னை குறித்து அரசாங்கத்தின் போக்கிலே ஒரு மாறுதல் தேவை. அரசு ஊழியர்களின் மீது வஞ்சம் தீர்க்கப்படுகிற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அவர்களுக்கு பஞ்சப்படி வழங்குவது, மற்றப் பிரச்னைகள் குறித்து முறையாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய பிரச்னைகள் ஒரு பக்கத்திலே இருந்தாலும், வேலை நிறுத்தம் செய்தவர்களை வஞ்சம் தீர்க்கிற ஒரு நிலைமையும் இருக்கிறது. அது போக்கப்பட வேண்டும்.

கருவூலங்களிலே வேலை செய்யும் ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். அவர்கள் சஸ்பென்ட் செய்யப்பட்டார்கள். வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்றால் அவர்கள் அதற்காக மன்னிப்புக் கேட்க வேண்டும் என்ற முறையிலே, இன்றைக்கும் அவர்கள் பிரச்னை தீர்க்கப்படாமல் இருக்கிறது. தனிப்பட்ட சில மேல் அதிகாரிகள், டைரக்டர் ஆப் டிரஷரீஸ் போன்றவர்கள் செய்யக் கூடிய தவறுதலான காரியங்களுக்கு ஊழியர்களின் மேல் பழி வாங்கக் கூடிய நிலைமை இருக்கிறது. இந்தப் போக்கு மாற்றம் செய்யப்பட வேண்டும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதிகாரிகளுக்கு எந்தவிதமான சர்வீஸ் கண்டிஷன்களும் இருக்காது. ஆனால்,ழியர்களுக்கு இப்படி சர்வீஸ் கண்ஷன்கள் ஊ போட்டு அவர்களை பழி வாங்கக் கூடிய நிலைமை

இருக்கிறது. அதே மாதிரித்தான் சிறை வார்டர்களுடைய போராட்டம். அவர்கள் கோரிக்கை வைக்கவில்லை. தங்களை மனிதர்களாக நடத்த வேண்டும் என்று கோரினார்கள். கோரிக்கைகளை வைக்கவில்லை. பஞ்சப்படி உயர்வு கேட்க வில்லை; சம்பள உயர்வு கேட்கவில்லை. ஆனால் அவர்கள் பழிவாங்கப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள் என்ற நிலைமை இருக்கிறது.

அதேபோல அரசு துறை நிறுவனங்களிலே இருக்கக்கூடிய ஊழியர்களில் சிவில் சப்ளைஸ் கார்ப்பொரேஷனுடைய ஊழியர் கள் பழி வாங்கப்பட்டு சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். அதே மாதிரி சுற்றுலா வளர்ச்சி கழகத்தின் ஊழியர்கள் பழி வாங்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட போக்குகள் மாற வேண்டும். அவர்களுக்கு நியாயம் வழங்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது என்பதை குறிப்பிட விரும்பு கிறேன்.

[பிற்பகல் 1.00]

அடுத்து, தொழில் பயிற்சி நிலைய பயிற்றுனர்களை எடுத்துக் கொண்டால் அவர்கள் 1972-ல் ஸ்ட்ரைக் செய்தார்கள். இன்று வரை அவர்கள் கோரிக்கைகள் செட்டில் ஆகாமல் இருக்கின்றன. ஆகவே, அவர்களோடு பேசி அவர்கள் கோரிக்கைகள் தீர்க்கப் பட வேண்டும். அவர்களுக்கு ப்ரசிடெண்ட் அவார்ட் கொடுத்திருக்கிறார்கள். சன்மானம் கொடுத்திருக்கிறார்கள். ரூ. 50, ரூ. 100 சன்மானம் கொடுத்திருக்கிறார்கள். அம்மாதிரி சன்மானம் வழங்கும் ஊழியர்களுக்கு அட்வான்ஸ் இன்க்ரி மென்ட்ஸ் ஏதாவது கொடுத்தால் அவர்கள் சர்வீஸ் உள்ளவரை அதன் பலன் கிடைக்கும் என்று அவர்கள் கோரிக்கை வைத்திருக் கிறார்கள். அதை பரிவோடு கவனிக்கவேண்டும்.

மாநகராட்சி, நகராட்சி துப்புறவுத் தொழிலாளர்கள் இவர்கள் சம்பந்தப்பட்டவரை அரசு உத்தரவுகளையே அமல் செய்வது கிடையாது. ஒப்பந்தங்களை அமுல் செய்வது கிடையாது. ஜாயின்ட் கமிஷனர், லேபர் கமிஷனர் பேசுவார். முனிசிபல் டைரக்டர் வர மாட்டார். முனிசிபல் கமிஷனர் வர மாட்டார். போட்ட உத்தரவை எடுத்துக்காட்டுவார்கள். நான் விளக்கங்கள் கேட்டு வருகிறேன் என்ற முறையில் செல் வார்கள். இந்த ரூ. 10,000 அவர்களுக்கு கிடைப்பதில்லை. ஒத்துக்கொண்ட சிக் லீவ் வசதி அந்தத் தொழிலாளர்களுக்குக் கிடைப்பதில்லை. திரு. ரமணி அவர்கள் ஏற்கெனவே குறிப் பிட்டார்கள். இரண்டு அமைச்சர்களோடு உட்கார்ந்து பேசி தீர்த்த விஷயம். அப்படியிருந்தும் அது சம்பந்தமான பிரச்னை இருந்துவருகிறது என்றால், எங்கே போய் சொல்வது என்று புரியவில்லை. ஆகவே அந்தப் பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டும்.

கூட்டுறவு ஊழியர்கள். அவர்களுக்கு ரூ. 100 சம்பளம் கொடுக்கிறார்கள். ஷாப் ஆன்ட் எஸ்டாப்ளிஷ்மென்ட் ஆக்ட் படி ரூ. 250 குறைந்தபட்ச சம்பளம் கொடுக்கவேண்டும். ஆனால் கூட்டுறவுத் துறையில் வில்லேஜ் ஷாப்களில் வேலை செய்கிறவர்களுக்கு ரூ. 100 மாதச் சம்பளம் கொடுக்கிறார்கள். இந்தக் காலத்தில் ரூ. 100 கொடுப்பது என்றால் அதை வெளியே சொன்னால், நம் மாநிலத்தில் இப்படி அரசுத்துறையில் இருக்கக் கூடிய ஊழியர்களுக்கு ரூ. 100 சம்பளம் கொடுக்கிறோம் என்றால் இதை விட கேவலமான ஒரு நிகழ்ச்சி வேறு எதுவும் இருக்கமுடியாது. எனவே குறைந்தபட்ச கூலிச் சட்டத்தின் கீழ், மற்றத் தொழில்களில் நிர்ணயித்துள்ளதுபோல் குறைந்த பட்ச சம்பளமாவது இவர்களுக்குக் கொடுக்கவேண்டும். அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

குறைந்தபட்ச கூலி என்பது ஒரு தடவை நிர்ணயித்தால் ஐந்து ஆண்டுகள் ஆகின்றன. அதை மறு பரிசீலனை செய் வதற்கு. ஆந்திராவை எடுத்துக்கொண்டால் இரண்டு ஆண்டு களுக்கு ஒரு முறை குறைந்தபட்சக்கூலி மாற்றியமைக்கப் படுகிறது. விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது. எனவே அனைத்துத் தொழிலாளர்களுக்கும் உள்ள குறைந்தபட்சக் கூலியை விலைவாசி உயர்வை ஈடுசெய்யும் முறையில் உடனடி யாக மாற்றல் செய்யவேண்டும். அதோடு பஞ்சப்படியையும் இணைத்துக்கொடுக்கவேண்டும். கேரள மாநிலத்தில் பீடித் தொழிலாளர்களுக்கு விலைவாசிப் புள்ளிக்குத் தக்கபடி பஞ்சப் படியையும் சேர்த்துக் குறைந்தபட்சக் கூலி நிர்ணயித்துக் கொடுக்கிறார்கள். அம்மாதிரி ஏற்பாடு செய்தால் ஓரளவுக்கு பிரச்னைகள் சுமுகமாகத் தீரும்.

ரைஸ்மில் வொர்க்கேர்ஸ். அவர்களுக்குண்டான குறைந்த பட்ச சம்பளம்—அது சுப்ரீம் கோர்ட்டின் ஸ்டே இருக்கிறது. கடைச்சிப்பந்திகள் குறைந்தபட்ச சம்பளம் ஹைகோர்ட்டின் ஸ்டேயில் இருக்கிறது. இரண்டரை லட்சம் தொழிலாளர் களுக்கு கடைச் சிப்பந்திகளுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயித்துவிட்டதாக அறிவித்துவிட்டோம். ஆனால் யாருக்கும் கிடைக்கவில்லை. இம்மாதிரி நிலை இருப்பது சரியல்ல. வழக்குகள் தொடராத அளவிற்கு இருத்தல் வேண்டும். அனைவருக்கும் சட்டப்பூர்வமாக குறைந்தபட்ச கூலி கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்.

டிரான்ஸ்போர்ட் ஊழியர்களுக்கு. கோவை, பொள்ளாச்சி போன்ற இடங்களில் உள்ள தனியார் கம்பெனி முதலாளிகள் குறைந்தபட்ச சம்பளம் கொடுப்பதில்லை. குறைந்தபட்ச சம்பளம் கொடுப்பதாக ஒப்பந்தம் போடுகிறார்கள்.

ஒப்பந்தத்தை அமல் செய்ய ஒரு போராட்டம், இம்மாதிரி நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே இதை கறாராக அமல் செய்ய வேண்டும்.

அன்—ஆர்கனைஸ்ட் லேபர் பற்றி தமிழ் நாட்டில் விவசாயத் தொழிலாளர்கள் 44 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு குறைந்த பட்சக் கூலி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அரசுப் பண்ணைகளிலேயே குறைந்த பட்சக் கூலியை அமல்படுத்துவது கிடையாது. செங்கம் அரசு விவசாயப் பண்ணையில் அல்லது புதுக் கோட்டை மாவட்டத்திலுள்ள வல்லத்திராக்கோட்டை அரசுப் பழப் பண்ணைபோன்ற இடங்களில் இந்தக் கூலி, குறைந்த பட்சக் கூலி கொடுப்பதில்லை.

அரசு நிர்ணயித்துள்ள குறைந்த பட்சக் கூலி கேட்டால் நிலப் பிரபுக்கள் அந்த ஊரில் உள்ள ஆட்களுக்கு வேலை கொடுப்பதில்லை. போலீஸ் பந்தோபஸ்தோடு வேறு இடங்களிலிருந்து ஆட்களைக் கொண்டு வருகிறார்கள். அரியலூரிலுள்ள சேனாபதி கிராமத்தில் அரசு நிர்ணயித்துள்ள குறைந்த பட்சக் கூலி கொடுப்பதில்லை. உள்ளூர் ஹரிஜனங்களுக்கு வேலை கொடுப்பதில்லை.

மணப்பாறை பாய்ஸ் டவுனில் F கீழையூர் பண்ணையில் குறைந்தபட்சக் கூலி கேட்டார்கள் என்பதற்காக 47 பேர் கைது. போலீஸ் பந்தோபஸ்தோடுகூட வெளி இடங்களிலிருந்து ஆட்களைக் கொண்டு வருகிறார்கள். குறைந்த பட்சக் கூலி மறுக்கப்படுகிறது. இன்றையதினம் விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச கூலி மறுக்கப்படுகிறது. போலீஸ் குறுக்கே வருகிறார்கள். குறைந்த பட்சக் கூலி கொடுக்கவில்லை என்பதற்காக ஒருவரை யாவது கைது செய்து சிறைக்கு அனுப்புங்கள், தானாக இந்தக் கூலி கொடுப்பது அமுலுக்கு வந்துவிடும்.

கைத்தறித் தொழிலை எடுத்துக் கொண்டால் ஐந்தரை இலட்சம் தறிகள் இருக்கின்றன. கைத்தறித் தொழிலாளர்கள் போராட்டத்தை எடுத்துக் கொண்டால் மதுரையில் போராட்டம், கரூரில் போராட்டம், ராஜபாளையத்தில் போராட்டம், மேலும் சங்கரன்கோயிலிலே போராட்டம், பரமக்குடியிலே போராட்டம், இப்படி தொடர்ச்சியாக போராட்டங்கள், கோவையிலே சேலத்திலே போராட்டம்; அனைத்து இடங்களிலும் கைத்தறித்தொழிலாளர்கள் போராட்டம் நடந்துள்ளது. அவர்களுக்கு கிடைத்தது தடியடி, சிறை, கண்ணீர்ப்புகை என்றால், அவர்களுக்கு எப்படி நியாயம் வழங்கப்போகிறார்கள். தொழிலாளர்கள் நியாயம் கிடை வேண்டுமென்று போராடுகிறார்கள். உற்பத்தி செய்கின்ற சரக்குகள் விற்பனையாவதில்லை. உற்பத்தியான சரக்குகளை மட்டும் எடுத்துக் கொள்கிறோம் என்றார்கள். பிறகு இன்னொரு விஷயம்

தற்சமயம் சொசைட்டிகளுக்கு நூல் கிடைப்பதில்லை. சேலம் கூட்டுறவு நூற்பாலையிலேயும், மற்ற கூட்டுறவு நூற்பாலைகளிலே இருந்தும் நூல்கள் கிடைப்பதில்லை. ஆகவே, கடந்த 15 தினங்களாக கூட்டுறவு கைத்தறி சொசைட்டிகளுக்கு நூல் வழங்கப்படவில்லை. மறைமுகமாக வேலை இல்லை என்பதை தொழிலாளர்கள் மீது திணிப்பதற்கு இம்மாதிரியான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். கைத்தறித் தொழிலாளர்களுக்கு பாதுகாப்புச் சட்டம் கொண்டுவரப்படுவதாகச் சொல்லப்பட்டும் இதுவரை கொண்டுவரப்படவில்லை. அந்தச் சட்டம் வராததால், தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு இல்லை. கடந்த 3 ஆண்டுகளாக இதே மன்றத்திலே பேசிக்கொண்டு வருகிறோம். அமைச்சர் அவர்கள் கூட அடுத்த கூட்டத்திலே வந்துவிடும் என்று சொன்ன தகவல் இருக்கிறது. ஆகவே தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேமாதிரி, இன்றையதினம், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். நீலகிரியிலே அரசுத் தேயிலைத் தோட்டத்திலே இருக்கும் தொழிலாளர்களுக்கு இன்றையதினம், தனியார் தோட்டத்திலே கொடுக்கக்கூடிய கூலி கொடுக்கப்படவில்லை. பெண்களுக்கும் ஆண்களுக்கும் வித்தியாசமான கூலி கொடுக்கக்கூடிய நிலைமை அங்கே இருக்கிறது என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். அதேமாதிரி, விசைத்தறித் தொழிலாளர்களைப்பற்றி ஆளுங்கட்சிக் கொறடாவாகிய மாண்புமிகு மணிமாறன் அவர்கள் தொடர்ச்சியாக இதைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இன்றையதினம் இந்தத் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான சட்டப் பாதுகாப்பும் இல்லாமல் இருக்கிறது. அவர்கள் பிரச்சினையும் தீர்க்கப்படாமல் இருக்கிறது. (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை) ஆகவே, அவர்கள் இன்றையதினம் தெருவிலே நின்றுகொண்டிருக்கிறார்கள். அதேபோல் திருப்பூரிலே பனியன் தொழிற்சாலை தொழிலாளர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்–தலைமை.

அடுத்து கட்டிடத் தொழிலாளர்கள் 2,34,000 பேர்கள் இருக்கிறார்கள். மேலே இருந்து கீழே விழுந்தால் அவர்களை ஆண்டவன் கூட காப்பாற்ற முடியாது. அவர்கள் உயிர் அதோடு போய்விடும். ஆகவே, இந்தமாதிரியான தொழிலாளர்களுக்கு சட்டம் உண்டா என்றால் இல்லை. கூலி நிர்ணயம் செய்யப்பட்டு அவர்களுக்கு பாதுகாப்பு கொடுப்பதற்கு அல்லது நஷ்டஈடு கொடுப்பதற்கு இன்றையதினம் சட்டம் தேவை. அதற்கான முறையிலே சட்டம் கொண்டுவந்து, அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பது அவசியம். கர்நாடக அரசு, இந்தத் தொழிலாளர்கள்

இறந்தால் 10,000 ரூபாயை நஷ்டயீடாக கொடுக்கிறார்கள். அதேபோல் நமது தமிழக அரசும் இவர்களுக்கு இன்ஷூரன்ஸ் போன்ற ஒரு ஏற்பாட்டைச் செய்து நஷ்ட ஈடு கிடைக்கச் செய்ய வேண்டும், அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பீடித் தொழிலாளர்கள். ஏற்கனவே தோழர் ரமணி அவர்கள் இதைப்பற்றி நிறைய பேசி இருக்கிறார்கள். இந்தத் தொழிலாளர்கள் மீது இலை நஷ்டம் ஏற்பட்டால், அவர்கள் தலையில் முதலாளிகள் சுமத்துகிறார்கள். தேவையான இலையைக் கொடுப்பதில்லை. 500 கிராம் இலையைக் கொடுத்து 1,000 பீடிகள் சுற்றிக் கொண்டுவர வேண்டுமென்று சொல்கிறார்கள். அப்படி 1,000 பீடிகள் சுற்றுவதற்கு மேலும் 50 கிராம் இலைத் தேவைப்பட்டால் அதை அவர்கள் விலைக்கு வாங்க வேண்டும். அதன் விலை ரூ. 3. கொடுக்கின்ற கூலி ரூ. 5½ ஆக, இப்படி இதிலே 3 ரூபாய் போய்விடுகிறது. மறைமுகமாக இம்மாதிரி கூலியிலே அவர்களுக்கு வெட்டு ஏற்படுகிறது. இந்தத் தொழிலாளர்களுக்கு பால்பேக் வேஜஸ் (Fall Back wages) நிர்ணயித்து ஷாப் ஆக்டின்கீழ் கொண்டுவந்து, அதற்கான வேஜஸ் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

சுருட்டுத் தொழிலாளர் சம்பந்தமாக சுருட்டுத் தொழில் இருப்பதாக அரசாங்க ரெக்கார்டுகளிலே இருக்க முடியாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே தனிக் கவனம் செலுத்த வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். அரசாங்க ரெக்கார்டுகளிலே சுருட்டுத் தொழில் தமிழகத்தில் நடைபெறுவதாக இல்லை. அதை ரெக்கார்டுகளிலே அரசாங்கம் காண்பிக்க முடியாது. ஆனால், சுருட்டு தயாரிக்கப்படுகின்றது; விற்கப்படுகின்றது. ஆனால், இந்தத் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை. கடைச் சிப்பந்திகளுக்கு இருக்கக்கூடிய நிலைமைகளைப் பற்றி நான் ஏற்கனவே குறிப்பிட்டேன். அதேபோல் ஓட்டல் சிப்பந்திகள் கூலி உயர்வு கேட்டால், உடனே வெளியே அனுப்பப்படுகிறார்கள். இதேமாதிரியான நிலைமை மற்றவர்களுக்கும் இருக்கிறது. செயற்கை வைரத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். டாக்சி டிரைவர்கள் மற்றும் ஆட்டோ டிரைவர்கள் இம்மாதிரி ஆயிரக்கணக்கான உழியர்கள், பத்தாயிரக் கணக்கான ஊழியர்கள் இருக்கிறார்கள். இம்மாதிரியான தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை.

கடைசியாக ஈ. எஸ். ஐ. பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். தொழிலாளர்கள் பணம் செலுத்துகிறார்கள். முதலாளிகளும் பணம் செலுத்துகிறார்கள். அந்த முறையில் பணம் பிடிக்கப்படுகிறது. அப்படி பிடிக்கும்போது இன்னும் பயனுள்ள முறையிலே

காரியங்கள் செய்யப்படவேண்டும். இந்தத் திட்டத்தின் மூலம் தொழிலாளர் குழந்தைகளுக்கு நோட்டுப் புத்தகங்கள், புஸ்தகங்கள் எல்லோருக்கும் வாங்கிக் கொடுங்கள், தொழிற்சாலைக்கு 1, 2 என்றில்லை; எல்லோருக்கும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு நிதி கொடுக்க வேண்டும். அதேபோல், உழைப்பவர்கள் உலகம் என்னும் பத்திரிகை எல்லோருக்கும் அனுப்புகிறார்கள். இதிலே கொஞ்சம் கவனம் செலுத்தி, சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோருக்கும் அனுப்புவதற்கான வாய்ப்பை அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஈ. எஸ். ஐ. மருத்துவமனை பற்றி—இன்றையதினம் அங்கே சரியாக மருந்துகள் கிடைப்பதில்லை. படுக்கை வசதி இல்லை, ஒரேமாதிரியாக யார் நுழைந்தாலும் ஊழல், லஞ்சம் என்று சொல்கிறார்கள். கோவையிலிருந்து என்னிடம் ஒரு பட்டியலே கொடுத்தார்கள். லீவ் வேண்டுமென்றால், ரூ. 10 கொடுக்க வேண்டும். இம்மாதிரியான நிலைமை ஈ. எஸ். ஐ. ஆஸ்பத்திரி நிர்வாகத்திலே இருக்கிறது. அட்வைசரி கமிட்டி சில இடங்களுக்கு விஸ்தரிக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. ஆனால், அது அந்த இடங்களில் விஸ்தரிக்கப்படவில்லை. ஆகவே, அதை விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1-10]

அமைச்சர் அவர்கள் பல இடங்களில் விஸ்தரிக்கிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள். அதை விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கொமாரபாளையம், திருவரம்பூர், மானாமதுரை முதலிய இடங்களில் எல்லாம் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

லேபர் கோர்ட்டுகள் சம்பந்தமாக இன்றைக்கு சென்னையிலே ஒரு ட்ரிபியூனல், மூன்று லேபர் கோர்ட்டுகள் இருக்கின்றன. கோவையிலே ஒன்றும், மதுரையிலே ஒன்றும் இருக்கின்றன. தமிழகத்தின் முழுமையான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இது போதவில்லை. அதனால் மூன்று ஆண்டுகளுக்கு மேலும் கூட வழக்குகள் கோவையிலும், மதுரையிலும் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. ஆகவே திருச்சியிலே ஒரு லேபர் கோர்ட், அதேபோல திருநெல்வேலியிலே ஒரு கிளையுமாக புதிதாக தமிழ் நாட்டிலே இரண்டு லேபர் கோர்ட்டுகளை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தற்காலிக தொழிலாளர்களை நிரந்தரம் செய்வது சம்பந்தமாக இரண்டு ஆண்டுகளில் 480 நாட்கள் வேலை செய்தால் நிரந்தரம் என்று அமைச்சர் அவர்கள் சட்டம் கொண்டுவந்திருக்

கிறார்கள். இது குதிரைக் கொம்பாக இருக்கிறது. ஆகவே இதை மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

'கான்ட்ராக்ட் லேபர் ரெகுலேஷன்' அல்ல, 'கான்ட்ராக்ட் லேபர் அபாலிஷன்' என்று கொண்டு வருவேன் என்று சொன்னார். முழுமையாக வாசிப்பதற்கு நேரம் இல்லை. ஆகவே அந்த சட்டம் உடனடியாக தேவை. அமைச்சர் அவர்கள் உடனடியாக கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, லேபர் வெல்பேர் ஆபீசர்கள் சம்பந்தமாக—வெல்பேர் ஆபீசர்கள் முதலாளிகளின் ஆளாகவே இருக்கிறார்கள். ஆகவே சம்பளத்தை அரசாங்கம் பெற்றுக் கொண்டு, அரசாங்கம் அவர்களை நியமிக்கும் என்றும் அதற்கான சட்டம் கொண்டு வருவோம் என்றும் கூறினார். இரண்டு ஆண்டுகள் முடிந்துவிட்டது. உடனடியாக அந்த சட்டத்தைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

புதியதாக தொழிற்சாலை ஆரம்பிக்க முதலாளிகள் அனுமதி கேட்டால், ஏற்கெனவே மூடிய ஆளாக இருந்தால் அனுமதி கொடுக்கக் கூடாது. அதற்கும் சட்டம் கொண்டு வருவேன். அகில இந்திய அடிப்படையிலே அதற்காக போராடுவேன் என்று அமைச்சர் அவர்கள் ஏற்கனவே கூறினார்கள். தமிழகத்தில் அம்மாதிரியான நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அம்மாதிரி தொழிற்சாலையை மூடியவர்கள் மறுபடியும் வேறு பெயரிலே திறப்பேன் என்றால் அதைத் தடுப்பதற்கு சட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வேலை நிறுத்தங்கள் சம்பந்தமாக, அமைச்சர் அவர்கள் தெளிவாக கூறியிருக்கிறார்கள். அவருடைய வாசகத்தை அப்படியே நான் வாசிக்கிறேன். 'தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்கிறார்கள் என்றால், அதனை வேண்டுமென்றே செய்வதில்லை; வேலை நிறுத்தம் செய்து விட்டு ரூபாய்க்கு 4 அணா வட்டியிலே பணம் கடன் வாங்கி குடும்பம் நடத்தும் கஷ்டத்தை நாம் பார்க்கிறோம். பட்டினி கிடந்து கஷ்டப்படு கிறார்கள். ஆகவே, அவர்களாகவே செய்யவில்லை. அவர்கள் மீது திணிக்கப்படுகிறது. அதை யாரும் மறந்துவிடக் கூடாது.'

ஆகவே நான் அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன். வேலை நிறுத்தம் என்பது திணிக்கப்படுகின்றது. ஆகவே தவிர்க்க முடியாமல் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தால் அதை தடுப்பதற்கான முறையிலே சட்டத்தை கொண்டு வரவேண்டாம்; அதை நிறுத்துங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

கடைசியாக நான் குறிப்பிட விரும்புவது, தமிழகத்தில் தொழிலாளர் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். இந்த உரிமைகள் பாதுகாப்பதின் மூலமாக ஜனநாயக இயக்கம் வெற்றி பெற முடியும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். ஆகவே அந்த உணர்வோடு தொழிலாளர்களுக்கு இருக்கிற தொழிற்சங்க உரிமையை, ஜனநாயக உரிமையை பாதுகாக்க வேண்டும், தொழிலாளர்களுக்கு அர்த்த உரிமைகளை பெற்றுத் தரவேண்டும் என்று தொழிலாளர் நல அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு, இந்த அரசு அதில் முன்னணியில் நிற்க வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலம், வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மானியக் கோரிக்கைகள் மீது பேசுகிற வாய்ப்பினை அளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றையதினம் தமிழகத்தில் அகில இந்தியாவிலும் இல்லாத அளவிற்கு தொழில் அமைதி நிலவுகிறது. அதற்கு முக்கிய காரணம் நம்முடைய மதிப்பிற்குரிய புரட்சித் தலைவர் அவர்களும், அவருடைய அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் தொழிலாளர் நல அமைச்சர் அவர்களுமே ஆவார்கள். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் தொழிற் சங்கங்களில் பல பதவிகளை வகித்து பிரச்சினைகளை உணர்ந்து அவற்றை தீர்ப்பதற்கு பல நல்ல திட்டங்களை எல்லாம் வகுத்து வெற்றி பெற்றிருக்கிறார்.

தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி போன்ற நல்ல வசதிகளை இந்த அரசு செய்கின்றது. என்னுடைய தொகுதியில் மதுராந்தகம் சர்க்கரை ஆலை தொழிலாளர்களுக்கு 40 வீடுகளை கட்டிக் கொடுப்பதற்கு அரசு முன் வந்திருக்கின்றது. அதற்காக என்னுடைய பாராட்டுதலைக் தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமல்ல, தொழிலாளர்களுடைய நலனில் அக்கறை கொண்டு அவர்களுக்கு மருத்துவ விடுப்பு அளிக்க வேண்டுமென்பதற்காக ஒரு குழுவை அமைத்து இருக்கிறது இந்த அரசு. ஆலையிலே இருக்கின்ற நிர்வாகஸ்தர்களுக்குதான் இந்த மருத்துவ விடுப்பு கொடுக்கப்பட்டு வருகிறது. அதை தொழிலாளர்களுக்கும் நீட்டிக்க வேண்டுமென்று அவர்கள் கோரிக்கை விடுத்தவுடன் அதை அரசு ஆழ்ந்து பரிசீலித்து அதற்காக குழுவை அமைத்து அதனுடைய முடிவிற்காகக் காத்துக் கொண்டிருக்கிறது. அந்த அறிக்கை கிடைத்தவுடன் தொழிலாளர்களுக்கு மருத்துவ விடுப்புக் கிடைக்கக்கூடிய வகையிலே உத்தரவு போடவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய தினம் சர்க்கரை ஆலையிலே வேலை செய்கின்ற மக்களுக்கு தலைமேலே தொங்குகின்ற கத்தியைப் போன்ற ஒரு பாதகமான சட்டம் இருக்கிறது. அங்கே வேலை செய்கிற தொழிலாளர்கள் பேரிலே கிரிமினல் வழக்குப் போடப்பட்டால், அந்த வழக்கு வழக்கு மன்றத்திலே இருக்கின்ற நேரத்திலே, அந்தத் தொழிலாளர்களை சஸ்பெண்ட் செய்துவிடுகிறார்கள். அது மட்டுமல்ல, அந்த வழக்கு 3 மாதங்களுக்குள் முடியாமல் இருந்தால் நிரந்தரமாகவே வேலையை விட்டு வீட்டுக்கு அனுப்பி விடுகிறார்கள். நம்முடைய நாட்டிலே எந்த வழக்கும் 3 மாதத்திலே முடிந்ததாக வரலாறு இல்லை. கொலை செய்தவர்களும், கற்பழித்தவர்களும், குடித்துவிட்டு அட்டகாசம் செய்கிறவர்களும் கோயில் போன்ற நல்ல ஸ்தாபனங்களிலே அறங்காவலர்களாக இருக்கிறார்கள்; ஆனால் எந்தப் பழிபாவமும் செய்யாதவர்கள் ஏதோ ஒரு தவறின் காரணமாக வீண் பழியைப் போட்டுவிட்டால் உடனே அவர்கள் மீது வழக்குப் போடப்பட்டால் அவர்களை 3 மாதத்திலே வீட்டுக்கே அனுப்பக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இந்த அரசு அதை ஆழ்ந்து பரிசீலித்து அந்தச் சட்டத்தை திரும்பப் பெற்று வழக்கு மன்றத்திலே நிரூபிக்கப்பட்டபிறகு அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கக்கூடிய முறையிலே திருத்தியமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சர்க்கரை ஆலை, காகித ஆலை இவைகளில் தொழிலாளர்கள் பல ஆண்டுகள் பணியாற்றியும்கூட—உதாரணமாகச் சொன்னால் மதுராந்தகம் சர்க்கரை ஆலையில் 10 ஆண்டுகளாக கேஷ்யுவல் லேபராகப் பணியாற்றி வருகிறார்கள். மாமண்டூர் காகித ஆலையில் 20, 25 ஆண்டு காலம்கூட கேஷ்யுவல் லேபராகப் பணியாற்றி வருகிறார்கள்—அவர்களுக்கு எல்லாம் அன்றாடக்கூலி 4 ரூபாய் தான். அதுவும் வருடத்திலே 3 மாதங்களுக்குத்தான் கொடுக்கப் படுகிறது. இப்படிப்பட்ட நிலைமையில் அவர்களுக்கு எப்படி பாதுகாப்பு இருக்கும் என்பதை அரசு சிந்தித்துப் பார்த்து கேஷ்யுவல் லேபராக 2 ஆண்டுகள் பணியாற்றியிருந்தாலும் அவர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டுமென்று சொல்கின்ற முறையிலே ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய தினம் பல இடங்களிலே குழந்தைகளை வேலைக்கு அமர்த்துகிறார்கள். அந்தக் குழந்தைத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக் கூடிய முறையிலே சட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இன்றைய தினம் இருக்கின்ற இந்த அரசு இரும்புக் கரத்தைக் கொண்டதல்ல, கருணைக் கரங்களால் தொழிலாளர்களுக்கு நல்ல பல திட்டங்களைச் செய்து கொண்டு வருகிறது. மேலும் தொழிலாளர்களின் பிரச்சினைகளை உணர்ந்து அவர்களுடைய நலனைப் பாதுகாக்கின்ற பல நல்ல சட்டங்களைக் கொண்டுவர வேண்டுமென்று

கேட்டுக் கொள்கிறேன். தொழில் அமைதி தமிழ் நாட்டிலே இருக்கிறது என்று சொன்னால், அது மேலும் வளரவேண்டு மென்று சொன்னால், தொழிற்சாலைகளிலே தொழிலாளர் களுக்கு ஒரு பங்கு அளிக்க வேண்டும். புதிதாக எந்தத் தொழிற் சாலைகளைத் துவக்கினாலும், அதிலே தொழிலாளர்களுக்கு ஒரு பங்கும், ஏற்கெனவே இருக்கின்ற நிறுவனங்களில் தொழிலாளர் களுக்கு அதிகப்படியான பங்கையும் நிர்ணயம் செய்து தொழி லாளர்கள் அந்தப் பங்கைச் செலுத்தினால் அந்த மூலதனத்தில் அவர்களுக்கும் பங்கு இருக்கிறது என்ற நிலைமை ஏற்பட்டு விட்டால் தொழில் அமைதி தமிழகத்திலே இன்னும் சிறப்பாக இருக்கும், அதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மானியத்தின் மீது இன்றைய தினம் பேசுகின்ற நேரத்திலே, விவசாயத் தொழிலாளர்கள் நிலைமைகளைப்பற்றிச் சொன்னார்கள். விவசாயத் தொழிலாளர்களுக்காக சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். அந்தச் சட்டங்கள் எல்லாம் எவ்வளவு தூரம் அமல்படுத்தப்படுகின்றன என்பதைப் பார்க்க வேண்டும். அமல்படுத்தப்படுகின்ற அதிகாரம் நமக்கு இருக்கிறது. ஆனால், ஏன் அமல்படுத்தப்பட முடியாத நிலைமை ஏற்படுகிறது என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

(பிற்பகல் 1-20)

இதை நான் ஏன் சொல்லுகிறேன் என்றால், அரசாங்கம் சட்டம் போட்டிருக்கிறது; அதிகாரிகளும் அதை நிறைவேற் றப் பார்க்கிறார்கள்; ஆனால், சட்டத்திலே இருக்கின்ற ஒரு சில தவறுகள் அவர்களுக்குப் பாதுகாப்பாகப் போய்விடுகின்றன. அதனால் சமுதாய விரோதிகளுக்குப் பாதுகாப்பாகப் போய்விடு கிறது. அந்த மக்களுக்கு வீட்டு வசதி இல்லாத நிலைமை இருக் கிறது. இந்தப் பிரச்னையை யாராவது எழுப்பினால் அவர்களை வீட்டை விட்டே வெளியே அனுப்புகின்ற நிலைமை இருக்கிறது; அல்லது அந்தப் பகுதியிலேயிருந்து வெளியே வர முடியாத நிலை மைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அவர் களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்ற முறையிலே சட்டத்தில் திருத் தத்தைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் வாழுகின்ற மக்களுக்கு வீட்டு வசதிசெய்து கொடுப்பதற்காக ஊரக வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாகக் கட்டப்படும் வீடுகளுக்கு 3,750 ரூபாய் வரையில் கடன் வசதி செய்து கொடுக்கப்படுகிறது. அரிசனங்களுக்கு 1,000 ரூபாய் மானியம் அளிக்கப்படுகிறது. இந்தத் தொகையின் மூலம் அவர்களால் வீடு கட்ட முடியாத நிலை இருக்கிறது. எனவே,

அதை மாற்றி கடன் வசதியை மேலும் பெருக்கி 5,000 ரூபாய் கடன் வசதி கிடைக்க வழிவகைகளை இந்த அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அரசு ஐந்தாண்டுகளில் 200 ஆயிரம் வீடுகளைக் கிராமப்புறங்களில் கட்டிக் கொடுப்பதற்காகத் திட்டமிட்டு இருக்கிறது. அதற்காக என்னுடைய பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடிசை மாற்று வாரியத்தின் வாயிலாக சென்னை நகரத்திலே பல குடிசைப் பகுதிகளில் உள்ள குடிசைகளை மாற்றி பல அடுக்கு மாடிக் கட்டிடங்களாகக் கட்டியிருக்கிறார்கள். அதைப் போன்ற வசதியை நகராட்சிப் பகுதிகளுக்கும் விஸ்தரித்து அங்கே வாழக்கூடிய மக்களுக்கும் குடிசை மாற்று வாரியத்தின் வாயிலாக பல அடுக்கு மாடி வீடுகளைக் கட்டி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிக் கட்டிக் கொடுப்பதால் நிலம் கிடைக்கவில்லை என்கின்ற நிலைமைகள் மாறி, நஞ்சை நிலத்தைக் கைப்பற்றி அந்த இடங்களில் வீட்டு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்ற நிலைமையும் மாறி, குடிசை மாற்று வாரியத்தின் மூலம் கட்டிக் கொடுக்கப்படும் பல அடுக்கு மாடி வீடுகளில் அவர்களுக்கு வசதிகளைச் செய்து கொடுக்க வாய்ப்பிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வீட்டு வசதி வாரியத்தின் வாயிலாக என்னுடைய மதுராந்தகம் தொகுதியில் எந்தவொரு முன்னேற்றமும் ஏற்படவில்லை. அங்கே எந்த வீடும் கட்டிக் கொடுக்கப்படவில்லை. அந்த நிலைமைகளை மாற்றி, அங்கே வாழும் மக்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகப் பல வீடுகளைக் கட்டிக்கொடுக்க வேண்டும்; அரசாங்க அலுவலகங்களில் வேலை செய்யும் சிப்பந்திகளுக்கும், மற்றுமுள்ள தொழிலாளர்களுக்கும் இந்த வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

சென்னைப் பெருநகர் வளர்ச்சி மன்றத்தின் வாயிலாக சென்னை போன்ற பெருநகரங்களில் சீரிய திட்டங்களைச்செய்து கொண்டு வருகிறார்கள். ஆனால் அதன் மூலம் கொடுக்கப்படும் கட்டளைகளை, அந்த வீடுகளைக் கட்டுபவர்கள் நிறைவேற்றுகிறார்களா என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைக் கண்காணிப்பதற்கான அதிகாரிகள் இருந்தாலும் சரி, அவர்களுடைய கண்களிலே, மண்ணைத் தூவிவிட்டு, சிலபேர், கொடுக்கப்படும் உத்தரவுகளுக்கு மாறாகப் பல அடுக்கு மாடிகளைக் கட்டுவது அல்லது எவ்வளவு இடம் முன்னே விடப்பட வேண்டுமென்று சட்டம் இருக்கிறதோ, அதை அமல் நடத்தாமல் வீடுகளைக்கட்டுவது ஆகிய காரியங்களைச் செய்து கொண்டு இருக்கிறார்கள். அத

னால் பல தொல்லைகள் ஏற்படுகின்றன. இதைச் சரியான முறையிலே செய்வதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

தொழிலாளர் நல மானியக் கோரிக்கையில் பேசுகின்ற நேரத்தில் பல உறுப்பினர்கள் அரசாங்கத்திற்குப் பல நல்ல கருத்துக்களைச் சொல்லியிருந்தாலும் ஒரு விஷயத்தைப்பற்றி வற்புறுத்தியிருக்கிறார்கள். அதாவது, அன்-ஆர்கனைஸ்ட் லேபருக்கு வேண்டிய பாதுகாப்பையும், வசதியையும் எப்படி செய்து கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அன்-ஆர்கனைஸ்ட் லேபருக்கு அமைப்புகள் இல்லை. அந்த அமைப்பை உருவாக்குவதற்கு அரசாங்கமே ஏதாவது ஒரு சட்டத்தைக் கொண்டு வர வேண்டும். அப்படிக் கொண்டுவந்தால்தான் அவர்களுக்குப் போதிய பாதுகாப்பும், வசதிகளும் கிடைக்கவும், அவர்களது குறைகள் உடனடியாக அரசாங்கத்திற்கு எட்டவும் வாய்ப்புகள் இருக்கும். அதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று, என்னுடைய உரையை முடிக்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மாலை 4 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 1.24 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

—X—

மாலை 4.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

* திரு. கி. சட்டநாத கரையாளர்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கொண்டுவந்து நிதி கோரியுள்ள பிரேரணையோடு ஒப்புதலுடைய ஒருவன் என்ற முறையிலே, துறையிலே உள்ள ஒரு சில குறைகளைச் சுட்டிக் காட்டி அமர ஆசைப்படுகிறேன். தொழிலாளர் நலனைப் பற்றிச் சிந்திக்கும்போது, சாதாரணமாக நாட்டிலே தொழிற்சங்க இயக்கத்தை வைத்து நடத்தக்கூடிய தொழிலாளர் நலனை மாத்திரம் குறிக்கோளாக வைத்துப் பேசுவது வழக்கம். இன்று பேசிய நண்பர்கள் பலரும் அன்னார்கனைஸ்ட்

[திரு. கி. சுட்ட நாக கரையாளர்] [1981 ஏப்ரல் 21

செக்டாரில், அமைப்புகளின் கீழ் வராத தொழிலாளர் இயக்கத்தைப் பற்றி, குறிப்பாக, பேசியமைக்குப் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இன்று அமைப்புகளிலே வராத பல்வேறு தொழிற் சங்கங்கள், தொழிலாளர் அமைப்புகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. அதிலே, குறிப்பாக, வறுமைக் கோட்டின் கீழே, கடை நிலையிலே இருக்கக்கூடிய கட்டிடத் தொழிலாளி, நகர்ப்புற, கிராமப்புறங்களிலே பொருள்கள் விநியோகிக்கும் துறையிலே பணியாற்றும் தொழிலாளர்கள், பாதுகாப்பு வேலைகளைச் செய்து கொண்டிருக்கிற தொழிலாளிகள், கிராமப்புறங்களிலிருந்து விவசாயப் பொருள்களைக் கொண்டு வந்து நகர்ப்புறங்களிலே விற்கக்கூடிய கூலி வேலை செய்பவர்கள், லோடிங், அன்லோடிங் வேலை செய்யும் தொழிலாளர்கள், வீடுகளிலே வேலை செய்யும் டொமஸ்டிக் ஒர்க்கர்ஸ், லாட்ஜ்களிலே வேலை செய்யக் கூடிய பெரும்பகுதி தொழிலாளிகள், இவர்களெல்லாம் இந்த வறுமைக் கோட்டின், எல்லையின்கீழ் வாழ்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தத் துறையிலே மிக அதிகமாக பரந்து பணியாற்றும் தொழிலாளி கட்டிடத் தொழிலாளி. இன்று இந்த நாட்டிலே மிகமிக முக்கியமான தொழிலான கட்டிடத் தொழிலிலே ஈடுபட்டிருக்கக்கூடிய தொழிலாளி, இந்த நாட்டிலே சொல்ல முடியாத அவதிக்கு உட்பட்டிருக்கிறான். அவர்களுடைய குறையைப் பற்றி நான் சொல்வதற்கு முன்பு, அவர்களுடைய வேலை வாய்ப்பையும் சொல்ல வேண்டியிருக்கிறது. இன்று ஒரு சமுதாயத்திற்கு வேலை வாய்ப்பு குறைந்து கொண்டே போகிறது என்றால் அது, குறிப்பாக, கட்டிடத் தொழிலாளிக்குத் தான்.

கட்டிடத் தொழிலாளர்களுக்கு வேலை குறைகிறது என்று சொன்னால், நாட்டிலே கட்டிடம் கட்டுவதற்குள்ள வாய்ப்பு குறைகிறது என்றுதான் பொருள். சமீப காலப் புள்ளிவிவரத்தின்படி 1970-லே 100 என்று குறி எண் வைத்துக் கொண்டால்-(ஒரு இன்டக்ஸ் நம்பர்) வைத்துக் கொள்வோமேயானால் இன்றைக்கு 77–78-ல் அது 164 ஆக உயர்ந்து, 78–79-லே 201 ஆக உயர்ந்தது, மேலும் 10 ஆண்டுகளின் முடிவில் 1980-ல் 30 சதவீதம் உயர்ந்திருக்கிறது என்று 'ஈஸ்டர்ன் எக்கனாமிஸ்ட்' சுட்டிக்காட்டுகிறது. கடந்த ஆண்டிலே சிமெண்ட், ஸ்டீல் விலை உயர்ந்த காரணத்தினால், இதற்கு மேலும் கட்டிட சாமான்கள் விலை உயர்ந்து இன்று 3 பங்கு உயர்ந்து இருக்கிறது என்பதை இந்தப் புள்ளிவிவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. இந்த நிலையில் 10 ஆண்டுக்கு முன்பு, 50 ஆயிரம் ரூபாயில் ஒரு வீடு கட்டியிருந்தால், இன்று அதே கட்டடத்தைக் கட்டுவதற்கு $1\frac{1}{2}$ லட்சம் ரூபாய்கள் ஆகும் என்று அரசு புள்ளிவிவரம் கூறுகின்றது. இந்த நிலையிலே வீடு கட்டுவதற்குத் தேவையான பொருள்களைப் பெற முடியவில்லை. வீடு கட்டுவோர் அரசு கடன் இருந்தால்தான் கட்ட,

செயலாற்ற முடிகின்றது. விலை உயர்வில் மிக அதிகமாக விலை உயர்ந்திருப்பது சிமெண்ட் தான். சிமெண்டின் உற்பத்தி 197 லட்சம் டன் ஆண்டு ஒன்றுக்கு உற்பத்தியானது இன்று 170 லட்சம் டன்களாக குறைந்து இருக்கின்றது. தமிழ்நாட்டில் 32 லட்சம் டன் உற்பத்தி செய்கிறோம். அதிலே நமக்கு என்று ஒதுக்கக் கூடிய இலக்கு 15 லட்சம் டன்கள்தான். அதில் நமக்கு வந்து சேருவது 14 லட்சம் டன்கள். நமது தேவை சென்னை மாநகரத்தில் உபயோகப்படுத்துகின்ற சிமெண்ட்டின் இலக்கு 55 ஆயிரம் டன்களாகும். இதர பகுதிகளிலே, பல்வேறு துறைகளிலும், தொழில் துறைகளிலேயும் உபயோகப்படுத்துவது எஞ்சிய சிமெண்டாகும். அதை விநியோகம் செய்கின்ற முறையிலே பல்வேறு கோளாறுகள் இருக்கின்றன. சுமார் 160 டீலர்ஸ் விநியோகம் செய்ய லைசன்ஸ் பெற்றவர்கள் இருக்கிறார்கள். கோவாப்ரேடிவ் செக்டார்கள் மூலமும் விநியோகிக்கிறோம். இத்தனை இருந்தும் தமிழ்நாட்டிலே (flourishing black market) வளமான கருஞ்சந்தை இருக்கின்றது. கன்ட்ரோல் விலை 26.66 ரூபாய் என்று கெசட் (Extraordinary) மார்ச் 25-லே பிரசுரித்திருக்கின்றது. ஆனால் அந்த சிமெண்ட் 55 ரூபாயில் இருந்து 70–75 ரூபாய்கள் வரை விற்கின்றது. இந்தத் தொழிலை மார்வாடிகள வெற்றிகரமாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். இதைத் தடுக்க அரசினால் ஏன் முடியவில்லை என்று தெரியவில்லை. இதனால் தொழிலாளர்கள் எந்த அளவுக்குப் பாதிக்கப்படுகிறார்கள் என்பதற்காகத்தான் இதை மந்திரி அவர்கள் முன் வைக்கிறேன். இந்தக் கட்டிடத் தொழிலாளர்களின் குறையை மிக நல்ல முறையில் தெரிந்தவர் என்பதால்தான் இதை மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இன்று மிக மிகத் தேவை இந்தத் தொழிலாளருக்கு வேலை வாய்ப்புதான். அவர்களுக்குத் தேவை கூலி கூட அல்ல. பாதுகாப்புதான். அடுத்தபடி அவர்களுக்குத் தேவை. இந்த பாதுகாப்புச் சட்டம் உருவாகவில்லை. கூடிய சீக்கிரம் அந்தச் சட்டம் உருவாகும் என்று சொல்லுகிறார்கள். தமிழ்நாட்டிலே இன்றைக்கு 2 லட்சத்து 34 ஆயிரம் பேர்கள் கட்டிடத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்று ரிசர்ச் ஸ்டடி செய்து லேபர் டிப்பார்ட்மெண்டில் ஸ்டாடிஸ்டிக்ஸ் கொடுத்து இருக்கிறார்கள். அது அண்டர் ஸ்டடிதானே தவிர, முழுமையான ஸ்டடி என்று சொல்ல முடியாது. இந்தத் தொழிலாளர்கள் எந்தவிதமான பாதுகாப்பும் இன்றி பரந்து கிடக்கிறார்கள் என்று எனக்கு முன்னாலே பேசிய நண்பர்கள் சுட்டிக்காட்டி உள்ளார்கள்.

[மாலை 4.10]

இந்தத் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் கிடையாது. சர்வ சாதாரணமான நிகழ்ச்சி அவர்கள் சாரத்தில்

இருந்து கீழே விழுவதும், மரணம் அடைவதும் என்கிற நிலைமை இருக்கிறது. கழிந்த இரண்டு மாதங்களில் 17 கட்டிடத் தொழிலாளர்கள் பல ஊர்களில் இப்படி கீழே விழுந்து இறந்து இருக்கின்றனர். ஒரு நீண்ட பட்டியலே என்னிடத்தில் இருக்கிறது. அவற்றைப் பூராவும் நான் படிக்க விரும்பவில்லை. நேரம் இல்லை என்ற காரணத்தால் ஓரிரண்டைச் சொல்கிறேன். கொரட்டூரில் எல்லப்பன் என்கிற தொழிலாளி வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்படுகிற வீடுகளுக்கான பணி செய்து கொண்டிருந்த போது கீழே விழுந்து இறந்து விட்டான். அதேபோல் அந்தப் பகுதியில் சுவர் இடிந்து விழுந்து வீராசாமி (15 வயது), இஸ்மாயில் (25 வயது), முனுசாமி (35 வயது) படுகாயம் அடைந்து மருத்துவமனையில் இருக்கிறார்கள். அதேபோல் திருச்சியில் மூவர் உயிரிழந்து இருக்கிறார்கள். திண்டுக்கல்லில் ஒருவர் இறந்து இருக்கிறார். 9 பேர் காயம் அடைந்து இருக்கின்றனர். தூத்துக்குடியில் 7 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். ஒருவர் மரணம் அடைந்து இருக்கிறார். இவைகள் எல்லாம் பத்திரிகையில் வந்த செய்திதான். இப்படி உயிரிழந்தவர்களுக்கு எந்தப் பாதுகாப்பும் தரப்படவில்லை. இவர்கள் எல்லாம் எப்படி இறந்தார்கள். தற்கொலையா ? கொலையா ? என்று கேட்கிறேன். இந்த தேசத்தின் முக்கியமான பணிக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்கள் இவர்கள். இந்த சமுதாயத்தில் அவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை என்றால், இதற்குப் பரிகாரம் தேடுவது எப்படி ? மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் தொழிலாளர் நல அமைச்சராக மட்டும் பார்க்கவில்லை, அவரை இன்னும் தொழிலாளர் சங்கத் தலைவராகவே எண்ணுகிறேன். அவருக்கு என்னை விட அதிகமாகவே அந்தத் தொழிலாளர்களின் கஷ்டம் தெரியும். அவர்கள் அதைப் போக்குவதற்கு தக்க நடவடிக்கை எடுப்பார்கள் என்கிற நம்பிக்கை எனக்கு உண்டு. இந்தத் தொழிலாளர்களின் பாதுகாப்புக்காக ஒரு திட்டம், ஒரு புதிய போராட்டம் நடத்த இருக்கிறோம். அதாவது, எந்த ஊரில் கட்டிடத் தொழிலாளி விபத்தில் இறந்துபோனாலும், அந்தச் சடலத்தை எடுத்துக் கொண்டு, அந்தநகரத்தில் இருக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கோ அல்லது வீட்டிற்கோ அல்லது வேறு இடமாக இருந்தால் அந்த இடத்தில் இருக்கிற பெரிய அதிகாரியின் வீடு அல்லது அலுவலகம் முன்பு அந்தச் சடலத்தை கொண்டு சென்று, அந்தத் தொழிலாளர்களின் சார்பில் மகஜர் சமர்ப்பித்து அதன் பிறகுதான் ஈமச்சடங்கு செய்வது என்கிற முடிவுக்கு வந்து இருக்கிறோம். இப்படிப்பட்ட அறப்போர் நடத்துவதைத் தவிர அவர்களுக்குவேறு வழி இல்லை. அவர்கள் எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாமல் மரணப்போர் நடத்திக் கொண்டு இருக்கத் தயாராக இல்லை. ஆகவே, அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கும்

வகையில் சட்டங்களை அரசு விரைவில் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அவர்களில் உடல் ஊனமுற்றோர்களுக்கும் எந்தவிதமான வசதியும் இல்லை. கை கால் இழந்தவர்கள் பட்டியல் என்னிடம் இருக்கிறது. அவர்களுக்கும் பாதுகாப்பு தருகிற வகையில் சட்டங்கள் கொண்டு வரவேண்டும். அது மத்திய சட்டமாக இருந்தாலும் சரி, மாநில சட்டமாக இருந்தாலும் சரி, அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கும் வகையில் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சில ஆண்டுகளுக்கு முன்பு ஜனதா ஆட்சியில் இருந்த நேரத்தில் மத்திய தொழில் அமைச்சர் ரவீந்திரவர்மா இந்தத் தொழிலாளர்களுக்காக ஒரு சட்டம் கொண்டு வருவதாக இருந்தார்கள். அந்தச் சட்டத்தின் அடிப்படையில் ஒரு சில காண்ட்ராக்டர்களின் கீழ் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு மட்டும் பாதுகாப்பு அளிப்பதாக அது இருந்தது. அதே சட்டம் வருமானால் அது நமக்கு கூட பொருந்தி வராது. ஆகவே, தமிழ் நாட்டில் உள்ளவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கும் வகையில் சட்டம் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நகர்புறத்தில் வாழும் பல்வேறு இதர தொழிலாளர்களைப் பற்றியும் நான் குறிப்பிட விரும்புகிறேன். மினிமம் வேஜஸ் ஜி. ஓ. 2130 முக்கியமாக வரவேற்கக்கூடியது. அதற்காக நான் அமைச்சரைப் பாராட்டுகிறேன். டெலிவரி பாய்சுக்கு பாதுகாப்பு கொடுத்து இருக்கிறார்கள். இருப்பினும் சில கம்பெனிகளில் சேல்ஸ்மேன்களை டெலிவரி பாய்ஸ் என்று பெயரிட்டு 240 ரூ. சம்பளம் கொடுப்பதற்கு பதிலாக 210 ரூபாய் தான் சம்பளம் கொடுக்கிறார்கள்.

இரண்டு வேலைகளையும் சேர்த்து செய்கிறான். ட்ரை சைக்கிள் ஓட்டுகிறார், சாமான்களை கொண்டு கொடுக்கிறார். அதற்குரிய பணத்தை வாங்கிக் கொண்டு வந்து கொடுக்கிறார். ஆனால் சம்பளம் ஒரு வேலைக்குத்தான். இப்படி ஒவ்வொரு துறையிலேயும் தொழிலாளர்கள் சுரண்டப்படுகிறார்கள்.

குறிப்பாக இப்போது ஒரு பெரிய மோசடி நடக்கிறது. செக்யூரிட்டி அரேஞ்மென்ட் என்று சொல்லிக்கொண்டு தொழிலாளர்களைக் கண்காணிக்க ரிட்டயர் ஆன போலீஸ் அதிகாரிகளை தனியாக வைத்துக்கொள்கிறார்கள். வாச்மென் வேலை செய்பவர்க்கு சம்பளம் 150 ரூபாய்தான் கொடுக்கிறார்கள். ஆனால் அந்த கம்பெனியிலிருந்து 400 ரூபாய், 500 ரூபாய் வாங்கிக் கொள்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு கும்பல் ஆங்காங்கே இருந்துக்கொண்டிருக்கிறது. இந்தமுறை தடுக்கப்பட வேண்டும். கடமையை ஆற்றக்கூடிய தொழிலாளிக்கு நியாயமான

கூலி கிடைக்க வேண்டும். கம்பெனிகளில் வாச்மேனாக பணியாற்றினால் அவர்களுக்கு உரிய பாதுகாப்பும் சம்பளமும் வழங்கப்பட வேண்டும். இடைத் தரகர்கூடாது. எந்த வேலை செய்தாலும் அந்த வேலையைச் செய்கின்றவர்களுக்கு உரிய சம்பளம், இடையிலே சுரண்டல் இல்லாமல், வழங்கப்பட வேண்டும். அதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 'காஷுவல் லேபர்' 240 நாள் ஒருவர் தொடர்ந்து ஒரு நிறுவனத்தில் வேலை செய்தால் அவரை நிரந்தரமாக்க வேண்டும். இப்போது நிரந்தரமற்ற முறையில் 5 ஆண்டு, 10 ஆண்டுகள்கூட வேலை செய்கிறார்கள். அதை ஒழித்துக் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

*திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு சட்டப் பேரவை உதவி சபாநாயகர் அவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்கைகள் மீது நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன்.

முதன் முதலாக தொழில் துறையை எடுத்துக்கொண்டால் பல இடங்களில் ஆங்காங்கே ஸ்டிரைக் செய்து, வேலைவாய்ப்பு இல்லாத சூழ்நிலை ஏற்பட்டு, தொழிலாளர்கள் வேலைக்கு போக முடியாத நிலைமை ஏற்படுகிறது. இந்த நிலைமை நாட்டில் நீடிக்கக்கூடாது. ஆகையால் வேலை நிறுத்தத்தை முடிக்க 3 மாதங்கள் என்று போகாமல் 30 நாட்களுக்குள் அந்தத் தகராறை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். நம்முடைய அமைச்சரவர்கள் தொழில் துறையில் எல்லா விஷயங்களையும் நல்லமுறையில் தெரிந்து பணியாற்றக்கூடியவர்கள். அவர்களுக்கு கீழே நல்லமுறையில் பணியாற்றக்கூடிய அதிகாரிகள், விஷயம் தெரிந்த அதிகாரிகள் இருக்கிறார்கள். ஆகவே, தொழிலாளர்களுக்கு எவ்வளவு சீக்கிரத்தில் நல்ல காரியங்களைச் செய்ய முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் செய்ய வேண்டும். 30 நாட்களுக்குள் தகராறை தீர்த்து வைக்க வேண்டும். மாதக் கணக்கில், வருஷக் கணக்கில் தொழில் தகராறு இருக்கக்கூடாது. 30 நாட்களுக்குள் முடியவில்லை என்றால் 90 நாட்களுக்குள் எப்படியாவது பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வேண்டும். இல்லை என்றால் கோர்ட்டுக்கு, ட்ரிபியூனலுக்கு அனுப்பி, விரைவில் தகராறை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: 30 நாள் அல்லது 60 நாட்களுக்குள் தகராறு தீர்க்கப்படவில்லை என்றால்

உடனடியாக கோர்ட்டுக்கு அனுப்ப வேண்டுமென்பதை அனைத்துத் தொழிற் சங்கங்களும் ஏற்றுக்கொள்கிறார்களா என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : எனக்கு அந்த கோர்ட் தொழில் எல்லாம் தெரியாது. சீக்கிரம் விவகாரம் முடிய வேண்டும். அதற்குத்தான் அமைச்சரவர்கள் இருக்கிறார்கள். உடனடியாக முடிப்பதற்கு எவ்வளவு சீக்கிரமாக காரியங்களைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் அவர்கள் 240 நாட்கள் ஒரு நிறுவனத்தில் ஒருவர் தொடர்ந்து வேலை செய்தால் அவரை நிரந்தரமாக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு சட்டம் இயற்றியிருக்கிறோம். ஆனால் தனியார் துறையானாலும் சரி, அரசு துறையாக இருந்தாலும் சரி 230 நாள் ஆனவுடன் அவரைக் கூப்பிட்டு 20 நாள் லீவ் போடச் சொல்கிறார்கள். அந்த 20 நாள் கழித்து மீண்டும் வேலை கொடுக்கிறார்கள். இப்படிச் செய்து அவரை நிரந்தரமற்ற தொழிலாளியாகவே நிரந்தரமாக வைத்திருக்கிறார்கள். அதையும் கண்காணித்து, அப்படிப்பட்டவர்களை நிரந்தரமாக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பல தொழிற்சாலைகளில், தனியார் மோட்டார் நிறுவனங்களில் டிரைவர், கண்டக்டர்கள் தினக்கூலிகளாக வேலை செய்கிறார்கள். அதை எல்லாம் சீர் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல பஞ்சாலைத் தொழில் போன்றவைகளில் அரிசனங்களுக்கு ரிசர்வேஷன் 18 சதவீதம் இருக்கிறது. ஆனால் அது பூர்த்தி செய்யப்படவில்லை. அது மட்டுமல்ல. எத்தனையோ தொழிற்சாலைகளில் பெண்கள் வேலை செய்தால் அங்கே வேலை செய்கின்ற பெண்களுக்கு ஒரு கூலி, ஆண்களுக்கு ஒரு கூலி வழங்கப்படுகிறது. ஏன் இந்த பாகுபாடு ? ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் என்றால், ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் இருவருக்கும் ஒரே சம்பளம்தான். டைப்பிஸ்டாக இருந்தாலும் இருவருக்கும் ஒரே சம்பளம்தான். அப்படி இருந்தாலும் பஞ்சாலைத் தொழில் போன்ற தொழில்களில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு ஆண், பெண் இருவரும் சமமாக வேலை பார்த்தாலும் கூட பெண்களுக்கு குறைந்த கூலிதான் கொடுக்கப்படுகிறது ; பாதுகாப்பு இல்லை. ஆகவே, ஆண்களுக்கு இருக்கிற கூலியையே பெண்களுக்கும் வழங்க வேண்டும் ; அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக பெண்களுக்கு பேறுகாலம் இருக்கிறது. பேறு காலத்தில், பேறுக்கு முன்னால் 9-வது மாதத்திலிருந்து வேலை செய்ய கஷ்டமாக இருக்கும்; பேறு காலத்திற்குப் பின்னால் 2 மாதம் ஓய்வு தேவைப்படுகிறது. ஆகவே, பெண்களுக்கு கட்டாயமாக 3 மாதம் பேறுகால லீவ் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[மாலை 4.20]

சில இடங்களிலே பெண்களை வேலைக்கு வைத்துக்கொள்வதில்லை, அதற்குக் காரணம் அவர்களுக்கு பேறுகாலத்தின் போது லீவு கொடுக்க வேண்டுமே என்பதுதான். இந்த அடிப்படையிலே பெண்கள் வெளியே போய்விட வேண்டிய நிலைமையைச் செய்து விடுகிறார்கள். ஆகவே இதிலேயும் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும் நமது அரசு என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து விவசாயக் கூலிகளுக்கெல்லாம் நாம் பல சட்டங்களை செய்திருக்கிறோம். அப்படிச் செய்திருந்தபோதும் கூட அந்த விவசாயக் கூலிகளுக்கு காண்ட்ராக்ட் முறையிலே தான் ஊதியம் வழங்கப்படுகின்றது. ஆகவே மற்ற தொழிலாளர்களுக்கெல்லாம் என்னென்ன சலுகைகள் செய்து கொடுக்கிறோமோ அதே மாதிரி இவர்களுக்கும் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கட்டிடத் தொழிலாளர்கள் பிரச்சினை சம்பந்தமாக நம்முடைய மாண்புமிகு எம். எல். ஏ. அவர்களின் தலைமையில் 300 பேர் உண்ணாவிரதம் இருந்தார்கள். கட்டடத் தொழிலாளர்கள் கட்டிடங்களில் மேலே இருந்து வேலை செய்கின்ற போது கீழே விழுந்துவிட்டால் அவர்களுடைய உயிருக்குப் பாதுகாப்பு இல்லை. ஆகவே கட்டிடத் தொழிலாளர்களுக்கான இன்சூரன்ஸ் திட்டத்தை அமல்படுத்த வேண்டும். அவர்கள் இறந்து விட்டால் அவர்களுக்கு 10,000 ரூபாய் கொடுக்கின்ற நிலைமையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஹைவேஸில் வேலை செய்பவர்கள் பலர் நிரந்தரமாக்கப்படாமல் தனியார்களிடம் பணியாற்றுகின்ற தினக்கூலிகள் போன்று வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அங்கே தினக்கூலியாக இருப்பவர்களை பெர்மனன்டாக்குவதற்கு ஏற்பாடுசெய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வீட்டுவசதி வாரியத்தைப் பொறுத்தவரையில் பல நல்ல காரியங்களைச் செய்துகொண்டு வருகிறீர்கள், அதைப் பாராட்டுகிறேன். வரவேற்கிறேன். நகரத்திலே இருப்பவர்களுக்கு பல இலட்சக் கணக்கான ரூபாய் கொடுத்து வீடு கட்டுவதற்கு வாய்ப்புக் கொடுக்கப்படுகின்றது. அதை நான் வரவேற்கிறேன். ஆனால் ஒரு கண்ணிலே வெண்ணெயும் இன்னொரு கண்ணிலே சுண்ணாம்பும் வைப்பது போன்று இல்லாமல் உங்களை நம்பிக்கொண்டிருக்கின்ற கிராமப்புற மக்களுக்கும் உதவ வேண்டும். தற்போது 40,000 வீடுகள் கட்டுவதற்கு அனுமதி அளித்திருக்கிறீர்கள். வீடு ஒன்றுக்கு 3,750 ரூபாய் தான் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இந்த 3,750 ரூபாயை வைத்து ஒரு அட்டாச் பாத்ரூம், ஒரு லெட்ரின் போட முடியுமா என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். ஆகவே இந்த நிலைமையை மாற்றி கட்டாயமாக ஒவ்வொரு வீட்டிற்கும் 10,000 ரூபாய் என்ற அளவிலேயாவது ஒதுக்கினால் தான் அது சாலச் சிறந்ததாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பணத்தைக் கொண்டு வீடு கட்டுவதற்கும் வசதியாக இருக்கும்.

கிராமப் புறங்களில் இருக்கின்ற தனிப்பட்டவர்களுக்கு வீடு கட்டுவதற்கு கடன் கொடுக்க வேண்டும். உதாரணமாக என்னை எடுத்துக்கொண்டால் நான் ஓரளவுக்கு நிலம் வைத்திருக்கிறேன். என்னைப் போன்றவர்கள் அதாவது கிராமப்புறங்களிலே இருக்கின்ற அரிசன சமுதாயத்து மக்கள் ஒரு இலட்சம் ரூபாய் அல்லது 50 ஆயிரம் அளவிலே ஒரு வீடு கட்டலாம் என்றால் முடியவில்லை. ஆகவே திருப்பிச் செலுத்துகின்ற சக்தி இருக்குமேயானால் அவர்களுக்கு கிராமப்புறங்களிலே வீடு கட்டுவதற்கு 50 ஆயிரம் என்ற அளவுக்காவது கடன் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். குறைந்த வட்டிக்கு என்று கூட கேட்கவில்லை, மற்றவர்களுக்கு கொடுக்கப்படுகின்ற அதே வட்டியை அதாவது 6 சதவீதமோ அல்லது 8 சதவீதமோ அந்த வட்டிக்குக் கடன் கொடுத்தால் அதன் மூலம் வீடுகளைக் கட்டிக் கொள்வதற்கு வாய்ப்பு இருக்கும். திருப்பிச் செலுத்த சக்தி உள்ளவர்களுக்கு இப்படிக் கடன் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யலாம். 3,750 ரூபாயிலே அரிசன மக்களுக்கு வீடு கட்டுகின்ற திட்டம் பல இடங்களிலே நடைபெற்று வருகின்றது. அப்படிப்பட்ட வீடுகளைக் கட்டுவதற்காக மக்கள் கிட்டத்தட்ட 2,500 அப்ளிகேஷன் அனுப்பிவிட்டு அதற்குரிய தொகை 75 ரூபாய், 45 ரூபாய் போன்றவற்றைக் கட்டிவிட்டு அந்த மக்கள் எல்லாம் சாரி சாரியாக ரூரல் ஹவுசிங் போர்ட் ஆபீசுக்கு வந்து காத்துக்கொண்டிருக்கக்கூடிய நிலைமை இருக்கின்றது. அது மட்டுமல்ல கட்டப்பட்ட வீடுகளுக்குச் சாங்ஷன் செய்யப்படாமல் இருக்கின்றது. இப்படி காலம் கடத்திக் கொண்டிருக்கின்ற நிலைமையை நாம் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். ஆகவே இதிலே காலம் கடத்தாமல் அவர்களுக்கெல்லாம் எவ்வளவு சீக்கி

ரத்திலே முடியுமோ அவ்வளவு சிக்கிரத்திலே வீடுகளைச் சாங்ஷன் செய்து கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அடுத்து இந்த வீடுகளைச் சாங்ஷன் செய்வதற்கு வில்லங்க சர்டிபிகேட் கேட்கிறார்கள். எதற்காக இந்த வில்லங்க சர்டிபிகேட்? பணத்தைக் கொடுத்து மனுவை அனுப்பியதற்குப் பிறகு சப் ரிஜிஸ்டர் ஆபீசுக்குப் போய் காத்துக்கிடந்து வில்லங்க சர்டிபிகேட் வாங்கிக் கொண்டு வரவேண்டிய நிலைமை இருக்கின்றது. ஆகவே அவர்கள் வில்லங்க சர்டிபிகேட் வாங்க வேண்டிய அவசியம் இல்லை, வீட்டு ரசீது வைத்திருந்தால் போதும் அவர்களுக்கு வீடுகள் கொடுக்கப்படும் என்ற முறையினை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கள்ளர் ரெக்ளமேஷன். பாதிக்கப்பட்டவர்கள் நிறைய பேர்கள் இருக்கிறார்கள். வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள் கிராமப்புறங்களிலே வீடுகளைக் கட்ட முடியாமல் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் ரூரல் ஹவுசிங் ஸ்கீமுக்கு எழுதிப் போட்டுவிட்டு வருஷக் கணக்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள். 1979 ஆம் ஆண்டு என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டில் வெள்ளம் வந்தது. அப்போது வீடுகள் இடிந்து பாதிக்கப்பட்டவர்கள் இன்று வரையில் தங்களுடைய வீடுகளைக் கட்ட முடியாமல் அவதிப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அப்படி பாதிக்கப்பட்டவர்கள் பற்றிய லிஸ்டை அந்தந்த கலெக்டர்களின் மூலமாக பெற்று உடனடியாக அவர்களுக்கெல்லாம் ப்ரையாரிட்டி கொடுத்து ஒரு ஸ்பெஷல் ஸ்கீம் மூலமாக சாங்ஷன் செய்து கொடுத்தால் அவர்கள் வீட்டைக் கட்டிக்கொள்வார்கள் என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பிறகு, கள்ளர் ரிக்ளமேஷன் ஸ்கீமிலிருந்து 3,225 ரூபாய் இனாமாகக் கொடுக்கிறார்கள். அவர்களை டிபார்ட்மெண்டிலேயிருந்து 1,705 ரூபாய் கட்ட வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால் அவர்களால் அந்தப் பணத்தை கட்ட முடியவில்லை. சமீபத்தில் என்ன உத்தரவு போட்டிருக்கிறார்கள் என்றால், தாட்கோ என்ஜினீயர்கள் அதற்குள் வீடு கட்ட முடியாது என்று சொல்கிறார்கள், ஆகவே 3,705 ரூபாய் கட்ட வேண்டும் என்று சொல்கிறார்கள். அவர்களால் அதை கட்ட முடியுமா? 1,705 ரூபாயையே கட்ட முடியாத அந்த பின் தங்கிய மக்களால் 3,705 ரூபாயை கட்ட முடியுமா? ஆகவே, அந்த 3,705 ரூபாயை அவர்களுக்கு நாமே அதாவது அரசாங்கமே கடனாகக் கொடுத்து, கள்ளர் ரெக்ளமேஷனில் கொடுக்கப்படும் பணத்தையும் சேர்த்து, அவர்களுக்கு நல்ல முறையில் வீடு கட்டிக் கொடுப்போமேயானால், இன்னும் சற்றுச் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று கூறிக் கொள்கிறேன்.

அது மாத்திரம் அல்லாமல், ஒருங்கிணைந்த திட்டத்தின் கீழ் சிறிய நகரங்களை விஸ்தரிக்கும் திட்டம் எவ்வளவு நல்ல திட்டம். பழனி எவ்வளவு பெரிய நகரம்—அருமையான நகரம், அந்த நகரத்தை விஸ்தரிக்கும் பணியில் ஈடுபடலாம். அதேபோல ஒவ்வொரு தாலுக்காவினுடைய தலைநகரத்தையும் இந்த ஒருங்கிணைந்த திட்டத்தின் கீழ் எடுத்துக் கொண்டு, வீடுகள் கட்டிக் கொடுப்பது, ரோடுகள் போடுவது இன்னும் அங்கே வரக்கூடிய யாத்திரிகர்கள் அல்லது பயணிகள் தங்குவதற்கு தங்கும் விடுதிகள் கட்டிக் கொடுப்பது போன்ற வேலைகளை எடுத்து நடத்தினால், அந்தப் பகுதிகளையும் விஸ்தரிக்க முடியும், மக்களுக்கும் நன்மை செய்த பலன் ஏற்படும் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல அரசு துறையிலே பணியாற்றக் கூடிய ஊழியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறோம். ஆனால் தாலூக்காக்களில் வேலை செய்யும் அரசு ஊழியர்களுக்கு மட்டும் அவ்வாறு வீடுகள் கட்டிக் கொடுக்கப் பெறவில்லை, அவர்களுக்கும், சென்னை, மதுரை போன்ற தலைநகரங்களில் பணிபுரியும் அரசு ஊழியர்களுக்குக் கட்டிக்கொடுப்பது போன்ற வீடுகளை கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதுபோன்று வீடுகள் கட்டி வாடகைக்கு விட்டோமேயானால் அப்படிக் கட்டுவதற்காக செலவழிக்கப்பட்ட பணம் முழுவதும் வாடகையாக திரும்ப வந்துவிடும் என்பதைச் சுட்டிக்காட்டவும் ஆசைப்படுகிறேன்.

அதேபோல நகர்ப்புற பகுதிகளிலே வீடுகள் வாடகைக்கு கிடைப்பது இல்லை. அதுவும் அரசாங்கத்தினுடைய வீடுகள் கிடைப்பதில்லை. சாதாரண மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட அரிசனங்களுக்கு குடியிருக்க வீடுகள் கிடைப்பதில்லை. அவர்களுக்கு அரசாங்க வாடகை வீடுகளும் கிடைக்கவில்லை. தனியாரிடமிருந்தும் கிடைப்பதில்லை. ஏனென்றால், அரிசனங்களுக்கென்று 18 சதவீதம் ஒவ்வொன்றிலும் ஒதுக்கியிருப்பதாக, அப்படி ஒன்றும் பல காரியங்களில் செய்யவில்லை என்றாலும் அப்படி ஒரு கருத்து பரவி விட்டதன் காரணமாக, அவர்கள் மற்றவர்களால் வெறுக்கப்படுகிற சூழ்நிலையில் இருக்கிறார்கள். ஆகவே வெளியிடங்களில் அவர்களுக்கு இடம் கிடைப்பதில்லை. ஆகவே, அவர்களுக்கென்று ஒதுக்கப்பெற்றதாக அறிவிக்கப்பட்ட அந்த 18 சதவிகித ஒதுக்கீட்டை முறைப்படி அவர்களுக்கே கிடைக்குமாறு, கட்டடங்கள் கட்டுவதிலோ, அல்லது கட்டிய வீடுகளை வாடகைக்கு விடுவதிலோ, முன்னுரிமை கொடுத்து அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அத்தோடு கிராமப்புறங்களிலே இருக்கக் கூடிய விவசாயிகள் மிகவும் அவதியடைந்த நிலையிலே இருக்கிறார்கள். அடிக்கடி

தீயினால், வெள்ளத்தால், அவர்களுடைய குடியிருப்புகள் அழிந்து போய் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, சங்கமாகத்தான் வந்து கேட்க வேண்டும் என்று இல்லாமல், தனியாக இண்டிவிஜுவலாக வந்து வீடு கட்ட உதவி கேட்பவர்களுக்கு எந்த தடையும் இல்லாமல், திருப்பிச் செலுத்தும் சக்தி இருக்கிறதா என்பதை மட்டும் பார்த்து, அவர்களுக்கு வீடு கட்ட கடன் கொடுத்து உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கிராமப்புறத்து மக்கள் வாங்கிய கடனை திருப்பி கொடுக்க மாட்டோம் என்றே சொல்ல மாட்டார்கள். அந்த மக்கள் விஸ்வாசமானவர்கள். நன்றி உடையவர்கள். ஆகவே அவர்களுக்கு உதவி செய்யுங்கள் என்று உங்களை கேட்டுக் கொள்கிறேன்.

கட்டிடத் தொழிலாளர்களுக்கு வீடு கட்ட உதவி செய்ய வேண்டும். நெசவுத் தொழிலாளர்களுக்கு வீடு கட்ட உதவி செய்ய வேண்டும். அதேபோல செங்கல் உற்பத்தி செய்யும் தொழிலாளர்களுக்கு வீடு கட்ட உதவ வேண்டும். எல்லா தொழிலாளர்களுக்குமே வீடுகள் கட்டிக் கொடுக்கும் வகையில் ஒரு பெரிய ஸ்கீமாக போட்டு, மத்திய வங்கியிலிருந்தோ அல்லது உலக வங்கியிலிருந்தோ பெரும் அளவில் கடன் வாங்கி வீடுகளைக் கட்டிக் கொடுத்தாலும் நல்லது. இவைகளையெல்லாம் அரசாங்கத்தினுடைய பரிசிலனையில் எடுத்துக் கொள்ள வேண்டும். இவைகள் எல்லாம் வீணாகாது. வாடகையாக வசூல் செய்து கடன்களை சுலபமாக திருப்பிக் கட்டி விடலாம். ஆகவே இதை ஆழ்ந்து பரிசிலனை செய்ய அரசு முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல நெசவுத் தொழிலாளர்கள் இருக்கிறார்களே, அவர்கள் மாஸ்டர் வீவர்ஸ் என்று சொல்லப்படுகிறவர்களின் கைகளில் அகப்பட்டுக் கொண்டு தவிக்கிறார்கள். ஆகவே, இந்தத் நெசவுத் தொழிலாளர்களுக்கு தனித் தனியாக அவர்களுடைய வீடுகளிலேயே கூடங்கள் கட்டிக் கொடுத்து, தறியைப் போட்டு, அவர்கள் எந்தவித தொல்லையும் இல்லாமல் வேலை செய்யக் கூடிய அளவில் உதவி செய்ய அரசு முன் வர வேண்டும். அப்படிச் செய்தால் பல இலட்க் கணக்கான நெசவுத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்க முடியும் என்பதை கூறி கொண்டு, முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

[மாலை 4-30 மணி]

*திரு கே. எம். தங்கமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும், வீட்டு வசதி, நகர்ப்பகுதி வளர்ச்சி ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது எனது கருத்துக்களை

காங்கிரஸ் கட்சி சார்பில் எடுத்து வைப்பதற்கான வாய்ப்பு கிடைத்தமைக்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இன்றையதினம் தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற கொள்கை குறிப்பினை அமைச்சர் அவர்களே நமக்கு அளித்திருக்கிறார்கள். அதில் அவர்கள் சொல்கிறபோது தொழிற்சாலைத் தலைவர்கள், பிரதிநிதிகள் தங்குவதற்கான இடத்தை தேனாம்பேட்டையி லுள்ள தொழிலாளர் நல வாரியத்தோடு இணைந்திருக்கிற காம்பவுண்டில் கட்டி 1981ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அநேக மாகத் திறக்கப்படலாம் என்று தெரிவித்திருக்கிறார்கள். அதற்காக நான் அமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரி வித்துக்கொள்கிறேன். ஏனென்றால், எவ்வளவோ தடவை தொழிலாளர்களுடைய பிரச்னைகளுக்காக என்னைப் போன்ற தொழிற்சங்கத் தலைவர்கள் எல்லாம் சென்னைக்கு வருகிற போது தங்குவதற்கு இடம் இல்லாத சூழ்நிலையை மாற்றி உழைக்கிற, பாட்டாளி வர்க்கத்திற்காக பாடுபடுகிற தொழிற் சங்கத் தலைவர்களுக்கு, அவர்களுடைய பிரதிநிதிகளுக்கு அவர்கள் தங்குவதற்காக குறைந்த வாடகையில் இப்படிப்பட்ட தொரு ஏற்பாட்டினை அவர்கள் செய்ய இருக்கிறார்கள் என்பதற் காக அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் தையல் பயிற்சி நிலையங்களை தொடங்க இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை நான் எண்ணிப்பார்க்கிறபோது தமிழ்நாட்டில் பின்தங்கியிருக்கிற தென் ஆற்காடு மாவட்டத்தில் அந்த பயிற்சி நிலையம் ஒன்றைத் துவக்கினால் நன்றாகயிருக்கும். ஆகவே அதை அங்கு தொடங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தமிழ்நாட்டில் ஏறக்குறைய 31 தொழில் பயிற்சி நிலையங்கள் இருக்கின்றன. அவை காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் வந்தவைதாம். இன்றையதினம் இந்தியாவின் நிதி அமைச்சராயிருக்கிற மாண்புமிகு திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களுடைய பெரும் முயற்சியால் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் அந்த 31 தொழிற் பயிற்சி நிலையங்களும் துவங்கப்பட்டன என்பதை யாரும் மறுத்துவிடமுடியாது. அன்றையதினம் தமிழ்நாடு ஒரு பொற்காலமாக இருந்ததை நான் எண்ணிப் பார்க்கிறேன். அதற்குப்பின்னால் இடைப்பட்ட வெளியில் வந்த சர்க்கார்கள் அதில் அக்கறை காட்டாத ஒரு சூழ்நிலை இருந்தது. ஆனால் இன்றையதினம் நீங்கள் இரண்டு தொழிற் பயிற்சி நிலையங்களை கடலூர், அரக்கோணத்தில் துவக்கி இருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அதில் என் மாவட்டத்தில் கடலூரில் ஒன்று துவக்கியதற்கு மீண்டும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் தொழிற் பயிற்சி நிலையங்களில் எல்லா ட்ரேட்களும் மாணவர்களுக்கு கற்றுத்தரப்படுகின்றனவா என்றால் முறையே எல்லா ட்ரேட்களும் கற்றுத் தரப்படவில்லை. எனவே அவற்றை உடனடியாக அமல்படுத்தவேண்டும்.

இன்றைய தினம் விலைவாசிகள் ஏறிக்கொண்டேயிருக்கின்றன. மிகப் பெரிய போராட்டங்கள் எல்லாத் துறைகளிலும் இன்று நடந்துகொண்டிருக்கின்றன. சமுதாயத்தில் உள்ள சராசரி மனிதர்கள் உட்பட கிட்டத்தட்ட ரூ. 4,000, ரூ. 5,000 சம்பளம் வாங்குகிற எல்.ஐ.சி. ஊழியர்கள் போன்றவர்கள் எல்லாம் விலைவாசி உயர்ந்துவிட்டது, ஆகவே அகவிலைப்படியை உயர்த்த வேண்டும் என்று போராடும்போது இந்த பயிற்சி நிலையங்களிலுள்ள மாணவர்கள் ரூ. 25, ரூ. 40 என்று ஸ்டைபன்ட் வாங்குகிறார்கள் என்றால் —1960-க்குப் பின்னால் அதை உயர்த்த முடியவில்லை என்றால்— அது சரியாக இருக்குமா, முறையாக இருக்குமா என்று பார்க்க வேண்டும். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த மாணவர்களுக்குத் தரப்படுகிற உதவிப் பணத்தை உயர்த்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் பெண்களுக்கு ஐ.டி.ஐ. தியாகராயநகரில் இருக்கிறது. அதன் முதல்வராக ஹானரரி போஸ்டிங் வேலை பார்க்கிறவர் சரியான முறையில் கவனம் செலுத்தாத காரணத்தால் அந்த பயிற்சி நிலையம் முறையாகச் செயல்படவில்லை என்று என் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

எனவே அந்த ஐ.டி.ஐ. தனியாக பெண்களுக்காக உள்ள அந்த தொழிற்பயிற்சி நிலையத்திற்கு ஒரு பிரின்ஸிபாலை அரசாங்கச் சார்பில் முழுநேர பிரின்ஸிபாலை நியமிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1977-ல் ஒரு பெரிய போராட்டத்தை தொழிற் பயிற்சி நிலையத்தில் இருக்கிறவர்கள் நடத்தியிருக்கிறார்கள். அதன் விளைவாக அரசு தொழில் மற்றும் வேலைவாய்ப்புத் துறை செயலாளர் ஒரு பெரிய அறிக்கையைத் தயார் செய்து அவர்களுக்கு என்னென்ன வேண்டுமென்று லிஸ்ட் தயார் செய்து சர்க்காருக்கு அனுப்பிவைத்திருப்பதாக அறிகிறேன். ஆனால் சம்பந்தப்பட்ட துறை செயலாளர் அனுப்பி வைத்திருக்கிற அறிக்கைமீது அரசு தேவையான நடவடிக்கைகள் எடுத்து இவற்றை அமல்படுத்துகிறதா என்றால் இதுவரை ஒன்றும் இல்லை. ஆகவே ஜீரோ என்ற பதிலைத்தான் தருவதாக அறிகிறேன்.

எனவே அரசுத் துறையிலே இருக்கின்ற அரசுச் செயலாளர் அந்தப் பகுதியினுடைய செயலாளராக அந்த வேலைவாய்ப்புத் துறையின் செயலாளராக இருந்து அறிக்கை சமர்ப்பித்திருப்

பதால் தேவையான நடவடிக்கைகளை நீங்கள் உடனடியாக எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே மத்திய அரசு நிர்ணயித்துள்ள ஊதிய விகிதங்களையெல்லாம் மாநில சர்க்கார் உயர்த்தலாம்; அதற்கான வாய்ப்பு உங்களுக்கு இருக்கிறது. அந்த வாய்ப்பு இருந்த போதிலும் அதை உயர்த்தாமல் இருப்பதன் மர்மம் என்ன என்பது எனக்கு விளங்கவில்லை. அந்த ஊதிய விகிதங்களை மாநில சர்க்காரை ஆளுகின்ற பொறுப்பை ஏற்றிருக்கின்ற நீங்கள் உடனடியாக அமுல்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தியாவிலே உள்ள பல்வேறு மாநிலங்களில் இருந்தும், தமிழகத்தின் சார்பிலும் அகில இந்தியாவிலே நடைபெறுகின்ற தொழில் நுட்பப் போட்டிகளிலே கலந்து கொள்கிறபோது தங்க மெடல்களை சுழற்கோப்பைகளை தமிழக மாணவர்கள் தொழிற் பயிற்சி நிலையங்களிலே பயிற்சி பெற்றுவந்த மாணவர்கள் பெற்று வருகிறார்கள் என்பது நாம் எல்லோரும் ஒப்புக் கொள்ளவேண்டிய ஒரு பெரிய உண்மை. ஆனால் அப்படி பரிசு பெறுகின்றவர்களுக்கு அரசுத் துறையிலே இருந்து சன்மானமாக ரூ. 50 ரூ. 100 என்று தருகிறார்கள். தவிர அவர்களுக்கு அட்வான்ஸ் இன்க்ரிமெண்ட் தந்தால் அவர்கள் உங்களுக்கு நன்றிசொல்ல கடமைப் பட்டிருப்பார்கள். அதை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அது மட்டுமல்ல. பவர் லூமிலே வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு கூலி நிர்ணயம் செய்வதற்கு தொழிலாளர் துறையிலே இருந்து ஒரு பெரிய அதிகாரியைப் போட்டு ஒரு ஸ்தாபனத்தை அமைக்கயிருப்பதாக நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் நீதி மன்றத்திலே முதலாளிகள் சார்பிலே இருக்கின்றவர்கள் அந்த அமைப்பு சரியான முறையிலே செயல்படாது என்பதை எடுத்துக் கூறி நீதி மன்றத்திலே அந்த அமைப்பு கூடாது என்று தீர்ப்பு வாங்கியிருப்பதாக அறிகிறேன். அப்படி வாங்கியிருந்தால் முதலாளிகள் அந்த ஒரு நிலையை எடுத்திருப்பார்களானால், தொழிலாளர்களுக்கு பாடுபடுவதாகக் கூறி, அதன் காரணமாக ஏராளமான அபரிமிதமான வாக்குகளைப் பெற்று, இன்றைக்கு ஆட்சிப் பீடத்திலே அமர்ந்திருக்கின்ற அண்ணா தி.மு.க. சர்க்கார், அதிலும் தொழிலாளர் இயக்கத்திலே நீண்ட நெடுங்காலமாக தந்தை பெரியார் அவர்களுடன் உடன் இருந்து, திருச்சியிலே, பொன்மலையிலே ரெயில்வே தொழிலாளர்களின் போராட்டத்திலே கலந்துகொண்டு, இன்னும் பல்வேறு போராட்டங்களில் வெற்றி பெற்று, வாகைசூடிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே வீற்றிருக்கின்றார்கள். ஆனால்,

நீதி மன்றத்திலே இந்த தீர்ப்பு வந்த உடனேயே, அதற்கான மாற்று நடவடிக்கையை எடுக்க வேண்டாமா? அப்படி எடுக்காமல் இருப்பதற்கான காரணத்தை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. என்றாலும், எதிர்காலத்திலே, இனிமேலாவது உடனடியாக இப்படிப்பட்ட விஷயத்திலே நடவடிக்கையை எடுப்பீர்கள் என்று நான் நம்புகிறேன்.

அதுமட்டுமல்ல, இந்த காஷுவல் லேபரர்களைப் பற்றி அனைத்துக்கட்சி சட்ட மன்ற உறுப்பினர்களும், அனைத்துக் கட்சித் தலைவர்களும் வருந்தப்பட்டுச் சொல்லக்கூடிய விஷய மாக இருக்கிறது. அது இன்றையதினம் அகில இந்தியாவிலே யும், தமிழ்நாட்டிலேயும் கொத்தடிமைகளாக மாறியிருக்கிறது என்பதை உங்கள் மேலான கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். ஒரு ஆலையில், ஒரு பாக்டரியில் ஒரு ஆண்டில் 240 நாட்கள் வேலை செய்தால், அவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்ற சட்டம் இருக்கிறது. ஆனால் அதை அமுல் படுத்தாமல் இருப்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆக அதற்காக உடனடியாக நீங்கள் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

அது மட்டுமல்ல. ஷாப்ஸ் அண்டு எஸ்டாபிளிஷ்மென்ட் ஆக்ட் என்ற ஆக்டை நாம் வைத்திருக்கிறோம். மினிமம் வேஜிஸ் ஆக்டை வைத்திருக்கிறோம். ஆனால் அதை அதிகாரிகள் முறையாக செயல்படுத்துகிறார்களா என்றால் இல்லை. அதற் கான உரிமைகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கப்படுகின்றதா என்பதையும் நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். ஆனால், அதே நேரத்தில் இன்ஸ்பெக்டர் ஆப் லேபர் போன்று தமிழ் நாட்டில் பல்வேறு அதிகாரிகள் இருக்கின்றார்கள். உங்கள் கொள்கைக் குறிப்பிலேயே சொல்லியிருக்கின்றீர்கள்—திடீ ரென்று சோதனை செய்து ஏராளமான வழக்குகள் போடப் பட்டது பற்றிய ஒரு புள்ளிவிவரப் பட்டியலைக் கொடுத்திருக் கிறீர்கள். ஆனால், அதே நேரத்தில் தென் ஆற்காடு மாவட்டத் தில், திண்டிவனத்தில் ஓட்டல்கள், கடைகள், ஜவுளிக் கடைகள், என்ஜினியரிங் நிறுவனங்கள் போன்றவைகளில் தொழிலாளர் பட்டியலை, எந்த இன்ஸ்பெக்டர் ஆப் லேபரும் அங்கே போய்ப் பார்த்ததாக இல்லை என்பதை நான் வருத்தத்தோடு சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். வாரத்திற்கு ஒரு நாள் விடுமுறை என்ற அறிவுரை சொல்லப்படுகிறதா என்றால், நிச்சயமாக அங்கே சொல்லப்படவில்லை என்பதையும் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எத்தனையோ இடங்களில் தொழிலாளர் களுக்காக வைக்கப்பட்டிருக்கின்ற பதிவேடுகளில், அந்தக் கடைகளில் அல்லது ஓட்டல்களில், மற்ற வியாபார ஸ்தாபனங்

1981 ஏப்ரல் 21] [திரு. கே. எம். தங்கமணி]

களில் வேலை செய்கின்ற பணியாட்கள் கண்டிப்பாக எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்பதைப் போய்ப் பார்க்க முடியாத நிலையில் அந்தத் துறை இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் உங்கள் கவனத்திற்கு கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

தமிழ்நாட்டில், இன்றையதினம் அரசுத் துறையிலும், பொது துறையிலும், ஸ்கிரினிங் கமிட்டியை நாம் வைத்திருக் கிறோம். அந்தக் கமிட்டியில் தொழிலாளர்களுடைய பிரதி நிதிகள் இருக்கிறார்களா என்றால், இல்லை. முதலாளி களுடைய சார்பில் அதிலே பிரதிநிதித்துவம் இருக்கிறது. அரசுத் துறைச் சார்பில் அதிலே பிரதிநிதித்துவம் வகிக்க வாய்ப்பு இருக்கிறது. ஆனால், தொழிலாளர்கள் சார்பில் அதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்றால், இல்லை. ஆனால், நீங்கள் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே, இதே மானியத்தின் மீது சொல்லியிருக்கிறீர்கள்—ஒருவேளை ரெபரென்சுக்கு முடியா மல் இருந்தாலும், எத்தனையோ வழக்குகளை கோர்ட்டுக்கு அனுப்பியிருக்கிறேன் என்று இந்த மன்றத்திலே குறிப்பிட்டிருக் கிறீர்கள். அதற்கு நன்றி.

(மாலை 4—40)

ஆனால் எல்லா வழக்குகளையும் உங்களால் அனுப்பிவிட முடியுமா? அதிலே வேண்டியவர்கள், வேண்டாதவர்கள், சம்பந்தப் பட்டவர்கள், சம்பந்தப்படாதவர்கள் என்ற பிரச்சினை வருகிற போது அது உங்களாலேயே கைகட்டப்பட்டுவிடும் என்ற ஒரு சூழ்நிலை வந்துவிடலாம். எனவே ஒன்று அந்த கமிட்டியிலே தொழிலாளர்களுடைய பிரதிநிதிகளை நீங்கள் ஏற்படுத்துங்கள். அப்படி இல்லை என்றால் அந்த வடிகட்டுகிற கமிட்டியை ஸ்கிரீனிங் கமிட்டியை கலைத்து விடுகிற ஏற்பாட்டினை செய்வீர் களேயானால், தமிழகத்தில் இருக்கிற தொழிலாளர்கள் அனை வரும் நன்றி தெரிவிப்பார்கள்.

இன்றைக்கு தமிழகத்தில் பொது சுகாதாரத் துறையிலே நகராட்சி மன்றங்களிலே துப்புரவுத் தொழிலாளர்கள் இலட்சக் கணக்கான பேர்கள் வேலை பார்க்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு ஏதாவது பாதுகாப்பு உண்டா? எத்தனையோ தொழிற்சாலை களில் நாம் ஒர்க் லோட் என்று முடிவு எடுக்கிறோம். ஆனால் இந்த நகராட்சி மன்றங்களில் வேலை செய்கிற துப்புரவுத் தொழி லாளர்களுக்கு வேலை பளு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. 1920-லே பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் சட்டம் ஒன்று போடப்பட்டிருக்கிறது. அதிலே ஒரு துப்புரவுத் தொழிலாளர் மலம் எடுக்கிற தொழிலாளி சரியாக 40 வீடுகள் எடுக்க வேண்டு மென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைக்கு சுதந்திரம் கிடைத்த பின்னாலே 1981 ஆம் ஆண்டிலே இன்றைக்கு ஒரு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

சாதாரண மலம் எடுக்கிற தொழிலாளி 300, 400, 500 வீடுகள் என்று எடுக்கிறான். இதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டாமா? நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்பதைத்தான் பார்க்கிறோம். தமிழகத்தில் இருக்கிற தொழிற்சங்கங்கள் எல்லாம் இன்றைக்குப் போராடுகிறார்கள். அவரவர்களுக்கு நியாயமானதைச் சொல்கிறார்கள். அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்றால் இல்லை. அங்கே இருக்கிற சானிடரி இன்ஸ்பெக்டர், பஞ்சாயத்திலே, ஹெல்த் ஆபீசர், நகராட்சியிலே யார் இருக்கிறாரோ அவர்கள் நிர்ணயிப்பது வேண்டிய ஒரு தொழிலாளி ஏதாவது செய்து தருவாரானால் கொடுப்பதைக் கொடுத்து பெறவேண்டியதைப் பெற்றால் அவர்களுக்கு, 50 வீடுகள் என்று நிர்ணயிக்கிறார். இல்லை தொழிலாளி ஏதாவது ஆகாதவர் என்று சொன்னால், அல்லது நாலுபேர் மத்தியிலே ஒரு தொழிலாளி ஏதேனும் காரணத்தால் கேள்வி எதிர்த்து கேட்டிருப்பாரானால் இந்தத் தெருவையும் சேர்த்துப் பார், என்று 300 வீடுகள் 400 வீடுகள் என்று சொல்லுகிற நிலைமை இருக்கிறது. நான் சார்ந்திருக்கிற திண்டிவனம் நகராட்சியில் 120 துப்புரவுத் தொழிலாளர்கள் வேலை பார்க்கிறார்கள். 60 பேர் ஸ்கேவன்சராகவும் 60 பேர் ஸ்வீப்பராகவும் இருக்கிறார்கள். அதில் பெரும்பாலானோர் அரிசனங்கள் என்று சொல்லப்படுகிற அருந்ததி வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். இந்தத் தொழிலுக்கு வந்துவிட்டவர்கள் அருந்ததி வகுப்பைச் சேர்ந்தவர்கள் மலம் எடுக்கிற தொழிலில் ஈடுபடுகிறார்கள். ஆனால் மற்றவர்கள் ஸ்கேவன்சர் வேலைக்கு வந்துவிட்டாலும் கூட மலம் எடுக்கிற வேலையைச்செய்ய தயாராக இல்லை. அதனுடைய விளைவு அவர்களுடைய வேலை இவர்கள் மீது திணிக்கப்படுகிறது. எனவே தமிழக சர்க்கார் உடனடியாக துப்புரவுத் தொழிலாளர்களுக்கு எவ்வளவு குறைந்தபட்ச வேலை என்பதை நிர்ணயிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக திண்டிவனம் நகராட்சியிலே நிதிநிலை பற்றாக்குறை என்று காரணத்தைக்காட்டி 20 ஆண்டுகளுக்கு முன்பு எத்தனை தொழிலாளர்கள் இருந்தார்களோ அதே தொழிலாளர்கள் தான் இன்றையதினம் இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் நிதிநிலை பற்றாக்குறைஎன்றுகாரணம்காட்டி ஐந்து ஆறு தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கி விட்டார்கள். நீக்கிவிட்டார்கள் என்று கூறி நான் சார்ந்திருக்கின்ற ஐ. என். டி. யு. சி. சார்பிலே மூன்று நாள் அங்கே ஸ்ட்ரைக் செய்து அதற்குப் பின்னால், 'சப்ஸ்டிடியூட் போடுவதாக நகராட்சி மன்றத்திற்கும் என்னுடைய தொழிற் சங்கத்திற்கும் ஒரு உடன்பாடு ஏற்பட்டு அந்த ஐந்து பேர்களும் 'சப்ஸ்டிடியூட்டாக வேலை செய்கிறார்கள். சொல்லுகிற காரணம் நிதிநிலை பற்றாக்குறை, ஆகவே சப்ஸ்டிடியூட்டாக இருக்கிறார்கள். நிரந்தரம் செய்யப்படவில்லை. ஆனால்

ஐந்து பேர் சப்ஸ்டியூட்டாக வேலை பார்க்கிறார்கள். இன்றைய தினம் 12 பேர் மேலும் சப்ஸ்டியூட்டாக சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் அப்படியானால் நிதிநிலை பற்றாக்குறை என்பது சரியான காரணமா? அது சரியில்லை. பலமுறை நகராட்சி மன்ற துறையினரிடம் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். போட்டிருக்கிற உடன்பாட்டில் கண்டிருக்கிற நிலையினை நான் எடுத்துக் காட்டியிருக்கிறேன். இதுவரை உருப்படியாக ஏதாவது அரசு துறையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? சம்பந்தப்பட்ட அதிகாரிகள், கடலூரில் தொழிலாளர் நல அலுவலகத்திலே கூட நகராட்சி மன்றத்திற்கு அறிவுறுத்தினார்கள். சகோதர துறையிலே இருக்கிற ஒரு அலுவலகம் சொல்லியே அங்கே இருக்கிறவர்கள் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. சொல்வது ஒன்று செய்வது ஒன்றாக இருக்கிறது. எனவே உடனடியாக அந்த ஐந்து தொழிலாளர்களை, மேலும் 12 தொழிலாளர்கள் வேலைபார்க்க வாய்ப்பு இருக்கிற போது, ஏன் அவர்களை நிரந்தரம் செய்யக் கூடாது. அவர்களை உடனடியாக நிரந்தரம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல கேங்க் கூலி என்று நகராட்சி மன்றங்களில் பஞ்சாயத்திலே இருக்கிறது. எல்லா துறைகளிலும், சர்க்கார் துறைகளிலும் என். எம். ஆர். ஒர்க்கர்ஸ் என்று வைத்திருக்கிறோம். ஆனால் அவர்கள் நிரந்தரம் செய்யப்பட்டிருக்கிறார்களா என்றால் இல்லை. திண்டிவனம் நகராட்சியிலே அப்படி 15 பேர்கள் வேலைசெய்கிறார்கள். இதுவரையில் அவர்கள் நிரந்தரம் செய்யப்படவில்லை. தமிழகத்திலே உள்ள அத்தனை நகராட்சி மன்றங்களிலேயும் உள்ளவர்கள் பர்மனன்ட் செய்யப்பட்ட பட்டியலைக் கொண்டு வந்து அங்கே இருக்கின்ற அதிகாரிகளிடத்திலே சொன்ன போது அது ஏனோ அவர்களுடைய காதுகளில் ஏறமாட்டேன் என்கிறது. கண்களிலே படமாட்டேன் என்கிறது. என்ன காரணம் என்று எனக்குப் புரியவில்லை. மேலே எழுதுகிறேன், எழுதுகிறேன் என்று சொல்லி காலத்தைத் தள்ளுகிறார்களே தவிர உருப்படியாக நடவடிக்கை எடுக்கவில்லை. அவர்கள் எல்லாம் 16, 17, 20 ஆண்டுக்காலமாக வேலை பார்த்து வருகிறார்கள். அவர்களுக்கு ஓவர்டைம் உண்டா என்றால் இல்லை. திண்டிவனத்திற்கு எட்டாவது மைலில் குடிநீர்த் தேக்கம் இருக்கிறது. இரவு 2 மணிக்கு அங்கே பழுதாகிவிடுகிறது என்றால் இந்தத் தொழிலாளர்கள்தான் ஓடவேண்டும், துப்புரவுத் தொழிலாளர்கள் சாக்கடைத் துப்புரவுத் தொழிலாளர்கள் லீவு என்று சொன்னால் இவர்கள்தான் அங்கே வரவேண்டுமென்ற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அந்த காங்க் மஸ்தூர்களை பெர்மனென்ட் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற் சங்கம் என்று மாண்புமிகு முதல்வர், நீங்கள் எல்லாம் சொல்லுகிற புரட்சித் தலைவர்

எம். ஜி. ஆர். அவர்கள் சொல்கிறார்கள். எல்லோருக்கும் அப்படி வரவேண்டும் என்ற விருப்பம்தான். பூந்தமல்லியிலே எஸ். எஸ். பவர் சுவிட்ச் கியர் என்ற தொழிற் சாலை இருக்கிறது. அங்கே அங்கீகரிக்கப்பட்ட சங்கமாக எங்களுடைய ஐ. என். டி. யு. சி. தான் இருக்கிறது. ஆனால் இன்றையதினம் அங்கே என்ன நடைபெறுகிறது என்றால் ஆளுகின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு தொழிலுக்கு, ஒரு தொழிற் சங்கம் தேவை என்ற கோஷத்தை வைத்திருக்கிறவர்கள் அரசுத் துறையைச் சார்ந்திருக்கின்ற கட்சியான அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தைச் சார்ந்த நண்பர்கள் இன்றைக்குப் போட்டியாக ஒரு தொழிற் சங்கத்தை உருவாக்குவதற்காக ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல. 15–4–1981 அன்று 54ஜி என்ற பஸ்ஸிலே ஐ. என். டி. யு. சி தொழிற் சங்கத் தலைவர்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள். பூந்தமல்லியிலிருந்து இரட்டை ஏரி அருகிலே அந்த பஸ் போய்க் கொண்டிருக்கிறது. உடனடியாக அங்கேயுள்ள அண்ணா தி. மு. க. நண்பர்கள் அங்கே போட்டி தொழிற்சங்கத்தை உருவாக்குவதற்கு அந்த தொழிற்சங்க இயக்கத்தை உடைப்பதற்காக இருக்கிறார்களல்லவா, அந்த நண்பர்கள் கத்தி முனையிலே அந்த பஸ்ஸை தடுத்துநிறுத்துகிறார்கள். கத்தி முனையிலே அந்த பஸ் நிறுத்தப்படுகிறது. டிரைவருடைய கழுத்திலே கத்தி வைக்கப்படுகிறது. அங்கே 4, 5 தொழிற்சங்கத் தலைவர்கள் கத்தியால் குத்தப்பட்டு பலத்த காயமேற்பட்டு இருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே போலீஸ் ஸ்டேஷனுக்கு பஸ்ஸை ஓட்டிச் சென்று டிரைவரும் கண்டக்டரும் சேர்ந்து புகார் கொடுக்கிறார்கள். அந்தப் புகாரை நம்முடைய புரட்சித் தலைவருடைய ஆட்சியிலே, அண்ணா தி. மு. க. வினுடைய ஆட்சியிலே தொழிலாளர்களின் தோன்றாத்துணைவர்கள் என்று சொல்லிக் கொண்டு ஆட்சிபீடம் ஏறியிருக்கிறார்களே உங்களுடைய ஆட்சியிலே, அந்த புகாரைக்கூட அங்கே இருக்கின்ற போலீஸ் நிலையத்திலே பதிவு செய்யப்படவில்லை இந்த வினாடி வரையில் என்று சொன்னால் வெட்கக் கேடாக இல்லையா வேதனை தரக்கூடியதாக இல்லையா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

இங்கே பெரியார் போக்குவரத்துக் கழகத்தைப் பற்றி நான் சொல்ல வேண்டும். அங்கே சம்பந்தப்பட்ட அமைச்சர் பெருமகனார் உட்கார்ந்திருக்கிறார். தந்தை பெரியார் போக்குவரத்து கழகத்திலே எங்களுடைய ஐ. என். டி. யு. சி. சங்கம் இருக்கிறது. அங்கே இருக்கிற திண்டிவனம் டெப்போவிலே கடந்த 24 ம் தேதி ஒரு போர்டை எழுதி வைக்கிறார்கள். தொழிற்சங்கத் தலைவராக இருந்து இன்றையதினம் அமைச்சராக வந்திருக்கின்ற அமைச்சருக்கும் தெரியும், தொழிலாளர்கள் உணர்ச்சி வசப்படுகிறபோது அடிவயிற்றிலே சோறு கஞ்சி இல்லாவிட்டாலும் எவ்வளவு முழக்கங்களை எழுப்புவார்கள், ஆத்திர உணர்ச்சியோடு, வர்க்க உணர்ச்சியோடு, எப்படி கோஷங்களை முழக்கங்களை

எழுப்புவார்கள் என்று தெரியும். நீங்கள் சார்ந்திருந்த, இன்றைக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழக இயக்கத்திலே எத்தனையோ இடங்களிலே அப்படி போர்டுகளை நீங்களே வைத்திருக்கிறீர்கள். உங்களுடைய தொழிற் சங்கங்களிலே வைத்திருப்பீர்கள். அப்படி எங்களுடைய சங்கத்தின சார்பில் ஒரு போர்டு அங்கே வைக்கப்படுகிறது. அங்கே இருக்கிற பிராஞ்சு மேனேஜர் அங்கே டியூட்டி போடுவதிலே தவறு செய்கிறார். வேண்டியவர்களுக்கு டியூட்டி போடுகிறார். வேண்டாதவர்களுக்கு டியூட்டி போடுகிறார் குறிப்பாக, தி. மு. க., ஐ. என். டி. யு. சி. சங்கத்தைச் சேர்ந்தவர்கள் அதனால் பாதிக்கப்படுகிறார்கள் என்ற நிலைமை வந்தது. ஐ. என். டி. யு. சி. யிலே ஒரு போர்டை வைக்கிறார்கள். பிராஞ்சு மேனேஜர் அவர்களே, உங்களுக்கு எம். டி. என்ற நினைப்பா என்ற ஒரு வாசகம் அதிலே. உடனே அங்கே இருக்கின்ற போர்மேன் அந்த போர்டை எடுத்து, உள்ளே இருக்கிற பஸ்ஸை கொண்டு வந்து வாசல் படியிலே நிறுத்திக் கொண்டு, ஐ. என். டி. யு. சி. போர்டை உள்ளே இருக்கின்ற டீசலைக் கொண்டு வந்து, உள்ளே இருக்கிற இரண்டு சிறுவர்களைக்கொண்டு கொளுத்தச்சொல்கிறார். அது உடனடியாக என் கவனத்திற்கு வந்தவுடன் சம்பந்தப்பட்ட பிராஞ்சு மேனேஜரோடு நான் தொடர்பு கொண்டு கேட்டேன். விசாரணை செய்து விட்டு நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொன்னார். தலைமை அலுவலகம் விழுப்புரத்திலே இருக்கிறது. பொது மேலாளராக இருப்பவர் இடத்திலே தொலை பேசியிலே தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுங்கள் என்று சொன்னேன். பிராஞ்சு மானேஜர் விசாரித்து எனக்கும் ஒரு காப்பி போட்டிருக்கிறார். பெரியார் டிரான்ஸ்போர்ட் எம். டி. க்கும் அது போய் இருக்கிறது. 4, 5 தினங்களுக்கு முன்னாலே நான் விழுப்புரத்திற்குச் சென்று அந்த எம். டி. யைப் பார்த்து உடனே நடவடிக்கை எடுங்கள் என்று சொன்னேன். ஆகவே, 24–ம் தேதி நடந்த சம்பவத்திற்கு இதுவரையிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால் அந்த போர்மேனுடைய சொந்தக்காரர் விழுப்புரத்திலே ஒரு தடவை அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத் தேர்தலிலே நின்று வெற்றி பெற்று இந்தத் தடவை சீட்டு கிடைக்காத காரணத்தினாலே இருக்கிறார். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் இயக்கத்திலே இருக்கிறவர் அவருக்கு மிக நெருங்கிய உறவினர்.

(மாலை 4.50)

அவர் சொல்கிறார், தந்தை பெரியார் கார்ப்பரேஷனில் எனக்கு வேண்டியவர்கள் இருக்கிறார்கள்; எம்.டி. இருக்கிறார், ஜி.எம். இருக்கிறார்; எனவே ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்கிறார்கள். அவ்வாறு ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்கின்ற சூழ்நிலை உருவாகுமேயானால் அதைப்போல எங்களாலும்செய்யமுடியும் என்ற சூழ்நிலை ஏற்பட முடியாதா? எங்களுடைய போர்டை எரிப்பதற்கு அந்தக் கைகள் வருமானால்

ஆளுகின்ற வாய்ப்பில் உள்ள உங்களுடைய சங்கமும் இருக்கிறது, எனவே, எங்களால் எதிர் நடவடிக்கை எடுக்க முடியாதா என்பதைக் கேட்க விரும்புகிறேன். அவ்வாறு செய்ய முடியும். ஆனால் நாங்கள் காந்தியடிகளைப் பின்பற்றுபவர்கள், தேசப் பிதா காந்தியடிகள் எங்களுக்குச் சொல்லிக்கொடுத்த பாடம் அதுவல்ல; அவ்வாறு சொல்லிக்கொடுக்கின்ற பள்ளிக்கூடத்திலே நாங்கள் படிக்கவில்லை.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 27-ஆம் தேதி மானியத்தில் விரிவாகச் சொல்லியிருந்தால் எனக்கும் வசதியாக இருக்கும். இருந்தாலும்கூட அவர்கள் இதைப்பற்றிச் சொல்லும்பொழுது நல்லவேளையாக நான் இங்கே இருக்கிறேன். அதனால் மகிழ்ச்சியடைகிறேன். இந்தக் கருத்தை அவர்கள் இப்பொழுது தான் சொல்கிறார்கள். 24-ஆம் தேதி நடந்திருக்கிறது; சட்டமன்றத்திற்கு இரண்டுபேரும் வந்துகொண்டுதான் இருக்கிறோம். ஆனால் அவர்கள் இதுவரையில் என்னுடைய கவனத்திற்கு இதைக் கொண்டுவரவில்லை. குறிப்பாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒரு நபர், சொந்தக்காரர் இருக்கிறார் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார் என்று அவர்கள் சொல்கிறார்கள். ஆனால், எல்லாச் சங்கங்களிலிருந்தும் இப்படிப்பட்ட புகார்கள் வந்து கொண்டுதான் இருக்கின்றன. குறிப்பாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நண்பர்கள் வந்து சொல்கிறார்கள், ஐ.என்.டி.யூ.சி. காரணமாக இருக்கிறது, திராவிட முன்னேற்றக் கழகம் காரணமாக இருக்கிறது, நம்முடைய தோழர்கள் பழிவாங்கப்படுகிறார்கள் என்ற கருத்தைச் சொல்கிறார்கள். எனவே, தொழிலாளர்களைக் காப்பாற்றுகின்ற பொறுப்பும், கடமையும் உங்களுக்கு இருக்கிறது, எல்லோருக்கும் இருக்கிறது. எந்தவிதக் கருத்தில், எந்தவிதக் கொள்கையில் நின்றிருந்தாலும் தொழிலாளர்களின் உரிமை பறிபோகக் கூடாது என்பதில் தீவிர நடவடிக்கை எடுத்தாக வேண்டும். எனவே, அந்தக் கருத்தை முன்கூட்டியே சொல்லியிருந்தால் எனக்கும் வசதியாக இருந்திருக்கும்; உங்களுக்கும் நல்லதாக இருந்திருக்கும் என்று கருதுகிறேன்.

திரு. கே. எம். தங்கமணி: மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இதைச் சொன்னதற்காக நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஆனால் ஒன்று, ஐ.என்.டி.யூ.சி யைச் சேர்ந்தவர்கள்கூட வேண்டிய சலுகைகளைப் பெறுவதாக அவர்கள் சொன்னார்கள். நான் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். நான் தொழிற்சங்கத் தலைவராக இருந்து சட்டமன்ற உறுப்பினராக மாறிய பிறகும்கூட, முறையாக,

தொழிற்சங்கமாக அங்கே நடந்து கொண்டிருக்கும் பொழுது நிர்வாக இயக்குநரைப் பார்த்தோ அல்லது பொது மேலாளரைப் பார்த்தோ எந்தச் சலுகையையும் நான் பெற்றது இல்லை என்பதை உங்களுக்கு இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இனிமேலாவது நான் கூறியது பற்றி நடவடிக்கை யெடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்து, ஆரணியில் இலட்சுமி சரஸ்வதி பஞ்சாலை என்ற ஒரு ஆலை இருக்கிறது. 800 பேர் வேலை செய்யக்கூடிய பெரிய மில்; தனியார் நடத்துகின்ற மில். ஆனால் அங்கே நிரந்தரம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் எவ்வளவு பேர் என்று பார்த்தால் 100 பேர்தான் இருக்கிறார்கள். மீதியிருப்பவர்கள் அத்தனை பேர்களும் நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். இது நியாயமில்லை என்பதைத் தொழிலாளர் நல அமைச்சரவர்களின் மேலான கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

கடைசியாக ஒரேயொரு கருத்தை மட்டும் கூறி எனது உரையை முடித்துக்கொள்ளலாம் என்று கருதுகிறேன். தென்னார்க்காடு மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை என்று திண்டிவனம் தாலுக்காவில் உள்ள சாரம் என்ற இடத்தில் இருக்கிறது. அந்த மாவட்டக் கூட்டுறவு நூற்பாலையில் ஏறக்குறைய 400 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஐ.என்.டி.யூ.சி. சங்கம், ஏ.ஐ.டி.யூ.சி. சங்கம் என்ற இரண்டு சங்கங்கள்தான் அங்கே உண்டு. ஆனால் இன்றைய தினம் அதன் நிர்வாகப் பொறுப்பை ஏற்றிருக்கின்ற மதிப்பிற்குரிய நிர்வாக இயக்குநர் புதிதாக மாற்றலாகி வந்திருக்கிறார். இன்றைக்கு அவர் தன்னிச்சையாக, உற்பத்தியையே பாதிக்கின்ற அளவிற்குத் தொழிலாளர்களைத் திட்டமிட்டுப் பழி வாங்கும் உணர்வோடு நடக்கிறார்கள் என்பதை நான் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஐ.என்.டி.யூ.சி. சங்கத்தைச் சேர்ந்த ஒரு தொழிலாளியின் சொந்தக்காரர் செத்துப் போகிறார். அதற்குப் போக வேண்டுமென்று அந்தத் தொழிலாளி சூப்பர்வைசரிடம் லீவ் லெட்டர் கொடுக்கிறார்; அவர், எப். எம் வந்தபிறகு சொல்லிவிட்டுப் போகச் சொல்லுகிறார். இப்படி, லீவ் மனு கொடுக்கப்பட்டு, அந்த மனுவை வாங்கி வைத்துக் கொண்டு போகலாம் என்று சொல்லியபிறகு தொழிலாளிகள் எட்டு பேர் சென்றிருக்கிறார்கள். ஆனால் மறுநாள் காலை வேலைக்குச் சென்றால் அங்கே மெமோ கொடுக்கப்படுகிறது; 'ஷோ காஸ் நோட்டீஸ்' கொடுக்கப்படுகிறது. அதோடு நிறுத்தியிருந்தால்கூடப் பரவாயில்ல; சஸ்பெண்ட் செய்யப்படுகிறார். ஆனால் மற்றச் சங்கத்தைச் சேர்ந்த, அதாவது ஏ.ஐ.டி.யூ.சி சங்கத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு மாநாட்டு நிகழ்ச்சிக்காக லீவ் மனு கொடுக்காமல் லாரியில் போயிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்தார்களா

என்றால் எடுக்கவில்லை. இன்றைக்கு ஸ்டாஃப் யூனியன் எங்கள் கைக்கு வந்து விட்டது. அதில் உள்ள முக்கியஸ்தர்கள்மீது திட்டமிட்டுப் பழிவாங்கும் காரியங்களை அந்தச் சாரம் நூற்பாலை இயக்குநர் எடுத்துக்கொண்டு வருகிறார் என்பதை உங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாரம் மில்லிலே இருக்கக்கூடிய நிலையைப் பற்றி பேசும்பொழுது, அங்கேயிருக்கக்கூடிய ஏ.ஐ.டி.யூ.சி சங்கத்தைப் பற்றி, அங்கத்தினர் அவர்கள் அவருக்கு இருக்கிற காழ்ப்புணர்ச்சியைத் தெரிவிக்கக் கூடிய முறையிலே குறிப்பிடு கிறார்கள். ஏ.ஐ.டி.யூ.சி. சங்கம் சம்பந்தப்பட்ட மட்டில் இம்மாதிரியான நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை. அது பொறுப்பான முறையிலே நடைபெறக்கூடிய சங்கம். அங்கே இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கும் பொறுப்பான முறை யிலே வழிகாட்டக்கூடிய தலைமையிருக்கிறது என்று தெரி வித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாரம் என்ற கிராமத் தில் நான்கூட இருந்திருக்கிறேன். 1949-ல் நான் அசிஸ்டென்ட் ஸ்டேஷன் மாஸ்டராக இருந்த பொழுது, என்னைக் கைது செய்து சிறையிலே வைத்த பிறகு நான் வேலைக்கு வந்தபிறகு வீடில்லாத ஊருக்கு மாற்ற வேண்டுமென்று என்னை மாற்றி னார்கள். பாஞ்சாலம் என்ற ஸ்டேஷனுக்கு அசிஸ்டென்ட் ஸ்டேஷன் மாஸ்டராக இருந்த காலத்திலே மாற்றினார்கள். பக்கத்திலே இருந்த கிராமம்தான் சாரம். அங்குதான் நான் குடியிருக்க வேண்டி வந்தது. அங்கே இருக்கக்கூடிய நிலைமை கள் எல்லாம் எனக்குத் தெரியும். மாண்புமிகு உறுப்பினர் தங்கமணி அவர்கள் சொன்னதைப் பற்றி லேபர் கமிஷனரிடத் திலே சொல்லி விசாரிக்கச் சொல்கிறேன். ஆக, ஏ.ஐ.டி.யூ.சி, ஐ.என்.டி.யூ.சி. என்று இங்கே வாக்குவாதம் செய்ய வேண் டாம். அதைப்பற்றி நான் விசாரிக்கச் சொல்கிறேன்.

திரு. கே. எம். தங்கமணி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொன்னதற்குப் பின்னாலே அதிலே நான் தலையிடவில்லை. இங்கே கம்யூ னிஸ்ட் கட்சியினுடைய தலைவர் அவர்கள் ஒரு கருத்தினைச் சொன்னார்கள். பொறுப்பான சங்கம் எங்களுடைய சங்கம் அல்லது, அதனுடைய தலைவரும் வழிகாட்டக்கூடிய பொறுப் பான தலைவர் என்று.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்த விவ காரம் முடிந்து விட்டது, மீண்டும் விளக்க வேண்டாம். முடித்துக் கொள்ளுங்கள்.

1911 ஏப்ரல் 21]

திரு. கே. எம். தங்கமணி : அந்த விளக்கத்திற்கு நான் போக விரும்பவில்லை. ஆனால், அமைச்சர் அவர்களே நடவடிக்கை எடுக்கிறேன். என்று சொன்னதாலே அதோடு நான் விட்டுவிடுகிறேன் ஆனால், இன்றைய தினம் அந்த நிர்வாக இயக்குநர் ஸ்டாஃப் யூனியனிலே இருப்பவர்கள் எல்லாம் அவர் சொல்கின்ற உத்திரவை ஏற்றுக்கொள்ளவில்லையென்ற காரணத்தினாலே, அவர் திருச்சிக்கே, அல்லது மதுரைக்கோ வேறு பல ஊர்களுக்கோ, சொந்த ஜோலியாகப் போகிறபொழுது பல்வேறு லாட்ஜ்களிலே தங்கியிருந்ததாகச் சொல்லி, அதற்குப் பயணப்படி வேண்டுமென்று கேட்டு இவர்கள் உண்மையான ரசீதுகள் வேண்டுமென்று கேட்டால் அந்த ஸ்டாஃப் யூனியனிலே இருக்கிறவரென்பதால் ஹெட் கிளார்க் இன்றைக்குல் சஸ்பென்ட் செய்யப்பட்டிருக்கின்ற சூழ்நிலை அங்கே இருக்கிறது. அங்கேயிருக்கிற அதிகாரிக்கு தெரியாமலே அங்கேயிருக்கிற டைப் அடிக்கிற மெஷின் வெளியே போகிறது, அது சரியில்லையென்று எம்.டி.யினுடைய சவனத்திற்குக் கொண்டுவந்தார் என்பதற்காக அந்த டைப்பிஸ்ட் இன்றைய தினம் பழிவாங்கப் பட்டிருக்கிற ஒரு கோரமான சூழ்நிலை அந்த ஆலையிலே வந்து கொண்டிருக்கிறது. அதனுடைய விளைவாக அவர் திட்டமிட்டு சார்புக்கு ஆதரவாகப் போகின்ற சூழ்நிலையிலே உற்பத்தி பாதிக்கப் படலாம் என்ற நிலைமை இன்றையதினம் வந்து கொண்டிருக்கிறது என்பதை உங்களுடைய மேலான சவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

திரு. பி. முகமதுல் இமாயில் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நல மானியக் கோரிக்கையில் நடைபெறுகிற விவாதத்தில் கலந்து கொண்டு ஒருசில கோரிக்கைகளை வலியுறுத்த நான் விரும்புகிறேன். பலகாலமாகப் போராடி தொழிலாளர்கள் பெற்ற போனஸைப் பெறுகின்ற உரிமை எல்லா தரப்பு தொழிலாளர்களுக்கும் கிடைக்கவில்லையென்ற குறைபாட்டை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். 1965-வது ஆண்டு உடன் எடுத்த போனஸ் சட்டம், சிலகாலம் முடக்கப் பட்டிருந்தாலும் பிறகு தொழிலாளர் வர்க்கம் அவர்கள் பெற்றிருந்த சலுகைகளைத் தொடர்ந்து பெறுவதற்கான சூழ்நிலை இன்றைய தினம் ஏற்பட்டிருக்கிறது. 1980-வது ஆண்டு கொண்டு வரப்பட்ட அவசரச் சட்டத்தின் வாயிலாக, போனஸ் பெறுகின்ற உரிமை, வேறுபல நிறுவனங்களுக்கும் விஸ்தரிக்கப் பட்டிருக்கிறது. பத்திரிகைத் துறைக்கும், வியாபார நிறுவனங்களுக்கும், பாங்கு சிப்பந்திகள், தொழிற்சாலை சிப்பந்திகள் ஆகியோருக்கும் சலுகை அளிக்கின்ற வகையில், புதிய சட்டம் உடல் எடுத்திருக்கிறது. ஆனால், அதே நேரத்தில் பல ஆண்டுகாலமாக, அரசாங்க ரப்பர் தோட்டங்களில் வேலை பார்த்து வருகின்ற தொழிலாளர்களுக்கு அந்தச் சலுகை மறுக்கப்படுகிறது. அதே நேரத்தில், தனியார் துறையிலே இருக்கிற ரப்பர் தோட்

டங்களில் வேலைபார்க்கிற தொழிலாளர்கள் பலகாலமாக அந்தச் சலுகையைப் பெற்று வருகிறார்கள். அரசாங்க உடமை என்ற ஒரே காரணத்திற்காக இந்தச் சலுகை தொழிலாளர் வர்க்கத்திற்கு மறுக்கப்படுவது நியாயமற்றது என்று அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வந்து அரசாங்கத் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும் போனஸ் வழங்கும் திட்டத்தை அமுல்படுத்த வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

[மாலை 5—00.]

முந்திரித் தொழிற்சாலைகள் தமிழகத்தில் ஏறத்தாழ 150-க்கு மேலாக செயல்பட்டு வருகின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் 120-க்கு மேற்பட்ட முந்திரித் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன என்பதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அங்கே ஏறத்தாழ 80,000-க்கும் 1 இலட்சத்திற்கும் இடைப்பட்ட அளவில் தொழிலாளர்கள் வேலை பார்த்து வருகிறார்கள். அந்த தொழிலாளர்கள் இன்று வரை ஏற்படுத்தப்பட்டு இருக்கின்ற தொழிலாளர் நலச் சட்டங்கள் எதனாலும் இதுவரையில் பலனடைய வில்லை என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன். 'மினிமம் வேஜஸ் ஆக்ட்' 1948 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆனால் அதனால் எந்தவித மான பலனையும் இந்தத் தொழிலாளர்கள் பெற முடியவில்லை. இ. எஸ். ஐ. சட்டம் இங்கே அமல் நடத்தப்படவில்லை. தொழிலாளர்கள் சட்டம் அமல் நடத்தப்படவில்லை. மிகக் குறைந்த கூலிக்கு வேலை பார்த்துக்கொண்டிருக்கிற இந்தத் தொழிலாளர்களை முதலாளிகள் தங்களுக்கு வேண்டும் என்ற சந்தர்ப்பத்தில் நீக்கிவிடுகின்ற சலுகையையும் பெற்று வருகிறார்கள். எனவே நிரந்தரமான வேலைக்கு உத்திரவாதம் அளிக்கப்படாதது மட்டுமல்லாமல், அவர்கள் அனுபவிக்கக்கூடிய உரிமை பெற்றிருக்கிற நலன்கள் ஒன்றையுமே பெற முடியாத அவல நிலையில் இன்றையதினம் உழன்று கொண்டிருக்கிறார்கள்.

கைத்தறி தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் இப்போது சில காலமாக மாநிலம் தழுவிய நிமையில் எல்லா இடங்களிலும் போராட்டங்கள் நடத்தி வருகிறார்கள். தங்களுடைய உரிமைகளைப் பெறுவதற்காக, குறிப்பாக சத்திரப்பட்டி என்ற இடத்தில் அண்மையிலே நடந்த போராட்டத்தின் காரணமாக பல வழக்குகள் போடப்பட்டன. இன்றையதினம் அந்த வழக்குகளை வாபஸ்பெறவேண்டும் என்று அரசு முன் வந்திருக்கிறது. ஆனால் அந்தத் தொழிலாளர்கள் முன் வைத்துப் போராடிய 16 கோரிக்கைகளில் எந்தக் கோரிக்கையையும் அரசு செய்து தருவதாகத்

தெரியவில்லை. அவர்கள் வைத்திருக்கிற கோரிக்கைகள் எல்லாம் அங்கே வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு—குறிப்பாக கைத்தறி நெசவாளர்கள் ஜனதா ரக துணிகள் செய்வதற்காகக்குறைந்த விலையில் நூல் விநியோகிக்கப்பட்டதாகச்செய்தி. அங்கே இயங்கி வருகின்ற கூட்டுறவுச் சங்கங்களால் 4½ கிலோ எடையுள்ள நூல் ரூ. 80-க்கு அவர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டது. அவர்கள் உற்பத்தி செய்கின்ற வேட்டி ஒன்றுக்கு ரூ. 7.50 பைசா பெற்று வந்ததாகச் செய்தி. இப்போது அந்த 80 ரூபாய்க்குக் கொடுக்கப்பட்ட நூல் 100 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. அப்படி 100-க்கு விலை உயர்த்தப்பட்டும்—அவர்கள் செய்து தருகின்ற வேட்டிக்கு அதிக விலை கொடுக்கப்படவில்லை. வெறும் 30 பைசாதான் உயர்த்திக் கொடுக்கப்பட்டது. நூல் விலையை ஏற்றியதற்குப் பின்னர் நியாயமாக பார்க்க வேண்டும் என்றால் விகிதாசாரப்படி அவர்கள் வேட்டிக்கு 1.88 பைசா அதிகமாகப் பெறுவதற்கு அவர்கள் உரிமை பெற்றிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் 1.88 பைசாவிற்குப் பதிலாக வெறும் 30 பைசாதான் அதிகம் தருகின்ற காரணத்தினால், உற்பத்தியாளர்கள் வேலை பார்க்கின்ற தொழிலாளர்களுக்குக் கூலியைக் குறைவாகக் கொடுப்பதற்கு முன் வந்திருக்கிறார்கள். எனவே தொழிலாளர்கள் போதுமான கூலி பெறுவதற்கு வழி இல்லாமல் திண்டாடிக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து அவர்களுடைய குறைகளைப் போக்குவதற்கு அரசு முன் வர வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே இருக்கின்ற நூற்பாலைகளில், குறிப்பாகக் கூட்டுறவு ஆலைகளில் என். எம். ஆர். என்ற ரக கூலி ஆட்களை வேலைக்கு அமர்த்தி இருக்கிறார்கள். தினம் ஒன்றுக்கு 5.50 காசு பெறுகிற அவர்கள் பல ஆண்டுகளாக வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் என். எம். ஆர். என்ற பெயரை வைத்துக் கொண்டிருக்கின்ற காரணத்தால் என்றைக்கும் அவர்கள் நிரந்தரமாக வேலை ஆட்களாக உரிமை பெறுவதற்கு உரிய லாயக்கு இல்லாமல் இருக்கிறார்கள். எனவே தொழிலாளர் நலன்கள் தருகின்ற பல சட்டங்கள் இருந்தாலும் அந்தச் சட்டங்கள் ஒன்றுமே அவர்களுக்குத் துணையாக வந்ததாகத் தெரியவில்லை. எனவே பலகாலமாக வேலை பார்த்துக் கொண்டிருக்கின்ற என். எம். ஆர். என்ற பெயரை மாற்றி அவர்கள் நிரந்தரமாக வேலை பார்ப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே எனக்கு முன்னாலே பேசிய அருமைச் சகோதரர் அங்கே இருக்கிற ஐ.டி.ஐ. பற்றிச் சொன்னார்கள். குமரி மாவட்டத்தில் ஒரே ஒரு ஐ.டி.ஐ. பாலிடெக்னிக் மட்டும் இயங்கி

வருகிறது. ஆண்டுக்கு 272 மாணவர்கள்தான் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். குமரி மாவட்டத்தில் உள்ள கல்வி நிலை பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரியும். இந்த மாநிலத் திலே மிக உயர்ந்த அளவுக்கு எண்ணிக்கையில் கல்வி வசதி பெற்றவர்கள், தொழில் கல்வி பெறுவதற்காக பலமாவட்டங் களுக்கு சிந்தி சிதறி ஓடிக்கொண்டிருக்கிறார்கள். அத்தனை ஐ.டி.ஐ க்களிலேயும் குமரி மாவட்ட மாணவர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். வசதி படைத்தவர்கள் இந்த மாவட் டத்தை விட்டு வெளி மாவட்டங்களில் சென்று பல ஐ.டி.ஐ. பள்ளிகளில் தங்களைச்சேர்த்துக் கொள்வதற்கு வாய்ப்பைப் பெறு கிறார்கள். ஆனால் வசதி இல்லாதவர்கள் தொழில் கல்வியைப் பெறுவதற்கு இருக்கின்ற வசதிகளைப் பெறமுடியாமல் தங்க ளுடைய வாழ்க்கையின் எதிர்காலத்தை நன்கு அமைத்துக்கொள்ள முடியாமல் இருக்கிறார்கள் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து, குமரி மாவட்டத்திற்குக் குறைந்தபட்சம் ஒரு பாலிடெக்னிக் கல்லூரி நிறுவ வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

அங்கே இருக்கின்ற கல்வி பயிற்சி தருகின்ற அமைப்பில் வெறும் ஆறே ஆறு துறைகளில்தான் பயிற்சி தருகிறார்கள். ஏறத்தாழ 35-க்கும் அதிகமான துறைகளில் பயிற்சிகள் இருக்கும்போது வெறும் 6 துறைகளில் மட்டும்தான் பயிற்சி தரப்படுகிறது. இருக்கின்ற துறைகளில் கவர்ச்சிகரமான துறைகளில் அங்கே போதனை தரப்படுவதில்லை. எனவே அவைகளையும் சேர்த்து இன்னொரு கல்வி நிறுவனம் அங்கே துவங்க வேண்டும் என்று அரசை நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

1978 ஆம் ஆண்டில் டி.ஐ. சைக்கிள் கம்பெனியில் வேலை நிறுத்தம் ஏற்பட்டதன் காரணமாக 60 தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள். அவர்களுக்கு மீண்டும் வேலை தரவேண்டும் என்று பலகாலமாக கோரிக்கை விடுத்தும் மேனேஜ் மென்ட் செவிசாய்க்காதது மட்டுமல்ல, அரசாங்கமும் இதிலே தன்னுடைய கவனத்தைச் செலுத்தவில்லை என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன். அந்த 60 தொழிலாளர்களில் 48 பேர் வீட்டுக்கு அனுப்பப்பட்டு விட்டனர். எஞ்சியுள்ள 12 தொழி லாளர்கள் மட்டும் போராட்டத்தில் தொடர்ச்சியாக ஈடுபட்டு நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய உரிமையை நிலைநாட்டிக்கொள்ள நீதிமன்றம் செல்வதற்கு அரசு தடை விதித்துக்கொண்டு இருக்கிறது. நீதிமன்றத்திற்குச் சென்று அவர்களுடைய உரிமையை நிலை நாட்டிக்கொள்ளவா வது அரசாங்கம் அனுமதி அளிக்க வேண்டும் என்று சொல்லி, இங்கே ஒருசில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து, என் உரையை முடிக்கிறேன்.

திரு. என். வி. என். சோமு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நல மானியத்தின் மீது நான் சார்ந்து இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

நம்முடைய அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு கேட்ட தொகை ரூபாய் 6,35,40,000 ஆகும். இந்த ஆண்டு கேட்கிற தொகை ரூபாய் 7,87,51,000 ஆகும். சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு 1½ கோடி ரூபாய் அதிகம் கேட்கிறார். இப்படி அதிகமான டிமாண்ட் கேட்கிற தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள், அதிகமாகச் சம்பளம் வேண்டும் என்று கேட்கிற தொழிலாளர்களை வாரண்ட் இல்லாமல் பிடிக்கும் அளவிற்கு அதிகாரம் வேண்டும் என்கிற வகையில் சட்டம் கொண்டு வந்து இருக்கிறார்கள். இப்போது அது பொறுக்குக் குழுவிற்குப் போய் இருக்கிறது. இப்படி 1½ கோடி ரூபாய் அதிகம் செலவுக்குக் கேட்கிற நம்முடைய தொழிலாளர் நல அமைச்சர் இன்றைக்கு தமிழகத்தில் உள்ள நிலைமையை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். தமிழகத்தில் உள்ள தொழிலாளர்கள் ஒன்று சிறையில் இருக்க வேண்டும் அல்லது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு தொழிற்சாலைக்கு வெளியே இருக்க வேண்டும். இல்லாவிட்டால், ஆலைகளும் தொழிற்சாலைகளும் மூடப்பட்டு வீட்டுக்குள் உட்கார்ந்து கொண்டு கண்ணீர் வடித்துக்கொண்டு இருக்கவேண்டும். இதுதான் இன்றைக்கு உங்கள் ஆட்சியில் நடந்து கொண்டு இருக்கின்ற அலங்கோலம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொழிலாளர் தோழன் என்று சொல்லிக் கொண்டு அந்தத் தொழிலாளர்களை எவ்வளவு நசுக்க முடியுமோ அந்த அளவிற்கு நசுக்குவதற்காக சட்டங்களையும் திட்டங்களையும் இந்தச் சர்க்கார் செய்து கொண்டு இருக்கிறது.

டெய்ரி டெவலெப்மெண்ட் கார்ப்பரேஷன் மாதவரத்தில் இயங்கிக் கொண்டு இருக்கிறது. அதில் 1000 பேர் வேலை இழந்து இருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆனந்தசயனத்தில் இருக்கிறார்கள், ஆனந்த பூரிப்பில் இருக்கிறார்கள் ; அந்த 1000 இடங்களிலும் யாரை வைத்து வேலை வாங்குகிறார்கள் என்று சொன்னால், வெளி ஆட்களைக் கொண்டு வந்து—அதிலும் குறிப்பாக அ. தி. மு. க. கட்சியைச் சேர்ந்தவர்களைக் கொண்டு வந்து வேலைக்கு அமர்த்தி, அவர்களுக்கு ஒரு நாளைக்கு 8 ரூபாய் சம்பளம் கொடுத்து, அந்தக் கட்சிக்காரர்கள் இன்றைக்கு மாதவரத்தில் வேலை செய்து கொண்டு இருக்கிறார்கள். ஆனால் ஒரு ஆயிரம் தொழிலாளர்கள் அதனால் வீட்டில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களின் நிலையை அரசு கவனிக்கவில்லை என்கிற குற்றச்சாட்டை நான் இங்கே சொல்லிக் கொள்கிறேன். அதை பற்றிக் கவனிப்ப

தற்கு, அதைத் தீர்ப்பதற்கு, அவர்களுக்கு உள்ள குறை பாட்டைப் போக்குவதற்கு இந்த அரசுக்கு மன நிலை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[மாலை 5.10]

நேற்று கூட இங்கே ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் வந்தது. குமாரபாளையத்தில் எஸ்.எஸ்.எம். யூனிட் இருக்கிறது. அவர்களுக்கு 23 தொழிற்சாலைகளில் பவர்லூம் பாக்டரிகள் இருக்கின்றன. பல்வேறு பிரிவுகளைக் கொண்ட தொழிற்சாலைகள் வைத்து உள்ளனர். அதில் 1,200 தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். அதிலே, 500 பெண்கள் பணியாற்றுகிறார்கள. 25—1—1981 அன்று சேலம் மாவட்ட திராவிட பஞ்சாலைத் தொழிலாளர்கள் முன்னேற்றச் சங்கம் துவக்கப்பட்டு, அதிலே 110 தொழிலாளர்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்தார்கள். அந்த எஸ். எஸ். எம். மேனேஜ்மென்ட்டார் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வேண்டிய நண்பர். அந்தத் தொழிற்சாலையில் பணியாளர்களுக்கு பதிவேடு இல்லை, அடையாள அட்டைகள் வைப்பது இல்லை. இந்த அவலநிலையை நீக்க தொழிற்சங்கம் கோரிக்கைகளை முன்வைத்தது. அதை நிர்வாகம் ஏற்கவில்லை; பேச்சு வார்த்தைக்கு வரவில்லை. தொழில் தகராறு வந்து, தொழிலாளர் நல ஆணையாளர்முன் பிரச்சனை வைக்கப்பட்டது. ஆணையாளர்முன் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன;—

(1) டைம்கார்டு எல்லாத் தொழிலாளர்களுக்கும் இருக்க வேண்டும்.

(2) மஸ்டர் ரோல் எல்லாத் தொழிலாளர்களுக்கும் இருக்க வேண்டும்.

(3) வேலை வாய்ப்பைப் பெறுவதில் ஏற்கெனவே பணியாற்றிய அனைத்துத் தொழிலாளர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

இந்த அறிவுரைகளை டி. சி. எல். என்று சொல்லுகின்ற தொழிலாளர் நல துணை ஆணையாளர் வழங்கினார். இந்த அறிவுரை அடிப்படையில் 17—2—1981 அன்று தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினார்கள். ஆனால் முதலாளி

** ** **

வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டதற்காக தண்டனை வழங்கும் வகையில் 612 தொழிலாளர்களுக்கு 8 நாட்கள் ஊதியத்தைப் பிடித்தம் செய்வதாகச் சொன்னார். டி. சி. எல். அறிவுரைப்படி தொழிலாளர்கள் உள்ளே போகிறார்கள். ஆனால், முதலாளி அந்த அறிவுரையை மீறுகிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: துணைத் தலைவரவர்களே, காலையிலிருந்து இதுவரையில் பேசப்பட்ட பேச்சுக்கள் எல்லாம் பொதுவாகத் தொழிற்சங்கப் பிரச்சனை, தொழிலாளர்கள் பிரச்சனை, அரசின் போக்கு என்ற அளவிலேதான் இருந்தன. இப்போது மாண்புமிகு உறுப்பினர் சோமு அவர்கள்

** ** ** **

என்று சொல்லுகிறார்கள். இது சரிதானா? இது அவைக் குறிப்பில் இடம் பெறலாமா?

திரு. என். வி. என். சோமு: * * * * என்று தானே சொன்னேன். அது கூடவா இருக்கக் கூடாது?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது தேவையில்லை. அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

திரு. என். வி. என். சோமு: துணைத் தலைவரவர்களே, அப்படியானால் அந்த முதலாளி, அதாவது அந்த எஸ். எஸ். எம். குரூப்பைச் சேர்ந்த முதலாளி * * * * * இல்லை என்று சொல்கிறார்களா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

டாக்டர் கே. சமரசம்: சார், பாயிண்ட் ஆஃப் ஆர்டர். * *

திரு. என். வி. என். சோமு: மிக்க நன்றி. * * என்று சொன்னதற்கு மீண்டும் நன்றி. 17—2—1981 அன்று டி. சி. எல். அறிவுரைப்படி வேலைக்குத் திரும்பிய 612 தொழிலாளர்களுக்கு 8 நாள் ஊதியம் பிடிக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல. 18—2—1981 அன்று சங்க நிர்வாகிகள் உட்பட 52 பேர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள். இதுவும் டி. சி. எல். அறிவுரையை மீறியதாகும். இதற்கு அமைச்சர் எடுத்த நடவடிக்கை என்ன? அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

அதுமட்டுமல்ல, இந்த நடவடிக்கைக்குப் பின்னால் முறையான வேலை நிறுத்தத்தை 18—2—1981 முதல் ஆரம்பித்தார்கள். அதனால் 6—3—1981-ல் 1,200 தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்தார்கள். தொழிற்சங்கத் தலைவர் உண்ணா

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

விரதம் இருந்தார். பின்னால் தொழிலார்கள் உண்ணா விரதம் இருந்தார்கள். தாய்க்குலம் எங்கள் குலம் என்று சொல்கின்ற இந்த ஆட்சியில் பெண்களும் உண்ணாவிரதம் இருந்தார்கள் அதற்குப்பின்னாலும் பிரச்சனை தீர்க்கப்படாததால் 25-3-1981 முதல்1—4—1981 வரையில் மறியல் போராட்டம் செய்தார்கள். அதன் காரணமாக 224 தொழிலாளர்கள் சேலம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். சிறையில் அடைக்கப்பட்டு ஏறத்தாழ ஒரு மாதகாலம் ஆகிவிட்டது. அவர்கள் இன்னும் விடுதலை செய்யப்படவில்லை. குமாரபாளையத்தில் போராட்டம் நடைபெற்று, 224 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டு, சேலம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டு ஒரு மாதகாலமாகியும் இன்னும் விடுதலை செய்யப்படவில்லை. தொழிலாளர்கள், தொழிலாளர்கள் என்று வாய்ப்பறை அடிக்கிற இந்த அரசில் ஒரு மாதத்திற்கு மேலாக 200-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் சிறையிலே கண்ணீர் வடிக்கிறார்கள். இந்த இலட்சணத்தில் இந்த மானியத்தில் மேலும் 1½ கோடி ரூபாய் வேண்டுமென்று அமைச்சர் கேட்டிருக்கிறார். ஆகவே, இந்த அரசு முதலாளிகளுக்குத் துணைபோகின்ற அரசு என்று நான் குற்றஞ் சாட்டுகிறேன்.

[மாண்புமிகு மன்றத் தலைவர்—தலைமை]

அதுமட்டுமல்ல, 16—4—1981 அன்று பொது வேலை நிறுத்தம் என்று அறிவிக்கப்பட்டு, குமாரபாளையத்தில் 17-ந் தேதி கடை அடைப்பு நடந்தது. 18-ந் தேதி மாவட்ட போலீஸ் அதிகாரி தலைமையில் 500-க்கு மேற்பட்ட காவல் துறையினர் 20 லாரிகளிலே அங்கே சென்று பொது வேலை நிறுத்தம் செய்யக் கூடாது, கடைகளைத் திறக்க வேண்டுமென்று அச்சுறுத்தினார்கள் என்றாலும், கடை அடைப்பு மகத்தான வெற்றி பெற்றது. 16ஆம் தேதி சென்னையில் தொழிலாளர் துறை துணை ஆணையர் முன் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டுவிட்டு ஈரோடு திரும்புகிறார்கள் தொழிற்சங்கத் தலைவர்கள். குமாரபாளையத்தில் இருந்து சென்னைக்கு வந்தார்கள். பேச்சுவார்த்தைக்குப் பின் இரயில் ஏறி சென்னையில் இறங்குகிறார்கள் தொழிலாளர் தலைவர்கள். ஆனால், அங்கே இரயில்வே ஸ்டேஷனிலே கொள்ளைக்காரர்களைப் பிடிப்பது போல், கொலைகாரர்களைப் பிடிப்பதுபோல் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொழிற்சங்கத் தலைவர் திரு. கருப்பசாமி கைது செய்யப்படுகிறார். தொழிற்சங்கத் தலைவர் திரு. பழனிச்சாமி கைது செய்யப்படுகிறார். பவானி நகர தி.மு.க. செயலாளர் திரு கிட்டு என்கிற கிருஷ்ணசாமி ஈரோடு இரயில் நிலையத்தில் கைது செய்யப்படுகிறார். அதோடு மட்டுமல்ல, பவானி நகர தி.மு.க. செயலாளரை நக்ஸலைட் என்று சொல்லி அவருடைய வீடு சோதனையிடப்படுகின்றது. அதோடு மட்டுமல்ல, 1—4—1981 அன்று அவர் சாராய வியாபாரி

என்று சொல்லி அவருடைய வீடு சோதனையிடப்படு கிறது. முதலிலே நக்ஸல்பாரி என்று சொல்லி சோதனை யிடுகிறார்கள். இரண்டாவதாக அவர் சாராய வியாபாரி என்று சோதனையிடுகிறார்கள். அரண்டவன் கண்ணுக்கு இருண்டது எல்லாம் காடு என்று சொன்னதுபோல சாராய வியாபாரிகளின் சாம்ராஜ்யத்தில் தொழிலாளர்கள் தலைவர்கள் எல்லாம் சாராய வியாபாரிகள் போல் தெரிகிறார்கள் போலும். இன்றைக்கு 12—4—1981 அன்று அவர் மீது 302 செக்ஷன்படி வழக்கு. 224 தொழிலாளர்கள் சிறையிலே வாடுகிறார்கள். மேலும் தொழிலாளர்களை ஒடுக்க முழுத்த காரணத்தால் முதலாளியின் பேச்சைக் கேட்டுக் கொண்டு டி. எஸ். பி. டிரான்ஸ்பர் செய்யப் படுகிறார். சப்-இன்ஸ்பெக்டர் ட்ரான்ஸ்பர் ஆகிறார். ஹெட் கான்ஸ்பிடள் ட்ரான்ஸ்ஃபர் ஆகிறார். 300-க்கும் மேற்பட்ட தந்திகள் நூற்றுக்கு மேற்பட்ட கடிதங்கள். இந்த ஆட்சியிலே. இன்னும் பிரச்சினைகள் தீரவில்லை. ஆனால் நாங்கள்தான் தொழி லாளர்களை, உழைப்பவர்களைக்காக்க வந்த அவதாரங்கள் என்று இங்கே மார் தட்டிக் கொண்டு இருக்கிறார்கள். இதை வேதனை யோடு எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அதோடு மட்டுமல்ல. பேசின்பிரிட்ஜிலே நிலக்கரித் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினையில் 200-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பல மாதங் களாக வேலையற்று இருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையில் சி. ஐ. டி. யூ. வைச் சேர்ந்த ஒருவர் இடைத்தரகராக இருந்து, பல்லாயிரக்கணக்கான ரூபாயைப் பெற்றுக் கொண்டு தொழி லாளர்களுக்கு எதுவுமே கொடுக்கவில்லை. மார்க்சிஸ்ட் கம் யூனிஸ்ட் கட்சி அவரை எங்களுடைய கட்சியிலே இருந்து வெளியே அனுப்புகிறோம் என்று சொல்லி வெளியே அனுப்பிவிட்டது. ஆனால் அவர் என்ன செய்தார் என்றால், அந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் துரோகி அ. தி. மு. க. கொடியைப் போட் டுக் கொண்டார். சென்னையில் அந்தக் கட்சியின் தலைவரை தொழிற் சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். தன்னைப் பொதுச் செயலாளர் என்று பிரகடனப்படுத்திக் கொண்டார். இப்போது 200 தொழிலாளர்கள் வீதியிலே நிற் கிறார்கள், கண்ணீர் வடிக்கிறார்கள். 14,000 பி. அண்ட். சி. மில் தொழிலாளர்கள் எங்கே கண்ணீர் வடிக்கிறார்களோ அங்கே இருந்து ஒரு பர்லாங் தூரத்திலே இந்த 200 தொழிலாளர்களும் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார்கள். இதை எல்லாம் கேட்பதற்கு நாதியில்லை.

மேலும் சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு $1\frac{1}{2}$ கோடி ரூபாய் அதிகமாக வேண்டும் என்று கேட்கிறார்களே, அது இந்தத் தொழிலாளர்களை அடிப்பதற்குத் தானா? இவர்களை எல்லாம் வீதியிலே நிறுத்துவதற்குத் தானா? 200க்கு மேற்பட்ட தொழிலாளர்களை சிறையிலே போட்டு வாட்டி

வதைப்பதற்குத் தானா? இதை நாடு கேட்கிறது. நாங்களும் இங்கே கேட்க விரும்புகிறோம். அதோடு மட்டுமல்ல. இன்னும் சொல்லப் போனால் இந்த அரசின் தொழிலாளர் கொள்கை உழைப்பவர்களைப் பழிவாங்கும் பாதகக் கொள்கையாக இருக்கின்றது. கடந்த ஒன்றரை ஆண்டுக் காலமாக 1,800 தொழிலாளர்கள் மீது 307 செக்ஷன்படி வழக்கு போடப்பட்டிருக்கின்றது. முன்பெல்லாம் இந்தச் சர்க்கார் அந்தச் சர்க்கார் என்றுதான் அழைப்பார்கள், ஆனால், இந்த அரசாங்கத்தைச் சுருக்கமாக அழைக்க வேண்டும் என்றால் 307சர்க்கார் என்றே அழைக்கலாம். அப்படி சொல்லக்கூடிய அளவுக்கு ஒன்றரை ஆண்டுக் காலமாக 1,800 தொழிலாளர்களின் மீது இ. பி. கோ. 307 செக்ஷன்படி கொலை முயற்சி வழக்குகள் போட்டு அவை இன்னும் நீதிமன்றத்திலே தேங்கிக்கிடக்கின்றன.

அடுத்து சாதாரணமாக எந்த ஒரு நிறுவனத்திலேயும் தொழில் தகராறு தீருகின்றபோது தொழிலாளர்களின்மீது போடப்பட்ட வழக்குகள் எல்லாம் வாபஸ் பெறப்படவேண்டும். ஆனால், அப்படிச் செய்தார்களா என்றால் செய்யவில்லை. ஆனால் இந்த அரசாங்கம் தொழிலாளர்களை எவ்வளவு தூரம் துவண்டு போகச் செய்ய முடியுமோ அவ்வளவு தூரம் துவண்டு போகச் செய்துவிட்டு, இன்றைக்கு முதலாளிகளுக்குத்துணை நிற்கின்ற காரணத்தால்தான் 1,800 தொழிலாளர்கள் மீது இன்றைக்கு 307 செக்ஷன்படி போடப்பட்ட கொலை முயற்சி வழக்குகள் வாபஸ் பெறப்படவில்லை என்பதை மெத்த வேதனையோடு இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

முதலாளிகளுக்கு உதாரணமாக விளங்கவேண்டிய மாடல் எம்பளாயரான இந்த அரசாங்கத்தின் கதி என்ன? எரையூர் நேரு சர்க்கரை ஆலையில் 2—3—1981 அன்று பொதுக் கோரிக்கைகளுக்காக வேலை நிறுத்தம் செய்தனர். ஆனால் மறுநாள் அவர்கள் அந்தத் தொழிற்சாலையிலே பயங்கரமாகத் தாக்கப்பட்டார்கள். இதைத் தடுத்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள முயன்ற தொழிலாளர்களின் மீது வழக்கு போடப்பட்டது. அதற்குப் பிறகு நடைபெற்ற வேலை நிறுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று எல்லாத் தொழிலாளர்களும் நிபந்தனையற்ற முறையில் வேலை நிறுத்தத்தை வாபஸ் பெற்றனர். ஆனால் அந்த நிர்வாகம் 26 பேர் மீது பிணைப்பில் வர முடியாதபடி அதற்குரிய பிரிவுகளின்படி வழக்குகளைத் தொடர்ந்தது. முன்மாதிரியாக இருக்க வேண்டிய மாடல் எம்பிளாயர். முன்மாதிரியாக இருக்க வேண்டிய அரசாங்கம். அரசாங்கமே இப்படி என்றால், தனிப்பட்ட முதலாளிகள் எவ்வளவு தான் தோன்றித்தனமாக நடந்துக் கொள்வார்கள்? அவர்கள் அப்படி

தான்தோன்றித்தனமாக நடப்பதற்கு அரசாங்கமே வழி வகுத்துக் காட்டுகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

[மாலை 5.20]

வேலை நிறுத்தத்தை தடை செய்ய சட்டம், வாரண்ட் இல்லாமல் தொழிலாளர்களைக் கைது செய்ய புதிய சட்டம் 'கொண்டவன் கோலாலே அடித்தால், கண்டவன் கல்லாலே அடிப்பான்' என்று சொல்வார்கள். அது போல இந்த அரசாங்கமே வாரண்ட் இல்லாமல் கைது செய்ய சட்டம் கொண்டு வந்தால், அது தனிப்பட்ட முதலாளிகளுக்கு இன்னும் கொடுமைகள் புரிய எவ்வளவு தைரியத்தைக் கொடுக்கும்? இதெல்லாம் இன்றைக்கு இந்த அரசாங்கத்தின் மெத்தனப் போக்கினால், ஆகாத போக்கினால், ஏற்பட்ட விளைவுகள். தொழிலாளர்களின் ஆர்ப்பாட்டம் நாடெங்கிலும் வளர்ந்திருக்கிறது.

அதோடு மட்டுமல்ல, பி. அண்ட். சி. மில்லை திறப்பதற்காவது இந்த அரசாங்கம் ஏதாவது அக்கறை காட்டியிருக்கிறதா? அதற்கென்று தொழிலாளர் நல அமைச்சர் ஒரு முறையாவது டெல்லிக்குப் சென்றிருக்கிறாரா? எத்தனையோ காரியங்களுக்காக டெல்லிக்குப் போகிறார்கள். அந்த மில்லை திறப்பதற்கென்று ஒரு முறையாவது சென்றிருக்கிறாரா? பிரதமர் அவர்களை உலகத் தமிழ் மாநாட்டிற்கு அழைப்பதற்காக வேண்டி பல முறை சென்றார்கள். தூதர்களையும் அனுப்பினார்கள். இன்னமும் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்—வேறு காரணங்களுக்காக. ஆனால் மாண்புமிகு அமைச்சர் போன்றவர்கள் ஒரு முறையாவது அந்த பி. அண்ட். சி மில்லை திறக்க வேண்டும் என்பதற்காகச் சென்றிருக்கிறார்களா?

அந்த பி. அண்டு சி. மில்லை மூடியதினால் கிட்டத்தட்ட 14,000 தொழிலாளர்கள் வேலை இழந்து, அந்தக் குடும்பங்களைச் சேர்ந்த 4 லட்சம் பேர்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மறு வாழ்க்கைக்கு என்ன நடவடிக்கையை இந்த அரசாங்கமோ, அல்லது அமைச்சர் அவர்களோ எடுத்துக் கொண்டார்கள்? முதலமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கையை மேற்கொண்டார்கள்? கிட்டத்தட்ட 4 மாத காலமாக சம்பளம் இல்லாமல் வேலையிழந்து மனைவி மக்களோடு பட்டினி கிடக்கும் அந்த 14,000 தொழிலாளர்களுக்கு என்ன நிவாரணம் கொடுத்தீர்கள்? தீ விபத்து வந்தால் கொடுக்கவில்லையா? வெள்ளம் வந்தால் கொடுக்கவில்லையா? அதே போல, இவர்களுக்கும் ஒரு மாத சம்பளத்தை நிவாரணமாகக்

கொடுத்தால் என்ன ? ரேஷன் வாங்கக் கூட முடியாத நிலையில் அவதிப்படும் தொழிலாளர்களுக்கு, அவர்களின் குடும்பங்களுக்கு அந்த 5 லட்சம் பேர்களுக்கு, இந்த அரசாங்கம் அந்த உதவி யாவது செய்யக் கூடாதா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அதோடு மாத்திரம் அல்ல, ஒரு பக்கம் பி. அண்டு சி. மில் மூடப்பட்டிருக்கிறது. ஒரு பக்கம் குமாரபாளையத்திலே புயல், இன்னொரு பக்கம் பால் பண்ணையிலே புயல், இவையெல்லாம ஒரு பக்கம் இருக்க, இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளேடு மூடப்படும் நிலை மற்றொரு பக்கம். இதிலே ஒன்றை நான் குறிப் பிட்டுத்தான் ஆகவேண்டும். பலேகர் அவார்டு பரிந்துரைகளுக் காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முத்தரப்பு மாநாட்டைக் கூட்டினார். அந்த மாநாட்டில் நான் குறிப்பிட்டேன். இந்தப் பரிந்துரைகளின் காரணமாக எல்லோரையும் வீட்டுக்கு அனுப்பக் கூடிய அளவில், ரெட்ரன்ச்மென்ட் செய்யக் கூடிய வகையில் சில முதலாளிகள் துணிந்து இறங்கியிருக்கிறார்கள், அதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று சொல்லியதால் அன்றே அமைச்சர் அவர்கள் அறிக்கை விட்டார்கள். ஆனால் அந்த அறிக்கையி னால் என்ன பலன் ? ஒன்றுமே இல்லை. இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலிருந்து வெளியேற்றப்பட்ட 25 தொழிலாளர்களை திரும்பவும் வேலைக்கு எடுத்துக் கொள்ளவில்லையே.

அது மட்டும் அல்ல, இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை ஜூன் மாதம் 20 ஆம் தேதியிலிருந்து மூடப்படும் என்று நோட்டீஸ் கொடுத்து அறிவித்திருக்கிறார்கள். அவர்களைப் போய் நாம் கேட்க முடியுமா ? நீங்கள் போய் கேட்டால் அவர்கள் திருப்பிக் கேட்பார்கள், பி. அண்டு. சி. ஆலையை மட்டும் திறந்தீர்களா ? ஏன் இதை திறக்கச் சொல்லி எங்களிடம் வருகிறீர்கள் என்று கேட்பார்கள். ஒரு முறை தவறு அனுமதிக்கப்பட்டு விட்டது என்றால் அதைத் திருத்த முடியாமல் போய்விடும். தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

இங்கே பேசிய ஆளும் கட்சி உறுப்பினர்கள் எல்லாம் தொழில் அமைதி நிலவுகிறது. சமதர்மம் குலாவுகிறது என்றெல்லாம் பேசினார்கள். எங்கே அமைதி நிலவுகிறது ? பி. அண்டு. சி. ஆலை மூடப்பட்டிருக்கிறது. தொடர்ந்து ஒரு பத்திரிகை அலு வலகமும் மூடப்பட இருக்கிறது. பால் பண்ணைத் தொழி லாளர்கள் போராடுகிறார்கள். மின்சாரத் தொழிலாளர்கள் அவதிப்படுகிறார்கள். இந்த லட்சணத்தில் ஆட்சியை நடத்திக் கொண்டு, தொழிலாளர்களை நாங்கள்தான் பராமரிக்கிறோம். பாதுகாக்கிறோம், நல்ல முறையிலே அவர்களுக்குச் சேவை செய் கிறோம் என்றெல்லாம் பேசினால் அதிலே என்ன கருத்து இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை.

இதிலே இன்னொரு நிகழ்ச்சியை கட்டிக் காட்டி குறிப்பிட விரும்புகிறேன். 25—3—1980 ஆம் நாள் அன்று நந்தனம் கல்லூரி மாணவர்களுக்கும், போக்குவரத்து துறை தொழிலாளர்களுக்குமிடையே தகராறு. அந்தத் தகராறை தவிர்ப்பதற்கு காவல் துறையினர் அழைக்கப்பட்டு, அவர்கள் வந்திருக்கின்றனர். அப்படி மாணவர்களுக்கும் போக்குவரத்து தொழிலாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட கலவரத்தை அடக்க வந்தவர்கள், வீட்டு வசதி வாரியத்தின் அலுவலகங்களிலே நுழைந்து அங்கே பணியிலே இருக்கிற தொழிலாளர்களை அடிக்கிறார்கள். வீட்டு வசதி வாரியத்திற்குள் நுழைய வீட்டு வசதி வாரியத்தின் தலைவரையோ அல்லது குடிசை மாற்று வாரியத்தின் தலைவரையோ, அவர்கள் அனுமதி கேட்க வேண்டாமா? அப்படி எந்த அனுமதியையும் பெறாமல் போலீசார் அந்த அலுவலகத்தில் நுழைந்து, வேலை செய்யும் தொழிலாளர்களைத் தாக்கியிருக்கிறார்கள். மாணவர்களுக்கும் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கும் மோதல் என்றால் இவர்கள் என்ன செய்வார்கள்?

இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் பத்திரிகைகளில் வந்தன. நாம் அனைவரும் பார்த்திருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் இராகவானந்தம் அவர்கள்கூட அங்கேசென்று உங்கள் மீது பட்ட அடி என் மீது பட்டதைப்போல் என்று வருத்தத்தோடு சொல்லியிருக்கிறார். சிவபெருமான் மீது பட்ட அடி யார் மீதோ பட்டதாமே அது போல, அமைச்சர் அவர்கள் அவர்களிடத்திலே சென்று, என் உடன்பிறப்புக்களே, ரத்தத்தின் ரத்தங்களே. உங்கள் மீது பட்ட அடி என் மீது பட்டதைப் போல. நான் நடவடிக்கை எடுக்கிறேன்; என்றெல்லாம் சொல்லி யிருக்கிறார்கள். இந்த நிகழ்ச்சிகளெல்லாம் கூட பத்திரிகைகளில் வந்தன.

அது மட்டுமா? அமைச்சர் அவர்கள் இன்னும் சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட தொழிலாளர்கள் மீது அலுவலர்கள் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் போராட்டத்தில் ஈடுபட்ட நாட்களை பணி நாட்களாக எடுத்துக் கொள்வதாகவும் அரசின் சார்பாக உறுதி மொழி அளித்து விட்டு வந்தார் இங்கே அமர்ந்திருக்கக்கூடிய தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள். ஆனால் என்னவாயிற்று? தமிழக அரசு சார்பாக வீட்டு வசதி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கொடுத்த உறுதிமொழிக்கு மாறாக இரண்டு மாதங்கள் வாரிய அலுவலர்களுக்கு நான்கு நாட்கள் ஊதியத்தை முடக்கி வைத்திருக்கிறார்கள். அந்த மாதிரி முடக்கம், வாரிய அலுவலர்கள் சம்பளம் முடக்கம் எந்தவித ஆணை அடிப்படையிலும் செய்யப்படவில்லை. இன்னும் சொல்லப் போனால் குடிசை மாற்று வாரியத்தலைவர் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. கபாலி,

அவர்கள் கூட அங்கே இருந்தார்கள். இருந்து அவர்கள் சொல்லிய நேரத்தில் அதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தார் அமைச்சர். வீட்டு இலாகா அவர்கள் கையில் இருக்கிறது. அவர்கள் ஆணையிட்டால் நாளையே அப்படி நான்கு நாட்கள் ஊதியத்தை முடக்கி வைத்திருப்பது ரத்தாகும் அதைச் செய்வதற்கு மனமில்லாமல் இங்கே உட்கார்ந்து கொண்டு தொழிலாளர்களுக்காக நாங்கள் பாடுபடுகிறோம் என்று சொன்னால் என்ன அர்த்தம்?

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை]

இன்னும் வீட்டு வசதிவாரியத்தில் எவ்வளவு ஊழல்கள் நடந்திருக்கின்றன என்பதை கொல்லம்பாளயம் அருகில் கரூர் பைபாஸ் ரோடில் இருக்கிற எண்பது ஏக்கர் விவசாய நிலங்கள் ஈரோடு புறநகர் வீட்டு வசதி திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டிக் கொடுக்க நிலச் சொந்தக்காரர்களுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது. அதில் எல்லோருக்கும், ஏறக்குறைய எண்பது ஏக்கர் நிலங்களுக்கு நோட்டீஸ் அனுப்பி எல்லோரையும் ஆக்கிரமிப்பு செய்ய அனுமதித்தார்கள். ஒரிஜினல் பிளானில் ஏறத்தாழ எண்பது ஏக்கர் வருகிறது. ஆனால் திடீரென்று அவினாசி கவுண்டர் என்று ஒருவர் க.ச எண்1240 அவினாசி கவுண்டரின் ஏறக்குறைய 11 ஏக்கர் நிலம் அதில் அடங்குகிறது. ஆனால் திடீரென்று ஒரு தனி நபர் சொத்தான 11 ஏக்கர்களுக்கு சில காரணங்களைக் காட்டி விதிவிலக்கு அளிக்கப்பட்டது. அதற்கு என்ன காரணம் என்று அங்குள்ள மக்கள் கேட்கிறார்கள். எண்பது ஏக்கர் நிலத்திற்கு, அக்விஸஷன் நோட்டீஸ் அனுப்பப்பட்டிருக்கிறது. ஆனால் திடீரென்று அவினாசி கவுண்டர்மீது என்ன காதல் என்ன மோகம்? அவர்களுக்கு ஏன் 11 ஏக்கர் திடீர் என்று விதி விலக்கு அளிக்க வேண்டும் என்று அங்குள்ள மக்கள் பரவலாகப் பேசிக் கொள்கிறார்கள். இன்றைய தினம் வருகிற ஊழல் பட்டியலில் இதுவும் ஒன்று என்று அங்குள்ள மக்கள் பேசிக் கொள்கிறார்கள். ஒரிஜினல் பிளானில் சேர்க்கப்பட்ட 11 ஏக்கருக்கு எப்படி விதி விலக்கு அளிக்கப்பட்டது? ஏற்கனவே இந்த நிலங்கள் நோட்டிபைட் ஏரியா என்று அறிவிக்கப்பட்டிருந்தும்கூட இந்த 11 ஏக்கர் பலவாறாகப் பிரிக்கப்பட்டு மற்றவர்களுக்கு வீட்டு வசதி நிர்வாகப் பொறியாளர் பெயரில் நோட்டிபிகேஷன் தேதிக்குப் பின்னால் ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 80 ஏக்கர் அங்கே ஆர்ஜிதம் செய்ய அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதில் 11 ஏக்கர்களுக்கு திடீரென்று விதி விலக்கு அளிக்கப்பட்டு பிறகு வீட்டு வசதி வாரிய நிர்வாகப் பொறியாளர் பெயரிலும் அவர்களுடைய உறவினர்கள் பெயரிலும் ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஊழலுக்கு அமைச்சர் அவர்கள் என்ன பதில் சொல்ல இருக்கிறார்கள் என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமல்ல. வீட்டு வசதி வாரியத்தில் இன்றைக்கு நடைபெறுகிற ஆளுங்கட்சிக்காரர்களுக்குச் சாதகமாக நடைபெறுகிற ஊழல்கள் பற்றி ஏற்கனவே எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் 13—2—1980 அன்று—எந்த 13—கவனம் இருக்கிறதா- பெப்ரவரி 17 அன்று வீட்டுக்கு அனுப்பப்பட்டீர்களே அதற்கு நான்கு நாட்களுக்கு முன்னால் எங்கள் கலைஞர் ஆணித் தரமாகச் சொன்னார்கள் மிக மிக ஆணித்தரமாகச் சொன்னார்கள். ஊழல்கள் செய்கிறீர்கள், விண்ணப்பங்கள் போடாதவர்களுக்கு வீடுகள் ஒதுக்குகிறீர்கள் என்று ஆணித் தரமாகக் கேட்டார்கள் எங்கள் கலைஞர் அவர்கள். எப்படி கேட்டார்கள்? சென்ற ஆண்டு சட்டமன்றத்தில் 13—2—1980-ல் பேசிய கலைஞர் அவர்கள் கோட்டூர்புரத்தில் விண்ணப்பம் போடாமலேயே 13 வீடுகளில் மூன்று வீடுகள் 21—1—1980 அன்று கணபதி என்பவருக்கும், நீலகண்டம் என்பவருக்கும், வி. வி. ரவி என்பவருக்கும், விண்ணப்பம் போடாமல் வீடுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன என்று சுட்டிக் காட்டி கண்டித்துப் பேசினார்கள். தொடர்ந்து பேசினார்கள். திருவான்மியூரில் கட்டப்பட்ட எல்.ஐ.ஜி., எம்.ஐ.ஜி. ப்ளாக்குகள் ஜீ.ஓ. எம்.எஸ். நம்பர் 74, தேதி 23—1—1980-ல் இருபது வீடுகளில் 10 வீடுகள் விண்ணப்பம் இல்லாமல் ஒதுக்கப்பட்டதை சுட்டிக் காட்டி கண்டித்தார்கள்.

[மாலை 5-30.]

அசோக் நகரிலே 12 வீடுகள், அதிலே 5 வீடுகள் அப்ளிகேஷன் இல்லாமல் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இதை எங்கள் தலைவர் கண்டித்தார். அவர் கண்டித்துப் பேசிய பின்னரும் இந்த அரசினுடைய போக்கு இன்னும் மாறவில்லை. விண்ணப்பங்கள் போடாமலேயே இன்றைய தினம் வீட்டு வசதி வாரியத்திலே வீடுகளை ஒதுக்கிக் கொண்டிருக்கிறார்கள். நான் ஆதாரபூர்வ மாக குற்றம் சாட்டுகிறேன். ஜி.ஓ. எம்.எஸ். 84, தேதி 7—2—1981லே விண்ணப்பங்கள் போடாமலேயே 4 பேர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தால் வீடுகள் கலைஞர் கருணாநிதி நகரிலே ஒதுக்கப்பட்டிருக்கிறது. (1) வி. பெருமாள்சாமி, 28 பீகம் சாயபு தெரு, இரண்டாவது லேன், மவுண்ட் ரோடு, சென்னை-2— எம். 30 எப்; (2) திருமதி எஸ். விசாலாட்சி, கே/ஆ எஸ். ஸ்ரீதரன், எல்.5 சே. எல்.ஐ.ஜி. பிளாட், கே.கே. நகர், சென்னை-78— எம். 19 இ; (3) எம். செல்வராஜ், 23, கார்சின் கார்டன், முதல் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-15— எம். 24 ஏ, (4) திரு மதி வையலட் கான்ஸ்டன்ஸ், 43. கார் தெரு, திருவல்லிக் கேணி, சென்னை-5— எம். 29இ— இந்த நான்குபேர்களும் விண் ணப்பங்கள் போடவில்லை. எப்படி அவர்களுக்கு வீடுகள் ஒதுக்கப்பட்டன? அப்படி ஒதுக்கப்படுவதற்கான காரணம்

என்ன என்பதை இன்றைய தினம் நீங்கள் தெளிவாகப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். அது மட்டுமல்ல. "சேரிடி பிகின்ஸ் அட் ஹோம்" என்று சொல்வார்கள். அதைப்போல், நம்முடைய தலைமைச் செயலகத்தில், அதிலும் சட்டமன்றத் துறையில் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற தாற்காலிக பணியாளர்கள் இன்னும் நிரந்தரம் செய்யப்படவில்லை. நாம் இங்கே வெளியே உள்ளவர்களைப் பற்றிப் பேசுகிறோம். எனவே, சட்டமன்றத் துறையிலே பணியாற்றிக் கொண்டிருக்கின்ற தாற்காலிக ஊழியர்களை, நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக பத்திரிக்கையாளர்களுக்கு ஒதுக்கப்படுகின்ற இடங்கள், அந்த எண்ணிக்கை கடந்த $1\frac{1}{2}$ ஆண்டு காலமாக அப்படியே இருக்கிறது. அதை ஏற்றவில்லை. Pen is Mightier than Sword என்று சொல்வார்கள் பத்திரிக்கையாளர்களால் பேனாவால் எழுதப்படுவது கத்தியைக் காட்டிலும் கூர்மையானது என்று சொல்வார்கள். ஆகவே, அவர்களுக்கான இடத்தை அதிகப்படியாக ஒதுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன் (குறுக்கீடு). துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசாங்கத்தினுடைய தொழிலாளர் கொள்கை முதலாளிகளுக்கு அடிபணிவதாக இருக்கிறது. தொழிலாளர்களுக்கு துரோகம் செய்வதாக இருக்கிறது.

இத்தாலிய பாசிச சர்வாதிகாரி முசோலினி துவக்கத்தில் சோஷலிச சித்தாந்தங்களை மொத்தமாகக் குத்தகை எடுத்தவன் போல் பேசியவன்தான். கார்ல் மார்க்சும், லெனினும் கூட தொழிலாளர்களுக்கான நியாயமான பங்கை வகுக்காதவர்கள் என்றுகூட அவன் ஆரம்பத்தில் தொழிலாளர்களுக்காக மேடைகளில், எழுத்துக்களில் கண்ணீர் வடித்தவன்தான்; தொழிலாளர்களுக்குள்ள உரிமை, சிறப்பு அவர்கள் பெற வேண்டிய சலுகைகள் அத்தனையும் அவனால் ஆரம்ப காலத்தில் மிகக் கவர்ச்சிகரமாக வெளியிடப்பட்டன. அதாவது இன்று தமிழகத்தை ஆளுகின்ற அ.தி.மு.க. வின் தேர்தல் அறிக்கையில் சொல்லியிருப்பதைப் போலவே, அவனும் தொழிலாளர்களுக்காக அபரிமிதமாக கண்ணீர் வடித்தவன்; சர்வதேச தொழிலாளர் நலத்தைப் பேசி இத்தாலிய தொழிலாளர்களின் தனித்தன்மையும், சிறப்பும் கம்யூனிஸ்டுகளால் கெடுக்கப்படுவதாக அவன் வாதிட்டான். இத்தாலிய தேசியத்தின் பேரால் அவன் சர்வதேச கம்யூனிசத்தைக் கருவறுப்பதற்கு அணி திரளுமாறு, இத்தாலிய தொழிலாளர்கள் மத்தியில் இனிப்பு தடவியபேச்சுக்களை பேசினான். ஆனால், இங்கேயோ கம்யூனிஸ்டுகளை கூட வைத்துக்கொண்டே தொழிலாளர்களைக் கருவறுக்கிறார்கள்.

முசோலினி சொன்னான் "நத்திங் அகெயின்ஸ்ட தி ஸ்டேட், நத்திங் அவுட் சைட் தி ஸ்டேட், எவரித்திங் வித்தின் தி ஸ்டேட்", எனக்கு எதிராக எதுவும் இல்லை. எனக்குத் தெரியாமல் எதுவும் இல்லை என்று முழங்கினான். 'பிலிவ்' நான் சொன்னதை நம்பு; 'ஒபே'— எனக்கு அடங்கி நட, 'பைட்' எதிரிகளை அடக்கு, இப்படிக் கொக்கரித்தான். ஆட்சி பீடத்தினரே, ஆடி ஆடி விழும் நாளும், அண்டி அண்டி வருகுதுடா என்று எச்சரிக்கை கொடுத்து, உங்கள் தொழிலாளர் விரோதக் கொள்கையைக் கண்டித்து அமருகிறேன். வணக்கம்.

* * *

* * *

[மாலை 5-40.]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. என்.வி.என். சோமு அவர்கள் பேசி முடித்ததிலிருந்து இதுவரை அவையில் நடைபெற்றது அனைத்தையும் அவைக்குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். ஒன்றை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாதிரி டிட் பார் டேட் எல்லாம் பேசக்கூடாது. (குறுக்கீடு) எல்லோரும் உட்காருங்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையை சிறப்பாகவும் செம்மையாகவும் நடத்துகின்ற பொறுப்பு எதிர்க்கட்சியை விட ஆளுங் கட்சியினருக்குத்தான் இருக்கிறது. என்னிடத்திலே அவர்களுக்கு எல்லாம் மதிப்பு இல்லையென்றால் தாங்கள் தீர்ப்பு அளிக்கும் படி கேட்டுக்கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத்துணைத்தலைவர் அவர்களே, இந்த விவாதத்தில் 14 மாண்புமிகு உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். கடைசியில் சிறு சலசலப்பு ஏற்பட்டாலும் கூட பொதுவாக கலந்து கொண்ட உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் நல்ல முறை

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாலை (5-34—5-40) அகற்றப் பெற்றது.

யிலே பேசினார்கள். மாண்புமிகு உறுப்பினர் சோமு அவர்கள் பேசும்பொழுது முசோலினியைப்பற்றிச் சொன்னார்கள். எனக்கு இன்னொன்றும் ஞாபகத்திற்கு வருகிறது. Youth has its passing restlessness and follies என்றும் சொல்லியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதையும் நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நாங்கள் கொடுமையாக ஆட்சி நடத்துகிறோம். வேலை நிறுத்தங்களைத் தடை செய்கிறோம். இது ஒரு ஆட்சியா, முதலமைச்சருக்கு வேண்டியவர் எஸ்.எஸ்.எம். குரூப்பை சேர்ந்தவர் என்றெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் சோமு அவர்கள் சொன்னார்கள். சொன்னவர்கள் எப்படி என்பதைப் பார்க்கவேண்டும். அருமை மாண்புமிகு உறுப்பினர் திரு. என். வி என். சோமு அவர்கள் தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள். தி.மு.க. தங்களுடைய ஆட்சிக் காலத்தில் நடந்துகொண்டிருந்த வேலை நிறுத்தத்தை 20 முறை தடை செய்திருக்கிறது. ஆனால் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இதுவரை ஒரு முறைகூட தடை செய்யவில்லை. வேலை நிறுத்தம் முக்கியமாக தொழில்களில் ஏற்படுவது, நாட்டுக்கு அதுவும் வளர்ந்து வரக்கூடிய நாட்டிற்கு, டெவலப்பிங்கண்டிரிஸ்க்கு தேவையா இல்லையா என்பதை மனதில் கொண்டு ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது. இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களுக்கு ஏற்ப அது செலக்ட் கமிட்டிக்கு போயிருக்கிறது. அதைப்பற்றி இப்போது விவாதிப்பது அவ்வளவு உசிதம் என்று நான் கருதவில்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினரின் கட்சி ஆண்ட காலத்தில் டி.ஐ. ஆரை உபயோகப்படுத்தி வேலை நிறுத்தத்தை தடை செய்திருக்கிறார்கள். மறந்து விடவேண்டாம். யாரும் மறந்துவிடமாட்டார்கள். மக்கள் மறந்துவிடுவார்கள் என்று நினைத்து 'Public memory is prover-bially short' என்பதை மனதிலேகொண்டு நாம் எதையும் பேசிவிடலாம் என்று அப்படிப் பேசினால் எல்லோருமே அப்படி மறந்துவிடுவதில்லை, அதுவும் தீங்கு என்றால் மறந்து போவதே இல்லை என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். டி. ஐ. ஆரை பயன்படுத்தி தி.மு.க. வேலை நிறுத்தத்தை தடைசெய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே வீடு ஒதுக்கியது பற்றிச்சொன்னார்கள். மனையைப்பற்றிச் சொன்னார்கள். என்னுடைய ஞாபகம் பள்ளிக்கூடத்திற்கு கொடுத்ததாக ஞாபகம். அது பற்றி பரிசீலனை செய்கிறேன். ஆனால் அப்ளிகேஷன் போடாதவர்களுக்கு வீடு கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். இப்போது கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். என்னுடைய ஞாபகம் சரியாக இருக்குமானால் இப்போது கொடுத்தது சரண்டர்டு பிளாட்ஸ் மற்றும் Flats முன்பு கொடுத்தது வீடுகள். அதைப் பற்றி இன்னார் நாற்பதிலே எழுதி அனுப்பியிருக்கிறார்கள். பதிலும் அரசு அனுப்பியிருக்கிறது.

(குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேசும்பொழுது நான் எவ்வளவு பொறுமையாக இருந்தேன் என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். நான் பதில் சொல்ல வேண்டாமா?

அவைகளெல்லாம் அரசுக்குள்ள discretionary quota என்பதிலே கொடுக்கப்பட்டது. Discretionary quota என்றால் என்னவென்பது உங்களுக்குத் தெரியும். அரசின் உசிதம்போலக் கொடுக்கப்படுவது என்பதாகும். எனவே, அதை தெளிவுபடுத்த விரும்புகிறேன். அப்படிக் கொடுக்கப்படும் பொழுதுகூட, வீட்டு வசதி வாரியத்தின் சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டு இவைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படவேண்டும் என்று எழுதி அரசிடமிருந்து வீட்டு வசதி வாரியத்திற்கு அனுப்புகிறோம் அந்தச் சட்ட திட்டத்திற்கு உட்பட்டால்தான் ஒதுக்கீடு செய்கிறார்கள். இல்லையென்றால் ஒதுக்கீடு செய்வது இல்லை. ஆகவே அதில் ஒன்றும் தவறு இல்லை என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மறுபடி வீடு கேட்கிறவர்களுக்கு Earnest Money Deposit கொடுத்து அப்ளிகேஷன் கொடுத்தால் இப்பொழுது கொடுத்துக் கொண்டு வருகிறோம். இப்பொழுது என்னுடைய கருத்து, Discretionary quota என்றால் அப்ளிகேஷன் போடாதவர்களுக்குக் கூட கொடுக்கலாம் என்றுதான் தனிப்பட்டமுறையில் நான் கருதுகிறேன். ஆனால் இந்தக் குறைகூட சொல்லப்படாத அளவிற்கு செய்வதைப்பற்றி அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். Discretionary quota-இல் கொடுத்தாலும் அரசு allotted subject to என்று எழுதி, வீட்டு வசதி வாரியச் சட்டத்திற்கு உட்பட்டுத் தான் கொடுக்க வேண்டுமென்றுதான் எழுதுகிறோம் என்பதை சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து, வேலைநிறுத்தம் செய்தவர்களுக்கு ஊதியம் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். ஊதியம் கொடுக்க வேண்டாமென்று அரசு உத்தரவு போடுவதில்லை. வேலைக்கு வரவில்லை, பேபில் போடக்கூடியவர்கள் அன்றையதினம் போடவில்லை. அதற்கும் மேலாக அடிதடி நடந்தது என்பதைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். யார் யாருக்கு அடி வீழ்ந்தது, எங்கு வீழ்ந்தது, எப்படிப்பட்ட காயம் ஏற்பட்டது, எந்த மருத்துவரிடம் சென்றார்கள், எத்தனை நாள் இருந்தார்கள் என்ற சர்ட்டிபிகேட் வாங்கி அரசுக்கு அனுப்பினால் நடவடிக்கை எடுப்போம் என்று சொல்லி இருக்கிறேன். ஆனால் இன்றையவரையில் மாலை 5-47 மணி வரையில் காத்துக் கொண்டிருக்கிறேன். இது வரையில் அங்கிருந்து வரவில்லை என்பதைசொல்லி, வந்தால்தானே நடவடிக்கை எடுக்க முடியும் என்று கேட்க விரும்புகிறேன். ஆனால் வரவில்லை, அது ஏன் என்று எனக்குத் தெரியவில்லை.

அதைத்தான் நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி.என். சோமு அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அவர்கள் நன்றாக அடுக்குத் தொடர் மொழியிலே அவருடைய தந்தையைப்போல் பேசினார்கள். அதைக் கேட்டபொழுது எனக்குப் பழைய ஞாபகம் வந்தது.

பொதுவாக இங்கே பேசிய எல்லாத் தோழர்களுமே ஆரம்பத்தில் பேசிய திரு. பாலன் அவர்கள் எனக்கு நெருங்கிய நண்பர்- இதனால் மற்றவர்கள் வேண்டாதவர்கள் என்பது அல்ல. அவர்கள் எனக்கு மிகவும் நெருங்கியவர். குடிசைகளைப்பற்றிய பிரச்சினைகளை சொன்னார்கள். அவைகள் தீர்க்கப்படுகின்றன. கவலைப்பட வேண்டாம். முன்பெல்லாம் இருந்த நிலையை விட இப்பொழுது நன்றாக இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொண்டு அவ்வப்பொழுது இருக்கின்ற குறைகளைச் சொல்லி; நாங்கள் வந்து பார்க்க வேண்டுமென்று சொல்லிக் குறைகளைச் சொன்னால், அவைகளைத் தீர்ப்பதற்குத் தயாராக இருக்கிறோம். எனவே, அதைப்பற்றி மனக்கிலேசப் படவேண்டாம். தைரியமாக இருக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கேபேசிய உறுப்பினர்கள் பொதுவாக ஒரு பிரச்சினையைப் பற்றிச் சொன்னார்கள். அதாவது கேஷுவல் லேபர் பிரச்னை பற்றி, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் சொன்னார்கள். கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் பற்றிச் சொன்னார்கள். அதற்காகச் சட்டம் கொண்டு வர வேண்டுமென்று, இப்படி இந்தச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டும், அப்படி அந்தச் சட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்களிலிருந்து ஆரம்பித்து திரு. கருப்பையா வரையில், திரு. தங்கமணி வரையில் பேசியது எதைக்காட்டுகிறது இதுவரையில் ஆட்சி நடந்திருக்கிறது, புதிய புதிய சட்டங்களை, ஏழைகளுக்குப் பாதுகாப்பு தரக்கூடிய சட்டங்களைக்கொண்டு வர முடியும் என்றாலும், அகில இந்தியஅண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்—புரட்சித் தலைவரவர்களுடைய தலைமையிலே நடக்கக்கூடிய ஆட்சியிலேதான் அவைகளைக் கொண்டு வர முடியும் என்ற நம்பிக்கையில்தான் கேட்கிறார்கள். அந்த நம்பிக்கையில் தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட வேண்டும், அந்தச் சட்டம் கொண்டு வரப்பட வேண்டும் என்று சொல்கிறார்கள்.

இன்றைய தினம் 20 வேலை நிறுத்தங்கள், 1 லாக்கவுட் ஆக
21 தான் நடக்கிறது. இந்த வேலைநிறுத்தங்கள் நடக்கிறதே என்று கேட்டால், வேலை நிறுத்தமே நடக்கவில்லையென்றால் ஒருக்கால் சர்வாதிகார ஆட்சியே நடக்கிறது என்று பொருள்.

ஜனநாயக நாட்டில் வேலைநிறுத்தமே இல்லை என்று எதிர்பார்க்க முடியாது. அது ஜனநாயகம் அல்ல.

accumulated anger bottled up emotion.

இவைகளெல்லாம் இருக்கின்றன. தொழிலாளர்களுக்குப் பன்னெடுங்காலமாகச் சேர்த்து வைக்கப்பட்ட, குவித்து வைக்கப்பட்ட கோபங்கள், குறைகள் என்றாவது வெடித்தால்தான் பிரச்னைகளுக்கு விமோசனம் கிடைக்கும், அதுவும் இப்பொழுது புரட்சித் தலைவரவர்களுடைய ஆட்சியிலே வெடித்தால்தான் விமோசனம் வரும் என்று கருதி அவைகள் நடக்கின்றன.

(மாலை 5.50)

மாண்புமிகு உறுப்பினர்கள் சட்டம் வேண்டுமென்று கேட்பது கூட அதுதான். நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். கைத்தறி நெசவாளர்களுக்கான சட்டம் தயார் செய்யப்பட்டு இந்தச் சட்ட மன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது ஞாபகம் இருக்கும். பேசும் பொழுதுகூட பல உறுப்பினர்கள் சொன்னார்கள். யாருக்கும் பயந்து கொண்டு நிறுத்த வேண்டிய தேவையில்லை. அறிமுகம் செய்தாகிவிட்டது. அறிமுகம் செய்து செலக்ட் கமிட்டிக்கு அனுப்பப்பட்டது. ஊர் பூராவும் சுற்றி வந்தோம். கடைசியாக, தென்னாற்காடு மாவட்டத்தில் சாட்சிகளைப் பதிவு செய்யப் போகும்போது, மந்திரியாகப் போனேன். வரும்போது, இராகவானந்தமாக வந்தேன். ஆட்சி கலைக்கப்பட்டது. அதனால்தான்—தடை. கைத்தறி தொழிலாளர்களுக்காகச் சட்டம் தயார் செய்து—பீடித் தொழிலாளர்களுக்காகவுள்ள சட்டத்தில் இருக்கக்கூடிய ஓட்டைகள் இதில் இருக்கக்கூடாது என்பதற்காக மிகக் கஷ்டப்பட்டு கவனமாகப் பார்த்து, சட்டம் தயார் செய்து, அச்சாபீசில் இருக்கிறது. 25 ஆம் தேதி அது வந்து விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அது அச்சடிக்கப்பட்டு 25 ஆம் தேதி வந்துவிட்டால், இந்தச் சட்டமன்றத்திலே என்றைக்கு அனுமதிக்கறார்களோ அன்றைய தினம் இங்கே அறிமுகப்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியோடு இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, நேற்றைய தினம் உத்தரவு போட்டிருக்கிறோம்.

Handloom weaving, handloom silk weaving industry இரண்டிற்கும் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிப்பதற்காக புதுக் குழுக்கள், இதற்கொரு குழு, அதற்கொரு குழு அமைத்து, நேற்றையதினம் உத்திரவிட்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஒரு சமயம், குறைந்தபட்ச ஊதியம் ஒரு துறைக்கு நிர்ணயித்த போது—பவர்லூம் என்று கருதுகிறேன்; அது—வழக்குமன்றத் திற்குச் சென்றபொழுது சில குறைபாடுகளைப் பார்த்து, அதில் நடந்ததைப் பற்றி நான் அந்த செக்ஷன் வரும்போது விரி வாகப் பேசுகிறேன். அதில் முதலாளிகளுடைய பிரதிநிதி களும், தொழிலாளர்களுடைய பிரதிநிதிகளும் ஈக்குவலாக—சரி சமமாக இல்லையென்ற குறைகளைச் சொல்லி, அந்தக் குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயச் சட்டம் செல்லாது என்று வழக்குமன்றத்திலே சொல்லி விட்டார்கள். மறுபடியும் அதற் குக் குழு அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அது மட்டுமல்ல, இனிமேல் அதுமாதிரி குறைபாடுகள் இருக்கிறது என்று சொல்லி, கோர்ட் தலையிடக் கூடாது என்பதற்காகத்தான்—ஏனென் றால், கஷ்டப்பட்டு, தொழிலாளர்கள் நன்மை அடைய வேண்டுமென்று, பலனடைய வேண்டுமென்று நாம் குழுவை நியமித்து, அந்தக் குழு ஊதியத்தை நிர்ணயித்து சொன்ன பிறகு அது செல்லாது என்று சொல்லிவிட்டால் காத்துக் கிடந்த தொழிலாளர்களுடைய நிலை என்ன ஆகும் என்பதற்காக இனி மேல் அப்பேர்ப்பட்ட பிரச்சினைகளில் வழக்குமன்றம் தலை யிடக் கூடாது, முடியாது, என்பதற்காக ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டு வந்து 9 (ஏ) என்ற ஒரு புது செக்ஷனைச் சேர்க்க வேண்டுமென்று இந்தச் சட்டமன்றத்திலே அறிமுகப்படுத்தி யிருப்பது மாண்புமிகு உறுப்பினர்க்கு ஞாபகம் இருக்கும். அது விவாதத்திற்கு வரும்போது நாமெல்லாம் விரிவாகப் பேசிக் கொள்ளலாம்.

காஷுவல் லேபர்களைப் பற்றி சொன்னார்கள். என்.எம்.ஆர். பற்றியெல்லாம் சொன்னார்கள். பன்னெடுங்காலமாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள் என்று. நான் கைத்தறி நெசவுத் தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் சட்டம் வருகிறது என்று சொல்லிவிட்டேன், 25 ஆம் தேதிக்கு மேல் அவர்களுக்குக் கூலி நிர்ணயிக்க, இரண்டு கமிட்டி நியமித்திருப்பதைச் சொல்லி யிருக்கிறேன். அதே போல், மாண்புமிகு உறுப்பினர் தங்க மணி அவர்களும் மற்றவர்களும் சொன்னதைப் போல், குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயித்தால், அதிலே நீதிமன்றம் தலையிடாமல் இருப்பதற்காக, புதிய செக்ஷனைக் கொண்டு வந்து அதுவும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. அடுத்து, பன்னெடுங்காலமாக வேலை செய்யக்கூடிய காஷுவல் தொழிலாளர்கள். காஷுவல் தொழிலாளர்கள் பன்னெடுங்கலாமாக வேலை செய்து, பல லாண்டுகளாக வேலை செய்து, கன்பார்ம் செய்யப்படாமல் வேலையைவிட்டு அனுப்பப்படுவது இன்று, நேற்று இருப்பது அல்ல; வெள்ளைக்காரன் காலத்திலேயிருந்து இருந்து வரு கிறது. ஆனால், புரட்சித் தலைவர் ஆட்சியிலேதான் அவர் களை கன்பார்ம் செய்ய வேண்டுமென்று நேற்றையதினம்

20—4—1981 அன்று இந்தச் சட்டமன்றத்திலே அறிமுகப் படுத்தியிருக்கிறோம். அப்படியானால் யார் காலத்தில் நடக்கிறது? இதற்குமுன்னாலே ஆட்சி இல்லையா? மாண்புமிகு உறுப்பினர் என்.வி.என். சோமு அவர்கள் எங்களைப் பற்றி எல்லாம் நல்ல வார்த்தைகளைச் சொல்வார்கள் என்று எதிர் பார்த்தேன். ஆனால், அதற்கு மாறாக, கடுமையான வார்த்தை களை உபயோகப்படுத்தினார். அவருக்குக் காணிக்கையாக வைக்கிறேன். 7 ஆண்டுக்காலம் நீங்கள் சார்ந்துள்ள கலைஞர் தலைமையில் ஆட்சி நடந்திருக்கிறது. அந்த நேரத்தில், அந்த காஷுவல் லேபர்கள் இருந்தார்கள். 7 ஆண்டுக்காலம் இருந் தார்கள். காஷுவல் லேபராகச் சேர்ந்த பிறகு அடுத்த ஆண்டு திருமணம்; அடுத்த ஆண்டு இரண்டு குழந்தைகள், அதற்கடுத்த ஆண்டு ஒரு குழந்தை இப்படி 4 ஆண்டுக்காலத்தில் 3 குழந்தை களைப் பெற்றுவிட்டு, தவித்துக்கொண்டிருக்கிறான். அப்பொழுது காஷுவல் லேபர் உண்டு. இப்படி காஷுவல் லேபர் வேலையில் லாமல் விரட்டப்பட்டது உண்டு. அது நல்ல தொழிற்சங்க வேலை யைச் செய்து வருகிற மாண்புமிகு என்.வி.என். சோமு அவர் களுக்குத் தெரியும். ஆனால், அப்பொழுது அவர்கள் கலைஞர் அவர்களைச்சந்தித்து, பாருங்கள், கலைஞரே அது கொடுமையாக இருக்கிறது. அவர்களை கன்ஃபர்ம் செய்வதற்குச் சட்டம் கொண்டு வரவேண்டுமென்று சொல்லவில்லை. ஒருக்கால் சொல்லி ஏற்றுக்கொள்ளப்படவில்லையோ, என்னவோ தெரியாது. நான் அறியேன் பராபரமே. ஆனால், இப்பொழுதுதான் புரட்சித்தலைவர் ஆட்சியில் அவர்களை பர்மனென்ட் செய்ய வேண்டுமென்ற சட்ட முன்வடிவை நேற்றையதினம் கொண்டு வந்திருக்கிறோம் என்பதை பெருமையோடு சொல்லிக் கொள் வேன்.

அன்—ஆர்கனைஸ்டு செக்டார். அதைப் பற்றி எல்லாம் உறுப்பினர்களும் பேசினார்கள். குறிப்பாக கோவைத் தம்பி மிக அழுத்தமாகப் பேசினார்கள். மாண்புமிகு உறுப்பினர் சட்டநாதக்கரையாளர் அவர்கள் சொன்னார்கள். நம்முடைய அருமைச் சகோதரர் ஜனதா இஸ்மாயில் அவர்களும் சொன் னார்கள். கிட்டத் தட்ட உறுப்பினர்கள் எல்லோரும் சொன் னார்கள். அவர்களுக்கு இதுவரையில் சட்டமே இல்லை. அந்த அன் ஆர்கனைஸ்டு செக்டாருக்கு சட்டம் தயார் செய்து, கூடுமானவரையில் இந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே அறிமுகப்படுத்தலாம் என்று நான் நம்புகிறேன். அந்தச்சட்டம் தயார் செய்யப்படுகிறது என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சி யோடு சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

கட்டிடத் தொழிலாளர்களைப் பற்றியும் அவர்களுடைய குறைகளைப் பற்றியும் எல்லோரும் எடுத்துச் சொன்னார்கள். அதிலே சட்டநாதக்கரையாளர் அவர்கள் மிக உருக்கமாக

பிரச்சினையை எடுத்துச் சொன்னார்கள். நான் அதைப் பற்றிச் சொல்லுகிறேன். அவர்களுக்கு இப்போதே ஒர்க்மென் காம்ப்பன்சேஷன் ஆக்டு பொருந்தும், அதை அவர்கள் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். இருந்தாலும் அவர்கள் செய்யக்கூடிய வேலையை ஒத்திட்டுப் பார்க்கும்போது கொடுக்கப்படக்கூடிய சலுகை இல்லை, பாதுகாப்பு இல்லை என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். அதைப்பற்றி அகில இந்திய தொழிலாளர் நல அமைச்சர் மாநாட்டில் டெல்லியிலே பேசினோம். டெல்லி அரசாங்கமே இதற்கு நல்ல டிராப்ட் சட்டத்தையே தயார் செய்து கொடுத்தது. அதிலே தமிழக அரசு வேண்டிய திருத்தங்களைத் தந்திருக்கின்றது. நிச்சயமாக மத்திய அரசு அந்த சட்டத்தைக் கொண்டு வந்துவிடும் என்று மனமாற நம்புகிறேன். அப்படி அவர்கள் செய்யவில்லை என்று சொன்னால் தமிழக அரசு கொண்டு வரும். ஏனென்றால் டிராப்ட் பில்லையே தயார் செய்த மத்திய அரசு, எங்களுடைய ஒப்பினியன்களை, அபிப்பிராயங்களை எல்லாம் கேட்ட பிறகு அதை நிறுத்தி வைக்கத் தேவையில்லை. மாண்புமிகு அஞ்சையா அவர்கள் தொழிலாளர் நல அமைச்சராக இருந்தபோதே அவர்கள் மிக அவசரப்பட்டே கொண்டு வரவிரும்பினார்கள். இப்போதும் அது மத்திய அரசால் கொண்டு வரப்படும் என்று நினைக்கிறேன். அப்படி இல்லை என்றால் இந்த அரசே அதைக் கொண்டு வரும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இஸ்மாயில் பேசுகிறபோது குமரி மாவட்டத்தில் மேலும் தொழிற் பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும், வேலை வாய்ப்பு பெருக மேலும் சில தொழில் பிரிவுகள் தற்போது இயங்கி வரும் தொழிற் பயிற்சி நிலையங்களில் ஆரம்பிக்கலாம் என்று சொன்னார்கள். இருக்கும் பிரிவுகள் போதாது என்று சொன்னார்கள். அதைப் பற்றி அரசு பரிசீலனை செய்யும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளுகிறேன்.

திரு. தங்கமணி அவர்கள் பேசும்போது அகில இந்திய திறனாய்வுத் தேர்தல் All India skill competition என்ற பயிற்சி அலுவலர்களுக்கு தற்போது அளிக்கப்படும் ஊக்க ஊதியத்திற்குப் பதிலாக, ஒரு முன் ஊதிய உயர்வு, அட்வான்ஸ் இன்கிரிமென்ட், தரவேண்டும் என்று சொன்னார்கள். அது பயனுள்ளதாக இருக்கும் என்றும் சொன்னார்கள். சிறந்த மாணவர்களைப் பயிற்றுவித்த பயிற்சி அலுவலர்களுக்கு ரூ. 200-ம், இதற்குப் பொறுப்பான 6 மற்ற அலுவலர்களுக்கும் ரூ. 100-ம் ஊக்க ஊதியமாக வழங்கப்படுகிறது. பல நபர்கள் சம்பந்தப்பட்டிருப்பதால் முன் ஊதிய உயர்வு வழங்குவது என்பது அவ்வளவு உசிதமாக இருக்காது என்று அரசு கருதுகிறது.

மாண்புமிகு ரமணி அவர்கள் பேசும்போது சொன்னார்கள். சென்னையில் பெண்களுக்கான தொழிற்பயிற்சி நிலையம் அரசின் செலவிலே நடத்தப்பட்டாலும், அதனுடைய முதல்வர் அரசாங்க அலுவலர் அல்ல, அதற்கு அரசாங்க அலுவலரை முதல்வராக நியமிக்கவேண்டும் என்ற கருத்தைச் சொன்னார்கள். சென்னை தியாகராயநகரில் உள்ள பெண்களுக்கான தொழிற்பயிற்சி நிலையம் 1956ஆம் ஆண்டு தமிழக அரசால் ஆரம்பிக்கப்பட்டது. அதை நடத்தும் பொறுப்பு துர்காபாய் தேஷ்முக் அவர்கள் தலைமையிலே இயங்கி வந்த ஆந்திரமகிள சபாவிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆந்திர மகிள சபாவில் இருந்து ஒரு சிலர் பிரிந்து ஸ்ரீசேவா மந்திர் என்ற பொது ஸ்தாபனத்தை ஏற்படுத்தினார்கள். அந்த ஸ்தாபனத்தின் தலைவரிடம் இந்த தொழிற் பயிற்சி நிலையத்தின் முதல்வர் பொறுப்பை ஒப்படைத்தார்கள். அவரே இன்று வரை கௌரவ முதல்வராக பொறுப்பு வகித்து வருகிறார்கள். அந்தத் தொழிற் பயிற்சி நிலையத்துக்கு முழுநேர முதல்வரைநியமிப்பதற்கான இயக்குநர் அறிக்கை அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது. விரைவில் அதுபற்றி அரசு முடிவெடுக்கும்.

மாண்புமிகு ரமணி அவர்கள் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்களுக்கு கொடுக்கப்படும் உதவித் தொகையை அதிகமாக உயர்த்தவேண்டும் என்று சொன்னார்கள். தற்போது உதவித்தொகை 25 வீதம் மூன்றில் ஒரு பங்கு பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படுகிறது. இந்தத் தொகையை மாதம் 40 ரூபாயாக உயர்த்தி 50 சதவீதம் உள்ளவர்களுக்கு பயிற்சி அளிப்பவர்களுக்கு உதவித் தொகை வழங்க அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கின்றது. திரு. கருப்பையா அவர்களும் திரு. தங்கமணி அவர்களும் அரசின் தொழிற் பயிற்சி நிலைய அலுவலர்கள் 1972-ல் வேலை நிறுத்தம் செய்தும், குடியரசுத் தலைவரது சுழற்கோப்பை கிடைக்கும் அளவுக்கு திறமையாகப் பணியாற்றினாலும் அவர்களுக்குப் போதுமான நிவாரணம் அளிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். அவர்கள் கோரிக்கைப்படி, பயிற்சிக்காலப் படி—டெபுடேஷன் அலவன்ஸ் உயர்த்தப்பட்டுள்ளது.

[மாலை 6-00]

65 புதிய பயிற்சி அலுவலர்கள்—டிரெயினிங் ஆபீசர்பதவிகளை ஏற்படுத்தியிருக்கிறோம். 379 இளநிலை பயிற்சி அலுவலர் பதவிகள் உதவிகள் பயிற்சி அலுவலர் பதவிகளாக உயர்த்தப்பட்டுள்ளன. 7 உதவி முதல்வர் பதவிகளும், 3 உதவி இயக்குனர் பதவிகளும் இதுவரையில் தரப்பட்டுள்ளன. ஏனைய குறிக்கோள்களும் பரிசீலனையில் உள்ளன.

திரு. ரமணி அவர்கள் பேசுகிறபோது பயிற்சி முடிந்தபின் பயிற்சியாளர்களுக்கு வேலைக்கு உத்தரவாதம் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். பயிற்சியாளர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக வேலை வாய்ப்பு ஏற்படுவது இல்லை. எனினும் தொழிற்சாலைகளில் ஏற்படுகின்ற வேலைகளில் 50 சதவீத இடத்தை பயிற்சியாளர்களுக்கு ஒதுக்க வேண்டும் என்றும், அதற்காக பயிற்சியாளர்கள் சட்டம் திருத்த வேண்டும் என்றும் தொழிலாளர் நல அமைச்சர்கள் மாநாட்டில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அது மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ரமணி அவர்கள் கோவை மாவட்டத்தில் குறைந்தது இரண்டு தொழிற் பயிற்சிக் கூடங்கள் ஆரம்பிக்க வேண்டும் என்று சொன்னார்கள். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 3 தொழிற் பயிற்சி நிலையங்கள் அமைக்க மத்திய திட்டக்குழு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த ஆண்டு இரண்டு தொழிற் பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்க இருக்கிறோம். ஆண்களுக்காக அரக்கோணத்தில் ஒன்றும், பெண்களுக்காக கடலூரில் ஒன்றும் ஆரம்பிக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் மேலும் தொழிற் பயிற்சி நிலையம் ஆரம்பிப்பது பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

திரு. ரமணி அவர்கள் தொழில் பழகுனர்களுக்கு மாதா மாதம் அளிக்கும் பயிற்சி உதவித் தொகையை அதிகரிக்க வேண்டும் என்று சொன்னார்கள். அது குறித்து சென்டிரல் அப்பிரன்டிஸ் கவுன்சில் பரிசீலித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் சோமு அவர்கள் பேசுகிறபோது எஸ். எஸ். எம். நிறுவனத்தைப் பற்றிச் சொன்னார்கள். அப்போது குறிப்பிட்ட சில வார்த்தைகள் காலையில் இருந்து நடந்த விவாதத்தில் கொஞ்சம் அன்பேலடபிள்ளாக இருந்தது. அதையும் தவிர்த்து இருந்தால் விவாதம் கொஞ்சம் ஹை ஆர்டராக இருந்து இருக்கும். டாக்டர் சமரசம் அவர்கள் பேசுகிறபோது சொன்ன மாதிரி—ஒருவர் நம்மைப் பார்த்து வணக்கம் சொன்னால் நாமும் வணக்கம் சொல்கிறோம். அவர் உடனே நீங்கள் ஸ்டேஷன் மாஸ்டராக 20 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தபோது நான் அந்த இடத்தில் பாயின்ட்ஸ்மேன் வேலை பார்த்தேன் என்கிறார். ஓகோ, அப்படியா, வாங்க, வாங்க என்று சொல்கிறோம். நான் ஸ்டேஷன் மாஸ்டராக இருந்தது உண்மை. அவர் சொன்னது சரியா தவறா என்பது நமக்குத் தெரியவில்லை, இருந்தாலும் இவ்வளவு தூரம் விவரம் தெரிந்து சொல்கிறாரே என்று வாய்யா, உட்கார் என்று சொல்லி பேசிக்கொண்டு இருக்கிறோம். உடனே வேண்டியவர் என்று சொல்லிவிட முடியுமா? அதைப் போல பொறுப்பில் உள்ளவர்களிடத்தில்

வந்து உங்களை நான் அறிந்தவன் என்று ஒருவர் பேசினால், அவரும் உட்காருங்கள் என்று சொல்லி பேசுகிறார். அதற்காக வேண்டியவர் என்று சொல்லிவிடுவதா? ஆகவே, வேலை நிறுத்தம் ஒரு இடத்தில் நடைபெறுகிறது என்கிறபோது, அதன் சார்பாகப் பேசி, அந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண முயலுவதுதான் சரியானதாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உரிமை காரணமாக நான் திரு. சோமு அவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன். நீங்கள் இந்து போன்ற பத்திரிகை தொழிலாளர்கள் தலைவராக இருக்கிறீர்கள். பிரச்னைகளை ஆழமாக அறிந்து பேசுகிறீர்கள்? இப்போது படிப்பதுபோல் எல்லா விஷயங்களையும் நல்ல முறையில் படித்துப் பார்த்து, பேச வேண்டும். அப்படிப் பேசினால் எங்களைப் போன்ற அமைச்சர்களுக்குப் பேருதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த எஸ். எஸ். எம். நிறுவனத்தைப்பற்றி தொழிலாளர் செயலாளர் என்று கருதுகிறேன்—திரு. சி. குப்புசாமி அவர்கள் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு என்னை வந்து சந்தித்துப் பேசினார்கள். மாண்புமிகு உறுப்பினரிடத்தில் அவர் சொல்லவில்லையோ என்னவோ தெரியவில்லை. சொல்லியிருப்பார் என்றுதான் கருதுகிறேன். அவர் என்னை வந்து சந்தித்த பிறகு நான் தொழிலாளர் நல அதிகாரிகளிடத்தில் பேசி இருக்கிறேன்.

திரு. என். வி. என். சோமு : With your kind permission Sir Mr. Deputy Speaker நான் சொல்ல வந்தது, ஏறத்தாழ 20 நாட்களாக அந்த நிறுவனத்தில் பணிபுரியும் 200 தொழிலாளர்கள் சிறையில் இருக்கிறார்கள். அவர்களை உடனடியாகவிடுதலை செய்தால் என்ன? விடுதலை செய்த பிறகு பேச்சு வார்த்தை நடத்தினால் என்ன? அதற்கு மாறாக அங்கேஇருக்கும் டி. எஸ். பி. மாற்றப்படுகிறார், எஸ். ஐ. மாற்றப்படுகிறார், ஹெட்-கான்ஸ்டேபிள் கூட மாற்றப்படுகிறார். இது நியாயம்தானா? மாண்புமிகு தொழிலாளர்நல அமைச்சரோடு திரு. குப்புசாமி அவர்கள் பேசியது எனக்குத் தெரியும். ஆனால் அரசு கொடுக்கின்ற தாக்கீதுகளை ஏற்கஅந்த நிர்வாகம் மறுக்கிறது என்பது தான் எங்களுடைய குற்றச்சாட்டு.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அது எல்லாம் சரி. இப்படிப் பேசியதால் நீங்கள் ஒரு ஹை ஆர்டரில் வருகிறீர்கள். மாண்புமிகு திரு. குப்புசாமி அவர்கள் என்னைப் பார்க்கவந்த போது நான் படுக்கப் போய் விட்டேன். வெறும் கைலி கட்டிக் கொண்டுதான் இருந்தேன். அமைச்சர் தூங்குகிறார் என்று சொல்லி அவரைப் போகச் சொல்லி இருக்கலாம். அதுவும் தி.மு.க. பேரவைத் தொழிலாளர் தலைவர் என்று தெரிந்தும் கூடச் சொல்லியிருக்கலாம். ஆனால் நான் அப்படிச் செய்ய

வில்லை. தொழிலாளர் நலப் பிரச்னையை எடுத்துக் கொண்டு யார் எந்த நேரத்தில் வந்தாலும் அதைத் தீர்க்க வேண்டும் என்ற அடிப்படையில், அவரை வைத்துக்கொண்டே, உடனடியாக சேலம் கலெக்டரோடு பேசினேன். என் துறையைச் சேர்ந்த அதிகாரிகளோடு பேசினேன். கவனித்துக் கொள்ளுங்கள், ஒன்றும் நடக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி இருக்கிறேன். நேற்றைய தினம் காலையில் கூடச் சொன்னேன். 21-ம் தேதி என்னுடைய மானியக் கோரிக்கை முடிந்தவுடன் நானே அழைத்துப் பேசுகிறேன். முடிந்தால் விரைவில் இதற்குத் தீர்வுகாண எல்லா நடவடிக்கைகளும் எடுக்கிறேன் என்று சொல்லி இருக்கிறேன். அதைப் பாராட்டுவார்கள் என்று கருதினேன். அது என்னவோ, எங்களை யாருமே பாராட்டாமல் இருக்கிறார்கள்.

இதை எல்லாம் விட்டுவிடுங்கள். முக்கியமான ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தோம். ஒருவர் கூட அதை ஞாபகம் வைத்து பாராட்டவில்லை. “ சப்சிஸ்டன்ஸ் அலவன்ஸ்,, கொடுக்க வேண்டுமென்று திரு. ரமணி அடிக்கடி சொல்வார். அவர் கூட இந்தச் சட்டத்தைப் பாராட்டவில்லை. சஸ்பென்ஷனில் இருந்தால் 90 நாட்களுக்கு மேல் என்றால் 50 சதவீதம் கொடுக்க வேண்டும்; 120 நாட்களுக்கு மேல் என்றால் 75 சதவீதம் கொடுக்க வேண்டும்; 180 நாட்களுக்கு மேல் என்றால் முழு சம்பளமும் (ஃபுல் வேஜஸ்) கொடுக்க வேண்டும் என்று ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து சென்ற சட்ட மன்றக் கூட்டத்தில் நிறைவேற்றினோம். அதை நினைத்துப் பார்த்து, எழுந்த உடனே “ மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்த அரசு இத்தனை நாள் இல்லாமல் இப்போது தமிழகத்தில் சஸ்பென்ஷனில் இருக்கிறவருக்கு ஊதியம் கொடுக்க சட்டம் கொண்டு வந்ததற்கு மகிழ்ச்சி, மாண்புமிகு முதலமைச்சருக்கு நன்றி என்று சொல்லிவிட்டு மேற்கொண்டு பேசினால் எவ்வளவு நன்றாக இருக்கும். யாரும் அது பற்றி ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை. நாங்கள் பல காரியங்களைச் செய்கிறோம். எங்களுக்கு ஒரு “ எங்கரேஜ்மென்ட் ” வேண்டாமா? You are chilling our enthusiasm.

நாங்கள் ஆர்வமாக செய்திருப்பதற்கு ஒரு பாராட்டு. மற்றபடி நீங்கள் காரசாரமாகச் சொன்னீர்கள், சொல்லுங்கள். குற்றஞ் சாட்டினீர்கள், பரவாயில்லை. ஆனால் செய்த நல்ல காரியத்திற்கு ஒரு பாராட்டு வேண்டாமா? இது சாதாரண சட்டமா? சஸ்பென்ஷன் பீரியட் 180 நாளைத் தாண்டிவிட்டால் முழு ஊதியம் கொடுக்க வேண்டும். இதைப் பாராட்டுங்கள். அடுத்த ஆண்டு மானியத்தில் பேசும்போதாவது நீங்கள் பாராட்டு, குற்றச்சாட்டு என்று இரண்டு பிரிவுகளாகப் பிரித்து, சொல்லுங்கள். நான் வேடிக்கைக்காகச் சொல்லவில்லை. அடுத்த

ஆண்டு இந்த மானியம் வரும்போது எத்தனையோ சட்டங்கள் வந்துவிடும். அப்படியானால் நீங்கள் பாராட்டியே ஆகவேண்டு மென்ற '' கம்பல்ஷனில் '' இருப்பீர்கள்.

இந்த மன்றத்திலே இருப்பதில் நான்தான் வயதானவன் என்று நினைக்கிறேன். 65 வயது ஆகிவிட்டது. அடுத்த ஆண்டில் யார் யார் இருப்போமோ, யார் யார் இருக்கமாட்டோமோ தெரியாது. இந்த வருஷத்தில் நீங்கள் எல்லாம் பாராட்டுவதை என் காதாரக் கேட்க வேண்டும் என்று நினைத்தேன். அடுத்த வருஷம் நிச்சயமாகப் பாராட்டுவீர்கள் என்று நம்புகிறேன்.

திரு. இரா. கருப்பையா அவர்கள் டி.வி.எஸ். குருப்பில் ரெபரன்ஸ் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள் என்று நினைக்கிறேன். அவர்களுக்குச் சொல்கிறேன். அது தவறான தகவல். யாரோ சொன்ன தவறான தகவலைக் கேட்டு, அவர்களுக்கு ஏற்படுகிற உணர்ச்சியின் காரணமாகச் சொல்லிவிட்டார்கள் என்று நினைக்கிறேன். பிரேக்ஸ் இந்தியாவில் 7 தொழிலாளர்களுடைய வழக்கு (நான்-எம்பிளாய்மென்ட்) ரெபரன்-சுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதன் பிறகு 6 பேர்களுடைய வழக்கை அனுப்பியிருக்கிறோம். திரு. அகஸ்டின், நான்-எம்பிளாய்மென்ட், ரெபரன்சுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதைப்போல திரு. திருவேங்கடம் வழக்கும் அனுப்பப்பட்டு இருக்கிறது.

லூக்காஸ் டி.வி.எஸ்.-ல் நான்-எம்பிளாய்மென்ட் 4 பேர்களுடைய வழக்கை ரெபரன்சுக்கு அனுப்பியிருக்கிறோம். தியாகராஜன், சொக்கலிங்கம் பிள்ளை, சுப்பிரமணி, சதானந்தமூர்த்தி ஆகிய 4 பேர்களின் வழக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதைப் போல சுந்தரம் மோட்டார்ஸில் நான்-எம்பிளாய்மென்ட் 12 பேர்களுடைய வழக்கை ரெபரன்சுக்கு அனுப்பியிருக்கிறோம். இப்படிப் பல வழக்குகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. இன்னொன்றை யாரும் சொல்லவில்லை. ஒரு ''லாக் அவுட் டை''க் கூட வேஜஸ் உண்டா, இல்லையா என்று கேட்டு ரெபரன்சுக்கு அனுப்பி இருக்கிறோம் என்பது என்னுடைய நினைவு.

கிராம வீட்டுவசதி பற்றிச் சொல்லும்போது திரு. கருப்பையா அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். சிமென்ட் அங்கே கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். அனுமதிக்கப்பட்டிருக்கிற அங்கத்தினர்களுக்குத் தேவையான சிமென்டை வீட்டுவசதி சங்கத்தின் மூலமாகவே பெற்றுக் கொள்ளலாம். வீட்டுவசதி சங்கப் பதிவாளர் மூலம் சிமென்ட் ஒதுக்கப்படுகிறது. 200 சதுர அடி அளவில் கட்டப்படுகிற ஒரு வீட்டுக்கு 10 மூட்டை சிமென்டுக்கு மேல் தேவைப்படாது என்று கணக்கிட்டிருக்கிறார்கள். அந்த அளவுக்குக் கிடைப்பதில் சிரமம் ஏதும் இருக்காது.

இன்னும் திரு. ரமணி ஒரு கருத்தைச்சொன்னார்கள். சேலம், திருச்சி, சிவகாசி இந்த இடங்களில் இ.எஸ்.ஐ. மருத்துவமனை கட்ட திட்டமும் நடவடிக்கையும் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது 5 இடங்களில் இருக்கிறது. ஒன்றை மறந்துவிட்டார்கள். அதாவது வேலூரை மறந்து விட்டார்கள். நான் அப்போதே சொல்ல வேண்டுமென்று நினைத்தேன்; ஆனால் இடையிலே குறுக்கிட வேண்டாமென்று நிறுத்திக் கொண்டேன்; திரு. உமாநாத் அவர்களிடம் சொன்னேன்.

அடுத்து, உப்பளத் தொழிலாளர்கள் பற்றி திரு. ரமணி சொன்னார்கள். அவர்களுக்குச் சில பாதுகாப்பு நடவடிக்கையாக கால் உறை தரவேண்டுமென்று தொழிற்சாலை ஆய்வாளர்கள் மூலமும் தொழில் ஒப்பந்தங்கள் மூலமும் நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியன் எக்ஸ்பிரஸ் பற்றி எல்லோரும் சொன்னார்கள். அது கம்யூனிக்கேஷன் கேப்பா அல்லது தவறான தகவலா என்று தெரியவில்லை.

[மாலை 6-10]

ஆனால் உண்மை நிலை என்னவென்றால் வேலை நிறுத்த அறிவிப்பு கொடுத்ததற்குக் காரணம் பாலேகர் அவார்ட் அமல் படுத்தப்படவில்லை என்பதால் அல்ல. அங்கே உள்ள மூன்றில் ஒரு தொழிற்சங்கம் வேலை நிறுத்த நோட்டீஸ் கொடுத்ததால்தான் வந்தது. இது குறித்து தொழிலாளர் துறை கமிஷனர் அவர்கள் இம்மிடீயட்டாக அவர்களை எல்லாம் அழைத்துப் பேசி நடவடிக்கை எடுத்திருக்கிறார். இதன் விளைவாக வேலை நிறுத்தம் ஏற்படாது என்று எதிர்பார்க்கப் படுகின்றது......(குறுக்கீடு).....ஆகவே வேலை நிறுத்தம் பற்றிய தகவல் கிடைத்த உடனேயே லேபர் கமிஷனர் இவர்களை அழைத்துப் பேசி இருக்கிறார். அனேகமாக ஸ்ட்ரைக் நடக்காமல் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

திரு. என். வி. என். சோமு: மாண்புமிகு அமைச்சர் அவர்களே, .

ண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் என்னைப் பார்த்துத்தான் பேசவேண்டும்.

திரு. என். வி. என். சோமு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு மட்டத்தில் வேலைநிறுத்தம் அங்கே ஏற்படாமல் செய்து வேலை தொடர்ந்து நடைபெற்றது. ஆனால் நேற்றைக்கு அங்கே க்ளோசர்

நோட்டீஸ் கொடுக்கப்பட்டு ஜூன் மாதம் 20ஆம் தேதி அன்று மூடப்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் நன்றி . . .

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையில் லேபர் கமிஷனர் அவர்கள் எல்லோரையும் அழைத்துப் பேசி சமரசம் செய்ததாகச் சொன்னார்கள். ஆனால் லேபர் கமிஷனரின் முடிவினை நிர்வாகத்தினர் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: துணைத் தலைவரவர்களே, இந்தியன் எக்ஸ்பிரஸ் சம்பந்தப்பட்ட வகையிலே தொழிலாளர்களிடத்திலே இருந்து எங்களுக்குக் கிடைத்த செய்தியை நாங்கள் சொல்கிறோம். அந்தச்செய்தியின்படி ஏதாவது குறைஇருந்தால் அதைச் சரிப்படுத்தவேண்டும். இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கை பற்றிச் சொன்னார்கள். அவர்கள் நோட்டீஸ் கொடுத்தது உண்மைதான். பாலேகர் அவார்டை அவர்கள் அமல் நடத்திவிட்டார்களா? அமல் நடத்திவிட்டார்கள் என்ற உறுதியான செய்தி அரசாங்கத்திற்குக் கிடைத்திருக்கின்றதா? அதனுடைய நிலைமை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: துணைத் தலைவரவர்களே, ஏற்கனவே கிடைத்த தகவலின்படி அமல் படுத்துகிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் இப்போது இப்படிப்பட்ட தகவலை இங்கே சொல்கிறார்கள். இதுபற்றி விசாரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்களுக்கு ஒரு ஸ்டாண்டிங் கிரிவான்ஸ் இருக்கின்றது. இது அவருடைய நீண்ட நாளைய கோரிக்கை. இது கிருஷ்ணா ரீஃபைனரீஸ் பற்றியது. அந்த யூனியனுக்கு ரெப்ரசன்டேட்டிவ் கேரக்டர் இருக்கின்றதா என்று நம்முடைய அதிகாரிகள் கேட்கிறார்கள். அதாவது அதற்கு வேண்டிய ஆதாரங்களான மெம்பர்ஷிப் ரிஜிஸ்டர், மினிட்ஸ் புக் இவைகளை எல்லாம் கொடுத்து நிரூபிக்கவேண்டும். இத்தனை அங்கத்தினர்கள் இருக்கிறார்கள் என்பதை மட்டும் அனுப்பிவைத்தால் போதாது. அது பற்றிய தஸ்தாவேஜுக்களை எல்லாம் அவர்கள் கொடுக்க வேண்டும். ஆனால் அவர்கள் கொடுக்கவில்லை. அதனுடைய மினிட்ஸ் புக், சங்கத்தின் உறுப்பினர்கள் விவரம், எப்போது அதன் கூட்டம் நடந்தது, அங்குள்ளவர்களின் சந்தாத் தொகை எவ்வளவு, அந்தச் சங்கத்தின் வருமானம் எவ்வளவு, அதிலே செலவழித்தது எவ்வளவு, மீதம் எவ்வளவு

அதாவது சர்ப்ளஸ் எவ்வளவு, டெஃபிசிட் எவ்வளவு போன்ற விவரங்களை எல்லாம் அனுப்பிவிட்டால் உடனடியாக ஏற்பாடு செய்யப்படும்.

திரு. கு. ரமணி: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லக்கூடிய இந்த விதிமுறைகள் அனைத்து சங்கங்களைப் பொறுத்தவரையிலும் உள்ள ஒரு பொதுவான முறை. ஆனால் அங்கே நடந்தது என்னவென்றால் 298 பேர் வேலை செய்து கொண்டிருந்தனர் அந்தக் கம்பெனியில். அந்தச் சங்கம் ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்ட சங்கமாகும். தனியாக உண்டாக்கிய தல்ல அது. அந்தச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் 298 பேர். அவர்களை எல்லாம் வெளியே அனுப்பிவிட்டதற்குப் பிறகு ரெப்ரசன்டேட்டிவ் கேரக்டர் பற்றிக் கேட்டால் எங்கே இருந்து தருவது? வெளியே அனுப்பப்பட்ட எல்லோருமே இந்தச் சங்கத்தின் உறுப்பினர்கள்தான். இப்போது அந்தக் கம்பெனியிலே ஒரு ஆளும் இல்லை என்றால் எப்படி ரெப்ரசன் டேட்டிவ் கேரக்டர் தர முடியும்? இருந்தாலும் இந்த கேஸ் சம்பந்தப்பட்ட வகையில் எவ்வளவு விவரங்களைக் கொடுக்க முடியுமோ அவ்வளவு விவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். கடைசியாக நானும்கூட ஒரு கடிதம் அனுப்பினேன். அதற்கு ஒரு பதில் வந்தது. அந்தப்பதில் என்னவென்றால் ''நீங்கள் இப்போது கொடுத்ததில் புதிய விவரங்கள் ஒன்றும் இல்லை'' என்பதுதான். இந்த ஒரே வார்த்தையோடு முடிந்துவிட்டது அந்தப் பதில்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: துணைத் தலைவர் அவர்களே, எல்லா விவரங்களையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடத்திலே கொடுத்தால் நான் பரிசீலனை செய்யத் தயாராக இருக்கிறேன். யோசனை சொல்லலாம் என்று கருதுகிறேன். இவ்வளவு காலம் ரெஃபரென்ஸ் கிடைக்கவில்லை என்று சொன்னவுடனே, 2-எ பெட்டிஷனை ஒவ்வொருவரையும் போடச் சொல்லியிருந்தால் ரெஃபரென்ஸ் கிடைத்திருக்கலாம். (குறுக்கீடு). ரைட் ஒத்துக் கொள்கிறீர்கள். வெரி குட்.

இதுவரையில் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிய சில கருத்துக்களுக்குப் பதில் சொன்னேன். இப்பொழுது பொதுவாக இந்த அரசு எதுவுமே செய்யவில்லை, ஏதோ தூங்கிக் கொண்டிருக்கிறது என்பது போலவும் சில உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பதில் கூற விரும்புகிறேன். I think that is the duty of the Opposition Party. ஆனால் நாங்கள் என்ன செய்திருக்கிறோம் என்று சொல்ல விரும்புகிறேன்.

கிராமப்புறங்களில் வீடுகள் கட்டும் திட்டம் : தமிழ்நாட்டின் மக்கட் தொகையில் 80 சதவீதத்திற்கு மேற்பட்டோர் கிராமப் புறங்களில் வசிக்கும் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் ஆவர். இவர்களுக்காக 1952 முதல் 1976 ஆம் ஆண்டு வரை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் சுமார் 2,900 வீடுகளே கட்டப் பட்டன.

இப் பிரிவினர்கள் குறைந்த செலவில் வசதியோடு அமைந்த ஓடு வீடுகள் கட்டிக் கொள்வதற்காகப் புரட்சித் தலைவரின் அரசு ''இரண்டு லட்சம் வீடுகள்'' கட்டும் திட்டத்தைச் செயல் முறையில் கொண்டு வந்துள்ளது. 1980–81 முதல் 1984–85 வரையிலான ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஆண்டு தோறும் 40,000 வீடுகள் கட்டப்படும். கீழ்க்கண்ட புள்ளி விவரங் களிலிருந்து எங்கள் சாதனை தெளிவாகும் :

	ரூபாய் கோடியில்.	வீடுகளின் எண்ணிக்கை.
1978–79	5·45	7,430
1979–80	16·42	29,041
1980–81 (31—3—1981 வரை).	6·80	23,152
	கட்டப்பட்டு வருபவை	31,453

மூன்றாண்டுகளில் கட்டப்பட்ட 59,623 வீடுகளில் ஆதி திராவிட மக்களுக்காகக் கட்டப்பட்டவை 43,835. எங்கே உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்கள்? பேசி விட்டுப் போய்விடுகிறார்களே. இருந்து அமைச்சர் என்ன பதில் சொல் கிறார் என்று பார்த்தால் நலமாக இருக்குமே. ஆக, 59,623 வீடுகளில் ஆதிதிராவிட மக்களுக்காக 43,835 வீடுகள் கட்டப் பட்டிருக்கின்றன என்றால் கிட்டத்தட்ட 73 சதவீதம் கிராமப்புறங்களில் ஹரிஜன மக்களுக்காகக் கட்டப்பட்டவை என் றால், சொல்லுங்கள் பார்க்கலாம், வேறு எந்த ஆட்சியில் இப்படிச் செய்திருக்கிறார்கள் என்று? (மேசையைத் தட்டும் ஒலி).

யார் சொன்னாலும் நான் உட்கார்ந்து கேட்கத் தயாராக இருக்கிறேன். ஆனால் சொல்ல முடியாது. I am prepared to yield. There is no parallel. அவ்வளவு சிறப்பாகப் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி யிலே செய்திருக்கிறோம்.

அடுத்து இத்திட்டத்திற்கு வேண்டிய நிதிகளை ஆயுள் காப்புறுதித் கழகம், பொதுக் காப்புறுதிக் கழகம், ''ஹட்கோ'' போன்ற நிறுவனம் ஆகியவைகளிடமிருந்து பெறப்படுகிறது. தமிழக அரசு மூன்றாண்டுகளில் முறையே 2 கோடி, 9 கோடி, 5·48 கோடி என்று கடனாக வழங்கியுள்ளது. அந்த ஆண்டு முதல் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் ரூ. 6 கோடி கடனாக வழங்க முன் வந்துள்ளது.

1978 வரை செங்கற்பட்டு முதல் கன்னியாகுமரி மாவட்டம் வரையுள்ள கிராம மக்கள் வீடு கட்ட கடன் பெறுவதற்காகச் சென்னையிலுள்ள தலைமைச் சங்கத்தையே நாட வேண்டியிருந்தது. இதனால் ஏற்பட்ட கால தாமதத்தைத் தவிர்க்க, பிரதம சங்கங்களே கடன் ஒப்பளிப்பு வழங்கலாம் என அரசு ஆணைகள் பிறப்பித்தது. இதுவரை உரிமைச் சான்றிதழ், வருவாய்ச் சான்றிதழ் முதலியவை வாங்க தாசில்தாரிடம் செல்ல வேண்டியிருந்தது. இப்போது கிராம அதிகாரிகளே வழங்கலாம். இது போன்று மேலும் பல சலுகைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

கனம் பேரவை அங்கத்தினர்கள் இத்திட்டத்தின் கீழ் அளிக்கும் கடன் தொகையை அதிகரிக்க வேண்டுமென்று வற்புறுத்திப் பேசினார்கள். இந்த ஆண்டிலிருந்து ஆயுள் காப்புறுதிக் கழகம் கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்திற்கு நிதி உதவி அளிக்க முன் வரவில்லை. நம் நிதி நிலையையும் மற்ற நிதி நிறுவனங்களிலிருந்து எதிர்பார்க்கப்படும் கடன் உதவியையும், அதிகப்படியான மக்கள் இத்திட்டத்தினால் பயனடைய வேண்டும் என்ற அரசின் கொள்கையையும் மனதில் கொண்டு, முதலில் ரூ. 3,000 மதிப்புள்ள 200 சதுர அடி பரப்பளவுள்ள வீடுகள் கட்ட ஆணையிடப்பட்டது. கட்டுமானப் பொருள்களின் விலை அதிகரித்த காரணத்தால், 1—7—1980 முதல் ஒரு வீட்டின் மதிப்பீடு ரூ. 3,750 ஆக உயர்த்தப்பட்டது. இதில் ரூ. 1,000 மானியமாக ஆதி திராவிட மக்களுக்குக் கொடுக்கப்படுகிறது.

பொருளாதார வசதியுள்ள மக்கள் தம் சொந்த செலவில் ஒன்றிரண்டு அறைகளை கூடுதலாகக் கட்டிக் கொள்வதில் அரசுக்கு ஆட்சேபணை இல்லை. அவைகளுக்கு வட்டியும் இல்லை. ஆதி திராவிட மக்கள் அல்லாதவர்களுக்குச் சலுகைகள் தரவேண்டும் என்று சில உறுப்பினர்கள் இங்கே சொன்னார்கள். இப்போது அவர்களுக்கும் சலுகை உண்டு. எப்படி? ஆதி திராவிட மக்கள் குடியிருக்கும் பகுதிகளில் வீடுகள் கட்டி சேர்ந்து குடியிருக்கும் ஆதிதிராவிட மக்கள் அல்லாதவர்களும் ஆயிரம் ரூபாய் மான்யம் பெறலாம். ஒன்றாகச் சேர்ந்து குடியிருக்கச் சம்மதித்து, ஆயிரம் ரூபாயை பெற்றுக் கொள்ளலாம். மான்யம் அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

நகர்ப்புற வீட்டு வசதி: நகர்ப்புறங்களில் வீடுகள் கட்டும் திட்டம் வீட்டு வசதி வாரியம், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

[மாலை 6–20]

நகர்ப்புறக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக 2·34 கோடி ரூபாய் செலவில் 1,326 வீடுகள் 1977–78-ல் கட்டப்பட்டன. இந்த அரசு இந்தத் திட்டத்தை மேலும் துரிதப்படுத்தியுள்ளது என்பதைக் கீழ்க் கண்ட புள்ளி விவரங்கள் தெளிவாக்கும்.

1978–79-ல் 13·27 கோடி செலவில் 4,520 வீடுகள், 1979–80-ல் 13·75 கோடியில் 6,001 வீடுகள், 1980–81-ல் 4.05 கோடியில் 6,104 வீடுகள். வீட்டு வசதி வாரியத்தின் மூலம் சென்னை மற்றும் பல முக்கிய நகரங்களில் பலதரப்பட்ட வீடுகள் கட்டப்பட்டு தரப்பட்டிருக்கின்றன. இதுவரையில் 175.45 கோடி ரூபாய் செலவில் 62,860 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இதில் 42,808 வீடுகள் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கு எக்கனாமிக்கலி வீக்கர் செக்ஷனுக்கு, குறைந்த வருவாய் உள்ள எல். ஐ. ஜி. க்கு வருமானத்திற்குத் தக்கவாறு கீழ்க்கண்ட சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. எக்கனாமிக்கலி வீக்கர் செக்ஷனுக்கு 5 சதவீதம்தான் வட்டி, இருபது ஆண்டுகளில் கொடுக்கலாம். எல். ஐ. ஜி. 7 சதவீதம் வட்டி, 15 ஆண்டுகளில் திருப்பித் தரவேண்டும். எம். ஐ. ஜி. 9.5 சதவீதம் வட்டி, 12 ஆண்டுகளில் கொடுத்துவிட வேண்டும். எச். ஐ. ஜி. க்கு 11·5 சதவீதம் வட்டி, பத்தாண்டுகளில் திருப்பித்தர வேண்டும். எக்கனாமிக்கல் வீக்கர் செக்ஷனுக்கு 5 சதவீதம்தான் வட்டி. எம். ஐ. ஜி.க்கு ரூ. 600-ல் இருந்து ரூ. 1,500 வரை வருமானம் உள்ளவர்களுக்கு 9.5 சதவீதம் வட்டி. ரூ. 1,500க்கு மேற்பட்டிருப்பவர்களுக்கு எச். ஐ. ஜி. க்கு $11\frac{1}{2}$ சதவீதம் வட்டி. இதுதானே சோஷலிசம்.

Am I Correct Mr. Karuppi h ?

அதைத்தான் செய்து கொண்டிருக்கிறோம்.

We are marchi g towards Soc alism.

வீட்டு வசதி வாரியம் வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் கீழ்க்கண்டவாறு ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. (குறுக்கீடுகள்) தொகை ஒதுக்கீடு செய்யும் போது எக்கனாமிக்கலி வீக்கர் செக்ஷனுக்கு மொத்தத் தொகையில் 45 சதவீதம் ஒதுக்கப்படுகிறது. எல். ஐ. ஜி.க்கு 35 சதவீதம், எம். ஐ. ஜி.க்கு 15 சதவீதம், எச். ஐ. ஜிக்கு 5 சதவீதம் என்று

தான் ஒதுக்குகிறோம். மொத்தம் 100 கோடி ரூபாய் செலவு செய்தால் 45 கோடி ரூபாய் எக்கானமிக்கலி வீக்கர் செக்ஷனுக்கு, 35 கோடி எல். ஐ. ஜி.க்கு, 15 கோடி எம். ஐ. ஜி.க்கு, 5 கோடி எச். ஐ. ஜி.க்கு. இதையெல்லாம் பாராட்டவேண்டாமா? இதையெல்லாம் பார்த்து, இந்த இரண்டு இடத்தையாவது வட்டி கொடுப்பதில் ஏழைகளுக்கு வட்டி 5 சதவீதம் என்று கொடுக்கிறோம், அதைப் பாராட்டுகிறோம், எக்கானமிக்கலி வீக்கர் செக்ஷனுக்கு 100 கோடியில் 45 கோடி ரூபாய் ஒதுக்குகிறோம், இதைப் பார்த்து புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியைப் பாராட்டுகிறோம் என்று சொன்னால் நான் கூடுதல் ஐந்து ஆண்டுகள் வாழ்வேன்.

My life will be extended by another five years.

கடந்த மூன்று ஆண்டுகளில் வீட்டுவசதி வாரியம் தன் திட்டப் பணிகளுக்காகச் செலவு செய்து முன்னேறியிருப்பது என்பதைக் கீழ்க்கண்ட புள்ளி விவரங்கள் எடுத்துக் காட்டும்:

1975—76-ல் ரூ. 12·78 கோடி, 1977—78-ல் 17·40 கோடி, 1978—79-ல் 21.17 கோடி, 1979—80-ல் 23.52 கோடி, 1980—81ல் 28·34 கோடி. 100 சதவீதம் அதிகமாகச் செய்திருக்கிறோம். இதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். தோழமைக் கட்சியினராவது இதை எழுதி வைத்துக் கொள்ள வேண்டும்.

1981—82-ல் 29·50 கோடி செலவிட்டு 8,000 வீடுகள் கட்ட வாரியம் திட்டமிட்டிருக்கிறது. உறுப்பினர்கள் பல நகரப் பகுதிகளில் வீடுகள் கட்ட வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். நிதிப் பற்றாக்குறை காரணமாக எல்லாப் பகுதிகளிலும் வீடுகள் கட்டுவது சாத்தியமில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு அலுவலர்களுக்கு, வீடு கட்டும் திட்டத்தின் கீழ் அலுவலர்களுக்கு வாடகை வீடுகள் கட்ட கீழ்க்கண்டவாறு செலவிடப்பட்டிருக்கிறது.

1975—76-ல் ரூ. 1·55 கோடி, 1977—78-ல் 1·73 கோடி, 1978—79-ல் 1·81 கோடி, 1979—80-ல் 3·10 கோடி.

இதுவரை 10,731 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. இதில் 5,007 வீடுகள் புரட்சித் தலைவர் அவர்கள் வந்ததற்குப் பிறகு 1980—81-ல் கட்டப்பட்டது. 1981—82-ல் சுமார் 3 கோடி ரூபாய் செலவில் 1,110 வீடுகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. அரசு அலுவலர்களுக்கு வீடுகள் கட்ட முன்பணம் வழங்கும் திட்டத்தில்

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
TRUTH ALONE TRIUMPHS

இந்த அரசு ஒரு சாதனை செய்துள்ளது. கடன் உச்சவரம்பை ரூ. 70,000த்திலிருந்து ரூ. 80,000ஆக உயர்த்தியுள்ளது. அதற்காக ஒதுக்கப்பட்ட தொகை 1975–76-ல் 1·44 கோடி ரூபாய். 1977–78-ல் ரூ. 1.49 கோடி ; 1978–79-ல் ரூ. 1.78 கோடி, 1979–80-ல் ரூ. 2.56 கோடி ; 1980–81-ல் ரூ. 5.41 கோடி. அதாவது 4 மடங்கு. 1975–76-ல் ஒதுக்கியது ரூ. 1·44 கோடி ; இப்போது ஒதுக்கியுள்ளது 5·41 கோடி—அவர்களுக்கு அட்வான்ஸ் கொடுப்பதற்காக 1981–82-ல் 5 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1979–80-ல் கடன் வழங்கும் அதிகாரத்தை அரசு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளித்துள்ளது. இங்கே வரவேண்டியதில்லை. கலெக்டரிடமிருந்து வாங்கிக் கொள்ளலாம்.

தொழிலாளர் மலிவு வாடகை வீட்டு வசதித் திட்டம். இந்தத் திட்டம் சில ஆண்டு காலமாக, சிறிது இடைவெளிக்குப் பிறகு, 1978–79-ல் நமது அரசால் மீண்டும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது பசுமலை, இராஜபாளையம், கோயில்பட்டி ஆகிய இடங்களில் ரூ. 89·32 லட்சம் செலவில் 678 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. குடிசைப் பகுதி மாற்று வாரிய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அடைந்துள்ள சாதனைகள் பின்வருமாறு ; 1978–79-ல் 3,368 குடியிருப்புகள், 1979–80-ல் 2,428 குடியிருப்புகள் ; 1980–81-ல் 3,212 குடியிருப்புகள். இவைகளுக்கு செலவு முறையே 340 லட்சம், 334 லட்சம், 323 லட்சம். 1981–82-ல் குடிசைப் பகுதி மாற்று வாரியம் சென்ற ஆண்டை விட ஒரு கோடி அதிகமாக ஒதுக்கியுள்ளது. ரூ. 1·5 கோடியிலிருந்து, ரூ. 2·5 கோடியாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுபற்றி டெல்லியிலுள்ள 'ஹட்கோ' நிறுவனத்திடமிருந்து ரூ. 1·5 கோடி கடன் பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை அமுல்படுத்துவதிலுள்ள சில சிரமங்களை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 1970–71-ல் குடியிருப்பின் விலை, ஒரு டெனமென்ட் கட்டுவதற்கு ரூ. 7,500 செலவாயிற்று. திரு. பாலன் அவர்கள் அந்த டெனமென்டை ஏன் நிரம்பக் கட்டவில்லை என்று கேட்டார்கள். இந்தத் தகவல் தெரிந்திருந்தால் கொஞ்சம் விஷயம் அவர்கள் தெரிந்து கொள்வார்கள். இதைச் சொல்ல வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது. தற்போது கட்டுமானப் பணிகளின் விலை அதிகமாகியுள்ள காரணத்தினால், ஒரு டெனமென்ட் கட்டுவதற்கு ரூ. 14,000 ஆகிறது. ரூ. 7,500 எங்கே, ரூ. 14,000 எங்கே? எவ்வளவு வித்தியாசம்—ஆல்மோஸ்ட் டபுள். ஹட்கோ நிறுவனம் நிலத்தின் விலை, மேம்பாட்டுச் செலவு, கட்டுமான செலவு, தற்போது ஒரு குடியிருப்பு மதிப்பீட்டின் தொகை ரூ. 8,000 இருக்க வேண்டுமென்று நிர்ணயித்துள்ளது, ரூ. 8,000 க்கு மேல் போகக் கூடாது என்று சொல்லியுள்ளது. இந்த டவினில் ரூ. 8,000-ல் என்ன கட்ட முடியும்? ஒரு லெட்ரின்தான் கட்ட

முடியும். ஒரு குடியிருப்புக்கு ரூ. 14,000 ஆவதால், பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்கான திட்டமாகக் கருதி 5 சதவீதம் வட்டி ஏற்காது ; கடன் உதவி செய்ய மறுக்கிறது. பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கு 5 சத வீதம் வட்டி விகிதத்தில் தருவார்கள். ரூ. 8,000-ல் கட்ட முடியாது. ரூ. 15,000 செலவாகிறது. ஆகவே, 5 சதவீதம் வட்டியில் கடன் தரமாட்டேன் என்கிறார்கள். ஆனால், இந்தத் திட்டத்தினைக் குறைந்த வருமானப் பிரிவினர் திட்டமாக அதாவது எல். ஐ. ஜி. திட்டத்தில் கீழ் 7½ வட்டியில் கடன் அளிக்க முன் வருகிறது. இதை ஏற்றுக் கொண்டால், மாதத் தவணை—இப்போது வாங்குவது மாதிரியல்ல—ரூ. 100-க்கு மேல் மாதம் நிர்ணயிக்க வேண்டியிருக்கும். எனவே இத்திட்டத்தைச் செயல் படுத்துவதில் பொருளாதாரத்திலுள்ள சில சிரமங்களை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எடுத்து வைப்பது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

விரைவுபடுத்தப்பட்ட மேம்பாட்டுத் திட்ட குடிசைகள் மாற்றப் படாத பகுதிகளில் 1971—72 முதல் இத்திட்டம் அமுலில் உள்ளது. இதன் கீழ் பாதை அமைத்தல், குடிநீர் வசதி, மின் விளக்கு, கழிப்பிடம் அமைத்தல், மருத்துவ வசதிகள் செய்ய செலவாகிறது. கீழ்க்கண்ட புள்ளிவிவரம் இத்திட்டத்தின் கீழ் முன்னேற்றத்தைக் குறிப்பிடும். 1978—79-ல் பயனடைந்த குடும்பங்கள் 2,800—செலவிடப்பட்டது ரூ. 21 இலட்சம். 1979—80-ல் பயனடைந்த குடும்பங்கள் 10,000—செலவிடப்பட்டது ரூ. 80·61 இலட்சம். 1980—81-ல் பயனடைந்த குடும்பங்கள் 6,000—செலவிடப்பட்டது ரூ. 50 இலட்சம். இத்திட்டத்தின் கீழ் ரூ. 6·72 கோடி செலவில் 1,39,844 குடும்பங்கள் பயனடைந்துள்ளனர். 1981—82-ல் இத்திட்டத்திற்கு ரூ. 50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. உலக வங்கியின் கடன் உதவியுடன் இத்திட்டத்தின் கீழ் மேற்கூறிய வசதிகள் ஒரு குடும்பத்திற்கு, மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்னதைப் போல், ரூ. 1,300 செலவாகிறது. திரு. பாலன் அவர்கள் இதைப் பற்றிச் சொன்னார்கள். இதுவரை அடைந்துள்ள பணிகள் முன்னேற்றத்தை அவர்கள் கவனிக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். 1977—78ல் 4,137 குடும்பங்கள் பயன்பெற்றுள்ளன. செலவு 27·95 லட்சம். 1978—79-ல், 1979—80-ல் 14,201 குடும்பங்கள் பயன்பெற்றன—செலவு ரூ. 102 இலட்சம். 152·65 இலட்சம். 1980—81-ல் 10,000 குடும்பங்கள் பயன் பெற்றன. ரூ. 90 இலட்சம் செலவாகியது. மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் சில சிரமங்கள் உள்ளன. 1971-72-ல் சுமார் 1·6 இலட்சம் குடும்பங்கள் கொண்ட 1,202 குடிசைப் பகுதிகள் சென்னையில் இருந்தன. ஆனால், 1979—80-ல் 2·21 இலட்சம் குடும்பங்கள் கொண்ட 1,428 குடிசைப்பகுதிகளாக இது உயர்ந்துவிட்டது.

1981 ஏப்ரல் 21] [திரு. எஸ். இராகவானந்தம்]

[மாலை 6-30]

இது சென்னை மக்கள் தொகையில் 35 சதவீதமாக ஆகிறது. சொந்தமாக நிலங்கள் உள்ள குடிசை மாற்று மேம்பாட்டு திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 479 குடிசைப் பகுதிகள் தனியாருக்கும் 94 குடிசைப் பகுதிகள் கோவில் முதலிய நிறுவனங்களுக்கும் சொந்தமான நிலங்களில் அமைந்துள்ளன. இதனால் இப்பகுதிகளில் மேற்படி திட்டங்களை எடுத்துக்கொள்ள இயலவில்லை. இதற்குக் குடிசைப்பகுதி மாற்றுச் சட்டத்தைத் திருத்தி அமைக்க அரசு நடவடிக்கை எடுப்பதாக இருக்கிறது. தனியார் துறை நிலத்தை எடுக்கவேண்டுமென்று சொன்னால், விலை கொடுத்து அதை வாங்கி அதிலே குடிசைப்பகுதி மாற்று வீடுகளோ அல்லது நகர அபிவிருத்தித் திட்டங்களை நீங்கள் செய்யவேண்டுமென்று சொன்னால், "காஸ்ட் வில் பி புரொகிபிட்டிவ்". அதற்குச் சட்டத்தைக் கொண்டு வந்து அந்த நிலத்தை எடுப்பதிலே ஒரு தொகையை நிர்ணயிப்பது என்ற அதிகாரத்தை வைத்துக்கொள்வதற்கு சட்டத்தைத் திருத்துவதாக இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். பட்டா கொடுக்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் பாலன் அவர்கள் சொன்னார்கள். அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்கிறேன். இந்த பட்டா கொடுக்கும் திட்டத்தின்கீழ் உலக வங்கியின் கடனுதவியுடன் மேம்பாடு செய்யப்பட்ட குடிசைப் பகுதி மக்களுக்கு நில உரிமை பட்டா லீஸ்-கம்-சேல் 'டீட்' வழங்கப்படுகிறது. இது வரையில் 3,350 பேர் பலன் அடைந்திருக்கிறார்கள். சென்னையில் ஒரு கிரவுண்டு ஆக்ஷன் சேலுக்குப் போனால் ஒன்றரை இலட்சம் ரூபாய் போகிறது. ஆக்ஷன் சேலுக்கு போனால், நான் சொல்வது அண்ணா சாலையில் அல்லது அதன் பக்கத்திலே போனால்; நாம் கொடுக்கும் தொகை 20 ஆயிரம் ரூபாய் என்று கொடுக்கிறோம். சில இடங்களில் 30 ஆயிரம் 40 ஆயிரம் என்று நிர்ணயித்திருக்கிறோம். ஆனால் ஆக்ஷன் சேலுக்குப் போனால் $1\frac{1}{4}$ இலட்சம், $1\frac{1}{2}$ இலட்சம் ரூபாய்க்குப் போகிறது. அண்ணா சாலை ஓரமாக இருந்தால் எவ்வளவு போகும், ஆக ஏரிக்கரையின் ஓரத்தில் கொஞ்சம் குறைவாகத்தான் இருக்கும். இருந்தாலும் நிர்ணயித்து இருக்கக்கூடிய தொகை மிகக் குறைவானது என்பதை மாண்புமிகு உருப்பினர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். சென்னையிலே ஒரு கிரவுண்ட் எவ்வளவு விலை என்பது உறுப்பினருக்கே தெரியும். ஏனென்றால் நீங்களே வாங்க முடியாது.

திரு. பாலன் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்; நாங்கள் மிக நெருங்கிய நண்பர்கள், பி அண்டு சி மில் போராட்டக் காலத்திலே எல்லாம் எனக்கு மிக உதவியாக இருந்தவர். அப்பொழுதே நான் ஒரு நாளைக்கு நீங்கள் எம். எல். ஏ. வாக வருவீர்கள் என்று சொல்லியிருக்கிறேன். அது இப்பொழுது பலித்துவிட்டது. அவரையே கேளுங்கள், எவ்வளவு வேண்டியவர்.

ஆகவே அவருக்கே தெரியும் சென்னையிலே ஒரு கிரவுண்ட் விலை என்ன? இந்த விலைக்கு நாம் கொடுக்கிறோம். பட்டா கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அதனால் பலன் பெற்றவர்கள் 3,350 பேர்.

திரு. இரா. கருப்பையா: துணைத் தலைவர் அவர்களே, கிராமப்புற கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் வட்டத்திற்கு ஒரு சங்கம் என்று அமைக்கின்ற அரசினுடைய திட்டம், அது பற்றி அமைச்சர் அவர்கள் விளக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: துணைத் தலைவர் அவர்களே' பத்திரிகையாளர்களுக்கு வாடகைக்கு ஒதுக்கப்படுகிற வீடு ஆண்டுக்காண்டு அதனுடைய கோட்டாவை அதிகப்படுத்தி வந்தார்கள். 1½ ஆண்டு காலமாக அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அதை இந்த ஆண்டு அதிகப்படுத்தி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புகு கருப்பைய அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். அவர் வெகு நாட்களாக என்னிடம் கேட்டு வந்த கோரிக்கையில் அவர் வெற்றி பெறுகிறார் என்பதை மட்டும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு திருவேங்கடம் அவர்களும், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் சமீப காலமாகப் பத்திரிகைத் தொழிலாளர்களுக்கு வீடு வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நான் இதற்கு முன்னால் அதை ஐம்பதாக உயர்த்திய போது, 31 லிருந்து 50 ஆக உயர்த்தியதாக எனக்கு ஞாபகம். இது ஒரு மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாக உயர்த்தப்பட்டது. அது திராவிட முன்னேற்றக் கழகத்தின் பரிந்துரையின் மீது செய்யப்பட்டதல்ல. எனவே, பத்திரிகையாளர்களுக்கு வீடு அதிகமாக ஒதுக்க அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உரிய காலத்தில் அதுவே செய்யும். அது பரிந்துரைக்குக் காத்திருக்கிற நிலைமை இல்லை என்பதை மட்டும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. கருப்பையா; துணைத் தலைவர் அவர்களே.....

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கருப்பையா அவர்களுக்குக் கிடைக்கிறது என்பதைச் சொல்லிவிட்டேன்; ஜாடையாகச் சொல்லிவிட்டேனே.

திரு. இரா. கருப்பைய : துணைத் தலைவர் அவர்களே, 1977ஆம் ஆண்டு புரட்சிகரமான திட்டத்தினை அமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்தார்கள். மனையை 'அக்வ்யர்' பண்ணுவதற்கு, அதற்குச் சட்டம் கொண்டு வருவது........

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவர் அவர்களே, அது சட்டம் வருகிறது. மனைப் பட்டா கொடுக்கப் படுகிறது என்று, 3350 பேர்கள் என்று சொன்னேனே அடுத்து கான்ட்ராக்ட் லேபர் பற்றிச் சொன்னார்கள். அந்தச் சட்டத்தி லுடைய தலைப்பே 'Contract labour Regulation and abolition Act'' என்றுதான் பெயர். Regulate and abolish எடுத்த உடனே abolish பண்ணுவதில்லை.

அது மத்திய அரசால் கொண்டுவரப்பட்ட சட்டம். இன்னும் அந்தச் சட்டத்தை மாற்றியமைக்கவேண்டுமென்று பெரிய மாற் றங்கள் கொண்டுவரவேண்டுமென்று சொல்லி திரு. அஞ்சையா அவர்கள் முடிவு எடுத்திருக்கிறார்கள். மத்திய அரசு அதைக் கொண்டுவரும் என்று நம்புகிறேன். இப்போது நீங்கள் எங்கா வது அதை ஒழித்திருக்கிறீர்களா என்று கேட்டார்கள். திரு. மணி அவர்கள் என்னிடம் அடிக்கடி சொல்லிக்கொண்டிருக்கிற பிரச்சினை. இப்போது சிமின்ட் தொழிற்சாலையிலே Abolition of Contract labour system in bagging process of Cement in the Packing House and in the p[illegible]ting of Gunny bags இது இரண்டிற்கும் கான்ட்ராக்ட் தொழிலாளர் இருக்கக்கூடாது என்று இந்த அரசு ஒழித்துவிட்டது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இதற்காக ஒரு கமிட்டி நியமிக்கப்படுகிறது. அந்தக் குழு பரிந்துரை வழங்கு கிறது. அந்தப் பரிந்துரையின்மீது அரசு முடிவு எடுக்கிறது. எனக்கு இந்த நேரத்திலே பார் லவ்ட் திங்கிங் என்ற முறையிலே உறுப்பினர்களின் சிந்தனைக்கு வைக்க விரும்புகிறேன். அதிலே ஒரு லக்குனா, ஓட்டை இருப்பதாக இப்போது தெரிய வருகிறது. கான்ட்ராக்ட் லேபர் அபாலிஷன் என்று சொல்லிவிட்டால் கான்ட் ராக்ட் தொழிலாளர்கள் வேலை செய்கிற அந்த வேலையை பர்ம னன்ட் தொழிலாளர்களை வைத்துத் தான் செய்ய வேண்டும், கான்ட்ராக்ட் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கக்கூடாது என்று உத்திரவிடுகிறோம். உடனே கான்ட்ராக்ட் லேபர் அபாலிஷன் செய்து விடுகிறார்கள். அதற்குப் பதிலாக யாருக்கு வேலை கிடைக்கும்? அந்த கான்ட்ராக்ட் லேபருக்குக் கீழே வேலை செய்த தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்காது. முதலாளி தான் வைத்துக்கொள்ளவேண்டிய ஆயிரம் பேர் வேலை செய்ய வேண்டிய இடத்திற்கு தனக்கு வேண்டிய ஆட்களை வைத்துக்

கொள்வார். இந்தச் சட்டத்தைத் துருவிப்பார்த்தபோது நம்முடைய அதிகாரிகளும் நானும் சேர்ந்து அதைக் கண்டுபிடித்திருக்கிறோம். Intention is not that. The framers of the Act இந்தச் சட்டம் கொண்டுவந்ததினுடைய நோக்கம் கான்ட்ராக்டின் கீழ் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு ஒரு பாதுகாப்பைக் கொடுக்க வேண்டுமென்றுதான் அந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தார்கள். ஆனால் இருக்கக்கூடிய நிலைமை என்னவென்றால் கான்ட்ராக்ட் அபாலிஷன் என்று வந்துவிட்டால் அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்காது, வேறு யாரையாவது வேலைக்கு வைத்துக்கொள்வார்கள். எனவே அந்தச் சட்டத்தை திருத்தி எங்கெங்கு கான்ட்ராக்ட் லேபர் ஒழிக்கப்படுகிறதோ அங்கே அதற்குப் பதிலாக முதலாளி வேலைக்கு ஆளை எடுக்கும்போது ஏற்கெனவே கான்ட்ராக்டரிடம் வேலை செய்த தொழிலாளர்களுக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டுமென்ற முறையிலே சட்டம் திருத்தப்படவேண்டும். எல்லோரும் இதை ஏற்றுக்கொள்வார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் அதைப் பற்றி விவாதித்து என்னிடம் தனியாகப் பேசலாம். அந்த அளவிலே ஒரு அமெண்டிங் ஆக்ட், ஒரு பில் கொண்டுவந்து திருத்த வேண்டுமென்று wherever contract system is abolished the workers who were working under the contractor should necessarily be given preference in appointment by the Principal employer of the establishment. என்ற முறையிலே பிரின்சிபல் எம்ப்ளாயர் வேலை கொடுக்கும் போது அவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று சொல்ல வேண்டும். எனவே அதிலே கொஞ்சம் நிதானமாகப் போகவேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிதாக 2 டி.சி.எல். கள் நியமித்தோம். ஒன்று திருநெல்வேலியில், இன்னொன்று சேலத்தில். இதனால் என்ன லாபம்? இவைகளையெல்லாம் தொழிற்சங்கத் தலைவர்கள் எடுத்துக் கூட்டங்களிலே பேசவேண்டும். அதுவும் குறிப்பாக நம்முடைய தோழமைக் கட்சியைச் சேர்ந்த தோழர்கள் பேசவேண்டும். தொழில் தகராறுகள் சட்டத்தின்கீழ் வருகின்ற பிரச்சினைகளை டி.சி.எல். பார்ப்பது என்பது கன்னியாகுமரியிலே இருப்பவர்கள் மதுரைக்கு வருவதற்குப் பதிலாக திருநெல்வேலியிலேயே தீர்த்துக் கொள்ளலாம். அதைப்போல நிலையான சட்டத்தின்கீழ்

Standing Orders ஒப்புதல் மாற்றுதல் அமைப்பது பற்றிய மனுக்கள் Standing Order alter to ஸ்டாண்டிங் ஆர்டரை முதலிலே சர்டிபை பண்ணுவதற்கு 2 டி.சி.எல்.கள். இதற்கு முன்னாலே கன்னியாகுமரியிலிருந்து மதுரைக்கு வரவேண்டும். சேலத்தில் இருக்கிறவர்கள் கோயம்புத்தூருக்குப் போகவேண்டும், மேட்டூரிலே இருக்கின்றவர்கள் கோயம்புத்தூருக்கு போகவேண்டும். இப்போது அங்கேயே சேலத்திலேயே முடித்துக் கொள்ளலாம். மூன்றாவது சம்பள பட்டுவாடா சட்டத்தின்கீழ் Payment of Wages Act டி.சி.எல். தீர்த்துக் கொள்ளலாம். தொழிலாளர் நல இழப்பு சட்டத்தின்கீழ் Workmen Compensation Act டி.சி.எல். தீர்த்துக்கொள்ளலாம், தொழிற் சங்கங்களைப் பதிவு செய்வது Registration of Trade Union சேலம், திருநெல்வேலியிலேயே முடித்துக்கொள்ளலாம். பணிக்கொடை சட்டத்தின் வழக்குகள் —தமிழ்நாடு கடைகள் நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் ஏற்படும் வழக்குகள் Tamil Nadu Shops and Establishment Act—D. C. L. level இவைகள் எல்லாம் அங்கேயே பார்த்துக்கொள்ளலாம். மதுரைக்கோ கோயம்புத்தூருக்கோ செல்லாமல் சேலத்திலும் திருநெல்வேலியிலும் முடிந்துவிடுகிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் தொழிலாளர்கள் மீது வழக்குகள் போடப்படுகின்றன, தொழிலாளர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுகின்றன, அந்த முதலாளி தப்பித்துக் கொள்கிறார் என்றார்கள். இல்லை. புரட்சித் தலைவரின் ஆட்சியில் உங்களுக்குத் தெரியும். ஒரு தவறு செய்தால், தெரிந்து செய்தால், தேவன் என்றாலும் விடமாட்டோம்.

[மாலை 6-40]

அதைத்தான் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். நான் அந்த புள்ளி விவரத்தையே படிக்கிறேன். இதில் நான் கேஸ்களைப்பற்றி மட்டும்தான் சொல்லிக்கொண்டு போகிறேன். பணம் எல்லாம் எவ்வளவு வசூல் ஆகியது என்பதையெல்லாம் படித்தால் நேரம் ஆகும். இதில் ஒன்றைக் கவனிக்க வேண்டும். பெரும்பாலும், 1979-ஐ விட 1980இல் கொஞ்சம் அதிகமாக இருக்கும். அதை மைனுட்டாகக் கவனிக்க வேண்டும்.

Tamil Nadu Shops and Establishments Act, 1947

1979—10,572 ; 1980—11,504.

Factories Act, 1948
1979—2,958 ; 1980—3,155.

Tamil Nadu catering Establishments Act, 1958
1979—2,166 ; 1980—2,513.

Beedi and cigar workers (condition of Employment) Act, 1966
1979—119 ; 1980—182.

Motor Transports workers Act, 1961
1979—280 ; 1980—444.

Contract Labour (Regulation and abolition) Act, 1970
1979—7 ; 1980—24.

Tamil Nadu Industrial Establishments (National and Festival Holidays) Act, 1958
1979—3,325 ; 1980—3,952.

Plantations Labour Act, 1951
1979—93 ; 1980—141.

Minimum wages Act, 1948
1979—816 ; 1980—1,174.

Payment wages Act, 1936
1979—977 ; 1980—1,025.

Tamil Nadu weights and measures (Enforcement) Act, 1958
1979—16,789 ; 1980—16,204.

வசூல், 1979 ஆம் ஆண்டில் ஃபைன் கட்டியது 7,33,803 1980-இல் 6,11,652. இப்படி ஒவ்வொன்றிலும் ஃபைன் கலெக்ட் ஆகியிருக்கிறது. எனவே, இனிமேல் தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபொழுது இந்த அரசாங்கம் என்ன பண்ணுகிறது. இந்த அரசாங்கம் என்ன பண்ணுகிறது, முதலாளிகளை விட்டு விடுகிறது. முதலாளிகளை

விட்டு விடுகிறது என்றெல்லாம் சொல்ல மாட்டீர்கள் என்று நான் கருதுகிறேன். (குறுக்கீடு) அது சட்டம். இப்பொழுது ஃபைன்தான், சட்டம் இருக்கிறது.

Fine or imprisonment பார்ப்போம், நீங்களெல்லாம் நல்லமுறையிலே ஒத்துழைத்து, இந்த அரசாங்கம் தொடர்ந்து இருப்பதற்கு உதவிகரமாக இருந்தீர்கள் என்றால், தோழமைக்கட்சிகள் எல்லாம் உதவிகரமாக இருந்தால், இந்தச் சட்டத்தை Fine or Imprisonment உடன் Fine and Imprisonment என்று கொண்டு வரலாம். அதற்குப்பிறகு Imprisonment என்று மட்டுமே கொண்டு வந்து, நேராக உள்ளே ஜெயிலுக்கு அனுப்பிவிடுவோம். அதற்கெல்லாம் நீங்கள் எங்களுடைய கரங்களை வலுப்படுத்த வேண்டும். சென்ஷர் மோஷன் கொண்டு வரக்கூடாது. எங்களுடைய கரங்களை வலுப்படுத்தி நல்லமுறையில் அதிகநாள் ஆளவேண்டுமென்று செய்தால் அதைச் செய்யத் தயாராகயிருக்கிறோம்.

உங்களுடைய குறை அட்ஜுடிகேஷன், நீதிமன்றத்திற்கு அனுப்புவது இல்லை என்ற ஒரு குறை இருக்கிறது. மனிதர்கள் என்றாலே குறைகள் இருக்கத்தான் செய்யும். எல்லோரையும் எல்லா நேரங்களிலும் திருப்திப் படுத்திவிட முடியாது. ஆனால் எங்களுடைய புள்ளிவிவரம் காண்பிப்பது என்னவென்றால், நாங்கள் அதிகமாக அனுப்பியிருக்கிறோம். ஆனால் அதோடு நாங்கள் திருப்தியடையவில்லை. வேலைநீக்கம் செய்யப்பட்டவர்கள் வழக்குமன்றத்திற்குச் செல்வதற்கு அரசாங்கத்தின் மூலமாகச் செல்ல வேண்டுமென்பதை இந்தப் புரட்சித் தலைவர்களுடைய அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. அதை இந்த அரசு விரும்பவில்லை. நான் தெளிவாக மீண்டும் அரசின் சார்பாக அதைச் சொல்கிறேன். மத்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி, எப்படி 33 (C) (2) இல் பணம் வேண்டுமென்றால் நேராக வழக்குமன்றத்திற்குப் போகலாமோ அதைப்போல, வேலைநீக்கம் செய்யப்பட்டவர்கள் நேரடியாகக் கோர்ட்டுக்குப் போக உரிமை வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். மத்திய அரசே சட்டம் கொண்டு வருகிறேன் என்று சொல்லியிருக்கிறது. அதைக் கொண்டு வரும் என்று கருதுகிறோம். நாங்களும் ஒரு சட்டம் தயார் செய்து மத்திய அரசினுடைய concurrence -க்கு அனுப்பியிருக்கிறோம். ஆகவே, அவர்கள் கொண்டுவரவில்லையென்றாலும், மாநில அரசு கொண்டு வரும். எனவே, வேலை நீக்கம் செய்யப்பட்டவர்கள், வழக்குமன்றத்திற்குச் செல்வதற்கு நம்மிடத்தில் வந்து நிற்கவேண்டும், புரட்சித் தலைவருடைய ஆட்சியைத்தான் அணுக வேண்டுமென்ற நிலையிருக்காது.

[திரு. எஸ். இராகவானந்தம்] [1981 ஏப்ரல் 21

கூடுமானவரை அடுத்தமுறை நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசும்பொழுது—இப்பொழுது 1981-ஆம் ஆண்டு நடக்கிறது, 1981-ஆம் ஆண்டுக்குள்ளே மத்திய அரசு கொண்டு வரவில்லையென்றால், மாநில அரசு கொண்டு வந்துவிடும் என்று சொல்லி புள்ளிவிவரங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

1971-இல் இந்த அரசு மொத்தம் 639-இல் வழக்கு மன்றத்திற்கு அனுப்பியது 461.

1972-இல் 642-இல் 415;

1973-இல் 682-இல் 378;

1974-இல் 796-இல் 417;

1975-இல் 919-இல் 451;

1976-இல் 1,060-இல் 448;

1977-இல் 1,101-இல் 690;

1978-இல் 1,176-இல் 722;

1979-ல், 1276-ல் 719. 1980-ல், 1891-ல் 1036. இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அதிகமாகத்தான் நாங்கள் அனுப்பியிருக்கிறோம் வழக்கு மன்றத்திற்கு என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் தொழிற்சாலைச் சட்டத்தின் கீழ் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளையும் சலுகைகளையும் அவர்களுக்கு வழங்காத அல்லது வழங்கமறுத்த தொழிற்சாலை நிறுவனங்கள்மேல் தொழிற்சாலை சட்டத்தின் கீழ் வழக்கு மன்றத்தில் தொடர்ந்த வழக்குகள் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது. 1980-ஆம் ஆண்டுமட்டும் பாதுகாப்புச் சம்பந்தப்பட்ட பிரிவுகளை (சேஃப்ட்டி மெஷர்ஸ்) மீறியதாக 600 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. இளஞ்சிறார்களை வேலைக்கு அமர்த்தியுள்ளது சம்பந்தமாக—சின்னஞ்சிறிய குழந்தைகளை வேலைக்கு அமர்த்துகிறார்களே, இந்த அரசு என்ன செய்கிறது என்று கேட்கிறீர்கள்—நான் சொல்கிறேன், இளஞ்சிறார்களை வேலைக்கு அமர்த்தியுள்ளது சம்பந்தமாக 156 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. நான் ஆண்டு, வழக்குகள் அபராதத் தொகையைச் சொல்கிறேன். 1978-ல் 4,329 வழக்குகள் போட்டிருக்கிறோம். பைன் ரூ. 1,96,887.

1979-ல், 2,958 வழக்குகள் போட்டிருக்கிறோம். பைன் ரூ. 2,05,985. 1980-ல் 3,158 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. ரூ. 2,54,507 பைனாக போட்டிருக்கிறார்கள். அதை நான் சொல்வதன்மூலமாக, மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும் பொழுது இந்த அரசு தொழிலாளர்களுக்கு எதுவுமே செய்யவில்லையென்பதைத் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, முதலாளிகளை விட்டு விடுகிறார்கள், விட்டு விடுகிறார்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி அல்ல. ஒரு சைலன்ட் ரெவலூஷன் நடக்கிறது. எங்களிடம் இருக்கிற குறை என்னவென்றால், பெரிய பப்ளிசிட்டி கொடுப்பது கிடையாது. நாவலர் எல்லாம் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் கூட கொஞ்சம் பப்ளிசிட்டி செய்யாமலிருக்கிறார்கள். நாங்கள் நிறைய செய்கிறோம். ஆனால் சைலன்ட் ரெவலூஷன்—காமாக செய்து கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அது தெரியாமல், அந்த முதலாளிகள் மீது நடவடிக்கை எடுத்தீர்களா என்று கேட்கிறார்கள். பார்த்தீர்களா? எவ்வளவு முதலாளிகள் மேல் நடவடிக்கைகள் எடுத்திருக்கிறோம். புரட்சித் தலைவர் ஆட்சியில் தான் இவைகள் நடந்து கொண்டிருக்கின்றன. புள்ளி விவரங்கள் இருக்கின்றன, மணி ஆகி விட்ட காரணத்தால் நான் அவைகளை எல்லாம் சொல்லாமல் இருக்கிறேன்.

ஸ்கிரீனிங் கமிட்டியைப் பற்றி முதல்வர் அவர்கள் அதைப் பற்றி பேச வேண்டுமென்று கோப்பில் எழுதி எனக்கு அனுப்பி இருக்கிறார்கள். அதை எழுதியது ஆட்சி கலைப்பதற்கு முன்னதாகவே. அதற்குப் பின்னால் அதைப் பற்றிப்பேச வேண்டுமென்று கருதியிருக்கிறோம். பேசுவதாக இருக்கிறேன். எனக்கு உடல் நலம் சரியாக இல்லாமல் இருந்தது உங்களுக்குத் தெரியும். கால் நடக்க முடியாமலிருந்தது உங்களுக்குத் தெரியும். இப்பொழுது சரியாகி விட்டது. நேரம் கிடைக்கவில்லை. ஆனால், சொல்லும் போது முதலாளிகளுடைய பிரதிநிதிகள் ஸ்கிரீனிங் கமிட்டியில் இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அப்படியல்ல. லேபர் கமிஷனர் செக்கரட்டரி அன்ட் கமிஷனர் லேபர் டிபார்ட்மென்ட், கோவாபரேடிவ் என்றால், அந்த டிபார்ட்மென்ட்—கோவாப்பரேஷன் செக்கரட்டரி தான் அதிலே இருக்கிறாரே ஒழிய, எம்.டி. அதில் வரவில்லை. ஆகவே, அந்த காம்பொசிஷன் ஆஃப் தி கமிட்டி. மாண்புமிகு உறுப்பினர்கள், சொல்வதைப் போல் அல்ல என்பதைச் சொல்லிக் கொண்டு ஈ.எஸ்.ஐ. பற்றி நான் நிரம்ப சொல்ல வேண்டியிருந்தாலும், மருந்துகள் திரும்ப தரப்படுகின்றன என்பது மட்டுமல்ல (குறுக்கீடு) அப்படியல்ல, எனக்குக் கிடைத்த தகவல், லேபர் செக்கரட்டரி, லேபர் கமிஷனர் அதே மாதிரி, டிரான்ஸ்போர்ட் என்று சொன்னால் இங்கே இருக்கிற கவர்ன்மெண்ட் செக்கரட்டரி தான் இருக்கிறதே ஒழிய, டிரான்ஸ்போர்ட் எம்.டி. அல

என்பதுதான் என்னுடைய தகவல். நான் சொல்வது தவறாக இருந்தால், நாளையோ, மறு தினமோ, அறிக்கை வேண்டுமென்றாலும் படிக்கத் தயாராக இருக்கிறேன். நேராகச் சொல்லத் தயாராக இருக்கிறேன். இருந்தாலும், அதைப் பற்றி பேச வேண்டுமென்பது முதல்வருடைய கருத்து என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொண்டு, ஈ.எஸ்.ஐ.யில் மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்வதைப் போல், (குறுக்கீடு) நீங்கள் நினைப்பது போல் இல்லை. He is not the prosecutor. Secretary to Government, Transport Secretary to Government, Co-operation. இவர்கள் தான் இருக்கிறார்களே ஒழிய, எம்.டி. அல்ல. அது கூட அப்படி இருப்பது கூட, சரி என்று புரட்சித் தலைவர் ஆட்சி ஏற்றுக் கொண்டது என்று கருத வேண்டாம். அதைப் பற்றி பேச வேண்டுமென்று முதல்வர் அவர்கள் கோப்பில் எழுதி இருக்கிறார்கள். அதைப் பற்றி பேசுவேன் என்று சொல்லிக் கொள்கிறேன்.

ஈ.எஸ்.ஐ.யில் இருக்கக் கூடிய நன்மைகளை எல்லாம் எடுத்துச் சொல்லலாம் என்று கருதினேன். நேரம் அதிகம் ஆகி விட்டது. ரொம்ப நன்மைகளைச் செய்திருக்கிறோம். அவைகளை எல்லாம் படிப்பதென்றால் நேரம் ஆகிவிடும். இருந்தாலும், சந்தர்ப்பம் வரும்போது எடுத்துச் சொல்கிறேன் என்று சொல்லி, மாண்புமிகு உறுப்பினர்கள் ஈ.எஸ்.ஐ. பற்றி சொன்ன கருத்துக்களில், குறைபாடுகளை கவனத்திலே வைத்து, அது சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் இங்கே வந்திருக்கிறார்கள். அவர்களுடன் பேசி, நீங்கள் எந்தவிதமான குறையும் சொல்லாமல் இருப்பதற்கு எல்லா முயற்சிகளையும் இந்த அரசு எடுத்துக் கொள்ளும் என்று சொல்லி, என்னுடைய மானியக் கோரிக்கையை எல்லோரும் ஏகமனதாக நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் பின் வாங்கிக் கொள்வீர்கள் என்று கருதுகிறேன்.

அதிகமான லேபர் கோர்ட் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டிருக்கிறார்கள். அதைப் பற்றியும் அரசு பரிசீலனை செய்யும்.

[மாலை 6-50].

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண். 29.

தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்.

திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், கே. எம். தங்கமணி, டி. மணி, ஏ. டி. கருப்பையா ஆகியோருடைய

வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி :

" மானியக் கோரிக்கை எண். 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 7,87,51,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 33—வீட்டுவசதி.

திருவாளர்கள் சு. பாலன், கே. கல்லன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

திருவாளர்கள் கே. ஆர். சுந்தரம், பொ. உத்திராபதி ஆகியோர் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றவையாகக் கருதப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" மானியக் கோரிக்கை எண். 33—வீட்டுவசதி என்ற தலைப்பின் கீழ் ரூ. 11,09,68,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும் ".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 34—நகர்ப்பகுதி வளர்ச்சி.

திருவாளர்கள் சு. பாலன், தி. கா. நல்லப்பன் ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

திரு. கே. ஆர். சுந்தரம் இருக்கையில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன் னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண். 34—நகர்ப்பகுதி வளர்ச்சி என்ற தலைப்பின்கீழ் ரூ. 12,47,31,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 22-4-1981 காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை மாலை 6-52 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

257. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசீய மற்றும் பண்டிகை விடுமுறைகள்) விதிகளில் திருத்த மொன்று செய்வது குறித்து, தொழிலாளர் நல வேலை வாய்ப்புத் துறையின் 3—1—1981 ஆம் தேதியிடப்பெற்ற 12 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு) தொழில் நிறுவனங்கள் (தேசீய மற்றும் பண்டிகை முறைகள்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1958) 12 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

258. மதுரை மாவட்டம் காந்தி கிராமத்திலுள்ள தமிழ்நாடு சர்வோதய மண்டலத்தின் சோப்பு தயாரிப்புப் பிரிவில் தயாரிக்கப் பட்ட சோப்புகளின் விற்பனையின் மீது யாதொரு வணிகரால் செலுத்தத்தக்க வரியைப் பொறுத்தவரையில் விலக்களிப்பது குறித்து, வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 4—2—1981 ஆம் தேதியிடப்பெற்ற 127 ஆம் எண் அரசாணை யில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு) பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்,

*150. கோரிக்கை எண். 29—தமிழ்நாடு தொழிலாளர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1981–82 (தமிழ், ஆங்கிலம்).

*151. கோரிக்கை எண். 33—தமிழ்நாடு வீட்டு வசதி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1981/82 (தமிழ், ஆங்கிலம்).

*152. கோரிக்கை எண். 34—நகர்ப்புற வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1981–82 (தமிழ், ஆங்கிலம்).

† 153. "முன்னேற்றப் பாதையில் வேலைவாய்ப்பு-பயிற்சித் துறை", என்கிற ஓர் புத்தகம்.

† 154. 1981 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் (தமிழ் நாடு திருத்த) சட்டமுன் வடிவின் (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண். 39/1981) நகலும், இணைப்பும்.

(*) விளக்க அறிக்கைகள் அவைமுன் வைக்கப் பெற்றுள்ளன.

* 18—4—1981 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றன.

†19—4—1981 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றன.

இணைப்பு I.

[254-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

பாகம் A.

தமிழ்நாட்டில் தொழிலாளர் நலன்

1980 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் தொழில் அமைதியும், நட்புறவும் தொடர்ந்து நிலவின. நாட்டின் நலனையும் தொழில் வளத்தையும் கருத்தில் கொண்டு, தொழிலாளர் நலனுக்காக அரசு மேற்கொண்ட கொள்கையே இதற்குக் காரணம் ஆகும்.

மாநிலம் முழுவதும் மலைத் தோட்டத் தொழிலாளர்களால் ஆறு நாட்கள் நடத்தப்பட்ட வேலை நிறுத்தத்தைத் தவிர, இம் மாநிலத்தில் வேறு பெருந் தொழில் அமைதியின்மை ஏதும் நிலவ வில்லை. இவ்வேலை நிறுத்தம் கூட, தொழிலாளர் நல அமைச்சரின் நன் முயற்சியால், தொழிலாளர்களுக்கும் மலைத் தோட்ட அதிபர்களுக்குமிடையில் திருப்திகரமான முறையில் சிறந்த உடன்பாட்டின் மூலம் உடனே தீர்த்து வைக்கப்பட்டது.

நியாயமான ஊதியத்தையும் மன நிறைவு தரும் பணி நிபந்தனைகளையும் தொழிலாளர்களுக்குப் பெற்று தரவும் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், அரசு பின்பற்றி வந்த கொள்கை காரணமாகவே தொழிலதிபர்களுக்கும் தொழிலாளர்களுக்குமிடையே எப்போதும் நல்லுறவு நீடித்து வந்தது.

தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வதற்கு அவர்களுக்குரிய உரிமையை அரசு ஏற்றுக் கொள்கிறது; ஆனால், வேலை நிறுத்தங்கள் நடைபெறுகையில் உரிய காலத்தில் தலையிட்டு திறம்பட இணக்கப் பேச்சு வார்த்தைகள் நடத்தி அமைதியான முறையில் தீர்வு காண்பதன் மூலம் தொழிலாளர்களின் பிரச்சினைகளைச் சுமூகமாகத் தீர்க்கலாம் என்பதோடு, அதன் மூலம் நீண்ட காலத்திற்கு வேலை நிறுத்தங்கள் நீட்டிக்க விடாமல் தடுக்கலாம். தொழில் அமைதியைக் கட்டிக் காக்கும் முயற்சியில் நிருவாகத்தினரும் தொழிற் சங்கங்களும் நல்கிய ஒத்துழைப்புக்கு அரசு தம் பாராட்டுதலை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறது. நிறுவன அமைப்பின் கீழ் வரும், நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாப்பதோடு, நிறுவன அமைப்பின் கீழ் தாவர நிறுவங்களின பணிபுரியும் தொழில்

லாளர்களுக்கு சட்டப்படிக்கான குறைந்த அளவு ஊதியங்களை வழங்கச் செய்வதன் மூலம், அவர்களின் நலன்களைப் பாதுகாக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இம்மாநிலத்தில் தொழிலாளர் நலன்-வேலைவாய்ப்புத் துறையின் நிர்வாகம் பற்றி இவ்வறிக்கையில் இப்பகுதியில் கீழ்க்காணும் தலைப்புகளின் கீழ் ஆய்வு செய்யப்படுகிறது :—

(1) தொழில் உறவுகள் குறித்த சட்டம்.

(2) பணி மற்றும் வேலை நிபந்தனைகள் பற்றிய சட்டம்.

(3) ஊதியங்கள் குறித்த சட்டம்.

(4) சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள்.

(5) தொழிலாளர் நல நடவடிக்கைகள்.

(6) எடைகள்-அளவைகள் குறித்த சட்டம்.

இவற்றோடு, வேலைவாய்ப்புப் பணி, கைத்திறப் பணியாளர் பயிற்சித் திட்டத்தைச் செயல்படுத்துதல் தொடர்பான பணி குறித்து தனி அத்தியாயங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

1. தொழில் உறவுகள் குறித்த சட்டம்.

1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டம்

1979, 1980 ஆம் காலண்டர் ஆண்டுகளில் எழுந்த தொழில் தகராறுகளின் எண்ணிக்கையும் அவை தீர்த்து வைக்கப்பட்ட விவரங்களும் கீழ்க்காணும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன :—

	1979. (1—1—1979 முதல் 31—12—1979 முடிய)	1980. (1—1—1980 முதல் 31—12—1980 முடிய)
(1)	(2)	(3)
(அ) ஆண்டு தொடக்கத்தில் நிலுவையாக இருந்த புகார்கள் தகராறுகளின் எண்ணிக்கை	2,679	1,844

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

(1)	1979. (1—1—1979 முதல் 31—12—1979 முடிய). (2)	1980. (1—1—1980 முதல் 31—12—1980 முடிய). (3)
(ஆ) வரப்பெற்ற புகார்கள் எழுந்த தகராறுகள் குறித்த எண்ணிக்கை.	7,808	8,383
(இ) முந்தைய ஆண்டுகளில் புலனாய்வு செய்யப்பட்ட புகார்கள், தகராறுகள் உட்பட தற்போது புலனாய்வு செய்யப் பட்ட புகார்கள் தகராறுகள் ஆகியவை குறித்த எண்ணிக்கை.	8,643	8,457
(ஈ) இணக்க முறையில் தீர்க் கப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை.	1,826	1,667
(உ) இணக்க அதிகாரிகளின் தலையீட்டினால் தீர்க் கப்பட்ட தகராறுகள்.	6,088	5,748
(ஊ) சமரசத்திற்கு விடப்பட்ட தகராறுகளின் எண் ணிக்கை.	719	1,036
(எ) நடுவர் தீர்ப்புக்கு விடப் பட்ட தகராறுகளின் எண்ணிக்கை ..	10	6
(ஐ) ஆண்டு இறுதியில் நிலுவை யாக இருந்த தகராறு களின் எண்ணிக்கை.	1,844	1,770

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வேலையை நிறுத்தி விடுதல்.

அறிக்கை ஆண்டிலும், முந்தயை ஆண்டிலும் நடைபெற்ற வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் ஆகியவற்றின் ஒப்பு நோக்கு விவரங்கள் பின்வருமாறு :—

	1979 (1—1—1979 முதல் 31—12—1979 முடிய.)	1980 (1—1—1980 முதல் 31—12—1980 முடிய.)
(1)	(2)	(3)
(அ) கதவடைப்புகள் உட்பட வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை ..	331	293
(ஆ) இழந்த உழைப்பு நாட்கள்	82,73,236	35,01,022

1979, 1980 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற, நடந்த வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் ஆகியவை குறித்த தொழில் வாரியான பகுப்பாய்வு வருமாறு:—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1979, 1980-ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற, நடந்த வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் ஆகியவை குறித்த தொழில் வாரியான பகுப்பாய்வு வருமாறு :—

தொடர் எண், தொழில்.	வேலை நிறுத்தங்கள் கதவடைப்புகள் ஆகிய வற்றின் எண்ணிக்கை.		இவற்றில் ஈடுபட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை.		இதனால் இழந்த உழைப்பு நாட்கள்.	
	1979 (1-1-1979 முதல் 31–12–1979 முடிய)	1980 (1-1-1980 முதல் 31–12–1980 முடிய).	1979 (1-1-1979 முதல் 31-12-1979 முடிய.)	1980 (1-1-1980 முதல் 31-12-1980 முடிய.)	1979 1-1-1979 முதல் 31-12-1979 முடிய.)	1980 (1-1-1980 முதல் 31-12-1980 முடிய)
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1 துணி ஆலைகள் ..	135	107	1,86,289	78,916	63,77,315	15,69,824
2 பொறியியல் ..	67	70	25,161	14,099	9,59,051	4,23,884
3 தோல் பதனிடும் தொழிற் சாலைகள் ..	1	8	28	728	56	13,392
4 புகையிலை பீடித் தொழில் ..	3	5	3,714	50,377	32,493	5.16,184
5 மலைத் தோட்டத் தொழில்கள்	21	13	17,661	90,643	2,02,481	3,66,216
6 ஏனையவை ..	104	90	42,295	47,021	7,01,840	6,11,522
மொத்தம் ..	331	293	2,75,148	2,81,784*	82,73,236	35,01,022

* 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள சுமார் 50,000 பீடித் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ததன் காரணமாக, வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

1981 ஏப்ரல் 21]

1980-ஆம் காலண்டர் ஆண்டில் எழுந்த வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் குறித்துத் தீர்வு காணப்பட்ட வழி முறைகள் வருமாறு :—

(அ) இணக்க அதிகாரிகள் பேச்சு வார்த்தைகள் நடத்திய பிறகு நேரடிப் பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்க்கப்பட்டவை	56
(ஆ) தாங்களாகவே முன் வந்து வேலை தொடங்கப்பட்டவை	35
(இ) தொழிலாளர் நலத்துறை/அரசு அதிகாரிகள் தீர்த்து வைத்தவை	178
(ஈ) காலவரையற்ற அற்றவை	..
(உ) நடுவர் தீர்ப்புக்கு விடப்பட்டவை	..
(ஊ) மூடப்பட்டவை	2
(எ) ஆண்டின் இறுதியில் பேச்சு வார்த்தையில் இருந்தவை	22
மொத்தம்	293

இவ்வாண்டில் செய்து கொள்ளப்பட்ட சில முக்கிய உடன்பாடுகள்

1. செட்டிநாடு சிமெண்ட் லிமிடெட், புலியூர்.

ஒரு தொழிலாளியை வேலை நீக்கம் செய்ததை முன்னிட்டு, 1980-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 8-ஆம் நாளன்று இந்நிறுவனத்தைச் சார்ந்த தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். 1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 12(3) பிரிவின் கீழ், 1980 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 25 ஆம் நாளன்று தொழிலாளர் சிறப்புநலத் துணை ஆணையாளர் முன் ஓர் உடன்பாடிக்கை ஏற்பட்டது. வேலை நிறுத்தமும் உடனடியாக கைவிடப்பட்டது. வேலை நிறுத்த காலத்தில் தொழிலாளர்களுக்கு நிர்வாகம் ஊதியக் குறைப்பு செய்ததை முன்னிட்டு, இப்பிரிவல் மற்றொரு வேலை நிறுத்தம் ஏற்பட்டது. இணக்கப் பேச்சு வார்த்தையின் விளைவாக 1980-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 29 ஆம் நாளன்று வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

2. கோயம்புத்தூர் புறநகர் போக்குவரத்துத் தனியார் லிமிடெட், கோயம்புத்தூர்

இப்போக்குவரத்து கம்பெனியின் பெயரை மாற்றம் செய்த காரணத்தை முன்னிட்டு, 1980-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1 ஆம் நாளிலிருந்து இப்போக்குவரத்துக் கம்பெனியின் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். தொழிலாளர் நலத் துறை துணை ஆணையாளர் ஆலோசனை நல்கிய பிறகும், தொழிலாளர்களிடையே மன அதிருப்தி நிலவியதால், வேலை நிறுத்தம் நீடித்தது. எனவே, மீண்டும் சமரசப் பேச்சு வார்த்தைகள் தொழிலாளர் நல சிறப்புத் துணை ஆணையாளரின் முன் நடைபெற்றதன் விளைவாக, 1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ் 1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 6ஆம் நாள் அவர் முன்னிலையில் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. தொழிலாளர்கள் உடனடியாக வேலைக்குத் திரும்பினர்.

3. அலெக்ஸாண்டிரா நூற்புப் பிரிவு, மேட்டூர்.

அலெக்ஸாண்டிரா நூற்பு தொழிற்சாலையைச் சார்ந்த சுமார் 162 தொழிலாளர்கள் 1980 ஆம் ஆண்டு ஈட்டிய விடுப்பிற்கு உரிய தகுதிக்கால அளவைக் கணக்கிடுவதற்காக 1979 ஆம் ஆண்டு மே திங்கள் 25 ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்த 57 நாட்களைக் கணக்கில் கொள்ள வேண்டும் என்னும் கோரிக்கையை முன்னிட்டு, 1980 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 7-ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். சேலம் தொழிலாளர் துறை அதிகாரி முன் நடைபெற்ற இணக்கப் பேச்சில் உடன்பாடு ஏற்படவில்லை. 1980 ஆம் ஆண்டு மார்ச் 7 ஆம் நாள் கோயம்புத்தூர் தொழிலாளர் நலத்துறை துணை ஆணையாளரால் மீண்டும் இணக்கப் பேச்சு வார்த்தை நடத்திய போதிலும், உடன்பாடு ஏற்படவில்லை. எனவே, சென்னை தொழிலாளர் நல சிறப்புத் துணை ஆணையாளரால் இத்தகராறு இணக்கப் பேச்சு வார்த்தைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு 1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. தொழிலாளர்கள் வேலைக் குத் திரும்பினர்.

4. நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் லிமிடெட், நெய்வேலி.

"பெல்" நிறுவனத்தில் ஊதியங்கள் உடன்பாடு ஏற்பட்டதன் விளைவாக 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 18 ஆம் நாள் ஏற்பட்ட உடன்பாட்டின் பகுதி 3, 5-ன் நிபந்தனைகளை செயல்படுத்தக் கோரி நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன்

1981 ஏப்ரல் 21]

லிமிடெட் நிறுவனத்திலுள்ள பல்வேறு சங்கங்களைச் சார்ந்த தொழிலாளர்கள் வேலை நிறுத்த அறிவிப்பு கொடுத்தனர். தொழிலாளர் நல ஆணையாளரின் முன் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் விளைவாக, 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் நாளன்று 1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டததின் 12 (3) பிரிவின் கீழ், ஓர் உடன்பாடு ஏற்பட்டது. தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர்.

5. கெம்பிளாஸ்ட், மேட்டூர்.

மேட்டூர் கெம்பிளாஸ்ட் இந்தியா லிமிடெட் நிறுவனத்திற்கு எதிராக கெம்பிளாஸ்ட் தொழிலாளர்கள் சங்கம் தொழிற் தகராறு ஒன்றினை 1980 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள 11 ஆம் நாளன்று எழுப்பியது. சென்னை தொழிலாளர் நல ஆணையாளர் முன் 1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தில 12 (3) பிரிவின் கீழ் ஓர் உடன்படிக்கை 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16 ஆம் நாளன்று ஏற்பட்டது. அடிப்படை ஊதியங்கள், அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி, இரவு முறை மாற்றுப் பணிப் படி சீருடைப் படி, முதலியவைகள் தொடர்பான பிரச்சினைகள் இவ்வுடன்படிக்கையில் அடங்கும்.

மேற்கூறப்பட்ட உடன்படிக்கையின் நிபந்தனைகளின் அடிப் படையில், 1979 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 11 ஆம் நாளிலிருந்து மாதமொன்றுக்கு ரூ. 60 ஒவ்வொரு தொழிலாளிச்கும் அதிகப்படியான ஊதியமும், 1980 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 11 ஆம் நாளிலிருந்து ஒவ்வொரு தொழிலாளிக்கும் மாதமொன்றுக்கு அதிகப்படி ரூ. 150-ம், 1980 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 11 ஆம் நாளிலிருந்து ஒவ்வொரு தொழிலாளிக்கும் மாதமொன்றுக்கு இன்னும் அதிகப்படி ரூ 15. அத்துடன் அகில இந்திய நுகர்வோர் விலைப்பட்டியலில் முதல் 300 புள்ளிக்கு ரூ. 1·30 வீதம் அகவிலைப்படி அதிகமும் பெறுவ வீட்டு வாடகைப்படியும் அதிக அளவு திருத்தியமைக்கப்பட்டது. இவ்வாறு உடன்பாடு சுமுகமான முறையில் ஏற்பட்டதன் விளைவாக, வேலைநிறுத்தம் உடனடியாக கைவிடப்பட்டது.

6. வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள பீடித் தொழிற்சாலை.

வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 50,000 பீடி சுற்றும் தொழிலாளர்கள், ஊதிய உயர்வு, பணிக்கொடை முதலிய கோரிக்கைகளை வைத்து, 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17 ஆம் நாளன்று வேலை நிறுத்தம் செய்தனர் சென்னை தொழிலாளர் நல இணை ஆணையர் முன்பு இணக்கப் பேச்சு வார்த்தை நடைபெற்றதன் விளைவாக 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29 ஆம் நாளன்று ஓர் உடன்பாடு ஏற்பட்டது அந்த

உடன்படிக்கையின் விளைவாக 1,000 பீடி சுற்றுவதற்கு பைசா 50 வீதம் ஊதிய உயர்வும், 1,000 பீடி சுற்றுவதற்கு பைசா 10 வீதம் பணிக்கொடையும் பெற்றனர்.

7. பாரிகன்பெக்ஷனரி லிமிடெட், நெல்லிக்குப்பம்.

நெல்லிக்குப்பம் பாரி கன்பெக்ஷனரி லிமிடெட்டைச் சார்ந்த சுமார் 500 தொழிலாளர்கள் தங்களின் ஊதிய நிலுவைகளை கொடுக்கும்படி கோரி, 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14 ஆம் நாளன்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். அதனால் நிர்வாகம் 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 18 ஆம் நாளில் இருந்து கதவடைப்புச் செய்தது. தொழிலாளர் நல துணை ஆணையாளர்-II முன் ஏற்பட்ட உடன்பாட்டின் விளைவாக நிர்வாகம், 1979 ஆம் ஆண்டு அக்டோபர் முதல் 1980 பிப்ரவரி வரையுள்ள காலத்திற்கு உரிய நிலுவையாக உள்ள செயலூக்கத் தொகையை வழங்க ஒப்புக் கொண்டதோடு, 23 நாட்களுக்குரிய ஊதியத்திற்கு சமமான ஒரு தொகையை முன் பணமாக வழங்கவும், இதில் 13 நாட்களுக்குரிய ஊதியத் தொகையை 5 சம தவணைகளில் வசூலிக்கவும், நிர்வாகம் ஒப்புக்கொண்டது. இந்த உடன்படிக்கையின் பயனால் நிர்வாகம் கதவடைப்பை நீக்கியதோடு 1980 ஆம் ஆண்டு மே திங்கள் 7 ஆம் நாளிலிருந்து தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர்.

8. தென்னிந்தியா கூட்டுறவு நூற்பாலைகள், பேட்டை.

1974 ஆம் ஆண்டு கையெழுத்தான உடன்படிக்கையின் பயனாக வழங்க வேண்டியிருந்த ஊதிய நிலுவைத் தொகைகளை வழங்குவது தொடர்பாக எழுந்ததே இப்பிரச்சினையாகும். 1980 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10 ஆம் நாளன்று தொழிலாளர் நல இணை ஆணையாளர் முன்பு இது தீர்த்து வைக்கப்பட்டது. சுமார் 250 தொழிலாளர்கள் ரூ. 500 விருந்து 1,090 வரை நிலுவையாக இருந்த ஊதியங்களைப் பெற்றனர்.

9. ஸ்ரீராமகிருஷ்ணா ஸ்டீல் தொழிற்சாலை லிமிடெட், காரமடை

ஸ்ரீராமகிருஷ்ணா ஸ்டீல் தொழிற்சாலையைச் சார்ந்த சுமார் 1,050 தொழிலாளர்கள் பல்வேறு தினங்களில் பல கோரிக்கைகளை நிர்வாகத்தினரிடம் எழுப்பினர். அதன்பிறகு தங்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் 1970 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 28ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்யப் போவதாகக் கூறி 1980 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 14 ஆம் நாளிட்ட வேலை நிறுத்த அறிவிப்பைக் கொடுத்தனர். 1980 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28 ஆம் நாளன்று வேலை நிறுத்தம் செய்தனர். இணக்கப் பேச்சு வார்த்தை தொழி

1981 ஏப்ரல் 21]

லாளர் நல அதிகாரி-2 (கோயம்புத்தூர்), கோயம்புத்தூர், தொழிலாளர் நலத் துணை ஆணையாளர் முன்னிலையில் நடைபெற்றன. மீண்டும் இணக்கப் பேச்சுவார்த்தைகள் தொழிலாளர் நல சிறப்புத் துணை ஆணையாளர் முன்னிலையில் நடைபெற்றதன் விளைவாக 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ், 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 14 ஆம் நாளன்று, ஓர் உடன்பாடு ஏற்பட்டது. இது ஊதிய உயர்வு, அகவிலைப்படி உயர்வு, மாறத்தக்க அகவிலைப்படி, வேலைப்பளு, சில பிரிவுகளில் மாற்றியமைத்தல், கணப்பு அடுப்பு, உதவிப்படி, தற்செயல் விடுப்பு, பதவி நிலைகளை மாற்றியமைத்தல் ஆகியவைகள் குறித்து வகை செய்கிறது.

10. கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்டங்கள்.

காஞ்சிபுரம், கரூர், சேலம், மதுரை ஆகிய மாவட்டங்களிலுள்ள இத்திட்டங்களைச் சார்ந்த தொழிலாளர்கள், பணியாளர்களை ஆள்குறைப்பு செய்தல், தொழிலாளர்களின் பணிகளை முறைப்படுத்தல், விடுப்பு வசதியளித்தல், துணி வெளுப்புப்படி அளித்தல் ஆகியவைகள் அடங்கிய பல கோரிக்கைகளை 17—12—1979 ஆம் நாளன்று எழுப்பினர். தொழிலாளர் நல சிறப்புத் துணை ஆணையாளர் (சென்னை) முன்னிலையில் 1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 12(3) பிரிவின் கீழ் 1980 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 10 ஆம் நாள் ஓர் உடன்பாடு ஏற்பட்டது.

11. ஸ்ரீஹரி நூற்பாலைகள் லிமிடெட், ஒண்டிப்புதூர், கோயம்புத்தூர்.

கோயம்புத்தூர், ஒண்டிப்புதூர், ஸ்ரீஹரி நூற்பாலை லிமிடெட்டைச் சார்ந்த தொழிலாளர்கள், அன்றாடம் வேலை செய்யும் தொழிலாளர்களை தற்காலிகமாக வேலையில் அமர்த்தும் போக்கை எதிர்த்து, 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 8 ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். 1980 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 11 ஆம் நாளன்று தொழிலாளர் நல சிறப்பு துணை ஆணையாளர் முன்னிலையில் நடைபெற்ற சமரசப் பேச்சு வார்த்தைகள் விளைவாக, 1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 12(3) பிரிவின் கீழ் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. தொழிலாளர்கள் உடனே வேலை நிறுத்தத்தை கைவிட்டனர். இரு சாராரும் தொழிலாளர் நல சிறப்புத் துணை ஆணையாளரின் முடிவுக்குக் கட்டுப்பட்டு, அன்றாடத் தொழிலாளர்களை தற்காலிகமாக வேலை செய்யும் தொழிலாளர்களாக ஆக்கும் இக்கோரிக்

கையை அவரிடம் விட்டனர். தன் பிறகு 1980 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 21ஆம் நாள் தொழிலாளர் நல சிறப்புத் துணை ஆணையாளர் தன் முடிவைத் தெரிவித்தார்.

12. ஆரோபுட் பிரைவேட் லிமிடெட், ஆரோவில்.

இந்நிறுவனத்தைச் சார்ந்த சுமார் 600 தொழிலாளர்கள் ஊதியத்தை திருத்தியமைத்தல், அகவிலைப்படி ஆகிய கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி 1980ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 5ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். அதன் பிறகு, நிர்வாகம், 1980ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 11 ஆம் நாளிலிருந்து பாதி கதவடைப்புச் செய்தது. சென்னை தொழிலாளர் நல ஆணையாளர் எடுத்துக் கொண்ட நன் முயற்சியின் காரணமாக, 1980 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 11ஆம் நாள் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. தொழிலாளர் நல ஆணையாளரின் (சென்னை) முன் நடைபெற்ற பேச்சு வார்த்தை களின் விளைவாக, 1980ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 11ஆம் நாள் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. தொழிலாளர் நல சிறப்புத் துணை ஆணையாளர் (சென்னை) முன் ஓர் உடன்படிக்கை ஏற் பட்டது. இதனால் ஒவ்வொரு தொழிலாளியும் குறைந்தது ரூ. 125 அதிகப்படி ஊதியம் தற்காலிகமாகப் பெற்றனர். 1980ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 1ஆம் நாளிலிருந்து கருணைத் தொகையாக ரூ. 4·50 மற்றும் 95 ரூபாய் ஊதிய உயர்வு நிலுவைத் தொகையை, ஒவ்வொரு மாதமும், கொடுக்க நிர் வாகம் ஒப்புக் கொண்டது. இந்த உடன்படிக்கையினால் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தையும் கைவிட்டனர். இவ்வுடன்பாட்டின் பயனாக 1980 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 12ஆம் நாளிலிருந்து நிர்வாகம் கதவடைப்பை நீக்கியது.

13. காவேரி பொறியியல் தொழிற்சாலைகள், திருச்சிராப்பள்ளி.

இந்நிறுவனத்தைச் சார்ந்த 250 தொழிலாளர்களை ஆட் குறைப்பு செய்ததன் காரணமாக, தொழில் அமைதியின்மை ஏற்பட்டதை தவிர்க்க, திருச்சிராப்பள்ளி கலெக்டர் அவர்களோடு விவாதித்து இத்தகராறில் ஓர் உடன்பாடு காணும் முறையைக் கண்டறிந்தார். மீண்டும் சென்னை தொழிலாளர் நல இணை ஆணையாளர் முன்பு நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் விளைவாக, 1980ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 3 ஆம் நாளன்று, தொழிற் தகராறுகள் சட்டத்தின் 12(3) பிரிவின் கீழ், ஓர் உடன்பாடு ஏற்பட்டது. தொழிற் தகராறுகள் சட்டத்தின் 10-ஏ பிரிவின்கீழ் 245 தொழிலாளர்களை ஆள் குறைப்பு செய்யப்பட்ட கோரிக்கையை நடுவர் தீர்ப்புக்கு விடவும், 161 பயிற்சியாளர்கள் தொடர்பான பிரச்சினையை நடுவர் தீர்ப்புக்கு விடவும், தொழிலாளர் நலஇணை ஆணை யாளர் மேற்கொண்ட முடிவிற்கு சம்மதம் தெரிவித்தனர்.

1981 ஏப்ரல் 21]

14. பாண்டியன் கெமிக்கல்ஸ் லிமிடெட், மதுரை.

ஊதியங்களை மாற்றியமைத்தல், அகவிலைப்படி அளித்தல், தொழிலாளர்களை வேலையில் நிரந்தமாக்குதல் ஆகிய கோரிக்கைகளை முன் வைத்து, இந்நிறுவனத்தைச் சார்ந்த தொழிலாளர்கள் 1980ஆம் ஆண்டு ஆகஸ்டு 6ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 25ஆம் நாள் தொழிலாளர் நல சிறப்புத் துணை ஆணையாளரின் முன் நடைபெற்ற இணக்கப் பேச்சு வார்த்தையின் விளைவால் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. தொழிலாளர் நல இணை ஆணையாளரால் இத்தகராறைத் தீர்த்து வைக்க அவர்கள் சம்மதித்தனர். 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 29ஆம் நாளன்று தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர்.

15. பொது போக்குவரத்துக் கழகங்கள்.

பொது போக்குவரத்துக் கழகங்களைச் சார்ந்த தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட நீண்டகால உடன்படிக்கை, 1980 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 31ஆம் நாளன்று முடிவடைந்ததின் விளைவாக இந்நிர்வாகங்களைச் சார்ந்த சங்கங்கள் சில கோரிக்கைகளை நிறைவேற்றும்படி அந்தந்த நிர்வாகத்தினரைக் கேட்டனர். தொழிலாளர்களின் பிரதிநிதிகளுக்கும், நிர்வாகத்தினருக்கும் இடையே இருதரப்பு பேச்சு வாத்தைகள் பல்வேறு நாட்களில் நடைபெற்றன. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை அமைச்சர் 1980ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 23 ஆம் நாளிலிருந்து 26 ஆம் நாள் வரையில் நடத்திய பேச்சு வார்த்தைகளின் பயனாகவும், அவர் ஆலோசனை நல்கியதன் பயனாகவும் மத்திய தொழிற்சங்கங்களின் மத்திய அமைப்பிற்கும் மாநிலப் போக்குவரத்து நிறுவனங்களின் நிருவாகத்தினருக்கும் இடையில் உடன்பாடு ஒன்று 26—8—1980 ஆம் நாளன்று ஏற்பட்டது.

அதன் அடிப்படையில் கோயம்புத்தூரில் சமரசப் பேச்சு வார்த்தைகள் சென்னை தொழிலாளர் நல சிறப்புத் துணை ஆணையாளர் முன்பு நடை பெற்றது. 1947 ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ் தனித்தனியாக உடன்பாடுகளும் ஏற்பட்டன. அவற்றின் பயனாக ஒவ்வொரு தொழிலாளியும் தங்களின் மொத்த ஊதியத்தில் ரூ. 90 லிருந்து ரூ. 120 வரை அதிகம் பெற்றனர். மொத்தம் 60,000 தொழிலாளர்கள் இதனால் பயனடைந்தனர்.

16. சேஷசாயி பேப்பர் மற்றும் போர்டு லிமிடெட், பள்ளிப்பாளையம்.

1979–80, 1980–81, 1981–82, 1982–83 ஆகிய கணக்காண்டுகளுக்கு பணிக்கொடை அளிப்பது குறித்து, இந்நிறுவனத்தில்

தொழிலாளர்களுக்கும் சேசசாயி பேப்பர் மற்றும் குழுக்கள் லிமிடெட், பள்ளிப்பாளையம் நிறுவனத்திற்கும் இடையில் எழுந்த பிரச்சினையை 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 2 ஆம் நாள் அன்று தொழிலாளர் நல இணை ஆணையாளர், சென்னை முன் 1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின்கீழ், ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. இவ்வுடன்படிக்கை இக்கணக்காண்டுகள் ஒவ்வொன்றிற்கும், 20 சதவீத ஊதியக் கொடை வழங்க வகை செய்கிறது.

17. தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட், அரியலூர் சிமெண்ட் ஒர்க்ஸ், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

திட்டப்படி, ஊதியக் குழு நிர்ணயித்த 75 சதவீதம் ஊதியம் ஆகியவற்றை 1979 ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதல் நாளிலிருந்து 1979 ஆம் ஆண்டு மார்ச் 9 ஆம் நாள் வரை கொடுக்க வேண்டும் என்பது குறித்தும், மற்றும் விடுப்பு சலுகைகளை உயர்த்துதல் போன்ற கோரிக்கைகளை முன் வைத்தும் இந்நிறுவனத்தைச் சார்ந்த தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். இத்தகராறு 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 12 ஆம் நாளன்று 1947 ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின்கீழ் தொழிலாளர் நல சிறப்புத் துணை ஆணையாளரால் (சென்னை) தீர்த்து வைக்கப்பட்டது.

18. பனியன் தொழிற்சாலைகள், திருப்பூர்.

திருப்பூரிலுள்ள 1,500 பனியன் தொழிற்சாலைகளைச் சார்ந்த சுமார் 20,000 தொழிலாளர்கள் பணிக்கொடை அளிக்கக்கோரி போராட்டத்தில் ஈடுபட்டதின் விளைவாக 1980 ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 5 ஆம் நாளிலிருந்து நிறுவனம் கதவடைப்பு செய்தது. கோயம்புத்தூர் தொழிலாளர் நலத் துணை ஆணையாளர் முன்பு நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் விளைவாக அவர் நல்கிய ஆலோசனைக்கிணங்க. 1980 ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 18 ஆம் நாளிலிருந்து கதவடைப்பு நீக்கப்பட்டது. முந்தைய ஆண்டில் அளிக்கப்பட்ட ஊதியச் கொடைக்கு மேலாக ரூ. 44 ஒவ்வொரு தொழிலாளர்களுக்கும் அதிகமாக அளிக்க ஒப்புக்கொண்டது; இந்த ஊதியக் கொடை குறைந்த அளவு 200 ரூபாய்க்கு உட்பட்டிருக்க வேண்டுமெனவும் வரையறுத்தது. செய்யும் வேலை அளவுக்கேற்ப கூலி பெறும் தொழிலாளர்களுக்கு அவர்களின் பணிச்சுமைக்கேற்ப ஊதியங்களை நிர்ணயிப்பது தொடர்பான பிரச்சினை, கோயம்புத்தூர் தொழிலாளர் நலத் துணை ஆணையாளர் முன்னிலையில் மேற்கொண்டும் விவாதத்திற்காக விடப்பட்டது.

1981 ஏப்ரல் 21]

19. ஸ்ரீ அம்பாள் மில்ஸ் (பிரைவேட்) லிமிடெட், சோமனூர்.

சில பொதுக் கோரிக்கைகளை முன்வைத்து, ஸ்ரீ அம்பாள் மில்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தைச் சார்ந்த (சோமனூர், கோயம்புத்தூர் மாவட்டம்) தொழிலாளர்கள் 1980 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 16 ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். தொழிலாளர் நல உதவி ஆணையாளர் (இணக்கம்-2) (கோயம்புத்தூர்) இது பற்றிய பேச்சு வார்த்தை நடத்தினார். மீண்டும் பேச்சு வார்த்தைகள், 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 15 ஆம் நாளன்று, சென்னை தொழிலாளர் நல இணை ஆணையாளர் முன்பு நடைபெற்றது. 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 17 ஆம் நாளன்று சென்னை தொழிலாளர் நல சிறப்புத் துணை ஆணையாளர் முன் மேற்கொண்டும் நடந்த பேச்சு வார்த்தையின் விளைவாக 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19 ஆம் நாளிலிருந்து தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டனர். தொழிலாளர்கள் மன்னிப்புக் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில், நிர்வாகம் ஐந்து தொழிலாளர்கள் மீது வேலை நீக்கம் செய்த உத்தரவை நீக்க ஒப்புக் கொண்டது. மற்ற கோரிக்கைகளை பேச்சு வார்த்தைகளில் தீர்த்துக்கொள்ள இருசாராரும் ஒப்புக்கொண்டனர். மேலும் இக்கோரிக்கைகளின் பேரில் உடன்படிக்கை ஏற்படவில்லையென்றால், இதனை நடுவர் தீர்ப்புக்கு விடலாம் என தீர்மானித்தனர்.

20. மலைத் தோட்டங்கள்.

நீலகிரி, மற்றும் வயநாடு மலைத் தோட்டங்களில் வேலை செய்யும் மலைத் தோட்டத் தொழிலாளர் சங்கங்கள், தங்களின் நீண்ட கால உடன்படிக்கை முடிவடையுமுன், ஒரு புதிய உடன்படிக்கை செய்து கொள்ள, தங்களுடைய மலைத் தோட்ட அதிபர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தின. நேரடிப் பேச்சு வார்த்தை தோல்வியடைந்ததால், இத்தொழிற்தகராறை கோயம்புத்தூர் தொழிலாளர் நல துணை ஆணையாளரும், பின்னர் சென்னை தொழிலாளர் நல இணை ஆணையாளரும் பல்வேறு தினங்களில் பேச்சு வார்த்தை நடத்தினர்.

தொழிலதிபர்கள் ஊதிய உயர்வை ஒப்புக் கொள்ளாத காரணத்தால் 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 15 ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர். சுமார் 75,000 தொழிலாளர்கள் இவ்வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதாக கணக்கிடப்படுகிறது. தொழிலாளர் நல அமைச்சரின் நன் முயற்சியின் பயனாக, தொழிலாளர் நல இணை ஆணையாளர் மற்றும் தொழிலாளர் நல ஆணையாளர் ஆகியோர் தொழிலாளர் நல அமைச்சர் முன்னிலையில் நடத்திய பேச்சு

[1981 ஏப்ரல் 21

வார்த்தைகளின் விளைவால், 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 20 ஆம் நாளன்று ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. அவ்வுடன்பாட்டின்படி நாளொன்றுக்கு ரூ. 1.54 அதிகப்படி ஊதியம் கொடுக்க வகை செய்கிறது. 1980-ஆம் ஆண்டு டிசம்பர் 22 ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

21. தமிழ்நாடு தேயிலை மலைத்தோட்டங்கள் கழகம் லிமிடெட், குன்னூர்.

தமிழ்நாடு தேயிலை மலைத்தோட்டங்கள் கழகத்தை சார்ந்த தொழிலாளர்கள் மற்றும் மலைத் தோட்டத் தொழிலாளர்களுடன் சேர்ந்து ஊதிய உயர்வு, அகவிலைப்படி ஆகிய கோரிக்கைகள் குறித்து 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 15 ஆம் நாளன்று வேலை நிறுத்தம் செய்தனர். இக்கோரிக்கைகள் குறித்து முன்னோடிப் பேச்சு வார்த்தைகள், தமிழ்நாடு அரசு தொழிலாளர் நல அமைச்சரின் முன்னிலையில் 1980-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19 ஆம் நாளன்று நடைபெற்றன. கோயம்புத்தூரிலுள்ள தொழிலாளர் நல சிறப்புத் துணை ஆணையாளர் முன்பு 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 20 ஆம் நாள் நடைபெற்ற இணக்கப் பேச்சின் போது, 1947 ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 12(3) பிரிவின்கீழ் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. அவ்வுடன்பாட்டின் அடிப்படையில் நாளொன்றுக்கு ரூ. 4.70 என தற்போதிருந்த ஊதிய விகிதத்துடன் ரூ. 1.44 அதிகப்படியாக நாளொன்றுக்கு வழங்கப்பட்டு நாளொன்றுக்கு ரூ. 6.14 ஆகக் கொடுக்கப்பட்டது. நாளொன்றுக்கு ரூ. 1.60 என்றிருந்த அகவிலைப்படி நாளொன்றுக்கு ரூ. 0.10 அதிகப்படியாக கொடுக்கப்பட்டு நாளொன்றுக்கு ரூ. 1.70 ஆக கொடுக்கப்பட்டது. மேலும் 1,645 இலக்குகளாக கோயம்புத்தூர் வாழ்க்கை செலவுப் புள்ளிக்கு மேலாக புள்ளி ஒன்றுக்கு 32 பைசா வீதம் அவர்களது மாற்று அகவிலைப்படி நிர்ணயிக்கப்பட்டன. (1936 அடிப்படை 100) இவ்வுடன்படிக்கையின் பயனாக நாளொன்றுக்கு ஒவ்வொரு தொழிலாளியும் குறைந்த அளவு ரூ. 9.09 மொத்தமாக சம்பாதிக்க இயலும். 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 22 ஆம் நாளன்று தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டனர்.

நடுவர் தீர்ப்பு.

1980 ஆம் ஆண்டில் 3 வழக்குகள் தனிப்பட்ட முறையில் நடுவர் தீர்ப்புக்கு அனுப்பப்பட்டன.

1981 ஏப்ரல் 21]

நீதிமன்றத் தீர்ப்பு.

1979-80 ஆம் காலண்டர் ஆண்டுகளில் சென்னை தொழில் நடுவர் மன்றம், தொழிலாளர் நீதிமன்றங்கள் ஆகியவற்றிற்கு அனுப்பப்பட்ட வழக்குகள், அவை அளித்த தீர்ப்புகளின் எண்ணிக்கை ஆகிய விவரங்கள் பின்வருமாறு :—

	தீர்ப்புக்காக அனுப்பப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை.		தீர்ப்பளிக்கப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை.	
	1979	1980	1979	1980
(1)	(2)	(3)	(4)	(5)
தொழில் நடுவர் மன்றம், சென்னை ..	52	94	85	97
தொழிலாளர் நீதி மன்றங்கள் ..	662	942	494	792

மேற்சொன்ன வழக்குகளோடு, தொழிலாளர் நீதி மன்றங்கள் 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 33சி (2) பிரிவின்கீழ், தொழிலாளர்கள் தாக்கல் செய்த 1,554 மனுக்களை விசாரணை செய்து தீர்ப்புக் கூறியுள்ளன.

வசூல்.

1979-80 ஆம் ஆண்டுகளில் 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 33-சி (1)ஆம் பிரிவின் கீழ் தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய பாக்கித் தொகையை கீழ்க்கண்டுள்ளவாறு வசூல் செய்யுமாறு அரசு ஆணையிட்டது :—

வழக்குகளின் எண்ணிக்கை.		தொகை.	
1979	1980	1979	1980
(1)	(2)	(3)	(4)
		ரூ.	ரூ.
56	124	1,65,469.58	6,76,322.22

1[1981 ஏப்ரல் 21

தொழிற் சங்கங்கள் :

1980 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் நாளன்றைய நிலவரப்படி 3031 பதிவு பெற்ற தொழிற் சங்கங்கள் இருந்தன. நடப்பு ஆண்டில் 548 தொழிற்சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன. 78 தொழிற் சங்கங்களின் பதிவு ரத்து செய்யப்பட்டன. ஒரு சங்கத்தின் பதிவு ரத்து செய்யப்பட்டது; அது பின்னர் நீக்கி விடப்பட்டது. மூன்று சங்கங்கள் கலைக்கப்பட்டன. ஒரு தொழிற் சங்கம் இணைக்கப்பட்டது. 1980 ஆம் ஆண்டு இறுதி நில வரப்படி பதிவு செய்யப்பட்ட தொழிற் சங்கங்களின் எண்ணிக்கை 3,498.

1965 ஆம் ஆண்டு ஊதியக் கொடை வழங்கல் சட்டம் :

1965 ஆம் ஆண்டு ஊதியக் கொடை வழங்கல் சட்டம், 1980 ஆம் ஆண்டு 10 ஆம் அவசரச் சட்டத்தால் திருத்தியமைக்கப்பட்டு, 1980 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 21 ஆம் நாளிலிருந்து அமுலுக்கு கொண்டு வரப்பட்டது. அந்த அவசரச் சட்டத்தின் படி குறைந்த அளவு ஊதியக் கொடை 8-1/3 சதவிகிதம் கூடுதல் அளவு ஊதியக் கொடை 20 சதவிகிதம் என்பது நிலையான அம்சங்களாகும்.

1976 ஆம் ஆண்டு ஊதியக் கொடை வழங்கல் சட்டத்தில் இடம் பெறாத வங்கிக் கம்பெனிகள், பொதுத் துறையைச் சேர்ந்த இந்திய தொழிற்சாலை சீரமைப்பு கழகங்கள் ஆகியவைகளில் பணி புரியும் தொழிலாளர்கள், 1978 கணக்காண்டிலிருந்து ஊதியக் கொடை பெற தகுதி வாய்ந்தவர்களாக ஆக்கப்பட்டனர் என்பதும் இந்த அவசரச் சட்டத்தின் மற்றொரு முக்கிய அம்சமாகும். 10 முதல் 20 வரையிலுள்ள தொழிலாளர்களை வேலைக்கமர்த்தியுள்ள தொழிற்சாலைகள், கடைகள், நிறுவனங்கள், வாகன போக்குவரத்து நிறுவனங்கள், பீடி மற்றும் சுருட்டு நிறுவனங்கள், உணவக நிறுவனங்கள், மற்றும் செய்தித்தாள் நிறுவனங்களுக்கும் இச்சட்டத்தின் விதித்துறைகள் பொருந்துமாறு செய்யப்பட்டுள்ளன.

முத்தரப்பு ஆலோசனைக் குழுக்கள் :

பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் உள்ள சட்ட விதித்துறைகளைச் செயல்படுத்துவதுடன், தொழிலதிபர்கள் தொழிலாளர்களின் தொழிற் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோரின் ஆலோசனைகளையும் ஒத்துழைப்பையும் அரசு பெருமளவு பெற்றுள்ளது. ஆகவே அவர்கள் இதற்காக பல்வேறு தொழிலாளர்கள் நலச் சட்டங்கள் செயற்படுத்தப் படுவதைக் கண்காணிப்பதற்கும், அவற்றைச் சிறந்த முறையில் செயல்படுத்தும்

1981 ஏப்ரல் 21]

பொருட்டு, அவ்வப்போது ஆலோசனைகளை நல்குவதற்கும் பல குழுக்களை அமைத்தனர். இக்குழுக்கள் இரு பெரும் பிரிவுகளாக அதாவது, சட்ட அடிப்படையில் அமைந்த குழுக்கள், சட்ட அடிப்படையில் அமையாத குழுக்கள் என பிரிக்கப்பட்டுள்ளன :—

சட்ட அடிப்படையில் அமைந்த குழுக்கள்.

(1) குறைந்த அளவு மாநில ஆலோசனைக் குழு.

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின், 7 ஆம் பிரிவின்படி இக்குழு அமைக்கப்பட்டது. இக்குழு இவ்வாண்டு மும்முறை கூடி, பீடி தயாரிப்புத் தொழில் உட்பட புகையிலை தொழிலில் ஈடுபட்டுள்ள பீடி சுற்றுவோருக்கு வழங்க வேண்டிய பழைய ஊதிய வீதங்களைத் திருத்துவது குறித்து இக்குழு பரிசீலனை செய்து அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.

(2) குறைந்த அளவு ஊதிய ஆலோசனைக் குழு.

கீழ்க்காணும் விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்களுக்கு, குறைந்த அளவு ஊதியங்களை நிர்ணயிக்கவும், திருத்தியமைக்கவும் ஆலோசனை கூறுவதற்கு தொழிலாளர் நலத் துணை ஆணையாளரைத் தலைவராகக் (குறைந்த அளவு ஊதியங்கள்) கொண்டு அரசால் இக்குழு அமைக்கப்பட்டுள்ளது :—

(1) காப்பிக் கொட்டை பதப்படுத்தும் பணி.

(2) வெளுத்தல், சாயம் தோய்த்தல், தொழிலில் வேலை.

(3) தங்க நகைகள் செய்யும் தொழில்.

(4) வெட்டு மரத் தொழில்.

மேற்கூறிய ஒவ்வொரு குழுக்களும் இத் தொழில்களில் தொடர்புள்ள தொழிலாளர்களின் பிரதிநிதிகள் இருவரையும் தொழிலதிபர்களின் பிரதிநிதிகள் இருவரையும் உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது.

(3) மலைத் தோட்டத் தொழிலாளர் வீட்டுவசதி ஆலோசனைக் குழு.

இக்குழு, மலைத் தோட்டத் தொழிலாளர்கள் சட்டத்தின் விதிகளின் கீழ் அமைக்கப்பட்டது. வீட்டு வசதி குறித்தும் தொழிலாளர்கள் நலச் சட்டத்தின் விதித்துறைகளை முறையாகச் செயல்படுத்துவதற்கு வழிவகைகளைக் கூறுவது குறித்தும்

விவாதிக்க இக்குழு அமைக்கப்பட்டது. இதுவரை 38,754 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எனவே, இலக்கில் 83 சதவிகிதம் சாதனையை அடைந்துள்ளது.

(4) 1976 ஆம் ஆண்டு பீடித் தொழிலாளர்கள் நலச்சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட ஆலோசனைக் குழு.

1976 ஆம் ஆண்டு பீடித் தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் இச்சட்டத்தின் விதிகளை நிர்வகிப்பது பற்றியும் மற்றும் பீடித் தொழிலாளர் நல நிதியை அவர்களுக்காகப் பயன்படுத்தப்படுவது பற்றியும் ஆலோசனை நல்கும் நோக்கத்திற்காக, மாநில தொழிலாளர் நல அமைச்சரைத் தலைவராகவும் தொழிலதிபர்கள் பிரதிநிதிகள் தொழிலாளர்கள் பிரதிநிதிகள் ஆகியோரை உறுப்பினராகவும் கொண்டு 1976 ஆம் ஆண்டு பீடித் தொழிலாளர்கள் நல நிதி சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் ஆலோசனைக் குழு ஒன்றை மத்திய அரசு அமைத்தது. தொழிலாளர் நலத் துணை ஆணையாளர் (ஆய்வு) இக்குழுவின் உறுப்பினராவார். 1981 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 13 ஆம் நாள் அன்று தொடக்கக் கூட்டமொன்று தொழிலாளர் நல அமைச்சர் தலைமையில் நடைபெற்றது.

(5) மாநில ஒப்பந்தத் தொழிலாளர் ஆலோசனைக்குழு.

1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப்படுத்துதல் நீக்குதல்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் இக்குழு அமைக்கப்பட்டது. இம்மாநிலத்தில் பொறியியல் தொழிற்சாலைகளில் ஒப்பந்தத் தொழிலாளர் முறை, தொடர்ந்து இருக்க வேண்டியது பற்றி ஆய்வு செய்யும் பொருட்டு துணைக் குழு ஒன்றை அமைக்க வேண்டுமென்றும் துணைக்குழு கொடுத்த அறிக்கையின் அடிப்படையில் காகிதம் மற்றும் சிமிட்டி தொழிற்சாலைகளில் குறிப்பிட்ட சில பணி முறைகளில் பணிபுரியும் ஒப்பந்தத் தொழிலாளர் முறையினை அகற்ற வேண்டுமென்றும் கோரி இக்குழு 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 23 ஆம் நாள் நடந்த கூட்டத்தில் பரிந்துரைத்துள்ளது.

சிமிட்டி தொழிற்சாலையிலுள்ள கட்டும் பிரிவிலும் சிப்பம் செய்யும் பிரிவிலும் பைகளில் அச்சிடும் பிரிவிலும் நிலவும் ஒப்பந்த தொழிலாளர் முறையை ஒழிக்க அரசு தற்போது ஆணை பிறப்பித்துள்ளது. இக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் காகிதத் தொழிற்சாலையில் இருக்கும் ஒப்பந்த தொழிலாளர்கள் முறையை ஒழிக்கும் நோக்கம் அரசின் பரிசீலனையில் உள்ளது. ஒப்பந்தத் தொழிலாளர் முறை

பொறியியல் தொழிற்சாலையில் தொடர்ந்து இருக்கும் நிலையை கண்டறிய ஒரு துணைக் குழுவை அரசு நியமித்துள்ளது.

(6) 1976 ஆம் ஆண்டு சம ஊதியச் சட்ட ஆலோசனைக் குழு.

1976 ஆம் ஆண்டு சம ஊதியச் சட்டத்தின் 6 (1) ஆம் பிரிவின் நிபந்தனைகளின்படி மாநில அளவிலான ஆலோசனைக் குழுவை தற்போது அரசு புதுப்பித்து அமைத்துள்ளது. இக்குழு 5—10—1979, 18—12—1980 மற்றும் 18—2—1981 ஆகிய நாட்களில் கூடியது. இக்கூட்டங்களில் கீழ்க்காணும் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன:—

(1) பெண்களுக்கு அதிக வேலைவாய்ப்பு அளிப்பது மற்றும் பாரபட்சமின்றி ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம ஊதியம் அளிக்க உறுதி செய்வது.

(2) மருத்துவமனைகள், கிராமப்புற வளர்ச்சி, உருவாய் மற்றும் சுற்றுலாத் துறைகளில் பெண்களை அதிக அளவில் வேலையில் அமர்த்த வேண்டிய அவசியம் குறித்து வலியுறுத்துவது.

(3) பல்வேறு நிறுவனங்களில் பெண்களுக்கு உரிய அதிக அளவு வேலைவாய்ப்புக்கள் பற்றி அறிந்து, குறிப்பாக அரசுக்கு பரிந்துரை செய்வதற்காக பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ளோரை உறுப்பினராகக் கொண்ட துணைக் குழுக்களை அமைத்தல்.

சட்ட அடிப்படையில் அமையாத குழுக்கள்.

1. மாநிலத் தொழிலாளர் ஆலோசனைக் குழு :

இக் குழு மாநில அளவிலான முதல் நிலை ஆலோசனைக் குழுவாகும்; தொழிலாளர் சம்பந்தப்பட்ட கொள்கை குறித்த எல்லாப் பிரச்சினைகளுக்கும் ஆலோசனை பெறும் பொருட்டு அப்பிரச்சினைகள் அக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இக்குழுவிற்கு தொழிலாளர் நல அமைச்சர் தலைவராவார் இக்குழுவில் தொழிலதிபர்களின் பிரதிநிதிகள், தொழிலாளர்களின் பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள், சட்ட மன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உள்ளனர். தொழிலாளர் நல ஆணையாளர் இக்குழுவின் செயலாளராவர். அறிக்கை ஆண்டில் 1980-ல் இக்குழு 23—1—1980, 29—8—1980 மற்றும்

19—12—1980 ஆகிய நாட்களில் மூன்று முறை கூடி, தொழில் உறவுகளைப் பற்றி விவாதித்தது. அக்கூட்டங்களில் கீழ்க்காணும் முக்கிய முடிவுகள் இக்குழுவால் எடுக்கப்பட்டன :—

(1) குறைந்த அளவு ஊதியம் (மாநில) ஆலோசனைக் குழுவைக் கலந்தாலோசித்த பின், 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் 1 ஆம் விவர அட்டவணையில் நிப்பு தொழில், கம்பளத் தொழில், மேலாடைத் தொழில், சிறிய பொறியியல் தொழில், கோயில் பணி ஆகியவைகளை இணைப்பது.

(2) கைத்தறி தொழிலாளர்களுக்கு விரைவில் சட்டமியற்றுதல்.

(3) பொது மற்றும் தனியார் துறைகளில் உள்ள தொழிற்சாலைகளின் வாயில்களின் முன், பதிவு செய்யப்பட்டுள்ள தொழிற்சங்கங்கள் கூட்டங்களை நடத்துவதற்கு உரிமை வழங்குவது.

2. மாநில மதிப்பீடு செயல்படுத்தும் குழு.

தொழிற்சாலைகளில் ஒழுங்கு முறை விதிகளைச் செயல்படுத்துவது குறித்தும், தொழிற்சங்கங்களை அங்கீகரிப்பது குறித்தும் தீர்மானிப்பதே இக்குழுவின் முக்கிய பணியாகும். இக்குழுவில் தொழிலதிபர்களின் பிரதிநிதிகள் எழுவரும், தொழிலாளர்களின் பிரதிநிதிகள் எழுவரும் உறுப்பினர்களாக உள்ளனர். தொழிலாளர் நல இணை ஆணையாளர் இக்குழுவின் தலைவராகவும் தொழிலாளர் நல தனித் துணை ஆணையாளர் இதன் செயலாளராகவும் உள்ளனர்.

இக்குழு 1980 ஆம் ஆண்டு நான்கு முறை கூடியது. தொழிற்சாலைகளில் ஒழுங்குமுறை விதிகளை மீறிய ஆறு வழக்குகளை விசாரணை செய்ததோடு மட்டுமல்லாமல், 11 தொழிற் சங்கங்களுக்கு அங்கீகாரம் அளிப்பதற்கும் பரிந்துரை செய்தது.

3. மாநில நடுவர் மன்ற மேம்பாட்டுக் குழு.

பணியிலிருந்து ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரின் தலைமையின்கீழ் இக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இதில் மத்திய நிறுவனங்களில் தொடர்பு கொண்டுள்ள தொழிலதிபர்களின் பிரதிநிதிகள் ஐவரும், தொழிலாளர்களின் பிரதிநிதிகள் ஐவரும், தொழிலதிபர்களையோ, தொழிலாளர்களையோ சாராத

தனிப்பட்ட உறுப்பினர்கள் இருவரும் உள்ளனர். இக்குழுவிடம் ஏனையவற்றோடு பின்வரும் முக்கியப் பணிகள் ஒப்படைக்கப் பட்டுள்ளன :—

(அ) தொழிலதிபர்களும், தொழிலாளர்களும் தாங்களாகவே முன் வந்து நடுவர் இணக்கத் தீர்ப்பின்மூலம் தீர்த்துக் கொண்ட வழக்குகள் தொடர்பாக, குறித்த காலத்திற்கு ஒரு முறை ஆய்வு செய்தல்;

(ஆ) நடுவர் மன்றத்தின் மூலம் தகராறுகளை விரைவில் முடிப்பதில் கட்சிக்காரர்களுக்கு ஏற்படும் இடர்பாடுகளைக் கருத்தில் கொண்டு, தேவையான வழக்குகளில் நடுவர் மன்ற நடைமுறைகளைத் துரிதப்படுத்துதல்;

(இ) தொழிலாளர்களும், தொழிலதிபர்களும் தாங்களாகவே முன்வந்து வழக்குகளை இணக்கமாகத் தீர்த்துக் கொள்வதற்கு வேண்டிய மனப்பக்குவத்தை ஏற்படுத்த அரசு எடுக்க வேண்டிய சிறப்பு நடவடிக்கைகள் குறித்து அரசுக்கு ஆலோசனை நல்குதல்.

4. மலைத் தோட்டத் தொழிலாளர் நல ஆலோசனைக் குழு.

மலைத் தோட்டத் தொழிலாளர்கள் சட்டம் விதிகளின் விதித்துறைகளைச் செயல்படுத்துவது குறித்து அரசுக்கு ஆலோசனை நல்கும் பொருட்டு இக்குழு அமைக்கப்பட்டது இக்குழு மலைத் தோட்டத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலதிபர்களின் பிரதிநிதிகள் எழுவரும், தொழிலாளர்களின் பிரதிநிதிகள் எழுவரும், தொழிலதிபரையோ தொழிலாளர்களையோ சாராத தனிப்பட்ட உறுப்பினர் ஒருவரும் உள்ளனர். தொழிலாளர் நல ஆணையாளர் இக்குழுவின் தலைவராவார். மலைத் தோட்டத் தலைமை ஆய்வாளர் இக்குழுவின் செயலாளர் ஆவார்.

5. மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டத்தை செயல்படுத்தும் நடவடிக்கைளுக்கு ஆலோசனை கூறும் முத்தரப்புக் குழு.

1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டத்தையும், அச்சட்டத்தின்கீழ் இயற்றப்பட்ட விதிகளையும் சிறந்த முறையில் செயல்படுத்துவதற்கு ஆலோசனை கூறும் பொருட்டு இக்குழு அரசால் அமைக்கப்பட்டுள்ளது. மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களின் தலைமை ஆய்வாளரான தொழிலாளர் நலத் துணை ஆணையாளரே

(ஆய்வுகள்) இக்குழுவின் தலைவராவார். போக்குவரத்து தொழிலைச் சார்ந்துள்ள தொழிலாளர்களின் பிரதிநிதிகள் ஐவரும், தொழிலதிபர்களின் பிரதிநிதிகள் ஐவரும் இக் குழுவின் உறுப்பினர்களாக உள்ளனர். இக்குழு 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 11 ஆம் நாளும், செப்டம்பர் திங்கள் 26 ஆம் நாளும், டிசம்பர் திங்கள் 29 ஆம் நாளும் மும்முறை கூடி, இச்சட்டத்தை சிறந்த முறையில் செயல்படுத்துவது குறித்தும் மோட்டார் போக்குவரத்து பணியாளர்களுக்கு பயன் அளிக்கும் நல நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்தும் விவாதித்தது.

1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டுதொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டத்தைச் செயல்படுத்துவதில் உள்ள பிரச்சனைகளை கவனிக்கும் முத்தரப்புக் குழு.

பீடித் தொழில் நிறுவனங்களின் தலைமை ஆய்வாளராகிய தொழிலாளர் நல துணை ஆணையாளரே (ஆய்வுகள்) இக் குழுவின் தலைவராவார். பீடித் தொழில் சார்பாக, தொழி லதிபர்களின் பிரதிநிதிகள் நால்வரும், தொழிலாளர்களின் பிரதிநிதிகள் நால்வரும் இதில் உறுப்பினர்களாக உள்ளனர். 1980 ஆம் ஆண்டு மே திங்கள் 15 ஆம் நாள் இக் குழு கூடி, இச்சட்டத்தையும் அதன் விதிகளையும் செயல்படுத்துவதில் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து விவாதித்தது.

7. தொழிலாளர் நலச் சட்டங்களுக்கான குழு.

சட்டப் பிரிவுகளில் விதித்துறைகளை ஏற்படுத்துவதன் வாயிலாகத் தொழிலாளர்களுக்கு எல்லா நலன்களும் பாது காப்பும் கிடைப்பதற்கு உறுதி செய்வதே அரசின் கொள்கை யாகும். இதனை எய்துவதற்கு, சட்ட மன்ற உறுப்பினர்கள், முன்னணித் தொழிலதிபர்களின் பிரதிநிதிகள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர்களை உறுப்பினராகக் கொண்டு, தொழிலாளர் நல வேலை வாய்ப்புத் துறை அரசுச் செய லாளரின் தலைமையில் இக்குழு அரசால் முதன் முறையாக அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு ,, தொழிலாளர் நலச் சட்டங்களுக்கான குழு '' என்ப்படுகிறது. தொழிலாளர்களின் உரிமைகள், கடமைகள், அவர்களது பாதுகாப்பு ஆகியவற்றைப் பாதிக்கும் தொழிலாளர்கள் நலச் சட்டங்களை ஆய்வு செய்யும் பொறுப்பும், சட்டங்களைப் பரிசீலனை செய்து தேவை யான இடங்களில் திருத்தங்களைச் செய்ய கருத்துத் தெரிவிக்கும் பணியும் இக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதுவரை இக்குழு 15 முறை கூடி பல சட்டங்கள் குறித்து விவாதித்தது.

1981 ஏப்ரல் 21]

இக்குழுவின் கருத்துரையும் பரிந்துரைகளும், கருதிப் பார்க்கப் பட்டு தேவையான இடங்களில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப் படுகின்றன.

8. உயரளவு நிலைக்குழு (தொழிலாளர்களும் தொழிலதிபர்களும்).

இன்றியமையாப் பணிகளில் ஏற்படும் தொழிலாளர் வேலை நிறுத்தங்களில் ஏற்படும் பிரச்சினை குறித்து ஆலோசனை நல்க, இரு உயரளவு நிலைக்குழுக்களை, அதாவது தொழிலதிபர் களுக்காக ஒன்றும், தொழிலாளர்களுக்காக ஒன்றும் என அரசு அமைத்துள்ளது. ஒவ்வொரு குழுவிலும் எழுவர் அங்கம் வகிக்கிறார்கள். தொழிலாளர் நல ஆணையர் இக்குழுக்களின் நடத்துனராவார்.

சிறந்த தொழில் உறவுக்கான பரிசு வழங்கும் திட்டம்.

சிறந்த தொழில் உறவுகளை வைத்து வரும் நிர்வாகத்தின ருக்கும் தொழிற் சங்கங்களுக்கும் சிறப்புப் பரிசுகளை வழங்கு வதன் மூலம் நிர்வாகத்தினருக்கும், தொழிலாளர்களுக்கு மிடையே சிறந்த தொழில் உறவை ஏற்படுத்தி அதைத் தொடர்ந்து பாதுகாத்து வரவும் ஊக்குவிப்பதற்காக தமிழ் நாடு அரசு 1978 ஆம் ஆண்டில் சிறந்ததொரு நடவடிக்கையை எடுத்தது.

நிர்வாகத்தினரிடமிருந்தும், தொழிற் சங்கங்களிடமிருந்தும் வரப் பெற்ற விண்ணப்பங்களில் ஒவ்வொரு பரிசு ஆண்டிற்கும் உரிய வெற்றி பெற்றோரைத் தெரிந்தெடுக்க குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் உயர்நீதி மன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவரைத் தலைவராகக் கொண்டு தொழி லதிபர்கள், தொழிலாளர்களின் பிரதிநிதிகள் எழுவர் உள்ளனர். தொழிலாளர் நல தனித் துணை ஆணையாளர், இதன் செய லாளர் அமைப்பாளராவார். 1979 ஆம் பரிசு ஆண்டில் வெற்றி பெற்றவர்களுக்கு சுழற்கோப்பையும் முதற் பரிசிற்குரி கேடயமும், இரண்டாம் பரிசுக்குரிய சான்றிதழும் 1980 ஆ ஆண்டு டிசம்பர் திங்கள் ஒன்றாம் நாளன்று நடைபெற்ற விழா வில் வழங்கப்பட்டது.

II. வேலை நிபந்தனைகள், பணி நிபந்தனைகள் குறித்த சட்டங்கள் (1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம்).

1980 ஆம் ஆண்டு தொடக்கத்தில் 9,139 தொழிற்சாலை கள் இச்சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன. ஆனால் 1980 ஆம் ஆண்டு டிசம்பர் இறுதியில் (31—12—1980) 9,6 8

தொழிற்சாலைகள் இருந்தன. கூடுதலாக 953 தொழிற்சாலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதே நேரத்தில் 411 தொழிற்சாலைகள் நீக்கப்பட்டுள்ளன.

பதிவேட்டில் காணப்பெறும் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை :

	1979.	1980.
பிரிவு 2m (i)	8,598	9,146
பிரிவு 2m (ii)	541	535
பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கை	5,72,718	6,75,222

1979 டிசம்பர் 31 ஆம் நாள் வரையில் உரிமக் கட்டணமாக ரூபாய் 48,60,246.20 வசூலிக்கப்பட்டிருக்க, 1980 ஆம் ஆண்டில் அதாவது 1—1—80 முதல் 31—12—80 முடிய ரூபாய் 62,75,124 உரிமக் கட்டணமாக வசூலிக்கப்பட்டது.

ஆய்வுகள்.

அறிக்கை ஆண்டில், தொழிற்சாலைகள் உதவி ஆய்வாளர்களாலும், ஆய்வாளர்களாலும் 1,981 தொழிற்சாலைகள் ஒரு முறை ஆய்வு செய்யப்பட்டன. 8,268 தொழிற்சாலைகள் இரு முறை ஆய்வு செய்யப்பட்டன. 254 தொழிற்சாலைகள் மும்முறை ஆய்வு செய்யப்பட்டன. இவ்வாண்டில் மொத்தம் 19,279 ஆய்வுகள் நடத்தப்பட்டன. மேற்சொன்னவற்றோடு, 1,254 ஞாயிறு ஆய்வுகளும், 2,164 சிறப்பு ஆய்வுகளும், 655 திடீர் ஆய்வுகளும், 813 இரவு ஆய்வுகளும், 3,990 சோதனை ஆய்வுகளும் நடத்தப்பட்டன.

வழக்குகள் தொடருதல்.

தொழிற்சாலை சட்ட விதித்துறைகளை வேண்டுமென்றே தொடர்ந்து மீறும் நிர்வாகத்தினரை திருத்துவதற்குரிய கடைசி வழிமுறையாக மட்டுமே அவர்கள் மீது வழக்கு தொடர இச்சட்டத்தின் விதித்துறைகள் பயன்படுத்தப்படுகின்றன. தொழிலதிபர்கள் மீது வழக்கு தொடர்வதற்கு முன்னர், இச்சட்டத்தின் கீழ் தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய பயன்களை அளிப்பதற்கும், விடுபாடுகள், குறைகள் ஆகியவற்றைச் சரிசெய்து கொள்வதற்கும் தொழிலதிபர்களுக்குப்

போதுமான அவகாசம் கொடுக்கப்படுகிறது. தொழிலதிபர்கள் குறைகளைச் சரிசெய்து கொண்டு நல்லெண்ணத்துடன் நடந்து கொண்டால் மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பது கைவிடப் படுகிறது. ஆனால் சட்ட விதிமுறைகளை மீறும் தொழிலதிபர் கள் மீது அடிக்கடி திடீர் ஆய்வுகள் நடத்தப்பட்டு அவர்கள் குறைகளைச் சரி செய்து கொள்ளும் வரையில் வழக்குகள் தொடரப்படுகின்றன.

இவ்வாண்டில் (1980) தொழிற்சாலைகள் சட்ட வி்தித் துறைகளை மீறியதற்காகத் தொழிற்சாலை நிர்வாகத்தினர் மீது 3,155 வழக்குகள் தொடரப்பட்டன. இவ்வாண்டில் 2,752 வழக்குகள் குறித்து முடிவெடுக்கப்பட்டது. 2,54,507 ரூபாய் அபராதமாக வசூலிக்கப்பட்டது.

விபத்துக்கள்.

1979, 1980 ஆம் ஆண்டுகளில் தொழிற்சாலைகள் தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றில் நடைபெற்ற விபத்துக்கள் பற்றிய ஒப்பீட்டு விவரங்கள் பின் வருமாறு :—

ஆண்டு.	உயிர் இழப்பு ஏற்பட்ட விபத்துக்கள்.	உயிர் இழப்பு ஏற்படாத விபத்துக்கள்.
(1)	(2)	(3)
1979	57	28,478
1980	47	27,398

தொழிற்சாலை ஆய்வகத்தின் துரித முயற்சியால் உயிர் இழப்பு ஏற்பட்ட, உயிர் இழப்பு ஏற்படாத விபத்துக்கள் குறைந்துள்ளது கவனிக்கத்தக்கது.

மாநில பாதுகாப்புப் பரிசுகள்.

தொழிலாளர்கள், நிர்வாகத்தினருடைய தொழில் பாது காப்பை மேம்படுத்தவும், புதிய முயற்சிகளை மேற்கொள்ளவும் மாநிலப் பாதுகாப்புப் பரிசுகள், சிரமவீர் பரிசுகள் ஆகிய இரு தனி பரிசு வழங்கும் திட்டங்களை அரசு கொண்டு வந்துள்ளது.

1978 ஆம் ஆண்டில், மாநிலப் பாதுக்காப்புப் பரிசுகளை பெற 785 விண்ணப்பங்களிம், சிரமவீர் பரிசுகளைப் பெற 70 விண்ணப்பங்களும் வரப் பெற்றன. 1980 ஆம் ஆண்டு ஏப்ரல்

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திங்கள் 10 ஆம் நாள் இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் பரிசுகள் வழங்கப்பட்டன.

1979 ஆம் ஆண்டில் மாநிலப் பாதுகாப்பு பரிசுகளைப் பெற 766 விண்ணப்பங்களும், சிரமவீர் பரிசுகளைப் பெற 94 விண்ணப்பங்களும் வரப்பெற்றன. 1980 ஆம் ஆண்டு டிசம்பர் 1 ஆம் நாளன்று சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற விழாவில் பரிசுகள் வழங்கப்பட்டன.

1980 ஆம் ஆண்டிற்குரிய பரிசுகள் பெறுவதற்கான விண்ணப்பங்கள், பரிசுத் திட்ட பாதுகாப்பு வகுப்புகளில் பரிசீலனை செய்யப்படுவதற்காக தொழிற்சாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

1980 ஆம் ஆண்டில் (1980 நவம்பர் வரை) தொழிற்சாலைப் பாதுகாப்பின் பல்வேறு அம்சங்கள் குறித்து தொழிலாளர்களுக்கும் மேற்பார்வையாளர்களுக்கும் தொழிற்சாலைப் பாதுகாப்பு வகுப்புகள் பதிமூன்று நடத்தப்பட்டன. இதனால் 398 பேர்கள் பயனடைந்துள்ளனர்.

திரைப்படங்கள்.

ஒவ்வோர் ஆண்டும் பாதுகாப்பு—சுகாதாரம் குறித்த திரைப் படச் சுருள்கள் இத்துறையினரால் வாங்கப்படுகின்றன. தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகத்தில், தற்போது தொழிற்சாலை பாதுகாப்பு—சுகாதாரம் குறித்த 32 திரைப்படச் சுருள்கள் உள்ளன. அவை பாதுகாப்பு வகுப்புகள் நடத்தப்படும் போது திரையிடப்படுகின்றன. தொழிலாளர்களின் நலனுக்காக அவற்றைத் திரையிட, அவை தொழிற்சாலைகளுக்குக் கொடுக்கப்படுகின்றன.

உற்பத்தித் திறன்.

தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி ஆகிய ஆறு இடங்களில் ஒவ்வோரிடத்திலும் ஒன்றாக மொத்தம் ஆறு உற்பத்தித் திறன் குழுக்கள் உள்ளன. இக்குழுக்கள் முந்தைய ஆண்டில் வசூலித்த பங்குத் தொகையில் 50 சதவீதத்திற்கு நிகரான ஒரு தொகை பொது மானியத்தின் மூலம் ஆண்டுதோறும் இக்குழுக்களுக்கு நிதி உதவியாக வழங்கப்படுகிறது. இத்தொகை ஆண்டொன்றுக்கு 3,000 ரூபாய் என்னும் உயரளவிற்கு உட்பட்டதாகும்.

1980 ஆம் ஆண்டில், 1980–81 ஆம் ஆண்டிற்குரிய பொது மானியமாக இந்த ஆறு உற்பத்தித் திறன் குழுக்களுக்கும் மொத்தம் 17,455 ரூபாய் வழங்கப்பட்டது.

1981 ஏப்ரல் 21]

மேற்சொன்ன நிதி உதவியோடு, 1970 ஆம் ஆண்டை ஆசிய உற்பத்தித் திறன் ஆண்டாகக் கொண்டாடப்பட்டதை யொட்டி, ''தரம்-நம்பத்தகுந்த தன்மை'' என்னும் பொருள் குறித்து செய்தித் திரைப்படம் ஒன்றும் எடுக்கப்பட்டது. இத் திரைப்படத்தை எடுப்பதற்கு 1980 ஆம் ஆண்டுக் காலத்தில் ரூ. 4,839·50 செலவிடப்பட்டது. உற்பத்தித் திறன் குறித்த திரைப்படங்களைக் கொண்டுள்ள திரைப்பட சேகரிப்புப் பிரிவு ஒன்றும் உள்ளது. தொழிலாளர்களின் பயனுக்காகத் திரைப் படங்களைத் திரையிட்டுக் காட்ட தொழிற்சாலைகள், உற்பத்தி திறன் குழுக்கள், கல்வி நிலையங்கள் ஆகியவற்றிற்கு இச்செய்தித் திரைப்படங்கள் இலவசமாக வழங்கப்பட்டுவருகின்றன.

சுகாதாரம்.

தொழிற்சாலையில் உடல் நலம் பேணும் பிரிவு.

மாநில தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகத்தில் ஆய்வுக் கூடத்துடன் இணைந்த தொழிற்சாலைச் சுகாதார உடல் நலம் பேணும் பிரிவு ஒன்றை அரசு நிறுவி உள்ளது. இந்த ஆய்வுக் கூடத்தை நிர்வகிக்கும் பொறுப்பை மருத்துவ தலைமை அதி காரி (தொழிற்சாலைகள்) ஏற்றுள்ளார். தொழிற்சாலையில், உடல் நலம் பேணும் பிரிவு-ஆய்வுக்கூடம் மேற்கொண்ட நடவடிக்கைகளின் விவரம் வருமாறு:—

(1) தொழிற்சாலைகளில் ஆய்வு நடத்துதல்;

(2) அபாயகரமான பணியிலும் அபாயத் தன்மை வாய்ந்த இரசாயனத் தொழிலிலும் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்தல்.

(3) உயிரின மாதிரிகளை ஆய்வுக் கூடத்தில் பரிசோதனை செய்தல்;

(4) அத்தொழிலாளர்கள் தொழில் சார்ந்த நோய் எவற் றாலும் பாதிக்கப்பட்டுள்ளார்களா என்றும் ஆய்வுக் கூடத்தில் பரிசோதனை நடத்துதல்;

(5) தொழிற்சாலைகளில் பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்துதல்;

(6) சிறப்புப் பணிகளில் ஈடுபடுதல்.

தொழிற்சாலை சுகாதார உடல் நலம் பேணும் ஆய்வுக்கூடம் தற்போது நந்தனத்திலுள்ள குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் புதிய கட்டிடத்தில் செயலாற்றுகிறது.

அறிக்கையாண்டில், 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ், 49 தொழிற்சாலைகளை தலைமை மருத்துவ அலுவலர் பார்வையிட்டுள்ளார். மேலும் 10 தொழிற்சாலைகளில் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இரத்தமும் சிறுநீரும் குறித்து 38 மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டன. 26 தொழிற்சாலைகளில் அபாயகரமான தொழில்களில் வேலைசெய்யும் 514 தொழிலாளர்கள் மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டனர். ஈயம் சம்பந்தப்பட்ட தொழிலில் ஈடுபடுவதால், ஏற்படும் நச்சுத் தன்மை வாய்ந்த நோய் ஏற்படுவதை அறிய 605 இரத்த மாதிரிகள் சேகரிக்கப் பட்டு, பரிசோதனை செய்யப்பட்டன. ஆய்வு செய்வதற்காக 614 மாதிரி சிறுநீர் பரிசோதனை செய்யப்பட்டது.

முந்திரிக் கொட்டைகள் பதப்படுத்தப்படும் தொழில் உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் தொழில் ஆகையால் வல்லுநர் குழுவின் பரிந்துரைகளை இத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் உறுதியாக கடைபிடிக்கும்படி ஆணைகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன.

தொழிற்சாலை தொழிலாளர்களுக்கும் தொழிற்சாலை மேற்பார்வை அலுவலர்களுக்கும் தொழிற்சாலை உடல் நலக் கோட்பாடு, தொழில் சார்ந்த நோய்களிலிருந்து பாதுகாப்பு பற்றி பதினோறு வகுப்புகள் நடத்தி சொற்பொழிவுகள் நிகழ்த்தப் பட்டன. பொதுச் சுகாதாரத் துறை, மாநிலத் தொழிலாளர் நல காப்புறுதித் திட்ட அதிகாரிகளின் உடனுழைப்புடன் மருத்துவத் தலைமை அதிகாரியும் சுகாதாரக் கேடு, தொழில் சார்ந்த நோய்கள் ஆகியவை குறித்து ஆய்வுகள் நடத்த ஏற்பாடு செய்கிறார். பொதுச் சுகாதாரத் துறையில் பணிபுரியும் மருத்துவப் பணியாளர்கள், மருத்துவத் துறை பயிற்சியாளர்கள் பயிற்சித் திட்டத்திற்காக தொழிற்சாலை சுகாதாரப் பிரிவைப் பார்வையிடுகிறார்கள்.

தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் சான்றிதழ்கள் அளிக்கும் மருத்துவர்களின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக மருத்துவர்கள் மற்றும் அலுவலர்கள் அடங்கிய ஆறு மருத்துவப் பிரிவுகளை அமைக்க அரசு அனுமதி அளித்துள்ளது.

தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள், நிறுவனங்கள் சட்டம்.

1980 ஆம் ஆண்டில் இச்சட்டத்தின் கீழ் வரும் கடைகள் நிறுவனங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை, அவற்றில் வேலையில்

1981 ஏப்ரல் 21]

உள்ள நபர்களின் எண்ணிக்கை ஆகியவை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

இச்சட்டத்தின் கீழ்வரும் நிறுவனங்களின் எண்ணிக்கை.	..	2,86,420
வேலையில் உள்ள நபர்களின் எண்ணிக்கை	..	2,61,527

தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள், நிறுவனங்கள் சட்டத்தின் பல்வேறு விதித்துறைகளை செயல்படுத்துவதில், எல்லா நிறுவனங்களுக்கும் சென்று பார்வையிடுவது, தொடக்க அறிவிப்பினைக் கொடுத்து, அதன் வாயிலாக தொழிலாளர்களின் உரிமைகளைப்பற்றியும், நிர்வாகத்தினரின் கடமைகளைப்பற்றியும் கடைச் சொந்தக்காரர்களுக்கு எடுத்துரைத்து அறிவுறுத்தும் பணியை இத்துறை மேற்கொண்டுள்ளது. தொழிலதிபர்கள் தங்கள் நல்லெண்ணத்தை வெளிப்படுத்தி குறைபாடுகளைத் திருத்துவதில் கவனம் செலுத்துவார்களேயானால் அவர்கள் மீது மேல் நடவடிக்கை எடுப்பது கைவிடப்படுகிறது. விதிகளை மீறுகின்ற தொழிலதிபர்களுடைய நிறுவனங்களை அடிக்கடி சோதனை செய்து தொழிலதிபர்கள் தங்கள் குறைகளைத் திருத்திக் கொள்ளும் வரையில் அவர்கள் மீது அடுத்தடுத்து வழக்குகள் தொடரப்படும்.

1980 ஆம் ஆண்டில், இச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஆய்வாளர்கள் 3,47,649 தடவை முறையான ஆய்வுகளையும், 8,055 தடவை திடீர் ஆய்வுகளையும், 32,383 தடவை மறுமுறை ஆய்வுகளையும், 13,943 தடவை இரவு ஆய்வுகளையும், 3,584 தடவை சிறப்பு ஆய்வுகளையும் நடத்தினர். 1980 ஆம் ஆண்டு தொடக்கத்தில் 3,072 வழக்குகள் முடிவுறாத நிலையில் இருந்தன. 11,504 வழக்குகளுக்கு இவ்வாண்டு அனுமதி அளிக்கப்பட்டன. 14,576 வழக்குகளில் 10,457 வழக்குகள் (சுமார் 73 விழுக்காடு) தண்டனையில் முடிந்தன. 14 வழக்குகள் விடுதலையில் முடிந்தன. 59 வழக்குகளில் மன்னிப்பு அளிக்கப்பட்டன. 32 வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன. 10 வழக்குகள் நிறுத்தி வைக்கப்பட்டன. 1980 ஆம் ஆண்டில் அபராதத் தொகையாக ரூ. 3,89,635 வசூலிக்கப்பட்டது. இவ்வாண்டின் இறுதியில் 4,004 வழக்குகள் முடிவுறா நிலையில் இருந்தன.

பணியாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டதை எதிர்த்து இச்சட்டத்தின் 41 ஆம் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட

மேல் முறையீடுகள் முடிவு செய்யப்பட்டது பற்றி கீழ்க்காணும் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன:—

	1979.	1980.
(1)	(2)	(3)
ஆண்டு தொடக்கத்தில் முடிவுறா நிலையில் இருந்த மேல் முறையீடுகளின் எண்ணிக்கை.	223	168
இவ்வாண்டில் வரப்பெற்ற மேல் முறையீடுகளின் எண்ணிக்கை.	168	191
மேல் முறையீடுகளின் மொத்த எண்ணிக்கை.	391	359
இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட மேல் முறையீடுகளின் எண்ணிக்கை.	223	213
இவ்வாண்டு முடிவில் முடிவுறா நிலையில் இருந்த மேல் முறையீடுகளின் எண்ணிக்கை.	168	146

1980 ஆம் ஆண்டில் பொருட்காட்சிகள், திருவிழாக்கள் நீங்கலாக நிலையான விதிவிலக்கு ஒன்றும் தற்காலிக விதிவிலக்குகள் 3-ம் அரசு வழங்கியது. தொழிலாளர் நலத்துறை ஆணையாளர் பொருட்காட்சிகள் திருவிழாக்களுக்குரிய தற்காலிக விலக்கு உட்பட 24 தற்காலிக விதிவிலக்குகளை வழங்கியுள்ளார்.

தொழிலாளர் நல துணை ஆணையாளர் 113 இனங்களில் தற்காலிக விலக்குகளை அளித்துள்ளார். 37 இனங்களில் இச்சட்டம் செயல்படுவதைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்க அனுமதித்துள்ளார்.

இவ்வாண்டின் இறுதியில், இச்சட்டத்தின் 51 ஆம் பிரிவின் கீழ் ஏழு விண்ணப்பங்கள் வரப்பெற்று அவை முடிவுறாத நிலையில் உள்ளன.

சட்டத்தின் விதித்துறைகள், பெருங்களத்தூர், சிட்லப்பாக்கம் (சைதாப்பேட்டை வட்டம்), விக்கிரவாண்டி (விழுப்புரம் வட்டம்) ஆகிய இடங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

1981 ஏப்ரல் 21]

தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு உணவகங்கள் சட்டம்.

1981 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1 ஆம் நாளன்றுள்ளபடி 67,378 தொழிலாளர்களைக் கொண்ட 28,285 உணவகங்கள் இச்சட்டத்தின் கீழ் வருகின்றன. இவற்றில் 10,305 நிறுவனங்களில் தொழிலாளர்கள் இருந்தனர். 17,980 நிறுவனங்கள் தொழிலாளர்கள் இல்லாமல் இருந்தன.

1980 ஆம் ஆண்டில் பதிவு/புதுப்பித்தல்/மேல்வரி கட்டணமாக ரூ. 2,20,860·05 வசூலிக்கப்பட்டது.

இந்த ஆண்டில், ஆய்வாளர்கள், இச்சட்டத்தின் கீழ் 39,629 தடவை முறையான ஆய்வுகளையும், 748 தடவை திடீர் ஆய்வுகளையும் 993 தடவை விடுமுறை நாள் ஆய்வுகளையும், 389 தடவை சிறப்பு ஆய்வுகளையும், 429 தடவை இரவு ஆய்வுகளையும் நடத்தினர்.

1980 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், இச்சட்டத்தின் விதித்துறைகளையும், விதிகளையும் மீறியது குறித்த 789 குற்ற வழக்குகள் முடிவு செய்யப்படாமல் இருந்தன. இந்த ஆண்டில் 2,513 வழக்குகள் அனுமதிக்கப்பட்டன. அவற்றில் 2,261 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டது. 4 வழக்குகள் விடுதலையில் முடிந்தன. 24 வழக்குகளில் மன்னிப்பு அளிக்கப்பட்டது. ஒன்பது வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன. ஒரு வழக்கில் நடவடிக்கை நிறுத்தி வைக்கப்பட்டது. 1980 ஆம் ஆண்டில், 1,16,639 ரூபாய் அபராதத் தொகையாகப் பெறப்பட்டது. ஆண்டு இறுதியில், 1003 வழக்குகள் முடிவுறாமல் இருந்தன.

உணவகங்களில் தொழிலாளர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டதை அல்லது வெளியேற்றப்பட்டதை எதிர்த்து உணவகங்கள் சட்டத்தின், 19 ஆம் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட மேல்முறையீடுகளை, மேல்முறையீட்டு அதிகார மன்றம் முடிவுசெய்தது குறித்த விவரங்கள் வருமாறு:—

	1979.	1980.
(1)	(2)	(3)
ஆண்டின் தொடக்கத்தில் முடிவுறாத நிலையில் இருந்த மேல் முறையீடுகளின் எண்ணிக்கை.	43	32
இவ்வாண்டில் வரப்பெற்ற மேல் முறையீடுகளின் எண்ணிக்கை.	88	114

இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட மேல் முறையீடுகளின் எண்ணிக்கை.	99	124
ஆண்டின் இறுதியில் முடிவுறாத நிலையில் இருந்த மேல் முறையீடுகளின் எண்ணிக்கை.	32	22

இச்சட்டத்தின் 27(2)-ன் பிரிவின் கீழ், ஒரு விண்ணப்பம் வந்தது. இவ்வாண்டில் ஒரு உணவகத்திற்கு இச்சட்டத்தின் விதித்துறைகளிலிருந்து விதிவிலக்களிக்கப்பட்டது.

அறிக்கை ஆண்டில், உணவகச் சட்டத்தின் விதித்துறைகளை பேரூராட்சிகளுக்கும், பெருங்களத்தூர் (சைதாப்பேட்டை வட்டம்), சிட்லப்பாக்கம் (சைதாப்பேட்டை) வட்டம், விக்கிரவாண்டி (விழுப்புரம் வட்டம்) ஆகிய இடங்களுக்கும் நீட்டித்து அரசு அறிவிக்கைகள் வெளியிட்டது.

1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழிலாளர் (பணி நிலைமைகள்) சட்டம், தமிழ்நாடு 1968 ஆம் ஆண்டு பீடி சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) விதிகள்.

செயல்படுத்துதல்.

பீடி-சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டத்தின்படி, தொழிலாளர் நலத்துணை ஆணையாளர் (ஆய்வுகள்) தொடர்ந்து தமிழ்நாட்டில் தலைமை ஆய்வாளராகப் பணியாற்றி வருகிறார். 206 தொழிலாளர் நல உதவி ஆய்வாளர்கள் இச்சட்டத்தை செயல்படுத்தி வருகிறார்கள். வட்டாரத் தொழிலாளர் நலத்துணை ஆணையாளர்களும் அவரவர் அதிகார வரம்பின் கீழ் வரும் இடத்தில் ''ஆய்வாளர்களாக'', நியமிக்கப்பட்டுள்ளனர். 1966 ஆம் ஆண்டு பீடி-சுருட்டுத் தொழிலாளர் (பணி நிலைமைகள்) சட்டத்தின்படி தொழிலாளர் நல உதவி ஆய்வாளர் நேரடியாகச் சென்று ஆய்வுகளை நடத்துகிறார்கள்.

பதிவு செய்தல்.

தமிழ்நாட்டில் 1,397 தொழில் வளாகங்களைக் கொண்ட 328 வணிகக்குறி உரிமையாளர்கள் உள்ளனர். அறிக்கையாண்டில் இந்தத் தொழில் வளாகங்களில் 12,935 பணியாளர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர். சுமார் இரண்டு இலட்சம் பேர் வீடுகளிலிருந்தபடி பீடி தயாரிக்கும் வேலையில் ஈடுபட்டு வருகிறார்கள்.

1981 ஏப்ரல் 21]

1,397 தொழில் வளாகங்களில் 1,209 தொழில் வளாகங்கள் தங்களது உரிமங்களைப் புதுப்பித்துக் கொள்ள விண்ணப்பித்துள்ளன; எஞ்சிய 188 தொழில் வளாகங்கள் உரிமம் கோரி இன்னும் விண்ணப்பிக்கவில்லை. தவறு புரிந்தோர் மீது தண்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டில் உரிமக் கட்டண வகையில் ரூபாய் 38,145·50 வசூலிக்கப்பட்டுள்ளது.

ஆய்வுகள்:

இவ்வாண்டில் 2,690 தடவை முறையான ஆய்வுகளும், 48 தடவை விடுமுறை ஆய்வுகளும், 102 தடவை திடீர் ஆய்வுகளும், 15 தடவை சிறப்பு ஆய்வுகளும் ஆய்வாளர்களால் நடத்தப்பட்டன.

வழக்குத் தொடர்தல்:

1980 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், 70 வழக்குகள் நீதிமன்றத்தில் முடிவுறாத நிலையில் இருந்தன. பீடி-சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம், விதிகளை மீறியதற்காகத் தொழில் அதிபர்கள் மீது 252 வழக்குகள் தொடர அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த 252 வழக்குகளில் 150 வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றவாளிகள் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டு, தண்டனை வழங்கப்பட்டுள்ளது. ஒரு வழக்கில், குற்றம் சாட்டப்பட்டவர் விடுதலை செய்யப்பட்டார். 12 வழக்குகளில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் எச்சரித்து விடப்பட்டனர். ஆண்டின் இறுதியில் 89 வழக்குகள் முடிவுறாமல் நிலுவையில் இருந்தன. விதிக்கப்பட்ட மொத்த அபராதத் தொகை ரூபாய் 11,995 ஆகும்.

பீடித் தொழிலாளர் நலன்:

பீடி-சுருட்டு தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களின் நலன் கருதி, மத்திய அரசு, மேல்வரி (செஸ்) வசூலிப்பதுடன், அவர்களுடைய நலன் காக்கும் நடவடிக்கைகளை எடுப்பதற்காக ஓர் அமைப்பையும் ஏற்படுத்தி உள்ளது. அந்த அமைப்பின் மூலமும் தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளின் உடனுழைப்புடனும் கீழே கொடுக்கப்பட்டுள்ள தொழிலாளர் நலத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன:—

(1) 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 13 ஆம் நாளிலிருந்து மேலப்பாளையத்தில் (திருநெல்வேலி மாவட்டம்) பீடித் தொழிலாளர்களுக்கு சிகிச்சை அளிக்கும் நோக்கத்தில் ஒரு நிலையான நடமாடும் மருந்தகம் அமைக்க ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது.

(2) கோயம்புத்தூர் மாவட்டம், பெருந்துறையில் உள்ள இராமலிங்கம் காச நோய் மருத்துவ மனையில் பீடித்தொழி லாளர்களுக்காகவும் அவர்களைச் சார்ந்திருப்போர்களுக்காகவும் 10 படுக்கைகள் ஒதுக்கப்பட்டு வருகின்றன.

(3) பீடித் தொழிலாளர்களுக்கு பெருந்துறை (கோயம் புத்தூர் மாவட்டம்), பென்னத்தூர் (வடஆற்காடு மாவட்டம்), தாம்பரம் (செங்கற்பட்டு மாவட்டம்), திருச்சிராப்பள்ளி (திருச்சி மாவட்டம்), ஆசாரிப்பள்ளம் (கன்னியாகுமரி மாவட்டம்) ஆகிய இடங்களில் உள்ள மருத்துவ மனைகளில் ஒவ்வொன்றிலும் பீடித் தொழிலாளர்களுக்கு 10 படுக்கைகள் ஒதுக்குவதன மூலம் மருத்துவ வசதி அளிக்கப்படுகின்றது.

(4) 1980 ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள் 6 ஆம் நாளன்று வேலூருக்கு அருகாமையில் உள்ள சத்துவாச்சேரியில் வேலூர், தொழிலாளர் நல அதிகாரியின் தங்கும் இடத்தில் பீடித் தொழி லாளர்களுக்கும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கும் மருத்துவச் சிகிச்சை அளிக்க ஆங்கில முறை மருந்தகம் ஒன்று தொடங்கப் பட்டது.

(5) 1980 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 18 ஆம் நாளன்று நிலையான நடமாடும் ஆங்கில முறை மருந்தகம் ஒன்று திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தென்காசியில் தொடங்கப் பட்டது.

(6) 1980 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களிலிருந்து நிலையான நடமாடும் மருந்தகம் ஒன்று ஈரோட்டில் தொடங்கப்பட் டுள்ளது.

திருநெல்வேலியில் பீடித் தொழிலாளர்களுக்கென கட்டப்பட விருக்கும் மருத்துவ மனைக்கு இடத்தைத் தெரிவு செய்வதற்காக மத்திய அரசு ஒரு குழுவை நியமித்துள்ளது.

1976 ஆம் ஆண்டு பீடித் தொழிலாளர் நல நிதிச் சட்டத் தின்படி பீடித் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு மத்திய அரசு படிப்புதவித் தொகை வழங்குகிறது. 1979–80 ஆம் ஆண்டில், 1,026 மாணவர்களுக்கு ரூபாய் 50,930 படிப்பு உதவித் தொகை யாக வழங்கப்பட்டுள்ளது. 1980–81 ஆம் ஆண்டிற்கு படிப்புதவி

1981 ஏப்ரல் 21]

தொகை வழங்கக் கோரி வந்துள்ள விண்ணப்பங்கள் பெங்களூரில் உள்ள பீடித் தொழிலாளர்கள் நல ஆணையாளரால் பரிசீலிக்கப் பட்டு வருகின்றன.

1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டம்.

இவ்வாண்டில், தமிழ்நாட்டில், தொழிலாளர் நல துணை ஆணையாளர் (ஆய்வுகள்) 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டத்தின்படி தொடர்ந்து தலைமை ஆய்வாளராக இருந்து வருகிறார். இம்மாநிலத்தில் இச்சட்டமும் அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளும், 12 தொழிலாளர் நல ஆய்வாளர்களாலும், 28 தொழிலாளர் நலத் துணை ஆய்வாளர்களாலும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டத்தின்படி தொழிலாளர் நலத் துறை ஆய்வாளர்கள் நேரடியாகச் சென்று ஆய்வுகளை நடத்துகின்றனர். மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களில் 5 சதவீத நிறுவனங்களை தொழிலாளர் நல ஆய்வாளர்கள் சென்று பார்வையிடுகின்றனர்.

பதிவு.

1980 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் 1,543 பதிவு செய்யப் பட்ட மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் இருந்தன. 119 மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் புதிதாகப் பதிவு செய்யப்பட்டன. இதனால், பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை மொத்தம் 1,662 ஆக உயர்ந்தது. இந்த நிறுவனங்களில் 98 மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் இந்த ஆண்டு பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டன. பதிவு செய்யப்பட்ட மோட்டார் போக்குவரத்து நிறுவனத்தின் எண்ணிக்கை இந்த ஆண்டின் இறுதியில் 1,564 ஆக இருந்தது. இவ்வாண்டின் இறுதியில் பணியில் அமர்த்தப்பட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை 55,077 ஆக இருந்தது. அறிக்கை ஆண்டில் பதிவுக் கட்டண வகையில் ரூபாய் 4,406·50 வசூலாகியது.

அறிக்கை ஆண்டில் பதிவைப் புதுப்பித்தல் கட்டண வகையிலும் ரூபாய் 66,525·19 வசூலாகியது.

வழக்குத் தொடர்தல்.

1980 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் 129 வழக்குகள் முடிவடையாமல் இருந்தன. 444 வழக்குகளுக்கு அனுமதி வழங்கப்

பட்டது. அதனால் மொத்த வழக்குகளின் எண்ணிக்கை 573 ஆகும். இந்த 573 வழக்குகளில் 372 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டது. ஒரு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. இரு வழக்குகளில் மன்னிப்பு வழங்கப்பட்டது. ஒரு வழக்கு திரும்பப் பெறப்பட்டது. எஞ்சிய 197 வழக்குகள் ஆண்டு இறுதியில் முடிவடையாமல் இருந்தன. அபராதத் தொகையாக ரூபாய் 37,819 வசூலிக்கப்பட்டது.

ஆய்வுகள்.

அறிக்கையாண்டில், 3,652 தடவை முறையான ஆய்வுகளும், 26 தடவை விடுமுறை ஆய்வுகளும், 32 தடவை திடீர் ஆய்வுகளும், 283 தடவை சிறப்பு ஆய்வுகளும் ஆய்வாளர்களால் நடத்தப்பட்டன.

1955 ஆம் ஆண்டு உழைக்கும் பத்திரிகையாளர், ஏனைய செய்தித்தாள் பணியாளர்கள் (பணி நிலைமைகளும் பல்வேறு விதித்துறைகளும்) சட்டம்

இச்சட்டத்தின் கீழ் ''ஆய்வாளர்கள்'' என அறிவிக்கப்பட்ட 12 தொழிலாளர் நல ஆய்வாளர்கள், 28 தொழிலாளர் நலத் துணை ஆய்வாளர்கள் இச்சட்டத்தின் விதித்துறைகளை செயல்படுத்தி வருகின்றனர். 1980 ஆம் ஆண்டின் இறுதியில் 3,278 தொழிலாளர்களைப் பணிக்கமர்த்தி 45 நிறுவனங்கள் இச்சட்டத்தின் வரம்பிற்குள் இருந்தன.

1976 ஆம் ஆண்டு விற்பனை மேம்பாட்டுப் பணியாளர்கள் (பணிநிலைமைகள்) சட்டம்.

மருந்து தயாரிப்பு தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்குப் பொருந்துமாறு செய்யப்பட்டுள்ள இச்சட்டம், 1976 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 6 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது. தொழிலாளர் நல ஆணையர், தொழிலாளர் நலத் துணை ஆணையாளர் (ஆய்வுகள்), தொழிலாளர் நல வட்டாரத் துணை ஆணையாளர்கள், தொழிலாளர் நல ஆய்வாளர்கள், தொழிலாளர் நலத் துணை ஆய்வாளர்கள், தொழிலாளர் நல உதவி ஆய்வாளாகள் ஆகியோர் இந்தச் சட்டத்தின் 8-வது பிரிவின்கீழ் ''ஆய்வாளர்களாக'' அறிவிக்கப்பட்டுள்ளனர்.

1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப்படுத்தலும். நீக்குதலும்), சட்டம்.

தொழிலாளர் நல ஆணையாளர் அலுவலகத்தில் உள்ள தொழிலாளர் நல உதவி ஆணையாளர் (ஒப்பந்தத் தொழிலாளர்

கள்) 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப் படுத்தலும் நீக்கலும்) சட்டம் தொடர்புடைய பணியைக் கவனித்து வருகிறார்.

தொழிற்சாலை ஆய்வாளர்கள், தொழிலாளர் நல ஆய் வாளர்கள் முறையே தொழிற்சாலைகளையும், தொழிற்சாலை அல்லாத மற்ற நிறுவனங்களையும் பொறுத்த மட்டில் இச் சட்டத்தை செயல்படுத்தும்படி உத்திரவிடப்பட்டிருக்கிறார்கள்.

இச்சட்டத்தின்கீழ் 435 பேர் பிரதான தொழில் அதிபர்களா கவும், 1,314 பேர் ஒப்பந்தக்காரர்களாகவும், 1980 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டனர். மொத்தம் 762 தடவை சார்நிலை பணியாளர்களால் ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

வழக்குத் தொடர்தல்.

இச்சட்டத்தின் விதித்துறைகளை மீறியதற்காக அறிக்கை ஆண்டில் 24 நிர்வாகங்கள் மீது வழக்குகள் தொடரப்பட்டன. 17 வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றவாளிகளென தீர்ப்பளிக்கப்பட்டனர். இவ்வாண்டு ரூபாய் 645 அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டது. இவ்வாண்டின் இறுதியில் 7 வழக்குகள் நீதி மன்றங்களில் முடிவுறாமல் இருந்தன.

1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப்படுத்தலும் நீக்கலும்) சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள துணைக் குழுக்கள்.

பொறியியல் தொழிற்சாலை.

சென்னை நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் உள்ள பொறி யியல் தொழிற்சாலையில் கையாண்டு வரும் ஒப்பந்தத் தொழி லாளர்கள் முறையை ஒழிக்க தொழிலாளர் நல வேலை வாய்ப்புத் துறையில் 1977 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 28 ஆம் நாளிட்ட 769 ஆம் அரசாணையில் துணைக் குழு நியமிக்கப்பட்டது. அக் குழு கீழ்க்கண்டவாறு பரிந்துரைத்தது :—

(1) ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு அதிக அளவு ஊதிய விகிதங்கள் நிர்ணயித்தல்.

(2) பெரும் தொழிலதிபர்களால் பணியில் அமர்த்தப்பட் டிருக்கும் தொழிற்சாலைக் களப்பணியாளர்களுக்கு அளிக்கப்படும் ஊதியம் போன்று மற்றவர்களுக்கும் சம ஊதியம் அளித்தல்.

(3) உணவகத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களையும் தொழிற்சாலைத் தொழிலாளர்களாகக் கருதுதல்.

மேற்கூறப்பட்ட பரிந்துரைகளை அரசு பரிசீலித்து வருகிறது.

பொறியியல் தொழிற்சாலை:

இம்மாநிலத்தில் பொறியியல் தொழிற்சாலையில் உள்ள ஒப்பந்தத் தொழிலாளர்களின் நிலையையும், பணி நிலைமைகளையும் ஆராய தொழிலாளர் நலன்-வேலைவாய்ப்புத்துறையில் 1981 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 24 ஆம் நாளிட்ட 177 ஆம் அரசாணையில் அரசு துணைக் குழு ஒன்றை அமைத்தது.

சிமெண்ட், காகிதத் தொழிற்சாலைகள்:

தொழிற்சாலைகளுக்கு தொழிலாளர் நலன்-வேலைவாய்ப்புத் துறையில் 28—10—1977 ஆம் நாளிட்ட 769 ஆம் எண் அரசாணையில் துணைக்குழு அமைக்கப்பட்டது. காகிதத் தொழிற்சாலையைப் பொறுத்த மட்டில், ஏழு பிரிவுகளில் ஒப்பந்தத் தொழிலாளர் முறையினை ஒழிப்பதற்கு இத்துணைக் குழு பரிந்துரைத்தது. இவற்றை அரசு பரிசீலித்து வருகிறது.

சிமெண்ட் தொழிற்சாலைகளுக்காக அமைக்கப்பட்ட துணைக் குழுவின் பரிந்துரையின் பேரில், 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து சிமெண்ட் தொழிற்சாலையில் கீழ்க்காணும் பிரிவுகளில் ஒப்பந்தத் தொழிலாளர்கள் வேலைக்கமர்த்தப்படுவதை தடைசெய்து, தொழிலாளர் நலன்-வேலைவாய்ப்புத் துறையில் 12—2—1981 ஆம் நாளிட்ட 340 ஆம் எண். அரசாணையில் அரசு ஆணை பிறப்பித்தது :—

(1) கட்டும் பிரிவில் சிமெண்ட் உறையிடும் முறை.

(2) பைகளை அச்சிடும் முறை.

துணி நூல் தொழிற்சாலை:

இத்தொழிற்சாலைக்காக தொழிலாளர் நலன்-வேலைவாய்ப்புத் துறையில் 22—8—1978 ஆம் நாளிட்ட 937 ஆம் எண். அரசாணையில் துணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டது.

இக்குழுவின் பரிந்துரைகள் மாநில ஒப்பந்தத் தொழிலாளர் மாநில ஆலோசனைக் குழுவின் முன் பரிசீலனைக்கு வைக்கப்பட்டன.

1981 எப்ரல் 21]

இக்குழு இத்தொழிற்சாலையில் நிதிநிலையைக் கருத்திற் கொண்டு, துணைக்குழு பரிந்துரைத்தபடி ஒப்பந்த முறையில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள தொழிலாளர்களின் பணியை முறைப்படுத்த இயலும் வகையில் ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப்படுத்தலும், நீக்கலும்) சட்டத்தின் விதித்துறைகளையும் செயல்படுத்துவதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஆணையாளரை கேட்டுக்கொள்ளும்படி அரசுக்கு ஆலோசனை வழங்குவதென மாநில ஆலோசனைக்குழு ஏகமனதாக முடிவு செய்தது. அரசு பிறப்பித்த ஆணைகளுக்கிணங்க தொழிலாளர் நல ஆணையாளர், இத்தொழிற்சாலைகளில் ஒப்பந்தத் தொழிலாளர்களின் பணியை முறைப்படுத்தத்தக்க நடவடிக்கை எடுக்கும்படி சார்நிலை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

திருச்சிராப்பள்ளியிலுள்ள ''பெல்'' நிறுவனத்தின் துணைப் பிரிவுகளில் ஒப்பந்த முறையில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள தொழிலாளர்களின் நிலையை கண்டறிய ஒரு துணைக்குழு அமைக்க ஒப்பந்தத் தொழிலாளர் மாநில ஆலோசனைக் குழுவின் 4 ஆவது கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. அதன்படி தொழிலாளர் நலன்-வேலைவாய்ப்புத் துறையில் 23—2—1979 ஆம் நாளிட்ட 312 ஆம் எண். அரசாணையில் அரசு துணைக்குழுவை அமைத்தது. அத்துணைக்குழுவின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

1946 ஆம் ஆண்டு தொழில் வேலைவாய்ப்பு (நிலை ஆணைகள்) சட்டம்.

1980 ஆம் ஆண்டில் 53 தொழில் நிறுவனங்களின் நிலை ஆணைகள், சான்றளிக்கும் அதிகாரிகளால் சான்றளிக்கப்பட்டன. 18 இனங்களைப் பொறுத்த மட்டில் இந்த நிலை ஆணைகளில் திருத்தங்களும் இந்த ஆண்டில் சான்றளிக்கப்பட்டன. மேல் முறையீட்டு அதிகார மன்றங்களாக உள்ள தொழிலாளர் நல நீதி மன்றங்கள். இவ்வாண்டில், இச்சட்டத்தின் கீழ் ஐந்து மேல் முறையீடுகளை விசாரித்து தீர்ப்பு அளித்துள்ளது.

தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறைகள்) சட்டம்.

இச்சட்டத்தின் விதித்துறைகளை மீறியமைக்ககாக அறிக்கை ஆண்டில் தொழிற்சாலை நிர்வாகங்களுக்கெதிராக 3,952 வழக்குகள் தொடரப்பட்டன. 3,652 வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றவாளிகளெனத் தீர்ப்பளிக்கப்பட்டனர். மூன்று வழக்குகள் விடுதலையில் முடிந்தன. 40 வழக்குகளில் மன்னிப்பு வழங்கப்பட்டது. 15 வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன

இவ்வாண்டில் அபராதமாக ரூ. 1,06,863 வசூலிக்கப்பட்டது. ஆண்டின் இறுதியில், 1,446 வழக்குகள் நீதிமன்றங்களில் முடிவுறாமல் இருந்தன.

இச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஆய்வாளர்கள், இவ்வாண்டில், 1,68,993 தடவை ஆய்வுகளை நடத்தினர்.

1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர்கள் சட்டம்.

1980 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களிலிருந்து தொழிலாளர் நலத்துறை இணை ஆணையாளர்; மலைத் தோட்டத் தலைமை ஆய்வாளராகப் பணியாற்றுகிறார்.

1980 ஆம் ஆண்டு தொடக்கத்தில், 90,291 தொழிலாளர்களை வேலைக்கமர்த்தியுள்ள 419 மலைத் தோட்டங்கள் இருந்தன. 1980 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 1 ஆம் நாள் முதல் டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் முடிய 514 தொழிலாளர்களை வேலைக்கமர்த்தியிருந்த 2 மலைத் தோட்டங்கள் பதிவு செய்யப்பட்டன. 205 தொழிலாளர்களை வேலைக்கமர்த்தியிருந்த 2 மலைத் தோட்டங்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டன. ஆண்டின் இறுதியில், 419 மலைத் தோட்டங்கள் பட்டியலில் இடம் பெற்றிருந்தன. 1980 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் நிலவரப்படி தோராயமாக 90,600 தொழிலாளர்கள் பணியாற்றினர்.

இந்த ஆண்டுத் தொடக்கத்தில் 60 வழக்குகள் நீதிமன்றத்தில் முடிவு செய்யப்படாமல் இருந்தன. இந்த ஆண்டில் 141 வழக்குகளுக்கு அனுமதி வழங்கப்பட்டன. 113 வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டனர். அவர்களுக்கு ரூ. 16,380 அபராதம் விதிக்கப்பட்டது. அதாவது சராசரியாக வழக்கு ஒன்றுக்கு ரூ. 163 அபராதம் விதிக்கப்பட்டது. 10 வழக்குகள் விடுதலையில் முடிந்தன. மூன்று வழக்குகள் நீதிமன்றங்களிலிருந்து திருப்பிப் பெறப்பட்டன. 1980 ஆம் ஆண்டு டிசம்பர் இறுதியில் நீதி மன்றங்களில் 75 வழக்குகள் முடிவு செய்யப்படாமல் இருந்தன.

மலைத் தோட்டத் தலைமை ஆய்வாளரிடம் ஏற்பளிப்பை பெற்ற பின்னர், மலைத் தோட்ட அதிபர்கள், மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு இந்த ஆண்டும் கம்பளி ஆடைகளையும் கனப்பு அடுப்பிற்கு முன் போடப்படும் தரை விரிப்புகளையும் வழங்கினர்.

1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் இலவசமாக மருத்துவ

வசதி அளிக்க வகை செய்ய வேண்டியது. மலைத் தோட்ட அதிபர்களின் கடமைகளில் ஒன்றாகும் என்று வரையறுக்கப் பட்டுள்ளது. மலைத்தோட்டங்களிலுள்ள தோட்ட மருத்துவமனை களிலும் மருந்தகங்களிலும் உள்ள மருத்துவ அதிகாரிகள் 1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர்கள் சட்டத்தில் மருத்துவ வசதி தொடர்புடைய விதித்துறைகளின் கீழ் அறிக்கை ஆண்டில், 535 தடவை முறையான ஆய்வுகளையும் 5 தடவை திடீர் ஆய்வுகளையும் நடத்தினர்.

இச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட ஆய்வாளர்கள் அறிக்கை ஆண்டில் 1,402 தடவை முறையான ஆய்வுகளையும், 75 தடவை சிறப்பு ஆய்வுகளையும், 49 தடவை திடீர் ஆய்வுகளையும் ஞாயிற்றுக் கிழமைகளில் 123 தடவை ஆய்வுகளையும் நடத்தினர்.

ஊதியங்கள் குறித்து சட்டமியற்றுதல்.

1. 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம்.

1980 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் வேலைகளுக்கான குறைந்த அளவு ஊதியங்களை அரசு நிர்ணயித்துள்ளது/திருத்தி யமைத்துள்ளது :—

(அ) சலவை செய்யும் இடங்களிலும், சாயம் தோய்த்தல் இடங்களிலும் வேலை (கம்பளி, பட்டுத்துணி உட்பட) ;

(ஆ) எண்ணெய் ஆலைகளில் வேலை ;

(இ) அரிசி, மாவு பருப்பு ஆலைகளில் வேலை ;

(ஈ) கயிறு தயாரிக்கும் தொழிலில் வேலை ;

(உ) கடை, வர்த்தக நிறுவனங்களில் வேலை.

(ஊ) பாட் லீப் (Bought-leaf) தேயிலைத் தொழிற் சாலையில் வேலை.

அறிக்கையாண்டில், கீழ்க்காணும் வேலைகளுக்காக குறைந்த அளவு ஊதியங்கள் குறித்த ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளன :—

(அ) காப்பிக்கொட்டை பதனிடும் தொழிலில் வேலை ;

(ஆ) தங்க நகைகள் செய்யும் தொழிலில் வேலை;

(இ) வெட்டுமரத் தொழிலில் வேலை ;

(ஈ) வெளுத்தல், சாயமிடுதல் தொழிலில் வேலை ;

(உ) திரைப்படத் தொழிலில் வேலை.

கீழ்க்காணும் தொழில்கள் 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளன;

(அ) சேரப்பு தயாரிக்கும் தொழிலில் வேலை ;

(ஆ) வனத்தில் வேலை.

இச்சட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்டுள்ள ஆய்வு அதிகாரிகள் இவ்வாண்டில் 49,635 தடவை ஆய்வுகள் நடத்தியுள்ளனர். இச்சட்டத்தையும் விதிகளையும் மீறியமைக்காகத் தொடரப்பட்ட வழக்குகளின் விபரம் வருமாறு :—

(1)	ஆண்டின் தொடக்கத்தில் நீதிமன்றங்களில் விசாரணையில் இருந்த வழக்குகள்.	393
(2)	இவ்வாண்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள்	1,174
(3)	தண்டனை வழங்கப்பட்டு முடிந்த வழக்குகள்	1,140
(4)	விடுதலையில் முடிந்த வழக்குகள் ..	3
(5)	திரும்பப் பெறப்பட்ட வழக்குகள் ..	2
(6)	மன்னிப்பு அளிக்கப்பட்ட வழக்குகள் ..	10
(7)	ஆண்டின் இறுதியில் விசாரணையிலிருந்த வழக்குகள்	412
(8)	அபராதமாக வசூலிக்கப்பட்ட தொகை	ரூ. 43,450

தொழிலாளர் நீதிமன்றங்களில் தலைமை தாங்கும் அதிகாரிகள் 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் ''அதிகாரமன்றத்தினராக'' அறிவிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இவ்வாண்டில் குறைந்த அளவு ஊதியம் கொடுக்கபடாதது பற்றித் தாக்கல் செய்த 3 கோரிக்கை மனுக்களை விசாரித்துத் தீர்ப்பு அளித்தனர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1981 ஏப்ரல் 21]

கிராமப்புற மக்களில் சுமார் 80 சதவீதத்தினர் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருப்பதால், வேளாண்மையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நலனைக் காக்கவேண்டி 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தில் அவர்களுடைய ஊதியத்தை திருத்தியமைக்க அரசு தனி நடவடிக்கை எடுத்துள்ளது. மாவட்டங்களில், வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான குறைந்த அளவு ஊதியங்களின் சட்டம் வருவாய்த்துறை அதிகாரிகளால் நிருவகிக்கப்படுகிறது. சுமார் 1,097 பிர்கா வருவாய் ஆய்வாளர்களிடம், அவரவர்களின் பிர்காக்களில் இச்சட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர், கிராம வளர்ச்சி அதிகாரிகள், வட்டாட்சியர்கள், துணைவட்டாட்சியர்கள் கண்காணிப்பில் உள்ளனர். குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் 19 (1) பிரிவின்படி எல்லா வருவாய்த்துறை அதிகாரிகளும் ''ஆய்வாளர்கள்'' என அறிவிக்கப்பட்டுள்ளனர். ஊதியம் குறைத்துக் கொடுப்பவர்கள் மீது அவர்கள் ''20 அம்சத் திட்டத்தின்'' படி நடவடிக்கை எடுக்கின்றனர். வேளாண்மை, வேளாண்மைச் சார்ந்த துணைப்பணிகளில் குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம் செயல்படுத்தப்படும் விதத்தினை அரசு பரிசீலனை செய்து பின் மத்திய அரசுக்குத் தகவலும் அனுப்புகிறது.

1936 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டம் :

தொழிற்சாலைகளைப் பொறுத்தவரை, தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகம் ஏனைய நிறுவனங்களைப் பொறுத்தவரை தொழிலாளர் நல ஆய்வாளர் அலுவலகம் இச்சட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றன.

இச்சட்டம் விதிகள் ஆகியவற்றை மீறியதற்காகத் தொழில் அதிபர்கள் மீது 1,025 வழக்குகள் தொடர அனுமதி வழங்கப்பட்டது. அவற்றில் 939 வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றவாளிகளெனத் தீர்ப்பளிக்கப்பட்டனர். (ஆண்டு தொடக்கத்தில் விசாரணை முடிவாகாமல் இருந்த வழக்குகளும் இதில் அடங்கும்) ஐந்து வழக்குகள் விடுதலையில் முடிந்தன. 7 வழக்குகளில் மன்னிப்பு வழங்கப்பட்டன. இரு வழக்குகள் திரும்பப்பெறப்பட்டன. 474 வழக்குகளில் விசாரணை முடிவாகாமல் உள்ளன. ரூ. 32,880.00 அபராதமாக வசூலிக்கப்பட்டது.

1936 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் கீழ் ''அதிகாரிகள்'' என்று அறிவிக்கப்பட்டுள்ள கூடுதல் ஆணையாளர்கள் (தொழிலாளர் இழப்பீடு) 1979–80 ஆம் ஆண்டில்

விசாரித்து தீர்ப்பளித்த வழக்குகளின் விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

	1979	1980
இவ்வாண்டு ஆரம்பத்தில் விசாரணையிலிருந்த உரிமைக் கோரிக்கைகள்..	320	204
இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட உரிமைக் கோரிக்கைகள் ..	404	421
இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட கோரிக்கைகள்	520	465
இவ்வாண்டு இறுதியில் முடிவுசெய்யப் படாமலிருந்த கோரிக்கைகள். ..	204	216

இச்சட்டத்தின் கீழ் வரும் தொழில் நிறுவனங்களில் ஆய்வாளர்கள் 48,464 தடவை ஆய்வுகளை நடத்தினர்.

IV. சமூகப் பாதுகாப்பு.

1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி பலவகை விதித்துறைகள் சட்டம்.

சட்டத்தை நீட்டித்தல் :

1980 ஆம் ஆண்டில் பின்வரும் ஆறு புதிய தொழில்கள் இச்சட்டத்தின் வரம்பிற்குள் கொண்டுவரப்பட்டன:

(1) வைரம் வெட்டி எடுக்கும் தொழில் ;

(2) வெங்கச் செங்கல் (Quartzite Mine) ;

(3) உள்நாட்டு நீர் வழிப் போக்குவரத்து நிருவனங்கள் ;

(4) கட்டிடம் கட்டுமானப் பணி தொழில்கள் ;

(5) கடுக்காய் பவுடர் தயாரித்தல் (Myrobalan Extract Powder).

(6) செங்கல் தொழில்கள்.

1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி-பல்வகை விதித்துறைகள் சட்டத்தின் கீழ் வரும் தொழிற்சாலைகள் நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை 1979 ஆம் ஆண்டில் 157 ஆகும். 1980 ஆம் ஆண்டில் 163 ஆகும்.

இச்சட்டத்தின் கீழ்வரும் நிறுவனங்கள்/சந்தாதாரர்கள் :

30-9-1980 ஆம் நாள் நிலவரப்படி இச்சட்டத்தின் கீழ் வரும் தொழில் நிறுவனங்கள், தொழிலாளர்களின் எண்ணிக்கை சந்தா செலுத்துவோர்களின் எண்ணிக்கை விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

	விலக்களிக்கப் பட்டது.	விலக்களிக்கப் படாதது.
(1)	(2)	(3)
தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை	420	11,666
தொழிலாளர்களின் எண்ணிக்கை	3,24,648	10,57,224
சந்தா செலுத்துவோரின் எண்ணிக்கை	3,07,802	9,64,472

தொழிலாளர் குடும்ப நல ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் வரும் சந்தா தாரர்கள் :

சந்தாதாரர்களின் எண்ணிக்கை ..	1,95,480	6,56,721

1976 ஆம் ஆண்டு தொழிலாளர்களின் வைப்பீட்டுத் தொகை இணைந்த காப்புறுதித் திட்டத்தின் கீழ்வரும் சந்தாதாரர்களின் எண்ணிக்கை.

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிக்குச் சந்தா செலுத்தும் அனைத்து சந்தாதாரர்களும் 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி-பல்வகை விதித்துறைகள் சட்டத்திலிருந்து விலக்களிக்கப்பட்ட தொழிற்சாலை தொழிலாளர்களின் வருங்கால வைப்பு நிதிக்குச் சந்தா செலுத்துபவர்களும், தொழிலாளர்களின் வைப்பீட்டுத் தொகை இணைந்த காப்புறுதித் திட்டத்தின் சந்தாதாரர்கள் ஆவர். அவர்கள் இத்திட்டத்தின் பயன்களைப் பெறத் தகுதி உடையவராவர்.

இச்சட்டத்தின் பல்வேறு விதித்துறைகளின் கீழ் கேட்பு/வசூல்/நிலுவைகள் குறித்த விவரம் வருமாறு :—

நிலுவைத் தொகைகளின் தன்மை.	30-9-80 ஆம் நாள் நிலவரப்படி நிலுவை.	1-1-1980 முதல் 30-9-1980 வரை வசூல்.
(1)	(2)	(3)
	(ரூபாய் இலட்சத்தில்)	
தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிக்குச் செலுத்திய சந்தாத் தொகை	143.98	3,146.05

குடும்ப நல ஒய்வூதிய நிதிக்குச் செலுத்திய சந்தாத் தொகை.	6.78	165.04
தொழிலாளர்களின் வைப்பீட்டுத் தொகை இணைந்த காப்புறுதித் திட்டத்திற்குச் செலுத்திய சந்தாத் தொகை	7.95	125.44

வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளை முடித்து இறுதியாகப் பணம் கொடுப்பது :

1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் வரை 35,452 கோரிக்கைகள் தொடர்பாக வருங்கால வைப்பு நிதி கணக்குகள் முடிவு செய்யப்பட்டு ரூபாய் 959.26 இலட்சம் வழங்கப்பட்டது.

1980 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் நாள் நிலவரப்படி பெறப்பட்ட முடிவு செய்யப்பட்ட திருப்பப்பட்ட கோரிக்கைகள் குறித்த விவரத்தை பின்வரும் விவர அட்டவணையில் காண லாம் :—

1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி திட்டம்:

1.	1980-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் நாள் நிலவரப்படி நிலுவையாக இருந்த கோரிக்கைகள்.	6,747
2.	1980 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1 ஆம் நாள் முதல் 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் வரை பெறப்பட்ட கோரிக்கைகள் எண்ணிக்கை.	40,211
3.	முடிக்கப்படவேண்டிய கோரிக்கைகள் ..	46,958
4.	1980 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1 ஆம் நாள் முதல் 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ஆம் நாள் வரை முடிவு செய்யப் பட்ட கோரிக்கைகள்.	35,452
5.	தவறுகளை திருத்துவதற்காகத் திருப்பி அனுப்பிவைக்கப்பட்ட கோரிக்கைகள்.	6,058
6.	1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் நிலவரப்படி நிலுவையாக இருந்த கோரிக்கைகள்.	5,448

1981 ஏப்ரல் 21]

இறுதியாகத் தீர்த்து வைக்கப்பட்ட கோரிக்கைகளின் விபரம் வருமாறு :—

இறுதியாகத் தீர்த்து வைக்கப்பட்ட கோரிக்கைகளின் வகைப்பாடு.	இறுதியாகத் தீர்த்து வைக்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை.	கொடுக்கப்பட்ட தொகை.
(1)	(2)	(3)
		(ரூபாய் இலட்சத்தில்)
1. இறப்பு	2,249	85·62
2. வயது முதிர்வு பெற்றமை	5,549	453·44
3. நிரந்தரமாக இயலாமையுறுதல்	723	44·32
4. பதவி விலகல்	22,162	291 23
3. ஆட்குறைப்பு	4,611	83·36
6. இடம் பெயர்தல்	11	0·51
7. பல்வகை	147	0·78
மொத்தம்	35,452	959·26

1971-ஆம் ஆண்டு தொழிலாளர் குடும்பநல ஓய்வூதியத் திட்டம்:

1. 1980 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1 ஆம் நாள் நிலவரப்படி முடிக்கப்பெறாமல் இருந்த கோரிக்கைகள். — 4,446

2. 1980 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1 ஆம் நாள் முதல் 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் நாள் வரை பெறப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை. — 27,010

3. முடிக்கப்பட வேண்டிய கோரிக்கைகள் .. — 31,456

128-82—32

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1981 ஏப்ரல் 21

4. 1980 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1 ஆம் நாள் முதல் 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் நாள் வரை முடிவு செய்யப்பட்ட கோரிக்கைகள். 19,084*

5. தவறுகளை திருத்தும்படி திருப்பி அனுப்பி வைக்கப்பட்ட கோரிக்கைகள். 8,036

6. 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ஆம் நாள் நிலவரப்படி நிலுவையாக இருந்த கோரிக்கைகள். 4,336

* 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் நிலவரப்படி இத்திட்டத்தின் கீழ் 540 கோரிக்கைகளின் பேரில் ரூபாய் 26·12 இலட்சம் மாதாந்திர ஓய்வூதியமாக வழங்கப் பட்டுள்ளது.

1976-ஆம் ஆண்டு தொழிலாளர்களின் வைப்பீடுத் தொகை இணைந்த காப்புறுதித் திட்டம் :

1. முடிக்கப்படவேண்டிய கோரிக்கைகள் .. 2,585*

2. 1980 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1 ஆம் நாள் முதல் 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் வரை முடிக்கப் பெற்ற கோரிக்கைகள். 974

3. தவறுகளை திருத்துவதற்காகத் திருப்பி அனுப்பப்பட்ட கோரிக்கைகள். 1,112

4. 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் வரை நிலுவையாக இருந்த கோரிக்கைகள். 499

* சம்பந்தப்பட்ட தொகை ரூபாய் 43·66 இலட்சம்.

இத்திட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்ட முன் பணம் :

1980 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1 ஆம் நாள் முதல் 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் வரை தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிச் சட்டத்தின் சந்தாதாரர் களுக்கு அவர்களுடைய வைப்பு நிதிக் கணக்கில் இருந்து

கீழ்க்கண்ட இனங்களுக்கு முன் பணம் (திருப்பிச் செலுத்தத்தக்க தல்ல) கொடுக்கப்பட்டது :—

	முன் பணம் கொடுக்கப்பட்ட இனங்களின் எண்ணிக்கை.	கொடுக்கப் பட்ட தொகை.
(1)	(2)	(3) (ரூபாய் இலட்சத்தில்)
குறைந்த வருவாய் தொகுதியின ருக்கான வீடு கட்டும் திட்டம்.	2,729	77.75
15 நாட்களுக்கு மேல்பட்டு கத வடைப்பு செய்யப்பட்ட அல் லது மூடப்பட்ட நிறுவனங்களில் வேலை செய்யும் தொழிலாளர் கள்.	1,444	5·64
சந்தாதாரர்கள் / அவர்களது குடும்பத்தினருக்கு மருத்துவச் செலவு.	247	2 32
மகன், மகள் தன்னைச் சார்ந் திருக்கும் சகோதரன், சகோ தரி திருமணம் / சந்தாதாரர் குழந்தைகளின் மெட்ரிகுலே ஷன் படிப்பிற்கு மேற்பட்ட படிப்பு.	3,905	69 07
எதிர்பாராத நில நடுக்கம், வெள் ளம் போன்ற நிலைமைகள்.	30,282	116·[illegible]2
ஆயுள் ஈட்டுறுதி பாலிசிகளுக்குப் பணம் செலுத்துதல்.	16,016	22·26

பாக்கியாக உள்ள மொத்தத் தொகையில் 90 சதவீதம் துணி நூல் தொழிற்சாலைகளிடம் இருந்து வரவேண்டியுள்ளது. பாக்கித் தொகை வசூலிக்க முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கோயம்புத்தூரில் உள்ள துணை வட்டார அலுவலகத்துடன் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்கள் அடங்கிய பகுதிக்கு மதுரையில் மேலும் ஒரு துணை வட்டார அலுவலகம் 1980 இல் அமைக்கப்பட்டது. இப்பகுதிகளிலுள்ள சந்தாதாரர்களின் தேவையை நிறைவு செய்யும் நோக்கத்துடன் இது அமைக்கப்பட்டது.

தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டம் :—

1948 ஆம் ஆண்டு தொழிலாளர் நலக் காப்புறுதிச் சட்டத்தின்படி தமிழ்நாட்டில் 1955 ஆம் ஆண்டு சனவரித் திங்களிலிருந்து தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டம் செயல்படுத்தப் படுகிறது. தன்னாட்சி உரிமை பெற்ற தொழிலாளர் நலக் காப்புறுதிக் கழகம் இத்திட்டத்தை நிர்வகிக்கிறது. இக்கழகம் சமூகப் பாதுகாப்பு மத்திய அமைச்சகத்தின் கீழ் நிர்வாகப் பொறுப்பில் உள்ளது. இத்திட்டத்திற்குத் தொழிலாளர், தொழிலதிபர் ஆகியோரிடம் இருந்து தொழிலாளர் நலக் காப்புறுதிக் கழகத்தால் வசூலிக்கப்படும் சந்தா தொகையே வருவாயாகும். இத்திட்டம் தற்போது தருமபுரி, நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக மற்றெல்லா மாவட்டங்களிலும் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் வரும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 4,50,000. இத் திட்டம் மின் விசையைப் பயன்படுத்தி இயங்குவனவற்றில் 10 பேர்களும் அதற்கு மேலும் பணிபுரிகின்ற தொழிற்சாலைகளுக்கும் மின் விசையைப் பயன்படுத்தாதவற்றில் 20 பேர்களும் அதற்கு மேலும் பணிபுரின்ற தொழிற்சாலைகளுக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூபாய் 1,000-க்கு மேற்படாமல் ஊதியம் பெறுகின்ற தொழிலாளர்களுக்கும் பொருந்தும். இத்திட்டத்தின் கீழ் பின்வரும் உதவிகள் அளிக்கப்படுகின்றன:—

1. மருத்துவ உதவி (மருத்துவப் பொருள் வடிவில்).
2. நோய் கால உதவி (பணமாக).
3. பேறுகால உதவி (பணமாக).
4. இயலாமையுற்றோருக்கு உதவி (பணமாக).
5. சார்ந்துள்ளவர்கள் நல உதவி (பணமாக).
6. இறுதிச் சடங்குகளுக்கான செலவுத் தொகை (பணமாக).

மேற் கூறப்பட்ட உதவித் திட்டங்களில் முதலாவது இனம் தவிர, ஏனைய பணமாகக் கொடுக்கப்படும் இவ்வைந்து திட்டங்களையும், தொழிலாளர் நலக் காப்புறுதிக் கழகம், மாநிலம் முழுவதும் உள்ள வட்டார அலுவலகங்கள் மூலம் நேரடியாக நிர்வகித்து வருகிறது. மருத்துவ உதவியளிக்கும் திட்டத்தை

நிர்வகிக்கும் பொறுப்பு மாநில அரசைச் சார்ந்ததாகும். மருத்துவ உதவியளிக்கும் திட்டத்தின் கீழ் மருத்துவச் செலவு 1 : 7 என்ற விகிதத்தில் முறையே மாநில அரசும் தொழிலாளர் நலக் காப்புறுதிக் கழகமும் பகிர்ந்து கொள்கின்றன. ஆயினும் தொழிலாளர் நலக் காப்புறுதிக் கழகம் இவ்வாறு ஓர் ஆண்டுக்குப் பகிர்ந்து கொள்ளத்தக்க செலவிற்கு உச்சவரம்பை வரையறுத்து உள்ளது.

1980 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து செலவுத் தொகை கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது:—

1. விரிவாக்கப்பட்ட மருத்துவச் சிகிச்சை.	ஒரு தொழிலாளியின் குடும்பத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் 85.
2. முழு மருத்துவச் சிகிச்சை	ஒரு தொழிலாளியின் குடும்பத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் 120.

1979 ஆம் ஆண்டு மே மாதம் முதல் தேதியிலிருந்து இம் மாநிலத்தில் அமுலாக்கப்பட்ட எல்லா இடங்களில் உள்ள காப்புறுதி செய்து கொண்ட தொழிலாளர்களின் குடும்பங்கள் அனைத்திற்கும் முழு மருத்துவ வசதிகள் கிடைக்குமாறு செய்யப்பட்டு உள்ளது.

இது தவிர, மருந்துகள், மருத்துவ வசதிக்காகும் மற்ற செலவு வகையில் ஒரு தொழிலாளிக்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் 25-க்கு அதிகமாகவும் ரூபாய் 50-க்கு மிகாமலும் செலவுத் தொகை அனுமதிக்கப்படும். இது மேற்படி உச்சவரம்பில் அடங்காது. இச்செலவையும் மாநில அரசும், புதுடெல்லி தொழிலாளர் நலக்காப்புறுதிக் கழகமும் ஒப்புக்கொண்ட விகிதத்தில் பகிர்ந்து கொள்ளும்.

மேலும், இம்மாநிலத்தில் தொழிலாளர் நலக்காப்புறுதிக் கழகத்திற்குச் சொந்தமான கட்டிடங்களுக்கான வாடகைச் செலவு 1980-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாளிலிருந்து 1 : 7 என்ற அதே விகிதாச்சாரத்தில் பகிர்ந்து கொள்ளப்படும். இது மேற்படி உச்சவரம்பில் அடங்காது.

இந்த மருத்துவச் செலவு அனைத்தும் முதலில் மாநில அரசே ஏற்றுக் கொள்கிறது. பின்னர், இந்தச் செலவு தமிழ்நாடு மாநிலக் கணக்குத் துறைத் தலைவர்-1, கொடுக்கும் சான்றிதழின் பேரில்தொழிலாளர் நலக் காப்புறுதிக் கழகத்திடம் மீண்டும் பெறப்படுகிறது.

தற்போது சென்னையிலுள்ள அயனாவரம், கலைஞர் கருணாநிதி நகர், மதுரை, கோயம்புத்தூர், வேலூர் ஆகிய ஐந்து இடங்களில் தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவ மனைகள் உள்ளன. தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் நிலையான 107 மருந்தகங்களும், ஒன்பது நடமாடும் மருந்தகங்களும், மூன்று பயன்பாட்டு மருந்தகங்களும், இரண்டு பகுதி நேர மருந்தகங்களும் செயல்பட்டு வருகின்றன.

ஐந்து தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவமனைகளில் உள்ள படுக்கையின் எண்ணிக்கை வருமாறு :—

தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவ மனை, சென்னை.	625
தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவ மனை, மதுரை.	202
தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவ மனை, கோயம்புத்தூர்.	500
தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவ மனை, கலைஞர் கருணாநிதி நகர், சென்னை.	206
தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவ மனை, வேலூர்.	50

கீழ்க்காணும் இடங்களில் தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் மருந்தகங்களை ஆரம்பிக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது:—

1. சிவகாசி சுற்றுப்புறப் பகுதி.
2. குமாரபாளையம்.
3. திருவரம்பூர், தூவக்குடி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
4. கொடுங்கையூர்.

தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் கீழ்க்காணும் இடங்களையும் கொண்டு வருவது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது:—

1. ஆறுமுகனேரி.
2. சேலம் சுற்றுப்புறம்.
3. கன்னியாகுமரி சுற்றுப்புறம்.

1981 ஏப்ரல் 21]

கலைஞர் கருணாநிதி நகரில் உள்ள தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவ மனையில் உள்ள 206 படுக்கைகளின் எண்ணிக்கையை 400 ஆக உயர்த்தவும், கோயம்புத்தூரில் உள்ள தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவ மனையில் தீவிர இதய மருத்துவச் சிகிச்சை (I.C.C. unit) பிரிவு ஒன்றை ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் இருந்துவருகின்றன. ஐந்து தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவ மனைகளும், காப்புறுதி நலக் கழகத்திற்குச் சொந்தமான கட்டிடத்தில் இயங்கி வருகின்றன. தொழிலாளர் நல காப்புறுதி திட்டத்தின் கீழ் இயங்கும் நிலையான 107 மருந்தகங்களில் 45 தொழிலாளர் நல காப்புறுதிக் கழகத்திற்குச் சொந்தமான கட்டிடத்திலும், மீத முள்ளவை தனியார் வாடகைக் கட்டிடங்களிலும் இயங்கி வருகின்றன. தாம்பரத்தில் உள்ள தொழிலாளர் நலக் காப்புறுதி மருந்தகம் 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29 ஆம் நாளிலிருந்து புதிய கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

இரு மருத்துவர்கள், அதற்கு மேற்பட்டவர்களுடன், வாடகை கட்டிடங்களில் செயல்பட்டு வரும் 45 தொழிலாளர் நலக் காப்புறுதி மருந்தகங்களுக்குச் சொந்தமாக கட்டிடம் கட்ட தொழிலாளர் நலக் காப்புறுதிக் கழகம் ஒப்புக் கொண்டுள்ளது. தனியார் வாடகைக் கட்டிடங்களில் அமைந்துள்ள இந்த 45 மருந்தகங்களுக்கு கட்டிடம் கட்ட நிலத்தை அரசு வசம் எடுத்துக்கொள்வதற்கான செயற்குறிப்புகள் பல்வேறு நிலைகளில் பரிசீலிக்கப் பட்டுவருகின்றன.

சந்தா வசூல் :

1980–81 ஆம் ஆண்டு (1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் வரை) தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் ரூபாய் 7,40,57,761.38 சந்தாவாக வசூலிக்கப்பட்டது.

பண உதவி :

காப்புறுதி செய்து கொண்டவர்களுக்கு 1980–81 ஆம் ஆண்டில் (1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் வரை) ரூபாய் 4,19,82,145.87 பணம் உதவியாகக் கொடுக்கப் பட்டது. பல்வேறு தொழிலதிபர்களிடம் இருந்து சந்தா தொகையாக வரவேண்டிய ரூபாய் 30,14,395.30-ஐ வசூலிக்க வரிவசூல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1980 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1 ஆம் நாள் முதல் 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் வரை

சந்தாத் தொகையை வசூலிக்க கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன:—

சந்தா தொகை அட்டையை கொடுக்காதவர்களின் மேல் தொடரப்பட்ட வழக்குகள்.	66
தண்டிக்கப்பட்டவை	38
தண்டிக்கப்பட்ட வகையில் அபராதமாக வசூலிக்கப்பட்ட ரூபாய்.	4,280

1923 ஆம் ஆண்டு தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம்:

1923 ஆம் ஆண்டு தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம் கீழ்க்கண்ட சமயங்களில் இழப்பீட்டுத் தொகை வழங்க வகை செய்கிறது :—

(அ) தொழிற்சாலைகளில் வேலை காரணமாகவும் வேலை செய்யும் போது ஏற்படுகின்ற விபத்துக்கள்.

(ஆ) மரணத்தை உண்டாக்குகின்ற அல்லது பணியாற்ற இயலாவண்ணம் செய்துவிடுகிற தொழில் சார்ந்த சில நோய்கள், தொழிற்சாலைகள், சுரங்கங்கள், மலைத் தோட்டங்கள், போக்குவரத்துக் கட்டுமான பணிகள், இரயில்வே, அபாயம் விளைவிக்கிற சில குறிப்பிட்ட தொழில்கள் ஆகியவற்றில் பணி புரிகின்ற தொழிலாளர்களுக்கு (தொழிலதிபரின் வாணிபம் அல்லது தொழிலுக்கு அன்றி வேறு விதத்தில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள நாட்கூலி பெறும் தொழிலாளர்கள் நீங்கலாக) இது பொருந்தும்.

1979–80 ஆம் ஆண்டுகளில் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட, தீர்த்துவைக்கப்பட்ட வழக்குகள் பற்றிய புள்ளிவிவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

	1979	1980
(1)	(2)	(3)
ஆண்டுத் தொடக்கத்தில் நிலுவையாக இருந்த வழக்குகளின் எண்ணிக்கை.	589	449
	1979	1980
இவ்வாண்டில் பெறப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை.	855	798

தீர்த்துவைக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை.	995	908
ஆண்டு இறுதியில் நிலுவையாக இருந்த வழக்குகளின் எண்ணிக்கை.	449	339

தொழிற்சாலை விபத்துக்கள் துயர் துடைப்பு நிதி :

ஆண்டொன்றிற்கு 15,000 ரூபாய் தொடர் மானியத்துடன் அரசால் இந்நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. கல் உடைத்தல், வெடி வைத்துத் தகர்த்தல், கிணறு தோண்டுதல் அல்லது பிற தொழில்களில் பணிபுரியும்போது காயமேற்பட்டு அதனால் என்றுமே பணியாற்ற இயலாமற்போன தொழிலாளர்களுக்கு அல்லது மரணமடைந்த தொழிலாளர்களை நம்பியிருப்பவர்களுக்கு இந்நிதியிலிருந்து உதவியளிக்கப்படும். 1923 ஆம் ஆண்டு தொழிலாளர்கள் இழப்பீட்டுச் சட்டத்தின்கீழ் இழப்பீடு வழங்குவதற்கு தொழிலதிபர்களிடம் நிதி வசதி இல்லாதிருந்தால் அல்லது வேறு காரணங்களை முன்னிட்டு தொழிலாளர்கள் அல்லது அவர்களைச் சார்ந்துள்ளோர் இழப்பீட்டுத் தொகை பெற இயலாது போனால் இந்நிதியிலிருந்து துயர் தணிப்பு உதவித் தொகை அளிக்கப்படும். இழப்பீடு வழங்கப் போதுமான நிதி வசதி இல்லாத சிறிய ஒப்பந்தக்காரர்களிடம் பணிபுரியும் தொழிலாளர்கள் விபத்தில் மரணமடைந்தால் அல்லது காயமடைந்தால் அவர்களும் இந்நிதியிலிருந்து உதவித் தொகை பெறுவர். 1979 ஆம் ஆண்டில் இரண்டு பேருக்கு ரூபாய் 3,000 துயர் துடைப்பு நிதியாகக் கொடுக்கப்பட்டது. 1980 ஆம் ஆண்டு ஆறு தொழிலாளர்களுக்கு 5,750 ரூபாய் துயர் துடைப்பு நிதியாகக் கொடுக்கப்பட்டது.

1972 ஆம் ஆண்டு பணிக்கொடை வழங்கல் சட்டம் :

இச்சட்டத்தின்கீழ் கட்டுப்பாட்டு அதிகாரிகளாலும், மேல் முறையீட்டு அதிகாரிகளாலும் 1979, 1980 ஆம் ஆண்டுகளில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

	1979	1980
கட்டுப்பாட்டு அதிகாரிகள்	1,413	1,272
மேல்முறையீட்டு அதிகாரிகள் ..	408	298

V. தொழிலாளர் நலப் பணிகள் :

தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டம் (அரசு உதவி பெறுவது) தனியார் தொழிலதிபர் திட்டம்.

1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் வரும் தொழிலாளர்களின நன்மைக்காக தொழிலதிபர்கள் வீடுகள் கட்டிக் கொடுக்க இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் அளிக்கப்படும் நிதி உதவியை விரிவுபடுத்த கீழ்க்காணும் உச்சவரம்புகள் விதிக்கப்பட்டுள்ளன. இரு சிறிய அறைகள் கொண்ட (இரண்டடுக்கு மாடி கட்டிடம்) கட்டுவதற்கு உச்சவரம்பாக 5,350 ரூபாயும், இரு சிறிய அறைகள் கொண்ட வீடு (பல அடுக்கு மாடிக்கட்டிடம்) கட்டுவதற்கு உச்சவரம்பாக 6,050 ரூபாயும் வழக்கமான இரு அறைகள், கொண்ட வீடு (இரண்டு மாடிக்கட்டிடம்) கட்டுவதற்கு உச்சவரம்பாக 7,600 ரூபாயும், வழக்கமான இரண்டு அறைகள் கொண்ட வீடு (பல மாடிக்கட்டிடம்) கட்டுவதற்கு உச்சவரம்பாக 8,500 ரூபாயும் நிதியுதவி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

1980–81 ஆம் ஆண்டின் வரவு-செலவு திட்டத்தில், இத்திட்டங்களுக்கு கடனாக 5.26 இலட்சம் ரூபாயும் உதவித் தொகையாக 2.50 இலட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.

1980–81 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில், இத்திட்டங்களுக்கு கடனாக 5.26 இலட்சம் ரூபாயும் உதவித் தொகையாக 2.50 இலட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது. 1980–81 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீட்டில் கீழே கொடுக்கப்பட்டுள்ள திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது:—

1	மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, படாளம் 16 வீடுகள் கட்டுதல்.	ரூபாய் 60,800 கடனாகவும், ரூபாய் 15,200 உதவித் தொகையாகவும் வழங்கல்.
2	நாங்குநேரியில் உள்ள சுந்தரம் துணி ஆலை (12 வீடுகள் கட்டுவதற்கு முழுவதும் உதவித் தொகையாக).	உதவித் தொகையாக ரூபாய் 16,050 அளித்தல்.

1980–81 ஆம் ஆண்டு இத்திட்டத்தில் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

3	ஸ்ரீ இராமலிங்கா ஆலை லிமிடெட், அருப்புக் கோட்டை.	இரண்டு அறைகள் கொண்ட இரண்டு மாடிக் கட்டிடம் 140. கடனாக ரூபாய் 3,74,500 உதவித் தொகையாக ரூபாய் 1,87,250 வழங்கல்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1981 ஏப்ரல் 21]

1979-80 ஆம் ஆண்டு, ஒப்புதல் அளித்துள்ள திட்டத்தின் கீழ் நாங்குநேரியில் உள்ள சுந்தரம் துணி ஆலைக்கு 32,100 ரூபாய் கடனாகக் கொடுக்கப்பட்டது.

கீழே கொடுக்கப்பட்டுள்ள வேலைகள் 1980–81 ஆம் ஆண்டு முடிவுறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை, படாளம்—16 வீடுகள்.

சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை, மோகனூர்—72 வீடுகள் அடிப்பீடம்வரை கட்டுதல்.

1981–82 ஆம் ஆண்டில் கீழே கொடுக்கப்பட்டுள்ள மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

1	தேசீய கூட்டுறவு சர்க்கரை ஆலை, அலங்காநல்லூர்.	48	வீடுகள் (இரண்டாவது கட்டமாக) கட்டி முடிக்க எதிர்பார்க்கப்படுகிறது.
2	மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, படாளம்.	40	வீடுகள் (இரண்டாவது கட்டமாக) கட்டி முடிக்க எதிர்பார்க்கப்படுகிறது.
3	சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை, மோகனூர்.	72	வீடுகள் கூரை மட்டம் வரை கட்டி முடிக்க எதிர்பார்க்கப்படுகிறது.
4	ஸ்ரீ இராமலிங்கா மில்ஸ் (பிரைவேட்) லிமிடெட், அருப்புக்கோட்டை.	140	வீடுகள் அடிமட்டம் வரை கட்டி முடிக்க எதிர்பார்க்கப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மலைத் தோட்டத் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டம்.

இத்திட்டம் மலைத் தோட்டத் தொழிலதிபர்கள் தங்களது தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதை நோக்கமாக கொண்டதாகும். 1979 ஆம் ஆண்டில் ஓர் அறை கொண்ட குடியிருப்பு ஒவ்வொன்றும் 4,000 ரூபாய் உச்சவரம்புச் செலவில் கட்டப்படுகின்றன. அத்தொகையில் 50 சதவீதம் கடனாகவும் 37.5 சதவீதம் உதவித் தொகையாகவும் வழங்கப்படும் அறிக்கை ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கான புதிய திட்டம் எதற்கும் அரசு ஏற்பளிக்கவில்லை.

மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தின் தற்போதைய நிலைமை கீழே கொடுக்கப்பட்டுள்ள விவர அறிக்கையில் சுருக்கமாக கூறப்பட்டுள்ளது.—

1	வீடுகள் தேவைப்படுகின்ற தனித் தொழிலாளர்கள் உட்பட குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை.	46,372
2	வழங்கப்பட்ட தரமான வீடுகளின் மொத்த எண்ணிக்கை.	38,754
3	வழங்கப்படவிருக்கும் தரமான வீடுகளின் மொத்த எண்ணிக்கை.	7,618
4	தற்போதுள்ள தரமற்ற வீடுகளின் மொத்த எண்ணிக்கை.	3,600

பொதுவானவை.

தொழிற்சாலைகளின் எண்ணிக்கை பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் வரும் தொழிலாளர்களின் புள்ளி விவரத்தைக் கணிக்கும் பொருட்டு, 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் ஒரு கணக்கெடுப்பை நடத்த ஆய்வாளர் அலுவலகம் கேட்டுக் கொள்ளப்பட்டது. இக்கணக்கெடுப்பு பல்வேறு தொழிலாளர் நலச் சட்டத்தின்கீழ் வரும் தொழிற்சாலைகளில் 25 சதவீத வளர்ச்சியையும், தொழிலாளர் நலச் சட்டங்களினால் பயனடையும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 30 சதவீதம் என்றும் இந்த ஆய்வு எடுத்துக் காட்டியது.

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்.

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் தமிழ்நாடு, 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின்கீழ் அமைக்கப் பட்டது. இது சட்ட வரம்புக்கு உட்பட்ட ஒரு அமைப்பாகும். இவ்வாரியத்தின் தலைவர் தொழிலாளர் நல அமைச்சராகும். இவ்வாரியத்தில், அரசு, தொழிலதிபர், தொழிலாளர்கள் ஆகியோரின் பிரதிநிதிகளும், சட்டமன்ற உறுப்பினர்களும், சுயேச்சையாளர்களும் உறுப்பினராக உள்ளனர். இவ்வாரியம் தொழிலாளர்களின் நலனுக்காக பல நல நடவடிக்கைகளைத் தமிழ் நாட்டில் அமுல் படுத்தி வருகிறது.

1. தொழிலாளர் நல நிலையங்கள்.

இவ்வாரியம் தற்போது 14 தொழிலாளர் நல நிலையங்களை நடத்தி வருகிறது. தொழிலாளர் நல நிலையத்தில் இரண்டு பிரிவுகள் உள்ளன. ஒரு பிரிவில் தொழிலாளர்களின் மகளிருக்கும் மனைவியருக்கும் தையல் வகுப்பு நடத்தப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு தையல் கலை வகுப்பிலும் 50 பெண்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். பயிற்சி பெறுபவர் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 30 பயிற்சி உதவித் தொகையாக கொடுக்கப்படுகிறது. மற்றுமொரு பிரிவில் 2 வயது முதல் 5 வயது வரையிலான தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு பாலர் வகுப்பு நடத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு பாலர் வகுப்பிலும் 50 குழந்தைகள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். 1980–81 ஆம் ஆண்டு இதற்கென ரூபாய் 89,499 தொழிலாளர் நல வாரியத்தால் செலவிடப்பட்டிருக்கிறது. இவ்வாரியம் தொழிலாளர் நல நிலையங்களை கிண்டி, விக்கிரமசிங்கபுரம், சேலம், பெரியநாய்க்கன்பாளையம், தாராபுரம், மேட்டூர், எண்ணூர், பெரம்பூர் பேரக்ஸ் லேன், வில்லேஜ் காலனி (சென்னை), பழனி, உடுமலைப்பேட்டை, தூத்துக்குடி, ஈரோடு, டால்மியாபுரம் திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூரிலும் திறக்க தீர்மானித்துள்ளது. இத் தொழிலாளர் நல நிலையங்களில் தொழிலாளர்களை சார்ந்திருக்கும் மாணவர்களுக்கு படிப்பறைகளை அமைத்துக் கொடுக்கவும் தீர்மானித்துள்ளது.

2. தையல் பயிற்சி நிலையங்கள்.

இவ்வாரியம் தற்போது கூடலூரில் ஒரு தையல் பயிற்சி நிலையத்தை நடத்தி வருகிறது. இதைத் தவிர, தையல் பயிற்சி நிலையங்களை கோத்தகிரியிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மாஞ்சோலை தோட்டத்திலும் மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கீழ் கோதையார் என்னும் இடத்திலும் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3. படிப்பகங்கள்.

இவ்வாரியம், பெரம்பூர் (சென்னை), தண்டையார்பேட்டை (சென்னை), மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் நான்கு படிப்பகங்கள் நடத்தி வருகிறது. வாசகர்களின் பயனுக்காக செய்தித் தாள்கள், வார, மாதாந்திர இதழ்கள் வழங்கப்படுகின்றன. படிப்பகங்களில் அறிவியல், கணிதப் பாடங்களில் பார்வைப் புத்தகங்கள், தொழில் தகராறு சட்டப் புத்தகங்கள் ஆகியவற்றைக் கொண்ட சிறு நூலகம் ஒன்று அமைக்கப்படலாம் என்றும் வாரியம் முடிவு செய்துள்ளது.

4. தாம்பரம், காசநோய் மருத்துவ மனையில் தொழிலாளர்களுக்கு காசநோய் வார்டுகள்.

இவ்வாரியம், தாம்பரம் காச நோய் மருத்துவமனையில் தொழிலாளர்களுக்கு என 26 படுக்கைகள் கொண்ட காச நோய் வார்டை ரூபாய் 3.64 இலட்சம் செலவில் கட்டியுள்ளது. இவ்வாரியம் தொழிலாளர்களுக்கென வேலூர் காசநோய் மருத்துவ

மனையிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஆசாரிப் பள்ளம் என்னுமிடத்திலும், பெரியார் மாவட்டத்தில் உள்ள பெருந்துறை என்னுமிடத்திலும், மதுரை மாவட்டத்தில் உள்ள ஆஸ்தினம்பட்டி என்ற இடத்திலும் மற்றும் திருப்பூர் அரசு மருத்துவ மனையிலும் காசநோய் வார்டுகளை கட்ட தீர்மானித் துள்ளது. இவ்வாரியம் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கென 20 படுக்கைகள் கொண்ட சிறார் நலத் தனி மருத்துவ பிரிவு ஒன்றினை சிவகாசியில் ஏற்படுத்த உத்தேசித்துள்ளது.

5. தொழிலாளர்களுக்கு விடுமுறை ஓய்வு இல்லம்.

ஏற்காட்டில் தற்பொழுது தொழிலாளர் ஓய்வு இல்லம் வாடகை கட்டிடத்தில் இயங்கி வருகிறது. மாமல்லபுரத்திலும், குற்றாலத்திலும் ஓய்வு இல்லங்களைக் கட்ட ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது. உதகமண்டலத்தில் ஒரு ஓய்வு இல்லம் கட்டுவதற்கு 0.25 ஏக்கர் நிலம் தொழிலாளர் நல வாரியத்திற்கு ஒதுக்கப்பட்டு உள்ளது. வால்பாறை, கொடைக்கானல் மற்றும் இராமேஸ்வரம் ஆகிய இடங்களில் ஓய்வு இல்லங்கள் கட்டுவதற்கு இவ்வாரியம் உத்தேசித்துள்ளது.

6. குழந்தைகள் காப்பு நிலையம்.

சென்னையில் திரு. வி. க. நகரிலும், சென்னை, பாரக்ஸ் லேன்வில்லேஜ் காலனியிலும் உள்ள மகளிர் மன்றங்களும், கோயம்புத்தூர் எஸ்.ஐ.எச்.எஸ். தொழிலாளர் மகளிர் மன்ற மும், இராஜபாளையத்திலுள்ள மகளிர் மன்றமும், தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்திடமிருந்து மன்றம் ஒன்றுக்கு பெறும் ரூபாய் 8,000 ஆண்டு மானியத்துடன் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வாரியம் பல்லடத்தில் குழந்தைகள் காப்புநிலையம் ஒன்றினை நடத்தி வருகிறது. சங்ககிரி, கூனூர், சாத்தூர், திருச்சி ராப்பள்ளி, முக்கூடல், தூத்துக்குடி, பவானி மற்றும் இராம நாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஆலங்குளத்திலும் ஒவ்வொரு குழந்தைகள் காப்பு நிலையங்களை தொடங்க இவ்வாரியம் தீர்மானித்துள்ளது. 1980—81 ஆம் ஆண்டு இவ்வாரியம் இதற் கென ரூபாய் 23,670 செலவு செய்துள்ளது.

7. தொழிற்சங்க தலைவர்களும், தொழிலாளர்களின் பிரதிநிதிகளும் சென்னை தேனாம்பேட்டையில் தங்குவதற்கான இட வசதிகள்.

இதன் கட்டுமானப்பணி நடந்து வருகிறது. இது 1981-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் திறக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படு கிறது. தேனாம்பேட்டையில் உள்ள இந்த ஓய்வு இல்லத்தில் தொழிற்சங்கத் தலைவர்களின் உபயோகத்திற்கென பார்வைப் புத்தகங்கள் அடங்கிய நூலகம் ஒன்றினை தொடங்கவும் உத் தேசிக்கப்பட்டுள்ளது.

1981 ஏப்ரல் 21]

8. புத்தக வங்கிகள்.

சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர், சேலம், கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டம் ஆகிய இடங்களிலுள்ள கல்லூரிகள், பள்ளிகளில் படிக்கும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு உதவும் வகையில் புத்தக வங்கிகளைத் தொடங்க வாரியம் முடிவு செய்தது. இத்திட்டத்தின் கீழ் ஏழாம் வகுப்பு பயிலும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு திருப்பித்தர வேண்டப்படாத பாடப் புத்தகங்களை இலவசமாகவும், எட்டாம் வகுப்பும் அதற்கு மேலும் படிக்கும் மாணவர்களுக்கு திருப்பித் தரப்பட வேண்டிய பாடப் புத்தகங்களை இவ்வாரியம் வழங்கி வருகிறது. புத்தகங்கள் வாங்கிய வகையில் செலவழிக்கப்பட்ட பணத்தை ஈடு செய்யக் கோரி வந்த 161 விண்ணப்பங்களை இவ்வாரியம் பெற்று இதற்கென ரூபாய் 2,074.50 இதுவரை வழங்கி உள்ளது.

9. தொழிலாளர்களின் பிள்ளைகள் தட்டெழுத்து, சுருக்கெழுத்து கற்றுத் தேற படிப்புக்கட்டணம், தேர்வுக் கட்டணம் செலுத்துதல்.

இத்திட்டத்தின்கீழ் 193 தொழிலாளர்களின் குழந்தைகளுக்குச் செலுத்திய தொகை திருப்பித் தரப்பட்டது. இது வரையில் ரூபாய் 15,681 கொடுக்கப்பட்டுள்ளது.

10. பார்வைக் கோளாறினால் அவதிப்படும் தொழிலாளர்களுக்கு இலவசமாகக் கண்ணாடி வழங்குதல்.

இக்கால அளவில் 544 பார்வை குறைந்த தொழிலாளர்களுக்கு கண்ணாடி வாங்கியதற்கான செலவை இவ்வாரியம் ஏற்றுள்ளது. இதுவரை இதற்கென ரூபாய் 22,922.38-க்கும் வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது.

11. படிப்புதவித் தொகை.

கீழே விளக்கிக் காட்டியுள்ளபடி தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு இவ்வாரியம் படிப்பு உதவித் தொகை வழங்குகிறது:—

(அ) 10+2 .. ஒவ்வொரு மாவட்டத்திலும் முதல், இரண்டாவது மாணவர்களாக வருபவர்களுக்கு படிப்புதவித் தொகைகள் அளித்தல்.

(ஆ) பொறியியல் .. 15 மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை அளித்தல்.

(இ) மருத்துவம் .. 10 மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை அளித்தல்.

(ஈ) சட்டம் .. 9 மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை அளித்தல்.

(உ) தொழிற் பயிற்சி நிலையங்கள். 15 மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை அளித்தல்.

12. இதர திட்டங்கள்.

ஆண், பெண் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குழந்தைகளுக்கும் வாரியம் ஒவ்வொரு ஆண்டும் விளையாட்டுப்போட்டியை நடத்தி வருகிறது. தொழிலாளர்களிடையே குடிப்பதினால் ஏற்படும் தீமையை தவிர்க்கும் பொருட்டு, தொழிலாளர்கள் நிறைந்துள்ள இடங்களிலும், தொழிலாளர்கள் வசிக்கும் இடங்களில் மனமகிழ் மன்றங்களை நிறுவ இவ்வாரியம் தீர்மானித்துள்ளது. பணியில் இருக்கும்போது தொழிலாளர்கள் இறந்துவிட்டால் அவர்களின் ஈமச் சடங்கிற்கென ரூ. 200-ஐ அவர்களின் குடும்பத்திற்கு இவ்வாரியம் வழங்குகிறது. ஊனமுற்ற தொழிலாளர்களுக்கு செயற்கை அவயங்கள், வேறு எந்த வகையிலேயும் அவர்களுக்கு கிடைக்கவில்லையானால் இவ்வாரியம் வழங்குகிறது. திருவொற்றியூர் அல்லது என்னூர் (சென்னை) மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் பலநோக்கு தொழிலாளர் நல நிலையங்களை நிறுவ இவ்வாரியம் தீர்மானித்துள்ளது. வட சென்னையில், கலையரங்கத்துடன் கூடிய ஒரு சமூகக் கூடத்தையும். அம்பத்தூரில் ஒரு சமூகக் கூடத்தையும் தொழிலாளர்கள் குறைந்த செலவில் திருமணம், காதணி விழா, ஏனைய சுமய நிகழ்ச்சிகளை நடத்த இவ்வாரியம் கட்ட தீர்மானித்துள்ளது. ஈட்டுறுதித்திட்டத்தின்கீழ் வராத தொழிலாளர்களின் நலத்திற்கென இவ்வாரியம் ஒருங்கிணைந்த சுகாதாரப் பணி முபைனபுத் திட்டத்தைச் செயல்படுத்த தீர்மானித்துள்ளது.

13. சட்ட உதவி.

தொழிற்சங்கங்கள், உயர்நீதி மன்றத்தில் ஒரு ரிட் மனு அல்லது ரிட் முறையீடு தாக்கல் செய்வது தொடர்பாக ஏற்படும் சட்ட சம்பந்தமான செலவுகளுக்காக ஒரு சில நிபந்தனைகளுக்குட்பட்டு ரிட்மனு அல்லது மேல் முறையீடு ஒன்றுக்கு ரூ. 150 என்ற வீதத்தில் நிதியுதவி வழங்கும் ஒரு திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. சட்ட நிதி உதவிக்கு அனுமதி வழங்க தொழிலாளர் நல ஆணையாளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. 1979 ஆம்

1981 எப்ரல் 21]

ஆண்டில், நிவாரணம் வேண்டி ஒரு கோரிக்கை வந்தது. இந்த திட்டத்தின் கீழ் ரூ. 150 வழங்கப்பட்டது. அறிக்கை யாண்டில் இத்திட்டத்தின் கீழ் சட்ட உதவி கோரி எந்த விண்ணப்பமும் வரப்பெறவில்லை.

தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் இழப்பீட்டுத் தொகையாகக் கோரும் தகுதிவாய்ந்த ஏழைத் தொழிலாளர் களுக்கு அல்லது அவர்களைச் சார்ந்தவர்களுக்கு அரசுச் செலவில் சட்ட உதவி அளிப்பதற்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,000-ஐ அரசு ஒதுக்கியுள்ளது. காயமுற்ற தொழிலாளர்கள் கோரிய இழப்பீடு குறித்து கூடுதல் ஆணையாளர் பிறப்பித்த ஆணைகளுக்கெதிராக நிர்வாகத்தினர் உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்து கொள்ளும்போது, அத்தொழிலாளர்களும் உயர்நீதி மன்றத்தில் தங்கள் தரப்பை எடுத்துரைக்க சட்ட உதவிபெறுவதற்கு தகுதி வாய்ந்தவராவர். ஆனால், தொழிலாளர் இழப்பீடு குறித்து கூடுதல் ஆணை யாளர் முன்னுள்ள நடவடிக்கைகளைப் பொறுத்தமட்டில் அவர் களுக்கு இந்தச் சட்ட உதவி அளிக்கப்பட்டது.

தொழிலாளர் சட்ட ஆலோசனைப் பிரிவுகள்.

சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களில் மூன்று சட்ட ஆலோசனைப் பிரிவுகள் செயல்படுகின்றன. அவை ஒவ்வொன்றும் ஓய்வு பெற்ற நீதித்துறை அதிகாரி யாலும் ஓய்வு பெற்ற ஓர் தொழிலாளர் நல அதிகாரியாலும் நிர்வகிக்கப்படுகின்றன. போதிய நிதி வசதியில்லாத மக்களுக்குச் சட்ட உதவியை வழங்குவதற்குரிய திட்டமொன்றை வகுப்பது பற்றி ஆய்வு செய்யும் பொருட்டு நியமிக்கப்பட்ட ஒரு நபர் குழு செய்த பரிவுரைகளின்பேரில் அரசு இப்பிரிவு களை அமைத்துள்ளது. இப்பிரிவுகள் தொழிலாளர்களின் முறையீடுகளை கனிவோடும் பரிவோடும் கேட்டறிந்து, அவர்கள் தம் குறைகளைக் களைவதற்குப் பின்பற்றவேண்டிய நடைமுறைகள் பல்வேறு தொழிலாளர்கள் சட்டங்களின் கீழ் நிவாரணம் பெறுவதற்குரிய முறைகள் ஆகியவை குறித்து கருத்துத் தெரிவிக்கின்றன.

1979-ம் ஆண்டு இம்மூன்று பிரிவால் விசாரணை செய்த 274 முறையீடுகளுடன் ஒப்பிடுகையில் 1980 ஆம் ஆண்டு இம்மூன்று பிரிவுகளும் 350 முறையீடுகளை விசாரணை செய்துள்ளன.

தமிழ்நாடு தொழிலாளர் சத்துணவுத் திட்டம்.

இம்மாநிலத்தில் தொழிலாளர்களின் பயனுக்காக 'கேர்' நிறுவனத்தின் உதவியுடன் தமிழ்நாடு தொழிலாளர் சத்துணவுத்

திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. தொழிலாளர்களின் குடும்பங்களிலுள்ள பள்ளிக்கு செல்லும் வயது அடையாத குழந்தைகளும், கருவுற்ற மகளிரும், பாலூட்டும் தாய்மார்களும் இத்திட்டத்தினால் பயனடைகின்றனர். இத் திட்டத்தின் கீழ் 106 தொழிற் பிரிவுகளைப் பொறுத்த மட்டில் (தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் தொழிலாளர் நல நிலையங்கள் உட்பட), தற்போது 29,982 பேர் பயன் அடைகின்றனர். தற்போதுள்ள தொழிலாளர் சத்துணவுத் திட்டத்தோடு, ஒருங்கிணைந்த சுகாதாரப் பணி முனைப்புத் திட்டத்தையும் செயற்படுத்தவேண்டியது அவசியம் என உணரப்பட்டுள்ளது. இதனால், வழங்கப்படும் சத்துணவிற்கேற்ப மருத்துவ உதவியையும் இத்தொழிலாளர்கள் பெறுவர்.

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம், சென்னை.

நல்ல, சிறந்த தொழிற்சங்க அமைப்புகளின் வளர்ச்சிக்கும் நிர்வாகத் திறமையை பெருக்குவதற்கும் திறமையான தொழிலாளர் நிர்வாகப் பணியை உருவாக்குவதற்கும் தமிழ்நாடு அரசு தென்னிந்தியாவிலேயே தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்தை 1973 மார்ச்சு திங்களில் அமைத்தது. தென் இந்தியாவிலேயே இத்தகைய கல்வி நிலையம் முதன் முதலாக இங்குதான் நிறுவப்பட்டுள்ளது. மேற்கூறிய நோக்கங்களை எய்தும் வகையில் பாடத்திட்டம் வகுக்கப் பட்டுள்ளது. அப்பாடத்திட்டத்தில் பின்வரும் திட்டங்கள் அடங்கியுள்ளன :—

(1) பொதுத்துறை, தனியார் துறை தொழில் நிறுவனங்களில் பணிக்கமர்த்தப்பட்ட தொழிலாளர்களுக்கு (உடனுழைப்பாளர்கள், எழுத்தர்கள், தொழில் நுட்பப் பணியாளர்கள்) தொழிலாளர் நலச் சட்டத்தின் அனைத்து அம்சங்கள் குறித்து அறிவுறுத்துதல், அவர்களே தொழிற் சங்கங்களுக்குத் தலைமை வகிப்பது பற்றி சிறப்பாக வலியுறுத்துதல்.

(2) தொழிலாளர் நலம் குறித்த மனப்பான்மையில் மாற்றங்களைக்கொண்டு வருதல். தொழிற்சாலையில் சுமூகமான உறவை ஏற்படுத்துதல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பொதுத் துறையிலும் தனியார் துறையிலும் உள்ள தொழிற்சாலைகளில் நிர்வாகத்தரத்தில் பணியாற்றும் அதிகாரிகளுக்குப் பயிற்சி அளித்தல்.

(3) தொழிலாளர் சட்டங்களை செயல் படுத்துவதற்கும், நிர்வகிப்பதற்கும் பொறுப்புள்ள தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளுக்கு பயிற்சி அளித்தல்.

1981 ஏப்ரல் 21]

(4) கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளாட்சி மன்றங்கள் ஆகியவற்றில் தொழிலாளர்களின் நலனைக் கவனிக்கிற அதிகாரிகளுக்குப் பயிற்சி அளித்தல்.

இந்த கல்வி நிலையம் இதுவரையில் 99 வகுப்புகளை நடத்தியது. இதனால் 2,912 பேர் பயனடைந்தனர்.

இக்கல்வி நிலையம் செய்துவரும் பயனுள்ள நடவடிக்கை களைப் பாராட்டி, தமிழக அரசு இக்கல்வி நிலையத்தை 1978-ம் ஆண்டு முதல் தர கல்வி நிலையமாக உயர்த்தி உள்ளது.

தொழிலாளர் நிர்வாகத்திலே பகுதிநேர பட்டயப்படிப்பு வகுப்புகள்.

இந்த கல்வி நிலையம் தொழிலாளர் நிர்வாகம் பற்றிய பட்ட மேற்படிப்பு பட்டய வகுப்புகளை நடத்துவதற்கு அரசு அனுமதியளித்துள்ளது. தொழிலாளர் நிர்வாகத்தின் இரண்டாவது பட்டய வகுப்பை தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் 1980-ம் ஆண்டு செப்டம்பர் 19-ஆம் நாள் அன்று தொடங்கி வைத்தார். இதில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 30-ல் இருந்து 40 ஆக உயர்ந் துள்ளது.

தொழிலாளர் நல மாதாந்திர சட்டப் பத்திரிக்கை [தமிழில்].

இக்கல்வி நிறுவனம் "உழைப்பவர் உலகம்" என்ற சட்டப் பத்திரிகையை எளிய தமிழில் செப்டம்பர் திங்கள் 1978 ஆம் ஆண்டு முதல் வெளியிட்டு வருகிறது. இப்பத்திரிக்கையில் எளிய தமிழில் புகழ்மிக்க வல்லுநர்களின் கட்டுரைகளும் தொழிலாளர் நீதி மன்றங்கள், உயர்நீதி மன்றங்கள், தலைமை நீதிமன்றம் ஆகியவை தொழில் தகராறு குறித்து எடுத்த முடிவுகளின் விவரங்களையும், வாழ்க்கைச் செலவுப் புள்ளி, வேலை நிறுத்தம் பற்றிய விவரங்களையும், கதவடைப்பு, உடன்பாடுகள், குறைந்த அளவு ஊதியம் பற்றிய அறிவிக்கைகளையும் தொழிலாளர்களின் நலனுக்கென இப்பத்திரிக்கை வெளியிட்டு வருகிறது.

பிற நடவடிக்கைகள்.

தமிழை தவிர்த்து மற்ற மொழி தெரியாத தொழிலாளர் கள் மற்றும் தொழிற் சங்கத் தலைவர்களின் நலனுக்கென இப்பத்திரிக்கை தொழிலாளர் நலச் சட்டங்களை தமிழில் வெளியிட உத்தேசித்துள்ளது. இக்கல்வி நிறுவனத்தால்

தொழிலாளர்களின் பிரச்சினை, தொழிலாளர் வாழ்க்கைப் புள்ளி விவரங்கள் ஆகியவை பற்றி கூர்ந்து ஆராய ஒரு ஆராய்ச்சி குழுவினை நிறுவ எதிர்பார்க்கப்பட்டு வருகிறது.

VI. எடைகள்—அளவைச் சட்டம்.

தமிழ்நாடு எடைகள் அளவைகள் செயல்படுத்தும் சட்டம், 1958.

தொழிலாளர் நலத்துணை ஆணையரே (ஆய்வுகள்) எடைகள் அளவைகள் செயல்படுத்தல் சட்டத்தின் கட்டுப்பாட்டு அதிகாரியும் ஆவார். 1958 ஆம் ஆண்டு தமிழ் நாடு எடை-அளவை (செயற்படுத்துதல்) சட்டத்தின் விதித்துறைகளை இவரே நிர்வகித்து வருகிறார். தொழிலாளர் நல ஆய்வாளர்களாலும், தொழிலாளர் நல துணை ஆய்வாளர்களாலும் தொழிலாளர் நல உதவி ஆய்வாளர்களாலும் மற்றும் சென்னை மாநகர், செங்கற்பட்டு, மற்றும் மதுரை மாவட்டங்களிலுள்ள முத்திரைத்தாள் ஆய்வாளர்களாலும், மற்றும் சென்னை மாநகர் செங்கற்பட்டு மாவட்டம் ஆகியவற்றில் உள்ள இரண்டு துணை ஆய்வாளர்களாலும் இச்சட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. சென்னை மற்றும் செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள முத்திரைத்தாள் ஆய்வாளர்களோடு, மதுரை மாவட்டத்தில் உள்ள முத்திரைத் தாள் ஆய்வாளர்களோடு, மதுரை மாவட்டத்திற்கு பத்து கூடுதல் முத்திரைத்தாள் ஆய்வாளர்களுடன், துணைப் டணி யாளர்களுக்கும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இவர்கள் சென்னை, செங்கற்பட்டு மற்றும் மதுரை மாவட்டங்களில் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் எடைகள்-அளவைகளை முத்திரை இடுவார்கள்.

எடைகள் —அளவைகள் உபயோகப்படுத்துவதில் குறைந்த எடைகளைப் பயன்படுத்துதல், குறைபாடுடைய போலி எடைகளைப் பயன்படுத்துதல் போன்று உள்ள முறைகேடுகளை ஒழிப்பதற்காக கிராமப்புற ஆய்வுகள் உட்பட, குறித்த கால ஆய்வுகள் திடீர் சோதனைகள், கூட்டுச் சோதனைகளை நடத்தி இத்துறை பல்வேறு நீதி மன்றங்களின் துணையுடன் தொடர் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு செம்மையான முறையில் செயலாற்றி வருகிறது.

1980 ஆம் ஆண்டில் எடை-அளவைகள் சட்டம், விதிகள் ஆகியவற்றை மீறி நடந்து கொண்டதற்காக 16,204 வழக்குகள் தொடரப்பட்டன. முன்பு நிலுவையிலுள்ள வழக்குகள் உள்பட இதுவரை 14,152 வழக்குகள் தண்டனையில் முடிந்தன. ரூபாய் 6,11,652 அபராதமாக விதிக்கப்பட்டது.

1981 எப்ரல் 21]

எடைகள்-அளவைகள் கட்டுப்பாடு அதிகாரி 1980 ஆம் ஆண்டில், விற்பனையாளர்கள் 521 பேர், பழுதுபார்ப்போர் 304 பேர், உற்பத்தியாளர் 106 பேர் ஆகியோருக்கு உரிமங்கள் வழங்கினார்.

1979—80 ஆம் ஆண்டுகளுக்கான ஒப்பு நோக்குப் புள்ளி விவரங்கள் வருமாறு :—

ஆண்டு.	பழுது பார்ப்போர்.	வணிகர்கள்.	உற்பத்தி யாளர்கள்.
(1)	(2)	(3)	(4)
1979	403	613	125
1980	304	521	106

வணிகர், உற்பத்தியாளர்கள், பழுதுபார்ப்போர் ஆகியோரைப் பொறுத்தமட்டில், அறிக்கையாண்டில் உரிமக் கட்டணங்களாக ரூபாய் 1,22,872 வசூலிக்கப்பட்டுள்ளது.

எடைகள்-அளவைகள் கட்டுப்பாட்டு அதிகாரி, எடைகள் அளவைகள் சட்டத்தின் விதித்துறைகளைச் செயற்படுத்தும் பணி பற்றி மாவட்டத்தில் உள்ள சார்நிலை அதிகாரிகளுடன் அவ்வப்போது கலந்து பேசி வருகிறார். தவறான முறைகளில் ஈடுபடும் வணிகர்களைக் கண்டறிவதற்காக, இவர், அலுவலில் சுற்றுப் பயணம் செய்கையில் திடீர் சோதனைகளையும் மேற்கொண்டார்.

1980 ஆம் ஆண்டில் மாநிலம் முழுவதிலும் 1,655 கூட்டு சோதனைகள் நடத்தப்பட்டன. 45,630 வணிகர்கள் சோதனை செய்யப்பட்டனர். இதனால் 3,664 வணிகர்கள் மீது வழக்கு தொடரப்பட்டன. கிராமங்களில் எடைகள் அளவைகள் சட்ட விதிகள் ஆகியவற்றைச் செயல்படுத்துவதை தீவிரப்படுத்த, முறையான வாலாய நடைமுறைச் சோதனைகள், சார்பு அதிகாரிகளால் நடத்தப்பட்டன. 1980 ஆம் ஆண்டில் 43,372 வணிகர்கள் குறித்து 8,111 கிராமச் சோதனைகள் சார்நிலை அதிகாரிகளால் நடத்தப்பட்டன.

கூட்டுச் சோதனைகள் மற்றும் தீவிர ஆய்வுகளின் விளைவாக வெவ்வேறு உலோகங்களாலான வெவ்வேறு அளவுகள் கொண்ட சுமார் 18,859 எடைகளும், வெவ்வேறு அளவுகளில் உள்ள சுமார் 14,761 அளவைகளும், வெவ்வேறு விதமான எடை

போடும் கருவிகள் 1,063-ம் அளவைக் கருவிகள் 1,064 போலியாக தரமில்லாததாக, முத்திரை இடப்படாதிருந்த காரணங்களுக்காகக் கைப்பற்றப்பட்டன. கைப்பற்றப்பட்ட பொருள்களைப் பொறுத்தமட்டில், நீதி மன்றங்களின் தீர்ப்புகளின்படி மேல் நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. கைப்பற்றப்பட்ட ஏனைய பொருள்களைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு எடைகள்-அளவைகள்(செயற்படுத்துதல்)சட்டத்தின் விதித்துறைகள் அதன் கீழ் செய்யப்பட்ட விதிகள் ஆகியவற்றிற்கிணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

VII. கீழே கொடுக்கப்பட்டுள்ள புதிய திட்டங்கள் 1981–82 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட இருக்கின்றன.

1. குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தை அமுலாக்க தனியான அலுவலகம் அமைத்தல்.

குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம் மற்றும் சம ஊதியச் சட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்தும் பொருட்டு ஒரு தனி அலுவலகத்தை நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. சுகாதார நிலையங்கள்.

பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் நிறுவப்பட்டுள்ள பல்வேறு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு சுகாதாரமான முறையில் வேலை செய்ய உத்திரவாதம் அளிக்கும் முறையில் மருத்துவ சிகிச்சைப் பிரிவு ஒன்றினை மதுரையில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3. எண்ணெய் லாரிகள் அளவைச் சரிபார்க்க மேடை நிறுவுதல்.

தொட்டி லாரிகளின் அளவை கொஞ்சங்கூட காலதாமதம் இல்லாமல் சரிபார்க்க அளவுகள் குறிக்கப்பட்ட மேடைகளை துருப்பிடிக்காத எஃகினால் ஆன அளவுகள் குறிக்கப்பட்டுள்ள மேல் நிலைத் தொட்டிகள் ஆகியவற்றை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

4. பாதுகாப்புக் குழு அமைத்தல்.

தொழிற் சாலைகளில் ஏற்படும் தொழில் விபத்துக்களைக் குறைப்பதற்கும், தொழிலாளர்களுக்கு ஏற்படும் இன்னல்களைப் போக்குவதற்கும் அவர்களது உடல் நலத்தைப் பாதுகாப்பதற்காகவும், தொழிற் சாலைகள் தலைமை ஆய்வாளரின் கீழ், தொழில்

நுட்ப அறிவும் வேண்டிய சாதனங்களும் கொண்ட அதிகாரிகள் அடங்கிய பாதுகாப்புக் குழு ஒன்று மதுரையில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

5. தொழிலாளர் கல்வி நிலையத்தில் ஆராய்ச்சிப் பிரிவு ஒன்றினை அமைத்தல்.

தொழில் தகராறுகளுக்கான காரணங்கள், தொழில் அமைதி இன்மைக்கான காரணங்கள், மேலும் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான வழிமுறைகள் முதலியனவற்றை அறிந்து கொள்ள, ஓர் ஆராய்ச்சிக் குழுவை தமிழ் நாடு கல்வி நிறுவனத்தில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

6. ஆறுமுகனேரி, சேலம், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் தொழிலாளர் காப்புறுதி மருந்தகங்களை அமைத்தல்.

தமிழ்நாட்டின் ஏனைய பகுதிகளின் காப்புறுதித் திட்டத்தின் கீழ் வரும் தொழிலாளர்களுக்கும் அவர் தம் குடும்பத்தினருக்கும் மருத்துவ வசதி, அதாவது உள்ளிருப்பு சிகிச்சை, வல்லுநர் சேவை, எக்ஸ்ரே, சோதனைச் சாலை வசதிகள் கிடைக்க ஆறுமுகனேரி, சேலம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களில் காப்புறுதி மருந்தகங்களை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

7. தொழிலுறவு அலுவலகத்தை பலப்படுத்துதல்.

இம்மாநிலத்திலுள்ள தொழிலுறவு அலுவலகத்தைப் பலப்படுத்தும் பொருட்டு தொழிலாளர் நல அலுவலர் பதவிகள் நான்கைக் கூடுதலாக ஏற்படுத்தவும், பத்து தொழிலாளர் நல அலுவலர்களின் பதவிகளை தொழிலாளர் நல உதவி ஆணையாளர் பதவிகளாக உயர்த்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலே கூறப்பட்டுள்ள அனைத்து திட்டங்களுக்கும் ரூபாய் 18·49 இலட்சம் 1981–82 ஆம் ஆண்டில் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பாகம் B.

தேசிய வேலைவாய்ப்புப் பணி.

1.1. வேலை வாய்ப்புகள்.

தமிழ்நாட்டில் 35 வேலை வாய்ப்பகங்கள், 11 துணை வேலைவாய்ப்பு அலுவலகங்கள் (தொழில் மற்றும் நிருவாக அனுபவம் பெற்றவர்களுக்கு ஒன்றும், உடல் ஊனமுற்றோர்களுக்காக மற்றொன்றுமாக, சென்னையில்) இரண்டு தனி வேலை வாய்ப்பகங்கள், சென்னை, மதுரை, அண்ணாமலைநகர் ஆகிய இடங்களில் ஒவ்வொன்றாக பல்கலைக்கழக வேலைவாய்ப்புத் தகவல்-வழிகாட்டும் நிலையங்கள் மூன்று ஆகியவை இயங்கி வருகின்றன.

*1.1.2. இவ்வாண்டில் தமிழ்நாட்டில் வேலைக்காகப் பதிவு செய்துள்ள விண்ணப்பதாரர்கள், வேலை அளிக்கப்பட்டவர்கள், வேலைக்காக வேலைவாய்ப்பகங்களில் பதிவேட்டில் காத்திருப்போர், அறிவிக்கப்பட்ட வேலைக் காலியிடங்களின் எண்ணிக்கை, அறிக்கை ஆண்டில் வேலை வாய்ப்பகங்களைப் பயன்படுத்திக் கொண்ட அரசுத்துறை, தனியார் துறையைச் சேர்ந்த தொழிலதிபர்களின் எண்ணிக்கை விவரங்களும், மற்றும் இதே காலத்தில் சென்ற ஆண்டிற்கான நிகரான விவரங்களும் வருமாறு :—

தொடர் எண்.	விபரங்கள்.	(1—4—1979 முதல் 31—1—1980 முடிய) நடந்தேறிய ஆண்டின் நிகரான காலத்தில்.	1—4—1980 முதல் 31—1—1981 முடிய அறிக்கை ஆண்டில்.	1—1—1980 முதல் 31—12—1980 முடிய உள்ள காலத்தில்.
(1)	(2)	(3)	(4)	(5)
1.	பதிவு செய்த விண்ணப்பதாரர்கள் ..	3,48,319	4,15,769	4,86,624
2.	வேலையில் அமர்த்தப் பட்டவர்கள் ..	45,051	40,935	55,173

தொடர் எண். (1)	விபரங்கள். (2)	(1—4—1979 முதல் 31—1—1980 முடிய) முந்தைய ஆண்டின் நிகரான காலத்தில். (3)	1—4—1980 முதல் 31—1—1981 முடிய அறிக்கை ஆண்டில். (4)	1—1—1980 முதல் 31—12—1981 முடிய உள்ள காலத்தில். (5)
3.	அறிவிக்கப்பட்ட வேலை காலியிடங்கள் ..	65,777	61,152	73,058
4.	வேலைவாய்ப்பகங்களைப் பயன்படுத்திய தொழில் அதிபர்கள்—			
	(அ) பொதுத்துறை.	11,454	12,920	15,168
	(ஆ) தனியார்துறை.	6,833	6,283	7,243
5.	வேலைக்காக வேலை வாய்ப்பக உயிர் பதிவேட்டில் காத்திருப்பவர்கள் ..	9,87,678	11,08,777	11,07,233

*1,2,3,4,5

1980 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் தேதி, 1981 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் தேதி அன்றுள்ளவாறு, தற்போது வைத்துவரப்படும் பதிவேட்டில் பதிவு செய்துள்ள விண்ணப்ப தாரர்களின் எண்ணிக்கை வேறுபடுவதன் காரணம் வருமாறு :—

1980 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் நாளில் உள்ள வாறு தற்போது வைத்து வரப்படும் பதிவு செய்துள்ள விண்ணப்பதாரர்கள் (+) புதிதாக பதிவு செய்துள்ளவர் எண்ணிக்கை (—) [வேலையில் அமர்த்தப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை (+) பதிவு செய்துள்ளவர்கள் புதுப்பிக்காத காரணத் தால் பதிவு காலாவதியானவர்கள் எண்ணிக்கை]=1981 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் நாள் நிலவரப்படி தற்போது வைத்து வரப்படும் பதிவேட்டில் பதிவு செய் துள்ளவர்கள் எண்ணிக்கை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2. சென்னையில் உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலை வாய்ப்பகம்.

2.1. உடல் ஊனமுற்ற விண்ணப்பதாரர்களைப் பதிவு செய்து அவர்களை வேலையில்அமர்த்தும்நோக்குடன் சென்னையில்சிறப்பு வேலைவாய்ப்பகம் ஒன்றும், மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் வேலைவாய்ப்பு நிலையங்களில், ஊனமுற்றோர்களுக்காக நான்கு தனிப்பிரிவுகளும் இயங்கி வருகின்றன. இவ்வலுவலகங்கள் அரசுத்துறை தனியார் துறையைச் சேர்ந்த தொழிலதிபர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு எல்லாவித உடல் ஊனமுற்றோருக்கும் வேலைவாய்ப்பு அளித்து வருகின்றன.

*2.2.2. இந்த உடல் ஊனமுற்றோர்களுக்கான வேலை வாய்ப்பு தனிப் பிரிவுகள் அலுவலகங்கள் ஆகியவற்றில் பணி குறித்த புள்ளி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

அலுவலகத்தின் இருப்பிடம்.	பதிவு செய்யப்பட்டவர் எண்ணிக்கை.		வேலையில் அமர்த்தப்பட்டவர் எண்ணிக்கை.		தற்போது வேலைத்துவரப் பதிவேட்டில் உள்ளவர்கள் எண்ணிக்கை	
	1—4—1979 முதல் 31—1—1980 முடிய.	1—4—1980 முதல் 31—1—1981 முடிய.	1—4—1979 முதல் 31—1—1980 முடிய.	1—4—1980 முதல் 31—1—1981 முடிய.	31—1—1980.	31—1—1981.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
சென்னை ..	1,311	1,552	305	481	4,530	5,107
கோயம்புத்தூர் ..	206	272	45	47	939	1,123
மதுரை ..	124	180	17	31	922	1,090
சேலம்	137	146	21	33	594	723
திருச்சிராப்பள்ளி.	124	115	6	7	929	1,067

3. தொழில் மற்றும் நிர்வாக வேலை வாய்ப்பகம் :

3.1. இந்த அலுவலகம் உயர்ந்த தொழில் அனுபவம் அறிவியல், பொறியியல், நிர்வாக மேற்பார்வைப் பணிக்கல்வித் தகுதியுடையவர்களைப் பதிவு செய்து, அரசுத்துறை தனியார் துறையைச் சேர்ந்த தொழிலதிபர்களுடன் தொடர்பு கொண்டு பதிவு செய்துள்ள விண்ணப்பதாரர்களைத் தகுந்த வேலையில் அமர்த்த முயற்சி செய்து வருகிறது.

**3.2. இவ்வலுவலகம் 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் நாள் முதல் 1981 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் நாள் முடிய செய்த பணி குறித்த புள்ளி விவரங்கள் முன்னைய ஆண்டில் அதாவது 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் நாள் முதல் 1980 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் நாள் முடிய செய்த பணி குறித்த புள்ளி விவரங்களுடன் ஒப்பிட்டு கீழே தரப்பட்டுள்ளன :—

அலுவலகம்.	பதிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை.		வேலையில் அமர்த்தப் பட்டவர்களின் எண்ணிக்கை.		தற்போது வைத்து வரப்படும் உயிர் பதிவேட்டில் உள்ளவர்களின் எண்ணிக்கை.	
	1–4–1979 முதல் 31–1–1980 முடிய.	1–4–1980 முதல் 31–1–1981 முடிய.	1–4–1979 முதல் 31–1–1980 முடிய.	1–4–1980 முதல் 31–1–1981 முடிய.	31–1–1980	31–1–1981
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
சென்னை தொழில் நிர்வாக வேலை வாய்ப்பகம்	7,843	8,370	3,004	1,955	14,686	16,874

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

4. அண்ணாமலை நகர், சென்னை, மதுரை ஆகிய இடங்களிலுள்ள பல்கலைக் கழக வேலை வாய்ப்பு தகவல்—வழிகாட்டும் நிலையங்கள்:

4.1. (சென்னை, மதுரை, அண்ணாமலைக் பல்கலைக் கழகம்) பல்கலைக் கழக வேலை வாய்ப்பு தகவல்—வழிகாட்டும் நிலையங்கள் பல்கலைக் கழகங்களில் படித்த பட்டதாரிகளுக்கும் மற்றும் படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கும் வேலை வாய்ப்பு விவரங்களையும் வழிகாட்டுதல் பணியினையும் தொழில்—உயர் பட்டதாரிகளையும் வேலை வாய்ப்பிற்காக பதிவு செய்யும் பணியையும் செய்து வருகிறது.

*4. 4.2. 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் நாள் முதல் 1981 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் நாள் முடிய இந்நிலையங்களின் பணி குறித்து விவரங்கள் இவ்வாண்டில் செய்துள்ள பணி குறித்த விவரங்களுடன் ஒப்பிடப்பட்டு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

தொடர் எண்ணும் வேலைவாய்ப்பு நிலையங்களின் இடம்.	பதிவு செய்துள்ளவர்களின் எண்ணிக்கை.		வேலையில் அமர்த்தப் பட்டவர்களின் எண்ணிக்கை.		தற்போது வைத்து வரப்படும் பதிவேட்டில் உள்ளவர்களின் எண்ணிக்கை.	
	1-4-1979 முதல் 31-1-1980 முடிய.	1-4-1980 முதல் 31-1-1981 முடிய.	1-4-1979 முதல் 31-1-1980 முடிய.	1-4-1980 முதல் 31-1-1981 முடிய.	31-1-1980	31-1-1981
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
சென்னை ..	198	91	21	10	315	236
மதுரை ..	1,428	1,505	311	220	2,628	2,859
அண்ணாமலை நகர்	331	256	89	81	590	484

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

5 [அ] வேலை நிலவரத் தகவல் திட்டம்.

5 (அ)(1)— இத்திட்டத்தின் கீழ் 10 அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்கள் உள்ள (வேளாண்மை நீங்கலாக) எல்லாத் தனியார் துறை நிறுவனங்களிலிருந்தும் அனைத்துப் பொதுத் துறை நிறுவனங்களிலிருந்தும் வேலை நிலவரத் தகவல் காலாண்டுக்கொருமுறை சேகரிக்கப்படுகிறது. இவ்வாறு தகவல் சேகரிக்கும் பணி அமைப்புகளுக்கு மட்டும் வரையறுக்கப் பட்டுள்ளது.

5 (அ) (2).—1980 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 1980 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முடிய இரு காலாண்டு ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன. அதாவது 1980 மார்ச் முடிய மற்றும் 1980 ஜூன் முடிய ஆகிய இரு காலாண்டுகள் கீழ்க்கண்ட அட்டவணை நான்கு காலாண்டுகளில் தகவல் கேட்ட நிறுவனங்கள், தகவலை அளித்த நிறுவனங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை மற்றும் அதன் சதவீத விவரங்கள் வருமாறு :—

முடிவடைந்த காலாண்டு.	தகவல் கேட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை.	தகவல் அளித்த நிறுவனங்களின் எண்ணிக்கை.	தகவல் அளிக்கப்பட்டவற்றின் சதவீதம்.
(1)	(2)	(3)	(4)
30—9—1979 ..	18,897	16,102	85.2
31—12—1979 ..	19,511	16,963	86.9
31—3—1980 ..	19,983	17,017	85.2
30—6—1980 ..	20,209	17,563	86.9

5. (அ) (3) —1980 மார்ச் 1980 ஜூன் திங்களுடன் முடியும் காலாண்டுகளில் இம்மாநிலத்தில் வேலையிலிருப்பவர்கள் குறித்த துறைவாரியான விபரம் கீழே அட்டவணையில் கொடுக்கப் பட்டுள்ளது.

அன்றைய நாள் நிலவரப்படி.	வேலையில் இருப்பவர்களின் மொத்த எண்ணிக்கை.		
	பொதுத்துறை	தனியார்துறை.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
30—9—1979 ..	11,01,266	6,60,505	17,61,771
31—12—1979 ..	11,30,699	6,57,865	17,88,654
31—3—1980 ..	12,03,556	6,62,123	18,65,679
30—6—1980 ..	12,06,762	6,64,532	18,71,294

5 (ஆ) பணியாளர்களின் வேலை-கல்வித் தகுதி குறித்து இரண்டாண்டுகளுக்கொருமுறை நடத்தப்படும் ஆய்வு.

5 (ஆ) (1).—1959 ஆம் ஆண்டு வேலை வாய்ப்பு அலுவலகங்கள் (காலியிடங்களைக் கட்டாயமாக அறிவித்தல்) சட்டத்தின் விதித் துறைகளுக்கிணங்க எல்லாப் பொதுத் துறைத் தொழிலதிபர்களையும் அவர்கள் வேலைக்கமர்த்தியுள்ள தொழிலாளர்களின் வேலைகளின் வகைப்பாடு, அவர்களின் கல்வித்தகுதி ஆகியவைகள் குறித்த புள்ளி விபரங்கள் அனுப்புமாறு இவ்வாய்வின் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டனர். எல்லா பொதுத் துறை நிறுவனங்கள், உள்ளாட்சி மன்றங்கள் உட்பட மத்திய மாநில அரசு அலுவலகங்களைச் சேர்ந்த அனைத்துத் துறைகளில் பணிபுரியும் தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில், 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ஆம் தேதி முடிய பணியாளர்களின் வேலை, கல்வித் தகுதி குறித்து இரண்டாண்டுகளுக்கொருமுறை நடத்தப்படும் ஆய்வுக்குரிய விபரங்கள் குறிப்பிட்ட படிவங்களில் சேகரிக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் இதுவரை, 9,328 நிறுவனங்கள் இவ்வகையில் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளன.

5 (இ) ஆழ்ந்தாய்வுப் பிரிவு.—

5 (இ) (1).—வேலைவாய்ப்பு பற்றிய சிறப்பு ஆய்வுகளை நடத்தவும் புதுடில்லியிலுள்ள, வேலைவாய்ப்பு-பயிற்சி தலைமை இயக்குநரால் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு ஆய்வுகள் குறித்த களப்பணியை ஒருங்கிணைக்கவும், வேலைவாய்ப்பு பயிற்சி இயக்குநரலுவலகத்தில் சிறப்பு ஆய்வு பிரிவு ஒன்று 1971 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. 19 ஆம் ஆண்டு ஏப்ரல்

முதல் 1981 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் நாள் முடிய கீழ்க் காணும் ஆய்வுகளை இப்பிரிவு முடித்துள்ளது :

1. மெட்ரிக்குலேசன் தேறியவர்களும் அதற்கும் குறைவான கல்வித் தகுதி உடையவர்களும் வேலைவாய்ப்புப் பயிற்சிக்காக காத்திருக்கும் கால அளவை அறிய மேற்கொள்ளப்பட்ட ஆய்வு.

2. தமிழ்நாட்டில் வேலையில் இருக்கும் பெண்கள், வேலை வாய்ப்பில்லா பெண்கள் பற்றிய ஆய்வு.

5 (இ) (2).—மதுரை மாவட்ட வேலை வாய்ப்பகத்திலும், திண்டுக்கல் துணை வேலை வாய்ப்பகத்திலும் தற்போது வைத்து வரப்படும் பதிவேடுகளில் பதிவு செய்துள்ளவர்களில் வேலை வாய்ப்பு பெற்றவர்களின் வீதத்தை கண்டறியும் பணியில் சிறப்பாய்வுப் பிரிவு தற்போது ஈடுபட்டுள்ளது.

5 (ஈ). புள்ளி விபர பாகுபாட்டுப் பிரிவு :

5 (ஈ) (1).—வேலை நிலவரத் தகவல் திட்டத்தின் கீழ் வேலையிலிருப்போர், வேலையில்லாதிருப்போர் குறித்த விபரங்கள் சேகரிக்கப்பட்ட புள்ளி விபரங்களையும் வகைப்படுத்த இயலும் பொருட்டு 1973 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் புள்ளி விபரப் பாகுபாட்டுப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இவ் வறிக்கையாண்டில், இப்பிரிவு மொத்தம் 54 பட்டியல்கள் முடிக்கப்பட்டுள்ளன. இவ்வாண்டில் முடிக்கப்பட்ட சில முக்கிய அட்டவணைப் பட்டியல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

1. 1979 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள், 1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள், 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம் நாள் ஆகிய காலாண்டுகளில் மத்திய அரசு/மாநில அரசு/ஓரளவு மத்திய அரசு நிறுவனங்கள், ஓரளவு மாநில அரசு நிறுவனங்கள், உள்ளாட்சி மன்றங்கள், பொதுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றின் வேலை வாய்ப்பு நிலைகளில் உள்ள மாற்றங்கள் குறித்த காலாண்டு விபர அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன.

2. 1979 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள், 1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள், 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம் நாள், ஆகிய காலாண்டுகளில் தனியார்துறை நிறுவனங்கள் (பெரிய நிறுவனங்கள்) தனியார் துறை நிறுவனங்கள் (சிறிய நிறுவனங்கள்) மற்றும் தனியார் நிறுவனங்கள் (மொத்தம்) வேலைவாய்ப்பு நிலைகளில் உள்ள மாற்றங்கள் குறித்த காலாண்டு விவர அறிக்கைகள் தயாரிக்கப் பட்டன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

3. அறிவிக்கப்பட்ட வேலைக் காலியிடங்கள், அவற்றில் நிரப்பப்பட்டவை, எஞ்சியவை ஆகியவை குறித்த புள்ளி விபரங்கள் கொண்டுள்ள வேலை வாய்ப்பகங்களின் கால முறைப்பதிவேடுகள் தயாரித்தல்.

4. வேலை வாய்ப்பகங்களின் கால முறைப் பதிவேட்டில் உள்ள சிறப்பு விண்ணப்பதாரர்களை அதாவது ஆதி திராவிடர்/பழங்குடியினர்; தொழில்பழகுவோர் தேசியச் சான்றிதழ்கள்/தொழில் தேசியச் சான்றிதழ்கள் பெற்றுள்ளோர்; உயர் கல்வித் தகுதி பெற்றவர்கள் ஆகியோர் குறித்த விபரங்களைக் காட்டும் விவர அறிக்கை.

5 (உ) பட்டுத்திரை அச்சுப்பிரிவு :

வேலை வாய்ப்பகங்களில் வாழ்க்கைத் தொழில் வழிகாட்டும் கருத்துப்படங்களையும், சுவரொட்டிகளையும் காட்டிவைக்கவும், இத்துறையில் ஆய்வு செய்யப்பட்டுள்ள கருத்துக்களை அட்டை வடிவில் சிறந்த முறையில் குறைந்த செலவில் தயாரிக்கவும், இம்மாநிலத்தில் பட்டுத்திரை அச்சுப்பிரிவு ஒன்று 1973 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் நிறுவப்பட்டது.

இவ்வறிக்கையாண்டில் இப்பிரிவு நிறைவேற்றிய பணி 1979–80-ல் இதே கால அளவில் நிறைவேற்றிய பணி குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

		1—4—1979 முதல் 31—1—1980 முடிய.	1—4—1980 முதல் 31—1—1981 முடிய.
1	பட்டுத்திரை அச்சிடுவதற்கான ஸ்டென்சில்கள்.	17	13
2	தயாரிக்கப்பட்ட மாதிரி வரைபடங்கள்.	3	16
3	தயாரிக்கப்பட்ட விளக்கப் படங்கள்/வரைப் படங்கள்/துண்டு வெளியீடுகள்.	148	299
4	அச்சடிக்கப்பட்ட உரை தாள்கள்/சுவரொட்டிகள்.	1,322	1,951

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

	1—4—1979 முதல் 31—1—1980 முடிய.	1—4—1980 முதல் 30—1—1981 முடிய.
5 அச்சிட்ட பட்டுத் திரைகள் ..	4	4
6 பெயர்ப்பலகை போன்ற ஏனைய சிறப்புப் பணிகள்.	21	54

5. (ஊ) வேலை வாய்ப்பகங்களின் பணியைக் கணக்கிடுதல் பொறி மூலம் கணக்கிடுவது:

சென்னை, செங்கல்பட்டு மாவட்டங்களிலுள்ள வேலை வாய்ப்பகங்களின் பணிகளைக் கணக்கிடு பொறிமூலம் கணக்கிடுவதற்காகத் தனிப் பிரிவு ஒன்று 1980-ஆம் ஆண்டு மே திங்களில் அமைக்கப்பட்டது. தொழில் நிர்வாகப் பணி/வேலை வாய்ப்பகத்தில் கணக்கிடு பொறி வசதி செய்து கொடுக்கும் பணியை அரசு புள்ளி விவரத் தொகுப்பு நிலையம் மேற்கொண்டது. அரசு புள்ளி விவரப் பிரிவின் ஒத்துழைப்புடன் இப்பிரிவு இதுவரை 22,853 தகவல் படிவங்களைத் தயாரித்துள்ளது. அரசு புள்ளி விவரப் பிரிவின் ஆலோசனையின்படி ஒரு கால அட்டவணையை வகுத்துள்ளது. அதனால், இப்பணி விரைவுப்படுத்தப்பட்டு வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் முடிக்க முடியும்.

6. வாழ்க்கைத் தொழிலுக்கு வழி காட்டுதலும் வேலைவாய்ப்பு ஆலோசனை அளித்தலும்:

6·1. தமிழ்நாட்டில் நீலகிரி, தருமபுரி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்கள் நீங்கலாகப் பிற மாவட்டங்களில் வாழ்க்கைத் தொழில் வழிகாட்டிப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. இப்பிரிவுகள், தொடர்ந்து தொழில் வேலை வாய்ப்பு, பயிற்சி பெறுவதற்கான வசதிகள், வேலை வாய்ப்பு குறித்த தகவல் ஆகியவை பற்றிய தொழில் பழகு வசதிகள் குறித்த விவரங்களை வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள வேலை தேடுபவர்களுக்கு அளிக்கிறது. மாணவர்கள்/பதிவு செய்தவர்கள் இவர்கள் பயனடையும் வகையில் வழிகாட்டுதல் தொடர்பான கலந்துரையாடல்கள் நடத்தப்படுகின்றன. மாணவர்கள்/வேலை தேடுவோரின் பயனுக்காக வேலை வாய்ப்பகங்களிலுள்ள வாழ்க்கைத் தொழில் வழிகாட்டிப் பிரிவு காலாண்டு தோறும் செய்தி அறிக்கைகள் தயாரித்து, பள்ளிகளுக்கும் நூலகங்களுக்கும் அவற்றை அனுப்புகின்றன.

6·2. 1979–80 ஆம் ஆண்டில் வாழ்க்கைத் தொழில் வழிகாட்டுப் பிரிவுகளால் பயனடைந்த விண்ணப்பதாரர்கள் குறித்தும், இவ்வறிக்கை ஆண்டில் பயனடைந்திருப்போர் ஆகியோர்களின் விவரங்கள் குறித்தும் ஒப்பிட்டு அட்டவணை ஒன்று கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

	1—4—1979 முதல் 31—1—1980 முடிய.	1—4—1980 முதல் 31—1—1981 முடிய.
(1)	(2)	(3)
மேற்கொள்ளப்பட்ட (வழி காட்டுதல்) கூட்டுக் கூட்டங்களின் எண்ணிக்கை	2,670	3,092
பதிவு செய்து வழிகாட்டும் தகவல் மூலம் பயன் பெற்றவர் எண்ணிக்கை	8,997	12,264
கலந்துரையாடல் கூட்டத்தில் கலந்து கொண்டவர் எண்ணிக்கை	50,817	62,037
வேலை, பயிற்சி, தொழில் பழகுதலில் அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை. ..	1,342	725
பள்ளிகள்/கல்லூரிகளில் நிகழ்த்திய வாழ்க்கைத் தொழில் பற்றிய சொற்பொழிவுகளின் எண்ணிக்கை.	241	328
தொழில் பழகுவோருக்கான உதவித் தொகை/மேற் படிப்பிற்காக அனுப்பப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	9,711	10,616

1981 ஏப்ரல் 21]

6·3. சென்னையிலுள்ள வேலைவாய்ப்பு பயிற்சி இயக்குநர் அலுவலகத்தைச் சேர்ந்த மாநில வாழ்க்கைத் தொழில் வழி காட்டிப் பிரிவு, மாவட்டங்களில் உள்ள வாழ்க்கைத் தொழில் வழிகாட்டிப் பிரிவுகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து மேற்பார்வை செய்து, சீரமைத்து, பரிசீலனை செய்து வருகிறது. 31 தொழில் பயிற்சி நிலையங்களில், சுமார் 25,000 விண்ணப்ப தாரர்களுக்கு திறனாய்வுத் தேர்வு நடத்தப்பட்டது. தொழிற் பயிற்சி நிறுவனங்களில் பல்வேறு தொழில்களில் மாணவர்களை சேர்ப்பதற்கு இத்தேர்வு அவசியமாகிறது. ஆவடியில் உள்ள கனரகத் தொழிற்சாலையில், தொழில் திறன் உள்ளோரைத் தேர்ந்தெடுக்கவும் திறனாய்வுத் தேர்வு நடத்தப்பட்டது.

6·4. 1980 நவம்பர் மாதம் பல்கலைக் கழக பழைய மாண வர்களுக்காக தகவல் கூடம் சென்னை பல்கலைக் கழகத்தில் நடத்தப்பட்டது.

7. மாநில தொழிற் தகவல் பிரிவு.

தொழில் குறித்து ஆராய்தல், பகுப்பாய்வு, நெறிமுறைக் குறிப்புகளைத் தமிழில் தயாரித்தல், திருத்தியமைத்தல் ஆகிய பணிகளை மாநிலத் தொழில் தகவல் பிரிவு தொடர்ந்து மேற் கொள்கிறது. உடல் ஊனமுற்றோர்களுக்கு வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கத்தில், அவர்களுக்குத் தகுந்த வேலை வாய்ப்புகள் குறித்து கண்டறிய ஆய்வு ஒன்றை நடத்தவும் இப்பிரிவு கருதியுள்ளது.

8. துறையின் வேலை வாய்ப்புப் பிரிவின் பணியாளர் பயிற்சிப் பிரிவு.

வேலை வாய்ப்புப் பிரிவு இயக்குநர் அலுவலகத்தில் பணியாளர்களுக்கு பணியாளர் பயிற்சிப் பிரிவு வேலை வாய்ப்புக் கொள்கைகள், நடைமுறைகள் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கிறது. 1—4—1980 முதல் 31—3—1981 வரை தேசிய வேலை வாய்ப்புப் பணியைச் சேர்ந்த நிர்வாகப் பணியாளர்களுக்கு 3 பணியாளர் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. அவற்றில் 31 நிர்வாகப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

9. இத்துறையின் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் உள்ள ஆய்வுப் பிரிவு.

இவ்வறிக்கை ஆண்டில் வேலை வாய்ப்பு-பயிற்சித்துறை இயக் குநர் அலுவலகத்தின் அதிகாரிகளால் 27 அலுவலகங்கள் ஆய்வு செய்யப்பட்டன. சார்நிலை அலுவலகங்களைப் பொறுத்த மட்டில் ஆய்வு அதிகாரிகள் இறுதி ஆய்வை மேற்

கொள்ள இயலும் பொருட்டு ஆய்வுப் பணியாளர்களில் தொடக்க ஆய்வுக் குறிப்புகள் தயாரிக்கப்பட்டன. கள அலுவலகங்களிடமிருந்து பெறப்பட்ட திருத்த அறிக்கைகள், மாவட்ட ஆய்வுத் துறையின் திடீர் சோதனை நடவடிக்கைகளின் பேரில் முடிவு கட்டப்பட்ட ஆய்வு அறிக்கைகள் ஆகியவை இவ்வறிக்கை ஆண்டில் இப்பிரிவால் ஆய்வு செய்யப்பட்டன.

10. வேலைவாய்ப்புத் தொடர்பு அலுவலகத்தின் செயல்கள்:

10,1. இப்பிரிவு, பர்மா, ஸ்ரீலங்கா ஆகிய நாடுகளிலிருந்து தாயகம் திரும்பியோரின் தேவைகளை நிறைவு செய்து, வேலை வாய்ப்புப்பயிற்சி, ஆகியவை பெற அவர்களுக்கு உதவுகிறது. அறிக்கையாண்டில், 140 காலியிட அறிவிப்புகளை தொழிலதிபர்களிடமிருந்து இப்பிரிவு நேரடியாகப் பெற்றது. 832 பர்மா, ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கு இவ்வேலை வாய்ப்புகள் பரிந்துரை செய்யப்பட்டன. இது தவிர தாயகம் திரும்பிய 566 பேருக்கு வேலை வாய்ப்பு உதவியும் பல்வேறு தொழிற் பயிற்சி நிறுவனங்களில் சேருவதற்கான உதவியும் இப்பிரிவால் அளிக்கப்பட்டது.

*5. 10·2. 1980-ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் 1981 ஆம் ஆண்டு சனவரி முடிய வேலை வாய்ப்புத் தொடர்பு அலுவலகத்தின் பணிகள், முந்தைய ஆண்டில் இதே கால அளவில் அதன் பணிகள் குறித்த புள்ளி விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

	தாயகம் திரும்பியோர்	
	பர்மா	
	1-4-1979 முதல் 31-1-1980 முடிய.	1-4-1980 முதல் 31-1-1981 முடிய.
(1)	(2)	(3)
1 வேலை வாய்ப்பிற்காகப் பதிவு செய்யப்பட்டவர்கள்.	1,047	687
2 வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டவர்கள்.	216	125
3 சனவரி 31 அன்றுள்ளபடி வேலை வாய்ப்பிற்காக தற்போதைய பதிவேட்டில் எஞ்சியுள்ளவர்களின் எண்ணிக்கை.	2,314	2,137

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1981 எப்ரல் 21]

	தாயகம் திரும்பியோர்.	
	ஸ்ரீலங்கா	
	1–4–1979 முதல் 31–1–1980 முடிய.	1–4–1980 முதல் 31–1–1981 முடிய.
(1)	(2)	(3)
1 வேலை வாய்ப்பிற்காகப் பதிவு செய்யப்பட்டவர்கள்.	4,410	3,365
2 வேலை வாய்ப்பு அளிக்கப் பட்டவர்கள்.	239	350
3 சனவரி 31 அன்றுள்ளபடி வேலைவாய்ப்பிற்காக தற் போதைய பதிவேட்டில் எஞ்சியுள்ளவர்களின் எண் ணிக்கை.	9,926	8,274

11. தொழில் பழகு பயிற்சித் திட்டத்தை செயல்படுத்துவதற்குரிய தனிப் பிரிவும் அதன் முன்னேற்றமும்.

11·1. தொழில் பழகும் பயிற்சித் திட்டத்தில் தொழில் பழகு வோரை நியமிக்கும் நடவடிக்கைகளை இப்பிரிவு ஒருங்கிணைக் கிறது.

11·2. இத்துறையின் பயிற்சிப் பிரிவு தொழில் பழகு பயிற்சிக் கான இடங்கள், அமர்த்தப்பட்டுள்ள இடங்கள் ஆகியவை அடங்கிய விரிவான புள்ளி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள் ளன:—

அன்றுள்ளபடி.	பயிற்சியிடங்களின் எண்ணிக்கை.		
	பொதுத் துறை.	தனியார் துறை.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
1–4–1980	3,539	7,227	10,766
31–10–1980	3,289	7,539	10,828

	பயன்படுத்தப்பட்ட பயிற்சி இடங்களின் எண்ணிக்கை.			எய்திய சதவீதம்.
	பொதுத் துறை.	தனியார் துறை.	மொத்தம்.	
(1)	(2)	(3)	(4)	(5)
1—4—1980	2,708	7,212	9,920	92.14
31—10—1980	2,591	7,389	9,980	92.17

தொழில் பழகுவோருக்காக கண்டறிந்த வேலை காலியிடங்கள், அவற்றில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் இடையே உள்ள வேறுபாடு, தொழில் பழகுவோரை வேலைக்கு வைத்துக்கொள்ள தொழிலதிபர்களை இணங்கச் செய்வதில் உள்ள இடர்பாடுகளே காரணமாகும்.

12. 1959-ஆம் ஆண்டு வேலை வாய்ப்பு அலுவலக சட்டத்தை வேலை காலியிடங்களை கட்டாயமாகத் தெரிவித்தல், செயல்படுத்துதல்.

12.1. 30-9-1979 அன்றுள்ளபடி 12,640 நிறுவனங்கள் இச் சட்டத்தின் கீழ் வந்தன. 30-9-1980 அன்றுள்ளபடி 12,710 நிறுவனங்கள் இச்சட்டத்தின் கீழ் வந்துள்ளன:—

12.2. அறிவிக்கப்பட்ட காலியிடங்களின் எண்ணிக்கையும், கீழ்க்காணும் ஆண்டுகளில் அந்நிறுவனங்களால் நிரப்பப்பட்ட இடங்களின் எண்ணிக்கையும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

அறிவிக்கப்பட்ட காலியிடங்கள்.		நிரப்பப்பட்ட காலியிடங்கள்.	
1–10–1978 முதல் 30–9–1979 முடிய.	1–10–1979 முதல் 30–9–1980 முடிய.	1–10–1978 முதல் 30–9-1979 முடிய.	1–10–1979 முதல் 30–9–1980 முடிய.
(1)	(2)	(3)	(4)
56,477	59,495	38,625	42,325

தொழிலதிபர்களிடம் நிலுவையாக உள்ள காலியிடங்கள் குறித்து தேர்வு முடிவுகள் கிடைக்கப் பெறாததும், பொருத்தமான மனுதாரர் கிடைக்கப் பெறாததால் காலியிடங்கள் ரத்து செய்யப்

1981 ஏப்ரல் 21]

பட்டதும், எதிர்பார்க்கப்பட்ட காலியிடங்கள் ஏற்படாததும், அறிவிக்கப்பட்ட காலியிடங்களின் எண்ணிக்கைக்கும், நிரப்பப் பட்ட காலியிடங்களின் எண்ணிக்கைக்கும் ஏற்பட்டுள்ள வேறு பாட்டிற்கு காரணமாகும்.

13. மாநில இயக்குநர் அலுவலகத்திலுள்ள மக்கள் தொடர்புப் பிரிவும், விளம்பரப் பிரிவும்.

13.1. பல்வேறு தொழிலதிபர்களிடமிருந்து வரப்பெறும் காலியிட அறிவிக்கைகள் குறித்து இயக்குநர் அலுவலகத்திலுள்ள, விளம்பரப் பிரிவு தகுந்த விளம்பரம் கொடுக்கப்படுகிறது.

13·2. தொழில் நுட்பப் பதவிகள் அல்லாத பல்வேறு பிரிவு களுக்கு பணியாளர் தேர்வாணைக்குழு மூலமாகச் செய்யும் நிய மனம் குறித்து புது டெல்லியிலுள்ள தேர்வாணைக் குழுவிடம் இருந்து பெறப்பட்ட விளம்பரங்களுக்கு இம்மாநிலத்திலுள்ள, வேலை வாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக விரிவான விளம்பரம் அளிக்கப்படுகிறது.

13·3. பொருத்தமான மனுதாரர்களின் பணியைப் பெறும் பொருட்டு, வேலை வாய்ப்பு அலுவலகங்களிலுள்ள பதிவேடுகளில் தகுதி வாய்ந்தவர்கள் இல்லை என்பதால், அத்தகைய காலி இடங்களுக்கு செய்தித்தாள்களில் விளம்பரம் செய்யப்பட்டது.

13.4. வேலைவாய்ப்பு அலுவலகங்களின் பணி குறித்த விவரங் கள் அடங்கிய அறிவிப்புகள் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டன.

14. வேலையற்றோர் மறுவாழ்வுத் திட்டம்.

14.1. கட்டுக்கடங்காத அளவில் ஏற்பட்டுள்ள வேலையில்லாத திட்டத்திற்கு தீர்வு காணும் பிரச்சினையை அரசு தீவிரமாக பரிசீலித்து வருகின்றது. படித்த வேலையற்றோர்களிடையே உள்ள அவல நிலையைக் களையும் பொருட்டு "வேலையற் றோர் மறு வாழ்வுக்கான" திட்டம் ஒன்றை அரசு உருவாக்கி யுள்ளது. வேலையற்றோர் மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் பெரு வாரியான மக்கள் நலன் பெறச் செய்யும் பொருட்டு வேலையற்று இருப்போர்களின் பெயர்களை ஆண்டிற்கொருமுறை சேர்ப்பதற் கும், அவர்கள் இத்திட்டத்தின் கீழ் உதவி பெறவேண்டுமாயின் அவர்களின் வருட வருமானம் ரூபாய் 6,000-க்குள் இருக்க வேண் டும் என்றும், தொழிலாளர் நல வேலைவாய்ப்புத் துறையின் 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15 ஆம் நாளிட்ட 2143 ஆம் எண் அரசாணையில் சில நிபந்தனைகள் விதிக்கப் பட்டன. இந்த நிபந்தனைகள் பின்னர் தளர்த்தப்பட்டன. தகுதியுள்ளவர்களை காலாண்டுக்கு ஒரு முறை சேர்ப்பதற்கும்,

ஆண்டொன்றுக்கு வருமான வரம்பை ரூபாய் 24,000 என உயர்த்தவும் வகை செய்து தொழிலாளர் நல வேலைவாய்ப்புத்துறையின் 1980-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 25-ஆம் நாளிட்ட 2680 எண்ணுள்ள அரசாணையில் வகை செய்யப்பட்டது.

14.2. ஏற்பளிக்கப்பட்ட கீழே குறிப்பிடப்பட்ட ஏழு பிரிவுகளைச் சேர்ந்தவராய் வேலைவாய்ப்பகத்தில் பதிவு செய்துள்ள ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 50 என்ற விகிதத்தில் தொகை பெற வேலையில்லாதவர் துயர் துடைப்பு நிதித் திட்டம் வகை செய்கிறது:—

1. எல்லா துறைகளிலும் உள்ள பட்டதாரிகள்/பட்டமேற் படிப்பு பட்டதாரிகள்.

2. தகுதியுடைய இடைநிலை ஆசிரியர்கள்.

3. தகுதியுடைய மேல் நிலை ஆசிரியர்கள்.

4. தகுதியுள்ள உடற்பயிற்சி ஆசிரியர்கள். (உயர் நிலை/கீழ் நிலை).

5. தகுதியுள்ள தமிழ் வித்வான்கள் மற்றும் பிறமொழி ஆசிரியர்.

6. தகுதியுள்ள கைவினை ஆசிரியர்கள்.

7. பொறியியலில் தகுதிப்பட்டயம் பெற்றிருப்பவர்கள்.

1980 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து இத்திட்டத்தின் பயனைப் பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. 1980–81 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரொக்கத் தொகை வழங்க ரூபாய் 125 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவரை 22,291 பேர் இத்திட்டத்தின் கீழ் பயனடைய தகுதி வாய்ந்தவர்கள் என கண்டறியப்பட்டு அவர்களுக்கு அறிவிப்பு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. வேலைவாய்ப்பகங்களில் பெறப்பட்ட 12,774 மனுக்கள், சரிபார்ப்பதற்காகவும், தகுதி வாய்ந்தவர்களுக்கு தொகை அளிக்கவும் வட்ட ஆட்சியர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. அவர்கள் இதுவரை 442 ஒப்பளிப்பு ஆணைகளை அனுப்பியுள்ளனர்.

15. ஆதி திராவிடர், பழங்குடியினர் ஆகியோருக்கு இயக்குநர் அலுவலகத்தில் உள்ள தனிப்பிரிவு.

15.1. ஆதி திராவிடர்/பழங்குடியினருக்கான இயக்குநர் அலுவலகத்தில் 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களிலிருந்து

1981 எப்ரல் 21]

உருவாக்கப்பட்ட இத் தனிப்பிரிவு, ஆதி திராவிடர்/பழங்குடியினருக்காக மத்திய அரசுத் துறைகளில் ஒதுக்கப்பட்ட காலியிடங்களில் அவர்களை வேலையில் அமர்த்துவதற்கு தனி நடவடிக்கை மேற்கொண்டது. எழுத்தர்கள்/சுருக்கெழுத்து தட்டச்சர்கள், தணிக்கையாளர்கள் பதவிக்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்க தகுதியுள்ள ஆதி திராவிடர்/பழங்குடியினர்களிடமிருந்து பெறப்பட்ட 232 மனுக்கள் பரிசீலனைக்காக மத்திய அரசு பணியாளர் தேர்வாணைக் குழுவிற்கு அனுப்பப்பட்டன.

15.2. வலுவான அடிப்படைத் தகவல்களைப் பெறும் பொருட்டு எந்தெந்த தொழிலதிபர்களிடம் தகுதியுள்ள ஆதி திராவிடர்/பழங்குடியினர் போதிய அளவு இல்லை என்று கருதப்படுகிறதோ அதைப் பற்றிய விவரங்களை இப்பிரிவு சேகரித்துள்ளது. ஆதி திராவிடர்/பழங்குடியினர் ஆகியோருக்காகவே, கிடைக்கக்கூடிய பயிற்சி வசதிகள் பற்றிய தகவல் அவர்களுக்கு தெரிவிப்பதற்காக சேகரிக்கப்பட்டுள்ளன. அறிக்கை ஆண்டில் 8,232 ஆதி திராவிடர்கள், 293 பழங்குடியினர் தமிழ்நாட்டில் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக பயன் உள்ள வேலைவாய்ப்பைப் பெற்றனர்.

15.3. வேலைவாய்ப்பில் பல்வேறு சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்குச் சமமாக வேலைவாய்ப்பு அளிக்கும் நோக்கத்தோடு, சோதனை அடிப்படையில் 1979 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2 ஆம் நாளிலிருந்து சேலம் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் ஒவ்வொரு சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கும் வேலை ஒதுக்கீடு பற்றிய ஒருங்கிணைந்த பதிவேடுகளை பராமரிக்கும் பணி தொடர்பான முன்னோடித் திட்டம் ஒன்று கொண்டுவரப்பட்டுள்ளது. அறிக்கை ஆண்டில், சேலம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் உள்ள ஒருங்கிணைந்த பதிவேட்டுப் பிரிவு, சேலம் மாவட்டத்தில் உள்ள மாநில அரசு/ஓரளவு அரசு சார்புள்ள நிறுவனங்கள், உள்ளாட்சி நிறுவனங்கள் ஆகியவற்றின் கீழ் உள்ள நிறுவனங்கள் அனைத்திடமிருந்தும் வரப்பெற்ற மொத்த காலி இடங்களுக்கு ஆதி திராவிடர்/பழங்குடியினருக்கான காலி இடங்களில் 18 சதவீதத்திற்கும் மேல் ஒதுக்க முடிந்தது. அறிவிக்கப்பட்ட 940 காலி இடங்களில் (இதற்கு சாதி அடிப்படையிலான ஒதுக்கீடு உண்டு) 180 காலி இடங்கள் (19 சதவீதம்) ஆதி திராவிடர்களுக்கும்/பழங்குடியினருக்கும் ஒதுக்கப்பட்டது. இந்த சிறப்புப் பிரிவு திறமையான முறையில் செயல் பட்டதின் காரணமாக வேலைவைாய்ப்பு அலுவலகத்தில் பெயர் பதிவு செய்து கொண்டுள்ள ஆதி திராவிடர்/பழங்குடியினர் தங்களுக்குரிய வேலைவாய்ப்பினை பெற முடிந்தது.

15.4. பழங்குடியினருக்கு சிறப்பு வாழ்க்கைத் தொழில்பற்றி வழிகாட்டவும், ஒதுக்கப்பட்ட காலியிடங்களுக்கு எந்தெந்த வேலைகளுக்கு தகுந்த பழங்குடியினரை அனுப்பலாமென அந்தந்த

வேலைகளில் உள்ள காலியிடங்களைக் கண்டறியவும், நீலகிரி மாவட்டத்தில் பழங்குடியினருக்கான தனி வாழ்க்கைத் தொழில் வழிமுறை நிலையம் ஒன்று உதகமண்டலம், மாவட்ட வேலை வாய்ப்பகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இப்பிரிவு 1980 மார்ச்சிலிருந்து செயல்படத் தொடங்கியுள்ளது. 1,136 பழங்குடியினருக்கு வாழ்க்கைத் தொழில் வழிமுறைகளை நல்கியது. 30 பழங்குடியினரை வேலையில் அமர்த்தியுள்ளது.

16. 1980-81 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்

கீழ்க்காணும் திட்டங்கள் நடப்பு ஆண்டில் அறிவிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன:—

(1) தொழில் நுட்பப் பயிற்சி பெற்றவர்களின் வேலை வாய்ப்பு பிரச்சினையை கவனிப்பதற்காக திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தனி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் ஏற்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்களிலிருந்து இவ்வலுவலகம் செயல்படத் தொடங்கியுள்ளது.

(2) தொழில் மற்றும் நிர்வாக வேலைவாய்ப்பகத்தை வலுப்படுத்துவதற்காக, அதில் கூடுதல் பணியாளர்களை நியமிக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்த வேலைவாய்ப்பகங்கள் செவ்வனே செயலாற்றும் வகையில், வேலைவாய்ப்பகங்களில் கூடுதல் பணியாளர்களை நியமித்தல், மரச்சாமான்கள் போன்ற பிற வசதிகளை அளித்தல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அ. கைவினைஞர் பயிற்சித் திட்டம்

1.1 தொழிற்பயிற்சி நிலையங்களின் பங்கு

தொழில் வளமும் பெருகும் தொழில் நுட்பப் பயிற்சி பெற்ற கைத்திறப் பணியாளர் அதிக அளவில் தேவைப்படுகின்றனர். இத்தேவையைப் பூர்த்தி செய்ய இந்தியாவில் பல பகுதிகளிலும் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தொழிற் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டன. [illegible] ஆக்கும் பொருட்டு, இந்தத் தொழிற் பயிற்சி நிலையங்களில் பணிமனைகள் உருவாக்கப்பட்டுள்ளன. கைவினைஞர் பயிற்சித் திட்டத்திற்கு இந்தத் தொழிற் பயிற்சி நிலையங்கள் முதுகெலும்பாக உள்ளன. ஒவ்வொரு தொழிற் பயிற்சி நிலையமும் முதல்வரின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. மாநில அளவில் எல்லாத் தொழிற் பயிற்சி நிலையங்களும் வேலை வாய்ப்பு

பயிற்சித் துறை இயக்குநர் மேற்பார்வையில் இயங்குகின்றன. கைவினைஞர் பயிற்சித் திட்டத்தில் கீழ்க்கண்ட வகைப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன:—

(1) தொழிற் பயிற்சி நிலையங்களில் நிறுவனப் பயிற்சி.

(2) 1961 ஆம் ஆண்டு தொழில் பழகுவோர் சட்டத்தின்கீழ் தொழில் பழகுவோர் பயிற்சி.

(3) தொழிற்சாலை தொழிலாளர்களுக்கான மாலை நேர வகுப்புகள்.

(4) தொழிற் பள்ளிகளுக்கான விதிக் கோவையின் கீழ் மானிய உதவி பெறும் தனியார் தொழிற் பள்ளிகளில் கைவினைஞர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

(5) வேலை இழந்த பொற்கொல்லர்கள், மாதிரி அமைப்புத் தயாரிப்பாளர், கைத்தறி நெசவாளர்கள் ஆகியோருக்குத் தொழில் பயிற்சி நிலையங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்களில் (பகுதி நேரம்) தனிப் பயிற்சித் திட்டம்.

(6) வாழ்க்கைத் தொழில் பயிற்சி முற்போக்குத் திட்டம்.

(7) அம்பத்தூர் தொழில் பயிற்சி நிலையத்தில் பணியாளர் பயிற்சித் திட்டம்.

(8) கிராம இளைஞர்களுக்குக் குறுகியகால பயிற்சித் திட்டம்.

(9) சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றத் திட்டம்.

1.2. தொழிற் பயிற்சி நிலையங்கள்—1967–68 ஆம் ஆண்டுத் திட்டத்தின் இறுதியில் 13,112 மாணவர்களைக் கொண்ட 31 தொழிற் பயிற்சி நிலையங்கள் தமிழ்நாட்டில் இருந்தன. 1977-78-ல் கம்மியர் (பொது மின் அணுவியல்) துறையில் பயிற்சி அளிப்பதற்காகத் தனி தொழில் பயிற்சிப் பிரிவு ஒன்று அடையாறு மின்னணுவியல் கூடத்தில் 32 மாணவர்களுடன் தொடங்கப்பட்டது.

1.3. 29 பொறியியல் பிரிவுகளிலும் 8 பொறியியல் அல்லாத பிரிவுகளிலும் பயிற்சி அளிக்கப்படுகின்றது. 18 தொழில் பிரிவுகளின் பயிற்சிக் காலம் ஓராண்டாகவும், ஏனைய 19 தொழிற் பிரிவுகளில் பயிற்சிக் காலம் ஈராண்டாகவும் உள்ளது. மகளிருக்

TRUTH ALONE TRIUMPHS

கென தனியாக தொழில் பயிற்சி பள்ளி ஒன்றும் சென்னையில் இயங்கி வருகிறது. சாதி இட ஒதுக்கீட்டு விதிகளைப் பின்பற்றி ஆண்டிற்கு ஒரு முறை தொழிலாளர் பயிற்சி நிலையங்களில், பயிற்சியாளர்கள் தகுதி அடிப்படையில்தான் சேர்க்கப்படுகின் றனர். 1979 ஆம் ஆண்டை ஒப்பிடுகையில் 1980 ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்ட பயிற்சியாளர்களின் விவரம் வருமாறு :—

	ஜூலை 1979.	ஆகஸ்ட் 1980.
(1)	(2)	(3)
1 பெறப்பட்ட மொத்த விண்ணப்பங்கள்.	1,47,864	92,607
2 அனுமதிக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள்.	7,728	7,891 (10 சதவீத மிகை எண்ணிக்கை உட்பட).
3 நேரடித் தேர்வு	1,556	1,292
4 ஆதி திராவிடர்/பழங்குடியினர்.	1,344	1,393 (18 சதவீதத்திற்கு எதிராக 18 சதவீதம்).
5 பின்தங்கிய வகுப்பினர் ..	4,007	4,626 (50 சதவீதத்திற்கு எதிராக 59 சதவீதம்.)
6 அகதிகள்	224	104
7 உடல் ஊனமுற்றோர்கள் ..	135	90
8 பெண்கள்	321	302
9 முன்னாள் ராணுவத்தினர் ..	75	30
10 மற்றவர்கள்	66	54
	7,728	7,891

1.4 தொழிற் பயிற்சி நிலையங்களில் சேருவதற்கான கல்வித் தகுதி. 18, தொழில்களுக்கு ''பள்ளி இறுதி வகுப்பு வரை படித்திருக்க வேண்டும்'' என்று மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1981 ஏப்ரல் 21]

முன்பு இதற்குக் குறைந்த கல்வித் தகுதி ஒன்பதாம் வகுப்பு படித்திருக்க வேண்டும். எனவே, பயிற்சி பெற்ற கைவினைஞர் அதிக அளவில் இருப்பர்.

1.5. தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சித் திறனை மேம்படுத்தவும் தொழில் பழகுவோர் பயிற்சித் திட்டத்தைச் செவ்விய முறையில் செயல்படுத்தவும், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் உள்ள வட்டார துணை இயக்குநர் அலுவலகங்களுடன், திருநெல்வேலியில் 1980 ஆம் ஆண்டு அக்டோபரில் வட்டாரத் துணை இயக்குநர் அலுவலகம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

1.6. இத்துறையில் இப்போதுள்ள பயிற்சி நிறுவனங்கள், இத்தொழிலில் போதிய பயிற்சி ஆசிரியர்களுக்கான தேவையை முழுவதும் நிறைவு செய்யவில்லை. இதற்கு வழிகாண இத் தொழில் பயிற்சி நிறுவனங்களும் குறிப்பிடத்தக்க பணியாற்றலாம். ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்த்து வைப்பதுடன் மட்டுமின்றி காலணி தயாரிப்பு மையப் பயிற்சி நிலையம், தோல் மைய ஆராய்ச்சி நிறுவனங்கள், தோல் தொழில் நுட்பவியல் நிறுவனம் ஆகிய பயிற்சி நிலையங்கள் இவ்வகையில் மேற்கொண்டுள்ள முயற்சிகளுக்கு உறுதுணையாகவும் தொழில் பயிற்சி நிலையங்கள் பணியாற்றலாம். இதனைக் கருத்தில் கொண்டு 1980—81-ல் வேலூர் தொழில் பயிற்சி நிலையத்தில் ''காலணிகள், தோல் பெட்டிகள், ஏனைய தோல் தயாரிப்புப் பொருட்கள்'' தொடர்பான தோல் தயாரிப்புத் தொழில்கள் இரண்டு தொடங்கப் பட்டுள்ளன.

1.7. பயிற்சி பெறுபவர்கள் பயிற்சி முடிந்த பின்னர் நல்ல வேலை வாய்ப்பு வசதிகளைப் பெறும் பொருட்டு மக்களிடையே குறைந்த ஆதரவு பெற்ற தொழில்களை நீக்கி விட்டு அவற்றிற்குப் பதிலாக அதிக வேலை வாய்ப்பளிக்கும் தொழில்களைப் புதிதாகக் கொண்டு வருவதன் மூலம் தொழிற் பயிற்சி நிலையங்களில் ''தொழில்களைப் பலதிறப்படுத்துதல்'' திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. திருச்சிராப்பள்ளி, நாகப்பட்டினம், தூத்துக்குடி ஆகிய இடங்களிலுள்ள தொழிற் பயிற்சி நிலையத்தில் தற்போது பொருத்துநர் (ஃபிட்டர்) தொழிலில் உள்ள 80 இருக்கைகள் குறைக்கப்பட்டு மக்கள் ஆதரவு பெற்ற கம்மியர் (குளிர் பதனம்-சீர்வளி வசதி), கம்மியர் (வானொலி-தொலைக்காட்சி), கம்பியில்லா தந்திக் கருவி இயக்குபவர் தொழில்களை ரூ. 8.00 இலட்சம் மொத்த செலவில் கொண்டு வர அரசு ஒப்பளித்துள்ளது. வரப் போகும் பயிற்சி ஆண்டில் இது செயல்படுத்தப்படும்.

1.8. தமிழ்நாட்டில் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் அளிக்கப்படும் பயிற்சியின் தரம் பின்வருவனவற்றிலிருந்து மதிப்பிடப்படலாம் :—

ஏற்கெனவே நடைபெற்ற 15 அனைத்திந்திய திறமைப் போட்டிகளில் இம்மாநிலம் 8 முறைகள் முதன்மை இடத்தைப் பெற்றுள்ளது. 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் நடந்த திறமைப் போட்டியிலும் நமது மாநிலம் முழுவதும் முதன்மை இடத்தைப் பெற்றுள்ளது. இதற்கென குடியரசுத் தலைவரின் சுழற்கேடயத்தை 8 ஆவது முறையாகப் பெறும் வாய்ப்பு கிட்டியுள்ளது. 1980 ஆம் ஆண்டு ஜனவரியில் நடைபெற்ற 9 ஆவது அனைத்திந்திய திறமைப் போட்டியின் முடிவுகள் இன்னும் வரவில்லை.

1.9. அனைத்திந்திய தொழிற் தேர்வில் மதிப்பீட்டு நிலையை தரம் உயர்த்தும்பொருட்டு ஓராண்டுக் கால அளவிலான 16 தொழில்களின் விடைத்தாள்களை திருச்சி, மதுரை, கோவை, சென்னை ஆகிய வட்டார மைய இடங்களில் திருத்த 1979 ஜூலையில் ஏற்பாடு செய்யப்பட்டது. இவ் வட்டார மைய இடங்களில் திருத்த ஏற்பாட்டில் 2,700 மாணவர்கள் தேர்வு எழுதியதில் 2,455 பேர் தேறினர். அவ்வாண்டின் மதிப்பீடு 91 விழுக்காடுகளாகும். 1980 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் ஒன்று, இரண்டு ஆண்டு பயிற்சியுடைய 35 தொழில்களுக்கும் இத்திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. 1980 ஆம் ஆண்டு ஜூலையில் நடைபெற்ற அனைத்திந்திய தொழில் எழுதும் பயிற்சியாளர்கள் தேர்வில் 7,929 பயிற்சியாளர் தேர்வு எழுதியதில் 7,137 பயிற்சியாளர்கள் வெற்றி பெற்றனர். இவ்வாண்டின் மதிப்பீடு 90 விழுக்காடுகளாகும்.

1961 ஆம் ஆண்டு தொழில் பழகுவோர் பயிற்சித் திட்டம்.

2.1. 1961 ஆம் ஆண்டு தொழில் பழகுவோர் பயிற்சித் திட்டம் 1963 ஆம் ஆண்டு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. இச்சட்டத்தின் விதித் துறைகளின்படி, தொழில் பழகுவோர் ஆலோசனை வரையறுத்த குறிப்பிட்ட எண்ணிக்கை பயிற்சியாளர்களுக்குக் குறிப்பிட்ட தொழிற் பிரிவுகளில் பயிற்சி அளிப்பது தொழில் அதிபர்களின் கடமையாகும். இப்பயிற்சித் திட்டம் தொழிற் பயிற்சிப் பள்ளிகளுக்கு அளிக்கும் நிறுவனப் பயிற்சியின் தொடர்ச்சியாகும். தொழிற்சாலைகளின் வளர்ந்து வரும் தேவையைப் பூர்த்தி செய்ய போதிய அளவுக்குப் பயிற்சி பெற்ற கைவினைஞர்களை தேசிய அளவில் உருவாக்கி அவர்களின் திறமையை வளர்ப்பதும் பயிற்சி பெற்றவர்களின் முழு நிலைமையை உயர்த்த இயலும் வகையில் இந்தியா முழுவதும் ஒரே சீரான பயிற்சி வசதியை முறைப்படுத்தி செயல்படுத்துவதும் இத்

திட்டத்தின் நோக்கமும் குறிக்கோளும் ஆகும். தொழில் பழகுவோருக்குப் பல்வேறு தொழில்களில் அடிப்படைப் பயிற்சியை தொழில் பயிற்சி நிலையங்கள் அளிக்கின்றன. பயிற்சியின்போது தொடர்புடைய பொருத்தமான அறிவுரையுடன் அவசியமான பட்டறை பயிற்சி அல்லது பணியில் இருக்கும்போது பயிற்சி அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. பயிற்சியின் கால அளவு அந்தந்த தொழிலைப் பொறுத்து ஆறு மாதம் முதல் நாலாண்டுகளாகும். தொழிற் பழகுவோர், பயிற்சியின் இறுதியில் அனைத்திந்திய ஆண்டு திறமைப் போட்டிகளில் பங்கேற்கின்றனர். தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்குத் தொழில் பழகுவோர் பயிற்சி தேசியச் சான்றிதழ் அளிக்கப்படுகிறது.

2.2. 30–9–1979 முதல் 31–3–1980 முடிய இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளோர் விவரப் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

	ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொழில் பழகுவோர் எண்ணிக்கை.		
	பொதுத் துறை.	தனியார் துறை.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
30–9–1979 அன்றுள்ளபடி.	3,289	7,346	10,635
31–3–1980 அன்றுள்ளபடி.	3,539	7,227	10,766

	தேர்வு செய்யப்பட்ட தொழில் பழகுவோர் எண்ணிக்கை.		
	பொதுத் துறை.	தனியார் துறை.	மொத்தம்.
(1) தொடர்ச்சி.	(5)	(6)	(7)
30–9–1979 அன்றுள்ளபடி.	2,818	6,985	9,803
31–3–1980 அன்றுள்ளபடி.	2,708	7,212	9,920

2.3. இன்றுள்ளவாறு தொழில் பழகுவோர் சட்டத்தின் கீழ் 131 தொழில்கள் பயிற்சிக்கென குறிப்பிடப்பட்டுள்ளன. எல்லா தொழில் பழகுவோருக்கும் பயிற்சிக் கால அளவைப் பொறுத்து திங்கள் ஒன்றுக்கு ரூ. 130 முதல் ரூ. 200 வரை பயிற்சி உதவித்

தொகை வழங்கப்பட்டு வருகிறது. 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் அன்றுள்ளபடி தனியார் மற்றும் தமிழக அரசுத் துறையிலும் நிறுவனங்களிலும் 1961 ஆம் ஆண்டு தொழில் பழகுவோர் சட்டம் செயற்படுத்தப்படும் நிறுவனங்கள் 1,548 ஆகும். 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாளன்றுள்ளபடி தொழில் பழகுவோர் சட்டம் செயல்படுத்தப்பட்ட நிறுவனங்கள் 1,215 ஆகும். 1979 ஆம் ஆண்டு ஏப்ரல், அக்டோபர் திங்களில் நடைபெற்ற அனைத்திந்திய தொழிற் பயிற்சி தேர்வில் 4,104 தொழில் பழகுவோர் தேர்வு எழுதியதில் 3,670 பேர் தேர்வு பெற்றனர். 1980-ஆம் ஆண்டு ஏப்ரல், அக்டோபர் திங்களில் நடைபெற்ற பயிற்சித் தேர்வில் 4,149 பேர் தேர்வு எழுதியதில் 3,633 பேர் வெற்றி பெற்றனர்.

3. தொழிற்சாலைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு மாலைநேர வகுப்புகள்.

தொழிற்சாலைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்குத் தொழில் துறை அறிவினை மேம்படுத்தி அதன்மூலம் அவர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பது இத்திட்டத்தின் நோக்கமும் குறிக்கோளும் ஆகும். ஆகையால், தொழிற்சாலை அதிகமாக இருக்கக்கூடிய இடங்களில் இத்திட்டம் தொழிற்பயிற்சி நிலையங்களின் மூலமாகச் செயல்படுத்தப் படுகிறது. அதன்படி கிண்டி, வட சென்னை, அம்பத்தூர், மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அனுமதிக்கப்பட்ட மொத்த பயிற்சி இடங்கள் 1,050 ஆகும். 'பெல்' நிறுவனம் அதில் பணிபுரியும் தொழிலாளர்களின் பயிற்சித் திறனை அதிகரிக்க, அந் நிறுவனத்திற்குள்ளே இத்திட்டத்தைச் செயல்படுத்துகிறது. 50 இருக்கைகளுடன் பற்ற வைத்தல், பொருத்துதல் ஆகிய இரு தொழிற் பயிற்சிப் பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன. 1980 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் நடந்த தேர்வில், தொழிற் சாலையில் பணிபுரியும் 25 தொழிலாளர்கள் தேர்வு எழுதினர். 1980 ஆம் ஆண்டு தேர்வில் 569 பேர் தேர்வு எழுதியதில் 415 பேர் தேர்வடைந்தனர். 1979 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்வில் 491 பேர் தேர்வு எழுதியதில் 373 பேர் தேர்வடைந்தனர். 1981—82 ஆம் ஆண்டில் மேட்டூர் அணை, திருச்சிராப்பள்ளியிலுள்ள தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு மாலை நேரத் தொழிற் பயிற்சி வகுப்புகள் ரூ. 1,00,000 செலவில் நடத்தத் திட்டமிடப் பட்டுள்ளது.

4. நிதி உதவி பெறும் தொழிற் பள்ளிகள்.

வேலைவாய்ப்பு—பயிற்சித் துறை இயக்குநரால் பிறப்பிக்கப்பட்ட, தொழில் பயிற்சிப் பள்ளிகள் ஒழுங்கு முறை விதிக்கோவையின் கீழ் அங்கீகாரம் அளிக்கப்பட்ட 76 தொழிற் பள்ளிகள் தற்சமயம் தமிழ்நாட்டில் உள்ளன. இப்பள்ளிகள் தச்சுத் தொழில், கருமார் தொழில், பொருத்துநர் தொழில், பற்றவைக்கும் தொழில், பூ வேலை, பின்னல் வேலை, துணி வெட்டுதல், தைத்தல் முதலியவற்றில் பயிற்சி அளிக்கின்றன. இத்தொழிற்பிரிவின் பயிற்சிக் காலம் ஒன்று முதல் மூன்று வருடங்கள் வரை அமைந்துள்ளது. இப்பள்ளிகளில் பயிற்சிக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 5,076. தற்போது 4,326 மாணவர்கள் இப்பள்ளிகளில் பயிற்சி பெறுகிறார்கள். அங்கீகரிக்கப்பட்ட எல்லா தனியார் நிறுவனங்களிலும் பயிற்சியின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு எல்லாத் தொழில்களுக்கும் பொதுவான பாடத் திட்டம் தயாரிக்கப்பட்டு எல்லாத் தொழில் நிலையங்களுக்கும் அறிமுகப்படுத்தப்பட்டது. 1975 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் முதல் பொதுவான இறுதி யாண்டுத் தேர்வு நடத்தப்பட்டு வருகிறது. தொழிற் பள்ளிகளுக்கான ஒழுங்கு முறை விதிக்கோவையின் விதித் துறைகளின் படி இப்பள்ளிகள் மானியம் பெறத் தகுதியுடையவை. 1980 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்வில் தேர்வு எழுதின 2,150 பயிற்சியாளர் எல்லோரும் தேர்வு அடைந்தனர். 100 விழுக்காடு வெற்றி கிடைத்தது. 1979-ல் நடைபெற்ற தேர்வினை ஒப்பிடுகையில் தேர்வு எழுதிய 1,950 பேர்களில் 1,910 பேர் தேறினர். வெற்றி 98 விழுக்காடுகளாகும்.

5. சிறப்புப் பயிற்சித் திட்டம்

வேலை இழந்த பொற்கொல்லர்கள், மாதிரி வடிவமைப்புத் தயாரிப்பாளர்கள், கைத்தறி நெசவாளர்கள் முதலியோர் தங்களுக்குப் பொருத்தமான வேலையைப் பெறுவதற்கான சில தொழில் நுட்பப் பயிற்சிகளை அளிப்பது இத்திட்டத்தின் நோக்கமும் குறிக்கோளும் ஆகும். சேலம், திருச்சி, பேட்டை, மதுரை ஆகிய இடங்களிலுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட தொழில் பயிற்சி நிலையங்களில் இத்திட்டம் செயல்படுத்தப் பட்டு வருகிறது. இங்கு கருமார்-தொழில், பொருத்துநர் தொழில், செப்பு வேலைப்பாடு, தகர வேலைப்பாடு ஆகிய இரட்டைத் தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் திங்களொன்றுக்கு ரூ. 10 உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட பயிற்சியாளர்களின் மொத்த எண்ணிக்கை 160 ஆகும். 1979 ஆம் ஆண்டில் 62 பயிற்சியாளர்கள் இவ்வகுப்பில் சேர அனுமதிக்கப்பட்டனர்.

தேர்வு எழுதிய 62 பயிற்சியாளர்களும் வெற்றி பெற்று 100 விழுக்காடு வெற்றியை ஈட்டினர். 1980 ஆம் ஆண்டு நிலைமையை ஒப்பிடுகையில் பயிற்சி பெற அனுமதிக்கப்பட்டு தேர்வு எழுத தெரிந்தெடுக்கப்பட்ட 68 பேர்களும் வெற்றி பெற்றனர்.

6. வாழ்க்கைத் தொழில் மேல் பயிற்சித் திட்டம்.

6.1. தொழில் நுட்பவியலில் நாள்தோறும் பெருகி வரும் நவீன கருவிகளையும் மாற்றங்களையும் கருத்திற் கொண்டு, ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட அல்லது அனைத்து நாட்டு தொழிலாளர் நல நிறுவனத்தின் உதவியுடன் அம்பத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் வாழ்க்கைத் தொழில் மேல் பயிற்சி திட்டம் கொண்டு வரப்பட்டது. வாழ்க்கைத் தொழில் பயிற்சி முற்போக்குத் திட்டத்தின் கீழ் அம்பத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் கீழ்க்கண்ட தொழிற் பிரிவுகள் அதன் எதிராக குறிப்பிடப்பட்டுள்ள நாட்களில் தொடங்கப் பட்டுள்ளன :—

	தொழில் பிரிவின் பெயர்.	தொடங்கப் பட்ட நாள்.
1	இந்திய தர நிர்ணயம் மற்றும் பொறியியல் வரைபடங்களைக் கற்றல்.	15—3—1979
2	உலோக பற்ற வைப்பில் சிறப்புப் பயிற்சி ..	30—4—1979
3	கருவி மற்றும் அச்சு தயாரித்தல்	30—4—1979
4	கம்மியர் (பராமரிப்பு)	30—4—1979
5	மின்சாரம் (பராமரிப்பு)	30—4—1979

6.2. 1980 ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 31 ஆம் நாளன்றுள்ளவாறு 70 தொழில் நிறுவனங்களிலிருந்து அனுப்பப்பட்ட 540 தொழிலாளர்கள் மேற்கூறிய தொழில்களில் பயிற்சி பெற்றுள்ளனர்.

6.3. 1980 ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் 24 ஆம் நாள் நடைபெற்ற ஆலோசனைக்குழு கூட்டத்தில் அனைத்து நாட்டு தொழிலாளர் நிறுவனத்தைச் சார்ந்த பிரதிநிதிகளும், முன்னணி நிறுவனங்களைச் சார்ந்த பிரதிநிதிகளும், அம்பத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் வாழ்க்கைத் தொழில் மேல் பயிற்சித் திட்டத்தின் கீழ் இத்திட்டத்தை செயற்படுத்தியதால் ஏற்பட்ட வளர்ச்சியை வெகுவாகப் பாராட்டினர்.

1981 ஏப்ரல் 21]

6.4. மேற்கூறப்பட்டுள்ளவற்றிற்கு மேலாக, 1981–82ஆம் ஆண்டில் ரூ. 6.00 இலட்சம் செலவில் கோயம்புத்தூரிலுள்ள தொழிற்பயிற்சி நிலையத்தை நவீனப்படுத்தும் திட்டத்தை செயற்படுத்தவும் அரசு கருதியுள்ளது.

7. அம்பத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிற்றுநருக்கான பயிற்சித் திட்டம்.

7.1. இத்திட்டத்தின் நோக்கம் பயிற்றுநர்களுக்குக் கல்வி கற்பிப்பதில் தொழில்நுட்ப உத்தி குறித்தும், ஒலி, ஒளி கருவிகளை உபயோகிப்பது குறித்தும், நிருவாகம் குறித்தும் தனிப் பயிற்சி அளிப்பதேயாகும். இப்பயிற்சித் திட்டம் 1980 ஆம் ஆண்டு ஜனவரியிலிருந்து அம்பத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இளநிலை பயிற்சி அலுவலர்கள் இப்பயிற்சி திட்டத்தினால் நவீன தொழில் நுட்பப் பயிற்று முறையால் பயன் அடைகின்றனர். இப்பயிற்சித் திட்டத்தில் நவீன தொழிற்சாலைகளைப் பார்வையிடுவதும் அடங்கும்.

7.2. பயிற்சி முறை நுட்பங்கள் என்பதின்கீழ், கற்பிக்கும் முறையில் பயிற்சி பாடத் திட்டங்களில் ஏற்பட்டுள்ள புதிய மாற்றங்கள், கற்பிக்கும் முறை குறித்த கோட்பாடுகள் ஆகியவற்றில் பயிற்சி அளிப்பதுடன் இந்த ஆசிரியர்கள் கற்பித்தல் தேர்வு நடத்தி மதிப்பீடு செய்தல் கற்பிப்பதற்கான சாதனங்களை உரிய இடத்தில் காட்டி விளக்கும் முறை ஆகிவற்றையும் தெரிந்துகொள்ளுகின்றனர். நவீன—ஒலி—ஒளிக் கருவிகளைப் பயன்படுத்துவதிலும் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். இதுவரை, 44 பாடமுறைப் பணியாளர்கள் இத்திட்டத்தில் பயனடைந்துள்ளனர்.

8. புத்தறிவு பயிற்சி திட்டம்.

8.1. கைவினைஞர் பயிற்சித் திட்டத்தினை சிறந்த முறையில் செயற்படுத்த தொழிற் பயிற்சி நிறுவனங்களைச் சேர்ந்த முதல்வர்களுக்கு உதவி செய்யும் நோக்குடன் போட்டித் திறனை அதிகரிக்கவும், தலைமை தகுதியை ஏற்படுத்தவும் இயங்குதிறனை உருவாக்கவும் பயிற்சியாளர்களிடையே, தனி திறமையை ஏற்படுத்தவும் தேசிய உற்பத்திக் குழுவால் இப்புத்தறிவு பயிற்சித் திட்டம் 1979 ஆம் ஆண்டு, கிண்டி தொழிற் பயிற்சி நிலையத்தில் ஏற்படுத்தப்பட்டது. 15 தொழிற் பயிற்சி நிலயைங்களிலுள்ள முதல்வர்கள் இதில் பங்கேற்றனர்.

8.2. இத்திட்டம் சிறந்த பலனை அளித்திருப்பதால் மற்றொரு வகுப்பு விரைவில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. 25 இளநிலை பயிற்சி அலுவலர்கள் ஒவ்வொரு வருடமும் இந்தியாவிலுள்ள பல்வேறு தொழிற் பயிற்சி நிலையங்களுக்குப் பயிற்சி பெற அனுப்பப்படுகிறார்கள்.

9. கிராம இளைஞர்களுக்குக் குறுகிய காலப் பயிற்சித் திட்டம்:

9.1. கிராமப்புறக் கைவினைஞர்கள் திறமையுடனும் பயன் தரத் தக்க வகையிலும் தம் தொழிலை செய்வதை ஊக்குவிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். பயிற்சி பெறாதிருக்கின்றவர்களைப் பயிற்சி பெறச் செய்வதும் இதன் நோக்கமாகும். தெரிந்தெடுக்கப்பட்ட கிராமப்புறப் பகுதிகளில் எந்தத் தொழில்களில் கைத்திறன் மேம்பாடு அடையச் செய்ய வேண்டுமோ அந்தத் தொழில்களில் கைத்திறன் அதிகரிக்கச் செய்வதை இத்திட்டம் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. எனவே திறமைமிக்க கைவினைஞர்கள் நகர்ப்புற குடிசைகளுக்குச் செல்வதைத் தடுத்து அவர்களைக் கிராமப்புறங்களிலேயே இருக்கச் செய்து தொழில் புரிவதை ஊக்குவிப்பதையும் இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இப்பயிற்சித் திட்டம் 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 14 ஆம் நாளிலிருந்து 19 தொழிற் பயிற்சி நிலையங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. தெளிப்பான், துடைப்பான், டிராக்டர்கள், டீசல் மூலம் இயங்குகின்ற விசையேற்றங்கள் போன்றவைகளை பழுதுபார்த்தல், சீரமைத்தல் மின்சார சாதனங்களை பழுது பார்ப்பது போன்ற வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட தொழில்களுடன் இரு சக்கர வண்டி பழுது பாத்தல், சைக்கிள் பழுது பார்த்தல், வானொலி பெட்டி பழுது பார்த்தல், மின்சாரக் கம்பி வேலை, மின்சாதனம் பழுதுபார்த்தல், தச்சுவேலை, கருமார் வேலை போன்ற தொழில்களும் பயிற்றுவிக்கப்படுகின்றன. மாலை 6 மணியிலிருந்து இரவு ஒன்பது மணி வரை மூன்று திங்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலத்தில் பயிற்சியாளருக்குத் திங்களொன்றுக்கு ரூ. 75 உதவித்தொகை அளிக்கப்படுகிறது. பயிற்சியின் முடிவில் ஒவ்வொரு பயிற்சியாளர்களுக்கும் ரூ. 100 மதிப்புள்ள ஒரு கருவிப் பெட்டி, அதன் அப்படை விலையில் பாதி விலைக்கு வழங்கப்படுகிறது. இதுவரை இப்பயிற்சி திட்டத்தினால் (அதாவது 31—1—1981 முடிய) 5,300 கிராமப்புற கைவினைஞர்கள் பயனடைந்துள்ளனர்.

9.2. இத்திட்டத்தின் வெற்றியைக் கருத்தில் கொண்டு 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் ரூ. 41.63 இலட்சம், செலவில் 10 தொழிற்பயிற்சி நிலையங்களில் அதாவது தேனி,

திருவண்ணாமலை, தூத்துக்குடி, ஈரோடு, நாகர்கோவில், மேட்டூர் அணை, உளுந்தூர்பேட்டை, புதுக்கோட்டை வேலூர், நாகப்பட்டினம் ஆகிய இடங்களிலுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் செயல்படுத்தப்பட்டு வந்த பகுதி நேர வகுப்புக்களை முழு நேர வகுப்புகளாக அரசு மாற்றி அமைத்துள்ளது. 1981 பிப்ரவரியிலிருந்து தொடர்ந்து இத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினால் ஆண்டொன்றுக்கு 4,200 கிராம இளைஞர்கள் பயன்பெறுவர்.

10. சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகாரமன்றம்:

உலக வங்கியின் உதவியுடன் குடிசை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சென்னை நகர் குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றம் பொறுப்பு ஏற்கும் திட்டமாகும், 1979 ஆம் ஆண்டு, டிசம்பர் திங்களிலிருந்து, இத்திட்டம் கிண்டி, அம்பத்தூர், வடசென்னை தொழிற் பயிற்சி நிலையங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாலை 6 மணியிலிருந்து இரவு 9 மணி வரை பகுதி நேரத் தொழிலாக தச்சு வேலை, ஒட்ட வைப்பு உட்பட இருசக்கர வண்டி வேலை, சாதாரண மின் கம்பி வேலை பழுதுபார்த்தல், கட்டிட வேலை, வண்ணம் பூசுதல், சைக்கிள் பழுதுபார்த்தல், குறைந்த அழுத்த பற்றவைப்பு ஆகிய தொழிற் பிரிவுகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. தொழிற் பிரிவுகளுக்கு ஏற்ப பயிற்சிக்காலம் மூன்று திங்களிலிருந்து ஆறு திங்கள் வரை மாறுபட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஆண்டொன்றுக்குப் பயிற்சி பெறுவோரின் எண்ணிக்கை 640 ஆகும். இதுவரை 470 பயிற்சியாளர்கள், இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றுள்ளனர்.

11. பொதுவானவை:

11.1. நாட்டிலுள்ள பல்வேறு தொழிற்பயிற்சி நிலையங்களில் கைவினைஞர் பயிற்சித் திட்டத்தின் கீழ் வகுத்துள்ள ஆசிரியர் அமைப்பைச் செயல்படுத்த, வாழ்க்கைத் தொழிற்பயிற்சிக்கான தேசியக்குழு பரிந்துரை செய்துள்ளது. இத்திருத்த ஆசிரியர் அமைப்பின்கீழ் பயிற்சியின் தரத்தை மேம்படுத்தவும், சிறந்த முறையில் மேற்பார்வையிடவும் முடியும். மேற்சொன்ன கூற்றினைக் கருத்தில் கொண்டு, இம்மாநிலத்திலுள்ள அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களிலும் தேசியக் குழுவின் பரிந்துரையின்படி வாழ்க்கைத் தொழிற்பயிற்சிக்கான ஆசிரியர் அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வமைப்பை ஏற்படுத்தியதன்மூலம் 65 புதிய பயிற்சி அலுவலர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டன. 379 இளநிலை பயிற்சி அலுவலர்கள், உதவி பயிற்சி அலுவலர்களாக பதவி உயர்வு பெற்றனர். அவ்வாறே வாழ்க்கைத்

தொழில் பயிற்சிக்கு தேசியக்குழு அமைத்த அமைப்பு முறை நிர்வாகப் பணியாளர்களைப் பொறுத்த மட்டிலும் 1981-82 ஆம் ஆண்டில் படிப்படியாகச் செயற்படுத்தப்படும்.

11.2. எதிர்காலத் திட்டங்கள் பற்றிய விவரங்கள் கீழ் பாகம் III-ல் கொடுக்கப்பட்டுள்ளன :—

III வேலை வாய்ப்பு பயிற்சியின்கீழ் எதிர்காலத் திட்டங்கள்

இத்துறையால் செயல்படுத்தத் தயாராக உள்ள பல்வேறு திட்டங்களுடன் கீழே கொடுக்கப்பட்டுள்ள திட்டங்களும் 1981–82 ஆம் ஆண்டு நிறைவேற்றப்படும்.

1 தொழில் நுட்பத் தகுதி பெற்றவர்களுக்கு மதுரையில் தனியாக ஒரு வேலைவாய்ப்பு அலுவலகம் அமைத்தல்;

மதுரையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பல தொழிற்சாலைகள் அமைந்திருப்பதைக் கருத்திற்கொண்டும், ஏராளமான தொழில் நுட்பத் தகுதி பெற்றவர்கள் இருப்பதைக் கருத்திற்கொண்டும், 1981-82 ஆம் ஆண்டு மதுரையில் தொழில் நுட்பத் தகுதிபடைத்தவர்களுக்கென ஒரு தனி வேலை வாய்ப்பு அலுவலகம் நிறுவக் கருதப்பட்டுள்ளது. இந்தத் தொழில் நுட்ப வேலை வாய்ப்பலுவலகம் இந்நிறுவனத்தின் ஒரு மொத்த திறமையை வளர்க்க உதவுவதோடு, தொழிலதிபர்கள் தங்கள் நிறுவனத்திற்குத் தேவையான தொழில் நுட்பத் தகுதிபடைத்தவர்களைத் தெரிந்தெடுக்கவும் வகை செய்கிறது.

கூடுதல் பணியாளர்களைக் கொண்டு வேலைவாய்ப்பு அலுவலகங்களைப் பயன்படுத்தல்

வேலை தேடுபவர்களுக்கும், தொழிலதிபர்களுக்கும் விரைவாகவும் திறமையாகவும் பணிபுரிய வேலைவாய்ப்பு அலுவலகங்களை ஊக்குவிக்கும் பொருட்டு 1981-82 ஆம் ஆண்டு பல்வேறு வேலைவாய்ப்பு அலுவலகங்களில் 20 இளநிலை உதவியாளர்களைக் கூடுதலாக நியமித்து பலப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

5 கூடுதல் பணியாளர்களைக் கொண்டு சென்னை 35—ல் உள்ள தொழில் நிர்வாக வேலை வாய்ப்பலுவலகத்தைப் பலப்படுத்துதல்;

சென்னை, செங்கல்பட்டு மாவட்டங்களிலுள்ள ஒன்பது வேலைவாய்ப்பலுவலகங்களின் பணியைக் கணக்கிடு பொறி மூலம் செயல்படுத்தப்பட்டு வருவதைக் கருத்தில் கொண்டு தொழில்

நிர்வாக வேலை வாய்ப்பகங்களைப் பலப்படுத்தவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. கணக்கிடு பொறி மூலம் விண்ணப்பதாரர்களை தெரிந்தெடுப்பதால் தவறுகளோ அல்லது முறைகேடுகளோ ஏற்பட வாய்ப்பில்லையாதலால், கணக்கிடு பொறி பணியை விரைவு படுத்தும் நோக்குடன் தொழில், நிர்வாக வேலை வாய்பகங்களை 1981–82 ஆம் ஆண்டு கூடுதல் பணியாளர்களைக் கொண்டு பலப்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்பு பயிற்சித் துறை இயக்குநர் அலுவலகத்திற்கும், வேலைவாய்ப்பகங்களில் உள்ள வேலை நிலவரத் தகவல் பிரிவுக்கும் கூடுதல் தட்டச்சருக்கு ஒப்பளித்தல்:

வேலைவாய்ப்பு, பயிற்சித்துறை, இயக்குநர் அலுவலகத்தில் உள்ள வேலை வாய்ப்பக பிரிவில் நகல் எடுக்கும் பகுதியை பலப்படுத்தும் பொருட்டும் நகல்களை விரைவில் அனுப்பவும் 1981-82 ஆம் ஆண்டு இப்பிரிவில் இரண்டு தட்டச்சர்களுக்கு ஒப்பளிக்க கருதப்பட்டுள்ளது. மேலும் கடலூர், நாகர்கோவில் உதகமண்டலம், இராமநாதபுரம், கிருஷ்ணகிரி, புதுக்கோட்டையில் உள்ள வேலை வாய்ப்பகங்களைச் சேர்ந்த வேலை நிலவரத் தகவல் திட்டப் பிரிவில் நகல் எடுக்கும் வேலையைத் துரிதப்படுத்த 1981-82 ஆம் ஆண்டு ஆறு தட்டச்சர்களுக்கு ஒப்பளிக்கக் கருதப்பட்டுள்ளது.

5. வேலைவாய்ப்பகங்களுக்கு 12 அறைகள் கொண்ட இரும்பு அலமாரிகள் வழங்குதல் :

வேலை வாய்ப்பகங்களின் செல்திறன் பதிவேட்டிலுள்ள விண்ணப்பதாரர்களின் முழு விவரங்கள் அடங்கிய பதிவு அட்டைகளும் ஏனைய விவரங்களும் தூசி, ஈரம் அல்லது கரையான் அரிக்காமல் பாதுகாக்க 12 அறைகளைக் கொண்ட இரும்பு அலமாரிகளில் பாதுகாத்து வரப்படுகின்றன. வேலைவாய்ப்பலுவலகங்களில் அத்தகைய இரும்பு அலமாரிகள் போதுமான அளவு இல்லாததால், 1981-82 ஆம் ஆண்டு 12 அறைகளைக் கொண்ட 20 இரும்பு அலமாரிகளை வழங்கக் கருதப்பட்டுள்ளது.

6. சேலம் மாவட்டத்தில் உள்ள மேட்டூரிலும், இராமநாதபுரத்தில் உள்ள விருதுநகரிலும் துணை வேலை வாய்ப்பகங்களை அமைத்தல்:

தொழிலாளர் நல தேசியக் குழுவின் பரிந்துரைக்கிணங்கவும் வளர்ந்துவரும் மக்கள் தொகை, வளர்ந்து வரும் வேலை வாய்ப்பு தகவல் நடவடிக்கைக்கேற்பவும், தொழிலதிபர்களின் எண்ணிக்கை, முதன்மை வேலை வாய்ப்பகங்களை அணுகமுடியாத நிலையில் உள்ள கிராமங்களைச் சேர்ந்த வேலை வாய்

பற்றோரின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு, 1981–82 ஆம் ஆண்டு, சேலம் மாவட்டத்தில் உள்ள மேட்டூரிலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள விருதுநகரிலும் இரண்டு துணை வேலை வாய்ப்பகங்களை ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

7. வட்டார துணை இயக்குநர் அலுவலகத்தை மதுரையில் ஏற்படுத்தல்:

பல்வகைப் பகுதிகளைப் பயனுள்ள முறையில் மேற்பார்வையிடவும், கட்டுப்பாட்டின்கீழ் வைத்துக்கொள்ளவும், வேலை தேடுவோரின் குறைகளை விரைந்து தவிர்க்க தற்போது தலைமை அலுவலகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் அதிகாரங்களை வட்டார அலுவலகங்களுக்கு மாற்றும் செயற்குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன. இவ்வழியில் முதற்படியாக, 1981–82 ஆம் ஆண்டு ஒரு வட்டார துணை இயக்குநர் அலுவலகத்தை மதுரையில் ஏற்படுத்தி அதில் நியமிக்கப்படும் துணை இயக்குநருக்கு அதிகாரத்தை ஒப்படைக்கவும் கருதப்பட்டுள்ளது.

8. மதுரை கோயம்புத்தூர் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் வகுப்புவாரியாக வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீடு செய்யும் ஒருங்கிணைந்த பதிவேட்டை நிர்வகிக்க ஒரு தனி பிரிவை அமைத்தல்

சேலம் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் தற்போது செயல்பட்டுவரும் ஒருங்கிணைந்த பதிவேட்டு திட்டத்தால் பல்வேறு சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வேலை ஒதுக்கீடு அந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்குக் கிடைப்பதில் உறுதி ஏற்பட்டுள்ளது. இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுவதைத் தொடர்ந்து 1981–82 ஆம் ஆண்டு மதுரை, கோயம்புத்தூர் மாவட்ட வேலை வாய்ப்பலுவலகங்களில் அத்தகைய பிரிவுகளை ஏற்படுத்தவும், வகுப்பு வாரியாக வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு செய்யும் ஒருங்கிணைந்த பதிவேட்டைப் பராமரிக்கவும் கருதப்பட்டுள்ளது.

9. சென்னை, மதுரை, அண்ணாமலை நகரிலுள்ள பல்கலைக் கழக வேலை வாய்ப்புத் தகவல் மற்றும் வழிகாட்டு நிலையங்களை பலப்படுத்துதல்:

சென்னை, மதுரை, அண்ணாமலை நகர் ஆகிய இடங்களில் உள்ள பல்கலைக் கழக வேலைவாய்ப்பு தகவல் மற்றும் வழிகாட்டு நிலையங்கள் பல்கலைக் கழகங்களில் படித்த பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புகள், வாழ்க்கை தொழில் முறைகள் போன்ற தகவல்களை வழங்குவதில் தகுந்த முறையில் வழி

1981 ஏப்ரல் 21]

காட்டி வருகின்றன. பல்கலைக் கழக வேலை வாய்ப்பு தகவல் மற்றும் வழிகாட்டும் நிலையங்கள் போதிய பணியாளர்கள் இல்லாமையால் அவர்களால் அத் துறையில் அதிகரித்துள்ள வேலைப் பளுவிற்கு ஈடு கொடுக்க முடியவில்லை. 1981—82 ஆம் ஆண்டில் சென்னை, மதுரை, அண்ணாமலை நகரிலுள்ள பல் கலைக் கழக வேலைவாய்ப்பு மற்றும் வழிகாட்டும் நிலையங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு கூடுதல் உதவியாளர்களைக் கொண்டு பலப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

10. செங்கற்பட்டு, கிண்டி, புதுக்கோட்டையில் உள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் ஆதரவு குறைந்த சில தொழில்களுக்கு பதிலாக வேறு தொழில்களை மாற்றியமைத்தல்

தொழில் நுட்பவியலில் ஏற்பட்டிருக்கும் விரைவான முன்னேற்றத்தின் காரணமாகவும் மாற்றங்களின் காரணமாகவும் சில தொழில்களுக்கு தொழிற் பயிற்சி நிலையங்களில் கொடுத்து வரும் பயிற்சி ஆதரவு குறைந்துள்ளது. இதைக் கருத்தில் கொண்டு செங்கற்பட்டு தொழிற் பயிற்சி நிலையத்திலுள்ள ''பற்றவைத்தல்'' தொழிலுக்குப் பதிலாக ''பண்ணை சம்பந்தப்பட்ட கம்மியர்'' தொழிலையும், கிண்டி, புதுக்கோட்டையில் உள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் ரூபாய் 5·00 இலட்சம் செலவில் கம்மியர் (மோட்டார் வண்டிகள்) தொழிலை மாற்றியமைக்கவும் கருதப்பட்டுள்ளது.

11. தர்மபுரியில் பெண்களுக்கென புதிய தொழில் பயிற்சி நிலையமொன்றை ஏற்படுத்தல்

தற்போது சென்னையில் மட்டும் பெண்களுக்கென ஒரு தொழிற்பயிற்சி நிலையம் செயல்பட்டு வருகிறது. தருமபுரி பின் தங்கிய மாவட்டமாக இருப்பதால் அங்கு பெண்களுக்கு மட்டும் பயிற்சி அளிக்கக்கூடிய பல்வேறு தொழில்களைக் கொண்ட ஒரு புதிய தொழிற் பயிற்சி நிலையத்தை தொடங்கக் கருதப்பட்டுள்ளது. இதற்கென, 1981—82 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் நிலத்தைக் கையகப்படுத்த வகை செய்யப் பட்டுள்ளது.

12. அரக்கோணத்தில் ஒரு புதிய தொழிற் பயிற்சி நிலையத்தை ஏற்படுத்துதல்

அரக்கோணம் பகுதியில் தொழிற்பேட்டை தொகுதி ஒன்று வேகமாக வளர்ந்து வருகிறது. வேலூர், திருவண்ணாமலையில் உள்ள தொழிற் பயிற்சி நிலையங்கள் வெகுதூரத்தில் இருப்பதால் அவைகள் அரக்கோணப் பகுதியில் உள்ள தொழிற்சாலையைச் சேர்ந்த தொழில் வல்லுநர்களுக்குத் தேவைப்படும் போதிய

வசதிகளை அளிக்க முடியாத நிலையில் உள்ளன. அரக்கோணத்தில் பல்வேறு தொழிற் பயிற்சியில் 288 இடங்களைக்கொண்ட புதிய தொழிற் பயிற்சி நிலையம் ஒன்றை ஏற்படுத்தக்கருதப் பட்டுள்ளது.

13. ஈரோட்டில் உள்ள தொழிற்பயிற்சி நிலையத்திற்கு விடுதி ஒன்றைக் கட்டுதல்

ஈரோட்டிலுள்ள தொழிற் பயிற்சி நிலைய பயிற்சியாளர்களின் தற்போதைய விடுதி, இத் தொழில் பயிற்சி நிலையத்தில் இருந்து வெகு தொலைவில், வாடகைக் கட்டிடத்தில் உணவு வசதியின்றி இருக்கிறது. ஆகையினால், ஈரோட்டில் இருக்கும் தொழிற் பயிற்சி நிலையத்தில் நிலையானவிடுதி ஒன்றினைக்கட்ட கருதப்பட்டுள்ளது. இதற்கென 1981—82 ஆம் ஆண்டில் தொடக்கச் செலவுக்கென ரூ. 2.00 இலட்சம் ஒதுக்கப்பட்டு உள்ளது.

14. தற்போதுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களைக் காலத்திற்கேற்ப மாற்றி அமைத்தலும் ஏ. வி. டி. எஸ். திட்டத்தை கோயம்புத்தூர் தொழிற்பயிற்சி நிலையத்தில் அறிமுகப்படுத்துதலும்

திட்டக் குழுவின் பரிந்துரைக்கேற்ப பல முக்கிய மாநிலங்களில் தெரிந்தெடுக்கப்பட்ட சில நிரந்தரமான தொழிற் பயிற்சி நிலையங்களை ஒருங்கிணைக்கும் பொருட்டு கோயம்புத்தூரில் உள்ள தொழிற் பயிற்சி நிலையத்தில் வாழ்க்கைத் தொழில் மேல் பயிற்சி திட்டத்தை ஆண்டு ஒன்றுக்கு 768 பயிற்சியாளர்களுக்கு முற்போக்கு தொழில்களில் பயிற்சி அளிக்க கருதப்பட்டுள்ளது. இதற்கு ஆகும் செலவு ரூ. 6.00 இலட்சம்.

15. நிர்வாகப் பணியாளர்களுக்கும் தேசியக்குழு வகுத்துள்ள பயிற்சி திட்டத்தை அமுல்படுத்தும் முறையில் தொழிற் பயிற்சி நிலையங்களை பலப்படுத்துதல்

தமிழ்நாட்டில், தொழிற் பயிற்சி நிலையங்களில் தற்போது உள்ள நிர்வாகப் பணியாளர்களின் எண்ணிக்கை, தேசீயக் குழுவிற்கு, மைய அரசால் வாழ்க்கைத் தொழிற் பயிற்சிக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்ட அளவிற்கும் குறைவாகவே உள்ளது. தொழிற் பயிற்சிக்கான தேசியக் குழு அமைத்துள்ள மாற்றி அமைக்கப்பட்ட வாழ்க்கைத் தொழிற் பயிற்சித் திட்டத்தை தொழிற் பயிற்சி நிலையங்களில் உள்ள தொழில் நுட்ப பணியாளர்களுக்கு மட்டுமாவது செயல்படுத்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அரசின் இந்த ஆணையைக் கருத்தில் கொண்டு நிர்வாகப்பணியாளர்களின் இடையேயும், 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 3.00 இலட்சம் செலவில் இம்மாதிரியான பணியாளர் அமைப்புகளை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1981 எப்ரல் 21]

16. தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள உபயோகமில்லாத இயந்திரம் மற்றும் கருவிகளை மாற்றி அமைத்தல்

1956 ஆம் ஆண்டு பெரும்பான்மையான தொழிற் பயிற்சி நிலையங்களில், 20 ஆண்டுகளுக்கு மேலாக, பழுதடைந்த இயந்திரங்கள் மாற்றப்படாமலேயே இருந்து வருகின்றன. மேலும் சில தொழில் பாடத்திட்டத்தை வேறு தொழில் பாடத்திட்டத்துடன் இணைத்தும் மாற்றியும், 'கம்மியர்' தொழிற்பயிற்சித் திட்டமாக மாற்றியுள்ளதாலும், சில முக்கிய கருவிகளையும் சாதனங்களையும் மாற்றி அமைக்கவேண்டியது இன்றியமையாததாகிறது. 23 தொழிற்பயிற்சி நிலையங்களில், சில முக்கிய கருவிகள், சாதனங்கள், பற்றாக்குறையாக உள்ளன. முதற்படியாக, வடசென்னை, திருச்சிராப்பள்ளி, சேலம், மதுரை ஆகிய இடங்களில் உள்ள நான்கு தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு 1981–82 ஆம் ஆண்டில் ரூபாய் 2.00 இலட்சம் செலவில் கருவிகளும், சாணைபிடிக்கும் இயந்திரமும் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மத்திய தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு இளநிலை அதிகாரிகளை பயிற்சி பெறும் பொருட்டு முகமையில் அனுப்புதல்

பயிற்சித் துறையில் தங்களைத் தாங்களே ஆழ்ந்த அனுபமுள்ளவர்களாகவும், பயிற்சி முறைகள் தொழில் நுட்ப உத்திகள் போன்றவற்றை அறிந்துகொள்ளவும். ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு திங்கள் இளநிலை பயிற்சி அதிகாரிகள் மத்திய தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு பயிற்சி பெறுவதற்காக முகமையில் அனுப்பப்படுகிறார்கள். இவ்வாறு பயிற்சி பெறுவதற்காக புதிதாகத் தெரிந்தெடுக்கப்பட்டவர்களை, நேரடியாக பயிற்சிக்கனுப்பும் வகையில், 1981–82 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ. 1.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

18. தொழில் பழகுவோர் பயிற்சி திட்டம்:

(அ) அம்பத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய இடங்களில் தொழிற்பயிற்சி தொடர்பாக அறிவுரை வகுப்பு மையங்களை அமைத்தல்

தற்போது, அம்பத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய இடங்களில் உள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் வாழ்க்கைத் தொழிற் பயிற்சித்திட்டத்தின் கீழ், பயிற்சி பெறுவதற்காகவுள்ள இடவசதி, முறையே 352, 1,024, 1,016 ஆகும். மேலும், அத்தொழிற் பயிற்சி நிலையங்களில் வாழ்க்கை தொழிற் பயிற்சி சிறப்புத் தொழிலாளர்களுக்கு மாலை நேர வகுப்புகள் மாநிலச் சிறப்புத்திட்டங்கள் போன்ற சிறப்புப் பயிற்சிகளும்

அளிக்கப்படுகின்றன. இப்பயிற்சி நிலையங்களில், தொழில் பழகுவோர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்களின் எண்ணிக்கை முறையே 318, 392, 618 ஆகும். இரண்டாவது கட்டமாக தொழிற் பயிற்சி பழகுவோர் திட்டத்தின் கீழ், அம்பத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய இடங்களில் தொழிற் பயிற்சி தொடர்பாக அறிவுரை வழங்கும் சிறப்பு நிலையங்களை 1981-82 ஆம் ஆண்டில் ரூபாய் 94. இலட்சம் செலவில் தொடங்கக் கருதப்பட்டுள்ளது.

(ஆ) தாராபுரத்தில் தொழிற்பயிற்சி தொடர்பாக அறிவுரை வழங்கும் நிலையத்தை அமைத்தல்.

கோயம்புத்தூரில் உள்ள தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிற்சியாளர்களின் கூட்டம் அதிகமாக இருப்பதாலும், தொழில் பழகுவோர் உணவிற்கு தங்களுடைய செலவினங்களை தங்களுக்குக் கொடுக்கப்படும் உதவிப் பணத்தைக் கொண்டு சரிக்கட்ட முடியாத நிலையில் இருப்பதாலும், தாராபுரத்தில் ஒரு தொழிற்பயிற்சி தொடர்பாக அறிவுரை வழங்கும் நிலையத்தை பின்வரும் பணியாளர்களைக் கொண்டு அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது,

1. தொழில் பழகுவோர் உதவி ஆலோசகர் (இளநிலை)	1
2. பயிற்சி உதவி அதிகாரி	1
3. பகுதிநேரப் பயிற்சியாளர்	3
4. இளநிலை உதவியாளர்/தட்டச்சர் ..	1

1981–82 ஆம் ஆண்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(இ) கடலூரில் தொழிற்பயிற்சி தொடர்பாக அறிவுரை வழங்கும் நிலையத்தை பலப்படுத்துதல்.

வேலைப்பளு அதிகமாக இருப்பதால், இந்த நிலையத்தின் தலைவர், தற்போது தொழிற் பயிற்சி தொடர்பாக அறிவுரை வழங்கும் வகுப்புகளை தகுந்த முறையில் மேற்பார்வையிட முடியவில்லை. மேலும் அவர் தனது வட்டாரத்தில் உள்ள 29 நிறுவனங்களில் நிறைவேற்றப்பட்டுவரும், தொழில் பழகுவோர் பயிற்சித் திட்டத்தையும் பார்வையிட வேண்டியுள்ளது. எனவே, அவரது வேலைப் பளுவை சிறிதளவு குறைக்கவும், பயிற்சியின் தரத்தை உயர்த்தவும் 1981–82 ஆம் ஆண்டிலே

TRUTH ALONE TRIUMPHS

1981 ஏப்ரல் 21]

ஒரு தொழில் பழகுவோர் உதவி ஆலோசகர் பதவியை ஏற்படுத்த (இளநிலை) ஒப்புதல் அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஈ) வட சென்னையில் உள்ள தொழிற்பயிற்சி நிலையத்தில் ஒரு தனி வகுப்பறை கட்டுதல்.

வட சென்னை தொழிற்பயிற்சி நிலையத்தில் உள்ள வகுப்பறைகள் கைவினைஞர் திட்டத்தின் கீழ் தொழிற் பயிற்சி பயில்வோர்களுக்கு போதுமானதாக இல்லாமலும், தற்போது அதிக அளவில் பயிற்சி பெறுவோர் சேர்ந்துள்ளதால் இட நெருக்கடியாகவும் உள்ளது. இதனால், பயிற்சி தொடர்பான அறிவுரை வழங்கும் வகுப்புகளுக்கு வரும் தொழில் பழகுவோர் பயிற்சியாளர்களுக்கு போதிய இடவசதி செய்து கொடுக்க முடியவில்லை. ஆகையால் வட சென்னை தொழிற் பயிற்சி நிலையத்தில் ஆறு வகுப்பறைகளையும், தொழிற் பயிற்சி தொடர்பான அறிவுரை வழங்கும் மைய பணியாளர்களுக்கு தனி அறைகளும் 1981–82 ஆம் ஆண்டில் ரூ. 1.00 இலட்சம் செலவில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

19. அம்பத்தூர், மதுரை, கோயம்புத்தூர், தொழிற்பயிற்சி நிலையங்களில் மூன்று உற்பத்தி நிலையங்களைத் தொடங்குதல்

உற்பத்தி சார்ந்த பயிற்சித் திட்டம், பயிற்சியாளர், சுய வேலைவாய்ப்பில் ஈடுபடும்போது அவர்களுக்கு நம்பிக்கையை ஊட்டுகிறது. இத்திட்டம் மகாரஷ்டிரா மாநிலத்தில் உள்ள பூனா, கோலாப்பூர் ஆகிய இடங்களில் உள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் கொடுக்கும் பயிற்சியை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 0.50 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

20. மேட்டூர் அணை, திருச்சிராப்பள்ளி, உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு மாலை நேர வகுப்புகளைத் தொடங்குதல்

இத் திட்டத்தின் கீழ், தற்போது உள்ள நிலையங்களில் நடத்தப்படும் மாலை நேர தொழிலாளர் வகுப்புகள். முக்கிய இடங்களில் தொடங்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளில் பணி புரியும் தொழிலாளர்களுக்குப் பயனளிக்கும் வகையில் இல்லை. இம் மாலை நேர வகுப்புகள், தொழிலாளர்களுக்கு தாங்கள் சார்ந்திருக்கும் தொழிலில் கொள்கை அளவிலான அறிவை வளர்க்கிறது. ஆகையால், வியாபார கொள்கை பற்றிய தொழில், படம் வரைதல், கணிதம் பற்றிய தொழில்களை

மேட்டூர் அணை திருச்சிராப்பள்ளியில் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் 1981-82 ஆம் ஆண்டில் ரூபாய் 1.00 இலட்சம் செலவில், தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

21. மேலே சொல்லப்பட்ட பலவகையான தொழில்களுக்கும் 1981-82 ஆம் ஆண்டில் 29.18 இலட்சம் மொத்த நிதி ஒதுக்கம் தேவைப்படும். 1981-82 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில், இவ்வாறு தேவைப்படும் தொகையை ஒதுக்கீடு செய்ய வகை செய்யப்பட்டுள்ளது.

IV. ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவருக்கு வேலை கொடுத்தல்

தமிழ்நாடு மாநில திட்டக்குழு, இம்மாநிலத்தின் மக்கள் தொகையில் தோராயமாக கிராமப்புறப்பகுதியில் வசிக்கும் மக்களில் 62 சதவீதத்தினரும், நகரப் பகுதியில் வசிக்கும் மக்களில் 53 சதவீதத்தினரும் வறுமைக் கோட்டுக்கு கீழே வாழ்வதாக கணக்கிட்டுள்ளது. அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்க தேவை ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளது. அவர்கள் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள உதவும் ஒரே வழி, ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவருக்கு வேலை கொடுப்பதே ஆகும். வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழும் மக்களின், ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவருக்கேனும் வேலை கொடுக்கும் திட்டம், ஒன்று பரிசீலனையில் உள்ளது.

ஆய்வுகள்.

V. கோரிக்கை 55 பல்வகை மூலதன செலவு 495—ஏனைய சமூக சமுதாய நலப்பணியின் குறித்து மூலதனச் செலவு ஏனைய சமூக சமுதாய நலப்பணிகள் —AB வேலை வாய்ப்பு

கைவினைஞர்கள் பயிற்சித் திட்டத்தை செயல்படுத்துவது தொடர்பாக, கீழ்க்காணும் துணைத் திட்டப் பணிகள் குறித்த மூலதனச் செலவுக்காக, 1981-82 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், ரூபாய் 23.98 இலட்சம் நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.

1. தொழில் பயிற்சி நிலையப் பணியாளர்களுக்கு குடியிருப்பு கட்டுதல்.

இம்மாநிலத்திலுள்ள 25 தொழிற் பயிற்சி நிலையங்களில் பணியாற்றும் பணியாளர்களில், தெரிந்தெடுக்கப்பட்ட பணியாளர்களுக்கு, நிலையான குடியிருப்புகள் உள்ளன. 1981-82 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில்

1981 எப்ரல் 21]

பேட்டையில் உள்ள தொழிற்பயிற்சி நிலையத்தின் மின் கம்பிகளை மாற்றி அமைக்கவும், செங்கல்பட்டில் உள்ள தொழில் பயிற்சி நிலையத்தில் ஒரு மேல் நிலை நீர்த்தொட்டி கட்டவும் ரூபாய் 2,000 நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

2. தொழிற் பயிற்சி நிறுவனங்களில் மாணவர் விடுதி கட்டிடத்தை கட்டுதல்

இம்மாநிலத்திலுள்ள 24 தொழில் பயிற்சி நிலையங்களில் நிலையான மாணவர் விடுதி கட்டிடங்கள் உள்ளன. 1981—82 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 1,000 அடையாள நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

3. தொழில் பழகுவோர் பயிற்சி திட்டம்

கிண்டி தொழிற் பயிற்சி நிலையத்தில் தேவையான கருவிகள் தளவாடங்கள் வாங்குவதற்காகவும் அடிப்படை பயிற்சி வசதிகள் செய்து கொடுக்கவும், 1981—82 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 50,000 நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

4. மேலும் பல்வகை தொழில் பயிற்சிகளை அறிமுகப்படுத்துதல்

இரண்டாம், மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், தொழில் பயிற்சி நிலையங்களில்/மையங்களில் தொடங்கப்பட்ட சில தொழில்களுக்கு மக்கள் ஆதரவு அவ்வளவாகக் கிடைக்க வில்லை. குறிப்பிட்ட பகுதியில் அத்தொழில்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்காததே இதற்குக் காரணமாகும். இதன் விளைவாக, இத்தொழில்களில் சேருவதற்கு மாணவர்கள் முன் வரவில்லை. தொழில் பயிற்சி வசதிகள் வீணாவதைத் தடுக்கும் பொருட்டும், ஒவ்வொரு தொழில் பயிற்சி நிலையத்திலும், அனுமதிக்கப்பட்ட இடங்கள் முழுவதையும் பயன்படுத்தவும், மக்களிடையே குறைந்த ஆதரவு பெற்ற தொழில்களை நீக்கி விட்டு அவற்றிற்குப் பதிலாக அதிக வேலைவாய்ப்பளிக்கும் தொழில்களை புதிதாகக் கொண்டு வருவதன் மூலம் பல் வகைத் தொழிற் பயிற்சிகளை அறிமுகப்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 1970—71 முதல் 1975—76 வரையில், தமிழ்நாட்டில் தற்போதுள்ள தொழில் பயிற்சி நிலையங்களில் உள்ள 768 இடங்கள் இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப் பட்டன. கோயம்புத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் தற்போது பொருத்துநர் (ஃபிட்டர்) தொழிலில் உள்ள 32 இருக்கைகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு, மக்கள் ஆதரவு பெற்ற, கம்மியர் (குளிர் பதனம்-சீர்வளி வசதி) தொழிலுக்காக அவை ஒதுக்கப்பட்டு, 16 பயிற்சி பெறுபவர்

களுக்கு ஒரு பிரிவு என்ற வீதத்தில், இரு பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டு, 1978 ஆகஸ்ட் மாதம் முதல் அப் பிரிவுகளில் மாணவர் கள் சேர்ந்து பயிற்சி பெற அரசு அனுமதி வழங்கியது. ஒப்பளிக்கப்பட்ட ரூபாய் 8·00 இலட்சத்திலிருந்து, வெவ்வேறு தொழிற் பயிற்சி நிலையங்களில் முக்கியமாக நாகப்பட்டினம் திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி ஆகிய இடங்களில் உள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் உள்ள, குறைந்த ஆதரவு பெற்ற தொழிலான பொருத்துநர் (ஃபிட்டர்) தொழிலுக்கு பதிலாக, மூன்று புதிய முக்கிய தொழில்களாகிய, கம்மியர் (வானொலி மற்றும் தொலைக் காட்சி), கம்மியர் (குளிர் பதனம்-சீர்வளி வசதி), கம்பியில்லாத தந்தி இயக்குபவர், தொழில்களை 1981–82-ஆம் ஆண்டு முதல் அறிமுகப் படுத்தும் வகையில், கருவிகள் சாதனங்கள் வாங்க ரூபாய் 2,69,000 நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும் 1981–82-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் கட்டிடம் கட்டும் பொருட்டு ரூபாய் 1,000 அடையாள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

5. சாதனங்கள் வாங்குதல்

பல்வேறு தொழில்களுக்காக, மத்திய அரசு வரையறுதத கருவிகள், சாதனங்கள் குறித்த தரப் பட்டியலைத் திருத்தி அமைத்ததனால் கம்மியர் (மோட்டார் வாகனங்கள்) கம்மியர் (குளிர் பதனம்-சீர்வளி வசதி) கருவிகளும், சாதனங்களும் வாங்க வேண்டியுள்ளது. இதற்காக 1981–82 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 23,000 மதிப்புடைய பற்றவைக்கும் சாதனம் வாங்க நிதியொதுக்கம் செய்யப் பட்டுள்ளது.

6. தொழிற் பயிற்சி நிறுவனங்களை மேம்படுத்துதல்

1981–82-ஆம் ஆண்டு வரவு- செலவுத் திட்ட மதிப்பீட்டில் சாட்டியச் செலவின் கீழ் ரூபாய் 1,000 அடையாள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தொழிற் பயிற்சி நிலையங்களில் பழு தடைந்த விசையின் இணைப்புகள், பழுதடைந்த மின் பம்புகள் போன்றவற்றை மாற்றி அமைக்கும் பொருட்டும், மேல்நிலை நீர்த்தொட்டிகள் கட்டும் பொருட்டும், 1981–82-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 77,000 நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இதைத் தவிர, பராமரிப்பு மேற்பார்வை யாளர்களின் பயனுக்காக, கருவிகள். சாதனங்கள் வாங்க, 1981–82-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 5,000 நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

1981 ஏப்ரல் 21]

7. கம்மியர் தொழில் (பொது மின்னணுவியல்) பயிற்சி.

கம்மியர் (பொது மின்னணுவியல்) தொழில் பயிற்சி அளிப்பதற்காக, அடையாறு மின்னணுக் கருவிகள் தொழில் வளாகத்தில் தொழில் பயிற்சி பிரிவு ஒன்று 1977-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களிலிருந்து தொடங்கப்பட்டுள்ளது. சுற்றுப்புற வசதிகள் பயிற்சி பெறுபவர்களுக்கு, தேவைப்படுமாதலால், இப்பிரிவு அடையாறு மின்னணுக் கருவிகள் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. புதிதாகத் தொடங்கப்பட்ட, இப்பிரிவிற்குத் தேவைப்படும் இயந்திரமும், சாதனமும் வாங்குவதற்காக, 1981–82-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 10,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

8. தற்போதுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் நவீன வசதிகள் செய்து கொடுத்தல்.

8·1 நவீனக் கருவிகளை அதிகமாகப் பயன்படுத்துவது தொழில் நுட்பவியலில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் ஆகியவற்றைக் கருதி, ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம், அனைத்து நாடுகள் தொழிலாளர் அமைப்பின் உதவியுடன், அம்பத்தூர் தொழில் பயிற்சி நிலையத்தில், வாழ்க்கை தொழில் பழகுவோர் மேம்பாட்டுப் (பயிற்சிப் பிரிவு ஒன்று) தொடங்கப்பட்டுள்ளது. ' ஏ,வி.டி.எஸ். 'Advanced vocational Training system இத்திட்டத்தின்கீழ், கீழ்க்காணும் தொழில்கள் அம்பத்தூரில் தொடங்கப்பட்டுள்ளன.

(1) இந்தியத் தர நிர்ணயம், பொறியியல் வரைபடங்கள் வரைதல்.

(2) பற்றவைப்போர் சிறப்புப் பயிற்சி.

(3) கருவி மற்றும் அச்சுவார்ப்பவர்.

(4) கம்மியர் (பராமரிப்பு).

(5) கம்மியர் (மின்சாரப் பராமரிப்பு).

8·2. இதுவரை 70 தொழில் நிறுவனங்களிலிருந்து அனுப்பப்பட்ட 494 தொழிலாளர்கள், மேற்கூறிய தொழில்களில் பயிற்சி பெற்றுள்ளனர். கட்டிடங்கள் கட்டுவதற்கான 1981–82 ஆம் ஆண்டு வரவு-செலவுத்திட்ட மதிப்பீட்டில் ரூ.2,000 நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நவீனப்படுத்தப்பட்டுள்ள திட்டத்தை அம்பத்தூர், தொழிற்பயிற்சி நிலையத்தில் செயல்படுத்தும் பொருட்டு, இயந்திரங்கள் மற்றும் தளவாடப் பொருள்கள் வாங்கவும், மேலும்

வேலூர் தொழிற்பயிற்சி நிலையத்தில் இரண்டு தோல் சம்மந்தப் பட்ட தொழிலை ஆரம்பிக்கவும் 1981–82 ஆம் ஆண்டுவரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.1,00000 நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

9. கிராம அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கும் திட்டம்.

9·1. கிராமங்களிலுள்ள கைவினைஞர்களுக்குப் பல்வேறு தொழில்களில், குறுகிய கால அளவில் பயிற்சி அளிப்பதற்கான திட்டம் ஒன்றை நிறைவேற்றுவதற்கு தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இப்பயிற்சித் திட்டம் 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 14 ஆம் தேதியிலிருந்து 19 தொழில் பயிற்சி நிலையங்களில், 11 கைவினைத் தொழில்களில் பயிற்சி அளிக்கும் வகையில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இத்திட்டம், கிராமப்புற கைவினைஞர்களின் கைத்திறனை வளர்த்து, அவர்கள் தொழிலை மேலும் செவ்வனே செய்ய உதவி செய்வதையே நோக்கமாகக்கொண்டுள்ளது, இது வரையில், பயிற்சி அற்றவர்களாக, உள்ள கைவினைஞர்களுக்கு கைத் தொழிலில் பயிற்சி அளிப்பதையும், இத்திட்டம் குறிக் கோளாகக் கொண்டுள்ளது. இதனால், தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமப் பகுதிகளில், தேவைப்படும் தொழில்களில், கைத்திறனை மேம்படுத்த, வகை செய்யப்பட்டுள்ளது.

9·2. இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டதா லும் கிராமப்பகுதியிலுள்ள இளைஞர்களிடையே இத்திட்டத் திற்கு நல்ல ஆதரவு கிட்டியுள்ளதாலும் 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் 10 தொழிற் பயிற்சி நிலையங்களில் தற்போது அளிக்கப்பட்டுவரும் பகுதி நேரப் பயிற்சித் திட்டத்தை ரூ. 41·63 இலட்சம் செலவில் முழுநேர பயிற்சித் திட்டமாக மாற்றி அமைக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்தும் வகையில் பணிமனைகள், விடுதிகள், குடியிருப்பு வசதிகளுடன் கூடிய விடுதிகள் பே ன்றவற்றைக் கட்ட 1981-82 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.17·13 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இதைத் தவிர, இத்திட் டத்தை செயல்படுத்த தேவைப்படும் கருவிகள். சாதனங்கள், மேசை, நாற்காலிகள் போன்றவற்றை வாங்க ரூ. 1·43 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம்.

அயல்ந ட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் (தமிழக அரசைச் சார்ந்தது) 1956–ஆம் ஆண்டின் வணிக நிறுவனச் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக 1978-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30-ந் தேதி அன்று நிறுவப்பட்டது. இந் நிறுவனம் ரூ. 50 லட்சத்தை அங்கீகரிக்கப்பட்ட மூலதனமாகக்

1981 ஏப்ரல் 21]

கொண்டுள்ளது. இத்தொகையில் இதுவரை ரூ. 10 இலட்சம் இந் நிறுவனத்திற்கு வழங்கப் பெற்றுள்ளது. இந் நிறுவனத்தின் நோக்கங்கள் (1) வெளி நாட்டில் வேலை வாய்ப்பைப் பெற்று தருவது (2) வெளிநாட்டில் பணிபுரியும் தொழிலாளர்களால் சேமித்து அனுப்பி வைக்கப்பெறும் தொகையினை முதலீடு செய்வது (3) இந்தியாவிலும் வெளி நாட்டிலும் கூட்டு தொழிற் நிறுவனங்கள் நிறுவுவது, (4) இந்தியப் பொருட்களின் ஏற்றுமதியை மேம்படுத்துவது ஆகியவையாகும். இந்நிறுவனம் தன் மூலமாகத் தேர்வு செய்யப் பெற வேண்டிய அனுபவமும் பல்வேறு தொழிலில் திறமை வாய்ந்தவர்களின் புள்ளி விவரத் தொகுப்பு ஒன்றை அமைத்துள்ளது. 1981-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 28-ஆம் நாள் வரை இவற்றில் பதிவு செய்துள்ளவர்களின் எண்ணிக்கை 2,903 ஆகும். இந்நிறுவனப் ஐக்கிய அரபு குடியரசு, ஈராக் ஆகிய நாடுகளுக்கு 106 பணியாளர்களை அனுப்பி வைத்துள்ளது. அவர்கள் மூலமாக ஆண்டு ஒன்றுக்கு தோராயமாக ரூ. 16 இலட்சம் அன்னியச் செலாவணியாகக் கிடைக்குமென்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 102 பேர்களை இந்நிறுவனத்தின் மூலமாக ஈராக் நாட்டில் பணி புரிய அனுப்பும் முன்னேற்பாடுகள் முடிவுறும் நிலையில் உள்ளது. இந்நிறுவனம் மேலும் 120 தொழிலாளர்களை ஈராக் நாட்டிற்கு அனுப்ப தேர்வு செய்வதற்கான முன்னேற்பாடுகளைச் செய்து வருகிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1981 ஏப்ரல் 21

இணைப்பு II.

[254 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

தமிழ்நாட்டில் வீட்டு வசதி.

1981—82

கொள்கை விளக்கக் குறிப்பு.

வீட்டுவசதி முக்கிய அடிப்படைத் தேவையாக உள்ளது. ஒவ்வொருவரும் நியாயமாக தனக்கு சொந்தமாக வீடு கட்ட விழையலாம். அண்மையில் கட்டிடம் கட்டும் பணி உச்சக்கட்டம் அடைந்து, அதன் விளைவாக நம் மாநிலத்தில் வீட்டு வசதி குடியிருப்புகளின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவுக்கு உயர்ந்துள்ளது. எல்லோருக்கும் வீட்டு வசதி செய்து கொடுப்பதென்பது மிகப்பெரும் செயல். இருப்பினும், இந்தப் பிரச்சினையை தீர்க்க நிதிப்பற்றாக்குறை, கட்டிடப் பொருள்கள் பற்றாக்குறை இன்னும் மற்றவைகளுக்கு இடையேயும், நம் மாநிலம் முன்னோடியான முயற்சிகளை எடுத்துக்கொண்டுள்ளது. நகர மற்றும் கிராமப்புறங்களில் உள்ள தொழில் துறையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களும், பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினரும் தங்களது மிகக் குறைந்த வருவாய் மூலம் வீடுகளைக்கட்ட இயலாது. எனவே, மாநிலத் திட்டம் இதனைக் கருத்தில் கொண்டு சமுதாய வளர்ச்சித் திட்டங்களில் மிக முக்கியமான இச்சமூக நல முதலீட்டில் ஏற்படும் பற்றாக்குறையை நிரப்ப வேண்டும். நிறைவேற்றப்படும் பல்வேறு திட்டங்களின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் கிராம வீட்டுவசதிச் சங்கங்கள் மூலம் நிறைவேற்றப்படும் கிராம வீட்டுவசதித் திட்டம்.

1. ஆளுகை அமைப்பு.—

2. வீட்டு செதிச் சங்கங்களின் கூட்டுறவுச் சங்கப் பதிவாளர், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் மற்றும் 100 முதனிலை சங்கங்கள் வாயிலாக கிராம வீட்டுவசதித் திட்டத்தை நிறை

1981 ஏப்ரல் 21]

வேற்றும் பொறுப்பினை ஏற்றுள்ளார். அவருக்கு துணையாக மண்டல உதவிக் கூட்டுறவுச் சங்கப் பதிவாளர்களும், மேற்பார்வை அலுவலர்களும் உதவிபுரிகின்றனர்.

2. கிராம வீட்டுவசதித் திட்டம்.

3. நம் மாநிலத்தில் உள்ள பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் பயனடையும் வண்ணம், 1976–77-ஆம் ஆண்டு முதல் கிராம வீட்டு வசதித் திட்டம் ஊரக வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஊரக வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள் அதன் உறுப்பினர்களுக்கு இருபதாண்டுகளில் திரும்பப்பெறும் கடன்களை வழங்குவதற்காக, அமைக்கப்பட்டுள்ளது. சென்னையில் அமைந்திருக்கும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் தலைமைச் சங்கமாயிருந்து, நம்மாநிலத்திலுள்ள முதனிலை கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களுக்கு தேவையான நிதியினை வழங்குகிறது. இச்சங்கம் இந்திய ஆயுள்காப்புறுதிக் கழகம், இந்திய பொதுக் காப்புறுதிக் கழகம் மற்றும் அரசு இவற்றிடமிருந்து பெறும் கடன்கள் பங்குத் தொகைகள் மூலமாகவும், மற்றும் உறுப்பினர் சங்கங்களிடமிருந்து ஒருசேரப் பெறும் வைப்புத்தொகை மூலமாகவும், தனது நிதியாதாரங்களைத் திரட்டுகிறது. மற்றும் டில்லியிலுள்ள வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக்கழகமும், நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளும், சலுகை வட்டி வீதத்தில் கடன்கள் வழங்குவதற்கு முன்வந்துள்ளன.

4. மக்கள் தொகையில் 80 சதவீதம் பேர் கிராமப்புறங்களில் வாழ்கின்றனர். இக்கிராமப்புற மக்களுக்கு வீடுகள் கட்டும் பணியினை மேலும் உயர்த்தும் வண்ணம், 1978–79-ஆம் ஆண்டில் தொடங்கிய ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், கிராமப் பகுதிகளில் ஊரக வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக, ஒரு இலட்சம் வீடுகள் கட்டப்பட வேண்டுமென அரசு முடிவெடுத்தது. கிராம வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் கிடைக்கின்ற நிதியாதாரங்களைக்கொண்டு அதிக அளவில் மக்கள் பயனடைய வேண்டும் என்ற நோக்கத்திலும், இத்திட்டத்தின்கீழ் கட்டப்படும் வீடுகள் ஒரே வடிவமைப்பில் இருக்க வேண்டும் என்ற நோக்கத்திலும், 200 சதுர அடி பரப்பளவில் அமைந்த ஒரே மாதிரியான வடிவமைப்பு பயன்படுத்தப்படுகிறது. கட்டிடப் பொருள்களின் விலையேற்றத்தையும், தொழிலாளர்களின் கூலி உயர்வையும் கருத்தில் கொண்டு இம்மாதிரி வீட்டின் மதிப்பீட்டுத் தொகையை ரூ. 3,000 த்திலிருநது 1980-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1-ஆம் நாள் முதல் ரூபாய் 3,750-க்கு அரசு உயர்த்தியுள்ளது. உறுப்பினர் அதிக பரப்பளவு உள்ள வீட்டினைக்கட்ட விரும்பினால் தன்னுடைய சொந்த செலவில் ஒன்று அல்லது இரண்டு அறைகளை கட்டிக் கொள்ளலாம்.

[1981 ஏப்ரல் 21

3. முன்னேற்றம்.

5. கிராம வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் நிதி மற்றும் கட்டுமானப் பணியில் இதுவரை அடைந்துள்ள முன்னேற்றம் கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரப்பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளது :

ஆண்டு.	இலக்கு.	கட்டுமானப்பணியில் சாதனை கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. ஆதி திராவிடர்கள்.	மற்றவர்கள்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)
1978–79 ..	10,000	3,003	4,427	7,430
1979–80 ..	30,000	21,481	7,560	29,041
1980–81 ..	40,000	15,009	4,943	19,952

28—12—981 தேதிய நிலவரம்.

கட்டப்பட்டுக்கொண்டிருக்கும் வீடுகளின் எண்ணிக்கை. ஆதி திராவிடர்கள்.	மற்றவர்கள்.	நிதி பற்றிய சாதனைகள். ஒப்புதலளிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை.	செலவிட்ட தொகை.
(6)	(7)	(8)	(9)
			(ரூபாய் இலட்சத்தில்.)
..	..	3,763	545.00
..	..	55,467	1,642.00
22,343	5,287	73,756	415.82

4. திருத்திய திட்டம்.

6. இத்திட்டத்தின்கீழ் வீடுகளைக் கட்டுவதற்கான, கடன்களைப் பெறுவதற்கு கிராமப்புற மக்களிடமிருந்து குறிப்பாக ஆதி

திராவிடர்களிடமிருந்து மிக அதிகமான கேட்பு உள்ளது. மைய அரசின் திட்டக்குழு ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் காலத்தை 1978–83 என்பதிலிருந்து 1980–85ஆக மாற்றியமைத்துள்ளது. இதன் அடிப்படையில் 1980–81 ஆம் ஆண்டு முதல் 1984–85 ஆண்டு வரைக்கான மாற்றியமைக்கப்பட்ட ஆறாவது ஐந்தாண்டு திட்டத்தில் கிராமப்புறங்களில் ''இரண்டு இலட்சம் வீடுகள்'' கீழ்க்கண்ட வண்ணம் கட்ட அரசு முடிவெடுத்துள்ளது:—

ஆண்டு.	கட்டப்பட விருக்கும் வீடுகள்.
(1)	(2)
1980-81	40,000
1981-82	40,000
1982-83	40,000
1983-84	40,000
1984-85	40,000

மேற்கண்ட திட்டத்தினை நிறைவேற்ற ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 75 கோடி ரூபாய் நிதியினை திரட்ட வேண்டியிருக்கும்.

நகர்ப்புற கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் :

7. ஆயுள் காப்புறுதிக் கழகத்திடமிருந்து பெறும் கடனை நகர்ப்புற வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் நிதியுதவியாக அளித்து வருகிறது. நகர்ப்புற வீட்டு வசதித் திட்டத்தில் அடைந்துள்ள முன்னேற்றம் கீழேயுள்ள விவரப்பட்டியலில் தரப்பட்டுள்ளது.

ஆண்டு.	கட்டுமானப்பணியில் சாதனை கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை.	நிதிபற்றிய சாதனை வழங்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்.)
(1)	(2)	(3)
1978–79	4,520	761.00
1979–80	6,598	1,375.00
1980–81	7,000	550.00
(உத்தேசிக்கப்பட்டது).		(பிப்ரவரி, 1981 நிலவரப்படி).

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மூலம் நகர்ப்புற வீட்டுவசதி

8. மாநிலம் முழுவதும் வீட்டுவசதி திட்டங்களை செயலாற்றுவதில் திட்டமிட்ட வளர்ச்சியை மேற்கொள்ளும் வகையில் சென்னையில் ஒருபிரிவும், திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு வீட்டுவசதிப் பிரிவாக மூன்று வீட்டுவசதி பிரிவுகளுடன் வாரியம் 1961 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் அமைக்கப்பட்டது. பின்னர், வேலூர், சேலம், ஈரோடு ஆகிய இடங்களிலும் வீட்டுவசதிப் பிரிவுகள் அமைக்கப்பட்டன. வீட்டு வசதி வாரியம் மாநிலத்தில் நகர்ப்புறங்களில் வீட்டுவசதி தேவை குறித்து திட்டமிட்டு, அவற்றை ஒருங்கிணைத்து செயல்படுத்துகிறது. பல்வேறுபட்ட சமூக வீட்டு வசதி திட்டங்களை, வாரியம், உயர் வருவாய்த் தொகுதியினர் முதல், பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர்கள் வரை உள்ள பலதரப்பட்ட மக்களுக்காக நிறைவேற்றி இம்மாநிலத்தில் வீட்டு வசதி இருப்பினை பெருக்குகிறது. வீட்டு வசதி வாரியம் தனது திட்டங்களை நிறைவேற்ற ஆகும் செலவு மதிப்பீடு 1980-81 ஆம் ஆண்டு மதிப்பீடான ரூ. 27 கோடியிலிருந்து 1981-82 ஆம் ஆண்டுக்கு ரூ. 29.50 கோடிக்கு உயர்த்தப்பட்டுள்ளது. சமூக வீட்டுவசதித் திட்டங்களைப் பற்றிய விவரங்கள் கீழே உள்ள விவரப்பட்டியலில் தரப்பட்டுள்ளன :—

திட்டங்கள்.	ஒதுக்கீடுதாரர்களின் வருமான வரம்பு.	ஒதுக்கீடுதாரர்களின் திருப்பித் தர வேண்டிய நிபந்தனைகள். முன்பணம்.	மீதமுள்ள தொகை.
(1)	(2)	(3)	(4)
1 பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர்.	மாதவருமானம் ரூபாய் 350-க்கு மேற்படாமல்.	10 சத விகிதம்.	240 மாதத் தவணைகள்.
2 குறைந்த வருவாய்த் தொகுதியினர்.	மாதவருமானம் ரூபாய் 351 முதல் ரூபாய் 600 வரை.	25 சத விகிதம்.	180 மாதத் தவணைகள்.
3 நடுத்தர வருவாய்த் தொகுதியினர்.	மாதவருமானம் ரூபாய் 601 முதல் ரூபாய் 1,500 வரை.	25 சத விகிதம்.	144 மாதத் தவணைகள்.

1981 ஏப்ரல் 21]

4 உயர்ந்த வருவாய்த் தொகுதியினர்.	மாத வருமானம் ரூபாய் 1,501 அதற்கு மேலும்.	25 சத விகிதம்.	96-லிருந்து 120 மாத தவணைகளில்.

9. பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர்க்கான திட்டத்தின் கீழ் பயன்பெறும் பிரிவினருக்கு நிறைய வீடுகள் கட்டப்பட வேண்டும் என்ற கருத்தில் வீட்டுவசதி குடியிருப்பு பகுதிகளில் பல்வேறுபட்டவர்களுக்கான வீட்டுவசதி கீழ்க்கண்ட சதவிகிதத்தில் இருக்க வேண்டுமென அரசு கொள்கை அளவில் முடிவெடுத்துள்ளது :—

	சதவிகிதம்.
பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர்	45
குறைந்த வருவாய்த் தொகுதியினர்	35
நடுத்தர வருவாய்த் தொகுதியினர்	15
உயர்வருவாய்த் தொகுதியினர்	5

முன்னேற்றம்.

10. மேற்குறிப்பிட்டுள்ள திட்டங்களை செயல்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

திட்டம்.	இதுவரை கட்டப்பட்ட குடியிருப்பு களின்எண்ணிக்கை.	1980-81 ஆம் ஆண்டு. கட்டப் பட வீட்டுக் குடியிருப் புகள்.	1980-81 ஆம் ஆண்டு. மதிப் பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்).	1981-82 ஆம் ஆண்டு. கட்டப் பட விருக் கும் குடியி ருப்பு கள்.	1981-82 ஆம் ஆண்டு. மதிப் பீட்டுத் தொகை (ரூபாய் இலட் சத்தில்)
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1 பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர்.	9,046	1,500	44.77	3,020	280.16

திட்டம்.	1980-81 ஆம் ஆண்டு. இதுவரை கட்டப் பட்ட குடியிருப்புகளின் எண்ணிக்கை.	கட்டப் பட இருக்கும் குடியிருப்புகள்.	மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்)	1981-82 ஆம் ஆண்டு. கட்டப் பட விருக்கும் குடியிருப்புகள்.	மதிப்பிட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்)
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
2 குறைந்த வருவாய்த் தொகுதியினர்.	12,974	2,750	305.19	2,274	247.62
3 நடுத்தர வருவாய்த் தொகுதியினர்.	8,164	1,150	807.20	1,129	710.41

நிலம் கையகப்படுத்தல்-வீட்டுமனை மேம்பாட்டுத் திட்டம்.

11. நிலத்தின் விலைகளின் ஊகவாணிகத்தைத் தடுக்கும் பொருட்டும் நிலத்தின் விலையைக் குறைக்கும் பொருட்டும், வீடு கட்டுவதற்கு நியாயமான விலையில் நிலம் கிடைக்கச்செய்யும் பொருட்டும், பெருமளவில் வளர்ந்து வரும் நகரங்களில் நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டும் நிலங்களைப் பெருமள்வில் முன்னதாக கையகப்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். 1956 ஆம் ஆண்டு முதல் இதுவரை 4,629·92 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளது. 1980-81 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு ரூ. 25.00 இலட்சம் ஒதுக்கப்பட்டது. 1981-82 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ. 25.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத் தொகை வீட்டு வசதி வாரியத்திற்கு கடனாக அளிக்கப்படும். வரவு செலவு திட்ட ஒதுக்கீடு வீட்டு வசதி வாரியம் இத்திட்டத் திற்கு ஒதுக்கியுள்ள நிதிக்கு துணை ஒதுக்கீடாக அமையும். வீட்டு வசதி வாரியம் 1981-82 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ. 208.10 இலட்சம் செலவிடக் கருதியுள்ளது.

தொழிற்சாலை தொழிலாளர்களுக்கென வீட்டு வசதித் திட்டம்.

12. இத்திட்டத்தின் கீழ் வீட்டுவசதி வாரியம் மாத வருமானம் ரூ. 350-க்கும் குறைவாக உள்ள தொழிற்சாலை தொழிலாளர்களுக்கென குடியிருப்புகளைக் கட்டி வாடகை

அடிப்படையில் ஒதுக்கீடு செய்கிறது. இத்திட்டத்தின் கீழ் 1979–80 ஆம் ஆண்டு வரை வீட்டு வசதி வாரியம் 2,494 குடியிருப்புகளை கட்டியுள்ளது. 1980–81 ஆம் ஆண்டில் 200 குடியிருப்புகளைக் கட்ட வீட்டு வசதி வாரியம் ரூ. 20 இலட்சம் செலவிட உத்தேசித்துள்ளது. 1981–82 ஆம் ஆண்டில் 120 குடியிருப்புகள் கட்ட ரூ. 20 இலட்சம் வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் நிறைவேற்றப்படும் "சுய நிதியுதவித் திட்டம் :

13. வீட்டு வசதி வாரியத்தினால் கட்டப்பட்ட வீடுகள் மற்றும் அடுக்குமாடி வீடுகளை ஒதுக்கீடு செய்யும் பொழுது ஏற்பட்ட சமீப கால அனுபவம் நிறைய நபர்கள் விண்ணப்பிக்கின்றனர் என்பதையும், நிறைய விண்ணப்பதாரர்கள் வீடு கிடைக்காமல் ஏமாற்றம் அடைகின்றனர் என்பதையும் எடுத்துக்காட்டியுள்ளது. வீட்டுவசதி வாரியம் செயல்படுத்தும் திட்டங்களினால் போதிய அளவு பயன் பெறாத உயர் வருவாய்த் தொகுதியினர் பயனடையும் வண்ணம் அரசு, சுய நிதிஉதவி திட்டத்தை உருவாக்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கின்ற பொழுது வீட்டின் மதிப்பீட்டுச் செலவில் 25 சதவீதம் விண்ணப்பதாரரிடமிருந்து வசூலிக்கப்படும். எஞ்சியுள்ளத் தொகை, மூன்று தவணைகளில் வீட்டினை கட்டுவதிலுள்ள மூன்று நிலைகளின் அடிப்படையில் வசூலிக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் வீட்டுவதி வாரியத்தினால் தனி வீடுகள் மற்றும் அடுக்கு மாடி வீடுகள் கட்டப்படும். சென்னை நகரிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் சிறந்த வரைபட வல்லுனர்களால் வரையப்பட்ட மாதிரிகளின் அடிப்படையில் சிறப்பான வீடுகள் கட்டப்படும். கிடைக்கும் நிலத்தின் விளவு குறைவாக இருப்பின், அடுக்குமாடி குடியிருப்புகள் விற்பனைக்கு கட்டுவதையும் வீட்டு வசதி வாரியம் யோசிக்கும்.

வீட்டுவசதி வாரியம் கட்டும் வீடுகள்/அடுக்குமாடி வீடுகள் ஒதுக்கீடு செய்தல் :

14. வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்படும் வீடுகளில்/அடுக்குமாடி வீடுகளில் 90 சதவிகிதம் குலுக்கல் முறையில் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. எஞ்சியுள்ள 10 சதவிகித மனைகள்/அடுக்குமாடி வீடுகள்/வீடுகள் அரசு தன் தீர்ப்புரிமையின் கீழ் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

15. பொது மக்களின் நன்மையைக் கருத்தில் கொண்டும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் போன்ற பொதுத்துறை நிறுவனத்தின் திறனைக் கருத்தில் கொண்டும் வாரியம் கேட்டுக் கொண்டதன் பேரில் வாரியத்தின் பணிகளான ஒதுக்கீடுக் குழுவின் மேற்பார்வையின் கீழ் வீடுகள் ஒதுக்கீடு செய்தல், மனைகள்

மற்றும் வீடுகளின் விலைகளைப் பெறுதல், விற்கிரயப்பத்திரங்களை வழங்குதல், வசூல், திருப்பித் தருதல், காலி செய்ய அறிவிப்புகள் வெளியிடல் மற்றும் இன்னபிற பணிகள் வாரியத்தினுடைய சென்னையிலுள்ள கிளை அலுவலகங்களே கவனிக்கும் என அரசு ஆணையிட்டுள்ளது. கணக்குகளை ஒட்டு மொத்தமாக வைத்துக் கொள்ளல், வீட்டுவசதி வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் இருக்குமென்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தனிக்குடியிருப்புப் பகுதி உடைமை உரிமைச்சட்ட முன்வடிவு.—

16. இம்மாநிலத்திலுள்ள நகர்ப்புறப் பகுதிகளில் பொதுவாக நிலம் கிடைப்பது மிகவும் அரிதாக உள்ளது. இதனால், நிலத்தின் விலை குறைந்த நடுத்தர வருமானத் தொகுதியினர் வாங்க முடியாத அளவு உயர்ந்து விட்டது. எனவே இத்தொகுதியினருக்கும் பலமாடி வீடுகள் கட்டித் தருவது அவசியமாகிவிட்டது. இதனை அரசும் பெரிது உணர்ந்து வருகிறது. குறைந்த நடுத்தர வருவாய்த் தொகுதியினர் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் விற்பனைக்காக வீடுகளைக் கட்டுகையில், பெரிய மாநகரங்களில் வீட்டுவசதி நிறுவனங்கள் பல மாடித் தனிக் குடியிருப்பு பகுதிகளை கட்ட வேண்டுமென அரசு விரும்புவது வழக்கம். ஆனால், தனி குடியிருப்புப் பகுதிகளை விற்பனை செய்வது தொடர்பாக இப்போதுள்ள நிபந்தனைகளின்படி தனிக் குடியிருப்புப் பகுதியை வாங்கும் ஒருவர் அதனை அடைமானம் வைத்து சமூக வீட்டு வசதித் திட்டங்கள் மூலமாகவோ அல்லது நிதியுதவி நிறுவனங்களின் மூலமாகவோ அல்லது ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் சொந்தமாக வீடு கட்டும் திட்டத்தின கீழ் தனிக் குடியிருப்புப் பகுதி உடன் உரிமைக்காக கடன் கொடுத்தல் திட்டத்தின் மூலமாகவோ கூட பெற முடியாது. இவ்விடர்பாட்டை நீக்கும் நோக்கத்துடன் அரசு, சட்டம் ஒன்றை இயற்றியுள்ளது. இதனால் ஒரு கட்டிடத்தின் தனிக் குடியிருப்புப் பகுதியின் உடன் உரிமைக்கு வகை செய்ய இயலும். மேலும், அந்தக் குடியிருப்புப் பகுதியை இயங்காச் சொத்து என்ற வகையில் வாரிசுரிமை பெற்று பிறருக்கு மாற்றத் தக்கது ஆக்கலாம். இச்சட்ட முன்வரைவு கூட்டுப் பரிசீலனைக் குழுவின் ஆய்வில் உள்ளது.

காவலர் வீட்டுவசதித் திட்டம்.

17. காவலர் வீட்டு வசதி திட்டத்தின் நோக்கமே, காவலர் துறை சார்நிலைப் பணியாளர்களின் 80 சதவீதத்தினருக்குக் குடியிருப்பு வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்பதாகும். இத்திட்டத்தினை வீட்டு வசதி வாரியமும், பொதுப்பணித்துறையும் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ், முன்னுரிமைத் திட்டங்கள் காவல் துறையின் இயக்குனருடன் கலந்து முடிவு செய்து அதற்கு இணங்க திட்ட வேலைகள் எடுத்துக் கொள்ளப் படுகின்றன. வீட்டுவசதி வாரியத்தால் கோவைப் புதூர் மற்றும்

1981 ஏப்ரல் 21]

இராசா அண்ணாமலைப்புரம் பகுதிகளில் முறையே 1971 மற்றும் 1974 ஆம் ஆண்டுகளில் மொத்தம் 489 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1979–80 ஆம் ஆண்டில் 42 குடியிருப்புகள் முடிக்கப்பட்டுள்ளன. 1980–81 ஆம் ஆண்டில் 250 குடியிருப்புகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1981–82 ஆம் ஆண்டில் 280 குடியிருப்புகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு அலுவலருக்கான வாடகை வீட்டு வசதித் திட்டம்.

18. இத்திட்டம் மாவட்டம் மற்றும் வட்டத் தலைமையகங்களில் பணிபுரியும் அரசு ஊழியர்களுக்குச் சலுகை வாடகை அடிப்படையில் வீட்டு வசதி வழங்குவதற்கு உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை அரசு சார்பில் வீட்டுவசதி வாரியம் செயல்படுத்துகிறது. மேலும், கட்டிய வீடுகளைப் பேணிப்பாதுகாக்கவும் செய்கிறது. இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் கட்டிடங்கள் அரசு உடைமைகளாகும். பொதுவாக இத்திட்டத்தின் கீழ் அரசுக்கு சொந்தமான நிலங்களில் வீடுகள் கட்டப்படுகின்றன.

19. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் தொடக்கத்தில் இருந்து, இதுவரை வீட்டுவசதி வாரியத்தால் 10,731 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 1980–81 ஆம் ஆண்டில் 10,500 வீடுகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளன. 1980–81 ஆம் ஆண்டு, வாரியம் ரூபாய் 310 இலட்சம் செலவிட்டுள்ளது. இத்திட்டத்திற்காக 1981–82 ஆம் ஆண்டில் ரூபாய் 300 இலட்சம் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது, 1,110 வீடுகளைக்கட்ட வாரியம் உத்தேசித்துள்ளது.

20. பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர், குறைந்த வருவாய்த் தொகுதியினர், நடுத்தர வருவாய்த் தொகுதியினர், அரசு அலுவலர்களுக்கான வாடகை வீட்டு வசதித்திட்டம் போன்ற திட்டங்களின் கீழ் வீட்டு வசதி வாரியத்தின் சாதனைகள் கீழே யுள்ள விவரப்பட்டியலில் குறிப்பிட்டுள்ளது.

ஆண்டு.	கட்டப்பட்ட குடியிருப்புகள்.	தொகை (ரூபாய் இலட்சத்தில்.)
(1)	(2)	(3)
1977–78	5,108	1,740.57
1978–79	5,056	2,116.52
1979–80	6,117	2,352.44
1980–81 (உத்தேசிக்கப்பட்டுள்ளது).	7,300	2,700.00
1981–82 ..	8,000	2,950.00

வெளியூர்களில் குடிசைப்பகுதி மாற்றும் பணி.

21. 1961 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் குடிசைப்பகுதி மாற்றும் மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்துகிறது. மாவட்டத் தலைநகர்களான கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களிலுள்ள குடிசைப்பகுதிகளில் 7,698 குடியிருப்புகள் கட்டியுள்ளது.

22. 1980–81 ஆம் ஆண்டு ரூபாய் 60 இலட்சம் செலவில் 400 குடியிருப்புகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1981–82 ஆம் ஆண்டில் ரூபாய் 60 இலட்சம் செலவில் 472 குடியிருப்புகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் நல ஆணையர் நிறைவேற்றும் தனியார் துறையிலுள்ள தொழிலாளருக்கான மலிவு வீட்டுவசதித் திட்டம்.

23. தொழிலாளர்களுக்கு அவர்களுடைய தொழிற்சாலையின் அருகிலேயே ஏற்ற இடங்களில் வீடுகளை அளிப்பதற்காக தொழிலாளருக்கான மலிவு வீட்டு வசதித் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தொழிற்சாலைச் சட்டம், 1948இன் கீழ் வரையறுக்கப்பட்ட தொழிலாளர்களுக்கே வீடுகள் கட்டுவதற்கு தனியார் துறை நிர்வாகிகளுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது.

24. இத்திட்டம் செயல்படுத்தத்துவங்கிய காலம் முதல் 1979–80 ஆம் ஆண்டு வரையிலும் 17 தனியார் துறை நிர்வாகிகள் ரூபாய் 29.68 இலட்சம் கடனும் ரூபாய் 12.12 இலட்சம் ஆதரவுத் தொகையும் பெற்று 1,062 வீடுகளைக் கட்டி முடித்து உள்ளனர்.

25. 1980–81 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 140 வீடுகள் கட்டுவதற்கு ரூபாய் 3,74,500 கடனாகவும், ரூபாய் 1,87,250 ஆதரவுத் தொகையாகவும் வழங்க ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

26. 1981–82 ஆம் நிதி ஆண்டிற்கான ஒதுக்கீடுத் தொகை கடனாக ரூபாய் 5 இலட்சமும், ஆதரவுத் தொகையான ரூபாய் 0.25 இலட்சமும் நிர்ணயிக்கப்பட்டு 228 வீடுகள் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தோட்டத் தொழிலாளர்கள் மலிவு வீட்டுவசதித் திட்டம்.

27. இத்திட்டத்தின் கீழ் தோட்ட அதிபர்கள் தங்களுடைய தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கான உச்ச வரம்புச்

1981 ஏப்ரல் 21]

செலவில் 50 சதவீதம் கடனாகவும் 37.5 சதவீதம் ஆதரவுத் தொகையாகவும் வழங்கப்படுகிறது. 1979 ஆம் ஆண்டில் ஒற்றை அறை வீட்டிற்கான உச்சவரம்பு செலவு ரூபாய் 4,000 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

28. இத்திட்டம் செயல்படுத்தத் துவங்கிய காலம் முதல் தற்பொழுது வரை 21 தோட்ட அதிபர்கள் ரூபாய் 4.99 இலட்சம் கடனாகவும், ரூபாய் 2.68 இலட்சம் ஆதரவுத் தொகையாகவும் பெற்று 553 வீடுகள் கட்டியுள்ளனர்.

29. 1980–81 ஆம் ஆண்டில் 3 தோட்ட நிறுவனங்கள் 133 வீடுகளை கட்டியுள்ளன. இவ்வாண்டிற்கு ரூபாய் 2.96 இலட்சம் கடனாகவும், ரூபாய் 2.35 இலட்சம் ஆதரவுத் தொகையாகவும் வழங்கப்பட்டுள்ளது.

30. 1981–82 ஆம் நிதியாண்டில் 370 வீடுகள் கட்டுவதற்கு ரூபாய் 3.60 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அரசு அலுவலர்களுக்கு வீடு கட்டுவதற்காக முன்பணம் வழங்கல்.

31. அரசு அலுவலர்களுக்கு வீடு கட்டவும், வீட்டுமனைகள் வாங்கி அதில் விடு கட்டவும், முன்னரே கட்டப்பட்ட வீடுகள் வாங்கவும், தங்களுக்குச் சொந்தமான வீடுகளில் உள்ள இட வசதியை விரிவாக்கவும் முன்பணம் வழங்கப்படுகிறது.

32. வீட்டு மனைகள் வாங்கி, அதில் வீடு கட்ட வழங்கப்பட்ட அதிகபட்சத் தொகை ரூபாய் 70,000-த்திலிருந்து ரூபாய் 80,000-க்கு உயர்த்தப்பட்டுள்ளது. கணவன், மனைவி இருவரது கடனைத் திருப்பித் தரும் தகுதியின் அடிப்படையிலும், கடன் வழங்குவதிலுள்ள அதிகப்பட்சத் தொகையின் அடிப்படையிலும் ஒரே வீட்டினைக்கட்ட கூட்டுக்கடனாக வழங்கலாம் என அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

33. அரசு அலுவலர்களுக்கு வீடு கட்டுவதற்காக முன்பணம் வழங்கும் திட்டம் 1979 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1 ஆம் நாள் முதல் பரவலாக்கப்பட்டது. அரசு அலுவலர் வீடுகட்ட கடன் வழங்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அளிக்கப்பட்டது. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையே செயலக ஊழியர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் அனைத்திந்திய பணி அதிகாரிகளுக்கான கடன்களைதொடர்ந்து வழங்குகிறது.

34. 1980–81ஆம் ஆண்டில் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடான ரு. 225 இலட்சம். 1980–81 ஆம் ஆண்டின்

திருத்திய மதிப்பீட்டில் ரூ. 500 இலட்சமாக உயர்த்தப் பட்டது. அரசு 1981–82 ஆம் ஆண்டில் இத்திட்டச் செல வினை மாநில அரசு அலுவலர்களுக்கென ரூ. 500 இலட்சத் துக்கு நிர்ணயித்துள்ளது.

சென்னை மாநகரில் குடிசைப்பகுதி மாற்றும் பணி.

35. 1970 ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்களில் குடிசைப் பகுதி மாற்று வாரியத்தினை அரசு அமைத்து, அதனிடம் சென்னை மாநகரில் உள்ள குடிசைப் பகுதிகளை மாற்றி அமைக்கும் பணியை ஒப்படைத்தது. இப்பணி இதுவரையில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் நிறைவேற்றப்பட்டு வந்தது. 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப்பகுதிகள் (மேம்பாடு நீக்கம்) சட்டம் என்ற சட்டத்தினை இயற்றி குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு சட்ட பூர்வமான அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது.

36. குடிசைப்பகுதி மாற்று வாரியம் அமைக்கும் முன்பு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் 7,191 குடியிருப்புகளைக் கட்டி முடித்திருந்தது. குடிசைப்பகுதி மாற்று வாரியம் துவக்கப்பட்டதிலிருந்து 1977 ஆம் ஆண்டுவரை இவ்வாரியம் ரூ. 2,155 இலட்சம் செலவில் 20,939 குடியிருப்புகளை கட்டியுள்ளது. கடந்த மூன்றாண்டுகளில் (1977 முதல் 1980-வரை) இவ்வாரியம் ரூ. 782 இலட்ச மதிப்புள்ள 6,844 குடி யிருப்புகளைக் கட்டி முடித்துள்ளது.

37. 1980–81 ஆம் ஆண்டில் ரூ. 323.63 இலட்சம் செலவில் 3,212 குடியிருப்புகளை கட்ட உத்தேசித்துள்ளது. 1981–82 ஆம் ஆண்டில் 3,500 குடியிருப்புகளைக் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. 1980–81 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடான ரூ. 150 இலட்சத்திற்கு மாறாக, 1981–82 ஆம் ஆண்டில் ரூ. 250 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. மாநில அரசின் நிதி உதவியோடு கூட, குடிசைப்பகுதி மாற்று வாரியம், டில்லியிலுள்ள வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி கழகத்திடமிருந்தும் நிதி உதவியைப் பெறுகிறது. இதுவரை வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சிக் கழகத்திடமிருந்து 8,776 குடியிருப்புகளைக் கட்ட ரூ. 674.14 இலட்சம் கடனாக பெற்றுள்ளது. 1981–82 ஆம் ஆண்டிலும் அதிக அளவில் நிதியுதவி பெற வாரியம் வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சிக் கழகத்தை அணுகும்.

சென்னை மாநகரில் விரைவுபடுத்தப்பட்ட குடிசைப்பகுதி மேம்பாடு திட்டம்.

38. 1976–77 ஆம் ஆண்டு முதல் குடிசைப்பகுதி மாற்று வாரியத்தினால் குடிசைப்பகுதி மேம்பாட்டு திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது. அடிப்படை வசதிகள் அறவே இல்லாத அல்லது போதிய அளவிற்கு இல்லாத சென்னை மாநகர குடிசைப் பகுதிகளில் அடிப்படை வசதிகளான குடிநீர் வழங்கல், தெரு விளக்குகள், இணைப்புச் சாலைகள், பொதுக் கழிப்பிடங்கள் முதலியன செய்து கொடுப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். 1978–79 மற்றும் 1979–80-ஆம் ஆண்டு களில் குடிசைப் பகுதி மாற்று வாரியம் 12,800 குடும்பங்கள் பயனடையும் வண்ணம் ரூ. 100.61 இலட்சத்தை செலவு செய்துள்ளது. 1980–81 ஆம் ஆண்டில் ரூ. 50 இலட்சம் செலவில் 6,000 குடும்பங்கள் பயனடையும் வண்ணம் வசதிகள் செய்துதரப்படும். 1981–82ஆம் ஆண்டில் ரூ. 50 இலட்சம் செலவில் 6,000 குடும்பங்கள் பயன்பெறும் பொருட்டு வசதிகள் செய்து தரப்படும்.

உலகவங்கி உதவிபெறும் திட்டங்கள்-சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டம்—ஒன்று முழு வசதிகள் அடங்கிய மனைகள் திட்டம்.

39. இத்திட்டத்தை செயல்படுத்தும் பணிக்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் முகவரமைப்பாக உள்ளது. இத்திட்டத் தின்கீழ் முழுவசதிகள் அடங்கிய மனைகள் ஒதுக்கீடுதாரர் களால், நிலைக்கேற்ப, கட்டிடம் கட்டவும், விரிவு படுத்தவும் பயன்படும் வண்ணம் சுகாதார மற்றும் குடியிருப்பு வசதிகள் கூடிய மனைகள், கட்டிடம் கட்ட தேவையான பொருட் களை வழங்குதல், குறைந்த வருமானம் பெறுவோருக்குத் தேவையான சமுதாய நலவசதிகள் முழுவசதிகளடங்கிய நிலத்தை வாணிபத்திற்காகவும், சிறு கைத்தொழில்களுக்காகவும் ஒதுக்கீடு செய்தல் முதலியவை செய்து தரப்படும் இப்பணிகள் 175 ஹெக்டேர் பரப்பளவுள்ள பகுதிகளில் நிறைவேற்றப்படும். அரும்பாக்கம், வில்லிவாக்கம், கொடுங்கையூர் ஆகியவை குறிப் பிடப்பட்ட மூன்று பகுதிகளாகும். இத்திட்டப்பகுதிகளில் செய்யபடும் பணிகுறித்த விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :

அரும்பாக்கம்—

40. அரும்பாக்கத்தில் முழு வசதிகள் அடங்கிய மனைகள் திட்டப்பணிகள் முடிவடைந்து விட்டன. திட்டப்பகுதியில் சாலைகள், குடிநீர் குழாய்கள், கழிவுநீர் மற்றும் சாக்கடை கால்வாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1,058 'ஏ' பிரிவு

குடியிருப்புகள், 462 'பி' பிரிவு குடியிருப்புகள், 179 'சி' பிரிவு குடியிருப்புகள், குறைந்த வருவாய்த் தொகுதியினருக்கான 503 மனைகள், நடுத்தர வருவாய்த் தொகுதியினருக்கான 102 மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. 950 ஒதுக்கீடுதாரர்கள் வீடுகளை கட்டுவதற்காக வங்கி கடனைப் பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சுமார் 620 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 327 வீடுகள் கட்டும் வேலை நடைபெற்று வருகின்றது. பெரியார் ஈ.வெ.ரா. சாலையையும் (பூந்தமல்லி நெடுஞ்சாலை), அரும்பாக்கத்தையும் இணைக்கும் இணைப்பு சாலை அமைக்கப்பட்டுள்ளது. மருந்தகம், முதல் நிலைப்பள்ளிகள், சமூக நலக் கூடங்கள் போன்ற சமுதாய நலப்பணிகள் செய்து தரப்பட்டுள்ளன.

வில்லிவாக்கம்—

41. வில்லிவாக்கத்தின் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் பகுதிகளுக்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. ஏரிக்கரையிலுள்ள முதல் திட்டப்பகுதியில் நிலத்தை சமப்படுத்தும் பணிகள் முடிவடைந்துள்ளது. திட்டப்பகுதிகளில் கால்வாய்கள் அமைக்கும் பணியும் நடைபெற்று வருகிறது. குடிநீர்க் குழாய்கள் பொருத்துவதில் 90 சதவீத வேலையும், கழிவுநீர் குழாய்கள் பொருத்தும் வேலையில் 95 சதவீதமும் முடிவடைந்துள்ளது. சுமார் 690 'ஏ' பிரிவு குடியிருப்புகள், 530 'பி' பிரிவு குடியிருப்புகள். 220 'சி' பிரிவு குடியிருப்புகள் கட்டுகின்ற வேலைகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. 16 'ஏ' பிரிவு குடியிருப்புகளையும், 6 'சி' பிரிவு குடியிருப்புகளையும், கட்டுகின்ற வேலைகள் எடுத்துக் கொள்ளப்படும். கிடைத்த நிலத்தில் சுமார் 720 மீட்டர் நீளமுள்ள சாக்கடைக் கால்வாய்கள் கட்டிமுடிக்க பட்டுள்ளன. மருத்தகம், சமுகநலக்கூடம் மற்றும் ஒரு முதல்நிலை பள்ளிக்கான கட்டுமான வேலைகள் நடைபெற்று வருகின்றன. மூன்றாம் திட்டப்பகுதியில், திட்டப்பணிகள் அண்மையில் தொடங்கப்பட்டுள்ளன. சாலைகளை வரையறுத்தல், கழிவுநீர் கால்வாய்கள் கட்டும்பணி, மனைப் பகுதிகளில் குடிநீர் மற்றும் கழிவுநீர்க் குழாய்கள் பொருத்துதல் ஆகியப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கொடுங்கையூர்—

42. இத்திட்டப் பகுதியில் வேலைகள் தொடங்கி, கொடுங்கையூர் ஏரி வெள்ளசேதத்தை தடுக்க கொடுங்கையூர் ஏரியிலிருந்து கால்வாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. சுமார் 28 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டு சாலைகள் மற்றும் கழிவுநீர் கால்வாய்கள் அமைக்கும் வேலைகள் நடைபெற்று

வருகின்றன. கழிவுநீர் மற்றும் குடிநீர்க் குழாய்கள் பொருந்தும் வேலை நடைப்பெற்று வருகின்றது. 254 'ஏ' பிரிவு குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. 947 'ஏ' பிரிவு குடியிருப்புகள் கட்டும் வேலை பல்வேறு நிலைகளில் உள்ளன. வியாசர்பாடியையும், திட்டப்பகுதியையும் இணைக்கும் சாலை அமைக்கப்பட்டு வருகிறது. ஒரு உயர் நிலைப்பள்ளி மற்றும் இரண்டு முதல்நிலைப் பள்ளிகள் கட்டும் வேலை நடைபெற்று வருகின்றது. மூன்று திட்டங்களையும் நிறைவேற்றுவதற்காக 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை ரூ. 869.03 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1981–82-ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் இத்திட்டங்களை நிறைவேற்ற ரூ. 211·60 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

சென்னை மாநகர் குடிசைப்பகுதி மேம்பாடு திட்டம்.

43. உலக வங்கியின் உதவிபெற்ற "சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டத்தில்" ஒரு முக்கியமான பகுதி குடிசைப் பகுதி மேம்பாடாகும். இத்திட்டத்தின்கீழ் கீழே குறிக்கப் பட்டுள்ள அடிப்படை வசதிகள் செய்து தரப்படுகின்றன:—

(அ) புதிய மேம்பாடு செய்யப்பட்ட சாலைகள், நடைபாதைகள், சாக்கடை வசதி (மழை நீர் மற்றும் கழிவு நீர் வடிகால்கள்);

(ஆ) 10 குடும்பங்களுக்கு ஒரு பொது குடிநீர் குழாய் வீதம் குடிநீர் வழங்கல்;

(இ) 10 குடும்பங்களுக்கு ஒரு பொதுக்கழிவிட அறை ஒரு பொதுக் குளியலறை என்ற விகிதத்தில் வசதிகள்;

(ஈ) சமுதாயக் கல்வி வசதிகள்;

(உ) குடிசைத்தொழில் மையங்கள்

மற்றும்

(ஊ) தெருவிளக்குகள்.

44. மேலே குறிப்பிடப்பட்ட அடிப்படை வசதிகளை செய்து தருவதற்கு, முதலாவது கட்டதிட்டத்தின் கீழ் சராசரியாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ. 1,300 செலவாகும் குடிசைப்பகுதி மேம்பாட்டிற்காகும் செலவு அந்தப் பகுதிகளில் இருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை பொறுத்தது

மட்டுமின்றி அக்குடிசைப் பகுதியின் குடிதண்ணீர் மற்றும் பாதாள சாக்கடை குழாய்களின் அண்மையை பொறுத்துமிருக்கும். 1977—78 ஆம் ஆண்டில் 19 குடிசைப் பகுதிகளில் மேம்பாட்டுப்பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டன. 4,136 குடும்பங்கள் பயனடைந்தன. 1978—79-ஆம் ஆண்டில் 13,401 குடும்பங்கள் பயன் பெறும் வண்ணம். 7 குடிசைப்பகுதிகளில் மேல்பாட்டுபணிகள் தொடங்கப்பட்டன. ஒரு குடிசைப் பகுதியில் மேம்பாட்டுப் பணிகள் முடிவடைந்துவிட்டன. இரண்டு குடிசைப்பகுதிகளில். திட்டப்பணிகள் ஏறக்குறைய முடிவடைந்து விட்டன. இரண்டு குடிசைப் பகுதிகளில் திட்டவேலைகள் நிறைவுறும் தருவதாயிலுள்ளன. எஞ்சியுள்ள, இரண்டு குடிசைப்பகுதிகளில் வேலை நடைபெற்று வருகிறது. 1979—80ஆம் ஆண்டில் மேம்பாட்டுப் பணிகள் செய்வதற்கு 15 குடிசைப் பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. 8,280 குடும்பங்கள் இப்பகுதிகளில் வாழ்கின்றனர். மேலே குறிப்பிட்ட 15 குடிசைப்பகுதிகளில் மூன்று குடிசைப்பகுதிகளில் திட்டப்பணிகள் முடிவடைந்துவிட்டன, எட்டு குடிசைப்பகுதிகளில் திட்டவேலைகள் முடிவடையும் நிலையில் உள்ளன. நான்கு குடிசைப் பகுதிகளில் வேலைகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்திற்காக 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை குடிசைப்பகுதி மாற்றுவாரியம் ரூ. 362.33 இலட்சம் செலவிட்டுள்ளது. சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் முதல் கட்டத்தில் முடிவடையாத பணிகளை நிறைவேற்ற 1981—82 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் ரூ. 17 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

45. மேம்பாட்டுப் பணிகளை நிறைவேற்றும் மற்றொரு முகவர் அமைப்பாக சென்னை மாநகராட்சியும் அரசால் நியமிக்கப்பட்டுள்ளது. 1979—80 ஆம் ஆண்டில் மேம்பாட்டுப் பணிகள் செய்ய 12 குடிசைப் பகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஐந்து குடிசைப் பகுதிகளில் திட்ட வேலைகள் முடிவடைந்துள்ளன. மூன்று குடிசைப்பகுகளில் வேலைகள் நடைபெற்று வருகின்றன. மற்றும், நான்கு குடிசைப் பகுதிகளில் மேம்பாட்டுப்பணி புரிவதற்கான புள்ளி ஒப்பந்தப்பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. 12 குடிசைப் பகுதிகளில் வாழும் 4,137 குடும்பங்கள் பயன்பெறும்.

46. அரசால் வழங்கப்பட்ட மானியத் தொகையான ரூ. 48.54 இலட்சத்திலிருந்து 1981-ஆம் ஆண்டு, பிப்வரரி மாதவரை குடிசைப்பகுதி மேம்பாட்டுப் பணிகளுக்காக சென்னை மாநகராட்சி ரூ. 36.77 இலட்சம் செலவிட்டுள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

குத்தகை மற்றும் விற்பனை ஒப்பந்தங்கள்.

47. குடிசைப்பகுதிகளில் வாழ்கின்ற குடிசை வாசிகளுக்கு பட்டா வழங்க குடிசைப்பகுதி மாற்று வாரியம் 16 குடிசைப் பகுதிகளில் வாழும் 5,565 நபர்களுக்கு முன்பணம் கட்டும்படி அறிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளன. 3,350 நபர்கள் முன் பணம் கட்டியுள்ளனர். 820 நபர்களுக்கு குத்தகை மற்றும் விற்பனை ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. முன்பே ஒதுக்கீடு செய்யப்பட்ட 1.180 நபர்களுக்கு குத்தகை மற்றும் விற்பனை ஒப்பந்தங்கள் வழங்க குடிசைப்பகுதி மாற்று வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

சென்னை நகர் மேம்பாட்டுத் திட்டம் இரண்டு
முழுவசதிகள் அடங்கிய மனைகள் திட்டம்

48. சென்னை பெருநகர் மேம்பாட்டுத் திட்டத்தின் முதல் கட்டத்தில் சென்னை நகர பிரச்சினைகளுக்கு குறைந்த செலவில், குடியிருப்பு பிரிவின் கீழ் துவக்கப்பட்ட தீர்வுகளை மேலும் செம்மைபடுத்துவதும், விரிவுப்படுத்துவதும் சென்னை நகர் மேம்பாட்டுத் திட்டத்தின் இரண்டாவது கட்டத்தின் நோக்கமாகும். வீட்டுவசதி வாரியத்தின் முழு வசதிகளடங்கிய மனைகள் திட்டத்தின்கீழ் 180 ஹெக்டேர் பரப்பளவுள்ள இரண்டு ஊர்களில் கீழ்க்கண்ட திட்டப்பணிகள் செயல்படுத்தப்படும். மேம்படுத்தப்பட்ட சுகாதார வசதி மற்றும் குடியிருப்பு வசதிகள் அடங்கிய மனைகள், சமுதாயத்திற்கு தேவையான வசதிகள், வீடுகட்டுவதற்கான கடன்கள் வழங்குதல், மேம்படுத்தப்பட்ட நிலங்கள், கூரைகள், வாணிப மற்றும் தொழில் உபகரணங்களுக்கான கடன்கள் இத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூ. 15.2 கோடியாகும். சென்னை நகரில் அண்ணா நகரின் அருகில் உள்ள மொகைப்பர் மற்றும் நெற்குன்றம் இத்திட்டம் நிறைவேற்றப்படும். இரு இடங்களாகும். 1980-81 ஆம் ஆண்டில் ரூ. 132.00 இலட்சமும், 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 200 இலட்சமும் செலவிட உத்தேசித்துள்ளது.

சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டம் இரண்டாம் கட்டம்
குடிசைப் பகுதி மேம்பாடு.

49. குடிசைப்பகுதிகளில் வாழ்கின்ற குடும்பங்களுக்கு, தற்போதைய இருப்பிடத்திலேயே குறைந்த மாறுதல்களுடன், குடிநீர் வழங்கல், சாக்கடை வசதி, சுகாதார வசதி, சாலைகள், தெருவிளக்குகள், துப்புரவுப்பணிகள் ஆகியவைகள் செய்துதரப்படும். இத்திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்பட்ட

பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கு இருப்பிட உரிமை, பாதுகாப்பு, சுகாதாரம், சத்துணவு மற்றும் குழந்தைகள் நலத் திட்டங்களும் செயல்படுத்தப்படும்.

50. மாத வருமானம் ரூ. 250 முதல் ரூ. 600 வரை பெறுபவர்களுக்கு வீட்டினை மேம்படுத்த ஒவ்வொருக் குடும்பத்திற்கும் ரூ. 1,500, ரூ. 2,500 மற்றும் ரூ. 3,500 என பல்வேறு விதங்களில் கடன்கள் வழங்கப்படும். 75 சதவீதத்தினர் கடனைப் பெறுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. ரூ. 200-க்கு குறைவாக மாதவருமானம் பெறுவோருக்கு மானியமாக ரூ. 600 வழங்கப்படும். களிமண்ணாலான ஓட்டு வீட்டினைக் கட்டுவதற்கும், விரிவுபடுத்துவதற்கும், அடிப்படைக் குடியிருப்பினை பலப்படுத்துவதற்கும் இந்தக்கடன் தொகை போதுமானதாயிருக்கும், குடிசை வாசிகள் இதற்குத் தேவையான உழைப்பினை நல்குவர்.

51. இத்திட்டத்தின்கீழ் 1981-82 ஆம் ஆண்டு ரூ. 150 இலட்சம் குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் செலவிடப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1981 ஏப்ரல் 21]

இணைப்பு III.

[254-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பை காண்க.]

கோரிக்கை எண். 34.

நகர்ப்புற வளர்ச்சி.

கொள்கை விளக்கக் குறிப்பு.

1. நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டம்:—

1.1. தமிழ்நாட்டில் உள்ள மொத்த மக்கள் தொகையில் 30 சதவீதம் மக்கள் நகர்ப்பகுதிகளில் வாழ்கின்றனர். நல்லவேலை வாய்ப்பு, வாழ்க்கை நிலைமைகள், வாய்ப்புகள் ஆகியவற்றைத் தேடி கிராமப்புறங்களிலிருந்து நகர்ப்பகுதிகளுக்கு மக்கள் குடியேறுவதன் மூலம் அந்த எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இளம் தொழிலாளிகளும், ஆதரவற்ற குடும்பங்களும் கிராமங்களில் உள்ள தங்கள் வீடுகளைவிட்டு வெளியேறி உயிர் வாழ்வதற்காக நகரங்களிலும் மாநகர்களிலும் அதிக எண்ணிக்கையில் குடியேறுகின்றனர். வேலை, வீட்டு வசதி, தண்ணீர், உணவு ஆகியவற்றைத் தேடி அவர்கள் தங்கள் குடும்பங்களை நகரத்திற்கு மாற்றி விடுகின்றனர். நகர்ப்பகுதிகளில் வளர்ந்து வரும் மக்கள் தொகையால் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்க்க சிறப்பான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. திட்டமிட்ட, அவர்கள் வளர்ச்சிப் பணியைக் கண்டறிந்து, தயாரித்து செயல்படுத்துவதற்காக நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்ட இயக்குநர் அலுவலகத்தில் நகர்ப்புற திட்டக் கோட்டம் ஒன்றை ஏற்படுத்துவது முதலாவது நடவடிக்கையாகும்.

1.2. நகரங்களை நோக்கி மக்கள் வருவதானது குடிசைகள் தோன்றுவதற்குரிய மூல காரணங்களுள் ஒன்றாகும். சிறிய நடுத்தர நகரங்களின் வளத்திற்கும் வளர்ச்சிக்கும் தேவையான பணிகள், வசதிகள், வேலைவாய்ப்புகள் ஏனைய அடிப்படை வசதிகள் போன்றவற்றை ஏற்படுத்தி கொடுத்தால்தான் குடிசை பகுதிகள் தோன்றுவதைக் தடுக்கலாம். இதனை எய்த வேண்டுமானால், நகர்ப்பகுதி வளர்ச்சிக்குக் கூடுதல் நிதி ஒதுக்கம் செய்வது மிகவும் முக்கியமாகும்.

1.3. அரசு ஏற்படுத்திய தமிழ்நாடு நகர-நாட்டுப்புற அமைப்பு திட்ட வளர்ச்சி நிதி மூலம், நகர்ப்புற பகுதிகளுக்கான பல வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 1980-81-ல் 56 நகர்ப்புறப் பகுதிகளுக்கு இந்த நிதியிலிருந்து ரூ. 63.00 இலட்சம் நிதி உதவி அளிக்கப்பட்டது.

நல்ல ஆதாயமுள்ள திட்டங்களுக்கும் மனை பணித் திட்டங்களுக்கும் அனுமதி வழங்க 1981-82 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 200.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

1.4. இது தவிர, ஒரு இலட்சம் மக்கள் தொகைக்குக் குறைவாக உள்ள நகரங்களுக்காக ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டங்களின் கீழ் மத்திய அரசு அளித்த நிதி உதவி சிறிய நடுத்தர நகரங்களை மேம்படுத்துவதற்காக பயன்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மத்திய அரசு 40 சதவீதம் கடன் அளிக்கிறது. மாநில அரசு 40 சதவீதம் இணை மானியம் அளிக்கிறது. எஞ்சிய 50 சதவீதம் உள்ளாட்சி மன்றங்களால் அளிக்கப்படவேண்டும். இந்த உதவியை அளிக்கும்போது மத்திய அரசு உள்ளாட்சி மன்றங்களின் நிதி நிலைமையை கணக்கில் எடுத்துக்கொள்கிறது. இத்திட்டத்தின் கீழ் தெரிந்தெடுக்கப்பட்ட சிறிய, நடுத்தர நகரங்களின் பெயர்களையும், ஒவ்வொரு நகரத்திற்கும் அனுமதிக்கப்பட்ட தொகையும் பின்வரும் அட்டவணை விளக்குகிறது.

	நகரத்தின் பெயர்.	அனுமதிக்கப்பட்ட தொகை. (ரூபாய் இலட்சத்தில்.)
1.	திருச்செங்கோடு	28.00
2.	கோபிசெட்டிபாளையம்	18.00
3.	மன்னார்குடி	17.00
4.	மேட்டுப்பாளையம்	15.00
5.	செங்கற்பட்டு	10.00
6.	குன்னூர்	46.00
7.	மானாமதுரை	5.00
8.	தாராபுரம்	21.00
9.	பழனி	20.00
10.	ஆத்தூர்	44.00
11.	திருவண்ணாமலை	51.00
12.	உடுமலைப்பேட்டை	22.75
	மொத்தம்	297.75

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மேலும் இத்திட்டத்தின் கீழ் பின்வரும் எட்டு நகரங்களுக்கு நிதி உதவி அளிப்பது பற்றிய கருத்து மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

1. இராணிப்பேட்டை
2. தேனி
3. காரைக்குடி
4. கோவில்பட்டி
5. பொள்ளாச்சி
6. ஒசூர்
7. நாமக்கல்
8. நாகப்பட்டினம்.

1.5. நவீன வளர்ச்சித் திட்டங்களுக்காக நான்கு முக்கிய நகரங்களின் வான்வெளியிலிருந்து எடுக்கப்பட்ட நிழற்படங்களை நகர்-நாட்டுப்புற அமைப்புத் திட்ட இயக்குநர் அலுவலகம் வைத்துள்ளது. இப்பிரிவைப் படிப்படியாக மேம்படுத்தக் கருதப்பட்டுள்ளது. நகர்-நாட்டுப்புற அமைப்புத் திட்ட இயக்குநர் அலுவலகம், தொழில் நுட்ப நிறுவனங்கள், வருவாய்த்துறை ஆகியவற்றின் கூட்டு முயற்சியுடன், இம்மாநிலத்தில் இயற்கை சீற்றத்தைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகிறது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள நடுத்தர நகர திட்டப்பிரிவு.

1.6. நீர் வழங்கல், சுகாதாரம், கல்வி, சுற்றுப்புறத் தூய்மை, துப்புரவு, துணைச் சத்துணவு, பெண்களுக்கான பொருளாதார நடவடிக்கைகள், பொழுதுபோக்கு வசதிகள். புகலிடங்களுக்கு மேம்பாடு என்பவற்றின் கீழ் திட்டங்களைச் செயல்படுத்த, தஞ்சாவூர் மாவட்டத்தில் நடுத்தர நகரத் திட்டப்பிரிவு ஒன்றை ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. யூனிசெஃப், தனது ஆய்விற்காகவும், சமூக, திட்ட, பொருளாதார அடிப்படை வசதிகளைக் கண்டறிவதற்காகவும் தஞ்சாவூர் மாவட்டத்தைத் தெரிந்தெடுத்துள்ளது. இந்த மாவட்டத்தில் உள்ள சிறிய நடுத்தர நகரங்களுக்கான வளர்ச்சித் திட்டங்களைத் தயாரிப்பதற்கு குறித்த கால வரையறை அடிப்படையிலான கூடுதல் பணியாளர்களின் செலவை தாங்களே ஏற்க அந்நிறுவனம் கருதியுள்ளது. இயக்குநர் அலுவலகம், தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள 34 ஊராட்சி ஒன்றியங்களுக்கும், நகராட்சிகளுக்கும் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டங்களைத் தயாரித்து வருகிறது. அரசு இத்திட்டத்தைக் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டு உள்ளது. இது 1981-82 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும்.

கோயம்புத்தூர், மதுரை, நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்திற்காக திட்ட பிரிவை ஏற்படுத்துதல்.

1.7. பெருந்திட்டங்கள், ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டங்கள் விரிவான வளர்ச்சித் திட்டங்கள் முதலிய நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களைத் தயாரிக்க இம்மாநிலத்திலுள்ள உள்ளூர் திட்ட அதிகார மன்றம் தொழில் நுட்பப் பணியாளர்களைப் பெற்றிருக்க வில்லை. எனவே, 1981-82 ஆம் ஆண்டில் குறித்தகாலத்தில் பணி முடிக்கப்படவேண்டுமென்கிற அடிப்படையில் இப்பணியை கவனிக்க கோயம்புத்தூர், மதுரையிலுள்ள நகர—நாட்டுப்புற அமைப்புத் திட்ட இயக்குநர் அலுவலகத்தைச் சேர்ந்த ஒவ்வொரு வட்டார அலுவலகத்திலும் தொழில் நுட்பப் பிரிவு ஒன்றை ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

விண்ணிலிருந்து நிழற்படம் எடுக்கும் நிலையத்தைப் பலப்படுத்துதல்.

1.8. பெருந்திட்டங்கள், விரிவான வளர்ச்சித் திட்டங்கள், மேம்பாட்டுத் திட்டங்கள் ஆகியவற்றைத் தயாரிக்க இம்மாநிலத் திலுள்ள நகர்-நாட்டுப்புற அமைப்புத் திட்டத்துறை திட்டமிடு வதற்கும், ஏனைய துறைகளுக்கும் உள்ளாட்சி மன்றங்களுக்கும் நாளது தேதி வரையிலான தளப்பரப்பளவைச் சார்ந்த (Planimetric maps) வரைபடங்கள் இன்றியமையாதவை யாகும். இதற்காகத் தேவைப்படும் வரைபடங்களைத் தயாரிக்க நகர்-நாட்டுப்புற அமைப்புத் திட்டத்துறை, மாநில நில அளவைத் துறை, நில ஆவணத்துறை ஆகியவற்றைச் சார்ந் திருக்க வேண்டியுள்ளது. எனவே, அரசு, நம்பத்தக்க வரை படங்களை விரைவாகப் பெறுவதற்கு, வெகு தொலைவிலிருந்து உய்த்துணரும் தேசிய சாதன முகவாண்மையின் உதவியையும் ஆலோசனையையும் பெற்று, நகர்-நாட்டுப்புற அமைப்புத் திட்டத்துறையில் உள்ள விண்ணிலிருந்து நிழற்படம் எடுக்கும் பிரிவைப் பலப்படுத்த தீர்மானித்துள்ளது. இத்திட்டம் 1981-82 ஆம் ஆண்டிலும் செயலாக்கப்படும்.

2. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்:

2.1. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், சென்னைப் பெருநகர்ப்பகுதியை சீராக வளர்ச்சி அடையச் செய்யத் திட்ட மிடுதல், ஒருங்கிணைத்தல், கண்காணித்தல், முறைப்படுத்தல், ஆகிய பணிகளைக் கவனித்து வருகிறது. மாண்புமிகு தொழி—லாளர் நலத்துறை அமைச்சர் இக்குழுமத்தின் தலைவர் ஆவார்.

நடைபெற்று வரும் பல்வேறு திட்டங்களின் முக்கியக்கூறுகள் வருமாறு:

பெருந் திட்டம்.—பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

2.2. சென்னை மாநகர் விரிவாகத் திட்டமிடுவதற்காக 99 திட்டப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றில் 44 பகுதிகளுக்கு உரிய விரிவான வளர்ச்சித் திட்டங்கள் இதுவரையில் அறிவிக்கப்பட்டுள்ளன. 1981–82 ஆம் ஆண்டில் விரிவான வளர்ச்சித் திட்டங்களைத் தயாரிப்பதற்காக மேலும் 6 பகுதிகளை அறிவிக்கக் கருதப்பட்டுள்ளது.

பகுதி மேம்பாட்டுத் திட்டம்:

2.3. மணலி புறநகர்ப் பகுதியையும், மறைமலை நகர் புதிய நகரையும் மேம்படுத்த, எடுத்துக் கொள்ளப்பட்டு 1974–75 ஆம் ஆண்டிலிருந்தே பணி நடைபெற்று வருகிறது.

மணலி :

மணலியில் கடைகள் அங்காடிகள், பள்ளிகள் ஆகியவற்றை ஏற்படுத்துவதோடு 2,932 குடியிருப்பு மனைகளுக்கு வகை செய்யவும், இத்திட்டத்தின் I ஆம் நிலையைச் சேர்ந்த பகுதி I வளர்ச்சித் திட்டம் வகை செய்கிறது. இவற்றோடு, விற்க இயலாத ஏனைய சமுதாய வசதிகள், பூங்காக்கள் விளையாட்டுத் திடல்கள், சாலைகள் ஆகியவற்றுக்காக 40 எக்டேர் பரப்புள்ள நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. இம் மேம்பாட்டுத் திட்டம் வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின் உதவியோடு நிறைவேற்றப்படுகிறது. 94 எக்டேர் நிலப்பரப்பில் நிறைவேற்றப்படவுள்ள I ஆம் நிலையைச் சேர்ந்த பாகம் II திட்டம் 1981–82 ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படும்.

மறைமலை நகர்:

2.4. சென்னையிலிருந்து 43 கி. மீ. தொலைவில் சென்னை-திருச்சிராப்பள்ளி தேசிய நெடுஞ்சாலையில் 1,600 எக்டேர் பரப்பளவில் உருவாக்கப்பட்டுள்ள புதிய நகர் ஒரு இலட்சம் மக்களுக்காக மேம்படுத்தப்பட்டு வருகிறது. அண்டைப்பகுதி(I)வீட்டு வசதிக்காக 54 எக்டேர் பரப்பளவையும், தொழிற்சாலைப்பகுதிக்காக 184 எக்டேர் பரப்பளவையும் இது முழுவதும் மேம்படுத்தப்பட்டுள்ளது. மறைமலை நகர் அண்டைப்பகுதி (ச) 1,186 குடியிருப்பு மனைகளுக்கும், 69 தொழிற்சாலை மனைகளுக்கும் வகை செய்கிறது. இதுவரையில் வீட்டு வசதிக்காக 423 குடியிருப்பு மனைகளும்,

தொழிற்சாலைகளுக்காக 57 மனைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின் உதவியோடு, குறைந்த வருமானத் தொகுதியினருக்காக (LIG) 144 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு ஒதுக்கப்பட்டுள்ளன. அண்டைப் பகுதியில் (I) குறைந்த வருமானத் தொகுதியினருக்காக 214 வீடுகளைக் கட்டவும் அண்டைப் பகுதி II இல்குறைந்த வருமானத் தொகுதியினருக்கு 216 வீடுகளையும், நடுத்தர வருமானத் தொகுதியினருக்கு 30 வீடுகளையும் கட்டும்பணி 1979–80 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்டது. 100எக்டேர் பரப்பளவைக் கொண்ட குடியிருப்பு அண்டைப் பகுதிகளை (II, III) மேம்படுத்தல், குறைந்த வருமானத் தொகுதியினருக்கு 718 வீடுகளையும் நடுத்தர வருமானத் தொகுதியினருக்கு 30 வீடுகளையும் ரூ.134.27 இலட்சம் செலவில் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

சிறப்புத் திட்டங்கள்

கோயம்பேட்டில் மொத்த விற்பனை அங்காடியைப் புதிதாக ஏற்படுத்தல்.

3.1. சென்னையின் மையப் பகுதியில் காணப்படும் வர்த்தக மிகுதியையும் இட நெருக்கடியையும் நீக்கும் பொருட்டு கொத்தவால் சாவடியைக் கோயம்பேட்டிற்கு மாற்றவும் இவ்விடத்தில் சுமார் 240 ஏக்கர் பரப்பளவில் சுமார் 3,000 கடைகளை அமைத்து புதிதாக மொத்த விற்பனை அங்காடியை ஏற்படுத்தவும் அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இம்மொத்த விற்பனை அங்காடியை அமைப்பதற்குரிய நிலங்களைக் கையகப்படுத்தும் பணி 1981–82 ஆம் ஆண்டில் முடிவுறும். இந்நிலப் பரப்பை மேம்படுத்தும் பணிகள், இங்கு சாலைகளை அமைத்தல், நீர் குழாய்கள், கழிவு நீர்க் குழாய்கள் வடிகால் ஆகியவற்றை அமைத்தல், மின் கம்பிகளை அமைத்தல், ஆகிய பணிகளை சுமார் 400 இலட்சம் ரூபாய் செலவில் 1981–82 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

ஆலந்தூர் மாதவரம் கோயமபேடு ஆகிய இடங்களில் எல்லைப் பேருந்து நிலையம் லாரிகள் நிலையம் ஆகியவற்றை அமைத்தல்.

3.2. சிறந்தப் பேருந்துப் பயணிகளுக்கு வகை செய்யவும், சென்னை மாநகரிலுள்ள நெருக்கடியைப் போக்கவும், வடக்கிலிருந்தும் தெற்கிலிருந்தும் இம்மாநகரைக் கடந்து செல்லும் போக்குவரத்துக்கு உதவும் பொருட்டும், உள் வளைவ சாலைகளுக்கு அருகே உள்ள இடங்களில், அதாவது ஆலந்தூர், மாதவரம், கோயம்பேடு ஆகிய இடங்களில் பேருந்து லாரி நிலையங்கள் மூன்றை ஏற்படுத்த அரசு ஒப்புதலளித்துள்ளது. இத்திட்டத்தை செயலாக்குவதற்குரிய நடவடிக்கைகள் தீவிரமாக

1981 ஏப்ரல் 21]

மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1981–82 ஆம் ஆண்டிற்குரிய வரவு—செலவுத் திட்டத்தில் ரூ. 150 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

கொரட்டூர் இரும்பு எஃகுப் பொருட்கள் அங்காடி.

3.3. ஜார்ஜ்டவுன் பகுதியிலேயே பெரும்பாலும் நடைபெற்று வரும் இரும்பு எஃகுப் பொருட்கள் வர்த்தகத்தைச் சென்னை மாநகரின் புறப்பகுதிக்கு மாற்றுவதற்குரிய செயற் குறிப்பை அரசு பரிசீலித்து வருகிறது. கொரட்டூருக்கு அருகேயுள்ள 256 ஏக்கர் பரப்பளவு கொண்ட பகுதி இதற்காகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ரூ. 750 இலட்சம் செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

4. உலக வங்கி உதவியுடன் நிறைவேற்றப்படும் சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (M.U.D.P.I) :

4.1. சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (MUDPI) 1977–78 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்குரிய மொத்த செலவு ரூ. 46.82 கோடியாகும். இதில், ரூ. 21.60 கோடி ரூபாய் கடனாக உலக வங்கியால் வழங்கப்படுகிறது. நகர்ப்பகுதியில் வாழும் ஏழைகளில் பெருமபாலோரின் வாழ்வை மேம்படுத்துவதற்காக குறைந்த செலவில் நிறைவேற்றப்படும் பணிகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதே இத்திட்டத்தின் தலையாய நோக்கமாகும். இத்திட்டம் பின்வருவனவற்றிற்கு வகை செய்கிறது.

4.2. இப்பணித்திட்டங்களை நிறைவேற்றும் முகவரமைப்பு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியமாகும். மொத்தம் சுமார் 175 எக்டேர் பரப்பளவுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட மூன்று பகுதிகளில் ஒதுக்கப்பெற்றவர்களால் படிப்படியாக பணி முடிக்கப்படும். அல்லது விரிவாக்கப்படும் பணிவசதி பெற்ற குடியிருப்பு மனைகள் முக்கிய வீட்டு வசதிப் பகுதிகள் ஆகியவற்றிற்கு வகை செய்தல், கட்டிடப் பொருட்களை வழங்குதல், தொடக்கத்தில் குறைந்த வருமானமுடைய சுமார் 13,500 வீடுகளுக்கு (சுமார் 74,000 பேர்களுக்கு) சமுதாய வசதிகள் செய்து கொடுத்தல், வணிக—தொழில் பயன்களுக்காக பணி வசதி பெற்ற நிலங்களை அளித்தல் ஆகிய இவையே இப்பணித்திட்டத்திலுள்ள முக்கியப்பணிகளாகும். அரும்பாக்கம், வில்லிவாக்கம், கொடுங்கையூர் ஆகியவையே இம்மூன்று பகுதிகளாகும். மேற்சொன்ன மூன்று பகுதிகளில்,

ஒவ்வொரு பகுதியிலும் மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் விவரம் வருமாறு:—

அரும்பாக்கம்.—

4.2.1. அரும்பாக்கத்தில் மனைகள் — பணிகள் திட்டம் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளது. இவ்விடத்தில் சாலைகள் அனைத்தும் போடப்பட்டுள்ளன. நீர் வழங்கல், கழிவு நீரகற்று முக்கிய குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்விடத்தில் வடிகாலும், அமைக்கப்பட்டுள்ளன. 'A' வகை மனைகள் 1058, 'B' வகை மனைகள் 462, 'C' வகை மனைகள் 179, குறைந்த வருமானத் தொகுதியினருக்கு 503 மனைகள், நடுத்தர வருமானத் தொகுதியினருக்கு 102 மனைகள் ஆகியவை ஒதுக்கப்பட்டுள்ளன. வீட்டுமனைகள் ஒதுக்கப்பெற்ற சுமார் 950 பேருக்கு வீடுகள் கட்ட வங்கியிடமிருந்து கடன் பெறப்பட்டுள்ளது. சுமார் 620 வீடுகள் ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் 327 வீடுகள் தற்போது கட்டப்பட்டு வருகின்றன. பெரியார் ஈ. வெ. ரா. சாலையிலிருந்து (பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையிலிருந்து) அரும்பாக்கத்திற்குச் செல்லும் அணுகுசாலை போடப்பட்டுள்ளது. மருந்தகம், தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, சமுதாயக் கூடம் என்ற வகையிலான சமுதாய வசதிகளுக்கு வகை செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

வில்லிவாக்கம்.—

4.2.2. வில்லிவாக்கம் I, II ஆம் நிலைகளில் நிறைவேற்றப்பட வேண்டியபணி நடைபெற்று வருகிறது. III ஆம் நிலையைப் பொறுத்த மட்டில், பணி தொடங்கப்பட்டுள்ளது. I ஆம் நிலைப் பகுதியில் (இது ஏரிக்கரையில் அமைந்துள்ளது.) மண்பணி முடிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் நிறைவேற்றப்பட வேண்டிய வடிகால் பணி நடைபெற்று வருகிறது. நீர்க்குழாய்களில் 90 சதவீதக் குழாய்களையும், கழிவு நீரகற்றுக்குழாய்களில் 95 சதவீதக் குழாய்களும் அமைக்கப்பட்டுள்ளன. 'A' வகையைச் சேர்ந்த சுமார் 690 வீடுகள், 'B' வகையைச்சேர்ந்த 530 வீடுகள் 'C' வகையைச் சேர்ந்த 220 வீடுகள், பல்வேறு நிலைகளில் கட்டப்பட்டு வருகின்றன. மேலும் 'A' வகையைச் சேர்ந்த 16 வீடுகள், 'C' வகையைச் சேர்ந்த 6 வீடுகள் கட்டப்படவிருக்கின்றன. கிடைத்துள்ள நிலத்தில் சுமார் 720 மீட்டர் தூரமுள்ள வடிகால் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மருந்தகம், சமுதாயக் கூடம், தொடக்கப்பள்ளி ஆகியவற்றைக் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. III ஆம் நிலைப்பகுதியில் நிறைவேற்றப்பட வேண்டிய பணி அண்மையில் தொடங்கப்பட்டுள்ளது. சாலைகளை அமைக்க அடையாள மிடுதல், வடிகால்களைக் கட்டுதல், நீர்க்குழாய்களை அமைத்தல், கழிவு நீரகற்றுக் குழாய்களை அமைத்தல் ஆகிய பணி நடைபெற்றுவருகிறது.

1981 ஏப்ரல் 21]

கொடுங்கையூர்.—

4.2.3. கொடுங்கையூர் ஏரியில் வெள்ளம் வருவதைத் தடுத்து நீர் வழிந்தோடிச் செல்வதற்காக வடிகால்கள் கட்டப்பட்டுள்ளன. இப்பகுதியில் பணி தொடங்கப்பட்டுள்ளது. சுமார் 28 எக்டேர் நிலம் எடுத்துக்கொள்ளப்பட்டு, அந்த இடத்தில் சாலை போடும் பணியும் வடிகால் கட்டும் பணியும் நடைபெற்று வருகின்றன. கழிவுநீர்க்குழாய், குடிநீர்க்குழாய் போடும் பணியும் நடைபெற்று வருகிறது. தற்போது 254 'A' வகை தனி வீடுகள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன. 947 'A' வகை தனி வீடுகள் பல்வேறு நிலைகளில் கட்டப்பட்டு வருகின்றன. வியாசர்பாடியிலிருந்து திட்டப்பகுதிக்குச் செல்ல சாலை போடப்பட்டு வருகிறது. மேல் நிலைத் தொட்டி கட்டும் பணியும் நடந்தேறி வருகிறது. உயர்நிலைப் பள்ளியும் தொடக்கப் பள்ளிகள் இரண்டும் கட்டும்பணி நடந்தேறி வருகிறது.

இம்மூன்று திட்டங்களுக்காக 1981 பிப்ரவரிவரை ரூ. 869.03 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1981–82 ஆம் ஆண்டில் இத் திட்டங்களுக்காக, வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் 211.60 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

5. குடிசைப் பகுதி மேம்பாடு

5.1 தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம். —

உலக வங்கி நிதி உதவி செய்யும் சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தில் குடிசைப்பகுதி மேம்பாடு முக்கிய இடத்தை பெறுகிறது. இத்திட்டத்தில் பின்வரும் அடிப்படை வசதிகளுக்கு வகை செய்யப்படுகின்றன.

(a) புதிய, மேம்படுத்தப்பட்ட சாலைகள் போடுதல், நடைபாதைகள் அமைத்தல், (வெள்ளம் வரும்போது அந் நீரையும் வீணான நீரையும் வடிப்பதற்கு) வடிகால் கட்டுதல்.

(b) பத்து வீடுகளுக்கு ஒரு பொது குடிநீர்க் குழாய் என்ற வீதத்தில் குழாய் அமைத்து குடிநீர் வழங்குதல்.

(c) பத்து வீடுகளுக்கு ஒரு பொதுக் கழிப்பிடம் கட்டுதல், குளியலறை வசதிகள் அமைத்துக் கொடுத்தல்.

(d) கல்வி வதிசகள்.

(e) குடிசைத் தொழில் மையங்கள்.

(f) தெரு விளக்குகள்;

மேற்குறிப்பிட்ட அடிப்படை வசதிகளை அளிப்பதற்கு சராசரியாக ஒரு வீட்டிற்கு ரூ. 1,300 செலவு ஏற்படும் என்று மதிப்பிடப்படுகிறது. எனினும் ஒவ்வொரு குடிசைப் பகுதிக்கும் ஏற்படும் மூலதனச் செலவு, அங்குள்ள குடும்பங்களின் எண்ணிக்கையையும், அக்குடிசைப் பகுதிக்கு அண்மையிலுள்ள குடிநீர்க் குழாய், கழிவு நீர்க் குழாய்களையும் பொறுத்ததாகும்.

1977–78 ஆம் ஆண்டில், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் 19 குடிசைப்பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகளை முடித்துள்ளன. இதனால், 4,136 குடும்பங்கள் பயனடைந்தன. 1978–79 இல் 13,401 குடும்பங்கள் உள்ள 7 குடிசைப்பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகள் நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்பட்டன. இவற்றில், ஒரு குடிசைப் பகுதியில் மேம்பாட்டுப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இரு குடிசைப் பகுதிகளில் பெரும்பான்மையான பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இரு குடிசைப் பகுதிகளில் பணிகள் முடியும் தறுவாயிலுள்ளன. எஞ்சிய இரு குடிசைப் பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகள் நடந்தேறி வருகின்றன 1979–80 இல் 15 குடிசைப் பகுதிகள் மேம்படுத்துவதற்காகத் தெரிந்தெடுக்கப்பட்டன. இப்பகுதிகளில் 8,280 குடும்பங்கள் உள்ளன. இந்த 15 குடிசைப் பகுதிகளில், 3 குடிசைப்பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 8 குடிசைப்பகுதிகளில் பணி முடியும் தறுவாயிலுள்ளது. எஞ்சிய நான்கு குடிசைப் பகுதிகளில் பணிகள் நடந்தேறி வருகின்றன. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் இத்திட்டத்திற்காக 1981 பிப்ரவரி வரை ரூ. 362.33 இலட்சம் செலவிட்டுள்ளது. நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தில் (1) முடிவுறாமலுள்ள பணிகளை முடிக்க 1981-82 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 7·00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

5.2. சென்னை மாநகராட்சி:

மேம்பாட்டுப் பணிகளை நிறைவேற்ற சென்னை மாநகராட்சியை மற்றொரு முகவராக அரசு நியமித்துள்ளது. 1979-80 இல் 12 குடிசைப் பகுதிகளில் மேம்பாட்டுப்பணிகளை நிறைவேற்றும் பொறுப்பு சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. 5 குடிசைப்பகுதிகளில் மேம்பாட்டுப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மூன்று குடிசைப்பகுதிகளில் பணி நடந்தேறி வருகிறது. எஞ்சிய நான்கு குடிசைப்பகுதிகளில் பணி பல்வேறு நிலைகளில் நடந்து வருகிறது. இந்த 12 குடிசைப்பகுதிகளில் 4,137 குடும்பங்கள் இதனால் பயன்பெறுவர்.

அரசு அனுமதியளித்த மானியம் ரூ. 48.54 இலட்சத்தில் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்காக 1981 பிப்ரவரி வரை சென்னை மாநகராட்சி ரூ. 36.77 இலட்சம் செலவிட்டுள்ளது.

1981 ஏப்ரல் 21]

5.3 குத்தகை—விற்பனை பத்திரம்—தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்:

குடிசைப்பகுதி வாழ்மக்களுக்கு உடைமை, உரிமை அளிக்கும் பொருட்டு, தமிழ்நாடு குடிசை பகுதி மாற்று வாரியம் 16 குடிசைப் பகுதியிலுள்ள 5,565 பேர்களுக்கு அறிவிப்பு அனுப்பி முன்பணம் செலுத்துமாறு கேட்டுள்ளது. 3,350 பேர் முன் பணம் செலுத்தியுள்ளனர். இவர்களுள் 820 பேருக்குக் குத்தகை விற்பனை பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் ஏற்கனவே வீடு ஒதுக்கப்பட்ட 1,180 பேருக்குக் குத்தகை விற்பனைப் பத்திரத்தை எழுதி வழங்கி வருகிறது.

5.4 இது தவிர, சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் I-இல் பின்வரும் இனங்களும் அடங்கியுள்ளன :

5.4.1. சிறுதொழில் :

இடவசதி, பணிவசதி உள்ள பகுதிகளில் சிறு தொழில்களை ஏற்படுத்த மனைகள், பணிக்களரிகள், இயந்திரங்கள் வழங்கல் 4,000 பேருக்கு வேலை வாய்ப்பு அளித்தல் போன்றவை இதன் நோக்கமாகும். இத்திட்டத்தை சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் நிறைவேற்றி வருகிறது. 124 பணிக்கூடங்கள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன. 26 பணிக்கூடங்கள், கட்டப்பட்டு வருகின்றன இத்திட்டத்தின் கீழ் இதுவரை ரூ. 12.60 இலட்சத்திற்கு இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

5.4.2. குடிசைத் தொழில் :

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் சமுதாய வளர்ச்சிப் பிரிவு இத்திட்டத்தை நிறைவேற்றி வருகிறது. குடிசைத் தொழில்களிலும் மாநகரில் முறையாக அமைந்திராத துறையில் குறிப்பாக இடவசதி—பணி வசதி உள்ள பகுதிகளிலும், குடிசை பகுதி மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளிலும் 5,000பேருக்கு வேலை வாய்ப்பு அளிப்பது இதன் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் பல்வேறு தொழில்களில் இதுவரை 3,172 பேர் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர். 32 இடங்களில் கொட்டகைகள் கட்டும் பணி முடிந்து விட்டது. ஏனைய 11 இடங்களில் பணி நடைபெறுகிறது. 18 கொட்டகைகளில் உற்பத்திப் பணி தொடங்கப்பட்டுள்ளது. சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பெட்டிக் கடை (Petty Shops) வைப்பதற்காக வங்கியிலிருந்து கடன்கள் பெறுவதற்கு இதுவரை 952 பேருக்கு உதவி செய்யப் பட்டுள்ளது.

5.4.3. தாய் சேய் நலம் :

சமூக நல இயக்குநர், தாய் சேய் நலப்பணிகளைச் செயற்படுத்தி வருகிறார். 6 வயதிற்குக் குறைந்த 17,000 குழந்தைகளுக்கும் சூலுற்ற பாலூட்டும் மகளிர் 7,000 பேர் ஆகியோருக்கும் பாலர் கல்வி, குழந்தைகள் காப்பகம், துணைச்சத்துணவு, மருத்துவ ஆய்வு, நோய்த்தடுப்பு போன்ற பணிகளுக்கு வகை செய்யப்படுகிறது. 100 பாலர் பள்ளிகளும், 64 குழந்தைகள் காப்பகங்களும், சுமார் 5,957 சிறார்களையும் 1,927 பாலர்களையும் பராமரித்து வருகின்றன. 64 பள்ளிகளில் துணைச்சத்துணவுத் திட்டம் செயல்பட்டு வருகிறது. இதுவரை, 11,397 குழந்தைகளுக்கு முத்தடுப்பு ஊசி போடப்பட்டுள்ளது. 13,842 குழந்தைகளுக்கு இளம்பிள்ளை வாதத் தடுப்பு மருந்து வாய்வழியாகக் கொடுக்கப்பட்டுள்ளது. 100 பாலர் பள்ளிகளில் நடத்தப்படும் செயல் முறைக் கல்வி வகுப்புகளில் 3,293 பெண்கள் பயின்று வருகின்றனர்.

5.4.4. குடிநீர் வழங்கல் — கழிவுநீர் அகற்றல் :

சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல்—கழிவுநீர் அகற்றல் வாரியம், இத்திட்டத்தை நிறைவேற்றி வருகிறது. தற்போதுள்ள முறையை மேம்படுத்துவதும், வறிய நிலையிலுள்ள மக்களுக்கு —குறிப்பாக பொதுக் குழாய்களைப் பயன்படுத்துவோர், குடிசைப் பகுதிகளில் வசிப்போர் ஆகியோருக்கு விரைவில் நிவாரணம் அளித்தலுமே இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். இப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

5.4.5 சாலை போக்குவரத்து மேம்பாடு :

நெடுஞ்சாலைகள்—கிராமப்பணிகள் துறை சென்னை மாநகராட்சி ஆகியன இத்திட்டத்தை நிறைவேற்றும் முகவரமைப்புகளாகும். உட்புறச்சாலையின் ஒரு பகுதியைக் கட்டுதல், நடைபாதைகள், சைக்கிள் பாதைகள், வண்டிப் பாதைகள் ஆகியவற்றைக் கட்டுதல்—மேம்படுத்துதல், பாதசாரி சுரங்கப் பாதைகள், ஆற்றுக்கடவுகள், இரயில் மேம்பாலம் கட்டுதல், தெரு விளக்கு போடுதல், போக்குவரத்து முறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் ஆகிய பணிகள் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. வைத்தியநாதன் தெருவில் இரயில் மேம்பாலம் கட்டுவதற்கு ரூ. 190 இலட்சத்திற்கும், பாலப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் நெல்சன் மாணிக்கம் சாலையில் சுரங்கப்பாதை கட்டுவதற்கு ரூ. 94 இலட்சத்திற்கும் திருத்த நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது.

TRUTH ALONE TRIUMPHS

1981 ஏப்ரல் 21]

5.4.6. பேருந்து போக்குவரத்து—பல்லவன் போக்குவரத்துக் கழகம்:

பழைய பேருந்துகளை மாற்றியமைத்தல், வழித்தட முடிவிடங்கள், பணிமனைகள், பயணிகள் நிழற்கொடை ஆகியவை கட்டுதல் ஆகிய பணிகள் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப் படுகின்றன. 285 அடிச்சட்டங்கள் வாங்கப்பட்டு வண்டி மேற்கூடு அமைக்கப்பட்டு இயக்கப்பட்டுள்ளது. பணிமனை ஒன்றும், பேருந்து வழித்தட முடிவிடங்கள் எட்டும், 400 நிழற் கொடைகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இரண்டு பணி மனைகள் கட்டும் பணியும், சிறந்த அடிச்சட்டங்கள் இருபது வாங்கும் பணியும் நடைபெற்று வருகின்றன.

5.4.7. தொழில் நுட்ப உதவி—சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம்:

சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் பணியாளர் களுக்கும் அதிகாரிகளுக்கும் குறிப்பாக முகவரமைப்புகளுக்குப் பயிற்சியளிப்பதுடன், வளர்ச்சித் திட்டம் திட்டக் கண்காணிப்பு—மதிப்பீட்டு போன்றவற்றிற்கும் உதவுவதற்கான ஆலோசனை யையும் இத்திட்டம் வழங்குகிறது. ஆலோசனை வழங்குபவர்கள் தாங்கள் ஆய்வுகளை முடித்துவிட்டனர். பயிற்சித்திட்டம் நடைபெற்றுவருகிறது.

6 சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்—II (MUDPII)

6.1. சென்னை நகர்ப்புற வளர்ச்சித்திட்டம் I-ன் கீழ் குறிப்பாக, குடியிருப்புத் திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்ட குறைந்த அளவு செலவிலான மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டும் விரிவுபடுத்துவதே சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் II-ன் முக்கிய நோக்கமாகும். சென்னை நகர்ப்புற வளர்ச்சித்திட்டம் II-க்கு உலக வங்கி ரூ. 73.9 கோடி வழங்கி யுள்ளது. இத்திட்டம் 1981—85 ஆம் ஆண்டில் செயற்படுத்தப் படும்.

பல்வேறு திட்டங்களும் அதற்காகும் மொத்தச் செலவும் வருமாறு:—

(ரூபாய் கோடியில்.)

A. மனைகளும் பணிகளும்—

பெரும்பாலும் பொருளாதார நிலையில் நலிந்த பிரிவினருக்கு 15,000 வீடுகள் (மொகப்பையார், நெற்குன்றம் ஆகிய இரண்டு இடங்களில் சுமார் 83,000 பேருக்கு)	23.8

(ரூபாய் கோடியில்.)

B. குடிசைப்பகுதி மேம்பாடு—

சென்னை நகர்ப்புற வளர்ச்சித்திட்டம் I-ன் கீழ் 50,000 வீடுகளடங்கிய குடிசைப்பகுதிகளை மேம்படுத்துவதும், குடிசைப்பகுதிகளுக்கான வீட்டு மேம்பாட்டுக் கடனும் 27.8

C. போக்குவரத்து—

550 பேருந்துகள் விடுதல், 6 கிலோமீட்டர் நீள உட்புறச் சாலை அமைத்தல், சென்னை திரு வள்ளூர் நெடுஞ்சாலையை மேம்படுத்தல் .. 17.9

D. கழிவுப் பொருட்களைச் செவ்வையாகப் பயன்படுத்துதல்—

கழிவுப் பொருட்களை மேம்படுத்துவதற்குச் சாதனமும் கட்டிடப் பணிகளும் 3.1

E. தொழில் நுட்ப உதவி—

முன்னுரிமை வழங்க வேண்டியவைகளைக் கண்டறியவும் நீண்டகால முதலீடுகள் செய்வது குறித்து திட்டம் வகுக்கவும், நிறுவனத்தை வலுப்படுத்தவும், பயிற்சி அளிக்கவும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், பல்லவன் போக்குவரத்துக் கழகம், சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் சென்னை மாநகராட்சி ஆகியவற்றுக்கு தொழில் நுட்ப உதவியளித்தல் 1.3

மொத்தம் .. 73.9

ரூ. 73.9 கோடி மொத்தச் செலவில் ரூ. 35.28 கோடி உலக வங்கிக் கடனாகக் கிடைக்கும்.

6.2. சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் II-ன் கீழ் மனைகளும், பணிகளும்.

வீட்டு வசதி வாரியத்தால் செயல்படுத்தப்படவிருக்கும் மனைகள்—பணிகள் திட்டத்தின் கீழ், மொகப்பையார், நெற்குன்றம் ஆகிய இரு இடங்களில் மொத்தம் 180 எக்டேர் பரப்பில் மேம்படுத்தப்பட்ட குடியிருப்பு மனைகள், தனி வீடுகள், சமுதாய வசதிகள், தெரு விளக்குகள், தங்குமிடங்களைக் கட்டுவதற்கான கடன்களுக்கு வகை செய்தல், மேம்படுத்தப்

பட்ட நிலங்கள், தொழில், வணிகப் பயனுக்காக இயந்திரக் கடன்கள் அளித்தல், ஆகியவை அடங்கும். இத்திட்டத்திற்காக 1981—82 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 200.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

6.3. சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் II-ன் கீழ்க் குடிசைப்பகுதி மேம்பாடு.

குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் குடிசைப் பகுதிகளில் குடிநீர் வழங்கல், வடிகால், சுகாதாரம், சாலைகள், தெருக்களுக்கு விளக்குப் போடுதல், குப்பைக் கூளங்களை அகற்றும் பணிகள் ஆகியவற்றுக்கு வகை செய்யப்படும். இப் பணியில் குடிசைகள் மிகச்சில அகற்றப்படும். மேம்படுத்தப் பட்ட பகுதிகளில் உள்ள குடும்பங்களுக்கு இடப் பாதுகாப்பு, சுகாதாரம், சத்துணவு, குழந்தை நலத் திட்டம் ஆகியவற்றுக்கு வகை செய்யப்படும்.

மொத்தத்தில் 75 சதவீதம் என்ற அடிப்படையில் மாதம் ரூ. 250 முதல் ரூ. 600 வரை வருமானம் உடைய குடும்பத்தின ருக்கு குடும்பம் ஒன்றுக்கு ரூ. 1,500, ரூ. 2,500, ரூ. 3,500 என்ற வீதத்தில் வீட்டு மேம்பாட்டுக் கடன் வழங்கப்படும். மாதாந்தர வருமானம் ரூ. 200-க்குக் குறைவாக உள்ள குடும் பத்தினருக்கு தங்கும் இடங்களில் அடிப்படை வசதிகளை மேம் படுத்திக் கொள்வதற்காக ரூ. 600 மானியம் வழங்கப்படும். இக்கடன் தொகை, தங்கும் இடத்திற்கு களிமண் ஓட்டுக்கூரை அல்லது சேர்க்கைகள் இருக்கும் இடத்தை வலுப்படுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளப் போதுமானதாகும். இப்பணிகளை மேற்கொள்ள குடிசை வாழ் மக்கள் தங்களது உழைப்பை நல்க வேண்டும். குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 1981—82 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 150.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

7. ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்.

சென்னை பெருநகர்ப் பகுதியில் செயல்பட்டுவரும் குடிநீர் வழங்கல், கழிவுநீர், வடிகால், சாலைகள் பகுதி மேம்பாட்டுப் பணிகள் போன்ற பல்வேறு திட்டப் பணிகள் 1974—75ஆம் ஆண்டிலிருந்து இந்திய அரசு உதவி பெறும் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. இந்திய அரசு வழங்கிவந்த உதவியை 1978—79-க்குப் பின்னர் நிறுத்தி விட்டது. எனவே, செயல்படுத்தப்பட்டு வரும் திட்டப் பணிகளை முடிப்பதற்கு 1979—80 ஆம் ஆண்டிலிருந்து இவ்வரசு நிதி வழங்கி வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டப் பணிகளின் மதிப்பீட்டுச் செலவு ரூ. 37.40 கோடியாகும். 1981 பிப்ரவரி இறுதி வரையிலான மொத்தச் செலவு ரூ. 30.48 கோடியாகும்.

மேற்கூறிய திட்டத்திற்காக 1981–82 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 702 இலட்சம் நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
17 AUG 1982
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS